# சமயச் சொல்லகராதி

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர். சீ. சசிவல்லி

# சமயச்
# சொல்லகராதி

டாக்டர். சீ. சசிவல்லி

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the book | : | Camayac Collakarāti |
| Author | : | Dr. S. SASIVALLI<br>Senior fellow<br>International Institute of Tamil Studies<br>T.T.T.I (Post) Taramani, Madras-600113 |
| Publisher | : | International Institute of Tamil studies<br>T.T.T.I (Post) Taramani, Madras 600113 |
| Publication number | : | 135 |
| Language | : | TAMIL |
| Edition | : | first |
| Date of Publication | : | Nov. 1987 |
| Paper used | : | 14 kg D/Demy Cream wove |
| Size of the book | : | 21 × 14 Cm. |
| Printing type used | : | 10 pt. Tamil. |
| Number of copies printed | : | 1200 |
| Number of pages | : | XXXII + 336 |
| Price | : | Rs. 35/= |
| Printer | : | Vijay print Services<br>: 4. Pusupanagar Main Road<br>: Nungambakkam, Madras - 600034<br>: Phone : 476113 |
| Binding | : | card Board |
| Artist | : | Vijay Print Services |
| Subject | : | Dictionary of Religious words |

டாக்டர் அ. நா. பெருமாள்
இயக்குநர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை 600113.

# பதிப்புரை

'சமயச் சொல் அகராதி' ஒன்றை உருவாக்கவேண்டும் என்று உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்விரும்பியது. அந்தப்பணி டாக்டர் சீ. சசிவல்லி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களுடன் தொடர்புடைய சுமார் ஏழாயிரம் சொற்களைத் திரட்டி, பொருள் விளக்கம் தந்து, இந்தப் பணியை அவர்கள் முடித்துள்ளார்கள். இந்தச் சொல்லகராதியில் இடம்பெறும் சொற்கள் பல்வேறு அகராதிகள், கலைக்களஞ்சியம், சமய இலக்கியங்கள், பேச்சு வழக்கு, கல்வெட்டுகள் ஆகியவற்றில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. சொற்கள் தனித்தனியாகச் சமய அடிப்படையில் பிரிக்கப்படாமல் ஒட்டுமொத்தமாகத் திரட்டப்பெற்று அகர வரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு சொல்லும் இன்ன சமயஞ்சார்ந்தது என்பதைக் குறிக்க அடைப்புக்குள் குறிப்பு தரப்பட்டுள்ளது. சில தத்துவச் சொற்களுக்குத் தேவை கருதி ஆங்கிலப் பொருளும் தரப்பட்டுள்ளது.

இவ்வகராதியில் பெரும்பாலும் ஒரு சொல்லுக்குரிய பொருள் கூறப்பட்டதும், தொடர்ந்து அந்தச் சொல் எடுத்தாளப்பட்டுள்ள நூல் மேற்கோளும் கொடுக்கப்பட்டுள்ளது. சமய விளக்கமும் அறிவு விளக்கமும் காண இந்தச் சமயச்சொல் அகராதி பெரிதும் பயன்படும்.

தமிழுலகம் இந்தச் சமயச்சொல் அகராதியை ஏற்றுப்பயன் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். இதனை உருவாக்கிய டாக்டர் சீ. சசிவல்லி அவர்களுடைய பணியை நிறுவனம் சிறப்பாகக் கருதுகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆய்வு நிலையில் நல்ல பணிகளைச் செய்ய பேரன்புடன் துணைநின்று உதவும் தமிழக அரசின் நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் டாக்டர் சிலம்புச்செல்வர், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், நிறுவன நிர்வாகக் குழுத் தலைவர், அண்ணா பல் கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.செ. குழந்தைசாமி ஆகிய பெருமக்கள் அனைவருக்கும் நிறுவனம் பணிவன்புடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த நூலை விரைந்து சிறப்பாக அச்சிட்டுத்தந்த விஜய் பிரிண்ட் சர்வீஸஸ் அச்சகத்தார்க்கு எங்கள் அன்பன நன்றியும் வாழ்த்தும் உரியன.

சென்னை
30-10-1987

அன்புள்ள.
அ.நா. பெருமாள்

# முன்னுரை

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் அகர முதலிய எழுத்து வரிசையில் அமையும்படி ஒருசேரத் தொகுத்து, அவற்றின் பொருள்களை அம்மொழியாலேனும் பிறமொழியாலேனும் விளக்கும் நூல் அகராதி எனப்பட்டது. அகரம்+ஆதி = அகராதி. 'அ' என்னும் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கிச் சொல்வதால் அகராதி என அழைக்கப்படுகிறது.

இத்துறைக்கு வித்திட்ட பெருமை தொல்காப்பியரைச் சாரும். தொல்காப்பியத்தில் சொல்லுக்குப் பொருள் கூறும் பகுதியை உரியியலில் காணலாம். இவ்வியலில் ஒரே பொருளுடைய சொற்களும்; பலபொருள் தரும் சொற்களும் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியச் சொல்லிலக்கணத்தின் ஓர் உறுப்பாயிருந்த அகராதித்துறை நாளடைவில் பிரிந்து ஒரு தனிக்கலை ஆயிற்று.

இதன் அருமை அறிந்த பிற்கால அறிஞர்கள் பெயர்ச்சொல், வினைச்சொல் முதலிய சொற்களுக்கும் ஏன் பொருள் தரக்கூடாது என்ற எண்ணம் தோன்ற எல்லாவகைச் சொற்களையும் சேர்த்துத் தனிநூல்கள் எழுதத் தொடங்கினர். இம்முறையில் திவாகரம், பிங்கலம் முதலிய நூல்கள் பலவகைச் சொற்களுடன் விரிவாகத் தோன்றியிருப்பினும், எளிய சொற்கள் முதற்கொண்டு அனைத்துச் சொற்களும் இக்கால அகராதிகளில் எண்ணிறந்து காணப்படுவது போல் அந்நூல்களில் காணமுடியாது. எனினும் அகராதித் துறையில் தொல்காப்பிய உரியியலுக்குப் பின் நமக்குக் கிடைத்துள்ள முழுநூல்களுள் சேந்தன் திவாகரம், பிங்கலம் ஆகிய இரண்டும் முற்பட்டவை. இந்நூல்கள் 'நிகண்டு' என்னும் பொதுப்பெயர் ஏற்று 'திவாகர நிகண்டு; பிங்கல நிகண்டு' என மக்களால் அழைக்கப்படுகின்றன. வடமொழிப் பெயராகிய நிகண்டு என்பதற்குத் 'தொகுதி' என்று பொருள். தெய்வப் பெயர்த்தொகுதி, மக்கட் பெயர்த்தொகுதி முதலியனவாகச் சொற்களைத் தொகுதி, தொகுதியாகப் பிரித்துக் கூறுவதால் இப்பெயர் பெற்றது.

நிகண்டு நூல்கள், இக்கால அகராதிகளைப் போல் தனித்தனி சொற்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப்படாமல், செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நிகண்டுகளில் சொற்கள் அகராதிகளைப் போல் அகரவரிசையில் அமைக்கப்படவில்லை. ஆனால் இக்கால அகராதிகளில் ஒரு சொல்லை உடனே தேடிக் கண்டுபிடித்து விடலாம். எனவே சொற்களை முதலெழுத்து வாரி யாக அகர வரிசையில் அமைக்க வேண்டுமென்ற உணர்வு முகிழ்த்தது. இதன் விளைவாக பதினாறாம் நூற்றாண்டின் இறுதி யிலே கி. பி. 1594 ஆம் ஆண்டில் இரேவண சித்தர் என்னும் புலவர் 'அகராதி நிகண்டு' என்னும் பெயரில் ஒருநூல் இயற்றினார். சொற்கள் அகர வரிசையில் முறைப்படுத்தப் பட்டிருத்தலின் இந் நூல் 'அகராதி நிகண்டு' எனப்பட்டது. எனினும் இக்கால அகராதி களில் உள்ளாங்கு, சொற்களை முதலெழுத்துத் தொடங்கி இறுதி எழுத்து வரையும் அகர வரிசையில் நோக்கி அடுக்கிய பெருமை பதினேழாம் நூற்றாண்டுப் பாதிரிமார்கட்கே உரியதாம். தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள்கூறும் தனித்தமிழ் அகராதிகள் பல தோன்றுதற்கு முன்னோடி முதல் நூலாகத் திகழ்ந்தது பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர் எனப்படும் 'பெஸ்கி' (Fr. Beschi) இற்றிய 'சதுர் அகராதியே' ஆகும். பிற்காலத்தில் தமிழ் அறிஞர்களால் தொகுக்கப்பட்ட மிகப் பெரிய தமிழகராதிகள் பலவும் இந்தச் சதுரக ராதியைப் பின்பற்றி எழுந்தனவேயாகும்.

மேலை நாட்டினரின் ஈடுபாட்டினால் தமிழ் அகராதித் துறைக்குச் சில நன்மைகள் கிடைத்தன எனலாம்.

1. நிகண்டு என்னும் பெயரில் செய்யுள் நடையிலிருந்த அகராதித் துறை, எல்லோரும் படித்துணருமாறு தனித்தனிச் சொல் நடையில் அமைந்தது.

2. சொற்களின் முதல் எழுத்து முதல் இறுதி எழுத்து வரை அகர வரிசை பின்பற்றப்பட்டது.

3. அருஞ்சொற்கள், எளிய சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள், தமிழ் மொழியுடன் கலந்த பிற இனத்தவர் வழக்குச் சொற்கள் எல்லாம் ஒருசேர அகராதிகளில் அமைவதற்கும் மேலை நாட்டினரே வழிகாட்டிகளாய் இருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலத்தோடு தமிழ் பிணைந்த அகராதிகள் பலவும், வடமொழி, இந்தி, தெலுங்கு, சிங்களம், மலாய் ஆகிய மொழிகளோடு தமிழ் பிணைந்த அகராதிகள் சிலவும், தமிழுக்குத் தமிழ் அகராதிகள் மிகப்பலவும் தோன்றின. இவற்றை ஒத்த அகராதிகள் மேன்மேலும் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழுக்குத் தமிழிலும், பிறமொழியிலும் சொற்பொருள் கூறும் அகராதிகளே அன்றி அருஞ்சொல் அகராதி, தனிநூல் அகராதி, தனித்துறை அகராதி, கலைச்சொல் அகராதி, பழமொழி அகராதி, தொகையகராதி, தொடையகராதி, எதிர்ப்பத அகராதி போன்ற பல்வேறு விதமான அகராதிகள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றித் தமிழ் மொழிக்கு மேன்மேலும் சிறப்பூட்டின. இன்னும் பல்வேறு அகராதிகள் உருவாகிக் கொண்டும் உள்ளன..

மொழியின் வளர்ச்சி நம்வாழ்க்கையின் வளர்ச்சியைப் பொறுத்தது. நமது வாழ்க்கை வளம்பெற வளம்பெற சொற்கள் பெருகிக் கொண்டுதான் செல்லும். சொற்களின் வடிவங்களையும் பொருளையும், வரலாற்றையும் கணித்துச் செல்வது தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத அரிய செயலாகும்.

## சமயச் சொல்லகராதியின் அமைப்பு முறை

இச்சமயச் சொல்லகராதியில் தொகுக்கப் பெற்றுள்ள சொற்களுள் பெரும்பான்மையானவை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் லெக்ஸிகனினின்றும், மற்றவை தமிழ்க் கலைக் களஞ்சியம், அபிதான சிந்தாமணி, மதுரைத் தமிழ்ச் சொல்லகராதி, இலக்கியச் சொல் அகராதிகள் போன்ற பல அகராதிகளினின்றும், சில சமய இலக்கியங்களினின்றும் எடுத்துத் தொகுக்கப் பெற்றவை.

இவ்வகராதியில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய மத சார்புடைய சொற்கள் மேற்கூறப் பெற்ற அகராதிகளினின்றும், இச்சமயச் சார்புடைய இலக்கியங்களினின்றும் எனது முயற்சிக்கு முடிந்த அளவு சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட சொற்கள் திரட்டப்பெற்றுள்ளன.

இன்ன சமயச் சார்புடைய சொல் என்பதைக் குறிக்க அடைப்புக்குள், சான்றாகச் சைவ சமயத்தைக் குறிக்க (சை) என்றும், சமணச் சார்புடையவற்றை (ச) என்றும், தத்துவச் சொற்களை (தத்) என்றும் சொல்லுக்குப் பொருள் தரும் இடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இச்சமயச் சொல்லகராதியில் சான்றாக - முதல் சொல்லாக இடம் பெறும் ஓர் எழுத்துச் சொல்லாகிய 'அ' என்பதற்கு நேராக 1. முதல் உயிர் எழுத்து 2. எட்டென்னும் எண்ணின் குறி 3. அகச் சுட்டு 4, ஒரு சாரியை 5. ஒரு வியங்கோள் விகுதி என்பன போன்ற பல பொருள்கள் இருந்தாலும் இங்கு அவற்றை எல்லாம் விடுத்துச் சமயச் சார்புடைய பொருள்களாக வரும் 'சிவன், திருமால்' என்பவை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் சமயச் சொற்களுக்குப் பொருள் கூறி வருகையில் அவ்வவற்றுக்கான பொருளை ஒரே சொல்லில் கூறிவிட்டு, ஒரு சில விளக்கந் தேவையான சொற்களுக்கு மட்டும் சுருக்கமாக விளக்கம் தரப்பெற்றுள்ளது.

சில சமய, தத்துவச் சொற்களுக்குப் பொருள் தருகையில் அவற்றுக்கு நேரான ஆங்கிலப் பொருளும் எடுத்தெழுதப்பட்டுள்ளது.

இச்சொற்றொகுப்பில் இலக்கியங்களில் எடுத்தாளப்பெற்ற சொற்கள் மட்டுமல்லாது பேச்சு வழக்கில், கல்வெட்டுகளில் வழங்கப்பெற்ற சொற்கள் சிலவும் அமைந்துள்ளன.

ஒவ்வொரு சமயத்தில் கூறப்பட்டுள்ள கடவுளர் பெயர்கள், அடியார்கள், முக்கிய தலங்கள், கோயில், சமயத்தோடு ஒட்டிய, பழக்கவழக்கங்களைக் குறிக்கும் சொற்கள், சமயத் தொடர்புடைய தத்துவச் சொற்கள் போன்றவை இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மொழியில் வந்து வழங்கும் 'ஜ. ஶ. ஷ. ஸ' போன்ற எழுத்துக்களில் தொடங்கப்பெற்ற சொற்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

அகராதி வரிசையில் தொடர்ந்து சில சொற்கள் ஒரே பொருளில் வந்தால் அச்சொற்களை எல்லாம் ஒரே அடைப்பிலிட்டு ஒருமுறை பொருள் தரப்பெற்றுள்ளது.

ஒரு சொல்லுக்குப் பொருள் விளக்கிய பின் அதே பொருள் தரும் மற்றொரு சொல் வந்தால் - முன் கூறிய சொல்லை எழுதி அதைப் 'பார்க்க' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தொகுக்கப் பெற்ற சமயச் சொற்கள் எல்லாம் சைவம் என்றும், பௌத்தம் என்றும் தனித்தனித் தலைப்பாகப் பிரிக்கப்படாமல்,

எல்லா வகைச் சொற்களையும் வேறுபாடின்றி ஒன்றாகத் திரட்டி அவற்றை அகர வரிசைப் படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சமயத் துறையிலும் ஆழ்ந்த அறிவுபெற்ற அறிஞர்கள் இன்னும் ஏராளமான சொற்களைத் தரக்கூடும். ஆனால் இந்தச் சமயச் சொல்லகராதி சிறிய அளவில் அமைந்தாலும், சமயப் பற்றுடைய சான்றோர்களைத் தத்தம் சமயச் சார்பான சொற்கள் அனைத்தையும் திரட்டித் தனி அகராதியாகத் தொகுக்கத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. அதே சமயம் சமயச் சொல்லகராதி என்ற ஒன்று தேவையா? இதில் தொகுக்கப்பெற்ற சொற்கள் எல்லாம் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியிலும் கலைக் களஞ்சியத்திலும் இடம் பெற்றவைதானே என்ற எண்ணம் சிலருக்கு எழக்கூடும். அகராதி என்பதே நமக்குப் பொருள் புலப் படுத்தக் கூடிய வழிகாட்டியாகும். அதிலும் ஒவ்வொரு துறைக்குமுள்ள சொற்களைத் திரட்டித் தனித்தனி அகராதியாக அமைத்து விட்டால் சொற்பொருள் தேடிச் செல்வோரின் வருத்தம் குறையும். நவமணிகளை ஒரே பேழையிலிட்டு வைப்பதைவிட ஒவ்வொன்றையும் தனித்தனி பேழையிலிட்டு வைத்தால் பார்த்தவுடனே அது இன்னவகையான மணி அதன் தன்மை ஆகியவை புலப்படும். அதுபோல எல்லா வகைச் சொற்களையும் ஒரே இடத்தில் திரட்டித் தருவது ஒரு வகையில் சிறப்புற்றாலும் இக்காலப் போக்கில் அவ்வத் துறைக்கேற்ற சொற்களைத் தனித்தனியாகப் பிரித்துத் தனி நூலாகத் திரட்டித் தருவ்துதான் பலவகையிலும் நன்மை பயக்கக் கூடியதாய் அமையும்.

இவ்வகராதியில் சொல்லப்படாமல் விட்டுப்போன சமயச் சொற்கள் பல இருக்கலாம். அவற்றைச் சமய அறிவு படைத்த சான்றோர் தெரிவித்தால் பெரிதும் பயன்படக்கூடும். வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும் அந்தக் குறிக்கோளை அடையும் வழியையும் நாடுவதிலேயே மக்கள் உள்ளம் நிறைவு பெறுகிறது. அத்தகைய குறிக்கோளையும் அதனை அடையும் வழிகளையும் நல்குவதே சமயம். காலங்காலமாய் போற்றப் பெற்றுவரும் சமயங்கள் என்றும் அழியாமல், மறக்கப்படாமல் இருக்க, அவ்வச் சமயத்திலுள்ள கருத்துக்களையும், பழக்க வழக்கங்களையும் கையாளப்பெறும் சொற்களையும் நூல்வடிவில் ஆக்கித் தருவதே ஆகும்.

சில சமயம் ஒரே தலைப்பில் பல அறிஞர்களால் நூல் எழுதப் படுவதைக் காண்கிறோம். என்றாலும் ஒவ்வொருவர் எழுதியவற்றிலும் ஒரு தனித்தன்மை இருப்பதை உணர முடியும்.

ஆராய்ச்சிக்கு முடிவு இல்லை. அது வளர்ந்து கொண்டே போகக் கூடிய ஒன்று. இந்தச் சிறிய 'சமயச் சொல்லகராதி' வருங் காலத்தில் ஒவ்வொரு சமயத்திற்கும் விரிந்த அளவில் அரிய விளக் கங்களுடன் தனித்தனி அகராதி தோன்றக் காரணமாய் அமையும் என்ற நம்பிக்கையுடன் இவ்வகராதியைத் தொகுத்துத் தந்துள் ளேன்.

1982 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயர்நிலை ஆய்வாளராகச் சேர்ந்தபொழுது சமயச் சார்புடைய சொற்களைத் தொகுத்தல் எனக்குக் கொடுக்கப்பட்ட முதல்பணி யாகும். இயக்குநர், டாக்டர். அ. நா. பெருமாள் அவர்களின் அளவுகடந்த ஆர்வங் காரணமாக இன்று இந்நூல் நிறுவன வெளி யீடாக வருகின்றது. அவர்க்கு என் உளங்கனிந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமயச் சொற்களைத் தொகுக்கப் பயன்படக்கூடிய நூல்களைக் கொடுத்துதவியும், சில நெறிமுறைகளை எடுத்துக்கூறியும் உதவிய, பேராசிரியர், டாக்டர். க. த. திருநாவுக்கரசு அவர்கட்கும், டாக்டர். வ. ஆ. தேவசேனாபதி அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட் டுள்ளேன்.

இஸ்லாமியச் சொற்கள் சிலவற்றைத் தொகுத்துக் கொடுத் துதவிய திரு. அகமது மரைக்காயர் அவர்கட்கும், நிறுவன நூலகர் களுக்கும், இந்நூல் வெளிவர விரும்பிய என் இனிய நண்பர். களுக்கும் என் அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

சீ. சசிவல்லி.

## அகராதியில் ஆளப்பட்ட நூல்களும் அவைகளின் குறியீடு, பதிப்பு முதலிய விவரங்களும்

| நூலின் முற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| அகநா. | அகநானூறு | சங்கப் புலவர்கள் | The Madras Law Journal Press, Mylapore. ருத்ரோத்காரி ஆண்டு. |
| அக. நி. | அகராதி நிகண்டு | சிதம்பர ரேவண சித்தர் | மதுரை : தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1921. |
| அபி. சிந். | அபிதான சிந்தாமணி | சிங்காரவேலு முதலியார், ஆ. | சென்னை : வைஜயந்தி அச்சியந்திர சாலை - 1910 |
| அபிரா. | அபிராமியந்தாதி | அபிராமிபட்டர் | சென்னை : வித்தியாநுபாலன யந்திர சாலை, துந்துபி ஆண்டு. |
| அரிச மய | அரிசமய தீபம் | சடகோபதாசர் | சென்னை : செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், 1903. |
| அரு. நி | அரும்பொருள் விளக்க நிகண்டு | அருமருந்தைய தேசிகர் | மதுரை : தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1931. |
| அருட்பா | திருவருட்பா | இராமலிங்க சுவாமிகள் | சென்னை : சூளை, கோல்டன் அச்சியந்திர சாலை, 1906 |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| அருணா. பு | அருணாசலபுராணம் | எல்லப்ப நாவலர் | சென்னை : வித்தியாரத்நாகர அச்சுக்கூடம், 1920. |
| அறநெறி. | அறநெறிச்சாரம் | முனைப்பாடியார் | S.P.C.K. Press, Vepery, 1912. |
| அஷ்டப் | அஷ்டப் பிரபந்தம் | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் | சென்னை : ரிப்பன் அச்சியந்திர சாலை - 1904. |
| அஷ்டாதச | அஷ்டாதச ரகஸ்யம் | பிள்ளைலோகாசாரியார் | ஆனந்த அச்சுக்கூடம், 1911. |
| இரகு | இரகுவமிசம் | அரசகேசரி | யாழ்ப்பாணம் : வித்யானுபாலன அச்சுயந்திரசாலை, 1887 |
| இலக். அக | இலக்கியச் சொல்லகராதி | குமாரசுவாமி பிள்ளை | சென்னை : வித்தியாநுபாலன அச்சுயந்திரசாலை, ஆனந்த ஆண்டு. |
| இலிங்கபு, | இலிங்கபுராணம் | குலசேகரபாண்டியன் | சென்னை : இலட்சுமி விலாச அச்சுக்கூடம், 1925 |
| ஈடு | ஈடு முப்பத்தாருயிரப்படி | நம்பிள்ளை | திருவல்லிக்கேணி நோபில் அச்சுக்கூடம், 1925 |
| உண்மைநெறி | உண்மைநெறி விளக்கம் | உமாபதி சிவாசாரியார் | சிந்தாதிரிப்பேட்டை : சிவஞான போதயந்திரசாலை, கலி. 4996 ஜய ஆண்டு |

| | | | |
|---|---|---|---|
| உபதேச கா. | உபதேச காண்டம் | குகனேரியப்ப நாவலர் | சென்னை : கலாரத்நாகர அச்சுக்கூடம் |
| உபதேசரத் | உபதேசரத்தின மாலை | மணவாளமாமுனிகள் | சென்னை : கணேச அச்சுக்கூடம் 1920 |
| உபநி. | உபநிடதம் | கருணாகர சுவாமிகள் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திர சாலை, 1909. |
| உரி. நி. | உரிச்சொல் நிகண்டு | காங்கேயர் | கொக்குவில் : சோதிடப் பிரகாச அச்சுயந்திரசாலை, விசுவாசு ஆண்டு |
| ஐங்குறு | ஐங்குறு நூறு | சங்கப் புலவர்கள் | சென்னை : கணேச அச்சுக்கூடம். 1920 |
| ஒழிவி. | ஒழிவிலொடுக்கம் | கண்ணுடைய வள்ளல் | சென்னை : பிரின்ஸ் ஆப்வேல்ஸ் அச்சுக்கூடம் சாலை, 1906. |
| கட்டட. | கட்டட வேலையின் | கண்ணுடைய வள்ளல் | Scottish Press - Mylapore, 1858. |
| கந்த. சு | கந்தபுராணச் சுருக்கம் | சம்பந்தசரணாலயசுவாமிகள் | சென்னை : வித்தியாநுபாலன யந்திரசாலை. |
| கந்த பு. | கந்த புராணம் | கச்சியப்ப சிவாசாரியார் | சென்னை : பிரசிடென்ஸி அச்சியந்திரசாலை, 1908 |
| கந்தரந் | கந்தரந்தாதி | அருணகிரிநாதர் | ஷை : பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அச்சியந்திர சாலை, 1908. |
| கந்தரல. | கந்தரலங்காரம் | ,, | சென்னை : வித்தியாநுபாலன யந்திரசாலை, 1906 |
| கந்தரனு. | கந்தரனுபூதி | ,, | ,, ,, |

| நூலின் | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| கம்பரந். | கம்பரந்தாதி | சிவஞான சுவாமிகள் | சென்னை : இந்து தியலாஜிகல் யந்திரசாலை, நந்தன ஆண்டு |
| கம்பரா. | கம்பராமாயணம் | கம்பநாட்டாழ்வார் | சென்னை : வித்தியாரத்னுகர அச்சுக்கூடம். 1911 |
| கல்லா. | கல்லாடம் | கல்லாடனார் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திரசாலை 1911. |
| கல்வளை. | கல்வளையந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திரசாலை 1913 |
| கலிங். | கலிங்கத்துப்பரணி | சயங்கொண்டான் | Minerva Press, 1898. |
| கலித். | கலித்தொகை | சங்கப் புலவர்கள் | The Scottish Press. |
| காசிக. | காசிகண்டம் | அதிவீரராமபாண்டியர் | சென்னை ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், 1895. |
| காஞ்சிப்பு. | காஞ்சிப்புராணம் | சிவஞானசுவாமிகள் | சென்னை. கலாரத்நாகர அச்சுக்கூடம், 1910. |
| குமர பிர. | குமர குருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு | குமர குருபரசுவாமிகள் | சென்னை. கலாரத்நாகர அச்சுக்கூடம். சாபசிருது ஆண்டு. |

| | | | |
|---|---|---|---|
| குருபரம். | குருபரம்பராப்ராபவம் | பூர்வாசாரியர்கள் | சென்னை சச்சிதானந்த அச்சுயந்திர சாலை, 1909. |
| குற்ரு. தல | திருக்குற்ருலத் தலபுராணம் | திரிகூடராசப்பன் கவிராய மூர்த்திகள் | செந்தமிழ்ப் பிரசுரம். |
| குறள் | திருக்குறள் | திருவள்ளுவர் | சென்னை. வித்தியானுபாலன யந்திர சாலை, சௌமிய ஆண்டு. |
| கூர்மபு. | கூர்மபுராணம் | அதிவீரராம பாண்டியர் | சென்னை. இலஷ்மி விலாச அச்சுக் கூடம். ஈசுவர ஆண்டு. |
| கைவல்ய. | கைவல்ய நவநீதம் | தாண்டவராய சுவாமிகள் | தொண்டைமண்டலம் அச்சுயந்திர சாலை. 1905. |
| கொடிக். | கொடிக்கவி | உமாபதி சிவாசாரியார் | சென்னை. கமர்ஷியல் அச்சுக்கூடம் 1879. |
| கோயிலொ. | கோயிலொழுகு | | சென்னை. ஆனந்த முத்திரா கூர சாலை, 1909. |
| கோயிற்பு. | கோயிற் புராணம் | உமாபதி சிவாசாரியார். | சென்னை. வித்தியாநுபாலன யந்திர சாலை, சாதாரண ஆண்டு. |
| சங். அக | (சங்கத்தகராதி) தமிழ்ச் சொல்லகராதி | கதிரைவேற்பிள்ளை. | மதுரை. தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1910. |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| சதாசிவ. | சதாசிவருபம் | சட்டநாத வள்ளலார் | மதராஸ். ரிப்பன் அச்சியந்திரசாலை. 1917. |
| சது. | சதுரகராதி | வீரமாமுனிவர் | Madras. The Public Instruction Press, 1860. |
| சம். அக | சம்பிரதாயவகராதி | | ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபை. சென்னை. |
| சி. சி. | சிவஞான சித்தியார் சுபக்ஷம் | அருணந்தி சிவாசாரியர் | சென்னை: சிவஞானபோத யந்திரசாலை. சர்வதாரி ஆண்டு. |
| சி. சி. பர. | சிவஞான சித்தியார் பரக்ஷம் | | சென்னை: சிவஞானபோத யந்திரசாலை. சர்வதாரி ஆண்டு. |
| சி. போ. | சிவஞான போதம் | மெய்கண்டதேவர் | சென்னை: வித்தியானுபாலன யந்திர சாலை. 1918. |

| | | | |
|---|---|---|---|
| சி போ. சிற். | சிவஞான போதச் சிற்றுரை விளக்கம் | முத்தைய பிள்ளை. | சென்னை: வித்தியானுபாலன யந்திர சாலை. 1925. |
| சி. போ. பா. | சிவஞான போத பாஷ்யம் | சிவஞான முனிவர் | சென்னை: வித்தியானுபாலன யந்திர சாலை. துர்மதி ஆண்டு |
| சிலப். | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம் 1920. |
| சிவசம. | சிவசம வாத வுரை மறுப்பு | சிவஞான சுவாமிகள் | |
| சிவதரு. | சிவதருமோத்திரம் | மறைஞான சம்பந்தர் | சென்னை: மீனுட்சியம்மை கலாநிதி அச்சுக்கூடம். 1888 |
| சிவப். கட். | சிவப்பிரகாசக் கட்டளை | | Manonmani Vilasam Press, Madura, 1903. |
| சிவப். பிரபந். | சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு | சிவப்பிரகாச சுவாமிகள் | சென்னை: கலாரத் நாகரம் அச்சுக்கூடம். பராபவ ஆண்டு. |
| சிவப்பிர. | சிவப்பிரகாசம் | உமாபதிசிவாசாயரிர் | சிந்தாதிரிபேட்டை: சிவஞானபோத யந்திர சாலை. ஜய ஆண்டு |

| நூலின் | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| சிவரக. | சிவரகசியம் | ஒப்பிலாமணி தேசிகர் | திருச்செங்கோடு. சுப்பராய கவண்டர் அச்சுயந்திர சாலை, ஜய ஆண்டு. |
| சிவராத். பு | சிவராத்திரிபுராணம் | வரதராச பண்டிதர் | சச்சிதானந்தம் பிரஸ். சாதாரண ஆண்டு. |
| சிறுபாண். | சிறுபாணாற்றுப்படை | நல்லூர்நத்தத்தனார் | சென்னை.கமர்ஷியல்அச்சுக்கூடம். 1918 |
| சினேந். | சினேந்திரமாலை | சைனமாமுனிவர் | சென்னை. தனலஷ்மி நர்த்தன அச்சுயந்திர சாலை, 1906. |
| சீகாழித். | சீகாழித்தலபுராணம் | அருணாசலக்கவிராயர் | சென்னை. ஜீவரக்ஷாமிர்த அச்சுக் கூடம், விஜய ஆண்டு. |
| சீகாளத். பு. | சீகாளத்தி புராணம் | சிவப்பிரகாச சுவாமிகள் | சென்னை: மெமோரியல் அச்சுக் கூடம் சர்வதாரி ஆண்டு. |
| சீவக. | சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் | சென்னை: பிரஸிடென்ஸி அச்சுக் கூடம், 1907. |

| | | | |
|---|---|---|---|
| சீவரட். | சீவரட்சாமிருதம் | சுப்பிரமணிய பண்டிதர் | சென்னை:மனோன்மணி விலாச அச்சுக் கூடம். ஜயவருடம். |
| சூடா. | சூடாமணி நிகண்டு | மண்டல புருடன் | சென்னை: வித்தியாநுபாலனயந்திர சாலை, பரிதாபி ஆண்டு. |
| சூளா. | சூளாமணி | தோலா மொழித்தேவர் | சென்னை வித்தியாநுபாலன யந்திர சாலை, பரிதாபி ஆண்டு. 1889. |
| செந். பத் | செந்தமிழ்ப்பத்திரிகை | | |
| சேதுபு. | சேதுபுராணம் | நிரம்பவழகிய தேசிகர் | சென்னை : வித்தியாநுபாலன யந்திர சாலை ஏவிளம்பி ஆண்டு. |
| சைவச. | சைவசமயநெறி | மறைஞானசம்பந்தநாயனார். | சென்னை: வித்தியாநுமான யந்திர சாலை, கீலக ஆண்டு. |
| சோதிட. சிந். | சோதிடகிரக சிந்தாமணி. | இராமலிங்கக் குருக்கள் | C.P.V. Press, Madras, 1911. |
| சௌந்த். | சௌந்தர்யலகரி | கவிராச பண்டிதர் | மதராஸ்: ரிப்பன் அச்சுக்கூடம். 1907. |
| ஞானவா. | ஞானவாசிட்டம் | வசிட்டர் | சென்னை: சூளை நிரஞ்சன விலாச அச்சுயந்திரசாலை, 1911. |
| ஞாறு. | ஞாறுமிர்தம் | வாகீச முனிவர் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திரா சாலை 1904. |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| ஞானா. கட். | ஞானாமிர்தக்கட்டளை. | | Printed by Muniswami Mudaliar & Sons. Madras. 1923. |
| த. நி. போ | தத்துவநிசானுபோகசாரம் | தத்துவலிங்கதேவர் | |
| தக்கயாகப். | தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் | சென்னை: கேஸரி அச்சுக்கூடம், 1930. |
| தசகா. | தசகாரியம் | சிதம்பரநாத தேசிகர் | சென்னை: சுதேசமித்திரன் பவர் பிரஸ், 1914. |
| தஞ்சைவா. | தஞ்சைவாணன் கோவை | பொய்யாமொழிப்புலவர் | சென்னை: அமெரிக்கன் அச்சுக் கூடம், 1893. |
| தத்துவப். | தத்துவப்பிரகாசம் | தத்துவப்பிரகாச சுவாமிகள் | யாழ்பாணம்: சோதிடப்பிரகாக யந்திரசாலை நந்தன ஆண்டு. |
| தமிழ்நா. | தமிழ்நாவலர் சரிதை | | The Caxton Press, Madras, 1921. |
| தனிப்பா. | தனிப் பாடற்றிரட்டு | சந்திரசேகர கவிராஜ பண்டிதர் | Vithiya Ratthinakaram Press, Madras. 1902. |
| தாயு. | தாயுமான சுவாமிகள் பாடல் | தாயுமான சுவாமிகள் | சென்னை: ஸ்ரீநிகேதன அச்சுக் கூடம், 1906. |

| | | | |
|---|---|---|---|
| திராவிடப். | திராவிடப் பிரகாசிகை | சபாபதி நாவலர் | சென்னை: சாது அச்சுக்கூடம் 1927. |
| திரிகடு. | திரிகடுகம் | நல்லாதனூர் | சென்னை; வித்தியானுபாலன யந்திர சாலை. |
| திருக்கலம் | திருக்கலம்பகம் | உதீசி தேவர் | மதுரை. தமிழ்ச்சங்க முத்திரா சாலை |
| திருக்களிற்றுப் | திருக்களிற்றுப்படியார் | உய்யவந்த தேவநாயனார் | சென்னை: சிவஞானபோத யந்திர சாலை. துர்முகி ஆண்டு. |
| திருக்காளத்தி. பு. | திருக்காளத்திப்புராணம் | ஆனந்தக் கூத்தர் | சென்னை. வைஜயந்தி அச்சுக்கூடம். 1912. |
| திருக்கோ. | திருக்கோவையார் | மாணிக்கவாசக சுவாமிகள் | சென்னை : வித்தியானுபாலன யந்திரசாலை. பிரமதீச ஆண்டு |
| திருச்செந்.பு | திருச்செந்தூர்ப்புராணம் | வென்றிமாலைக் கவிராயர் | மதுரை : ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை, 1911. |
| திருச்செந்தூர் பிள்ளை. | திருச்செந்தூர்பிள்ளைத் தமிழ் | பகழிக் கூத்தர் | மதுரை : ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை, 1911. |
| திருத். திருவந். | திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி | சென்னை : வித்தியானுபாலன யந்திரசாலை. சாதாரண ஆண்டு. |
| திருத். பு. சா. | திருத்தொண்டர் புராண சாரம் | உமாபதி சிவாசாரியர் | சென்னை : வித்தியானுபாலன யந்திரசாலை. சாதாரண ஆண்டு. |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| திரு நூற். | திருநூற்றந்தாதி | அவிரோதியாழ்வார் | மதுரை : தமிழ்ச்சங்க முந்திராசாலை, 1905. |
| திருநெல். பு. | திருநெல்வேலித் தலபுராணம் | நெல்லையப்பக் கவிராயர் | |
| திருப்பு. | திருப்புகழ் | அருணகிரிநாதர் | சென்னை : மிமோரியல் அச்சுக்கூடம், 1909. |
| திருப்போ. சந். | திருப்போரூர்ச் சந்நிதி முறை | சிதம்பர சுவாமிகள் | சென்னை : நற்றமிழ் விலாச அச்சியந்திரசாலை, 1907. |
| திருமந். | திருமந்திரம் | திருமூலநாயனார் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திரசாலை, 1912. |
| திருமுரு. | திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | சென்னை : கமர்ஷியல் அச்சுக்கூடம், 1918 |
| திருமுறைகண். | திருமுறைகண்ட புராணம் | உமாபதி சிவாசாரியர் | சென்னை : வித்தியாநுபாலன யந்திரசாலை. சாதாரண ஆண்டு. |
| திருவாச. | திருவாசகம் | மாணிக்கவாசக சுவாமிகள் | ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம், 1907 |

| | | | |
|---|---|---|---|
| திருவாத. பு. | திருவாதவூரடிகள் புராணம் | கடவுள் மாமுனிவர் | சென்னை : வித்தியாநுபாலன யந்திரசாலை. பிலவங்க ஆண்டு. |
| திருவாலவா. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் | பெரும்பற்றப்புலியூர் நம்பி | சென்னை : பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், 1906. |
| திருவானைக். | திருவானைக்காப் புராணம் | கச்சியப்ப சுவாமிகள் | சென்னை : ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம், 1908. |
| திருவிசை. | திருவிசைப்பா | திருமாளிகைத் தேவர் முதலானோர் | சென்னை : கலாரத்நாகர அச்சுக் கூடம். சார்வரி ஆண்டு. |
| திருப்பல். | திருப்பல்லாண்டு | திருமாளிகைத் தேவர் | சென்னை : கலாரத்நாகர அச்சுக் கூடம், சார்வரி ஆண்டு. |
| திருவிருத். | திருவிருத்தம் | நம்மாழ்வார் | சென்னை : ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலை, சோபகிருது ஆண்டு. |
| திருவிளை. | திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் | சென்னை : வித்தியாரத்நாகர அச்சுக் கூடம், 1912. |
| திருவுந்தி. | திருவுந்தியார் | உய்யவந்த தேவ நாயனார் | சென்னை: சிவஞான போத யந்திரசாலை துர்முகி ஆண்டு. |
| திருவேங். சத. | திருவேங்கட சதகம் | நாராணயபாரதியார் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திரசாலை, 1905. |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| திவ். | நாலாயிர திவ்யப் பிரபந்தம் | ஆழ்வார்கள் | மதராஸ் : கோல்டன் ஸ்டீம் பிரஸ், பரிதாபி ஆண்டு |
| இயற். | இயற்பா : | | |
| முதல் திருவந். | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் | |
| திருவிருத். | திருவிருத்தம் | நம்மாழ்வார் | |
| பெரிய, திருவந். | பெரிய திருவந்தாதி | ,, | |
| திருச்சந். | திருச்சந்த விருத்தம் | திருமழிசையாழ்வா! | |
| திருப்பல். | திருப்பல்லாண்டு | பெரியாழ்வார் | |
| திருப்பா. | திருப்பாவை | ஆண்டாள் | |
| திருவாய். | திருவாய்மொழி | நம்மாழ்வார் | |
| நாய்ச். | நாய்ச்சியார் திருமொழி | ஆண்டாள் | |
| பெருமாள் | பெருமாள் திருமொழி | குலசேகரப் பெருமாள் | |
| திவ்யசூரி. | திவ்ய சூரி சரிதம் | வீரசாமி ஐயங்கார் | Madura, H. S. D. Press, 1929 |
| திவா. | சேந்தன் திவாகரம் | சேந்தனார் | சென்னை : மனோன்மணி விலாச அச்சுக்கூடம், 1904 |

| | | | |
|---|---|---|---|
| தேவா. | தேவாரம்: திருமுறை 1, 2, 3 | திருஞான சம்பந்தர் | சென்னை : சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, 1911 |
| | தேவாரம்: 4, 5, 6 | திருநாவுக்கரசர் | |
| | தேவாரம்: 7 | சுந்தர மூர்த்தி சுவாமிகள் | |
| தைலவ. | தைலவருக்கச்சுருக்கம் | தேரையர் | சென்னை: எம்பிரஸ் ஆப் இண்டியா அச்சுக்கூடம், ஹேவிளம்பி ஆண்டு |
| தொல். பாயி. | தொல்காப்பியப் பாயிர விருத்தி | சிவஞான முனிவர் | சென்னை: வித்தியாநுபாலன யந்திர சாலை. விரோதி கிருது ஆண்டு, மூன்றும் பதிப்பு. |
| தொல். பொ. | தொல்காப்பியப் பொருளதிகாரம் | | Minerva Press, Madras, 1916. |
| நம்பியக. | அகப்பொருள் விளக்கம் | நாற்கவிராச நம்பி | மதுரை: தமிழ்ச்சங்க முத்திராசாலை 1913 |
| நரிவிருத். | நரிவிருத்தம் | திருத்தக்க தேவர் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திராசாலை 1907 |
| நல். பாரத | பாரதம் | நல்லாப்பிள்ளை. | சென்னை: வித்தியாரத் நாகர அச்சுக்கூடம், 1911 |
| நல்வழி | நல்வழி | ஔவையார் | சென்னை: பண்டிதமித்ர யந்திரசாலை 1906. |

| நூலின் | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| நள. | நளவெண்பா | புகழேந்திப் புலவர் | The Minerva Press. Madras, 1911. |
| நற். | நற்றிணை | சங்கப் புலவர்கள் | சென்னை: சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை. இராக்ஷச ஆண்டு. |
| நன். விருத் | நன்னூல் விருத்தியுரை. | பவணந்தி முனிவர் | சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை. சுபகிருது ஆண்டு. |
| நன்னெறி, | நன்னெறி | சிவப்பிரகாச சுவாமிகள். | |
| நாமதீப. | நாமதீப நிகண்டு | சிவசுப்பிரமணியக் கவிராயர் | Madras : The B.N. Press, 1930 |
| நாலடி. | நாலடியார் | சமண முனிவர்கள் | மதராஸ்: ரிப்பன் அச்சியந்திரசாலை, 1909 |
| நாஞ்சி. | நாஞ்சிவவாதக் கட்டளை | | Manonmani Vilasam Press Madras, 1903. |
| நீதிநெறி | நீதிநெறி விளக்கம் | குமர குருபர சுவாமிகள் | சென்னை: கலாரத் நாகர அச்சுக் கூடம், சுபகிருது ஆண்டு. |
| நெடுநல். | நெடுநல்வாடை | நக்கீரர் | சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம், 1918 |
| நைடத. | நைடதம் | அதிவீரராம பாண்டியர் | சென்னை: வித்தியாரத் நாகர அச்சுக்கூடம், 1910. |

| | | | |
|---|---|---|---|
| பகவற். முதற்குறிப்பு | பகவற்கீதை | ஸ்ரீபட்டனார் | சென்னை: ரிப்பன் அச்சியந்திரசாலை 1912 |
| பஞ். | பஞ்சாங்கம் | | |
| பஞ்சாக். | பஞ்சாக்கரமாலை | கண்ணுடைய வள்ளலார் | சென்னை: சாது அச்சுக்கூடம், 1932. |
| பதிற்றுப் | பதிற்றுப்பத்து | குமட்டூர்க் கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியனார், பரணர், நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் | சென்னை : கமர்ஷியல் அச்சுக்கூடம் 1920. |
| பதினொ. | பதினொராந்திருமுறை | திருவாலவாயுடையாரும் பிறரும் | சென்னை : கலாரத்நாகர அச்சுக்கூடம், சார்வரி ஆண்டு |
| மதுரைக். | மதுரைக் காஞ்சி | மாங்குடி மருதனார் | சென்னை : கமர்ஷியல் அச்சுக்கூடம் 1918. |
| மலைபடு. | மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் | ,, ,, ,, |
| மனோன். | மனோன்மணீயம் | சுந்தரம்பிள்ளை | |
| மேருமந். | மேருமந்தரபுராணம் | வாமனமுனிவர் | சென்னை : சாது அச்சுக்கூடம் 1923 |

| நூலின் முதற்குறிப்பு | நூல் | ஆக்கியோர் : தொகுத்தோர் பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| யாப். | யாப்பருங்கலம் | அமிதசாகரர் | சென்னை : ராமநிலைய விவேகானந்த முத்திராக்ஷர சாலை, 1908. |
| யாழ். அக. | யாழ்ப்பாணத்து மானிப்பாயகராதி | சந்திரசேகரப்புலவர் | American Mission Press, Jaffna, 1842. |
| விநாயகபு. | விநாயக புராணம் | கச்சியப்ப முனிவர் | சென்னை : கணேச அச்சியந்திர சாலை, 1910. |
| விவிலி. | விவிலிய நூல் | | Madras : The Diocesan Press, 1923 |
| வேதா. சூ. | வேதாந்த சூளாமணி | சிவப்பிரகாச சுவாமிகள் | சென்னை : ரிப்பன் அச்சியந்திர சாலை, 1909. |
| வேதா. தச. கட். | வேதாந்த தசகாரியக் கட்டளை | | Manonmani Vilasam Press, Madras, 1903. |
| வேதா. தத் | வேதாந்த தத்துவக் கட்டளை | | ,, ,, ,, |
| ஸ்ரீவசன. | ஸ்ரீவசன பூஷணம் | பிள்ளைலோகாசாரியர் | சென்னை : ஆனந்த முத்ரா யந்தராலயம், 1908. |

## அகராதியில் வரும் பிற குறுக்க விளக்கங்கள் :

| | | | |
|---|---|---|---|
| அ. செ. | அருங்கலங்செப்பு | மணி. | மணிமேகலை |
| அத். | அத்வைதம் | ம. த. அ | மதுரைத் தமிழ்ச்சொல் |
| அபி. சிந். | அபிதான சிந்தாமணி | ம. த. பே | அகராதி |
| இ. | இஸ்லாம் | வ்யா. | வ்யாக்யானம் |
| கி. | கிறிஸ்தவம் | வை. | வைணவம் |
| கோ. த (ஸ்ரீ. த) | கோயில் தமிழ் | I.M.P | Inscriptions of Madras Presidency |
| ச. | சமணம் | (Insc.) | Inscription |
| | | (J.) | Jaffna term |
| | | (Loc. | Local usuage |
| சா. சொ. அ. | சாசனச் சொல்லகராதி | M. M. | Manual of the Administration |
| சை. | சைவம் | | of the Madras Presidency |
| த. சொ. | தமிழ்ச்சொல்லகராதி | R. C. | Roman Catholic usuage |
| தத். | தத்துவச்சொல் | | |
| தி. பி. அ. | திவ்யப்பிரபந்தஅகராதி | S. I. I. | South Indian Inseriptions |
| பக். | பக்கம் | (W) | West |
| பதி. | பதிகம் | | |
| பா. | பாடல் | | |
| பாயி. | பாயிரம் | | |
| புதுப். | புதுப்பதிப்பு | | |
| பௌ. | பௌத்தம் | | |

## ஆதார அகராதிகளும் நூல்களும்


| | | |
|---|---|---|
| அகராதி நிகண்டு | : | டாக்டர். இரா. நாகசாமி, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-41, 1983. |
| அபிதான் கோசம் | : | ஆ. முத்துத்தம்பி பிள்ளை, Asian Educational Services, 1985. |
| அபிதான சிந்தாமணி | : | சிங்காரவேலு முதலியார், வைஜயந்தி அச்சியந்திரசாலை, சென்னை, 1910. |
| இலக்கியச் சொல்லகராதி | : | சு. குமாரசாமி பிள்ளை, யாழ்ப்பாணம், 1914. |
| இஸ்லாமியக் கலைக்களஞ்சியம். | : | அப்துற்-றஹீம், யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்அண்ட் புக்செல்லர்ஸ் சென்னை. 1976. |
| கம்பராமாயண அகராதி | : | அ. சே. சுந்தரராஜன், கும்பகோணம் பதிப்பு, 1971. |
| கலைக்களஞ்சியம் (10 தொகுதிகள்) | : | தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1954. |
| சதுரகராதி | : | வீரமாமுனிவர், வீரமாமுனிவர் ஆய்வுக்கழக வெளியீடு, பாளையங்கோட்டை, 1979. |
| சதுரகராதி ஆராய்ச்சி | : | சூ. இன்னாசி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| சமய சாத்திர அகராதி | : | தி. கி. நாராயணசாமி, திரு. வி. க. நூற்றுண்டு நினைவு வெளியீடு, கடலூர், 1983. |
| சாசனச்சொல் அகராதி | : | T. N. Subramaniyan. Government Oriental Manuscripts Library, Madras-5 1957. |

| | | |
|---|---|---|
| சிறப்புப்பெயர் அகராதி | : | சு. அ. இராமசாமிப் புலவர், கழக வெளியீடு, சென்னை, 1970. |
| செந்தமிழ் அகராதி | : | ந. சி. கந்தையா பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1950. |
| தமிழ்ச் சொல்லகராதி | : | கதிரைவேற் பிள்ளை, தமிழ்ச் சங்கம், மதுரை, 1970. |
| தமிழ்ப் பேரகராதி | : | கதிரைவேற் பிள்ளை, நா. நமச்சிவாய முதலியார் பதிப்பு, சென்னை, 1901. |
| தமிழ் லெக்ஸிகன் (ஆறு தொகுதிகள்) | : | சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1982. |
| திவ்யப் பிரபந்த அகராதி | : | திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார். அரசாங்கக் கீழைக் கலைக் கையெழுத்துச் சுவடி நூலகம், சென்னை, 1961. |
| நாலாயிரத் திவ்யப் பிரபந்த அகராதி | : | பார்த்தசாரதி ஐயங்கார், ஸ்ரீரங்கம். 1963. |
| பொருளகராதி | : | மகாலிங்க ஐயர் பதிப்பு. |
| மதுரைத் தமிழ்ப் பேரகராதி | : | இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன், 1937. |
| வடசொல் தமிழ் அகரவரிசை | : | தி. நீலாம்பிகை அம்மையார், சென்னை, 1937. |
| A Dictionary of Hinduism | : | Margaret & James Stutley, Allied Publishers Private Limited, Madras, 1977. |
| The Dictionary of Philosophy | : | Dagobert D. Runes, George Routledge & Sons Ltd., London, 1945. |
| Outlines of Hinduism | : | T. M. P. Mahadevan, Madras Law Journal Press, Madras 4, 1940. |

| | | |
|---|---|---|
| அத்வைதம் | : | திருவாவடுதுறை ஆதீனம், வெளியீடு எண் 245, 1969. |
| அருங்கலச்செப்பு | : | உரையாசிரியர் டாக்டர் க. ப. அறவாணன். ஜைன இளைஞர் மன்றம் சென்னை, 17, 1977. |
| இந்திய தத்துவஞானம் | : | கி. லக்ஷ்மணன், சென்னை, 14, இரண்டாம் பதிப்பு, 1970. |
| சமணம் | : | தா. எ. ஞானமூர்த்தி (பொன்விழா வெளியீடு), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1977. |
| சைவ சமயம் | : | மு. அருணாசலம், மாணிக்கம் பிரஸ், சென்னை, 29, 1969. |
| தம்மபதம் | : | கௌதம புத்தர் அருளியது, அ. லெ. நடராஜன் மொழி பெயர்ப்பு, கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், வேதாரண்யம், 1979. |
| துவைத வேதாந்தம் | : | தி. ப. இராமசந்திரன், சென்னைப் பல்கலைக் கழகம், 1981. |
| தேவாரம் அடங்கன் முறை | : | மயிலை இளமுருகனார் பதிப்பு, சென்னை, 1953. |
| பௌத்தம் | : | சோ. ந. கந்தசாமி (பொன்விழா வெளியீடு) சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை : 1977. |
| மணிமேகலை | : | மர்ரோ அண்டு கம்பெனி, சென்னை, 1957. |
| வீரசைவம் | : | வை. இரத்தினசபாபதி, சென்னைப் பல்கலைக் கழகம். 1977. |

**அ** —சிவன் திருமந். (1751) உமாதேவி, பிரமன், திருமால் அவ்வென் சொற் பொருளா வான். (பாகவ. சிசுபா. 20)

**அக்க சூத்திரம்**—உருத்திராட்ச மாலை, (சித்.சா. கிரியா. 83, தாத்)

**அக்கதம்**—ஆசி முதலியவற்றில் உபயோகிக்கும் முழு அரிசி. சிந் துந் துணரும் அக்கதமும். (கந் தபு. சூரனர. 25.)

**அக்கதை** —அட்சதை, மங்கல அரிசி. (பிரபுலிங். மாயைபூ 44)

**அக்கபாதன்** —கௌதமன். (மணி. 27. 82)

**அக்கம், அக்கமணி, அக்க மாலை**-உருத்திராக்கமணி. செப மணி. பொறிபர வக்க மணித் தொடை பூண்டு (திருக்காளத். பு. 5, 27) புகலுறு மக்கமாலை புனைகுவோர் (பிரபோத. 18,3) புத்தக மக்கமாலை பொருந்து கையாள் (திருவாலவா. கடவுள் வா. 20)

**அக்கர்** —சங்கு மணியையுடைய வர், சிவபெருமான்.

**அக்கரவார்த்தோன்** — சிவன்

**அக்கரன்**— கடவுள், (சங்.அக) திருமால்

**அக்கராலத்தி**— கோயில் தீப வகை(குற்று.தல.சிவபூசை.48)

**அக்கரையர்**— பரலோக வாசி கள். அக்கரையராய்.... நித்யஸூரி களில் ஒருவர் வந்தவ தரித்தார் (உபதேச ரத். அவதா. பக். 1)

**அக்காரக்கனி**— சோளசிம்ம புரத்து எம்பெருமான்

**அக்காளி, அக்காளிப்பிர சாதம் அக்காளிமண்டை** கோயிற் பிரசாதவகை

**அக்கிசூலி**— குமாரசுவாமி

**அக்கிரசன்மன்**— பிரமன்

**அக்கிர பூசனை**— முதன்மைப் பூசை

**அக்கிரம்** — நிவேதன உணவு

**அக்கிரஜன்மன்**—பிரமன்

**அக்கினிக் கண்ணன்**— சிவன்

**அக்கினிகர்ப்பை**— பூமிதேவி

**அக்கினி—காரியம்** —அக்கினி யில் செய்யப்படும் ஓமம் முதலி யன.

**அக்கினி குண்டம்** — ஓமம் வளர்க்கும் குழி.

**அக்கினிகுமாரன்**— முருகக் கடவுள்

**அக்கினி கோத்திரம்**— தினந் தோறும் செய்யும் ஓம விசேடம் (திருக்காளத். பு. 26, 6)

**அக்கினி கோத்திரி**— நித்திய ஓமாக்கினி வளர்ப்போன்

**அக்கினிகோத்திரி விபூதி** — வேள்வித் திருநீறு

**அக்கினிசன்மன்**— முருகக் கடவுள்

**அக்கினிட்டோமம்**— சோம யாக வகை அக்கினிதேவனுக்கு வசந்த காலத்தில் செய்யப்படும் ஒரு யாகம். (மச்சபு.தடாக.26)

**அக்கினித்தம்பன்**— சிவபெருமான்.

**அக்கினிபுவன், அக்கினிபூ**— முருகக் கடவுள் (மச்சபு.குமார. 115)

**அக்கினியாலயம்**— ஓமகுண்டம்

**அக்கினி லிங்கம்**—தேயு லிங்கம்

**அக்கினிஜன், அக்கினிஜன்மன்**—முருகக் கடவுள்

**அக்கு**—உருத்திராக்க மணி (திருவானைக், கோச்செங். 4), சங்கு மணி அக்கின் னகை இவள் (திருக்கோ. 376)

**அக்குசை**—துறவு பூண்டு தவம் புரியும் சமண விதவை. (திருவிளை. சமணரைக். 17)

**அக்குவடம்**—சங்குமணி வடம். அக்கு வடமுடுத்து(திவ். பெரியாழ். 1,7,2)

**அக்ர பூசனை** —முதன் மரியாதை, ஆர்கொலோ வக்ரபூசனைக் குரியார் (பாரத. இராச. 112)

**அகக்கரணம்**—மனம். (கைவல்தத். 9)

**அகக் கூத்து**—(சத்வ, ரஜ, தாமச) முக்குண சம்பந்தமான நடிப்பு

**அகங்கரம்**—அகங்காரம் (ஞானவா. வைராக். 85)

**அகங்காரக் கிரந்தி**— தத்துவங்களைத் தானென்று ஆசை கொள்ளும்உயிர்க்கட்டு(நாஞசீ)

**அகங்கார சைதன்யவாதி** — பிராணன் முதலிய வாயுக்களே ஆன்மா என்னும் கொள்கையன் (சி.சி. 2,73, மறைஞா).

**அகங்காரத்திரயம்**— புறநிலைக்கருவிவகை (சிவப்,கட்), தைசதவகங்காரம், வைகரியகங்காரம், பூதாதியகங்காரம்.

**அகங்காரம்**— நானென்னும் அபிமானம்(நல்.பாரத.கௌசிக. 84).

**அகங்கார வாதி**— மனோமய கோசமே உயிர் என்னும் கொள்கையான். (சி. சி. 4, 23. மறைஞா)

**அகங்காரான்ம வாதி**— அகங்காரமே உயிர் என்னும் கொள்கையான். (சி.சி.4,1, ஞானப்)

**அகச்சந்தானம்**— சைவசித்தாந்தக் கொள்கைகளைக் கைலாய பரம்பரையில்உபதேசித்து வந்தவர்களும் நந்திதேவர் சனற்குமாரர் சத்தியஞான தரிசினிகள் பரஞ்சோதி முனிவர் என்று பெயர் பெற்றவர்களுமான நான்கு குரவர்கள் :(சை)

**அகச்சமயம்**— பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவ சமவாத சைவம்,சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுவரவவிகரா வாத சைவம், சிவாத்துவித சைவம். அகச் சமயத் தொளி யாய் (சிவப்பிர, பாயி. 7.)

**அகசை**— பார்வதி (மலையிற் பிறந்தவள்)

**அகட்டுத்தே**- விநாயகக்கடவுள்

**அகண்டபரி பூரணன்**— சர்வ வியாபகன். (திருக்கோ. 197. உரை.)

**அகண்டன்**—கடவுள், அருகன், திருமால், சிவன்.

**அகண்டாகாரம்**— பகுக்கப் படாதவடிவம் (சி.போ.பா.8,1. பக், 172)

**அகண்டிதன்**— பின்னப்படாத கடவுள், அகண்டித னகம்பன் மதுரைப், 70)

**அகத்தடிமை**— அணுக்கத் தொண்டு, அகத்தடிமை செய்யு மந்தணன் (தேவா. 614,6)

**அகத்தமிழ்**—அகத்திணை பற் றிய தமிழ் (திருக்கோ. 70

**அகத்தியன்**— ஒருமுநிசிரேட் டன்(கம்பரா, அகத்தியப்.26)

**அகத்திருத்துவம்**—செயலின்றி நிற்குங் கடவுட் டன்மை(வேதா சூ, 47)

**அகதி**—மோட்சகதி

**அகநாழிகை** — கர்ப்பக்கிருகம், அகநாழிகைப் பணிசெய்வார். (T.A.S.I.6)

**அகம்படி**—அடியார். (ஈடு. 5, 8 2)

**அகம்படித்தொண்டு**— அணுக் கத்தொண்டு. கோயிலுள்ளா லகம்படித் தொண்டு செய்வார் (பெரியபு, தில்லை.4)

**அகம்படிமை**—அகம்படித் தொண்டு. அகம்படித் திறலினர் (கோயிற். பாயி.13)

**அகம் பிரமம்**— நானே பிரமம் எனல் (ம. த. பே)

**அகம் பிரமம் எனல்**— சிவனே நான், நானே சிவம் எனல் இரண்டறக்கலந்தது எனல்- (ம. த. பே)

**அகம்பிரமவாதி**—நானேபிரமம் என்று வாதிக்கிறவன், அத்வை தி(ம. த பே)

**அகமகன் அகமன்**— பிள்ளை யார் (சம். அக)

**அகமர்த்தம்**— ஆன்மா

**அகமருடணம் அகமருடம்** — வேதமந்திரச் சிறப்பு. (பெரியபுர் திருஞான. 60)

**அகமிந்திரம் அகமிந்திரலோ கம்**-தேவலோகத் தொன்று (ச)

**அகர்த்திருவாதம்**— படைப்புக் கடவுள் இல்லை என்னும்வாதம் (சி.சி.பர சௌத். 1,உரை)

**அகலர்**— (உருவமில்லாதவர்) கடவுள்

**அகளங்கமூர்த்தி, அகளங் கன்**—புத்தன். (களங்கமற்றவன்) (திவா)

**அகற்பப்பிராணாயாமம்**— மந்திர தியானங்களின்றிச் செய் யும் பிராணாயாமம்.

**அகற்பவிபூதி**—இதுஇடி வீழ்ந்த விடத்தில்உண்டாகியதும்-மலை உச்சியிலும் பூமியிலும்பிறிதொரு காரணத்தால் விளைந்ததும் ஆகிய விபூதி. இதனை முல மந்திரம் காலமந்திரங்களினாலே சுத்தி செய்து தரிப்பர்.

**அகனிஷ்டன்**—புத்தன்

**அகஜாதை**—பார்வதி

**அகூதம்**—தேவரால் தோண்டப் பட்ட குளம்

**அகாதிகள்**— ஆயுஷ்யம், வேத னியம், கோத்திரம், நாமம்; சாத கமாகிய கர்மங்கள் -தீர்ப்ப தகா திகள் (திருநூற். 88)

**அகாந்துமசை**— பார்வதி

**அகாயன்**—கடவுள்

**அகாரணன்**—கடவுள், இறை வன்

**அகிப்பிரத்திநம்**—சிவன்(பாம்பு களால் கட்டுண்ட கழுத்துடை யவன்)

**அகிரிபு**—இந்திரன், கிருட்டினன்

**அகிலகலாவல்லி**— சரசுவதி

**அகிலரூபன்**—கடவுள்

**அகிலாண்டநாயகி**— பார்வதி தேவி

**அகீதா**— கொள்கை கோட்பாடு (இ)

**அகுசலவேதனை**— துக்க உணர்ச்சி. (பௌ.)

**அகுலம்**—சக்தியோடுகூடியதாக இன்றி சிவத்தைக் குறிப்பது.

**அகோபிலம்**— சிங்கவேள் குன் றம் என்னுந் திருப்பதி. சொல கோபில நரசிங்கம் (திருச்செந் பு.18,43)

**அகோரசிவாசாரியார்**- சைவ பத்ததி இயற்றியவருள் ஒருவர்.

**அகோரம்**—1. சிவன் முகத்தொ ன்று(சிவதரு. பரிகார. 89) 2. ஒரு சைவ மந்திரம் (சைவச பொது. 324.)

**அகோரன்**—சிவன்(சூத. எக்கி. பூ. 33,2)

**அங்கங்களரி**—கோயிலில் தரு மஞ் செய்தோர்க்குச் செய்யும் மரியாதை. (Loc)

**அங்கசவேள், அங்கசன்** - காமவேள் - மன்மதன்

**அங்கணன் அங்கணாயகன்** —சிவன், (தேவா. 989. 4) இராமன்

**அங்கணாளன்**—சிவபெருமான்

**அங்கணி**—பார்வதி (சங். அக)

**அங்கதாரி**—சிவன்

**அங்கஜி**—பிரமன்

**அங்கநியாசம்**— மந்திரத்தோடு உறுப்புக்களைத் தொடுகை. (திருக்காளத், பு.5,39)

**அங்க நூல்**—வேதாங்க நூல், சோதிடாதி மற்றங்க நூல் (தாயு. சிதம்பர. 10)

**அங்கப் பதக்கணம், அங்கப் பிரதக்கணம் அங்கப்பிரதட்சிணம்**-சரீரத்தால் புரண்டுவலம் வருகை (திருவாலவா. 34.13) (சிகாழித் தலவி, 14)

**அங்கபூவம்**—அங்காகம பூர்வாகமங்கள்-(ச)

**அங்க மாலை**—எலும்பு மாலை. (தேவா, 295,7)

**அங்கயற்கண்ணி**— மீனாட்சி. அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவாய் (தேவா.868 1)

**அங்கலிங்கம்**— வீரசைவர்கள் தங்கள் சரீரத்தில் தரித்துக் கொள்ளும் இலிங்கம்

**அங்கா கமம்**—சைனாகம பேதங்களுள் ஒன்று. (சிலப்.10. 187. உரை)

**அங்காரம்**— மாத்துவர் நெற்றியில் அணியும்கரிக்கோடு, ஆங்க தனிடை யங்காரமுந் தீட்டி (பிரபோத. 11, 17)

**அங்காளம்மை அங்காளி**— அங்காளம்மையாகிய காளி

அங்கி, அக்கினித் தேவன் (கந்தபு. பாயிர, 53)

**அங்கித்தேவன்**—சூரியன் — பனிப்பகை யங்கியைப் பழிப்பர். (திருக்காளத் பு. 30, 14)

**அங்கியாதானம்**— யாகத்திற் காக அக்கினியைச் சேர்க்குங் கிரியை (திருக்காளத், பு29,33)

**அங்கில்**— பெருமாள் நாச்சியார் முதலானாருக்குச் சாத்தும் கவசம் (கோ.த)

**அங்கிவிழிவந்தவன்** — வயிரவன்

**அங்குசதாரி, அங்குசபாச மேந்தி, அங்குசபாணி**-1.விநாயகன்(சூடா)
2. துர்க்கை,

**அச்சயன், அச்சன்,**— அழிவில்லாத கடவுள்

**அச்சித்தன்**— ஸச்சித்த விரதி என்றது ஐந்தாம் நிலைசிராவகன் (அ. செ. 166)

**அச்சுதந்தெளித்தல்**—அறுகும் அரிசியும் இடுதல்(சீவக.2411)

**அச்சுதம்**— அறுகும் அரிசியும் கூடியது(சீவக. 2494)

**அச்சுதம்**—தேவலோகம்

**அச்சுதன்**— 1. அருகக்கடவுள் 2. சிவபெருமான். 3. முருகக் கடவுள் 4. திருமால்(திவா) அச்சுதனுஞ் சிவன். (கந்தபு. அவைபுகு. 8)

**அச்சுதை**— பார்வதி. (கூர்மபு. திருக்கல். 23)

**அச்சுவினிகள்**— அச்சுவினித் தேவர்கள்

**அசகவம்**— சிவபெருமானுடைய வில்

**அசதீபம்**—கோயிலிலுள்ள ஆராதனைத் தீபவகை.

**அசம்ஞ்யாசத்துவலோகம்**— பிரமலோகம் இருபதுள்ளே பதினோராவது எனப்படும் உலகம் (பௌ.)

**அசமபாணன், அசரீரன்**-மன்மதன்

**அசலசலம், அசலசலலிங்கம்**

**அசலம்**—ஒருவகை லிங்கம்(சை) மண்டலமுங் காணி னசலசலம் (சைவச. பொது, 123)

**அசலமூர்த்தி**—சிவலிங்கம்

**அசலலிங்கம்**—1. வழிபாட்டுக்குரிய கோபுர முதலியன (-சை) 2. இடப்பெயர்ச்சியின்றி ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலேயே இருக்கும் லிங்கம்(ம.த பே).

**அசலை**— துர்க்கை, பார்வதி. (கூர்மபு, திருக்கல், 20) பூமி. அசலை மங்கை. (கந்தபு, இரணியன், 56)

**அசவாகநன்**—முருகக் கடவுள்

**அசன்**—பிரமன், திருமால், சிவன், மன்மதன்

**அசன்னு, உபயதன்ம, விகலம்**— பிரதிவாதிக்கு இல்பொருள் ஒன்றைக் காட்டுமிடத்து, அதன்கண் சாத்திய தன்மம், சாதன தன்மம் என்னும் இரண்டும் இல்லையாகக் காட்டுவது (மணி)

**அசக்ஷு தரிசனுவரணீயம்**— உண்மைக் கொள்கையைக் காண வொட்டாமற் றடுக்கும் தரிசனாவரணீய வினைவகை. (ச)

**அசாதாரணஅநைகாந்திகம்**—சாதிக்கக் கருதிச் சொல்லும் பக்க வசனத்துக்குப்பொருந்திய ஏது, அப்பக்கத்துத் தன்மியொழிய, ஏனைச்சபக்க விபக்கங்களில் முற்றும் பொருந்தாது ஒழிதல்.(மணி)

**அசித்தம்**— ஏதுப் போலியுள் ஒன்று; இது உபய-அசித்தம், அன்னியதர அசித்தம், சித்த அசித்தம்; ஆசிரிய அசித்தம் என நான்கு வகைப்படும். (மணி)

**அசிதம்**— சிவாகமத்துள் ஒன்று. (சைவச. பொது. 331, உரை)

**அசிதர்**—தீர்த்தங்கரருள் ஒருவர். (திருக்கலம். காப்பு, உரை)

**அசிதன்**-சிவன், திருமால், புத்தன் சைன தீர்த்தங்கரரில் இரண்டாமவர்.

**அசிதை**—பராசத்தி பேதம். (சைவச, பொது. 74, உரை)

**அசீவன்**— (உயிரல்லது) ஐவகைப்பொருட்களை உடையது. புத்தகலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம்(ச. )

**அசுதாரணன்**—சிவபிரான்

**அசுபபாவனை**— சரீரத்தின் அசுசி அநித்தியம் முதலியவற்றைக் கருதும் ஸ்ரீலக்ஷணபாவனை(பௌ.)

**அசுர்**—அசுரர். அசுரரைச்செற்ற (திவ். இயற். திருவிருத். 67)

**அசுரரிபு**—திருமால்

**அசுரற்றடிந்தோன்**— முருகக் கடவுள்.

**அசுவதீபம்**— கோயில் ஆராதனைத் தீபவகை

**அசோகமர்கடவுள்**—அருகன். (பிங்)

**அசோகன்**— அருகன்

**அஞ்சத்தான்**—பிரமன்

**அஞ்சநன்**—இந்திரன், திருமால் (அஞ்சந-கருமை)

**அஞ்சலினவர்**— பாஞ்சராத்திரிகள். அஞ்சலினவர்புகழண்ணல் (கந்தபு, திருவவ, 62)

**அஞ்சன்**—மன்மதன், சூரியன், திருமால், பரமாத்மா பிரமன் (சூத, எச்சிய,உத், பிரம,2,15) சூரியன் (கூர்மபு,ஆதவர்சிறப்2)

**அஞ்சனவண்ணன்**

**அஞ்சனவுருவன்**— திருமால், (சிலப் .6, 47)

**அஞ்சனாதேவி** — அஞ்சனை —அனுமன்தாய் (கம்பரா. நட் புக். 28)

**அஞ்சானனன்**—சிவன், ஐந்து முகமுள்ளவன்,

**அட்சதை**— மங்கல அரிசி. மா மலர் அட்சதை யறுகதிற் சொ ரிந்து (பிரபோத. 11, 42)

**அட்சமணி**—, **அட்சமாலிகை**
**அட்ச மாலை** —உருத்திராட்ச மாலை, செபமாலை
**அட்சயன்**—கடவுள்

**அட்சரதேவி**— சரசுவதி, அட் சரதேவி கோவின் விதிப்படி (திருப்பு. 1126)

**அட்டகர்ணன்**—பிரமன் (எட் டுக்காதுள்ளவன்)

**அட்டகாசி**—சிவன்.

**அட்டகுணபூதன்**— அருகன்

**அட்டசித்தி**— அஷ்டமாசித்தி, (திருவாச. 2, 63)எந்தையட்ட சித்திவேண்டும் (திருவிளை. அட்டமா. 6)

**அட்டசிரவணன்**—பிரமன்

**அட்டநேமிநாதர்**— பொன்னெ யில்வட்டத் திருக்கும் சமணப் பெரியோர்

**அட்டமூர்த்தம்**—சிவன் வடிவம் எட்டு, (தேவா. 53, 8)

**அட்டவீரட்டம்**— கண்டியூர், கடவூர், அதிகை, வழுவூர், பறி யலூர், கோவலூர், குறுக்கை விற்குடி, எட்டு வீரட்டானப் பதிகள்.

**அட்டன்**— அட்டமூர்த்தியான சிவபிரான். (தேவா, 855,8)

**அட்டனம்**—சக்கராயுதம்

**அட்டாங்கசீலம்**— நல்லொழுக் கமாகிய சீலத்தின் பதினெட்டு உறுப்புக்கள் (பௌ)

**அட்டாங்க நமஸ்காரம்**—மோ வாய்,செவிகள் இரண்டு, தலை, புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோய வணங்குதல்.

**அட்டாலகம்**—கோபுரம்

**அடங்கன்முறை**— சைவத்திரு மறைகள், தேவாரம்.

**அடந்தை**— திருவரங்கத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் வைத்து வளர்த்த துழாய்வனம்

**அடிகண்மார்**— சமணாசாரியர், அடிகண்மார்க்கு மேவிய தீங்கு தன்னை விளைப்பது, (பெரியபு - திருஞான, 641)

**அடிகள்**— கடவுள், மலர்மகள் விரும்புந மரும்பெற லடிகள் (திவ். திருவாய், 1,3,1)

**அடிசிற்சாலை**— அன்ன சத்திரம்

**அடிஞானம்**— பதிஞானம்

**அடிதண்டம்**— ஆலயத்துக்குச் செல்லும்போது வழிமுழுதும் தண்டனிடுகை. (Loc)

**அடிதொடுதல்**— தெய்வத்தின் திருவ்டிகளைத் தொட்டுச்சபதம் செய்தல், (மணி)

**அடிநீறு**—பாத தூளி (திவ். திருவாய், 5, 9, 2)

**அடிமுடி**— ஆதியந்தம்

**அடைக்கலமாதா**— அடைக்கலமளிக்கும் தேவமாதா. (கி)

**அண்டசன்**— பிரமன்

**அண்டதரன்**— சிவன்

**அண்டநாயகி**— பார்வதி

**அண்டமீன்றவன்**— பிரமன்

**அண்டர்நாதன்**—இராமபிரான்

**அண்டர்நாயகன்**— 1 இராமபிரான், 2 இந்திரன்

**அண்டர் பிரான்**-- சிவன்

**அண்டன்**— கடவுள், தேவன்

**அண்ணல்**— 1. புத்தன், 2. சிவன் 3. அருகன் 4. கடவுள். அண்ணல் அருளால் நண்ணி. (சிவப்பிர, பொது,7)

**அண்ணா**—திருவண்ணாமலை. (தேவா. 756.1)

**அணங்கயர்தல்**— விழாக் கொண்டாடுதல்(பெரியபு, திருக்குறி, 7)

**அணங்காடுதல்**— தெய்வமாவேசித்தாடுதல். அணங்காடு தலன்றந்தோ. (திவ், திருவாய், 4,6,5)

**அணங்கார் பாகன்**— சிவன்.

**அணங்கு**— 1 தெய்வம், (தொல், பொருள், 256)
2 தெய்வமகள், (திவா)
3 வருத்திக்கொல்லுந் தெய்வமகள் 4 தெய்வத்திற்கு ஒப்பான மாதர் (குறள், 918)
5 பேய் 6 வெறியாட்டு

**அணுக்கத்தொண்டன்**— அடுத்துப்பணி செய்வோன்

**அணுக்கநம்பி**— சுந்தரமூர்த்தி நாயனார்

**அணுக்கன்**— தொண்டன்

**அணுக்கன் திருவாயில்**— கர்ப்பக்கிருக வாயில்

**அணுகாரணவாதம்**— பரமாணுக்களே பிரபஞ்ச காரணம் என்னும் மதம் (சி. சி. 1,11. சிவஞான)

**அணு சதாசிவர்—** சாதாக்கிய தத்துவத்தில் இன்பம் அனுப விக்கும் ஆன்மாக்கள்.

**அணு சைவம்—** சைவம் பதி னாறனுள் ஒன்று

**அணுத்தரம்—** ஒருவித தேவ லோகம்

**அணுபட்சம்—** அசுத்தப் பிர பஞ்சத்தில் தொழில் புரியும் சிவ பேதங்கள் (சி.போ.பா 2, 4, பக் 223, புது.)

**அணுவதம் ஐந்து—** கொல் லாமை, பொய்யாமை, கள வாடாமை, காமுறாமை, பொருள் விரும்பாமை.

**அணுவிரதம்—** ஒரு சைன விரதம்

**அணை—** பெருமாளுக்குப் பின்னாலிடுந் திண்டு (ஸ்ரீ. த.)

**அத்தநாரீசுரன்—** பாதி உடம்பு பெண்வடிவான சிவன்

**அத்தர்—** சிவன், தேவர்

**அத்தவ்வாபு—** (பாவங்களை மன்னிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அத்தவாகநன்—** சிவன்

**அத்தன்—** 1. தகப்பன் 2. மூத் தோன் 3. குரு 4. உயர்ந் தோன் 5. சிவன் 6. விஷ்ணு 7. அருகன் 8 சுவாமி. (சூடா)

**அத்தஹிய்யாத்—** தொழுகை யின் இறுதியும் உச்சநிலையு மான கஃதா என்னும் இருப்பு நிலையில் செய்யப்படும் சமர்ப் பணமும் ஓதப்படும் இறைஞ்சு தலுமாகும் (இ)

**அத்தி—** 1. தெய்வயானை (திருப்பு-1) 2. ஓர்அசுரன் 3. அத்திகாயம் (ச.)

**அத்திசயநன்—** திருமால்

**அத்திமாலி=** சிவன்

**அத்திமுகத்தோன்—** விநாயகன் (பிங்.)

**அத்தியயன பட்டர்—** அர்ச் சகன்

**அத்தியயனம்—**(வேதம்)ஓதல். அத்தியயனத்தொடு வலமாத் திரிந்து (நல். பாரத தருமசா. 177)

**அத்தியயனோற்சவம்—** விஷ்ணுகோயில் உற்சவ வகை. (கோயிலொ. 8)

**அத்தியக்ஷரம்—** ஓங்காரம்

**அத்தியாத்துமம்—** நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று,

**அத்தியாபகன்—** வேதம் ஓது விப்போன். (பிரபோத. 11, 5)

**அத்தியாபனம்**— வேதமோது விக்கை

**அத்தியான்மிகம்**—1. சைவாகமங்களுள் ஒரு பகுதி 2. ஆன்மா பிறரால் அடையுந் துக்கம்

**அத்தியானம்**— வேத மோது விக்கை (பிரபோத. 11, 4)

**அத்தியூர்**— காஞ்சியிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம் (யாப். வி. 93. பக். 351)

**அத்திர தேவர்**— அஸ்திர தேவர் உற்சவ காலங்களில் சுவாமி புறப்படுவதற்கு முன் வீதியைச் சுற்றிக்கொண்டு வரும் ஆயுத வடிவமான மூர்த்தி (திருவானைக். திரு விழா. 11.)

**அத்திரி**— 1. ஒரு முனிவர் 2. தரும நூல் பதினெட்டில் ஒன்று. (பிங்,)

**அத்திரிசை அத்திரி நந்தினி**— பார்வதி

**அத்திரீசன்**— சிவன்

**அத்துவ சுத்தி**— தீட்சா காலத்தில் ஆசாரியன் ஆறு அத்துவாக்களிலும் சஞ்சிதமாயிருந்த கன்மங்களை எல்லாம் நசிப்பிக்கை. (சைவச. ஆசாரி. 64,)

**அத்துவயதாரகம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**அத்துவயன்**— பௌத்தன்

**அத்துவரியு**—1. யாக புரோகிதருள் ஒருவன் (மச்சபு. சந்திரோ. 12). 2. காரியத் தலைமை வகிப்பவன்

**அத்துவவிலிங்கம்**— தத்துவ ரூபமான இலிங்கம். மண்முதற் சிவமீறான வத்துவவிலிங்கம் (திருவிளை. இந்திரன். 13)

**அத்துவா**— Paths to liberation as well as means of acquiring Karma for the soul, six in number viz— வழி. மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்வா, கலாத்துவா, each of which, in initiation, is shown to be absorbed by the next one, till the last is absorbed by the Tirodhana-sakti and this in its turn by Siva. அத்துவா வெல்லா மடங்கச் சோதித்தபடி (தாயு. எந்நாட். அன்பர். 1)

**அத்துவா சைவம்**— சைவம் பதினாறனுள் ஒன்று.

**அத்துவிதம்**— அத்துவைதம் அத்துவித வத்துவை (தாயு. பரசிவ. 3)

**அத்துவைதம்**— 1. இரண்டன்மை 2. ஏகாத்ம வாதம்

**அத்துவைதி**— ஏகாத்ம வாதி

**அத்தோரியாமம்**— சோமயாக வகை (திவா.)

**அத்ல்**— இறைவனின் திருப் பெயர்களில் ஒன்று (நீதி யாளன்) (இ)

**அதபலோகம்**— பிரமலோகம் இருபதனுள் பதின்மூன்றாவது (பௌ.)

**அதர்மாஸ்தி காயம்**— அதருமம், நிறுத்தும் சக்தி, இருத்தல், கிடத்தல், நிற்றல் முலியன அதர்மத்திருல் ஆகும். (சமணம். பக். 36)

**அதர்மாஸ்திகாயம்**— பஞ்சாஸ்திகாயத் தொன்று (ச)

**அதர் வசிகை**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**அதர்வ சிரசு**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று. (சி.சி. 8, 11 மறைஞா)

**அதர்வணம்**— நான்காம் வேதம். (திருவானைக். கோச் செங். 127.)

**அதர்வணன்**— சிவன்

**அதர்வம்**— அதர்வணம் (காஞ் சிப்பு. வயிரவீ. 12)

**அதரிசனன்**— கடவுள்

**அதலன்**— சிவன்

**அதன்மாத்திகாயம்**— எப் பொருள்களையும் நிற்கச் செய்யும் இயல்பினது. (மணி)

**அதன், ஜன்னாத்**— நிலை யான சுவனபதிகள் (இ)

**அதா**— மார்க்கக் கடமைகளைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றல் (இ)

**அதாப்**— இறைத்தண்டனை (இ)

**அதாபுன்நார்**— நரகவேதனை (இ)

**அதான்**— தொழுகைக்கு அழைக்கும் பாங்கு (ஒலி) (இ)

**அதிகார சிவன்**— மகேசுரன். (The Mahesvara aspect of siva in which the energy of action predominates)

**அதிகாரத்திரயம்**— கர்மம், ஞானம், பக்தி.

**அதிகாரதத்துவம்**— கிரியை மிகுந்து ஞான்ம் குறைந்த ஈச்சுர தத்துவம்

**அதிகாரநந்தி**— சிவாலய விழாக்களில் உபயோகிக்கும் வாகன வகை. அதிகார நந்தி சேவை

**அதிகாரம்**— ஞானங் குறைந்து கிரியை அதிகமாயுள்ள கடவுள் நிலை. (சி. போ. பா. 22, பக். 134).

**அதிகார மலம்**— பிரபஞ்சத்து அதிகாரத்தை விரும்பும் ஆன்ம நாட்டம். (சி. போ. பா, 2, 2, பக். 134, புது)

**அதிகாரன்**— அதிகார சிவன் (ஞா ஞ. கட்)

**அதிகுணன்**—1. மேலான குண முள்ளவன் 2. கடவுள் 3. அருகன் (திவா.) 4 சிவன். (தேவா. 832, 5.)

**அதிகை**— அட்ட வீரட்டங் களுள் ஒன்று.

**அதிசய மாலை**— பண்டார சாத்திரத் தொன்று

**அதிசயன்**— அருகன். (திவா.)

**அதிசூக்குமதேகம்**— பூதம், தன்மாத்திரை, ஞானேந் திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம்; குணம், மூலப் பகுதி கலாதி என்பவற்றில் ஒவ் வொன்று கொண்ட நுண் ணுடல் (சை).

**அதிசூக்குமை**— சிவசக்தி பேதங்களுள் ஒன்று (சை)

**அதிசோபனை**— பார்வதி

**அதிதி**— பார்வதி, தேவரைப் பெற்றாள்.

**அதிபத்தநாயனார்**. அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.)

**அதிபரமாப்தர்**— சதாசிவர்

**அதிமார்க்கம்** 1 அகப்புறச் சமயம் (சை) 2 சைவாகமப் பிரிவினுள் ஒன்று.

**அதிமார்க்கிகசாத்திரம்**— பாசுபதம், காபாலிகம், மாவிரத மென்னும் மார்க்கங்களைக் கூறுஞ் சாத்திரங்கள் (சை)

**அதிமேற்றிராசனம்**— அதி மேற்றிராணியாரின் இருப்பிடம். Archiepiscopal Sec or diocese R. C.

**அதிமேற்றிராணியார்**— மேற்றிராணிமாரில் பிரதான மானவர். (Archbishop) R. C,

**அதிராவடிகள்**— ஒரு சைவ ஞானி (பதினொ)

**அதிருசியன்**— கடவுள், சிவன், திருமால்

**அதிவாசநம்**— சுவாமியை விக்கிரகத்தில் வருவித்துப் பிர திட்டை செய்தல்.

**அதிவாதம்**— விக்கிரகப் பிர திட்டைக்கு அங்கமான சடங்கு. (சிவதரு. சிவஞானதா. 71).

**அங்திவாதி**— பிற மதங்கள் எல்லாவற்றையும் கண்டித்துத் தன் மதம் ஸ்தாபிப்போன்.

**அதினச் செல்வன்**— குபேரன்.

**அதீதர்**— ஞானியர்

**அதீதாவத்தை**— துரியாதீதம் (சி. போ. 3, 6, சிற்.)

**அதீந்திரியம்**— இந்திரியவறிவுக் கெட்டாதது. (மச்சபு. பிரமாண்ட. 17)

**அதோகதி**— நரகம் (பிங்.)

**அதோட்சசன்**— திருமால்

**அதோமாயை**— அசுத்தமாயை (சி. சி. 2. 80, சிவாக்.)

**அதோமார்க்கம்**—தாழ்ந்த நெறி (சி. சி. 2.51 சிவாக்).

**அதோக்ஷசன்**— விஷ்ணுவிற்கொரு பெயர்.

**அந்தக்கரணம்** —மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) உட்கருவி (சி. போ. சிற் 4, 1)

**அந்தகசயம்**— சிவபெருமான்

**அந்தகரிபு**— சிவன்

**அந்தகன்**— யமன். (திவா.)

**அந்தகாசு கிருத்து**— சிவன்.

**அந்தகாசுரஹரணர்**— சிவ பேதம் இருபத்தைந்தனுள் ஒன்று (சை)

**அந்தகாந்தகன்**
**அந்தகாரி**— சிவன் (பிங்)

**அந்தணன்**— சிவபெருமான், பிரமன் (பிங்)

**அந்தணி**— உமை

**அந்த தரம்**— சைவ சித்தாந்தம்

**அந்தர்யாகம்**— அந்தரியாக பூசை (சை).

**அந்தர்யாமி**— கடவுள்

**அந்தர்யாமித்துவம்**— திருமால் நிலையுள் ஒன்று. (அஷ்டாதச தத்வத் 3, 42)

**அந்தரசாரி**— ஆகாயத்தில் சஞ்சரிப்போன். (மணி, 28, 69) 2. சாரணர் பௌத்தரில் சித்தி பெற்றோர்.

**அந்தர சைவம்**— சைவ பேதம்

**அந்த ரத்தர்**— தேவர்

**அந்தர துந்துபி**— தேவ வாச்சியம். அத்தர துந்துபி முதலாமளவில் பெருகொலி (பெரியபு. திருஞான. 98)

**அந்தர நதி**— ஆகாச கங்கை. (வரத. பாகவத, சுபத். 18)

**அந்தர நாதன்**— இந்திரன். (கந்தபு. தெய்வ. 241)

**அந்தரர்**— 1. தேவர். அந்தரர் கோன் (திருவாச. 9, 3) 2. பதினெண்கணத்துளொருவர்

**அந்தரவுலகம்**— சுவர்க்கம்

**அந்தராத்மா**— கடவுள்

**அந்தராள மண்டபம்**— கர்ப்பக்கிருகத்தை அடுத்த மண்டபம் (I.M.P.Tn. 270)

**அந்தரான்மா**— கடவுள்

**அந்தரி**— பார்வதி, துர்க்கை. (பிங்.)

**அந்தரியாகபூசை**
**அந்தரியாகம்**— மானசபூசை (சை) (சி.சி. 9, 10)

**அந்தரியாமி**— கடவுள் (வேதா. சூ. 41)

**அந்தரிலயம்**— துரியாதீதம்

**அந்தளி**— தேவர் கோயில்

**அந்தன்**— 1. யமன் (தேவா. 978, 5)
2. சனி (திவா)
3. அழகன் (திருப்பு. 40)

**அந்தாமம்**— பரமபதம். அந் தாமத் தன்பு செய்து. (திவ்ய. திருவாய். 2,5,1,)

**அந்தி**— சந்தியாவந்தனம். ஓதி யுருவெண்ணு மந்தியால் (திவ். இயற். 1.33)

**அந்திக் கோன்**
**அந்தி காவலன்**— சந்திரன் (தேவா. 1088.1) (திவ். பெரியதி 8,5,1)

**அந்திய சைவர்**— சிவதீட்சை பெற்ற பிரதிலோமர் (சைவச. பொது 435, உரை)

**அந்திரன்**— தேவன், அந்தி ரனை ஆரூரில் அம்மான் றன்னை (தேவா, 723, 4)

**அந்தி வண்ணன்**— சிவன். (பிங்)

**அந்நாதன்**— திருமால்

**அந்நாபிஉ**—(லாபம் தருபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அந்நாபிடேகம்**
**(அன்னாபிடேகம்)** —விக்கிர கத்துக்கு அன்னத்தால் செய்) யும் அபிடேகம்

**அந்நூரு**— (ஒளிமயமானவன் அல்லாவின் பெயர் (இ)

**அநசநம்**— உபவாசம்

**அநந்த சயனன்**
**அநந்த சாயி**— திருமால்

**அநந்த ஞானி**— கடவுள், பிரமன்

**அநந்ததிட்டி**
**அநந்த திருட்டி** — இந்திரன், திருமால், சிவன்,

**அநந்தலோசனன்**— கடவுள், புத்தன், திருமால்

**அநந்த விபவை**— பார்வதி, மகேஸ்வரி, சத்தி

**அநந்தன்**— சிவன், திருமால், ஆதிசேடன்

**அநந்தை—** பார்வதி

**அநந்நியசன்—** மன்மதன்

**அநன்னுவயம்—** இயைபின்மை, சாதன சாத்தியங்களின் அன்னுவயத்தைச் சொல்லாமல் இரண்டும் பொருந்தியுள்ள திட்டாந்தத்தை மட்டும் காட்டுதல்; சாதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று. (மணி)

**அநஸ்திகாயம்—** காலம் ஒன்றே அநஸ்திகாயம் பருமன் இல்லாதது. (சமணம். பக். 37)

**அநாகாமி—** புத்தமதத் தியானம் (ம.த.பே)

**அநாட்யம்—** சிவபூசைக்கு ஆதாரமான நான்கு வித இலிங்கங்களுள் ஒன்று

**அநாதி—** உமாதேவி, கடவுள் சிவன், திருமால்

**அநாதிசடிலன்—** சிவன்

**அநாதி சித்தன்—** அருகக் கடவுள்

**அநாதி சைவம்—** பதினாறு வகைச் சைவத்துள் ஒன்று

**அநாதி பெத்த சித்து—** அநாதியே ஆணவ மலத்திலே கட்டுண்டு கிடந்த ஆன்மா (த. சொல்)

**அநாதி பெத்தன்—** அநாதியே மலத்திற் கட்டுண்டவன் (த. சொல்)

**அநாதி போதம்—** இயல்பாகவே ஞானமுடைமை (த. சொல்)

**அநாதி போதன்—** நித்திய ஞானமுடையவனுகிய கடவுள் (த. சொல்)

**அநாதி மல முத்தர்—** இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவர் (த. சொல்)

**அநாதி முத்த சித்து—** இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவராகிய கடவுள் (த சொல்)

**அநாதி முத்த சிவன்—** அநாதியே மல பந்தமின்றி இருக்குஞ் சிவன் (த. சொல்)

**அநாதி முத்தத்துவம்—** இறைவனது குணங்களுள் ஒன்று. அது இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருக்கும் தன்மை (த. சொல்)

**அநாதியமலன்—** அநாதியே மலமில்லாத நிட்களசிவன் (த. சொல்)

**அநாதை—** சிவசத்திபேதம் (சை)

**அநாமயன்—** கடவுள்

**அநாரம்பன்**— உழவு, வரைவு, வாள், கல்வி, வாணிபம், சிற்பத் தொழில், ஏதேனும் ஒரு வகை யில் உயிர் இம்சை விளைவிக்கக் கூடியன. இவ்வாறு தொழில் களையும் விட்டவன் அநாரம்பன் (அ. செ. 169)

**அநான்மவாதி**— ஆன்மா என்று ஒரு பொருள் இல்லை என்று சொல்வோன் (மணி)

**அநிமிடன்**— (கண்ணிமைக் காது இருப்பவன்) தேவன்

**அநியதபோக்கியம்**— முதலில் நல்லதாகக் கருதப்பட்டுப்பின் தகாதெனத் தள்ளப்பட்ட கர்மத்தின் பலன் (சை)

**அநிர் வசனம்**
**அநிர் வசனீயம்**— மாயை (சி. சி. 1, 27, சிவஞா)

**அநிருத்தன்**— திருமாலின் வியூகமூர்த்தி வகை. (அஷ் டாதச. தத்வத். 3, 48)

**அநுக்கிரகம்**— சிவனுடைய பஞ்ச கிருத்தியங்களுள் ஒன்று. அது பசுவாகிய ஆன்மாவில் மலம் நீங்கச் சிவத்துவம் வரு வித்தல் (த. சொல்)

**அநுக்ரஹம்**— தெய்வ அருள்

**அநுப்பிரவேசி, அநுபவை**— உமாதேவி

**அநுபூதி**— தானே கண்டறிந் தும் பிறர்க்குச் சொல்ல இய லாததுமான அறிவு (த. சொல்) அனுபவ ஞானம்.

**அநுலேபம்**— அபிடேகத் திர வியம்

**அநுலேபனம்**— அபிடேகஞ் செய்தல்

**அநேகாந்தவாதம்**— அருக வாதம் (ம.த.பே)

**அநேகாந்தவாதி**— அருகனே கடவுள் என்பவன் (ம. த. பே)

**அநைகாந்திகம்**— ஏதுப்போலி களுள் ஒன்று. இதுசாதாரணம், அசாதாரணம், சபக்கைகதேச விருத்தி,விபக்கவியாபி,விபக்கை கதேச விருத்தி, சபக்க வியாபி, உபயைகதேச விருத்தி, விருத்த வியபிசாரி என ஆறுவகைப் படும். (மணி)

**அப்து**— வணங்கி வழிபடு வோன்—(இ)

**அப்பச்சக்காணம்**— கோபம் லோபம் முதலிய குற்றங்கள் (ச)

**அப்பமுது**— அப்ப நிவேதனம் (S. I. I. iii, 150)

**அப்பர்**— திருநாவுக்கரசு நாய னார். (பெரியபு. திருஞான. 495)

**அப்பனார்**— கடவுள், திருமால், சிவன்

**அப்பாலுமடிச்சார்ந்தார்—** 1. தமிழ் நாடொழிந்த மற்ற மொழிகள் வழங்கும் நாடுகளி லிருந்து சிவத்தியானத்தால் முத்தியடைத்த அடியவர்களின் தொகை

2. தொகையடியாருள் ஒருவகை யார்

**அப்பாலைக்கப்பாலைக் கப் பாலான்—** சிவன், திருமால் (ம. த.பே)

**அப்பிதக்கிணம்—** அப்பிரதட் சணம்

**அப்பியந்தரபரிக்கிரகம்—** மனத்தைப் பற்றி வரும் குரோதம் மானம் முதலிய பதினான்கு தோஷங்கள் (ச)

**அப்பியம்—** தேவர்க்கிடப்படும் அவிசு (அறநெறி. 26)

**அப்பியர்த்தனை—** பிரார்த்தனை, வேண்டுகோள்

**அப்பிரகலோகம்—** பிரமலோகம் இருபதில் பன்னி ரண்டாவது (பௌ.)

**அப்பிரசித்த உபயம்—** எதிரி யாகிய பிரதிவாதிக்கு வாதி கூறும் பக்க வசனத்துப் பொரு ளின் சாத்திய தன்மம் விளக்க மின்றி உணரப்படாத்தாய் இருத்தல். (மணி)

**அப்பிரசித்த சம்பந்தம்—** பிரதிவாதிக்கு ஏற்றதாய பொருளை வாதியாயுள்ளவன் சம்பாதித்துக் கொடுத்தல் (மணி.)

**அப்பிரசித்தம்—** விளக்க மின்மை.

**அப்பிரசித்த விசேடணம்—** பக்கப் போலிகளுள் ஒன்று; எதிரியாகிய பிரதிவாதிக்குத் தான் சாதிக்கும் பொருள் அறி யாததாய் இருத்தல். (மணி)

**அப்பிரசித்த விசேடியம்—** எதிரியாகிய பிரதிவாதிக்குப் பக்கவசனத்து எழுவாயாகிய தன்மி தெரியாததாய் இருத்தல். (மணி)

**அப்பிரத்தியாக்கியானம்—** அப்பச்சக்காணம் (ச)

**அப்பிரதக்கிணம்,**

**அப்பிர தட்சணம்—** இடம் வருகை, (வலம் வருதல்)

**அப்பிரதிகரம்—** ஒரு நரகம்

**அப்பிரதிட்டம்—** ஒரு நரகம்

**அப்பிரம்—**தேவ லோகம்

**அப்பிர மாணாபலோகம் —** பிரமலோகம் இருபதனுள் ஐந் தாவது (பௌ.)

**அப்பிரமேயன் —** கடவுள், சிவன்

**அப்பிராகிருத லோகம்—** பரமபதம் (குருபா. 5)

**அப்பிராமணன்—** கடவுள், சிவன், திருமால் (ம. த. பே.)

**அப்பிறப்பு—** மறுபிறப்பு

**அப்பு லிங்கம்—** பஞ்சலிங்கத்துள் திருவானைக்காவிலுள்ளது.

**அப்பூதியடிகள்—** அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.)

**அப்போஸ்தலர் நடபடிகள்—** விவிலிய நூலில் ஒரு பகுதி (கி.)

**அப்போஸ்தலன்—** கிறிஸ்துவின் தலைமைச் சீடர் பன்னிருவருள் ஒருவர். (கி)

**அப்ஸரஸ்—** தேவமாதர். தெய்வப்பெண்களில் ஒரு வகையார்.

**அபயகுலசேகரன்—** திருமுறை கண்ட சோழன் (திருமுறை கண். 1)

**அபயம்—** அருள், (பிங்)

**அபயமுத்திரை—** அபயமளித்தலைக் காட்டுங் கைக்குறி.

**அபயன்—** அருகன் (திவா,)

**அபய ஹஸ்தம்—** 1. அடைக்கலக்கை 2. கடவுளின் அபய முத்திரை பதிந்த சந்தனவில்லை

**அபர்ணை—** பார்வதி

**அபர ஞானம்—** சாத்திர ஞானம் (ஒழிவி. கிரியை. 11, உரை)

**அபரநாதம்—** சிவதத்துவங்களுள் ஒன்று

**அபரபதி—** ஆணவமலம் நீங்கி இடைக்காலத்திலே பதித்தன்மை அடைந்த ஆன்மா (த. சொ.)

**அபரமுத்த சிவன்—** அபரமுத்தியடைந்து சிவத்துவம் பெற்றிருக்கும் ஆன்மா.

**அபரமுத்தி—** சுத்த மாயா புவநத்தையடைந்திருத்தல் அது பதமுத்தி. (ம. த. பே) சுத்த தத்துவங்களில் பெறும் வாழ்வு.

**அபரவாகீசுவரர்—** சிவபேதங்களுள் ஒன்று.

**அபராசிதன்—** 1, சிவன் 2. திருமால்

**அபராசிதை—** விசயதசமியில் வணங்கப்படுந்துர்க்கை (ம. த. பே)

**அபரிக்கிரகன்—** ஒன்பதாம் நிலை சிராவகன். (அ.செ. 170)

**அபரை—** சிவசத்தி மூன்றனுள் ஒன்று

**அபரோட்ச ஞானம்—** பிரத்தியட்ச ஞானம் (வேதா, சூ. 23, உரை)

**அபவர்க்கம்—** முத்தி. அபவர்க் கமு மற்றடையான். (ஞாஞ, 3, 10)

**அபாவ அளவை—** ஒரு பொருளின் இல்லாமை பற்றிக்கூறும் பிரமாணம்

**அபிசிரவணம்—** சிராத்தத்தில் உண்ணும் பிராமணரைக் கேட்பிக்கும் ஒருவகை வேதமந்திரம்

**அபிடேகக்கூட்டு—** சுவாமிக்க பிடேகஞ் செய்தற்குச் சேர்க்கும் பொருள்கள்.

**அபிடேகம்—**திருமஞ்சனம்

**அபிதர்மபிடகம்—** பௌத்தரது மூன்றாவது ஆகமம்

**அபிநந்தனர்—** தீர்த்தங்கரருள் ஒருவர்

**அபி மந்திரம்—** செபிக்கை

**அபிமபுத்தி—** உருத்திரருள் ஒருவர்

**அபிமுகம்—** சன்னிதி (பெரியபு)

**அபிராமி—** பார்வதி, சரசுவதி

**அபிராமி பட்டர்—**அபிராமியந் தாதி இயற்றியவர்

**அபிராமியந்தாதி—** ஒரு நூல்

**அபிரூபன்—** காமவேள், சிவன்

**அபின்னா சக்தி—** சிவத்தினின்றும் பிரிவுபடாத சக்தி (சை)

**அபினை—** பார்வதி

**அபிஷிக்தர்—** சைவரில் குருக்கள் வகையார்

**அபிஷேகம்—** அபிடேகம்

**அபீகன்—** சிவன்

**அபீசி** – நரகவகை

**அபுக்தன்—** இரவில் உண்ணுதான். (அ. செ. 167)

**அபுல்காசிம்—** நபிநாயகத்தின் பட்டப்பெயர்களில் ஒன்று (இ)

**அபூபக்கர் சித்தீக் (ரலி) —** நபிகள் நாயகத்தின் தோழர், முதல் கலிபா. (இ)

**அபேத சித்தாந்தம்—** ஆன்மாவும் சிவமும் ஒன்று என வாதிக்கும் மாயாவாதக் கோட்பாடு (ம. த. பே)

**அபேத சைவம்—** சைவம் பதினாறனுள்ஒன்று. ரூபம், அரூபம் ரூபாரூபம் என்னும் பேதமில்லாமல் இருக்குஞ் சிவனைசார்தற்குரிய வேடம் (ம. த. பே)

**அபேதவாதம்—** சீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றெனக் கூறுங் கொள்கை - (அத்வைதம்)

**அபேதவாதி—** அத்துவைதி

**அம்ச சக்கரம்—** நவாம்ச சக்கிரம்

**அம்சர்**— திரேதாயுதத்தில் விஷ்ணுவிற் கொரு பெயர்

**அம்பணத்தி**— துர்க்கை (அம்பணம் - மரக்கால், துர்க்கை நடனத்துக்கு ஒருபெயர்)

**அம்பரீசன்**—கடவுள், திருமால், சிவன்

**அம்பரீடன்**— சிவபிரான்

**அம்பலக்கூத்தன், அம்பலத்தாடி,** — சிவன்

**அம்பலவன்**— தில்லைச் சிவபிரான்

**அம்பலவாண தேசிகர்**— பண்டார சாத்திரத்துள்பத்துஞ் செய்தவர்.

**அம்பலவாணன்**— சிவபிரான்

**அம்பா**— பார்வதி

**அம்பாள்**— உமை, துர்க்கை

**அம்பிகாபதி, அம்பிகாவல்லவர்**— சிவபிரான்

**அம்பிகேயன்**— விநாயகன், முருகக்கடவுள் (சங். அக.)

**அம்பிகை** —1. பார்வதி 2. தருமதேவதை 3. துர்க்கை 4. திருதராட்டிரன் தாய்

**அம்பிகை தனயன்**— விநாயகன் (சூடா.)

**அம்பிகை பாகன்**— சிவபிரான்

**அம்புசத்தி**— திருமகள், கலைமகள்

**அம்புசாதன்**— பிரமன் (பாரத. சிறப் 2)

**அம்புசி**— இலக்குமி

**அம்புசிரன்**— சிவன்

**அம்புயத்தி**— இலக்குமி

**அம்புயநூல் நாணான்**— மன்மதன்

**அம்புயன்**— பிரமன்

**அம்புயை**— இலக்குமி

**அம்புலிச்சோதரி**— இலக்குமி

**அம்பை**—பார்வதி (திருக்காளத். பு. 24,12)

**அம்போசசனி**— பிரமன்

**அம்போசயோனி** — பிரமன்

**அம்போருகை**— இலக்குமி

**அம்மணத்தார்**— சமணர் (சினேந். 139)

**அம்மன்**— தேவதை

**அம்மன் கொடை**— அம்மன் கோயில் உற்சவம்

**அம்மன் கொண்டாடி**— அம்மன் கோயிற் பூசாரி (Loc.)

**அம்மை**— தவப்பெண், பார்வதி, சமணமதத் தவப்பெண் — (ம.த.பே.)

**அம்மையப்பர், அம்மையப்பன்**— உமாபதி

**அம்ர்**— இறைவனுடைய ஆணை (இ)

**அமண்**— . சமண மதம் 2. சமணர்

**அமண்பாழி**— சமணப்பள்ளி

**அமணம்**— சமண மதம்

**அமணர்**— சமணர்

**அமணழித்தோன்**— திருஞான சம்பந்தர்

**அமணன் பாழி**— சைனாலயம்

**அமநஸ்கர்**— ஆன்மாக்களின் மனதிற் கெட்டாது சோதி சுவ ரூபமாக விளங்குஞ் சிவமூர்த்தி

**அமர்**— திரேதாயுகத்தில் விஷ்ணு விற்கு ஒரு பெயர்

**அமரர்**—வானோர்

**அமரர் கோன், அமரர் பதி**— இந்திரன்

**அமரி**— துர்க்கை

**அமருலகம்**— சுவர்க்கம்

**அமரேசம்**— குய்யாட்டகபுவ னத்து ளொன்று. (a spiritual world)

**அமரேசன்**— இந்திரன்

**அமரோர்** — தேவர்

**அமலன்பாதியாளன்**— திரு மால்

**அமலனிட்டமணி**— உருத்தி ராக்கமணி

**அமலிய்யூத்**— ஆன்மீக முறை யில் நிவாரணம் அளிப்பது (இ)

**அமலை**— இலக்குமி, உமை யாள், காளி

**அமானத்தெ முகத்தஸி**— புனிதமான அடைக்கலப் பொருள்கள் (இ.)

**அமானவன்**— விரசை ஆற்றங் கரையிலுள்ள கடவுள்

**அமிதசாகரர்**— சைன முனிவர் யாப்பருங்கலக் காரிகை ஆசிரி யர்.

**அமிர்தம்**— தேவாமிர்தம், தேவ ருணவு

**அமிர்தாகரணன்**— திருமால்

**அமிர்தாசனர்**— தேவர்

**அமிர்தை**— பார்வதி

**அமுத சுரபி**— மணிமேகலை கையிலிருந்த ஓர் அட்சய பாத் திரம். இதனுல் மணிமேகலே பசித்தோர்க்கு உணவளித்து அறம் வளர்த்தாள். (மணி)

**அமுதப்பிராணாயாமம்**— வேண்டிய மட்டும் பிராணா யாமஞ் செய்கை (சை)

**அமுதம்**— தேவருணவு

**அமுதமதனம்**— அமுதத்தின் பொருட்டுக் கடலைக் கடைகை

**அமுத வேணி**— சிவன்

**அமுதன்**— கடவுள்

**அமுதாசனர்**— தேவர்

**அமுது**— தேவாமிர்தம்

**அமுதுபடி**— ஆலயங்களுக்கு அளிக்கும் அரிசி

**அமுதுமண்டபம்**— கோயில் மடைப்பள்ளி

**அமூர்த்தி சாதாக்கியம்**— சாதாக்கியம் ஐந்தனுள் தழற் பிழம்பான சிவ வடிவம் (சை.)

**அமையவன், அமைவன்**— அருகன்

**அய்யன்பாழி**— சாஸ்தா கோயில்

**அயக்கிரீவம்**— நூற்றெட்டு உப நிடதங்களுள் ஒன்று

**அயக்கிரீவன்**— திருமாலின் அவதார மூர்த்திகளுள் ஒருவர்

**அயவாகனன்**— அக்கினி தேவன் (சூடா)

**அயன்**— பிரமன் (பிங்)

**அயன்கணக்கு**— பிரமன் விதித்த விதி

**அயன் மனைவி**— சரசுவதி (சூடா)

**அயிக்கவாத சைவம்**— ஐக்க வாத சைவம் பார்க்க (சி.போ. பா. அவை. பக். 22)

**அயிம்மத்துல் அஸ்மா**— அல்லாஹ்வின் திருப்பெயர் களில் முக்கியமான ஏழுபெயர் களுக்கு இப்பெயர் வழுங்கப்படு கிறது (இ)

**அயிராணி**— 1. இந்திராணி (நாலடி, 381)
2. பார்வதி (திவா)

**அயிராவதன்**— இந்திரன் (பிங்)

**அயிலவன், அயிலான்**— முருகக் கடவுள் (திருப்பு 312)

**அயினிநீர்**—ஆலத்தி நீர். போது டன் அயினிநீர் சுழற்றி. (கம்பரா. மிதிலை 51)

**அயோகிகேவலி**— குணஸ் தானவர்த்திகளுள் கருமங்களை வென்றவர். (ச)

**அயோநி**— சிவன்; பிரமன்

**அர்க்கபந்து**— கௌதமபுத்தன்

**அர்க்கன்**— அருக்கன் பார்க்க.

**அர்க்கியம்**— 1. தலையில் நீர் தெளித்தல் (பூசையின் தொடக் கம், முடிவு; திருமுழுக்கின் முடிவு ஆகிய காலங்களில் நீர் தெளிக்கப்பட வேண்டும்.)

2. தேவர்களுக்கும் அதிதி களுக்குந் தீர்த்தத்தால் செய்யும்

ஒருவகை உபசாரம். மந்திரத் திறலே விதமா ரர்க்கியங் கொடுத்து' (சேதுபு. சேதுபல. 90)

**அர்க்கீசம்—** சோடசகலையு ளொன்று (சை)

**அர்கத்—** மனிதர்களாலும் தெய் வத்தாலும் போற்றப் பெறுபவர் (ச)

**அர்கதமுநி—** அருகன்

**அர்ச்சகன்—** பூசகன்

**அர்ச்சனா போகம்—** கோயில் அர்ச்சகர்க்கு விடப்பட்ட மானியம் (I.M.P.,SA.176)

**அர்ச்சனை—** அருச்சனை. செவ்வி தர்ச்சனை செய்தனர். (கந்தபு. திருவி. 128)

**அர்ச்சாவதாரம்—** திருமாலின் ஐவகை நிலைகளில் பிரதிமை யாயமைந்தநிலை. (அஷ்டாதச. தத்வத். 3.60)

**அர்ச்சாவிக்கிரமம்—** பூசைத் திருமேனி. சடகோபனை அர்ச் சாவிக்கிரகமாகப் பிரதிஷ்டிப் பித்து (கோயிலொ. 7)

**அர்ச்சிதன்—** 1. பூசிக்கப்படு வோன், ஆதிநாதன் அமர களர்ச்சிதன் (தேவா 784, 7) 2 திருமால்.

**அர்ச்சியசிஷ்டர்—** பரிசுத்த வான்கள் R.C.

**அர்ச்சிராதிமார்க்கம்—** அர்ச்சிஸ் முதலாகிய தேவதை களைக் கடந்து மோட்சத் துக்குச் செல்லும் மார்க்கம். (பிரபோத 45, 10)

**அர்ச்சிஸ்—** மோட்சத்திற்குச் செல்வோரை முதலிற் கண்டு உபசரித்து வழிநடத்தும் தெய்வம் (அஷ்டாதச. அர்ச்சி).

**அர்ச்சை—** விக்கிரகம்

**அர்த்தசம்பவாதம்—** அஸ்தி நாஸ்திவாதம் (தத்)

**அர்த்த சாம பூசை—** கோயி லின் நடுநிசிப் பூசை

**அர்த்தநாரீசன்,**
**அர்த்த நாரீசுரன்—** பாதி யுடம்பு பெண்வடிவான சிவன். (மச்சபு. புராண. 22)

**அர்த்தப் பிரபஞ்சம்** (Universe of substance,one of the two divisions of சுத்தப் பிரபஞ்சம் which is sub divided into. சுத்த தத்துவம் and பஞ்ச கலை)

**அர்த்த பஞ்சகம்—** Five truths of Vaisnavism! ஸ்வ ஸ்வரூபம், பரஸ்வரூபம் புருஷார்த்த ஸ்வ ரூபம்; உபாய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் (வை) அஷ் டாதச. அர்த்த.

**அர்த்த மண்டபம்—** கருப்பக் கிருகத்தைச் சார்ந்த மண்டபம்

**அர்த்தோதயம்—** தையமா வாசையும் ஞாயிற்றுக்கிழமையும் திருவோணமும் வியதீபாதமும் கூடிய சூரியோதய புண்ணிய காலம். மாசிமகத்தில் அர்த்தோதயத்தில் (அருணு. பு. திருமலை வலம். 24)

**அர்ப்பணம்—** உரியதாகக் கொடுக்கை. ஈசுரார்ப்பணம் (ஞானவா. அருச்சு. 16)

**அர்ரகீபு—**(காப்பாளன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ரஊபு—** (பெரும் கருணையாளன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ரஜ்ஜாகு—** (உணவளிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ரஷ¬து—** (நல்முயற்சி உடையவன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ரஹ்மானு—** (கருணையுள்ளவன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ரஹீமு—** (பரிவுள்ளவன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்ராபிவு—** (உயர்த்துபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அர்வாஹ்—** ஆத்மா (இ)

**அரங்க நாதன்—** ஸ்ரீரங்கத்துத் திருமால்

**அரங்கன்—** விஷ்ணு—அரங்கநாதன் (திவ். அமலனுதி 10)

**அரங்கேசன்—** அரங்கநாதன்

**அரசு—** அப்பர், திருநாவுக்கரசு நாயனார். (பெரியபு. திருஞான 494)

**அரசு நீழலிருந்தோன்—** புத்தன் (ம.த.பே)

**அரட்டமுக்கி—** திருமங்கையாழ்வார். சத்துருக்களை தலையெடாமல் அமுக்கினவர்

**அரதீர்த்தங்கரர்—** பதினெட்டாவது சைன தீர்த்தங்கரர்—(ச)

**அரதேவர்—** அரர் என்ற தீர்த்தங்கரர் (ச)

**அரநி—** ஓரிட்ட தேவதை பெண் தெய்வம்

**அரப்பிரியை—** உமை (திருவானைக். கோச்செங். 81)

**அரபுத்தமிழ்—** அரபு வார்த்தைகளைத் தமிழில் எழுதிய குரான் (இ)

**அரம்பையர்—** தெய்வ மகளிர். அரம்பையர்ச் சேர்குவ ரன்றே (நைடத. நிலா. 13)

**அரமகள்—** தேவமாதர் (சூடா)

**அரமகன்—** முருகன் (திவா)

**அரமங்கை—** தேவமாதர் (திருக்கோ. 371 உரை)

**அரர்—** தீர்த்தங்கரருள் ஒருவர் (ச) (திருக்கலம்.காப்பு. உரை)

**அரவக்கரையன்**
**அரவகங்கணத்தோன்**
**அரவணிந்தோன்** — சிவன் (சூடா)

**அரவணை—** 1. சேஷ சயனம் 2. விஷ்ணு கோயில்களில் அர்த்த சாமத்தில் நிவேதிக்குஞ் சருக்கரைப் பொங்கல். ஆதி சேடனுக்கு அமுது செய்விக்கும் காரணமாய் அரவணைப் பிர சாதம் அரவணை என்ருயிற்று.

**அரவணையான்—** திருமால் (திவ். இயற். 2, 12)

**அரவதண்டம்—** யமதண்டனை. அரவ தண்டத்தி லுய்யலு மாமே (திவ். பெரியாழ் 4,5,3)

**அரவமணி—** உருத்திராக்கமணி

**அரவன்—** சிவபிரான். (உரி. நி)

**அரவாபரணன்** — சிவன் (பாரத. பதினுன். 51)

**அரவிந்தப் பாவை—** திருமகள். (திவ். திருநெடுந். 21)

**அரவிந்தலோசனன்—** திருமால். (திவ், திருவாய். 6, 7, 10)

**அரவிந்த வாணுதல்—** திருமகள்

**அரவிந்தன்—** பிரமன். (கல்லா. 81)

**அரவிந்தை—** இலக்குமி

**அரவொலி—** 'அர' என்னுஞ் சத்தம். அரவொலி யாகமங்க ளறிவார் (தேவா. 1167, 8)

**அரன்—** 1. சிவன். (பிங்) 2. எப்பொருட்கு மிறை (சூடா) 3. ஏகாதசருத்திரருள் ஒருவர். (பிங்)

**அரனிடத்தவள்—** பார்வதி (பிங்)

**அராகதத்துவம்—** சுத்தாசுத்த தத்துவங்களுள் ஒன்று. (சி. போ.பா. 2, 2, பக். 155, புது.)

**அராந்தாணம்—** சமண்பள்ளி தவலருஞ் சிறப்பி னராந் தாணத்துளோன். (மணி. 3, 87.)

**அரி—** 1. திருமால் (கம்பரா. பாயி.3.) 2. சிவன் (திருப்போ. சந். பெரியகட், 2. [illegible].) 3. இந்திரன். (பிங்.) 4. யமன் (பிங்) 5. துளசி(தைலவ. தைல. 135, வரி, 54)6. சூரியன், 7. சந்திரன். (பிங்)

**அரிக்கரியார்—** சிவன்

**அரிகுர குமரன்** —அரிகர புத்திரன். (சூடா.)

**அரிகர புத்திரன்—** ஐயனார் (பிங்)

**அரிகரன்—**விஷ்ணுவும் சிவனுங் கூடிய மூர்த்தி

**அரிகூடம்**— கோபுரவாயல். (பிங்.)

**அரிசமயதீபம்**— ஆழ்வாராதியர் சரித்திரங் கூறும் நூல்.

**அரிசரன்**— சிவன் (விட்டுணுவை அம்பாகக் கொண்டவன்)

**அரிட்டசூதனன்**— திருமால்

**அரிட்டநேமி**— நேமி என்ற தீர்த்தங்கரர் (ச.)

**அரிதாரம்**— இலக்குமி

**அரிதிருமருகன்**— விநாயகர் அல்லது முருகன். (பிங்.)

**அரிந்தமன்**—விஷ்ணுமூர்த்தி.

**அரிப்பிரியை**— இலக்குமி(பிங்.)

**அரிபிராணன்**— சிவன்

**அரிமருகன்**—1. விநாயகன், 2. முருகக்கடவுள்.

**அரியர்த்தர்**— சிவமூர்த்தி பேதங்களுளொன்று

**அரியன்**— சிவபிரான்

**அரியேறி**—துர்க்கை (திவா)

**அரிவாட்டாய நாயனார்**— அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.)

**அரிவாணம்**— மாலை பிரசாதம் கொண்டுபோகும் தட்டு

**அரிவை**— பார்வதி

**அரிவை பங்காளன்** — **சிவன்**

**அரு**— 1. கடவுள் 2 மாயை (சி. சி. 1. 27.) 3. **சித்த பதவி.** அருத் தரும் அத்தரை (திரு நூற். 15.)

**அருஉரு**— உணர்வொடு கூடிய **உயிரும் உடம்பும்; உயிர்** அருவமாயும், **உடல் உருவ** மாயும்- இருத்தலின் **அருஉரு** எனப்பட்டது; இது **நாமரூபம்** என்றும் கூறப்படும். **காட்சி, கருத்து, உணர்வு செய்கை** முதலியன நாமத்தில் அடங்கும் என்றும், ரூபத்தில் நிலம் முதலிய நான்கு **பூதங்களின் சேர்க்கையாகிய உடம்பு** அடங்கும் என்றும் கூறுவார். (மணி.)

**அருக்கந்தன்**— சிவன், பௌத்தன்

**அருக்கியம்**— பூசனை முறைகளுள் ஒன்று, அது படையல் போடுதல், மந்திர நீரிறைத்தல் (ம. த. பே) அருக்கிய முதலிேனாடாசனங் கொடுத்து (கம்பரா. திருவவ. 42.)

**அருகசரணம்**— அருகனைச் சரண் புகுகை (சீவக. 1 உரை)

**அருகத் தானம்**— அருகன் கோயில்

**அருகத்து**— பௌத்த **மதத்தி**தினது தியானங்கள் (ம.த.பே)

**அருகந்த பகவர்**—அருகக் கடவுள்

**அருகந்தர்—** அருக சமயத்தோர் (பதினெ. ஆளுடை மும்மணி. 26.)

**அருகந்தர்கள்** — விருப்பு வெறுப்பில்லாத மேலான நிலையை அடைந்தவர்கள். பிறப்பு இறப்பைக்கடந்தவர்கள். உயிருடன் இருக்கும்போது பிறருக்கு வழிகாட்டியாய் இருப்பவர்கள். (தம்மபதம். பக். 44.)

**அருகந்தாவத்தை—** அருகரது மோட்ச நிலை. (சீவக. 3107 உரை)

**அருகம்—**சமணமதம் (சூத, எக்கிய. பூ. 32, 12)

**அருகன்—** 1. அருகக் கடவுள். (திவா) 2. சைன மதத்தான் அருகர்ச் சார்ந்து நின்று (கல்லா. 4)

**அருகன் குடை—** பொற்குடை, முத்துக்குடை, இரத்தினக்குடை என முறையே சொல்லப்படும் சகலபாசனம், சந்திரா தித்யம், நித்திய விநோதம் ஆகிய முக்குடைகள் (ம. த. பே)

**அருகன் கொடி—** காட்சி, சீலம், ஞானம்

**அருகன் சத்திரம்—** சகல பாசனம், சந்திராதித்தியம், நித்தியவிநோதம்.

**அருகன் ஞானம்—** மதி ஞானம், சுருதி ஞானம், அவதி ஞானம், மனப்பரிய ஞானம், கேவலஞானம், என ஐவகைப் படும் (ம. த. பே)

**அருகன்தந்த நூற்பொருள்—** அருகன் உண்டுபண்ணிய அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம், என்னும் மூன்று ஆகமங்களிலும் கூறப்பட்ட பொருள்கள்; தருமாத்திகாயம் முதல்வீடு இறுதியாகவுள்ள பத்துப் பகுதிகள். (மணி.)

**அருகன்படை** — தருமசக்கரம், அம்புயம்.

**அருகன்மதில்—** உதய தரம், கல்யாணதரம், பிரீதிதரம்

**அருகன் வழிபாடு—** அருக சரணம்.

**அருகன் விரதம்—** அனுவிரதம் குணவிரதம், சிட்சாவிரதம் என மூவகைத்து

**அருகனெண் குணம்—** The eight attributes of Arhat. கடையிலாவறிவு; கடையிலாக் காட்சி, கடையிலாவீரியம், கடையிலா யின்பம்; நாமமின்மை; கோத்திரமின்மை; ஆயுவின்மை, அழியா யியல்பு. (குறள். 9. உரை)

**அருகனைத்தரித்தாள்—** தருமதேவதை (பிங்,)

**அருகாசினி—** ஞானசம்பந்தர்

**அருங்கதி—** மோட்சம். பெருந்தவர் குழுவு மருங்கதி யிருப்பவும் (கல்லா. 24.)

**அருங்கலச் செப்பு** — ஒரு சைன நூல்.

**அருங்கலைநாயகன்—** புத்தன். (*திவா*)

**அருச்சகன்—** கோயிற் பூசை செய்வோன். ஆதி சைவனு மருச்சகன் ஒருவன் (திருவிளை. வாதவூ. 25.)

**அருச்சனை—** பூசை. ஒருவருக் காக கடவுள் நாமம் கூறி மலர் முதலியன இடுகை.

**அருச்சனை வடிவு—** அர்ச்சா வதாரம், திருவாழ் மார்ப னருச் சனை வடிவிற் கெல்லாம் (அரி சமய. பராங். 47.)

**அருச்சித்தல்—** பூசித்தல்

**அருச்சிதம்—** வழிபாடு

**அருச்சை—**பூசனை, தோகைக் குஞ் சொன்முறை யருச்சை (வேதாரணி மண. 21)

**அருட்குடையோன்—** கடவுள்

**அருட்குறி—** சிவலிங்கம் ஆனுயர்த்தவ னருட்குறி யருச் சனை. (காஞ்சிப்பு, சார்ந்தா 21)

**அருட்கேவலம்—** தத்துவ சுத்தியின் பின்னர்படுங் கோலம்

**அருட்கொடி வேந்தன்—** அருகன். (சூடா.)

**அருட்சக்தி—** பரமசிவனைப் பிரியாதிருக்கும் சக்தி.

**அருட்சோதி—** கடவுள்

**அருட்டரிசனம்—** தெய்வதரி சனம்(ஒழிவி,விரத்தி,9,உரை.)

**அருட்பா—** தெய்வானுக்கிரகத் தால் பாடப்பட்ட செய்யுள்

**அருணகிரி—** 1. திருவண்ணா மலை 2. அருணகிரிநாதர். வாக்கிற் கருணகிரி. (தனிப்பா)

**அருணகிரிநாதர்—** திருப்புகழ் முதலியவற்றின் ஆசிரியர்

**அருணந்தி சிவாசாரியர் —** சந்தான குரவருள் ஒருவர்

**அருணூல்—**வேத சிவாகமங்கள்

**அருத்தக்கியானம்—** நோன் புக்கதைகள், (அ.செ.58)

**அருத்தன்—** பாதிபாகமாகக் கொண்டவன். கண்ணுதல் கூடிய அருத்தனை. (திவ். பெரி யதி, 7,10,7)

**அருந்ததி—** வடமீன். வசிட்ட பத்தினி. (ஐங்குறு. 442.)

**அருமகன்—** மன்மதன்

**அருமேனி—** கடவுளின் அரூப வடிவம், உருவிறந்த வருமேனி. (சி.சி. 1,55)

**அருமொழிவிநாயகர்**— தஞ்சைப் பெருவுடையார்கோயி லிலுள்ள பிரதான விநாயகர்.

**அருவாணம்**— கோயிற் பிரசா தம் (கோயிலொ, 50)

**அருள்**— சிவசத்தி

**அருள்வடிவன்**— சிவபிரான்

**அருளாழிவேந்தன்**— 1. அருகன், 2. கடவுள்

**அருளாளப் பெருமாள்**— காஞ்சீபுரத்துத் திருமால். (S.I.I.iii,188)

**அருளுருநிலை**—சிவபெருமான் குருவுருக்கொள்ளும் நிலை

**அரூபப்பிரமர்**— உலகம் முப்பத் தொன்றனுள் இருபத்தெட்டா வதான ஆகாசா நந்தியாயதன லோகம் முதலிய நான்குஉலகங் களிலும் முறையே தங்கும் நான்கு வகைப் பிரமகணங்கள். (மணி)

**அரூபி**— கடவுள், சிவன் (பிங்.)

**அரையர்**— விஷ்ணு கோயில் களில் திவ்யப் பிரபந்தங்களைப் பாடுந்தொண்டு செய்வோர். (கோயிலொ.36)

**அல்அதலு**— (நீதிவழங்கு பவன்) அல்லாவின்பெயர் (இ)

**அல்அபுவ்வு**—(மன்னிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல் அலிப்யு**— (உயர்ந்தவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல் அலீமு**— (யாவும் அறிந்த வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்அவ்வலு**— (முதல்வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்அஜீமு**— (உயர்ந்தவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்அஜீஜீ**— (மிகைத்தவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல் அஹ்து**— (ஒருமைக்குரிய வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல் ஆகிரு**— (முடிவானவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்கப்பாரு**— (மன்னிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்கபீரு**—(யாவும்அறிந்தவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்கபூரு**— (மன்னிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்கய்யூமு**— (நிலையான வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்கரீமு**— (வள்ளல்) அல்லா வின் பெயர். (இ)

**அல்கவுய்யு**— (பலம் வாய்ந்த வன்) அல்லாவின்பெயர். (இ)

**அல்கனிய்யு**— (தன்னிலை யுடையவன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்கஹ்ஹாரு**— (கடுங்கோ லன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்காதிரு**— (ஆற்றல் மிக் கோன்) அல்லாவின் பெயர்(இ)

**அல்காபிஸு**—(தாழ்த்துபவன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்காலிகு**— படைப்போன். அல்லாவின் பெயர். (இ)

**அல்காபிழு**— (அடைப்பவன்) அல்லாவின் பெயர், (இ)

**அல்கிதாப்**— திருக்குர் ஆன்(இ)

**அல்குத்தூசு**—(தூயவன்) அல் லாவின் பெயர்(இ)

**அல்பசீரு**— [நோக்குபவன்] அல்லாவின் பெயர் [இ)

**அல்பத்தாஹு**— [திறப்பவன்] அல்லாவின் பெயர்[இ]

**அல்பதியூ**— [தோற்றம் தருப வன்] அல்லாவின்பெயர் [இ]

**அல்பர்ரு**— [நலஞ்செய்பவன்] அல்லாவின் பெயர் [இ]

**அல்பாகி**— [நிலையானவன்] அல்லாவின் பெயர் [இ]

**அல்பாசிது**—[திறப்பவன்] அல்லாவின் பெயர் [இ]

**அல்பாதினு**— [அந்தரங்கமான வன்] அல்லாவின் பெயர் [இ]

**அல்பாயிசு**— [எழுப்புவன்] அல்லாவின் பெயர் [இ]

**அல்பாரியு**— [புதிதாகப் படைப் பவன்] அல்லாவின் பெயர் (இ)

**அல்மதீனு**— [உறுதியானவன்] அல்லாவின் பெயர் (இ)

**அல்மலிகு**— [கொற்றவன்) அல் லாவின் பெயர்.(இ)

**அல்மஜீது**— (மேதகையாளன்) அல்லாவின்பெயர் (இ)

**அல் மானிவு**— (தடை செய் பவன்)அல்லாவின் பெயர். (இ)

**அல்மாஜிது**—(மாண்புமிக்க வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முஅதி**—(அளிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முக்சிது**— (நீதிவழங்கு பவன்) அல்லாவின்பெயர் (இ)

**அல்முக்திர்**— (ஆதிக்கம் பெற் றவன்) அல்லாவின் பெயர்(இ)

**அல்முக்னி**— (செல்வந்தராக்கு பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முகத்திமு**— (முதலான வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முகீது**— (உணவை உண் டாக்குபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முசவ்விரு**— (தோற்றத்தை உண்டாக்குபவன் )அல்லாவின் பெயர். (இ)

**அல் முத ஆலி**— (உயர் அந் தஸ்து கொண்டவன்) அல்லா வின் பெயர். (இ)

**அல்முதகப்பிரு**— (பெருமை யாளன் ( அல்லாவின்பெயர் (இ)

**அல்முப்தியு**— (படைப்போன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்முமீது** —(மரணம்தருபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முயிஜ்ஜீ**— (கௌரவம் வழங்குபவன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்முயீது**— (மீட்டிக்கொள் பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முவக்கிரு**— (இறுதியான வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முஜில்லு**— (இழிவு தருப வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முஜீபு**—(விடைமொழிபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்முஹஸி**— (சூழ்ந்துகொள் பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்மு ஹிய்மினு**— (சான் றாளன்) அல்லாவின்பெயர் (இ)

**அல்மு ஹிய்யு**— (உயிரூட்டு பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்மூமினு**— (அமைதிதரு பவன்) அல்லாவின்பெயர். (இ)

**அல்லதீபு**— (பரிவுள்ளவன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்லா, அல்லா சாமி,**— மகமதியர் வழங்கும் கடவுட் பெயர்

**அல்லாப் பண்டிகை**— மொகரம் (இ)

**அல்லாஹ்**— அகிலமெலாம் படைத்துப் பரிபாலிக்கும் உருவ மற்ற ஒருதனி முதல்வன் (இ)

**அல்லாஹீ**— இப்பிரபஞ்சத்தை யும் இதிலுள்ள எல்லாப் பொ ருட்களையும் படைத்தவனைக் குர்ஆனில் அல்லாஹ் என்று அழைக்கிறார்கள் (இ)

**அல்லிமாதர்**— இலக்குமி

**அல்லியான்**— பிரமன்

**அல்லேலூயா**— ஒருதோத்திரச் சொல் (கி)

**அல்வகீலு**— (பொறுப்பேற் பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்வதூது**— (நண்பன்) அல் லாவின் பெயர் (இ)

**அல்வலிய்யு**— (கிருபை செய் பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்வஹ்ஹாபூ**— (மன்னிப் பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்வாசிவு—** விரிவு உண்டா குபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்வாரிசு—** எல்லாவற்றிற் கும் உரிமையாளன்) அல்லா வின் பெயர் (இ)

**அல்வாலி—** (அதிபன்) அல்லா வின் பெயர் (இ)

**அல்வாஜிது—** (போஷிப்பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்வாஹிது—** (தனித்தவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஜப்பாரு—** (வருத்துபவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஜலீலு—**(மேன்மையாளன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹக்கு—**(உண்மையாளன்) அல்லாவின் பெயர். (இ)

**அல்ஹகீமு—** (அறிஞன்) அல் லாவின் பெயர் (இ)

**அல்ஹசீபு—** (போதுமான வன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹபீசு—** (காப்பாளன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹமீது—** (புகழ்ப்படு பவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹய்யு—** (உயிருள்ளவன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹலீமு—** (மென்மை யாளன்) அல்லாவின் பெயர் (இ)

**அல்ஹாதி—** (வழிகாட்டி) அல்லாவின் பெயர் (இ)

**அலகு நிறுத்தல்—** திரௌபதி யின் உற்சவத்திற்கு முன் வாள் நாட்டுஞ் சடங்கு

**அலகுப்பூட்டு—**பிரார்த்தனைக் கென்றிடப்படும் வாய்ப்பூட்டு

**அலகு போடல், அலகுபோடு தல்—** பிரார்த்தனைக்காக நா முதலிய உறுப்புக்களில் கம்பி களைக்குத்திக்கொள்ளுதல்

**அலகைக் கொடியாள்—** காளி. (பிங்.)

**அலகை முலையுண்டோன்—** திருமால். (பிங்.)

**அலர்மகள், அலர்மேல் மங் கை—** இலக்குமி. (திவ், பெரியதி, 1,2,5.) ; (திவ், திருவாய், 6,10,10)

**அலரவன்—**பிரமன், (திருவாச. 12,6)

**அலாயுதன்—** பலராமன். (பிங்)

**அலி—** 1. பலராமன்
2. இயமன்

**அலீ (ரலி)—** நபிகள் நாயகத் தின் மருமகன்—நான்காம் கலிபா (இ)

**அலுப்தசத்தி**— பேரருளுடைமை (சை)

**அலேபகன்**— பாவம் ஆன்மாவைப் பற்றாதென்னுங் கொள்கையினன். (தத்)

**அலைமகள், அலைமான்**— இலக்குமி (பிரமோத் 7, 26)

**அலோகாகாசம்**— இயக்கம் நிகழாத வரம்பின்றிப் பரந்து கிடக்கும் வெறும் வெளியாகும். இருவினையினின்று விடுபட்ட சீவன் முடிவில் அலோகாகாசம் என்னும் இன்ப உலகில் ஆனந்தமாய் வீற்றிருக்கும். அங்குள்ள பொன்னெயில் வட்டத்தில் அருகபரமன் வீற்றிருக்கிறன் என்பது சமணர் கொள்கை. (சமணம். பக். 32.)

**அலைவாய்**— திருச்செந்தூர். (திருமுருகு, 125)

**அவ்வச்சிலேடி கவியாபகம்**— நன்கு பொருந்தியுள்ளதால் உண்டாம் வியாபகம்(தத்)

**அவவிநயம்**— நல்லறத்தினின்று நீங்கிய நிலைமை, (அ.செ. 39)

**அவ்வியக்தம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**அவ்வியத்தம்**— பீடத்தோடு கூடிய சிவலிங்கம். (சைவச. பொது 119)

**அவ்வியத் தலக்கணை**— பார்வதி (சை)

**அவ்வியத்தலிங்கம்**— அருவத்திருமேனி (சை)

**அவ்வியத்தன்**— 1, சிவன், 2, மன்மதன், 3, திருமால், 4, கடவுள். (வேதா. சூ. 42)

**அவ்வியம்**— தேவர்க்கிடும் பலி (மச்சபு. சிராத்தானு. 2)

**அவ்வியயன்**—கடவுள், திருமால்.

**அவ்வெதிரேகம்**— (வைதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; சாத்தியதன்மம் இல்லாதவிடத்து சாதனதன்மம் இல்லை என்று எடுத்துச் சொல்லா தொழிவது. (மணி)

**அவ்ஹகமு**— (ஆட்சியாளன்) அல்லாவின் பெயர். (இ)

**அவத்திதன்**— அனுபவித்தற்குரிய துன்பங்களை அனுபவிக்கும் ஆன்மா (சை)

**அவத்தை**— 1. இவ்வவத்தை சாக்கிரம் சுவப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம் என ஐவகைப்பட்டுக் கீழாலவத்தை மேலாலவத்தை சுத்தாவவத்தை என மூன்று பிரிவு படும்.
2. நிலை
3. காரணாவத்தை, காரியாவத்தை
4. இலயம், போகம், அதிகாரம்

**அவதரம்**— —சமயம்

**அவதரித்தால்**— தெய்வாமிச மாகப் பிறத்தல்.(கந்தபு. பாயி. 41)

**அவதாரம்**— திவ்யப் பிறப்பு. (கந்தபு, திருவவதாரப் படலம்)

**அவதானம்**— சமயத்தொடர் புடைய பேரருட்செயல் அல்லது செயற்கருஞ் செயலாகும். (பௌத்தம். பக். 19)

**அவதானி**— வேதங்களில் தேர்ச்சி பெற்றவன். (பிரபோத 11. 5)

**அவநாசி**— சரசுவதி

**அவநிகேள்வன், அவநிபதி** -திருமால்

**அவபிரதம், அவபிருதம்**— யாகத்தின் முடிவில் நீராடுகை. முனிவர் அவபிரதங் குடைந் தாட (திவ். பெரியாழ். 4, 7, 6)

**அவரோகணம்**— வேதத்தை திருப்பிச் சொல்லுகை

**அவலோகிதன்**— பௌத்த முனிவருள் ஒருவர், (வீரசோ பாயி. 2.)

**அவலோஹிதேசுவரர்**— சிவன்

**அவனி கேள்வன்**— திருமால். (கந்தபு, திருவவாத. 70)

**அவஸ்தாத் திரயம், அவஸ் தை**-சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று நிலைகள்

**அவஸ்தைஞானஸ்நானம்** — Baptism administered to the dying. (கி.)

**அவாந்தர சைவர்**— சிவ தீட் சை பெற்ற சூத்திரர். (திரு வானைக். கோச். 23)

**அவாப்தஸமஸ்தகாமன்**— எல்லா ஆசைகளும் நிரம்பப் பெற்றவனாகிய கடவுள்

**அவி**— வேள்வித்தீயில் தேவர்க் குக்கொடுக்கும் உணவு (குறள். 413)

**அவிகாரவாதசைவன்**— பக்குவம் அடைந்த ஆன்மா வானது ஞானம் பெற்றுவிகாரம் இன்றிநிற்கும் பதியைத் தானே சென்றடையும் என்று கூறும் சைவன் (ம.த.பே)

**அவிசு**— தேவருணவு

**அவிஞ்சை, அவிஞ்ஞை, அவித்தியை**— அவித்தை

**அவித்தை**— அஞ்ஞானம் (பிர போத, அவித்தியாபுர, 4.); மாயை (சூத, சிவமா, 8, 10); ஆணவம் (சி.சி.2,84)

**அவிநயம்**— நல்லறத்தினின்று நீங்கிய நிலைமை, (அ.செ.40)

**அவிநாசவாதி**— பொருள் அழியாதென்னுங் கொள்கை யுடையோன் (தத்)

**அவிப்பலி**— தேவர்க்குக் கொடுக்கும் உணவு

**அவிப்பாகம்**— தேவருணவின் பங்கு, திருமாலவிப்பாகங் கொண்டு, (திருவாச, 14,6.)

**அவிமுத்தம்**— காசி. அவிமுத் தங் குடிகொண்டு (குமர. பிர. காசிக். 53)

**அவிமுத்தேசன்**— காசியில் இருக்கும் விசுவநாத சுவாமி

**அவிர்ப்பாகம்**—தேவருணவின் பங்கு (உத்தரரா.திக்குவி.120)

**அவினாசி**— 1. கடவுள் 2. கொங்கு நாட்டிலுள்ள ஒரு சிவதலம். (தேவா)

**அவினாபாவசத்தி**— 1. சிவத்தின்று பிரியா சத்தி (சை). 2. கடவுள் (தேவா. 247,7)

**அவுண்**— அசுர சாதி. அவுண் மக சேனை. (திருப்பு.)

**அவுணன்**— அசுரன்

**அவுபாசனம்**— ஔபாசனம் (Daily worship of fire) (சேதுபு. சேதுப்ல. 133)

**அவை திகம்**— வேதத்திற் கொவ்வாதது

**அழகர்**— திருமாலிருஞ்சோலைத் திருமால்

**அழகன்**— திருமால்

**அழகிய சிங்கர்**— இலட்சுமி நரசிம்மன்

**அழகிய மணவாளன்**— அரங்க நாதன்

**அழல் வண்ணன்**— சிவன். தேவா. 1055,5)

**அழலவன், அழலன்**— அக்கினி தேவன். (பிங்)

**அழலாடி**— சிவபிரான். (திவா)

**அழலேந்தி**—சிவபிரான். (திவா)

**அழற்கண்ணன்**— சிவபிரான்

**அழற்கண் வந்தோன்**— வீர பத்திரன் (பிங்.)

**அழற்கதிர்**— சூரியன். (பெரியபு திருஞான, 8)

**அழற்கரத்தோன்**—சிவபிரான் (உரி.நி)

**அழற்கருமம்**— அக்கினிகாரியம் (கூர்மபு. வருணச். 19)

**அழனிழற் கடவுள்**— சிவ பிரான். ஆலவாயி னழனிறக் கடவுள். (இறை. 1.பக்.6)

**அழிதலை**— தலையோடு (தேவா. 198,7); சிரமாலை (பிங்,)

**அழியாமுதல்**— 1. நிலையான மூலநிதி 2. கடவுள்

**அழியாவியல்பு**— அருகன் எண்குணத்துள் ஒன்று (ச)

**அழுக்கு**— 1. ஆணவ முதலிய பாசம். (சிவதரு, பாயி, 7) 2. மனமாசு (தணிகைப். அகத். 231)

**அழுப்புகம்**— தேவலோகம்

**அழைப்புப் பத்திரம்**— கிறிஸ்துவ சபைக்குக் குருவாகும்படியழைக்கும் பத்திரம் (கி)

**அளகாதிபன்**— குபேரன். (உத்தரரா. வரையெடு. 26)

**அளகாபுரி**— குபேரநகரம். (பாரத, மணிமான், 15)

**அளகேசன்**— குபேரன் (தாயு. பரிபூ. 10)

**அளகை**— அளகாபுரி (உத்தரரா.வரை. 1)

**அளகையாளி**— குபேரன் (திவா)

**அளிந்தம்**— கோபுர வாயிற் றிண்ணை

**அற்புத மூர்த்தி, அற்புதன்** கடவுள். (நன், சிறப்புப்);(தாயு கருணா. 1)

**அற்புதாகமம்**— புதிய ஏற்பாட்டுள்ஒரு பகுதி (கி)

**அற ஆழி**—தரும சக்கரம் (மணி)

**அறக்கடவுள்**— 1. யமன் (பாரத். நாடுகரந். 3) 2. தருமதேவதை. (குறள்.204 உரை.)

**அறக்களவேள்வி**— யாகச் செயல், (சிலப். 28, 131)

**அறக்கொடி**— உமை.

**அறச்சாலை**— தருமசாலை, (தணிகைப்பு. அகத். 340)

**அறச்செல்வி**— பார்வதி

**அறத்தகை முதல்வன்**— தருமராசன்; புத்தன்

**அறத்தின் செல்வி**— தரும தேவதை (பிங்)

**அறத்தின் சேய்**— தருமன். (சூடா)

**அறத்தின் மூர்த்தி**—1. பார்வதி 2. திருமால்

**அறத்துவச்சளம்**— சமண தர்மத்தைச் சார்ந்தவர்களை அதன் கண்ணே நிலைநிறுத்தி அவர்களிடத்து மிக்க அன்பு செலுத்துகை. (ச)

**அறத்தைக் காப்போன்**— ஐயனார். (பிங்)

**அறம்**— தருமதேவதை. (குறள், 77); யமன். (பாரத. வாரணு. 112) நோன்பு. (சீவக. 886); தருமம் (பிங்); புண்ணியம் (திருவாச. 1, 52); சமயம். (சீவக. 544.)

**அறம்பகர்வோன்**— புத்தன்.

**அறம்வளர்த்தநாயகி**— பார்வதி

**அறமுயல ஞானச்சமயி கள்**— தர்ம மார்க்கத்தாலே முயன்று பெற்ற ஞானத்தை யுடைய வைதிக சாஸ்த்ர சமய நிஷ்ட்டர்கள். (தி.பி.அ.)

**அறமொழி**— தருமபதம்

**அறவண அடிகள்**— காவிரிப் பூம்பட்டினத்திலிருந்த புத்த சங்கத்தினரான ஒரு முனிவர்; மாதவிக்கு அறநெறி காட்டி யவர்; மணிமேகலைக்குப் புத்த தருமத்தை உபதேசித்தவர். (மணி)

**அறவன்**— கடவுள் (திவ். திருவாய். 1, 7,1) மதபோத கன்; எமன்; புத்தன். (திவா)

**அறவாணர்**— சிவன், கடவுள் (பெரியபு. வாயி.8)

**அறவாழி**— தருமசக்கரம் (திரு நூற்.5)

**அறவியங்கிழவோன்**— புத்தன். (மணி. 11.23)

**அறவோர் பள்ளி**— சைன, பௌத்த ஆலயம். (சிலப்.5, 179 உரை)

**அறவோன்**— புத்தன்

**அறிகருவி**— ஞானேந்திரியம், அறிகருவி யணையா (சிவப்பிர. பொது. 21)

**அறிதுயில்**— யோக நித்திரை (சிலப். 26, 62)

**அறிதுயிலமர்ந்த மூர்த்தி**— திருமால். (பிங்.)

**அறிவர் சிறப்பு** - இறைவர் பூசனை. நன்ருனஞ் சீல நடுங் காத் தவமறிவர் சிறப்பு. (சீவக, 1545)

**அறிவரன், அறிவன்**— அருகன் (திவா) புத்தன் (பிங்)

**அறுகாற்பீடம்**— சிவன் கோயி லிலுள்ள அறுகால்கள்அமைந்த பீடம் அறுகாற்பீடத்திருந்து (திருவிளை, பாயி, 30)

**அறுகுணன்**— பகவன். கடவுள்

**அறுசமயம்**— சைவம், வைண வம், சாத்தம், சௌரம், காண பத்தியம், கௌமாரம்

**அறுதிப்பரியட்டம்**— கோயில் மரியாதையாகத் தலையில் கட்டிக்கொடுத்துவிடும் பட்டு (வை)

**அறுப்பின் பண்டிகை**— விளைவு காலத்துக்குப்பின் காணிக்கை செலுத்தும் கிறிஸ் தவவிசேட நாள். (கி.)

**அறுபத்து மூவர்**—பெரிய புராணத்திற் கூறப்பட்ட தனி யடியார்

**அறுபொருள்**— பரம்பொருள். (சிலப். 17, முன்னிலைப்பரவல், 2)

**அறுமீன் காதலன்**— முருகக் கடவுள். (திவா)

**அறுமுகன்**— முருகக் கடவுள். (திவா.)

**அறுவகையுயுர்**— மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்னும் அறுவகை உயிர் கள் (பௌ)

**அறைக்கட்டளை மானியம்**— கோயிலுக்கு விடப்பட்ட இறை யிலிநிலம்

**அறைகாரன்**— கோயில் உக் கிராணக்காரன். (Loc)

**அன்சார்**— முஹாஜிர்களை வரவேற்று உதவிசெய்தமதீனா வாசிகள் - (இ)

**அன்வயம்**— தாதான்மிய குணம் - (ச)

**அன்ன ஊர்தி**— பிரமன்

**அன்னக்கொடியோன்**— பிரமன்

**அன்னதீபம்**— கோயில்விளக்கு வகை. (பரத. ஒழிபி. 41)

**அன்னபூரணி**— துர்க்கையின் அவசரபேதம்

**அன்னபூரணை**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**அன்னமய கோசம்**— Material or Physical boby'the sheath of food' one of panca - Kocam. பஞ்ச கோசத்துள் ஒன்று (தத்) (சி.சி. பர. மாயா. 8, உரை)

**அன்னமுயர்த்தோன்**— பிரமன். (திவா.)

**அன்ன ஹூர்தி**— பிரமன். (சூடா.)

**அன்னாபிஷேகம்**— சுவாமிக்கு அன்னத்தாற் செய்யும் திருமஞ் சனம்.

**அன்னியதர - அசித்தம்**— பிரதிவாதிக்கு வாதி எடுத்துக் கூறிய ஏது அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனமாகாது போவது.

**அன்னு வயம்**— சம்பந்தம்; காரண காரியங்களின் நியத சம்பந்தம்; உடன்பாட்டு உட்னி கழ்ச்சி; சாதனசாத்தியங்களின் வியாப்தி. (மணி.)

**அனகன்**—பிரம்மா, சிவன் அருகன், இராமபிரான், கடவுள். (கந்தபு.தெய்வ.208.)

**அனங்கத்தானம்**— காமன் கோட்டம்

**அனங்கவேள், அனங்கன்** மன்மதன் (திருக்கோ. 16)

**அனசனம், அனசனவிரதம்**— சைனரின் உண்ணாநோன்பு. அண்ணல் அனசனத் தவம மர்ந்தான் (யசோதர. 1.20)

**அனத்தியயனம்**— வேத முதலியன ஓதாது நிறுத்து கை

**அனந்த சதுட்டயம்**—(jaina) the four anantas or divine attributes obtained by the soul in the final state of Liberation Viz, அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்தவீரியம், அனந்த சுகம், (ச) (சீவக. 2846. உரை)

**அனந்த சதுர்த்தசி**— the 14 th day of the bright fortnigh) of Bhadrapada, when Visnu is worshipped; விஷ்ணுவைப் பூசித்தற்குரிய பாத்திரபதமாச சுக்கிலபட்ச சதுர்த்தசிதினம் (வை)

**அனந்த சயனம்**— ஆதிசேஷனாகிய திருமால் படுக்கை.

**அனந்த சயனன், அனந்த சாயி**—திருமால் (திவ். பெரியாழ். 1,7,2)

**அனந்த ஞானி**— அருகன். (சூடா.)

**அனந்ததேவநாயனார்**— அசுத்த மாயாதத்துவத்தின் உற்பத்திக்குக் காரணமான சிவ மூர்த்தி (சை)

**அனந்த நான்மை**— அனந்த சதுட்டயம் (ச.) சீவக. 2846)

**அனந்த பத்மநாபன்**— திருவனந்தபுரத்துத் திருமால்

**அனந்தர்**— 1. உருத்திரருள் ஒருவர் 2. தீர்த்தங்கரருள் ஒருவர். (திருக்கலம். காப்பு. உரை.)

**அனந்தலோசனன்**— புத்தன். (திவா.)

**அனந்தவிபவை**— பார்வதி

**அனந்த விரதம்**— பாத்திர பத சுக்கிரசதுர்த்தசியில் திருமாலை வணங்கி நோற்கும்ஒருநோன்பு.

**அனந்தன்**— கடவுள், சிவன், அருகன், ஆதிசேஷன், திருமால், பிரமன், பதஞ்சலி.

**அனந்தேசுவரர்**— உருத்திரருள் ஒருவர்

**அனந்தை**— 1. சோடசகலையுளொன்றான யோகஸ்தானம் (சை) 2. சிவசக்திகளிலொன்று (சூடா.)

**அனர்த்த தண்ட விரதம்**— பயனற்ற செயல்களைச் செய்யாமல் வரையறையோடு நடந்து கொள்ளல். (அ. செ. பக். 83.)

**அனலன்**— அக்கினிதேவன், (பாரத. காண்டவ. 31) அஷ்டவசுக்களுள் ஒருவன். (பிங்.)

**அனலாச்சியம்**— நரகவகை. (உபதேசகா,சிவத்துரோ.132)

**அனலாடி**— சிவன். (தேவா, 605,6)

**அனன்**— பிரமன்

**அனனுமதன்**— பத்தாவதுநிலை சிராவகன். (அ.செ. 171)

**அனாகதநாதம்**— பராசத்தி

**அனாசிருதை**— 1. சோடச கலையு ளொன்றான யோகஸ் தானம் (சை). 2. அனாசிருதனின் சக்தி

**அனாசிருதன்**—சிவபேதம்

**அனாதி**— 1. தொடக்கமில் லாதது. அநாதியேக தத்துவ சொரூபத்தை(தாயு. பரசிவ.3) 2. கடவுள். (பிங்)3. சிவபிரான் (பிங்) 4. பார்வதி

**அனாதி சித்தன்**— அநாதியே சித்தனாயிருப்பவன். (சி. போ. பா. அவைய. பக். 11)

**அனாதி சைவம்**— சைவம் பதி னாறனுள் ஒன்று

**அனாதி சைவம்**— சதாசிவ மூர்த்தி. (சைவச. பொது.435, உரை.)

**அனாதி பந்தம்**—இயல்பாக வே உள்ள பாசக்கட்டு (சை). (தணிகைப்பு, நந்தியுப. 96)

**அனாதி பெத்த சித்துரு**— ஆன்மா

**அனாதி போதம்**— இயல்பாக வே பாசங்களின்று நீங்குகை. (சை)

**அனாதி முத்தன்**— கடவுள். (தணிகைப்பு. நந்தியுப. 96)

**அனா தேயம்**— பிரகிருதிதத்து வவகை. (ச)

**அனாதை** — சோடசகலையு ளொன்றான யோக ஸ்தானம்

**அனாமயன்**—அருகன்.(சூடா)

**அனான்மவாதம்**— ஆன்மா இல்லையென்று கூறும் வாதம் (பௌ.)

**அனிச்சைப் பிராரத்தம்**— விருப்பின்றிச் சுகதுக்க மனுப விக்கும் பழவினை. (வேதா.சூ. 175 உரை.)

**அனிலன்**— 1. வாயுதேவன். (வேதாரணி. சபை. 14) 2. அஷ்டவசுக்களுள் ஒருவன். (பிங்.)

**அனீசுவரவாதி**— கடவுளில் லை என்போன்

**அனுக்கிரகம்—** 1. அருள் 2. (saiva.) Function of showing grace, designed to liberate the souls from bondage, one of pañca - Kiruttiyam. பஞ்சகிருத்தியத்தொன்று.

**அனுகற்பம்—** பசுவின் சாணத்தைக்கொண்டு முறைப்படி உண்டாக்கிய விபூதி (சை) இனியனு கற்பந்தனையும். (சைவச. பொது. 179)

**அனுசைவர்—** சிவதீக்ஷை பெற்ற க்ஷத்திரிய வைசியர். (சைவச. பொது. 435, உரை.)

**அனுட்டானம்—** அனுஷ்டானம் பார்க்க. வயங்கனுட்டானம் பண்ணி. (மச்சபு. வீம. 1)

**அனுபவை—** பார்வதி

**அனுபூதி—** அனுபவ ஞானம், (வேதா. சூ. 151)

**அனுபூதிக்கலை—** ஆன்மா கடவுளை அனுபவித்துஅறிவது

**அனுமக்கொடியோன்—** அருச்சுனன்

**அனுமன்—** அனுமான், (உத்தரரா. அனுமப். 34.)

**அனுமான்—** ஆஞ்சநேயன்

**அனுமானம்—** சாத்தியத்தை யொழியச் சம்பவியாததாகிய சாதனத்தால் சாத்தியத்தைப் பற்றிப் பிறக்கும் ஞானம். இது பொது, எச்சம், முதல் என மூன்று வகைப்படும். (மணி.)

**அனுவாகம்—** வேதத்தின் உட்பகுப்பு

**அனுஷ்டானம்—** (saiva) the daily religious rites of the initiated, சந்தியாவந்தனம்.

**அனேகன்—** ஆன்மா

**அனேகாந்தவாதம்—** சமண மதம்

**அனேகாந்தவாதி—**ஆருகதன் (ச) (சி. போ. பா. அவை. 12.)

**அனேகான்மவாதம்—** ஆன்மாக்கள் பலவுண்டென்னும் கொள்கை.

**அனேகேசுரவாதி—** கடவுளர் பலர் என்னுங்கொள்கையோன் (சி.போ. சிற். 1,3,)

**அஜ்ர்—** ஒருவன் இம்மையில் செய்யும் நற்செயல்களுக்குப் பிரதியாக மறுமையில் இறைனிடமிருந்து பெறும்நற்கூலி(இ)

**அஜ்ஜாமிஉ—** (கூட்டுபவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஜ்ஜார்ரு—** (தீமைசெய்பவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஜ்ஜாஹிரு** — (வெளிப்படையானவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஜபா நடனம்**— திருவாரூர்க் கோயிலுள் நடைபெறும் தியாகேசனது நடனம்

**அஜபை**— மந்திர வகை

**அஜாசத்துரு**— தருமபுத்திரன்

**அஜிதன்**— 1. பிரமன். 2. திருமால், 3. சிவன்

**அஜீவாஸ்திகாயம்**— (Jaina) Ajiva or things inanimate as opp. to Jiva, which is divided into two classes, arūpi, without form', which is subdivided into tarmāstikāyam, atarmāstikayam, ākācāstikayam and kālam, 'and rūpi, 'with form', which is known as purkalastikayam (some identify this last with ajivastikayam) one of Pancastikayam.
பஞ்சாஸ்திகாயத்தொன்று. (ச)

**அஜைகவான்**— உருத்திரருள் ஒருவன்

**அஷ்டகணபதிகள்**— ஆதி கணபதி, மகா கணபதி, நடன கணபதி, சத்திகணபதி, வாலை கணபதி, உச்சிட்ட கணபதி, உக்ரகணபதி, மூலகணபதி

**அஷ்டகோத்திரம்**— வைஷ்ணவப் பிராமணருள் ஒருவகுப்பார்.

**அஷ்ட சுத்தி**—பரிணாமசுத்தி, விநயசுத்தி, ஈரியாபதசுத்தி, பிரதிஷ்டாபனசுத்தி, சய்யாசன சுத்தி, வாக்சுத்தி, பிக்ஷசுத்தி, காயசுத்தி, யென்ற எட்டு வகைச் சுத்திகள். (ச.)

**அஷ்ட பந்தனம்**— சுக்கான் கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன் மெழுகு, எருமை வெண்ணெய், குங்சிலியம், நாற்காவி. சிலா விக்கிரங்கள் அசைவின்றி இருக்கும்படி அடியிடத்துச் சாத்தப்படும் கூட்டுச்சரக்கு

**அஷ்டமூர்த்தம்**— சிவன் எண் வடிவம். பூமி, நீர், தேய, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா. (பிங்).

**அஷ்டமூர்த்தி**— சிவபிரான்

**அஷ்டலக்ஷ்மி**— தனலக்ஷ்மி, தானியலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, வித்தியாலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, ராஜ்யலக்ஷ்மி

**அஷ்டவசுக்கள்**— அனலன், அனிலன், ஆபன், சோமன், தரன், துருவன், பிரத்தியூடன், பிரபாசன். (பிங்.)

**அஷ்ட வித்தியேசுரர்**— சுத்ததத்துவங்களு ளொன்றான ஈச்சுர தத்துவத்திலுள்ள அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், சீகண்டர், சிகண்டி என்ற எண்வகை ஈச்சுரர்.

**அஷ்டாங்கசீலம்**— இல்லறத்தாரில் ஏனையோர்க்குரிய பஞ்ச சீலோத்தோடு நிஷ்டாபரர்களுக் கேயுரினவாகிய இரவில் தூய்மையில் உணவைப் புசியாமை சந்தன முதலிய மணமுள்ள பொருள்களை உபயோகியாமை தரையிற் பாய்மேலே படுக்கை ஆகிய மூன்றுஞ் சேர்ந்து எண் வகைப்பட்ட பௌத்த ரொழுக்கம் (பௌ.)

**அஷ்டாங்க நமஸ்காரம்**— எட்டுறுப்புக்கள் நிலந்தோய வணங்குகை

**அஷ்டாங்க மார்க்கம்**— எண் வகைப்பட்ட துக்கநிவாரண மார்க்கம் (பௌ,)

**அஷ்டாதசர ஹஸ்யம்**— A collection of eighteen treatises on the Vaisnava Siddhanta by Piḷḷailōkacāriyar. ஒரு வைஷ்ணவ சித்தாந்த நூற்றொகுதி.

**அஷ்டாக்ஷரம்**—ஓம் நமோ நாராயணாய, எனும் விஷ்ணு மந்திரம்

**அஷ்டோத்தரசதம்**— தெய்வத்தின் நூற்றெட்டு நாமம்

**அஷ்டோத்தரசதோபநிடதம்** நூற்றெட்டு உபநிடதங்கள்

**அஷ்ஷஹீது**— (சான்றாளன்) அல்லாவின் பெயர். (இ)

**அஷ்ஷகூரு**— (நன்றியறிதலை ஏற்பவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஸ்திகாயம்**— பஞ்சாஸ்திகாயம் (ச)

பருமனுடையது, புத்கலம், ஆகாயம், தர்மம், அதர்மம் இந் நான்கையும் பருமனுடையனவையாகக் கொண்டு அஸ்திகாயம் என்பர். சீவனும் சமணர் கொள்கைப்படி அஸ்திகாயமே. (சமணம். பக். 37)

**அஸ்திநாஸ்திவாதம்**— உண்டு இல்லை என்னும் சைனக்கொள்கை (ச) (சி.சி. பர. நிகண். 6 உரை)

**அஸ்திரதேவர்**—உற்சவ காலங்களில் சுவாமி புறப்படுவதற்கு முன் வீதியைச் சுற்றிக்கொண்டு வரும் ஆயுத வடிவமானமூர்த்தி

**அஸ்திரமந்திரம்**—ஷடங்கமந்திரங்களு ளொன்று (சை)

**அஸ்மாவுல் ஹுஸ்னா**— அல்லாஹ்வுடைய திருப்பெயர்களைக் குறிக்கும். (இ)

**அஸ்ஸபூரு**— (பொறுமை மிக்கவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஸ்ஸமது**— (அமைதியுடையவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஸ்ஸமிவு**— (செவியுறுபவன்) அல்லாவின் பெயர். (இ)

**அஸ்ஸலாமு—** (நலஞ்செய்ப வன்) அல்லாவின் பெயர். (இ)

**அஸ்ஸலாமு அலைக்கும்—** முஸ்லிம்கள் ஒருவருக்கு ஒருவர் கூறிக் கொள்ளும்முகமன். இதன் பொருள் 'இறைவனின் கருணை யும் சாந்தியும் உங்கள் மீது பொழிவதாக' என்பது (இ)

**அஸர்—** மாலை நேரத் தொழு கை (இ)

**அஹ்மத்—**அண்ணல் நபியின் இயற்பெயர்களில் ஒன்று

**அஹ்லுல் குர் ஆன்—** திருக்குர் ஆனில் ஓதப்பட்ட நெறிகளைத் தவறாது கடைப் பிடிப்பவர்

**அஹ்லுல்— ஹதீஸ்—** அண்ணல் நபியின்மொழிகளை யும் செயல்களையும் பின்பற்று பவர்கள்

**அக்ஷபாதமதம்—** The Nyaya system of philosophy, foun-dedby Aksa-pāda, also called Gautama, நியாயமதம் (பௌ.)

**அக்ஷித்திரயம்—** மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி

## ஆ

**ஆ—** ஆன்மா, சிவஞானம் ஆதிருக்கச்சிவம். (கம்பரந். 39)

**ஆக்கம், ஆக்கமகள்—** இலக்குமி (பிங்.)

**ஆக்கவ்யம்—** பஞ்ச கவ்யம்

**ஆக்கிநிகநானம்—** எழு வகை ஸ்நானத்துள் ஒன்று. அது விபூதியை விதிப்படி தரித்தல்.

**ஆக்கிநேயம், ஆக்கினேயம்-** திருநீறு

**ஆக்கிநேயன் –** முருகக் கடவுள்

**ஆக்கிரயணம்—** ஒரு யாகம், (திவா.)

**ஆக்கினேயம்—** 1. அக்கினிக் குரியது 2. ஆக்கினேய புராணம் 3. சிவகாமத்துள் ஒன்று 4. ஆக்கினேயஸ்நானம் (திருவிளை. தீர்த்த. 20)

**ஆக்கினேயஸ்நானம்,—** சரீர சுத்தி. மந்திரங்களால் விபூ தியை உடலெல்லாம் பூசுவது சித் சிகா. விபூதி, 12, (உரை)

**ஆக்வானம்—** தேவதைகளைப் பிரார்த்தித்து அழைக்கை.

**ஆகுண்டலன்—** இந்திரன் (பிங்.)

**ஆகதர்—** சமணர் (தேவா. 858,2)

**ஆகந்துகமலம்**— ஆன்மா விடத்து இயல்பாகவன்றி இடையே தோன்றும் மாயை கன்மங்களாகிய இரண்டு மலங்கள் (தத்)

**ஆகமங்களோதினோன்**— சிவபிரான்

**ஆகம சாஸ்திரம்**— சைவ, வைணவ, சாக்த, சைன தந்திரங்கள்.

**ஆகமபேர்வழி**— பதார்த்தங் களின் விவரங்களைக் கூறும் ஒரு சைன நூல்

**ஆகமம்**—1. வேதசாஸ்திரங்கள். (பிங்.); 2. முதல்வன் வாக்கு. (பிங்.) சிவ விஷ்ணுக்களால் இருடிகள் பொருட்டு அருளிச் செய்யப்பட்ட நூல்கள். வேதங் களுக்கும் சாஸ்திரங்களுக்கும் அமைந்த பெயராக இருப்பினும், சிறப்பாகக் கடவுளுடைய வழி பாட்டை இரகசியம், மந்திரம், மூர்த்தி, ஆலயம் ஆகிய முறை களில் விரித்துக்கூறும் தொகுதி யின் பெயராக வழங்கி வருகின் றது, சிவ வழிபாட்டைக் கூறு வது சிவாகமம். விஷ்ணு வழி பாட்டைக் கூறுவது வைஷ்ண வாகமம். சக்தி வழிபாட்டைக் கூறுவது சாக்தாகமம்.

**ஆகமன்**— சிவன்

**ஆகமாந்தம்**— ஆகமங்களின் முடிவாகக் கொள்ளப்படுஞ் சைவ சித்தாந்தம் (சை).

**ஆகரன்**— சுந்தரமூர்த்தி நாயனார்

**ஆகவனீயம்**— வேதாக்கினி வகை. (திருமுரு. 181. உரை.)

**ஆகாச காமினி**— ஆகாயத் திற் செல்லுதற்குதவும் ஒரு மந்திரம். (சீவக, 1713, உரை)

**ஆகாச சபை**— காஞ்சீபுரத்து நடராஜ சபை (அபிசிந்.)

**ஆகாசத்திரவியம்**— ஷட் திரவியங்களுள் ஒன்று. (ச)

**ஆகாசபூதவாதி மதம்**— ஆகாச மென்னும் பூதமே பிரமம் என்பவனுடைய மதம்

**ஆகாசலிங்கம்**— பஞ்சலிங்கத் துள் சிதம்பரத்திலுள்ளது.

**ஆகாசாஸ்திகாயம்**— பஞ்சாஸ்திகாயத் தொன்று (ச)

**ஆகாமியம்**— இப்பிறப்பிலே செய்யும் புண்ணிய பாவங்கள். மேல்வரு மாகாமியமு நாடாமல். (திருக்காளத். பு. 12, 28)

**ஆகாயகங்கை**— மந்தாகினி, (மணி. பதி. 17)

**ஆகாய வாசிகள்**—பதினெண் கணத்துளொரு சாரார். (திருமுரு. 158, உரை.)

**ஆகாரசமிதை**— ஓமதண்டிலத்தின் தென் கிழக்கிலும், வடகிழக்கிலும் வைக்கப்படும் சமிதைகள். (சீவக. 2464, உரை.)

**ஆகிரத்**— மறுஉலகம் (இ)

**ஆகுண்டநம்**— பரமசிவனை இலிங்காதியில் ஆவாகநனஞ் செய்யுமிடத்து நிகழ்த்தும் பத்துச் சமஸ்காரங்களில் ஒன்று

**ஆகுதி**— அக்கினியில் மந்திர பூர்வமாகச் செய்யும் ஓமம், தெய்வத்திற்கு இடும் பலி. அந்தண ராகுதி வேட்கிலே (திருமந். 214)

**ஆகுபதி, ஆகுயர்த்தோன், ஆகுரதன், ஆகுவாகனன்**— விநாயகன். (திவா.)

**ஆகுவாகனஹஸ்தம்**— அழைத்தல் குறிக்கும் கை.

**ஆங்கிரசம்**— தருமநூல் பதினெட்டிலொன்று

**ஆச்சியஸ்தாலி**— ஓமத்துக்குரிய நெய்ப்பாத்திரம். (சீவக. 2463, உரை.)

**ஆச்சிரவம்**— 1. கன்மத் தொடர்ச்சி (ச) 2. ஆன்மா பொறிவழிச்சேறல் (ச)

**ஆசகாரம்**— திரிபுரசங்காரத்திலே சிவன் ஏறிய இடபம்

**ஆசந்தன்**— திருமால்

**ஆசந்தி**— பெரிய வெள்ளிக் கிழமையன்று சிலுவையில் அமைந்த இயேசுநாதர் சொரூபத்தை ஊர்வலஞ் செய்விக்கை (கி)

**ஆசநமூர்த்தி**— சிவன்

**ஆசமனம்**— வலக்குடங் கையால் மந்திரபூர்வமாக நீரை மும்முறை யுட்கொள்ளுகை, (கூர்மபு. நித்திய. 11)

**ஆசமித்தல்**— வலக்குடங் கையால் மந்திரபூர்வமாக நீரை மும்முறையுட் கொள்ளுதல். —அணிநீர்க்கரந்தொட்டா சமித்தான். (சேதுபு. சேதுவந், 26.)

**ஆசரணம்**— அனுஷ்டானம்

**ஆசரிப்புக்கூடாரம்**— யூதர் வழிபட்ட சஞ்சார ஆலயம் (கி)

**ஆசவகம்**— சிவன் வில்

**ஆசவபண்டேசர்**— காசித் தலத்தி லெழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தம்

**ஆசாடி**— குய்யாட்டக புவனத்து ளொன்று. (a spiritual world.)

**ஆசாபூரகர்**— விநாயகர் (ஆசையை நிறைவு, செய்பவர்)

**ஆசாம்பரன்**—சிவன் (திருப்பு 436)

**ஆசார்யஹ்ருதயம்**— ஒரு வைணவ சமய நூல்.

**ஆசார்யாபிஷேகம்**— குருவா தற்குச் செய்யப்படுஞ் சமஸ்காரம்.

**ஆசாரலிங்கம்**— சிவலிங்க பேதங்களுளொன்று

**ஆசாரவாசல்**— கோயிலின் பிரவேசமண்டபம்.

**ஆசாரி**— மாத்துவ ஸ்ரீவைஷ்ணவப்பிராமணர் பட்டப் பெயர்

**ஆசாரிய சம்பாவனை**— சுபகாலங்களில் ஆசாரியருக்கு கொடுக்குங் காணிக்கை.

**ஆசாரியபுருஷம்**— கோயிற் குருக்களுக்கு விடப்படும் மானியம்

**ஆசாரியன்**—1. குரு 2. சமயத் தலைவன்

**ஆசான்**— 1. முருகக் கடவுள் (பிங்) 2. அருகன். (சூடா) 3. புரோகிதன். அறக்களத் தந்தண ராசான். (சிலப்,28,222)

**ஆசிரய அசித்தம்**— வாதி தன்னோடு மாறுபட்ட பிரதிவாதிக்கு அவனுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்மி அல்லாத ஒன்றைத் தன்மியாகச்சொல்லி, அதற்குரிய, ஏதுவையும் காட்டுதல், (மணி)

**ஆசீவகப்பள்ளி**— ஆசீவகத் தவத்தோர் உறைவிடம், (நன். 158, மயிலை)

**ஆசீவகமதம்**— மற்கலி தேவனைத் தெய்வமாகக்கொண்டது; இம்மதத்தின் பிரமாண நூல் நவகதிர்; இதில் கூறப் பட்ட பொருள் உயிரும், நால் வகை அணுவும், ஆகியஐந்து.

**ஆசீவகன்**— 1. சமண தவத் தோன். (பிங்) 2. சமணரில் ஒரு பிரிவினன். (மணி.27,108)

**ஆசு**— ஆணவமலம், (சிவப்பிர உண்மை, 42)

**ஆசுபொதுமக்கள்**— சைனருள் ஒரு சாரார்

**ஆசுராப் பண்டிகை**— மொகரம் பண்டிகை (இ)

**ஆசுவிகன்**— ஆசீவகன். (S,I,I i, 108)

**ஆசைக்காரணர்**— திக்குப் பாலகர்

**ஆஞ்சநன் அஞ்சநேயன்** — அனுமான் (நல். பாரத, இராமன்படையெழு, 111)

**ஆட்டுக்கோன்**— சிவன்

**ஆட்பாலவன்**—அடியான்

**ஆடககருப்பன்**— பிரமன்

**ஆடகேசன்—** பாதாளலோகத்துள்ள உருத்திரகணத் தலைவன் (கந்தபு, கணங்.6)

**ஆடகேசுரம்—** ஆடகேசனுடைய புவனம் (அருணு,பு, திருமஸ, 46)

**ஆடவல்லான் —** தஞ்சாவூர் நடராஜப் பெருமான், (S,I,I,ii, 125)

**ஆடவலபெருமான்—** திருவாரூரிற் கோயில்கொண்டசிவ பெருமான்

**ஆடிப்பூரம்—** ஆடி மாதத்தில் பூரநட்சத்திரத்தில் நிகழும் அம்பாள் உற்சவம்

**ஆடூர்ந்தோன்—** 1, முருகன் 2, அங்கியங்கடவுள்

**ஆண்சத்தி—**சிவனுக்குரிய நால் வகைச்சத்திகளுள் ஒருவராகிய திருமால். (சிவனுடைய அருட் சத்தி எனப்படும் இன்பசக்தி உமை என்றும், அழித்தற்சத்தி ஐயை என்றும், சீற்றச்சத்தி காளி, என்றும்,ஆண்சத்தி அரி என்றும் கூறப்பெறும்(ம.த.அ.)

**ஆண்டலைக்கொடி—** முருகக் கடவுளின் சேவற்கொடி (சூடா 1,23)

**ஆண்டவரசு—** திருநாவுக்கரசு நாயனார் (பெரியபு. திருநாவு. 201)

**ஆண்டவன்—** கடவுள்

**ஆண்டார்—** தேவர் (அக.நி)

**ஆண்டாள்—** 1. வாகனத்தில் பெருமாளை எழுந்தருளச் செய்கையில் வஸ்திரங்களை ஒன்றோடொன்று சேர்ப்பதற்கு உபயோகிக்கும் குண்டூசி (ஸ்ரீ.த.)
2. குடிக் கொடுத்த நாச்சியார், பன்னிரு ஆழ்வாரில் ஒருவர்.

**ஆண்டான்—** ஆண்டவன். (கம்பரா, கடருவு, 62)

**ஆண்டி** பண்டாரம்

**ஆணவமலம்—** மும்மலங்களுள் ஒன்று (சி.சி. 2,80, மறைஞா)

**ஆணை—** சிவபிரானது சிற்சத்தி(சை)

**ஆத்தன்—** கடவுள், சிவன், அருகன் (சூடா)

**ஆத்தாள்—** பார்வதி. அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மஸநீலி. (தனிப்பா. 1,35,66)

**ஆத்தானம்—** கோபுரவாயில் (பிங்)

**ஆத்தான மண்டபம்—** கோபுர வாசலில் உள்ள மண்டபம்

**ஆத்திக்கியம்—** கடவுள் உண்டென்னும் விசுவாசம்

**ஆத்திகன்—** ஆஸ்திகன் ஆத்திகர் அர்ச்சிக்க பலமாம். (சைவச. பொது 468)

**ஆத்திசூடி**— சிவபிரான்

**ஆத்தியன்**— சிவன்

**ஆத்தியான்மிக சிதாகமம்**— சிவசத்தியால் விளக்கப்பட்ட சிற்சத்தியாகிய பரமான்ம ஞான ஆகமம் (ம.த.அ)

**ஆத்தியான்மிகம்**— 1. தாபத்திரயங்களுள் ஒன்று. அது தன்னாலும் பிற ஆன்மாக்களாலும் வருவது.
2. பரமாத்தும சம்பந்த முடையது (ம.த.அ)

**ஆத்தியை**— துர்க்கை

**ஆத்துமதத்துவம்**— அசுத்த தத்துவம் (சை)

**ஆத்துமபூ**— சிவன், திருமால், பிரமன், மன்மதன்

**ஆத்மத்திரயம்**— (வேதாந்தம்) மூவகை ஆன்மாக்கள் அவை சீவாத்துமா, அந்தராத்துமா, பரமாத்துமா என்பன (ம.த.அ)

**ஆத்மநிவேதனம்**— தன்னையும், தன்னுடைமையையும் பரமாத்துமாவிடம் ஸமர்ப்பிக்கை.

**ஆத்மப்ராப்தி**— தன்னையே தான் அனுபவித்துக் கொண்டிருக்கும் கைவல்யநிலை.

**ஆத்மப்பிரபோதம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**ஆத்மம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**ஆத்மலக்கணம்**— (வேதாந்தம்) ஆத்மாவின் இயல்பு அவை சத்து, சித்து, ஆனந்தம் என்பன.

**ஆத்மலாபம்**— மோட்சம்

**ஆத்மானுபவம்**— ஆத்மப்ராப்தி பார்க்க. (அஷ்டாதச. அர்த்தபஞ்)

**ஆதன்**— அருகன் (சூடா) ஆன்மா (திவா)

**ஆதனமூர்த்தி**— இலிங்கம்

**ஆதாம்**— முதல் மனிதன் (கி)

**ஆதாரசத்தி**— சிவசக்தி

**ஆதாரசிலை**— சிலாவிக்கிரகத்தைத் தாங்கும் அடிக்கல்

**ஆதி**— அயன், அரி, அரன் அருகன், புத்தன், கடவுள். (பிங்)

**ஆதிகவி**— வான்மீகி முனிவர்

**ஆதிகாவியம்**— வால்மீகி ராமாயணம்

**ஆதிசக்தி**— 1. பஞ்சசத்திகளுளொன்று (சை)
2. ஆதியாகிய சக்தி (primal energy of Siva) சிவமெனும்

பொருளும் ஆதிசத்தியொடு சேரின். (சௌந்த 1)

**ஆதிசால் முனிவன்**— புத்தன் (மணி)

**ஆதிசைவம்**— சைவம் பதினாற னுள் ஒன்று

**ஆதிசைவர்**— சிவாலயங்களிற் பூசைக்கு அதிகாரிகளாகிய சிவப்பிராமணர். (சைவ ச. பொது. 435, உரை)
பட்டர், குருக்கள், சிவாசாரியார், சிவப்பிராமணர் எனவும் படுவர்.

**ஆதித்தர்**— தேவர். (பிங்)

**ஆதித்தன்**— சூரியன்

**ஆதித்தாய்**— ஏவாள் (கி)

**ஆதித்தியை**— கலைமகள்

**ஆதிதாசர்**— சண்டேசுவரன் (S. I. I. i, 116)

**ஆதிதூதர்**— Arch angels, an order of angels in heaven R.C.

**ஆதிதேவன்**— கடவுள். (கந்தபு அயனைச்சிறைபுரி. 5)

**ஆதிதைவிகம்**— தெய்வத்தால் வருந்துன்பம். (சி.போ. 2,2,3, சிற்)

**ஆதிநாதர்**— இராமபிரான், கடவுள், சைன தீர்த்தங்கரரில் ஒருவர்

**ஆதிநாதன்**— கடவுள் ஆதி நாதன் அறிவன் (திருவாலவா, 18, 7)

**ஆதிநாயகி**— திருமகள்

**ஆதிநாராயணன்**— திருமால்

**ஆதி நித்தியர்**— சிருட்டிக்கப் பட்டும் ஒரு நாளும் அழியாதவர். (கி)

**ஆதிநூல்**— வேதம். ஆதிநாலு மனைத்துலகுங் கெடும். (அரிச், பு. விவாக. 207)

**ஆதிப்புலவன்**— அகத்திய முனிவர் (பிங்)

**ஆதிபகவன், ஆதிபரன்,**

**ஆதிபன்**— கடவுள் (குறள் 1); இறைவன் (சூடா.)

**ஆதிபுங்கவன்**— அருகன் (ச)

**ஆதிமூர்த்தி**— 1. முதற்கடவுள் (திவ். திருவாய், 3, 3, 5,)
2. திருமால்

**ஆதியங்கடவுள்**— 1. அருகன் (திவா.)
2. முதற்கடவுள் P

**ஆதியந்தணன்**— பிரமதேவன் (பரிபா. 5, 22)

**ஆதியாகமம்** — 1. பகுசுருதியாகமம் (A Jaina Scripture)
2. விவிலிய நூலில் ஒரு பகுதி (The Book of Genesis) (கி)

**ஆதிரை முதல்வன்—** சிவன். (பரிபா. 8, 6)

**ஆதிவராகன்—** வராகாவதார மெடுத்த திருமால். (திவா)

**ஆதிவிராகன்—** அருகன், சிவன்

**ஆதீன கர்த்தா—** சைவ மடாதிபதி

**ஆதீனம்—** சைவ மடம். (திருவாவடுதுறை ஆதீனம்)

**ஆதீனஸ்தர்—** சைவ மடத் தலைவர்

**ஆபச்சகாயன்—** விநாயகன். (தணிகைப்பு. கடவுள்வா. 3)

**ஆபதோத்தாரண மூர்த்தி—** தேவர் முதலியாருக்குத் துன்பம் வந்த காலத்து அதைப் போக்க எடுத்த சிவன் திருவுரு.

**ஆபஸ்தம்பம்—** 1. ஆபஸ்தம்ப சூத்திரம் 2. ஒரு ஸ்மிருதி

**ஆபஸ்தம்பன்—** தைத்திரீய சாகையைச் சேர்ந்த சூத்திர காரர்களில் ஒருவர்

**ஆம்பிகேயன்—** முருகக் கடவுள்

**ஆமளம்—** சிவஸ்தோத்திர வகை. ஆமளஞ்சொலி யன்பு செய்யினல்லால் (தேவா. 233, 4.)

**ஆமினா—** அண்ணல் நபியின் அன்னை (இ)

**ஆமென்—** Heb. āmēn. verily, so be it, used by Christians usu. at the close of prayer and hymn. ததாஸ்து. (கி)

**ஆயக்கால்—** வாகனந் தாங்கி

**ஆயர்பாவை,**
**ஆயர்பின்னை—** நப்பின்னை

**ஆயனார் கோயில்—** திரிவிக்ரமப் பெருமாள் கோயில்

**ஆயனி—** துர்க்கை

**ஆயாத்—** பிரபஞ்சத்தில்காணப்படும் இறைவனின் அத்தாட்சிகள் (இ)

**ஆயிரக்கால் மண்டபம்—** ஆயிரந்தூண்களுள்ள கோயில் மண்டபம்

**ஆயிரங் கண்ணன்—** இந்திரன். (திவா.)

**ஆயிரம் பெயரோன்—** திருமால். (பிங்)

**ஆயிரமுகத்தோன்—** வீரபத்திரன். (பிங்)

**ஆயிரவாரத்தாழியன்—** Buddha, in the sole of whose foot there was a disc with 1000 lines, a sign of extraordinary greatness in a man. புத்தன். (மணி. 5.104)

**ஆயு**—எண் குற்றங்களுள் ஆயுட் காலத்தை வரையறுப்பது (ச.) (சூடா.)

**ஆயுவின்மை**— அருகன் எண் குணத்துளொன்று. (சூடா,)

**ஆர்த்தி**— சிவசக்தியுள் ஒன்று

**ஆர்த்திராதரிசனம்**— மார்கழித் திருவாதிரை நாள்

**ஆரகன்**— உருத்திரன். ஆரக னதிகனென்றுது. (சிவதரு. சிவஞானயோ. 31)

**ஆரண்யகம்**— வேதத்தின் ஒரு பகுதி

**ஆரணத்தான்**— பிரமன். (தஞ் சைவா. 265)

**ஆரணம்**— வேதம். (கம்பரா. தாடகை.2)

**ஆரணவுருவார்**— சிவபிரான்

**ஆரணன்**— பிரமன். (பிங்.)

**ஆரணி**— 1. மாகாளி(பிங்.) 2. பார்வதி. (தாயு,மலைவளர்.5) 3. சிவசத்தி பேதம்

**ஆரத்தி**— தீபாராதனை

**ஆராத்தியர்**— வீர சைவப் பிராமணர்

**ஆராத்திரியர்**— கோயிற் பூசனை புரிவோர்; வீரசைவப் பிராமணர்

**ஆராதகர்**— அருச்சகர். (கோயி லொ. 27)

**ஆராதனம்**— பூசை. (அஷ்டப். திருவரங்கத்.30)

**ஆராதனை**— 1. பூசனை வழிபாடு (செந். 21, பெருந் தொ. 20) 2. கிறிஸ்தவர் கோயில் வழிபாடு. (கி)

**ஆராமம்**— பௌத்த துறவிகள் உறைவிடம். பிக்குகள் தங்கிய சோலைகளை ஆராமம் என்றனர். (பௌத்தம். பக் 57)

**ஆராவமுதன், ஆராவமுது**— திருக்குடந்தையிலெழுந்தருளிய விஷ்ணுமூர்த்தியின் திருநாமம். (திருவாச. 1, 67)

**ஆரி**— துர்க்கை, பார்வதி

**ஆரிட லிங்கம்**— இருடிகளால் நிறுவப்பட்ட சிவலிங்கம் (சைவச. பொது. 431.)

**ஆரியசத்தை**— பௌத்தருக் குரியமேலான உண்மைகள் (பௌ.)

**ஆரியன்**—1, ஐயனார், (சூடா) 2, புத்தன். (மணி)

**ஆரியாங்கனை**— இல்லறத்தினின்று துறவுபூண்ட சைன தவப்பெண் (ச) (திருவிளை. சமணரை. 17)

**ஆரியை**— காளி, துர்க்கை, பார்வதி (பிங்)

**ஆருகதம்**— சைனசமயம்(திவா)

**ஆருகதன்**— சமணன். (குறள், 286, உரை)

**ஆருணி**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**ஆருத்ராதரிசநம்**— சிவமூர்த்தி சிருட்டியாதியாகிய தொழில்களைச் செய்யச் சகளீகரித்த நாள். இந்த நாளிற் சிவாலயங்கடோறும் பஞ்சகிருத்திய உற்சவம் நடத்துவர்.

**ஆலகண்டன்**— சிவன். (அக. நி.)

**ஆலகாலம்**— பாற்கடலில் தோன்றிய விஷம். (இரகு, இலவண, 6)

**ஆலகாலி**— காளி, (அரிச், பு, பாயிர. 9)

**ஆலதரன்**— சிவன், (உரி, நி)

**ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன்**— சிவன் (மணி, 3, 144)

**ஆலமுண்டான்**— சிவன்

**ஆலயம்**—கோயில், தேவாலயம், ஆலயந் தொழுவது சாலவு நன்று. (கொன்றை.)

**ஆலவன்**— திருமால் (Visnu, as lying on a banyan leaf at the dissolution of the universe of flood). (கந்தபு. சூரனமைச் 43)

**ஆலவன்**— சந்திரன். (பிங்)

**ஆலாத்தி**— ஆரத்தி, ஆலாத்தி சுழற்ற லென்கோ (சௌந்தரி. 103)

**ஆலாலசுந்தரன்**— கயிலையில் சிவபிரான் சந்நதியில் உள்ள வரும் சுந்தரமூர்த்தி நாயனாராகப் பின்பு அவதரித்தவருமான கணத்தலைவர்.

**ஆலி நாடன்**— திருமங்கையாழ்வார். (திவ், பெரியதி, 3,4,10)

**ஆலிலைப்பள்ளியான்**— திருமால்

**ஆவரணச்சுவர்**— கோயில் திருமதில்

**ஆவரணசக்தி**— மாயை

**ஆவரணம்**— 1. மறைப்பு, ஆவரணந் தானேபாழ். (கைவல்ய. தத்துவவி. 53)

**ஆவரணம்**— 2. ஈசுவரனின் சக்தி என்ற பொருளில் மாயை

என்ற சொல் வழங்குகின்றது. இந்த மாயைக்கு இரண்டுஇயல் புகள்உண்டு. அவற்றுள் உள்ள தை மறைக்கும் இயல்பு ஆவர ணம் எனப்படும். மாயை ஆவரண சக்தியினுல் மெய்ப் பொருளாகிய பிரம்மத்தை மறைக்கின்றது. (இந்திய தத்து வஞானம். பக் 320.)

**ஆவரண மூர்த்தி**— கோயிலில் மூலஸ்தானத்தைச் சுற்றியிருக் கும் பரிவார தேவதைகள்

**ஆவரணி**— பார்வதி

**ஆவாகனம்**— எழுத்தருளும்படி மந்திரத்தால் தெய்வத்தை அழைக்கை, (சைவச. பொது. 525)

**ஆவாகனமுத்திரை**—முத்திரை வகை. (சை)

**ஆவாகித்தல்**— எழுந்தருளும் படி மந்திரத்தால் தெய்வத்தை யழைத்தல். சிவன்றன்னை யாவாகித்து. (திருமந். 1825)

**ஆவி**—ஆன்மா. ஆவியுமுடலும், (திருவாச. 33,7) பரிசுத்த ஆவி (கி)

**ஆவிகாட்டுதல்**— நிவேதனஞ் செய்தல்

**ஆவிருதி**— ஆணவமலம். ஆவி ருதி என்றற்றொடக்கத்துக் கார ணக்குறிகளும். (சி.போ.4,2, சிற்)

**ஆவுடையார்**— ஆவுடையாள் பார்க்க

**ஆவுடையாள்**— சத்தியைக் குறிக்கும் இலிங்கபீடம்.ஆவுடை யாளுஞ் சிவலிங்கமும் ஒன்றை விட்டொன்று நீங்காமல். (சி.சி (1,69,நிரம்ப)

**ஆவேசசமவாதம்**—(A Saiva) Sect.) காபாலம் பார்க்க.

**ஆவேசவாதி**— காபாலிக மதத் தான். (சி.போ.பா.அவை.21

**ஆவேசாவதாரம்**— Visr.u's Secondary or partial incarnati on. திருமாலின் கௌணாவ தாரம். (அஷ்டாதச. பக். 25, குறிப்பு.)

**ஆழ்கடற்றுயின்றோன்**—திரு மால். (திவா)

**ஆழ்வார்**—1. பகவத்குணங் களில் ஆழ்ந்து ஈடுபடுவோர், (திவ்,இயற், நான்மு,14)
2. திருமாலடியார் பதின்மர்
3. சைன பௌத்தப் பெரியோர்
4. சுவாமி, ஆழ்வார் திருவரங் கதேவர், (S,I,I,iii,150)

**ஆழ்வார்கன்மி**—திருமால் கோ யிலருச்சகன்,(S.I.I.iii.150)

**ஆழ்வான்**— 1. சூரியன், ஆழ் வான் சேய்காரி (சினேந், தாது காண். 102)
2. இராமன்.

**ஆழி**— சக்கராயுதம், ஆழியெழச் சங்கும் (திவ், திருவாய், 7,4,1)

**ஆழிநாதன்**— திருமால்

**ஆழி மாலவன்**— திருமால்

**ஆழிமுரசோன்**— மன்மதன். (சூடா.)

**ஆழியான், ஆழிவேந்து**— திருமால், ஆழியானென்னு மாழ மோழையிற் பாய்ச்சி (திவ்.பெரி யாழ் 3,7,4)

**ஆளியூர்தி**— துர்க்கை

**ஆளுடையதேவர், ஆளுடையபிள்ளையார்**— திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

**ஆளுடையவரசு**— திருநாவுக்கரசு நாயனார்

**ஆளுடையான்**—சுவாமி. ஆளுடையார் திருவனேகதங்காபதமுடைய மகாதேவர் (S.I.I.ii, 392)

**ஆறங்கம்**— (The Six Sciences auxiliary to the Veda) வேதாங்கம். (தேவா. 1159.1)

**ஆறாட்டு**—தீர்த்தவாரியுற்சவம். (குற்று. தல. வடவருவி. 37.)

**ஆறானனன்றாதை**— சிவன்

**ஆறிருகரத்தோன்**— முருகன் (பிங்)

**ஆறு**—1. சமயம்; சைவநல்லாறேங்க. (பெரியபு. சண்டேசு. 57) 2. சைனநெறி, (அ. செ. 22); 3, ஸ்திதிகரணம் என்ற ஆரும் உறுப்பு. (அ.செ.22),

**ஆறுகட்டி**—சைவர் காதிலணியும் உருத்திராக்க மணிவடம்

**ஆறுசூடி**—சிவன், (நல், பாரத' மருத்து,94)

**ஆறுநோன்பு**—(Mahammadan fast following peru-nal, and continuing for six days) மகமதியர் பண்டிகைகளுளொன்று (இ)

**ஆறுமுகன்**—முருகன், (சூடா.)

**ஆறெழுத்து**— ஷடக்ஷரம் ந மக் கு மா ரா ய. (திருமுரு. 186)

**ஆன்ம சுத்தி** — 1. (saiva) A spiritual experience of the soul in which the soul effaces itself and is established in Divine grace, one of taca-Kariyam. தசகாரியத்தொன்று.

2. Soul's realising Divine grace as its mainstay, one of panca-cutti, —பஞ்ச சுத்தியுள் ஒன்று (சை)

3. (Tantra) purification of the self of the worshipper consisting of proper bathing, pūta

cutti, pirāṇāyāmam, and various forms of niyācam.
தாந்திரிக பஞ்சசுத்தியுள்ஒன்று.

**ஆன்மஞானம்**— 1. ஆன்மாவைப்பற்றிய அறிவு, 2. ஆன்மாவின் அறிவு (சி,சி,6,8, சிவாக்,)

**ஆன்மதத்துவம்**— அசுத்ததத்துவம் (சை) (திருவால. கட்)

**ஆன்ம தரிசனம்**— தசகாரியத்தொன்று (சை) (சிவப், கட்,)

**ஆன்மபூ, ஆன்மயோனி**— 1. மன்மதன் 2. பிரமன்

**ஆன்மரூபம்**— தசகாரியத்தொன்று (சை) (சிவப். கட்)

**ஆன்மார்த்த பூசை**— தன்பொருட்டுத் தானே செய்யும் பூசை. இட்டலிங்க பூசை (சை)

**ஆனஞ்சு, ஆனைந்து**—பஞ்சகவ்வியம், ஆனஞ் சாடுமாதிரையனூர், (தேவா. 30,4.)

**ஆனதம்**— சைனரது கற்பலோகங்களு ளொன்று (ச)

**ஆனந்த கானம்**— காசி. ஆனந்தகானந் தொடுத்திங்குளவான சைவத்தானம்பலவும் (திருவிளை, கல்லானை. 8,)

**ஆனந்த தாண்டவம்**— நடராஜர் புரியும் நிருத்தம், (கோயிற்பு, பதஞ், 1,உரை)

**ஆனந்த தீர்த்தர்**— மத்துவாசாரியர்,

**ஆனந்தமயகோசம்**— Inner most or causal body, 'the sheath of bliss', one of pañca-Kosam
பஞ்ச கோசத்துள் ஒன்று (தத்) (சி' சி. பர. மாயா. 8.)

**ஆனந்தவல்லி**— தைத்திரிய உபநிடதத்தின் ஒரு பாகம்

**ஆனந்தன்**— சிவன். அத்தராநந்தர் (திருவாச, 17,3) அருகன், (சூடா)

**ஆனந்தான்மவாதி**— ஆன்மா ஆனந்தமடைவதே மோஷமென்று வாதிப்பவன் (சை)

**ஆனந்தி, ஆனந்தை**—பார்வதி உமாதேவி

**ஆனன்**—சிவன், (தேவா, 1029 2,)

**ஆனாயநாயனார்**— அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். (பெரியபு,)

**ஆனிலன்**— அனுமான்; பீமன் (பாரத, பதினெட். 181)

**ஆனைமுகன்**— விநாயகர் (சைவச, பொது, 500,)

**ஆனையுரித்தோன்**— சிவபிரான், (திவா,)

**ஆஸ்திகன்**— கடவுள் உண்டென்று நம்புவோர்

*******

# இ

**இ**— பிரமன், மன்மதன்

**இக்கர்**— (கரும்பினையுடையவர்) மன்மதன்

**இக்கரை**— பரமபதம். (திவ். பெரியாழ். 5,3,7)

**இக்கன்பட விழித்தோன்**— சிவன்

**இக்காமத்து**— Arab. Igamat 1. தங்கியிருக்கை ஓர் ஊரில் இக்காமத்து செய்பவன் அவசியம் நோன்பு வைக்க வேண்டும். (இ)

**இக்கி**— மன்மதன்

**இகன்மகள்**— துர்க்கை

**இகாமத்துத்தீன்**— இறைநெறியைக் கூடுதல் குறவின்றி முழுவாழ்விலும் லைநாட்டுதல் (இ)

**இகாமா**— தொழுகைக்கு எழுந்து நிற்குமாறு செய்யும் அறிவிப்பு (இ)

**இகா முத்திரபலபோக விகாரம்**— இம்மை மறுமைப் போகங்களில் வைராக்கியம் (தத்) (வேதா. சூ. பொது, 9, உரை)

**இகுலாசு**— மெய்ப்பக்தி (இ)

**இகுவான்**— Brethren fellow members of a religious community சகோதரர் (இ) (முஸ்லிமான் இகுவான்களே, நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள்.

**இச்சாசத்தி**— Siva's energy of will பஞ்ச சக்திகளுள் ஒன்று (சை) (சி. சி. பாயி. சத்தி வணக்கம், சிவாக்.)

**இசக்கி**— இசக்கியம்மன்

**இசக்கியம்மன்**— Name of a form of Durga, Worshipped in S. India துர்காபேதம்

**இசைஞானியார்**— அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.)

**இசைமகள்**— சரசுவதி. (பிங்.)

**இசைமறை**— சாமவேதம். (திவ். திருவாய். 8,9,9)

**இஞ்சீல்**— (The Gospel; The new Testament) விவிலிய நூலிற் புதிய ஏற்பாடு. (கி)

**இட்டதிட்டம்**— ஆப்தேஷ்டம் ஆகமேஷ்டம் சம்சாரேஷ்டம் மோக்ஷேஷ்டம் பிரத்திபிஞ்ஞானேஷ்டம் கருமபலசம்பந்தேஷ்டம் என்னும் ஆறு இஷ்டங்களும் லோகப்பிரவிருத்திருஷ்டம் புருஷப்பிரவிருத்தி திருஷ்டம் சாஸ்திரப் பிரவிருத்தி திருஷ்டம் என்னும் மூன்று திருஷ்டங்களும் (சு)

**இட்டலிங்கம்—** சீடனுக்கு ஆசாரியனாற் கொடுக்கப்படும் நித்திய பூசைக்குரிய ஆன் மார்த்தலிங்கம். (சைவ ச. பொது. 464)

**இட்டி—** யாகம். இட்டிகளும் பல வியற்றி. (காஞ்சிப்பு. கடவுள். 19.)

**இடங்கழிநாயானர்—** அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர் (பெரியபு.)

**இடபக்கொடியோன்—** சிவன் (Siva who has a bull on his bannar)

**இடபதரன்—** உருத்திரர்களுள் ஒருவர்

**இடபதீபம்—** கோயில் மூர்த்தியின் முன்பு எடுக்கும் அலங் கார தீபவகை

**இடபதீர்த்தங்கரர்—** முதல் சமண தீர்த்தங்கரர்

**இடபமாசேன்—** விரஷபசேன். (அ. செ. 141)

**இடபவாகனன்—** சிவன்

**இடபன்—** உருத்திரர்களுள் ஒருவர். (கல்லா. 7. மயிலே.)

**இடபாருடர்—** சிவமூர்த்தங் களுள் ஒன்று. பிரமகபாலத்தர் மறைபேசு மிடபாருடர். (திரு நெல். பு. அறம்வளர். 11.)

**இடிக்கொடியோன்—** இந்திரன்

**இருக்குத்திருத்துழாய்—** திரு மால் கோயிலில் மரியாதை யாகத் திருவடி நிலையினிடை யில் வைத்துக் கொடுக்கும் துளசி.

**இடும்பன்—** குமரக்கடவுள் கணத்தலைவன்

**இடைக்குலநாதன்—** கண்ண பிரான்

**இடைசூரி—** உருத்திராட்ச முத லியவற்றின் இடையிற்கோர்க் கும் மணி

**இடைநாழிகை—** கோயிலில் அர்த்த மண்டப மகாமண்டபங் கட்கு இடைப்பட்ட இடம். (T. A. S. 100)

**இத்திகாத்து—** நம்பிக்கை, நன்மை செய்தவனுக்கு மறுமை யில் நற்பயன் உண்டென்று முஸ்லிம் இத்திகாத்து கொள்ள வேண்டும் (இ)

**இத்திகாபு—** (Meditation in retirement; Silent devotion) தனித்திருந்து தியானிக்கை (இ)

**இத்திஹாதியா—** இறைவ னுடன் ஆன்மா கலத்தல் (இ)

**இஃதிகாப்—** மசூதியில் தங்கி முக்கியத் தேவைகளுக்கன்றி

வெளியே செல்லாமல் இறை நினைவில் ஆழ்ந்திருக்கும் வணக்கம். (இ)

**இந்திர சிறப்பு** — வைசுவ தேவம். உண்ணும் முன் செய்யும் பலியீடு. இந்திர சிறப்புச் செய்வோன். (மணி. 11, 88) (A religious ceremony performed before the midday meal, consisting of the offering of small portions of cooked food to Indra & other Gods)

**இந்திர புரோகிதன்**— தேவ குருவாகிய வியாழன். (சி. சி. பர. உலோகா 1)

**இந்திரர்**— தேவர். (புறநா. 182.)

**இந்திரலோகம்**— 1. சுவர்க்கம் 2. பரமபதம் இந்திரலோக மாளுமச்சுவை. (திவ். திருமாலை 2.வ்யா.)

**இந்திரவிகாரம்**— காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த ஒரு பௌத்த பள்ளி. (மணி. 26, 55.) புத்தன் ஆலயத்தில் இந்திரனால் நிருமிக்கப்பட்ட ஏழு அரங்குகள்.

**இந்திர விழவு**— இந்திரனைக் குறித்துச் செய்யும் ஓர் உற்சவம். (சிலப். பதி. 67)

**இந்திரன்**— தேவர் வேந்தன், பொன்னகர்ச் செல்வன். (திவா.); சினேந்திரர். (அ. செ. 151)

**இந்திராணி**— இந்திரன் மனைவி (சூடா.)

**இந்திராபதி**— திருமால். (பாரத. இந்திரப். 14.)

**இந்திரை**— இலக்குமி. (கம்பரா. இராவணன் வதை. 120)

**இந்திரைக்கு முத்தாள்** — மூதேவி. (சூடா.)

**இந்திரை கேள்வன்,**
**இந்திரை கோன்**— திருமால் (கந்தபு. திக்குவிசய. 89)

**இந்திரேசுவரர்**— இந்திரன் பெயரால் ஐராவதம் ஸ்தாபித்துப் பூசித்த சிவலிங்கப் பெருமானுடைய திருநாமம்.

**இந்து**—1. (Hindu, as one who professes Hinduism) இந்து மதஸ்தன் 2. சந்திரன். (திருவாச. 13,4)

**இந்துசிகாமணி,**
**இந்துசேகரன்**— சிவன் (திருவாச. 49, 7); (தேவா. 485 5)

**இந்துமோலி**— சிவபெருமான்

**இபநாதன்**— விநாயகன்

**இபாதத்து**— கடவுளுக்குச் செய்யவேண்டிய வணக்கம் (இ)

**இபுதார்—** நோன்புக்குப்பின் செய்யும் பாரணை (Breaking a fast) (இ) ரம்ஸான் நோன்பில் சூரியாஸ்தமனமானபின் இபு தார் செய்ய வேண்டியது.

**இமயவதி, இமயவல்லி—** பார்வதி (பிங்)

**இமயவில்லி—** சிவன் (Siva who took up Mt. Meru as his bow in a war with Asuras). (சீகாழித். சேட. 27)

**இமாசலை—** பார்வதி (உப தேசகா. திருமால். 33)

**இமாம்—** அணிவகுப்புத் தொழு கையின் தலைவர் (இ)

**இமாமத்—** பள்ளிவாசலில் தியா னத்தை ஆரம்பித்து நடத்து கை (இ)

**இமையவர்—** தேவர். (திவ். பெரியாழ் 4, 7, 4)

**இமையா முக்கண் இறைவன்—** சிவபெருமான்

**இமையார்—** தேவர். (குறள், 906)

**இயக்கர்—** பதினெண் கணத்து ளொரு கணத்தர். (கம்பரா. தாடகை. 26)

**இயக்கர் கோமான்—** குபேரன் (சூடா.)

**இயக்கர் வேந்தன்—** குபேரன் (பிங்)

**இயமம்—** வாழ்நாள் விரதம். (அ. செ. 102)

**இயக்கி—** தருமதேவதை. (பிங்.)

**இயல்பாகவே பாசங்களி னீங்குதல்—** சிவன் எண்குணத் தொன்று. (குறள், 9, உரை)

**இயல்புயம்—** (One of four principles of life according to Buddhism) நயங்கள் நான்கி னுள் ஒன்று (பௌ) (மணி. 30 218)

**இயலொழுக்கம்—** நல்லொழுக் கம் (ச)

**இயவுள்—** இறைவன் பெரி யோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள். (திருமுரு. 274) தெய்வம் (பிங்.)

**இயற்காட்சி—** நற்காட்சி (ச)

**இயற்பகை நாயனார்—** அறு பத்துமூவர் நாயன்மாருள் ஒரு வர் (பெரியபு.)

**இயன்ஞானம்—** நன்ஞானம் (ச)

**இயன்மகள்—** சரசுவதி (பிர மோத். 8, 20)

**இயேசு, இயேசு நாதர்—** இயேசு கிறிஸ்து நாதரின் இயற் பெயர் (கி)

**இரக்கை**— திருநீறு. இரக்கையெனும் பேராமிதற்கு (சைவச. பொது 204.)

**இரத்தபிக்ஷாடனம்**— பிக்ஷாடனராய்ப் புறப்பட்டு விஷ்ணுமூர்த்தியின் நெற்றியினைச் சூலத்தாற் கீறி நரம்பின்வழி ரத்த பிக்ஷையேற்ற பைரவத்திருக்கோலம்

**இரங்கேசன்**— அரங்கநாதன்

**இரசதகிரி**— கைலாசம் (அழகர் கல. 33)

**இரசதசபை**— மதுரையிலுள்ள நடராஜ சபை

**இரசலிங்கம்**— சிவலிங்க வகை (Linga made of mercury) (சைவச. பொது 81, உரை)

**இரசோகுணம்**— முக்குணத் தொன்று

**இரட்சணிய சேனை**— கிறிஸ்துவ சபையில் ஒரு பிரிவு (கி)

**இரட்சாமூர்த்தி**— திருமால்

**இரட்டை**— வேதமோது முறைகளுளொன்று. (சி. சி. 8.11, மறைஞா)

**இரண்டறக்கலத்தல்**— முத்தியடைதல் (சை)

**இரணபத்திரகாளி**— துர்க்கை

**இரண்ய கர்ப்பம்**— ஓர் யாகம்

**இரணிய கர்ப்பமதம்**— பிரமாவே முதற் கடவுளென்னும் மதம்.

**இரணிய கர்ப்பன்,**
**இரணிய கருப்பன்**—1. பிரமன் (பிங்) 2. கடவுளுடைய அவதாரங்களுள் ஒன்று. (வேதா. சூ. 41)

**இரத்த சாட்சி**— சத்தியத்தின் பொருட்டுக் கொல்லப்படுகை. (கி.) சத்தியத்தின் பொருட்டுக் கொல்லப்படுபவன் (கி)

**இரத்த சாமுண்டி**— துர்க்கா பேதம்

**இரத்தின சபை**— திருவாலங்காட்டு நடராஜசபை

**இரத்தினசிரசு**— 303 சிகரங்களையும் 50 மேனிலைக்கட்டுக்களையும் உடைய கோயில்

**இரத்தினத்திரயம்**— நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் (ச) (சீவக. 374, உரை)

**இரத்தினப் பிரபை**— எழுநரகத்தொன்று. (சீவக. 2817, உரை)

**இரத்தை**— பராசத்தி பேதம் (சைவச. பொது. 74, உரை)

**இரதாங்கபாணி**— திருமால்

**இரதி** — மன்மதன் தேவி. (கந்தபு. மோனநீங்கு. 1)

**இரதி காந்தன்**— காமவேள் (பிங்,)

**இரதிபதி, இரதிரமணன்,**

**இரமதி**— மன்மதன். (உரி. நி.)

**இரமாப்பிரியம்**— இலக்குமி

**இரமாபதி**— திருமால்

**இரமை**—இலக்குமி

**இரவுத்திரியம்**— சிவதீட்சை விளங்கு பிரவுத்திரிய முற்று வித்து (பிரமோத். 22, 69)

**இராக்கதம்**— உருத்திர புவனங் களுள் ஒன்று (சை)

**இராகதத்துவம், இராகம்**— அராகதத்துவம். சுத்தா சுத்த தத்துவங்களுள் ஒன்று. (சி. போ. பா. 2,2, பக். 155, புது.)

**இராகவன்**— இராமன். (திவ். பெருமாள், 8,1)

**இராசராசேச்சுவரி**— ராஜ ராஜேசுவரி, துர்காபேதம்

**இராதை**— கிருஷ்ணன் காத லித்த கோபிகைகளுள் ஒருத்தி

**இராப்போசனம்**— (Sacrament of the Lord's Supper) கிறிஸ் தவ சபையின் ஸமஸ்காரங் களில் ஒன்று (கி)

**இராமசந்திரன்**— இராமபிரான் (திருப்பு. 174)

**இராமதாபனி**— நூற்றெட்டு பநிடதங்களுள் ஒன்று

**இராமதூதன்**— அனுமான்

**இராமநாதர்**— இ ரா ம ரா ல் தாபிக்கப்பட்ட சிவலிங்கம் (சேதுபு.)

**இராம ரகசியம்**— நூற்றெட்டு பநிடதங்களுள் ஒன்று.

**இராமலிங்கம்**— இ ரா வ ண வதையில் நேர்ந்த பிரமஹத்தி நீங்கும்படி இராமமூர்த்தி பிர திட்டித்துப் பூசித்த சிவலிங்கம் —இது சேதுவிலுள்ளது.

**இராமன்**— 1. சந்திரன். (சங். அக) 2. பரசுராமன் 3. தசரத ராமன் 4. பலராமன்

**இராமாவதாரம்**— தசரதரா மனாக அவதரித்த திருமால் அவதாரம். நாயகன் தோற் றத்தினிடை நிகழ்ந்த விராமாவ தாரப்பேர். (கம்பரா. பாயி.)

**இராமானுசதரிசனம்**— விசிஷ் டாத்வைதம்

**இராமானுசம்**— வைஷ்ணவர் உபயோகிக்கும் ஒரு வகைச் செப்புப் பாத்திரம். தீபாரா தனத் தட்டு. (வை.) (கோ.த.)

**இராமானுசர்** — வைணவ ஆசாரியர். விசிஷ்டாத்துவைத ஸ்தாபனாசாரியர்.

**இராமிலன்**— மன்மதன்

**இராயப்பர்**— (St. Peter) பேதுரு என்ற கிறிஸ்தவப் பெரியார் (கி)

**இராவணன்**—கடவுள் (God as being without form) இராவணன்றனை யூன்றி யருள் செய்த விராவணன் (தேவா. 53, 11)

**இரியாசமிதி**— சிற்றுயிர்கள் காலில் மிதிபடாதபடி விலக்குவதற்காகத் துறவிகள் மயிற்பீலியினைத் தம்கையில் வைத்திருப்பர். இவ்வொழுக்கம் இரியாசமிதி எனப்படும். (சமணம் பக். 83)

**இருக்கன்**—பிரமன். தரை விசும்பைச் சிட்டித்த விருக்கன். (திருப்பு. 419)

**இருக்கு**— 1. வேதமந்திரம் 2. இருக்கு வேதம்

**இருக்கு வேதம்**— முதல் வேதம் (திவா.); (திவ். பெரியாழ். 5,1, 6)

**இருசமயவிளக்கம்**— சைவ வைணவ சமயங்களை ஆராயும் ஒரு நூல்

**இருடபத்துவசன்**— சிவன்

**இருடிகேசன், இருடீகேசன்**— திருமால் (திவ். திருவாய், 2, 7, 10)

**இருண்மலம்** — ஆணவமலம் (சிவப்பிர. 2, 1)

**இருத்து, இருத்துவிக்கு**— யாகபுரோகிதன். இருத்துவிக்கெனப்படு மன்னவர்க்கு (காஞ்சிப்பு. சிவா. 34)

**இருதலைமாணிக்கம்**— முத்தி பஞ்சாட்சரம் (சங். அக.)

**இருந்து திருக்கோலம்** — திருமாலின் வீற்றிருக்கும் இருப்பு

**இருந்தவளமுடையார்**— கூடலழகர் (திருமால்) (சிலப். 18, 4, அரும்.)

**இருப்புயிர்**— நரகருயிர். இருப்புயி ராகி வெந்து (சீவக. 3108) (ச). Souls that undergo purgation in hell, one of five classes of souls arranged according to spiritual purity.

**இருவினையொப்பு**— புண்ணிய பாவங்களில் சமபுத்தி செய்து விடுகை (சை) (சி.போ. பா. 8, 1 பக் 362, புதுப்.)

**இருஷிகேசன், இரேசன்**— திருமாலுக்கு ஒருபெயர்

**இரௌரவம்**— 1 (a Saiva scripture in Sanskrit, of a part of which the Tamil Civañana-

potam' is said to be a translation, one of 28 Civakamam) சிவாகமத்துள் ஒன்று. 2. ஒரு நரகம். (பிங்.)

**இலக்குமணன்**— இராமபிரான் தம்பி. (காஞ்சிப்பு. வீரராக. 8,)

**இலக்குமி**— திருமால் தேவி

**இலகுளீசன்**— சிவபிரான் அம்சமான ஒரு குருமூர்த்தம் (காஞ்சிப்பு. சிவபு. 20)

**இலட்சுமி**— திருமகள்

**இலம்போதரன்**— விநாயகன்

**இலயசக்தி**— இலயசிவனின் சக்தி (சை)

**இலயசிவன்**— The formless aspect of Siva in which He is united with the Energy of knowledge அருபசிவன் (சை)

**இலயதத்துவம்**— மகா சங்கார காலத்துத் தன் காரியங்களெல்லாம் ஒடுங்கிக் காரணமாத்திரையாய் நிற்கும் இறைவனிலை. (சை)

**இல்யம்**— ஞானமாத்திரமே திருமேனியாகவுடைய கடவுள் நிலை (சை)

**இல்ய முத்தி**—பரம்பொருளொடு இரண்டறக் கலத்தலாகிய முக்தி.

**இலயன்**— இலயசிவன் (ஞாஞசட்)

**இலளிதாங்கதேவர்**— இருஷப தீர்த்தங்கரரின் மூன்றாவது பிறப்பு (ச)

**இலளிதை**— பார்வதி. இலளிதை மாதினை. (காஞ்சிப்பு. திருவே. 5)

**இலாகுளம்**— சைவப்பிரிவுகளுள் ஒன்று. (திருக்காளத் பு. 30, 26)

**இலாபாந்தராயம்**— குறித்த பேற்றை இடைநின்று விலக்குங் கருமத்தடை (ச)

**இலாஹ்**— வணக்கத்திற்குரியவன்; இறைவனைக் குறிக்கின்ற சொல் (இ)

**இலிங்கங்கட்டி**— வீரசைவன்

**இலிங்கசரீரம்**— சூக்கும சரீரம் (தத்)

**இலிங்கசுத்தி**— இறைவன் சாந்நித்தியத்தைச் சராசரங்களிலும் பாவித்தல். பஞ்சசுத்தியுள் ஒன்று (சை)

**இலிங்கதாரி**— வீரசைவன்

**இலிங்கம்**—1. சிவலிங்கம். (திவ். திருவாய் 4,10,5) (Symbol of Siva in stone or other materials set up and worshipped) 2. பிரகிருதி (தத்)

**இலிங்கி—** சிவலிங்கபூசை செய்வோன்

**இலிங்கியர்—** அனுமானப் பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு வாதிக்கும் புறச் சமயத்தார். (அ.செ. 41)

**இலிங்கோற்பவர்—** சிவமூர்த்தங்களுள் ஒன்று

**இலுஹாம்—** மறைவான விஷயங்கள் தெய்வீகமாக வெளியாகை. (இ)

**இலேகர்—** தேவர். இலேகம் பரவ. (திருப்பு. 1127)

**இலைச்செப்பு—** பூசைப்பாத்திரவகை

**இலைத்தட்டு—** பூசைத்தட்டு வகை

**இளகல் உபயம்—** பெருமாள் வெளிமண்டபத்துக்கு எழுந்தருளும் போது பல்லாக்குடன்கீழே இறங்கி பிரசாதம் பணியாரம் அமுது செய்வது. (ஸ்ரீ. த.)

**இளங்கோயில்—** பாலாலயம். (T.A.S.i, 177)

**இளந்தெய்வம்—** (Minor, malignant deity) க்ஷீத்திர தேவதை. அணங்காடு மிளந்தெய்வமுன்று (திவ். திருவாய். 4,6,2)

**இளையநயினார்—** முருகக் கடவுள்

**இளைப்பாறுதல்—** நித்திய இளைப்பாறுகை. (Eternal rest) (கி.)

**இளையபிள்ளையார்—** முருகக் கடவுள்

**இளையபெருமாள்—** இலக்குமணன். (திவ். திருநெடுந். 21 வ்யா)

**இளையவன்—** முருகன். (திருவிளை. கடல்சுவற. 1)

**இளையாள்—** இலக்குமி (பிங்.)

**இறை—** கடவுள் இறைநிலை உணர்வரிது. (திவ். திருவாய், 1,3,6) சிவன் (பிங்) பிரமன் (பிங்)

**இறைக்காசான்—** முருகக் கடவுள்

**இறைசூதன்—** பிரமன். (பிங்.)

**இறைமகள்—** துர்க்காதேவி

**இறைமகன்—**விநாயகன். (பிங்)

**இறைமொழி, இறைவனூல்—** இறைவனருளிய ஆகமம்

**இறையான்—** சிவன். (திவ். பெரியதி. 5,1,8)

**இறையோன்—** 1. கடவுள். (திவ். திருவாய். 1, 3, 2.) 2. சிவன். (திவா.)

**இறைவன்**— கடவுள். இறைவன் மலரடி (பாரத. இராசசூ. 146) சிவன். (பரிபா. 11, 78 உரை) திருமால். (குறள். 610, உரை) பிரமன். (பிங்.)

**இறைவி**— 1. உமை (பிங்.) 2. துர்க்கை. (சிலப். 12. உரைப் பாட்டுமடை. உரை.)

**இன்மையின் உபயா வியா விருத்தி**— ஆகாசம் போல என வைதன்மிய திட்டாந்தம் காட்டப்படும் இடத்து, ஆகாசத்தைப் பொருளாகக் கொள்ளாத வாதிக்கு ஆகாசம் உள்பொருள் அன்று ஆதலால் சாத்திய தன்மமான அநித்தத்துவமும், சாதன தன்மமான மூர்த்தத்துவமும் மீண்டு நிற்றலும், மீளாது நின்று இயைதலும், இல்லையாய்க் குற்றமாதல். (மணி.)

**இஷ்டதேவதை**— உபாசனா தெய்வம்

**இஷ்டப்பிரசாதம்**— தேவப் பிரசாதம்

**இஷ்ராக் தொழுகை**— பொழுது புலர்ந்து பதினாறு நிமிடங்களுக்குப் பின் தொழப் படும் தொழுகை (இ)

**இஷா**— இரவில் தொழுகை (இ)

**இஸ்திக்பார்**— பாவங்களை மன்னிக்கும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்ளுகை. (இ)

**இஸ்லாம்**— 1. சமாதானம் (இ) 2. இஸ்லாம் மார்க்கம். (இ) 3. இறைவன் ஆணைக்கு அடி பணிதல். (இ)

**இஸ்லாம் மார்க்கம்**— முகமதிய மதம்

**இஹ்ராம்**— ஹஜ் பயணிகள் அணியும் தைக்கப்படாத இரண்டு வெள்ளுடைகள் (இ)

## ஈ

**ஈ**— பார்வதி, சரசுவதி, இலக்குமி

**ஈச்சுரதிரியாதிட்டாத்துரு**— (வேதாந்தம்) பிரமம் (ம.த.அ)

**ஈச்சுரம்**— சுத்த தத்துவங்களுள் ஒன்று. (சை) (சிவப். கட். 3)

**ஈச்சுரன்**— இறைவன், சிவன், மன்மதன்

**ஈச்சுரன் பஞ்ச கிருத்தியம்**— ஈச்சுரனுடைய ஐந்தொழில்கள் அவை. சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்பன (ம.த.அ)

**ஈச்சுவரை**— பார்வதி

**ஈசதத்துவம்**— சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று (சை)

**ஈசநந்தனர்**— விநாயகர்

**ஈசன்**—1. இறைவன். இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன்றன்னை. (திவ். பெரியதி. 2, 10, 1) 2. சிவன். ஈசன் கரியானனத்தான். (நள. காப்பு.) 3. பிரமன்

**ஈசன்மைந்தன்**— விநாயகன் (சூடா.) முருகன் (சூடா.) விரபத்திரன் (பிங்.)

**ஈசனைம் முகம்**—சிவன் முகம். (திவா.)

**ஈசாந்நியன்**— சிவன்

**ஈசாநப்பிரமம்**— சதாசிவ மூர்த்தி

**ஈசாநம்**— சிவனுடைய முகங்களுள் ஒன்று

**ஈசாவாசியம்**— நூற்றெட்டு பநிடதங்களுள் ஒன்று

**ஈசானம்**— 1. சிவனைம் முகத்தொன்று. (சிவதரு. பரிகா. 89) 2. ஒரு சைவ மந்திரம்

**ஈசானன்**— சிவன் (கூர்மபு. தக்கன்வே. 33) ; ஏகாதசருத்திரருள் ஒருவர் (திவா.)

**ஈசி**— பார்வதி

**ஈசுரச்செயல்**— கடவுள் செயல் (குமரே. சத. 64)

**ஈசுரதத்துவம்**— சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று (சை)

**ஈசுரம்**— சைவ தத்துவங்களுள் ஒன்று (சை)

**ஈசுரலீலை** — கடவுள் திருவிளையாடல்

**ஈசுரன்**— ஈசுவரன், சிவன்

**ஈசுவர அவிகாரவாத சைவம்**—(A Saiva Sect) அகச்சமயத்தொன்று

**ஈசுவர ஐக்கியவாதி**— நீரும் நீருஞ் சேர்ந்தாற்போல் ஆன்மாவுஞ் சிவனும் முத்தியில் இடண்டறக் கலந்திருக்கும் என்னும் மதஸ்தன் (ம.த.பே)

**ஈசுவரன்**— 1. கடவுள் 2.சிவன்

**ஈசுவரார்ப்பணம்**--கடவுளுக்கு உரியதாக்குகை

**ஈசுவரி**— பார்வதி

**ஈசுவரோபாஸ்தி**— கடவுள் வழிபாடு. (வேதா. சூ. 24, உரை,)

**ஈசை**— உமாதேவி

**ஈசோபநிடதம்**— தசோபநிடதங்களுள் ஒன்று

**ஈட்டுமன்**— காமன்

**ஈத்**— பெருநாள் (இ)

**ஈத்காஹ்**— முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுகூடி பெருநாள் தொழுகை தொழுகின்ற இடம் (இ)

**ஈதுல்பிதர்**— (Festival day after the close of Ramzan) நோன்பு முடிந்தபின் முதல்நாள் (இ)

**ஈது, ஈதுல்ஹா**—1. முகம்மதியத் திருநாட்களு ளொன்று 2. பக்ரீத் திருநாள் (இ)

**ஈமத்தாடி**— சிவன்

**ஈமான்**— இறைவன் ஒருவன் என்று நம்புவது (இ)

**ஈரவாடைத் தீர்த்தம்**— பெருமாளுடைய ஈரமான ஆடையைப் பிழிந்து கொடுக்கும் தீர்த்தம். நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டருளியதும் அந்த வஸ்திரத்தைப் பிழிந்து தீர்த்தம் விநியோகம் செய்து (தி.பி.அ)

**ஈறிலான், ஈறிலி**— கடவுள் (கந்தபு. திருக்கல். 22). (அக.நி.)

**ஈன்றாள்**— பார்வதி

**ஈன்றான்**— பிரமன். (அக.நி).

## உ

**உ**— சிவசக்தி, (திருமந். 1751) சிவன்; பிரமன்

**உக்கி**— தோப்புக்கரணம் (a form of Salutation, specially before Ganesa) (Loc)

**உக்கிரன்**— சிவமூர்த்தங்களுள் ஒன்று, வீரபத்திரன், (பிங்,)

**உக்கிரி**— துர்க்கை

**உகமகள்**— பூமிதேவி, உகமகள் நுதற்கண். (இரகு. திக்குவி, 208)

**உகாரி**— உருத்திர மூர்த்தி

**உச்சவம்**— விழா. (திவா·)

**உச்சி** — மோட்சத்தானம் (அ. செ. 160)

**உச்சிக்காலம்**— கோயிலின் மத்தியான பூசை

**உச்சிசந்தி**— உச்சிக்கால பூசை

**உச்சியார்**—தேவர், உச்சியார்க் கிறைவனும். (யாப்பு. வி. 86, பக்,315)

**உசூலுல் பிஃக்ஹு**— இஸ்லாம் மார்க்க வழிகாட்டி விதிமுறைகள் (இ)

**உஞ்சேனைமாகாளம்**— உச்சயினியிலுள்ள சிவாலயம்

**உட்கரணம்**— அந்தக்கரணம். புணருமுட் கரணமாக்கி. (சி.சி. 4.1)

**உட்கோயில்**— கோயிற் கர்ப்பக்கிருகம்

**உட்சபை**— கிறிஸ்தவசபையில் இராப்போசனப்பந்தியிற் சேர்ந் தார் கூட்டம் (கி)

**உட்சபையான்**— நற்கருணை யிற் சேர்ந்த கிறிஸ்தவன் (கி)

**உட்சமயம்**— வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசு பதம், சைவம், (சை)

**உடம்பிடி**— வேலாயுதம். உடம் பிடித் தடக்கை, (பெரும்பாண். 76.)

**உடலிருந்தவீடு**— சீவன்முத்தி. (ஞானவா. ஞானவிண். 36)

**உடலிலான்**— மன்மதன்

**உடலிறந்தவீடு**—விதேகமுத்தி. (ஞானவா. ஞானவிண். 36)

**உடையநம்பி**— சுந்தரமூர்த்தி நாயனார்

**உடையபிள்ளையார்**— திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

**உடையவர்**— 1.சுவாமி,உடை யவர் கோயில், (பெரியபு. திரு ஞான. 664) 2. ஆன்மார்த் தலிங்கம் 3. இராமானுசர். (ஈடு 10, 7, 1)

**உடையவரசு**— திருநாவுக்கரசு நாயனார்

**உடையார்**— சுவாமி. S,I,I,ii, 306)

**உடையார் சாலை**— கோயிலின் அன்னசாலை, சிவ யோகிகள் பதின்மரும் உடை யார் சாலையிலே உண்ணக் கடவர், (S,I,I,ii, 133)

**உடையாள்**— உமாதேவி

**உடையான்**— சுவாமி (சி போ. அவையடக்கம், சிற்)

**உண்டுறையணங்கு**— நீருண் ணுந் துறையிலுள்ள தேவதை. (ஐங்குறு. 28,)

**உண்டைக்கட்டி**— கோயில் வில்லைப் பிரசாதம்

**உண்ணாநோன்பி**— குறித்த காலங்களில் பட்டினிவிட்டுண் ணுஞ்சைன முனிவன். (ச)

**உண்ணாமுலை**— திருவண் ணாமலையில் எழுந்தருளியிருக் கும் அம்பிகை. (தேவா. 1025. 1)

**உண்ணாழிகை**— கர்ப்பக் கிருகம், (தேவா, 592,3)

**உண்ணாழிகையார்**— கர்ப்பக் கிருகத்தில் வாழுங் கடவுள். (தேவா, 592,3)

**உண்ணாழிகையுடையார்** — கர்ப்பக்கிருகத்தில் கைங்கரியஞ் செய்வோர், (S,I,I,i,115)

**உண்ணாழிகை வாரியம்**— கோயில் விசாரணைச்சபை (I.M P.Cg 205)

**உண்மடை**— கோயிற்குள்ளிடும் படைப்பு

**உண்மையின் பயா உவியா விருத்தி**— உள்ளதாகியபொருள் ஒன்றில் சாத்திய சாதனதன்மங் களின் மீட்சித் தன்மங்கள் பொருந்தாதபடி வைதன்மிய நெறிக்கு உரிய திட்டாந்தம் உரைத்தல், (மணி.)

**உத்தர சைவம்**— சித்தாந்த சைவம். (சி,சி,8,13, சிவாக்.)

**உத்தரன்**— சிவன், திருமால்

**உத்தி**— சீதேவியுருவம்பொறித்த தலையணி. (திருமுரு, 23)

**உத்திட்ட பிண்டன்**— வீடு, மனைவி, மக்களைத் துறந்து, பெருந்துறவியை அடைந்து நோன்பு இருப்பவன். (அ,செ, பக், 122)

**உத்திட்டன்** — உத்திட்ட பிண்ட விரதி என்னும் பதினோ ராவது சிராவகன் (அ. செ. 172)

**உத்தியுத்தன்**— அருவுருவத் திருமேனிகொண்ட சிவன், (சை) சி,போ,பா, 1,1)

**உத்துளம், உத்தூளனம், உத்தூளி**— விபூதியை நீரிற் குழையாது வரியின்றிப் பூசுகை. (தணிகைப்பு, இராம, 22,)

**உததிசுதை**— இலக்குமி

**உதன்**— சிவன்

**உதிர்ப்பு**— (நிர்ச்சரை), இரு வினைகள் உயிருடன் சேராதப்படி தடுத்த பிறகு துய்த்துக் கழிக் காமல் உயிரின்பால் எஞ்சி நிற்கும் வினைகளை நீக்குதல், (சமணம், பக், 43)

**உந்திபூத்தோன், உந்தியான் உந்தியில் வந்தோன், உந்தி யிலுதித்தோன்**— பிரமன்

**உப்புச்சாறு**— இரவில் நாச்சி யார் அமுது செய்யும் மிளகுக் குழம்பு (ஸ்ரீ.த) அமிர்தம் (வை)

**உபகற்பம்**— காட்டுத்தீ முதலிய வற்றால் வெந்த சாம்பலைக் கொண்டு முறைப்படியமைத்த விபூதி (சை) (சைவச. பொது. 183)

**உபகேசி**— 1. பார்வதி 2. நப் பின்னை, (வள்ளுவமா. 21)

**உபசம்பந்நபதம்**— துறவி நிலை நான்கனுள்ஒன்று(பௌ)

**உபத்தானம்**— சந்தியாவந்தன முடிவிற் செய்யும்மந்திரத்துதி. காயத்திரி செவியா வுபத்தானத் தின்றெழில் முடிக்க, (கூர்மபு. நித்தியகன். 6)

**உபதிருஷ்டா**— புரோகிதன். (சீவக. 2362, உரை)

**உபதேசகலை**— மதத்துவ போதனா முறை (சை) (சி.சி. அளவை. 13. சிவாக்)

**உபதேசப்பஃறொடை**— தட் சிணாமூர்த்தி தேசிகரியற்றிய ஒரு பண்டார சாத்திரம்.

**உபதேசம்—** ஞானபோதனை. சி,போ. 3, 6, சிற், பக், 76)

**உபதேசரத்தினமாலை—**மண வாளமாமுனிகளியற்றிய ஒரு வைணவ சம்பிரதாய நூல்

**உபதேசவெண்பா—** அம்பல வாண தேசிகரியற்றிய ஒரு பண்டார சாத்திரம்

**உபநிடதம்—** 1. Upanisad, Philosophical writings forming part of the Vedas வேதத்தின் ஞான காண்டம். (பிங்)
2. Veda — வேதம் (கலிங். கடவுள். 5)

**உபநிஷத்து—** இறைவனைக் குறித்துத் துதிக்கும் வேதபாகம்

**உபபோகாந்தராயம்—** அனு பவித்தற்குரிய பொருள்களை விலக்குவதாகிய கருமம் (ச).

**உபமன்னியு—** ஒரு சைவரிஷி (A Saivite rsi, the reputed author of the Upamanyu- bhakta- vilasa, a skt. work relating the stories of the 63 Saiva - Saints)

**உபய அசித்தம்—**சாதனமாகிய ஏது வாதி பிரதிவாதிகளாகிய இருவர்க்கும் சாதனமாதலின்றி இருத்தல். (மணி.)

**உபயதன்ம விகலம்—** வாதி யால் காட்டப்பட்ட திட்டாந் தத்தில் சாத்தியத்தின் தன்ம மும், சாதனமாகிய ஏதுவின் தன்மமும் ஆகிய இரண்டும் குறைவுபடுவது; சாதன்மிய திட் டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; இது சன்னு, அசன்னு என இருவகைப்படும். (மணி.)

**உபயபாரதி—** சரசுவதி அம்ச மானவள்

**உபயம்—** கோயில் முதலியவற் றிற்குக் கொடுக்கும் தருமம். (S.I I.iii, 209.)

**உபயவிபூதி —** லீலாவிபூதி நித்திய விபூதிகள் (வை) (ஈ.டு, 6.1.8) Worldly happiness and Eternal bliss)

**உபயவேதாந்தம்—** வடமொழி தென்மொழி வேதங்களின் முடிவு (வை)

**உபயவேதாந்தாசாரியர் —** உபயவேதாந்தங்களிலுந் தேர்ந்த வைணவருக்கு வழங் கும் ஒரு பட்டப்பெயர். (வை)

**உபயா வியா விருத்தி—** வை தன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; வாதி காட்டும் வைதன்மிய திட்டாந்தத்தி லிருந்து சாதன சாத்தியங்களின் தன்மம் இரண்டின் மறுதலைத் தன்மங்கள் பொருந்தா தொழி வது. இது உண்மை, இன்மை என இரு கூறுபடும். (மணி)

**உபயை கதேச விருத்தி** — (உபய ஏகதேச விருத்தி). கூறப் படும் ஏது சபக்கவிபக்கம் இரண் டினுக்கும் உரியதாய் ஒவ் வொன்றினும் ஒருபுடை ஒத்தி ருத்தில். (மணி).

**உபரிபாகம்**— வேதாந்தம் உப ரிபாகப்பொருள். (பதிஞெ. திரு நாவுக். 1).

**உபவாசகாலம்**— 1. பட்டினி யாயிருக்கும் விரதகாலம் 2. தபசுகாலம் (Lent) (கி)

**உபவாசி**—பட்டினி நோன்பிருப் பவன். (உபநி-16)

**உபவீதம்**— பூணூல். (பிங்)

**உபவேதம்**— நான்கு வேதங்க ளையடுத்து மதிக்கப்பெறும் ஆயுர் வேதம் முதலிய நான்கு வேதங்கள். (திருக்காளத். பு. 29, 38)

**உபஸ்தானம்** — மந்திரத்தோடு வழிபடுகை

**உபாகமம்**— 1. மூலாகமங்களின் வழித்தோன்றிய சைவ ஆகமங் கள் (சை). (சைவச. பொது. 336. உரை) 2. பழைய ஏற் பாட்டில் ஐந்தாவது புஸ்தகம் (கி)

**உபாசனை** — வழிபாடு. இரு வேருகு முபாசனை (விநாயகபு. 83, 67.)

**உபாதாயவுரு** — வலி இரதம் வன்னம் கந்தம் என்று நால் வகைப்பட்ட உருவவகை (பௌ.)

**உபாம்சு**— தனது செவி கேட்க வாய்க்குள் செபிக்கை. சிவமந் திரத்தை வாசகமாகத்தான் உபாம்சுவாகத்தான் மானசமா கத்தான் செபிப்பது. (சி.சி.8, 23, சிவாக்.)

**உபாய கௌசல்ய பாரமிதை** பௌத்த நெறிக்கு ஏனையோரை மாற்றுவதற்குரிய மார்க்கங்களில் வல்லமை பெற்றிருத்தல் இதன் பாற்படும். (பௌத்தம்.பக்.26.)

**உபாயபாரமிதை** — தசபாரமி தையுள் ஒன்றான உபாயம் (பௌ). (A transcendental virtue, characteristic of the Buddha.)

**உபாயநிட்டை**—எளிதிற் சித்தி யடையும் வழியிலூன்றி நிற்கை. (சி.சி.9,8, மறைஞா. அவ.)

**உபாயநிட்டை வெண்பா** — பண்டாரசாத்திரங்களுள் அம்ப லவாணர் இயற்றிய நூல்

**உபாயஸ்வரூபம்**— (Nature of the path to final bliss, which of five kinds, viz. கரும, ஞான, பக்தி, பிரபத்தி, ஆசாரியாபிமானம், one of artha-pañcakam) (வை.) மோட்சத்தைப்பெறும் வழியின் தன்மை. (அஷ்டாதச.பக்.25.)

**உபானம்**— கோபுரத்தின் அடிச் சித்திரவரை. (T.A.S.i, 180)

**உபாஸ்தி**— வழிபாடு

**உபூதிய்யத்**—இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல்; இறைவனுக்கு அடிமையாக வாழ்தல் (இ)

**உபேந்திரன்** — இந்திரனுக்குத் தம்பியாக அவதரித்த திருமால். (தணிகைப்பு. விடை. 18)

**உம்பர்**— 1. தேவர். (திவ். பெரியதி. 7,8,10) 2. தேவலோகம் (நாலடி. 37)

**உம்பர்கோன்**— இந்திரன் (திவ். பெரியதி. 5,4,5.)

**உம்பரார்** — தேவர். (சீவக. 1678)

**உம்பருலகு** — தேவலோகம். (திருவாலவா. பயன்மு.5)

**உம்மத்தே முஸ்லிமா**— இறைவனுக்கு அடிபணிந்து வாழும் சமுதாயம் (இ)

**உமர் பாரூக் (ரலி)**— இஸ்லாமிய அரசின் தலைவர் இரண்டாம் கலீபா (இ)

**உமறுப்புலவர்** — சீறாப்புராணம் பாடிய முகமதியப்புலவர்

**உமாசுதன்**—கணேசன், கந்தன்

**உமாபதி**— சிவன். (திவா).

**உமாபதிசிவாசாரியர்** — சந்தான குரவருள் ஒருவர்

**உமாமகேச்சுரம்**— ஒரு விரதம். (பிரமோத். உமாம. 17)

**உமாமகேசன், உமாமகேசுவரன், மேசன்**— சிவன்

**உமைகரநதி** — பார்வதியின் கையிலிருந்து வருவதாகிய கங்கை. (பிங்.)

**உமைமகன்** — வீரபத்திரன். (பிங்.)

**உமையவள், உமையாள்**— பார்வதி. (கந்தபு. தவங்காண். 8); (திருவாச.33. 1.)

**உய்யவந்த தேவ நாயனார்** சைவசித்தாந்த சாத்திரங்களுள் திருவுந்தியார் இயற்றியவர்.

**உயர்ந்தோர்**— தேவர். வேள்வி வேட்டனை யுயர்ந்தோர் உவப்ப (பதிற்றுப் 74.)

**உயர்நிலை**— தெய்வத்தன்மை அணங்குசாலுயர்நிலை. (திருமுரு 289.) தேவலோகம்

**உயிர்க்குயிர், உயிருளுயிர்**— கடவுள், சிவன்.

உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன் கோயில் (தேவா. 575,4.)

**உயோகு துயில்** — யோகநித்திரை. ஆலினிலை யதன்மேல் பைய உயோகுதுயில் கொண்ட பரம்பரனே. (திவ். பெரியாழ். 1.5.1)

**உரவர்** — சமணர்

**உரவன்** — அருகன்

**உரு** — விக்கிரகம். தேவதார்ச்சனை தாம் பண்ணல்போ லுருப் பல பரப்பி (பிரபோத. 11,12)

**உருக்குமணி, உருக்குமிணி** — கண்ணபிரான் தலைமைத் தேவி. (பாகவத.)

**உருத்திரகணம்** — சிவ கணம் சிவனடியார். உருத்திரகணப் பெருமக்கள். (I.M.P.)

**உருத்திரகணிகை** — சிவன் கோயிற்றாசி. கோயிற்பணிப் பெண். (பரத. ஒழிபி.29.உரை.)

**உருத்திர கன்னியர்** — உருத்திரகணத்தைச் சேர்ந்த மகளிர். (காஞ்சிப்பு. சார்ந்தாசயப். 36.)

**உருத்திரகிரந்தி** — மூலாதாரமும் சுவா திட்டானமும். (ஆ. நி.)

**உருத்திரசமகநய** — உருத்திரனைச் குறித்துக் கூறும் வேத மந்திரவகை

**உருத்திர சாதனம்** — உருத்திராக்கம். உவந்துபூணி னுருத்திர சாதனம். (திருவாலவா. 38, 29).

**உருத்திரசூத்தம்** — உருத்திரனைப் புகழ்ந்துகூறும் ஒரு வேத மந்திரம்

**உருத்திரபசுபதி நாயனார்** — அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**உருத்திரபூமி** — மயானம் (Burning ground where Siva is said to dance)

**உருத்திர முடிச்சு** — பூணூல்

**உருத்திரவிருதயம்** — நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**உருத்திரன்** — 1. சிவன். (திவா) 2. சிவகணத்தோன். (கந்தபு. ததீசிப். 45) 3. சிவகுமாரன். (கந்தபு. ததீசிப் 45.) 4. அக்கினிதேவன். (கந்தபு. ததீசிப்.45.) 5. ஏகாதசருத்திரருள் ஒருவன். (திவா).

**உருத்திராக்கம்** — உருத்திராக்க மரத்தின் மணி. (திருவானைக். கோச்செங். 49.) 2. சிவசின்னங்களுள் ஒன்று. சிவபெருமான் திருக்கண்ணில் தோன்றிய மணி என்று பொருளாகும். திரு அருட்பேற்றிற்கு அடையாளமாய் விளங்கும். (சைவசமயம் பக். 98)

**உருத்திராட்சகண்டி, உருத்திராட்ச கண்டிகை**— உருத்திராக்கமாலை

**உருத்திராட்ச சாபாலம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**உருத்திராட்சம்**— உருத்திராக் கமணி

**உருத்திராணி** — சத்தமாதரி லொருத்தி, துர்க்கை, பார்வதி

**உருத்திராரி**— மன்மதன்

**உருத்திரை**— உமை. (பிங்.)

**உருநாட்டு**— விக்கிரகம் (ச)

**உருப்பிணி** — உருக்குமிணி (திவ். திருவாய், 7,10,6,)

**உருமுத்துவசன்**— இந்திரன். உருமுத்துவச மைந்தன். (பாரத புட்பயா. 128.)

**உருமேனி**— பரமேசுவரன் உயிர் கள் தங்கண்ணாற் காணும்படி யெடுக்குஞ் சகளவடிவம். உரு மேனி தரித்துக்கொண்ட தென் றலும். (சி,சி. 1,55.)

**உருவசி**— ஊர்வசி. (மச்சபு. அகத்தியர்பூ. 17.)

**உருவம்**— பஞ்ச கந்தங்களுள் ஒன்று (பௌ.) ஓங்கிய வுருவ மோடும். (சி.சி. பர.சௌத்.30)

**உருவிலாளன், உருவிலி**— மன்மதன் (மணி. 5, 6)

**உருஸ்**— திருவிழா (இ) நாகூர் உருஸுக்குப் போக வேண்டும்.

**உரை**— பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசக செபம். (சைவச. பொது. 151.

**உரைக்கிழத்தி**— சரசுவதி (திருக்காளத். பு.பதி.3)

**உலக அறவி**— காவிரிப்பூம்பட் டினத்தில் சக்ரவாளக்கோட் டத்திலுள்ள சம்பாபதி கோயி லின்முன்பு அமைந்திருந்த தரு மசாலை. (மணி.)

**உலகசயன்**— புத்தன்

**உலகநாதன்**— கடவுள்

**உலகநோன்பிகள்** — சைன பௌத்தரில் இல்லறத்தார். உலக நோன்பிக ளொருங்குட னிட்ட - (சிலப். 10, 24.)

**உலகநோன்பு**— துறவாது விர தங்காக்கை. உலக நோன்பின் உயர்ந்தோய். (மணி. 5, 99)

**உலகபாரணன்**— திருமால்

**உலகமளந்தான்**— திருமால் (திவ். பெரியாழ். 1,3,2,)

**உலகமாதா**— 1. சரசுவதி. (திவா.) 2. உமை.

**உலகமீன்றாள்**— பார்வதி

**உலகமுண்டோன்**— திருமால். (பிங்.)

**உலகமூடம்**— வரைபாய்தல், தீக்குளித்தல், ஆறுஆடல்முதலாயின, (மூடம், அறியாமை, அ, செ, பக், 49)

**உலகேடணை**— உலகவிஷயங்களிற்கொள்ளும் ஆசை (தத்)

**உலாப் பாட்டு**— பெருமாள் வீதி எழுந்தருளும்போது பாடும் பாட்டு (ஶ்ரீ.த.)

**உலாமா**— முகம்மதிய குரு (இ)

**உலோகதருமிணி**— போககாமிகட்குச் செய்யப்படுவதான சபீசதீட்சை வகை (சை)- (சைவச, ஆசாரி. 62, உரை.)

**உலோகபாலர்**— அஷ்டதிக்குப் பாலகர். (திவ், பெரியாழ். 5, 2. 9)

**உலோகாயதம்**—சார்வாகமதம்; காட்சியை அளவு என்றும்; நிலம், நீர், தீ, வளி. எனப்பூதம் நான்கே என்றும்; அவற்றின் சேர்க்கையால் தோன்றிப்பிரிவால் மாய்வதாகிய உடம்பினிடத்தே அறிவு, மதுவில் களிப்புப்போல வெளிபட்டு அழியும் என்றும்; மறுமைஇல்லை என்றும் சரீரமே ஆன்மா என்றும்; கடவுள் இல்லை என்றும்; இன்பமும் பொருளுமே புருஷார்த்தங்கள் என்றும் சொல்லும் மதம், இதன் ஆசிரியர் பிருகஸ்பதி. (மணி.)

**உலோச்சு**— தம் தலைமயிரைத் தம்கையாற் பறிக்கை (ச)

**உலோபமுத்திரை**—அகத்தியர் மனைவி. தொல். பாயி. உரை.)

**உலோலை**—இலக்குமி

**உவணகேதநன், உவணமுயர்த்தோன், உவணவூர்தி**— திருமால் (சூடா)

**உவணை**— தேவலோகம். ஆகநீத் துவணைமே லுறைந்தான், (சேதுபு. விதூம. 54.)

**உவவனம்**— உபவனம், உண்டாக்கப்பட்ட வனம். ஆராமம் சோலை; காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்திருந்த இச்சோலையில் புத்தனது பாத பீடிகை உள்ள ஒரு பளிக்கறை மண்டபம் விளங்கியது. (மணி)

**உள் சாத்து**— பெருமாளுக்கு சாத்தும் சிறு வஸ்திரம். (ஶ்ரீ.த)

**உளிஞை**— கோபுர வாயில்

**உளூ**— தொழுவதற்காகத் தண்ணீரால் உடலைத் தூய்மை செய்தல். (இ)

**உற்காதா**— யாகஞ்செய்யும் ஆசிரியருள் ஒருவன். பிரமனுற்காதா. (மச்சபு. சந்திரோ. 12).

**உற்சர்ப்பிணி**— வாணாள் போகம் முதலியவை பெருகுங் காலம். (ச) (குறள், 361, உரை.)

**உற்சவபேரம்**— உற்சவ விக்கிரகம். (Loc.)

**உற்சவம்**— கோயில் திருவிழா. சிவன்றனு ற்சவத்தினும். (சைவச. பொது. 346.)

**உற்சவர்**— உற்சவத்தில் எழுந்தருளும் விக்கிரகம்

**உற்பலவரை**— திருத்தணிகை மலை. உற்பலவரையின் வாழ்வோர். (கந்தபு, வள்ளி, 228.)

**உறுவர், உறுவரர்**—தேவர், உறுவரர் பலிசெல. (சீவக. 2282.)

**உறுவன்**— அருகன், (பிங்,)

**உஸ்மான் (ரலி)**— இஸ்லாமிய அரசின் தலைவர் மூன்றாம் கலீபா (இ)

## ஊ

**ஊ**— சந்திரன், சிவன்

**ஊர்த்த சைவம்**— சைவம் பதினாறனுள் ஒன்று. (அபி. சிந்.)

**ஊர்த்தரேதஸ்**— ஏகாதச ருத்திரருள் ஒருவன்

**ஊர்த்துவதாண்டவம்**— மேலே ஒரு பாதத்தைத்தூக்கியாடும் நடனம்

**ஊர்த்துவதேவன்**— திருமால்

**ஊர்த்துவநிருத்தம்**— 1. ஊர்த்துவதாண்டவம் 2. ஒரு கால் மேனோக்கி நிற்க அதனை ஒரு கைகொண்டுகட்டி ஒரு காலி னிற்கை. (சை)

**ஊர்த்துவ புண்டரம்**— 1. சைவருள் ஒரு சாரார்சூலத்தினால் நெற்றியில் திருநீறு அணியும் குறி. 2. வைணவ சமயத்தார் திருமண் முதலியவற்றால் நெற்றியிலே லம்பரேகையாகத் தரிக்கும் ஒருகுறி (ம.த. அ)

**ஊர்த்துவமாயை**— சுத்த மாயை (சை), ஒன்றுதானே ஊர்த்துவமாயை. (சி.போ.சிற். (2, 2,3)

**ஊர்த்துவமுகம்**— மேனோக்கின முகம். சிவன் ஐந்துமுகத்துளொன்று. (சைவச, பொது, 338. உரை)

**ஊரன்**— சுந்தரமூர்த்திநாயனார். (பெரியபு.)

**ஊழ்**— பழவினை பழவினைப் பயன். (குறள். 380)

**ஊழிமுதல்வன்**— கடவுள், ஊழி முதல்வன் உருவம்போல், (திவ். திருப்பா. 4)

**ஊற்று**— செய்யும் புண்ணிய பாவங்களுக்கேற்ப உயிரில் நல்வினை, தீவினைகளை அடைவது ஊற்று எனப்படும், (சமணம். பக், 37.)

**ஊனக்கண்**— பசுஞானம். ஊனக்கண் பாசமுணராப் பதியை. (சி,போ, 9.1.)

## எ

**எகினப்பாகன் எகினன்**— பிரமன், (கூர்மபு.யுகதன்ம.27) எகினனை உதவிய கருமுகில். திருப்பு. 609)

**எச்சன்**— 1. யாகஞ்செய்வோன் (தேவா. 596, 9) 2. யாகதேவதை. (கந்தபு, யாகசங், 38.) 3. திருமால்

**எட்டக்கரம்**— அஷ்டாக்ஷரம் (A Mantra or prayer of eight syallables in honour of Visnu) அரங்கன் எட்டக்கரமே. (அஷ்டப். திருவரங்கத். 27.)

**எட்டுக்கொண்டார்**— அட்ட மூர்த்தமுடைய சிவபெருமான்

**எட்டு மூர்த்தி**— சிவன் (Siva - who is manifest in eight forms. viz. the five elements-Sun, Moon and Sacrificer) (தேவா, 1202, 8.)

**எண்கண்ணன்**— பிரமன், (திவா.)

**எண் குணங்கள்**— இறைவனுடைய எட்டு குணங்கள் அவை தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவேபாசங்களின் நீங்குதல், பேர் அருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன.

**எண் குணத்தான்**— கடவுள். எண்குணத்தான் தாளை. (குறள். 9.)

**எண் குணன்**— 1. அருகன் (திவா.) 2. சிவன், (பிங்.)

**எண்சிறப்புள்ளோன்**— அருகன். (சூடா.)

**எண்டோளன்**— சிவன், (பிங்)

**எண்டோளி**— 1. காளி, (திவா) 2, துர்க்கை. (திவா.)

**எண்ணாயிரவர்**— சமணரில் ஒரு தொகுதியார். (பெரியபு. திருஞா, 855.)

**எண்ணில் கண்ணுடையோன்**— புத்தன், (சூடா.)

**எம்பிராட்டி**— எங்கள் தலைவி. (திருவாச. திருவெம். 16)

**எம்பிரான்**— எம் ஆண்டவன். (திவ், பெரியதி, 10,3,2)

**எம்பெருமானார்**— இராமானு சர். (அஷ்டப், ஊசல், 18)

**எமதருமன்**— இயமன். (தாயு. சிற்சு. 10)

**எமரன், எமராசன்**— எமன் (பெருங், உஞ்சைக், 37, 201.

**எரிபரல்வட்டம்**— எழுநரகத் தொன்று, (பிங்,)

**எரிபிடாரி**— உக்கிரமாகாளி. (T.L)

**எரியாடி**— அழலே ஏந்தியாடுப வராகிய சிவன். எரியாடி தென் றில்லே, (திருக்கோ, 127.)

**எரியோன்**— அக்கினிதேவன், ஒள்ளெரியோனும், (கம்பரா, இலங்கையெரி. 64)

**எருமையூர்தி**— எமன். (சூடா.)

**எல்லம்மன்**— ஒரு கிராமதே வதை, (Loc)

**எல்லவன்**— 1. சூரியன் (பாரத பதினெட், 119); 2, சந்திரன், (அக.நி)

**எல்லார்**— தேவர், பனிவானத் தெல்லார். சீவக, 364,)

**எழுத்தின் கிழத்தி**— சரசுவதி, (பிங்).

**எழுந்தருளுந் திருமேனி**— எழுந்தருளுநாயகர். (S,I,I.ii.127

**எழுந்தருளுநாயகர்**— உற்சவ மூர்த்தி

**எழுநயம்**— சப்தபங்கிநியாயம் (ச)

**எழுநரகம்**— 1. ஏழுவகையான நரகங்கள், (திவ், இயற். 1,87) 2. பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம், எரிபரல் வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், பெருங்கீழ்வட்டம் இருள்வட்டம் (ச)

**எழுநா**— ஏழு நாவையுடைய தாகிய அக்கினி, (திவா.)

**எறிபத்தநாயனார்**— அறு பத்து மூவர், நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**எறிபாவாடை**— தெய்வங் களுக்கு முன்னும் பெரியோர் முன்னும் வீசும் பாவாடை விருது. (கோயிலொ. 88.)

**எறிமணி**— சேகண்டி, (பிங்)

**என்பாபரணன்**— சிவன்

# ஏ

**ஏ**— சிவன், திருமால்

**ஏஎ**— சாமவேதம். ஏஎ இன கிளத்தலின், (பரிபா, 3,62)

**ஏககுண்டலன்**— குபேரன், பலராமன், ஆதிசேடன்

**ஏகசாதனன்**— திருமால்

**ஏகதண்டர்**— அத்வைத சந் நியாசிகள் (தி.பி.அ.)

**ஏகதண்டி**— ஒற்றைக்கோல் தரிக்குஞ் சன்னியாசி. (குருபரம் ஆரு. 92)

**ஏகதந்தன்**— விநாயகர் (ஒற்றைத் தந்தத்தையுடைய வர்.) (பிங்.)

**ஏகதீரீத்துவம்**— ஒன்றில் மூன்று தத்துவங்கள் உள்ள நிலை (கி) (Unity in trinity)

**ஏகதேவன்**— 1. கடவுள் 2. புத் தன் 3. சிவன். (திவா.)

**ஏகநாயகன்**— 1, திருமால் 2. ஏகநாதன். (பிரபோத, 28,2.)

**ஏகபாத திரிமூர்த்தி**— மும் மூர்த்தி முதலாய தேவர்களுக் கும் பிறப்பிடமாய்த்தனித்து நிற்குஞ் சிவன் (ம.த.அ)

**ஏகபாதமூர்த்தி**— சிவன் (சத்தி சிவத்தில் ஒடுங்கிய திருக் கோலம்)

**ஏகபாதர்**— ஒற்றைத்தாளர் ஆகிய சிவமூர்த்தம்

**ஏகபாதாதனம்**— யோகாசன வகை(சை

**ஏகம்பன்**— காஞ்சீபுரத்தில் கோயில் கொண்ட சிவபெரு மான். (தேவா. 1039,7)

**ஏகன்**— கடவுள், சிவன், (திரு வாச. 1,5.)

**ஏகாங்க நமஸ்காரம்**— தலை வணங்கிச் செய்யும் நமஸ்காரம். (சங். அக.)

**ஏகாங்கி**— திருமாலடியாருள் ஒருவகையார், (குருபரம், ஆரு. 172.)

**ஏகாட்சரம்**— நூற்றெட்டுபநிட தங்களுள் ஒன்று

**ஏகாட்சி**—சிவன்

**ஏகாதசர், ஏகாதசருத்திரர்**— சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற் பவன், கபாலி, சௌமியன் (திவா)

**ஏகாந்த உருண்டை** — பெரு மாள் தாம்பூலத்தோடு உபயோகிக்கும் பச்சைக் கர்ப்பூர உருண்டை (ஸ்ரீ. த)

**ஏகாந்தக் கட்டி**— பெருமாளுக்கு ஜேஷ்டாபிஷேகத்தில் சாத்தின பச்சைக் கர்ப்பூர உள்காப்பு மறு வருடத்தில் உலர்ந்து கட்டியாயிருப்பது (ஸ்ரீ.த.)

**ஏகாந்த சேவை** — சில உற்சவங்களில் இரவில் ஏகாந்தமாக நிகழும் சுவாமி தரிசனம். (Loc.)

**ஏகாந்தஞ் சமர்ப்பித்தல்** — வாகனங்களில் விக்கிரகங்களை வைத்துக் கச்சுச்சார்த்துதல்.

**ஏகாந்தம்**— பெருமாள் வெளியார் இல்லாமல் அந்தரங்க பரிஜநத்தோடு மட்டுமுள்ள தனியிருப்பு (ஸ்ரீ.த.)

**ஏகாந்தவாதி** — ஆருகதரல்லாத சமயி (ச) (அறநெறி.18)

**ஏகாமபரநாதர், ஏகாம்பரர், ஏகாம்பரன்** — காஞ்சீபுரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபிரான்

**ஏகாலாத்தியம்** — பூசையில் சுவாமிக்குமுன் சுற்றும் ஒற்றைச் சுடர்த் தீபம் (பரத. ஒழிபி.41, உரை.)

**ஏகான்மவாதம்**— பிரமம் ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை என வாதிக்கும் மதம். (சி.போ. பா. அவைய. பக், 47)

**ஏகை**— உமாதேவி. (கூர்மபு. திருக்கல். 3.)

**ஏசறவு**— தோத்திரம். முனிசண்முகனை யேசறவு பேசிநின்று. (சிவதரு. பாயி. 11)

**ஏசாதவர்** — தேவர். (அக.நி.)

**ஏசு**— (Jesus) இயேசு (கி)

**ஏமத்தன்** — இறைவன்

**ஏமம்**— திருநீறு. (பிங்.)

**ஏமன்**— யமன். (சங். அக.)

**ஏமாங்கன்**— பிரமன்

**ஏயர்கோன் கலிக்காம நாயனார்**— அறுபத்து மூவர். நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**ஏரகம்**— சுவாமிமலை. (திருமுருகு. 189)

**ஏரம்பவிநாயகன், ஏரம்பன்**— பிரமன் பூசித்த விநாயகர் (திவா.)

**ஏற்புடைக்கடவுள்** — நூற்குரிமை பூண்டுள்ள கடவுள். (குறள் 1. உரை.)

**ஏற்றுவாகனன்** — சிவன். (தி. வா.)

**ஏறமர் கடவுள்** — சிவபிரான்

**ஏறியருளப்பண்ணுதல்** — 1. சாத்திரங்களை எழுதுதல் (வை) (குருபரம். 172, ஆரு) 2. விக்கிரகம் அமைத்தல். (T.A.S. 91)

**ஏறு**— நந்திதேவர். (பிங்.)

**ஏறுமுகக்கண்டிகை,**
**ஏறுமுகவுருத்திராட்சம்**— உருத்திராட்ச மணிகள் முறையே முகங்கள் அதிகம் பெறக் கோக்கப்படும் மாலை.

**ஏறுயர்ந்தோன்,**
**ஏறூர்ந்தோன்**—சிவன் (சூடா)

**ஏனாதிநாதநாயனார்**— அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**ஏஷணா சமதி** — குற்றமற்ற உணவினைச் சமணத் துறவி இரந்து பெற்று அளவாக உண்ணுதல். (சமணம். பக்.83.)

# ஐ

**ஐ**— சிவன்

**ஐக்கவாத சைவம்**— சைவத்தின் அகப்புறச் சமயத்தொன்று (சை) (சி. போ. பா. அவை.)

**ஐக்கவாதம்** — பரமான்மாவும் சீவன்மாவும் தன்மையால் ஒன்றெனக் கூறும் மதம்.

**ஐக்கியவாதி**— சமயிகளுளொருவன்

**ஐங்கணைக்கிழவன்** — மன்மதன். (கல்லா. 19, 10)

**ஐங்கணைவில்லி**— மன்மதன் (திவ். பெரியதி, 9,5,7,)

**ஐங்கரக்கரி, ஐங்கரன்,**
**ஐங்கர மூர்த்தி**— விநாயகர் (ஐந்து கைகளுள்ளவனான கணபதி) (திவா.)

**ஐங்காயம்** — இயேசுநாதர் தேகத்திலுற்ற ஐந்துவடு (இ)

**ஐங்காயம்வரம்பெற்றவர்** — கிறிஸ்துவின் ஐங்காயம் தந்தேகத்தில் அமையப்பெற்ற பக்தர் (கி)

**ஐசாநி**— துர்க்கை

**ஐஞ்சந்திவினாயகர்**— தேவர் வேண்டுகோளால் தேவருலகில் அமர்ந்த கணபதி

**ஐஞ்சிறப்பு**— பஞ்ச கல்யாண பூசை (ச.)

**ஐதர்லிங்கம்**— ஐதர் என்ற முக மதிய மன்னனை ஏமாற்ற காஞ் சியில் அமைக்கப்பட்ட இலிங் கம்.

**ஐதரேயம்**— நூற்றெட்டு உபநிட தங்களுள் ஒன்று

**ஐந்தருச்செல்வி**— இந்திராணி (பிங்.)

**ஐந்தரு நாதன்**— இந்திரன். (பிங்.)

**ஐந்தவத்தை** — சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் உடம்பின் உட் பட்ட ஆன்மா அனுபவிக்கும் ஐவகை நிலை. (திருமந்)

**ஐந்தவி**— கலைமகள்

**ஐந்திரி**— பார்வதி, இந்திரன், இந்திராணி. (சூடா.)

**ஐந்துகில் போர்ப்போர்**--ஐந்து துகில்கொண்டு போர்த்துக் கொள்பவராகிய பௌத்தர் (பௌ.) (தேவா. 239. 10)

**ஐந்துசுத்தி** — சிவபூசைக்கு முன்னர்ச் செய்யப்படும் கிரியை அதாவது பூதசுத்தி, மந்திர சுத்தி, திரவியசுத்தி ஆன்ம சுத்தி, என்பனவாம்.

**ஐந்துமுகத்தோன்** — ஐந்து முகங்களையுடைய சிவன். (உரி. நி.)

**ஐந்தெழுத்து** — சிவசின்னங் களுள் ஒன்று. திருவைந்தெ ழுத்து தக்க ஆசாரியரிடத்து உபதேசமூலம் பெறத்தக்கது. பஞ்சாக்கிர மந்திரத்தை மனத் திலே செபிக்க வேண்டும். மந் திரத்தின் தூலமான பொருள், மாயையை விலக்கி வினையைச் சுட்டு ஆன்மா அருளோடு சென்று சிவபரம் பொருளிடத்து ஒன்றுதல். (சைவசமயம். பக். 98)

**ஐந்தொழில்**— பஞ்சகிருத்தியம் (சை) ஐந்தொழிற்கு மப்புறமாய். (குமர. பிர. கந்தர்.5)

**ஐந்தொழிலன்**— பஞ்ச கிருத் திய முடையனான சிவன். (சை.)

**ஐம்படைத் தாலி**— திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்து ஆயுதங் களின் வடிவாகிய அணி.

**ஐம்பதங்கள்**— பஞ்ச நமஸ்கார மந்திரம் (ச)

**ஐம்பதவமிர்தம்**— பஞ்ச நமஸ் காரம் (ச)

**ஐம்மலத்தார்**— சகலர் (சை)

**ஐமவதி**— பார்வதி (திருவானைக். கோச்செங்.18.)

**ஐமுகன், ஐமுகி**— ஐந்து முகங்

களையுடைய சிவன். (திவா.) ஈசாநம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், என்னும் ஐந்து முகங்களை யுடையராகிய சிவன் (ம.த.அ.)

**ஐயங்கார்**— 1. வைஷ்ணவா சாரியர் 2. ஸ்ரீவைஷ்ணவப் பிராமணர் பட்டப்பெயர். (T.A.S.I. 145.)

**ஐயடிகள் காடவர் கோன் நாயனார்**— அறுபத்து மூவர். நாயன்மாருள் ஒருவர். (பெரியபு)

**ஐயம் பிடாரி**— ஒரு கிராம தேவதை. (Loc.)

**ஐயர்**— தேவர். (திவா.)
பார்ப்பார். (திவா.)
ஸ்மார்த்தப் பிராமணர் பட்டப்பெயர்
வீரசைவர் பட்டப்பெயர். (விசாகப் பெருமாளையர்.)
பாதிரிமார் பட்டப் பெயர். (போப்பையர்.)
முனிவர் (தொல். பொ. 145)

**ஐயன்பாழி**— சாஸ்தா கோயில். ஐயன்பா ழியிலானை. (ஈ.டு. 1.1.5.)

**ஐயனார்**— அரிகரபுத்திரன்

**ஐயானனன்** — ஐந்து முக முடைய சிவன்

**ஐயை**— பார்வதி (பிங்.)
துர்க்கை. (பிங்.)
காளி. (பிங்.)
தவப்பெண். (சூடா.)

**ஐராணி**— இந்திராணி, பார்வதி

**ஐராவணம்**—இந்திரன் யானை; 2. சிவபிரான் வாகனமாகிய யானை.

**ஐராவணன்**— இந்திரன்

**ஐராவதகணேசர்** — ஆனை யூருணிக்கரையில் ஐராவதத் தால் பூசிக்கப்பெற்ற விநாயகர்

**ஐராவதப்பாகன்**— இந்திரன்

**ஐவகைச் சமயம்**—அறுவைகச் சமயத்துள் பௌத்தம் தவிர்ந்த உலோகாயுதம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம் என்னும் ஐந்து மதங்கள். (மணி.)

**ஐவதம்**— ஐந்து விரதம். (அ.செ. 82)

**ஐவர் தூதன்**— பாண்டவ தூதனான கண்ணன்.

## ஒ

**ஒப்பூசை**— கத்தோலிக்க வழி பாட்டுவகை (கி)

**ஒருதந்தன்**— ஒற்றைக் கொம் புடைய விநாயகர்.

**ஒலிமுகவாசல்**—நகரம் அல்லது கோயிலின் முன்புற வாயில் (விவிலி. 2, இரா. 7 17)

**ஒலு**— தொழுகைக்கு முன் கை கால் முதலியன கழுவுகை (இ)

**ஒற்றிற்பிரசாதம்**— கோயிற் பிரசாத வகை

**ஒற்றைக்கொம்பன்**—விநாயகர்

# ஓ

**ஓ**— பிரமன்

**ஓகாரவுரு**— கடவுள்

**ஓங்காரவுரு, ஓங்காரம்**— பிரவணம், கடவுள்.

**ஓங்காரன்**— விநாயகன்.

**ஓங்காரி**— பிரணவப் பொருளானவள்

**ஓட்டு வட்டில்**— ஆராதனை வட்டில்

**ஓடதிநாதன், ஓடதிபதி**— சந்திரன் (வேதாரணி. வன்னி. 19)

**ஓடாணி**— பெருமாளுக்கு வெய்யில் படாமல் பிடிக்கும் மறைவு (ஸ்ரீ. த.)

**ஓணப்பிரான்**—திருமால். ஓணப் பிரானு மொளிர்மாமல ருத்தமனும். (தேவா. 643. 10)

**ஓணவிழவு**— திருமாலின் திருநாள். ஓணவிழவில் ஒலியதிர. (திவ். இயற். 4, 41.)

**ஓத்திரி**— யாகஞ் செய்வோன்

**ஓத்தின்சாலை**— வேதங்கற்பிக்குமிடம். ஓத்தின் சாலையு மொருங்குடனின்று. (சிலப். 22, 28.)

**ஓத்து** — வேதம். ஓத்துடை யந்தணர்க்கு. (மணி. 13, 25 )

**ஓதா**— யாகஞ் செய்யும் ஆசிரியருள் ஒருவன். நற்பிருகுவோதா. (மச்சபு. சந்திரோ. 12.)

**ஓதிநாணம்**— அவதிஞானம் (ச)

**ஓதிமமுயர்த்தோன், ஓதிம வாகனன், ஓதிமன்**— பிரமன். (சூடா); (பிங்); (பிரபோத. 26. 26)

**ஓதுவார்**— 1, சந்நிதிகளில் தேவார முதலிய அருட்பாக்களைப் பாடுஞ் சைவவேளாளர் 2. வேதசாத்திரம் படிப்போர். ஓதுவார்க்குணவு. (திவா.)

**ஓநமோநாராயணாய**— அஷ்டாக்ஷரம் (கம்பரா இரணி,

23) the mantra of eight syllables in praise of Visnu)

**ஓம்**— பிரணவம். (கம்பரா. இரணி. 76.)

**ஓமகுண்டம்**— வேள்விக்குழி (கந்தபு. அசுரர்யாக. 42)

**ஓமசாலை**—யாகசாலை. (சிலப். 10, 143, அரும்.)

**ஓமப்பொடி**— திருநீறு. (பிங்.)

**ஓமம்**— 1. வேள்வி. (திவா.) 2. வேள்வித்தீயில் நெய் முதலியன பெய்கை. (சேதுபு. சேதுச. 51.)

**ஓமம்வளர்த்தல்**— ஓமஞ்செய்யுமாறு அக்கினி வளர்த்தல்

**ஓமமண்டபம்**— யாகசாலை (திவா.)

**ஓமியம்**— யாகம். (தேவா 432, 8.)

**ஓலமிட்ட விநாயகர்**—திருவையாறிலுள்ள விநாயகர்

# ஔ

**ஔத்திரி தீக்கை,**
**ஔத்திரி தீட்சை**—சிவதீட்சை ஏழனுள் ஒன்று (சை) (சைவச. ஆசாரி. 62. உரை.)

**ஔபாசனம்**— காலை மாலைகளில் இல்லறத்தார் ஓமத்தீ ஓம்புகை.

**ஔராத்து** — நித்திய பாராயணத்திற்குரிய பிரார்த்தனை (இ) அவர்கள் காலைநேரங்களில் ஔராத்து ஓதிக்கொண்டிருப்பார்கள்.

**ஔலியா**— பக்தர்கள் (இ)

**ஔவை நோன்பு**— செவ்வாய் நோன்பு

# க

**க**—1. பிரமன், கவ்வென்ப தயன் பேர். (காஞ்சிப்பு. தலவி. 26) 2. அக்கினி, (புலியூரந். 7) 3. திருமால் 4. காமன் 5. சூரியன். 6. சந்திரன். 7. ஆன்மா.

**ககுந்தலன்**— சிவன்

**கங்கடகன்**—சிவன்

**கங்கடம்**— சிவனது திரிசூலம் சிவகவசம்

**கங்காசனகன்**— திருமால்

**கங்காசுதன்**— 1. விநாயகன் 2. முருகன் 3. பீஷ்மர்

**கங்காதரமூர்த்தி,**
**கங்காதரன்**— சிவன். (திவா.)

**கங்காபட்டாரகி**— கோயில்களிலுள்ள சிவமூர்த்தி அணியுங் கங்கைவடிவமான தலையணி. (S.I.I.ii, 170)

**கங்காபவானி**— கங்காதேவி. (சி.சி. 1.47. மறைஞா.)

**கங்காவிசர்ச்சனமூர்த்தி**— பகீரதன் வெகுநாள் பிதுர்க்கள் நற்கதியடையத் தவஞ்செய்தனன். அதனால் களிப்படைந்த சிவமூர்த்தி தரிசனந்தந்து தமது சடையிலிருந்த கங்கையில் ஒரு துளி பூமியில் விட்டனர். அக்காலத்து இப்பெயரால் தேவாதியர் துதித்த சிவமூர்த்தம்.

**கங்காளமாலி**— சிவன்

**கங்காளமூர்த்தி**— வாமன மூர்த்தி செருக்கடைந்த காலத்தில் அவர் முதுகின் முழுவெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்டமாகக் கொண்டு வந்த சிவன் திருவுரு

**கங்காளி**— மாகாளி (பிங்) பார்வதி. மலைமாது கங்காளி (மறைசை. 17)

**கங்கை சக்களத்தி**— பார்வதி

**கங்கைதனயன்**— முருகக் கடவுள். (பிங்.)

**கங்கை பெற்றோன்**— விநாயகர். (சூடா.)

**கங்கைமகன்**— முருகன்.

**கங்கையம்மன்**— ஒரு கிராம தேவதை

**கச்சபீ**— சரசுவதியின் வீணை. (பரத. ஒழிபி. 15.)

**கச்சாலை** — காஞ்சீபுரத்திலுள்ள சிவாலயங்களுள் ஒன்று, கச்சிக் கச்சாலை. (தண்டி. 95. 13, உரை)

**கச்சுச்சாத்துதல்**— விக்கிரகத்தை வாகனத்தினுடனாவது வாகனத்தைத் தண்டுடனாவது கச்சால் இறுகக் கட்டுதல்.

**கசகர்ணர்**
**கசகன்னர்**— விநாயகர் (யானைக்காதுடையவர்.)

**கசதீபம்**— ஒருவகைக கோயில் விளக்கு. (பரத. ஒழிபி. 43.)

**கசமுகானுக்கிரகர்**— சிவமூர்த்தங்களுள் ஒன்று (கஜமுகனுக்கருளியவர்)

**கசவத்திரன்**— விநாயகன்

**கசானனன்**— விநாயகன். (விநாயகபு. 69.2.)

**கஞ்சநன்**— மன்மதன்

**கஞ்சன்**— பிரமன். (சூடா)

**கஞ்சாரதி**— திருமால்

**கஞ்சாரன்**— சூரியன், பிரமன்

**கஞ்சாரி**— கண்ணன்,

**கஞ்சாறர்**— மானக்கஞ்சாற நாயனார். (பெரியபு.)

**கஞ்சுகசரீரம்** — அராகம் வித்தை, கலை, நியதி, காலம் என்னும் ஐந்து தத்துவங்களி னாலுமாகிய ஒருவகைப் பர சரீரம் (சை)

**கஞ்சுகன்**— வைரவன். (பிங்.)

**கஞ்சுளியன்**— அங்காளம்மை யைப் பூசிப்போன்.

**கட்குன்**— வீரபத்திரக் கடவுள்

**கட்டங்கம்** — மழுவாயுதம். (திருக்கோ. 242.)

**கட்டங்கன்**— சிவன். கபாலி கட்டங்கன். (தேவா, 769,5.)

**கட்டாடியார்** — கோயிற் பூசகன்

**கட்டுவாங்கன்**
**கட்டுவாங்கி**— 1. சிவன்; 2. விநாயகர். (விநாயகபு. சகத்திர. 26.)

**கடம்**— நூற்றெட்டு உபநிடதங் களுள் ஒன்று

**கடம்பன்**— முருகக்கடவுள், (மணி. 4. 49) சிவன்

**கடருத்திரம்**— நூற்றெட்டுபநிட தங்களுள் ஒன்று

**கடல் வண்ணன்**— திருமால் (மணி. 27, 98) ஐயனார். (சூடா).

**கடலிறைவன்**— வருணன். (உபதேசகா. உருத்திராக்க 245.)

**கடவல்லி**— நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று

**கடவாரணன்**— விநாயகன்

**கடவுட்பணி**— 1. தெய்வ கைங்கர்யம்; 2. ஆதிசேடன்.

**கடவுட்பள்ளி**— பௌத்த சைத்தியம்.!சிறந்துபுறங்காக்குங் கடவுட்பள்ளி. (மதுரைக். 467.)

**கடவுட்பொறையாட்டி**— தேவராட்டி

**கடவுண் மங்கலம்**— தெய்வப் பிரதிஷ்டை. (சிலப். 28. 233)

**கடவுண் மண்டிலம்**—சூரியன். (மணி. 22. 1)

**கடவுண் மூர்த்தி**— அருகன்

**கடவுணீலி**— காளி

**கடவுள்**— இறைவன். (பிங்.)

**கடவுளாளர்**— தேவர். (மணி. 1. 15)

**கடற்கிடந்தோன்**— திருமால். (திருவாச. 23. 8)

**கடற்பிறந்த கோதை கடற்பிறந்தாள்**— திருமகள். (சூடா.)

**கடற்றுயின்றோன்** — திருமால், (திவா.)

**கடன்முரசோன்** — மன்தன். (பிங்.)

**கடிசூத்திரன்**— விநாயகக் கடவுள்

**கடுக்கைக்கண்ணியன், கடுக்கையங்கண்ணிசூடி**— சிவன்.

**கடோபநிடதம்**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**கண்காணியர்**— கிறிஸ்தவ சபைகளை மேற்பார்க்கும் அத்தியட்சர். (கி)

**கண்டபரசு**— சிவன்

**கண்டன்** — சிவன்

**கண்டி, கண்டிகை**— உருத்தி ராக்கமாலை. கண்டியிட் பட்ட கழுத்துடையீர். (தேவா. 586, 6)

**கண்டிமுத்திரை** — முத்திரை வகை (சை)

**கண்டியூர்**— 1. அட்டவீரங் களுள் ஒன்று. (தேவா.) 2 ஒரு விஷ்ணு ஸ்தலம் (திவ். திருக் குறுந். 19.)

**கண்டுமுட்டு**— வைதிகரைக் கண்டால் சைனர் மேற்கொள் ளுந் தீட்டு. (பெரியபு. திருஞான. 683)

**கண்ணப்பநாயனார்**— அறுபத்து மூவர், நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கண்ணன்**— 1. கிருஷ்ணன், (திவ் திருவாய். 10, 5, 1) 2. திருமால். (திவா.)

**கண்ணனான்**— புரோகிதன். (சீவக. 2362.)

**கண்ணாள்**— சரசுவதி. (பிங்.)

**கண்ணுதல்**— சிவன். எம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி. (திருவாச. 35, 1)

**கண்மணி** — உருத்திராக்கம். வெண்பொடி கண்மணி திகழ மெய்யணிந்து. (திருவானைக். திருமால். 13)

**கண்மலர்**— விக்கிரகங்கட்கு அணியும் விழிமலர். (S.I.I.ii, 340)

**கணக்கிரீடர்**—விநாயகர் (தேவ கணங்களுக்கெல்லாம் கிரீடம் போன்றவர்)

**கணதரன்**— அருகன். கணதர ரேறுசெந் தாமரைகாண். (திரு நூற், 59)

**கணநாத நாயனார்—** அறுபத்து மூவர். நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கணநாதன்—** 1. சிவகணத் தலைவன். (கந்தபு.தாரக.123.) 2. விநாயகன். (தேவா.737,6) 3. கணநாத நாயனார்

**கணப்பிரான்—** விநாயகன்

**கணபங்கவாதி—** பிரபஞ்சங் கணந்தோறுந் தோன்றியழியும் என்று வாதிப்பவன் (சி. போ. பா. அவை.) (தத்)

**கணபதி—** 1. விநாயகன், (திவா.) 1. நூற்றெட்டு உபநிட தங்களுள் ஒன்று

**கணபதியணி —** அறுகு. (தைலவ. தைல. 132.)

**கணபர்—** சிவகணத்தலைவர். (கோயிற்பு. திருவிழா. 47.)

**கணம்புல்லநாயனார்—** அறுபத்துமூவர். நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கணாதமதம்—**வைசேடிக மதம்

**கணாதன்—** வைசேடிக மதா சாரியனான முனிவன். (மணி, 27, 82.)

**கணபதி—** சிவன், கணபதி

**கணாதிபர்—** கணபதி

**கணிகவாதி —** கணபங்கவாதி பார்க்க.

**கணிச்சியோன் —** சிவபிரான் கணச்சியோன் சினவலின். (கலித். 2,6.)

**கணேசன்—** விநாயகன், சிவன் (ம.த.அ)

**கணை—** குறுக்குத்தடி சந்நிதி யில் உள்ளேயும் வெளியிலும் உள்ள குறுக்குத்தடி

**கத்தன் —** கடவுள், அருகன், சிவன், விட்டுணு (ம.த.அ)

**கத்தூரிநாமம் —** கஸ்தூரியால் ஊர்த்துவமாகத் திருமால் மூர்த் தங்களின் நெற்றியிலிடுங் குறி, சீரிதாயெழுது கத்தூரிநாமமும் (அஷ்டப், திருவரங். கலம்.77)

**கத்தோலிக்கன் —** கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த வன் (கி.)

**கதமிட்டிரன்—** விநாயகன்

**கதாக்கிரஜன்—** திருமால்

**கதாதரன்—** விநாயகன்

**கதாபாணி—** திருமால்

**கதீடிரல்—** கிறிஸ்துவ கோயில் (கி)

**கந்தசட்டி, கந்த சஷ்டி விரதம் —** முருகக்கடவுள் சூர

பதுமனை வென்றதைக்குறித்து ஐப்பசி மாதத்துச் சுக்கிலபட்சத்துச் சஷ்டி திதியில் நடத்தப் படும் திருநாள்.

**கந்த பூர்வசர்** — கந்தனுக்கு முன் பிறந்தவர்

**கந்தம்** — பஞ்ச கந்தம் (பௌ.)

**கந்த முத்தன்**— புத்தன்

**கந்தர்ப்பன்** — மன்மதன். (திவா.)

**கந்தரன்**— இந்திரன்

**கந்தராகரம், கந்தராதரம்**— மலை, முருகக் கடவுள் உறைவிடம் (ம.த.பே)

**கந்தழி**— பரம்பொருள். (தொல். பொ. 83)

**கந்தன்**— அருகன், (சிலப். 11, 5) முருகன். (திவா.)

**கந்தி**— ஆரியாங்கனை சமணப் பெண்துறவி (ச) (சீவக. 2649)

**கந்திரி**— ஒரு முகமதிய பண்டிகை (இ)

**கந்திற் பாவை**— புகாரின் அம்பலத்தில் சம்பாதித் கோயில் குணதிசையில் அமைந்திருந்தது இதனைக் கந்திற்பாவை என்பர். தெய்வ கணத்தைச் சேர்ந்த துவதிகன் என்பவனின் வடிவம் இது. மக்களுக்கு அவ்வப் பொழுது அற்புதங்கள் பல உரைத்த தெய்வம். (பௌத்தம். பக். 41.)

**கந்நன்**— கிருஷ்ணன்

**கநவநமான்**— தெய்வயானை

**கப்பரை**— விபூதிக்கலம். (சங். அக)

**கபடநாடக சூத்திரன்**— திருமால்

**கபர்த்தம்**— சிவபிரான் சடை

**கபர்த்தி**— சிவன்

**கபர்த்தீசன்**— காசியில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தி

**கஃபா** — மக்காவிலுள்ள இறை இல்லத்தின்பெயர் (இ)

**கபாய்** — பெருமாளுடைய சட்டை (ஸ்ரீ.த.)

**கபாலதரன், கபாலபாணி, கபாலமூர்த்தி**— சிவன் (திவா.)

**கபாலி**— 1. ஏகாதசருத்திரருள் ஒருவர் (திவா.) 2. வைரவன் (பிங்) 3. காபாலிக விரதியான சைவசமயத்தான். (திவ். பெரியாழ்.2,8, 8) 4. உமாதேவி

**கபிலமதம்**— கபிலரால் தாபிக்கப்பெற்ற சாங்கியமதம்.

**கபிலர்**— உருத்திரர். (பரிபா 3,7)

**கபிலவஸ்து** — புத்தர் அவதரித்த நகரம். (மணி. அரும்)·

**கபிலன்**— சாங்கியமதாசாரியன்

**கபிலையம்பதி** — புத்தன் பிறந்த இடம்.

**கம்**— பிரமன். (பிங்) வீட்டின்பம். (காஞ்சிப்பு. திருவேகம்ப. 49) தேவலோகம். (உரி.நி.)

**கம்சாராதி**— கிருஷ்ணன்

**கம்பர், கம்பன்**— காஞ்சீபுரத்துச் சிவபிரான். (தேவா. 1035, 8)

**கமலக் கண்ணன்**— திருமால் (திவா)

**கமலா தேவி**— இலக்குமி. (திருக்கோ. 41)

**கமலயோனி**— பிரமன் (திவா).

**கமலவூர்தி** — அருகன். (தாமரையை வாகனமாக உடையவன்) (திவா.)

**கமலன்**— பிரமன். (கூர்மபு. பிரமவி. 8)

**கமலாசனம்**—பிரமன், அருகன்

**கமலாசினி**— இலக்குமி

**கமலாலயன்** — பிரமன். (பிரமோத். 22,75)

**கமலை**— இலக்குமி (கம்பரா. பாயி. பயன், 1)

**கயமுகன்**—விநாயகன் (சூடா.) விநாயகரால் கொல்லப்பட்ட ஓர் அசுரன். (விநாயகபு.)

**கயிலாயம்**— கைலாசம்

**கயிலாயன், கயிலையாளி**— சிவன்

**கர்த்திரு சாதாக்கியம்**— நான்கு முகங்களோடும் எட்டுக் கைகளோடும் கூடிய மகேசுர மூர்த்தம்

**கர்ப்பக்கிருகம்** — ஆலயத்திலுள்ள மூலஸ்தானம்

**கர்மக்ஷயாதிசயம்** — சைனர் கூறும் அதிசயம் மூன்றனுள் வினைநீங்குகையாகிய அதிசயம் (சீவக. 2813. உரை) (ச.)

**கரண்டை** — கமண்டலம். (மணி. 3, 86)

**கரணிமுகவர்**— விநாயகன்

**கரதன்**— விநாயகன்

**கரந்தைசூடி** — சிவபெருமான்

**கரம்** — நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று

**கரிமுகன்**— விநாயகன். கரிமுக னடிபேணி (திருப்பு. 1)

**கரியமால்**— திருமால். கன்னி கரியமால். (கலித். 92. உரை.) துளசி

**கரியவன்**— திருமால் (கம்பரா. பள்ளி. 55) இந்திரன். (மணி. 25, 55)

**கருங்கடல் வண்ணன்** — திருமால் (திவா.) ஐயனார்

**கருடக்கொடியோன்** — திருமால். (திவா.)

**கருடகம்பம்** — 1. திருமால் கோயில் துவசத்தம்பம். (அரிசமய. பத்திசார. 92) 2. கருடன் சந்நிதியை அடுத்து விளக்குமாட்டும்படி நாட்டிய தூண்

**கருடகேதனன்**— திருமால்

**கருடசேவை**— கருடோற்சவம்

**கருடத்துவசன்**— திருமால்

**கருடபுராணம்** — பதினெண் புராணத்தொன்று

**கருடவாகனன்**— கருடன்மேல் வீற்றிருக்கும் திருமால். (திவ். திருமாலை, 10).

**கருடாந்திகமூர்த்தி** — சிவமூர்த்தியின் திருவுருவம்

**கருடோற்சவம்**— திருமால் கருடாரூடராய்க் காட்சி கொடுக்குந் திருநாள்

**கருணா**— பாவனை ஐந்தனுள் ஒன்முன அருள். (பௌ.)

**கருணாலயன்**— சிவன். (திருவாச. 27,1)

**கருத்தன்** — அருகன், சிவன், கடவுள்

**கருநீலப்பிறப்பு** — நரகசன்மத்துக்குச் சிறிதும் மேற்பட்ட பிறவி (ச.) (மணி. 27, 150)

**கருப்புவில்லி** — மன்மதன் (மணி. 20, 92)

**கரும்பன்** — மன்மதன். (அஷ்டப். அழகரந். 17)

**கரும்பிறப்பு**— — நரகசன்மம். (மணி. 27,150)

**கரும்பிறை**— மன்மதன்

**கருமக் கடல் கடந்த செல்வன்**— அருகன்

**கருமகாண்டி** — வைதிகக்கிரியைகளைப் பயன்கருதி அனுஷ்டிப்போன் (வேதா. சூ. 18)

**கருமமீமாஞ்சை**— (System of Indian Philosophy whose founder or the earliest systematic exponent was jaimini and which consists of an en-

quiry into the nature of dharma according to the Karmakāṇḍa of the Veda)
— பூர்வமீமாஞ்சை.

**கருமானுட்டானம்**— வைதிக ஆகமக்கிரியைகளை அனுஷ்டிக்கை.

**கருவன்**— சங்காரமூர்த்தி. கருவனுய்க் காலனை முன்காய்ந்த நாளே, (தேவா. 731,1)

**கருவூரானிலை**— கருவூரிலுள்ள சிவபிரான் கோயில் (தேவா.)

**கரோடி**— கரோடிகை- சிரமாலை, கரோடி விரிசடைமேல் ...அணிநாயகன்.(தேவா.524. 8)

**கல்கி**— கற்கி— திருமால் அவதாரத்தொன்று

**கல்பவாசியர்**— தேவருள் ஒரு வகையினர் (ச)

**கல்யாணசுந்தரர்**— பார்வதியைத் திருமணஞ்செய்த சிவமூர்த்தி திருவுரு

**கல்யாணதரம்**— சமவசரணத்திலுள்ள மூன்று மதில்களுள் ஒன்று (ச)

**கல்லாடம்**— ஒருசிவஸ்தலம் (திருவாச, 2,11)

**கல்லாடை**— காவியாடை, கோத்த கல்லாடையும் (தேவா, 509,2)

**கலங்காப்பெருநகரம்**— வைகுந்தம்

**கலசபூஜை**— நீர்நிரம்பிய கலசத்தில் தேவதையை ஆவாகித்துச் செய்யும் பூசை

**கலசமாட்டுதல்**— 1. கலசங்கொண்டு அபிஷேகஞ்செய்கை. S,I,I,iii, 102);

**கலசமுனி**— குடத்தினின்று பிறந்தவரான அகஸ்தியர். (நைட, சந். 4) 2. கும்பாபிடேகம், (சா. சொ, அ,)

**கலாசோதனை**— சைவ தீட்சைகளுள் ஒன்று

**கலாத்துவா**— பஞ்சகலைகளாகிய அத்துவாவகை, (சி. சி, 8.6-9, மறைஞா.) (சை.)

**கலாதத்துவம்**— சுத்தாசுத்த தத்துவங்களுள் ஒன்று, (சி,போ, பா, 2,2, பக். 151.)

**கலாதரர்**— விநாயக அம்சங்களில் ஒன்று

**கலாதேவி**— சரசுவதி.

**கலாநிதி**— சந்திரன், (பிங்.)

**கலிக்கம்பநாயனார்**— அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கலிகன்றி**— திருமங்கையாழ் வார். (திவ். பெரியதி, 1.1.10.)

**கலிசந்தரணம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**கலிப்பிரியன்**— நாரதன்

**கலிமா**— இஸ்லாம் மதத்தைச் சேரும்போது 'அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை, முகம்மது அவருடைய திருத் தூதர் என்று பொருள்படச் சொல்லும் அரபிவசனம் (இ)

**கலியநாயனார்**— அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கலியாணன்**— சிவன், (திரு வாலவா, 27, 85,)

**கலியுகம்**— நான்காம்யுகம். (திவ், திருவாய். 5,2,11)

**கலை**— 1. வித்தியாதத்துவம் ஏழனுள் ஒன்று (சை,) கலைமுத லாயநிலை, (ஞாஞ. 3.1) 2. பார்வதி 3. சாத்திரம், (திரு வாச, 12,13)

**கலைநாதன்**— அருகன், புத்தன், (சூடா,)

**கலைப்பாகி**—துர்க்கை, வெய்ய கலைப்பாகி, (திவ், பெரியாழ் 1,3,9) சரசுவதி

**கலைமகள், கலைமடந்தை**

**கலைமான்**— சரசுவதி (பிங்.) கலைமான்றனை.... முகநோக்கி, (சேதுபு, காயத், 32,)

**கலையறிபுலவன்**— முருகன். (பிங்.)

**கலையானத்தி**— துர்க்கை

**கலையுகைப்பாள்**— காளி

**கலையுருவினன், கலையுரு வினோன்**— கலைகளை உரு வாகவுடையன் எனப்படுஞ் சிவன், (மணி. 27 91)

**கலையூர்தி**— துர்க்கை,(திவா.)

**கலையோன்**— சந்திரன், (பிங்.)

**கலைவாகன்**— வாயு, (பாரத. சம்பவ. 76.)

**கவ்வியம்**— பிதிரர்களை உத் தேசித்துக்கொடுக்கும்பிண்டம். (மச்சபு. சிராத்தானு. 2)

**கவசம்**— இரட்சை, நீற்றுக் கவசம், (திருவாச, 46.1)

**கவாலி**— சிவன், காணாய் கவாலி கதிர்முடிமேல்,(பதினோ, பரண, சிவ. திருவந், 12.)

**கவுசிகம்**— சாமவேதம் (அரிசமய, பராங்குச. 9)

**கவுடு**— கழுத்திலணிவதும் பொற் குவளையில் அமைந்ததுமான உருத்திராக்கமணி,

**கவுணம்**— ஆக்கினேயம் போலன்றிக் காட்டுத்தீ முதலியவற்றிலிருந்து கொள்ளும் ஒரு வகைத் திருநீறு. (திருக்காளத். 4,26,5.)

**கவுணியர்கோன்**— கௌண்டினிய கோத்திரத்துப் பெரியோரான திருஞானசம்பந்தர். (பெரியபு, திருஞா,102)

**கவுத்துவம்**— திருமால் மார்பில் அணியும் மணி. கவுத்துவங் கிடந்த மார்பின். (கூர்மபு. அந்தகா. 85.)

**கவுந்தி**— 1. சைன தவப்பெண். (திவா.) 2. குந்தி தேவி, (யாப். வி, 64, 242,)

**கவுமாரம்**— கௌமாரம் (Doctrine that Kumara is the highest God)

**கவுமோதகி**— திருமாலின் தண்டாயுதம். (சேதுபு,துராசா,34.)

**கவுரிசங்கம் கவுரிசங்கரம்** — சிவன் உமை என்பவர்களது உருவினதாய இரு பிளவுபட்ட ஒற்றை உருத்திராக்கம்

**கழற்சிங்கனார்**— அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கழிவெண்பிறப்பு**— அறு வகைப் பிறப்பையுங் கடந்து ஆன்மா அடையும் நிருவாண நிலை (ச.)

**கழுக்கையர்**— மயிற்பீலிக்குப் பதிலாக கழுகுகளின் இறகு முடிப்பைக் கையில் எடுத்துச் செல்லும் சமணர்கள். (மணி, 27, 155.)

**கழுமலம்**— சீகாழி (தேவா. 149, 1 .)

**கள்ள நித்திரை**— யோக நித்திரை. (திவ். பெரியாழ். 5,1,7)

**கள்ளழகர்**— கள்ளர் நாட்டுள்ள அழகர்மலையில்கோயில் கொண்ட திருமால்

**களங்கன்**— சந்திரன். (திவா.)

**கற்கலை**— காவிவஸ்திரம். (திருவானைக். திருநீ.7)

**கற்கி**— 1. கோயில், (சது.) கற்கிளர் கற்கி செய்தோன். (சேதுபு. இராமநா. 43.) 2. திருமாலின் தசாவதாரங்களுள் இனி நிகழும் அவதாரம். தாமோதரனுய்க் கற்கியுமானன். (திவ்.பெரியதி. 8,8,10)

**கற்கெ நாடு**—தேவருலகம். (திருக்கோ.40)

**கற்பகம்**— கற்பகதரு வடிவான கோயில்வாகன விசேடம். (திருவாலவா. 37,75.)

**கற்ப சூத்திரம்**— சுருதிஸ்மிருதிகளில்கூறும்கருமங்களை அனுஷ்டிக்கும் முறைமைய விளக்கும் நூல். (காஞ்சிப்பு. சனற். 41.)

**கற்பம்**— 1. நானூற்று முப்பத்திரண்டுகோடி வருடங் கொண்ட பிரமனது ஒருநாள். (கம்பரா. சரபங். 18) 2. பிரமனுக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள். (திவா.) 3. இந்திரன் முதலிய தேவர்க்குரிய வாழ்நாளளவு. (சிலப். 11, 154, உரை.) 4. தேவர் உலகம். (பிங்) 5. பசுவின் சாணத்தைக் கையாலேந்தி ஆகமப்படி உண்டாக்கிய திருநீறு, (சைவச. பொது. 178)

**கற்பூரத்தட்டு**— கோயிலில் உபயோகிக்கும் தீபவகை

**கற்பொன்மயலிங்கம்**— இந்திரன் பூசித்த ஒரு சிவலிங்கம்

**கற்றலம்**— பௌத்த தருமசாரணர்களுக்காக மலைகளில் அமைக்கப்பட்ட இருக்கை.

**கற்றளி**— கற்கோயில். நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி, (S,I,I,ii,2.)

**கறியமுது**— சமைத்த கறியாகச் சுவாமிக்குப் படைக்கும் உணவு. (பெரியபு, சிறுத், 73)

**கறைக்கண்டன்**—சிவன், கறைக்கண்டன் உறைகோயில், (தேவா. 1182, 9)

**கறைமிடற்றண்ணல்**— சிவன். (திவா.)

**கறைமிடற்றான்**— சிவன். (தேவா. 198,1)

**கன்மசாதாக்கியம்**— ஈசான மூர்த்தத்தை அடையக் கிரியா சத்தியுடன் சேர்ந்த பரசிவம். (சதாசிவ. 6.)

**கன்மசாதாக்கியர்**— சுத்தாத்துவாவில் சிருஷ்டியாதிகாரியங்களைச் செய்யும் சதாசிவன் (சதாசிவ. 42, உரை.)

**கன்மி**- கன்மிட்டன்— கருமங்களைச் சரியாய் அனுட்டிப்போன் (திருமந். 536)

**கன்னம்**— நோய் தணியும் பொருட்டு கோயிற்குப் பிரார்த்தனையாகச்செய்து கொடுக்கும் சிறுபடிமம். கன்னந் தூக்கி. (ஐங்குறு. 245.)

**கன்னி**— துர்க்கை. கன்னிசெங்கோட்டம். (கல்லா. 58.) பார்வதி. (பிங்.)

**கன்னிகாமடம்**— கன்னியாஸ்திரிமடம் (கி)

**கன்னிமரியம்மாள், கன்னிமரியாள்**— இயேசுநாதரைப் பெற்ற தாய் (கி)

**கன்னிமார்**— சத்த கன்னியர். (குமர. பிர. மீனாட். குறம்.22.)

**கனகசபை—** நடராசமூர்த்தி எழுந்தருளியிருக்கும் பொன்னம்பலம். கனகசபை மேவுமெனது குருநாதா. (திருப்பு.)

**கனசியாமன்—** திருமால்

**கனன்—** சிவன்

**கஜ்ஜி—** மெக்காயாத்திரை (இ)

**கஜலக்ஷ்மி—** இருபக்கத்தும் யானைகளையுடைய இலக்குமியுருவம்.

**கஜாசியன்—** விநாயகக் கடவுள்

**கஷாயம்—** தீவினை (ச.) (சீவக. 3076. உரை.)

**கஸ்தூரி—** கஸ்தூரி திலகம். திருமண் காப்பு.

# கா

**கா—** காவடித்தண்டு. (குறள். 1163.)
சரசுவதி. காவெனப் பெயரிய கலைமகளை. (காஞ்சிப்பு. வீராட்ட. 45.)

**காக்கைக் கொடியாள்—** மூதேவி. (திவா.)

**காகுத்தன்—** ககுத்ஸ்தவமிசத்தில் தோன்றிய இராமன். (திவ். திருவாய். 5,4,3)

**காங்கா—** மத அனுஷ்டானங்களைப் பழகவும், போதனைகளைப்பெறவும் உள்ள முஸ்லிம் ஆச்சிரமம். (இ)

**காங்கேயன்—** கந்தக்கடவுள். (திவா.) பீஷ்மர். (பாரதவெண். ஸ்ரீவாசுதேவன். 46.)

**காசாம்பூ மேனியன்**

**காசாம்பூ வண்ணன்—** திருமால்

**காசானன்—** விநாயகன்

**காசியார்—** முகம்மதிய குருவும் நீதிபதியும் ஆனவர் (இ)

**காசையாடை—**காவி வஸ்திரம் (திவ். பெரியதி. 2, 2, 1)

**காட்சி—** சம்யக் தரிசனம். (அ. செ. 2,3)

**காட்சிமறைதல்—** தரிசனாவரணீயம் (ச)

**காட்சியோகு—** ஞானயோகம். (கந்தபு, மோன நீங். 33.)

**காட்டுதல்—** நிவேதனஞ் செய்தல். (S. I. I. iii, 102)

**காடமர் செல்வி**— துர்க்கை (மணி. 6, 53)

**காடிசால்மூலை**— யாகசாலையிற் காடி வைக்கப்படும் வட கிழக்குத் திசை. (திவ். கண்ணி நுண். வ்யா. அவ. பக். 5.)

**காடுகிழாள்**— துர்க்கை. (திரு முரு. 259. உரை.)

**காடுகெழுசெல்வி**— துர்க்கை. (தொல். பொ. 461. உரை.)

**காடுபலியூட்டுதல்**— காட்டில் வாழும் தேவர்களுக்குப் பலியிடுதல். (பெரியபு. கண்ணப்ப 50)

**காண்டமோசனம்** — வேதத்தின் ஒவ்வொரு காண்டத்தையும் ஓதிமுடிக்குங்கால் செய்யுங் கிரியை. (திருவானைக். கோச் செங். 14.)

**காண்டவன்,**
**காண்டாவனன்**— இந்திரன். (பிங்.)

**காண்டிகன்**— மணியடித்துப் பூசை செய்பவன்

**காண்டோபக்கிரமணம்**— வேதத்தின் ஒவ்வொருகாண்டத்தையும் ஓதத்தொடங்குங்காற் செய்யும் கிரியை.(திருவானைக். கோச்செங். 14.)

**காணபத்தியம்**— கணபதியை முதற்கடவுளாக வழிபடுஞ் சமயம்

**காணலிங்கம்**— சிவ கணங்களால் தாபிக்கப்பட்ட சிவ லிங்கம். (சைவவி. 203)

**காத்தியாயனி**— 1. காத்யாயனர் தவத்தால் பிறந்த பார்வதி. (சிவரக. தாருக. 30) 2. துர்க்கை. (பிங்.)

**காதம்பரி**— சரசுவதி, ஒரு கந்தர்வ கன்னிகை

**காதர்**— சர்வசக்தியுள்ள கடவுள் (இ)

**காதிகள்**— ஞானவரணீயம், தரிசனாவரணீயம், மோகநீயம், அந்தராயம் முத்திக்குப் பாதகமாயுள்ளகர்மங்கள். (ச) செற்றது காதிகள். (திருநூற். 88.)

**காதிவென்றோன்**— அருகன், புத்தன் (சூடா.)

**காந்தபுராணம்**— பதினெண் புராணத்துள் ஒன்று

**காந்திமான்**— சந்திரன், மன்மதன்

**காப்பரிசி**— கிறிஸ்து பிறந்த பதின்மூன்றாம் நாள் உற்சவத்தில் கோயிலில் வழங்கும் பாகு கலந்த அரிசி. (கி) (R. C)

**காப்பிடுதல்**— 1. நெற்றியில் திருநீறு அல்லது மண்ணைக் குழைத்திட்டுக் காப்புச் செய்தல் (திவ். இயற். சிறிய. ம. 16) 2. திருக்காப்புச் சார்த்துதல்.

**காப்பு**— திருநீறு (திருவாலவா. 38, 56)

**காப்புக்கடவுள்**— திருமால். (பிங்.)

**காபாலம்**— 1. பிரமகபாலத்தைக் கையிலேந்திச் சிவபிரான் ஆடுங் கூத்து. (கலித். 1) 2. சைவத்தின் அகப்புறச் சமயம் ஆறனுள் ஆன்மா நித்திய மாய்ப் பலவாய் வியாபகமாய் இருப்பதென்றும், பச்சைக் கொடி பிடித்து மக்களின் தலையோட்டில் ஐயமேற்றுண்பவர் முத்தராய்ச் சிவசமம் ஆவரென்றும் கூறும் சமயம். (சி.போ.பா. அவை.)

**காபாலன், காபாலி**— 1.சிவன். விடையேறு காபாலியீசன். (திவ். பெரியாழ். 1,3,2) 2. காபாலமதத்தான், இம்மொழியைக் காபாலி இயம்புமுன், (பிரபோத, 18, 29.)

**காபிலம்**— கபிலர் மதமான சாங்கியம். (பிரபோத. 11,6)

**காமக்கண்ணி**— காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் காமாட்சியம்மன். (காஞ்சிப்பு. வீராட். 45.)

**காமக்கோட்டத்தி**— உமை. (சூடா,)

**காமக்கோட்டம்**— காஞ்சியிலுள்ள காமாட்சி கோயில்

**காமக்கோட்டி**— 1. பார்வதி. (திவா.) 2. காமக்கோட்டம்

**காம காண்டம்**— காமன் புட்பவில். (கந்தபு, காமத. 62.)

**காமதகனன்**— சிவன். (திவா.)

**காம தேவன்**— மன்மதன், (திவ். நாய்ச். 1, 2)

**காமதேனு**— தேவலோகப் பசு, (தாயு. மௌன. 7.)

**காமநாசன்**— சிவன். (பிங்.)

**காமபீடம்**— முக்திபோகங்களைக் கொடுப்பதாகிய காஞ்சீபுரம். (கந்தபு. திருநகரப். 70)

**காமயோனி மண்டலம்**— சக்தி பீடங்களில் ஒன்று

**காமவேள்**— மன்மதன், (திவ், நாய்ச், 1, 10)

**காமற்கடந்தோன்**— புத்தன். (மணி. 5, 102.)

**காமற்காய்ந்தோன்**—அருகன். (திவா )

**காமன்**— 1. மன்மதன். (பரிபா. 11, 123) 2. பௌத்த மதத்திற்கூறுந் தீமை விளைக்குந் தெய்வம். 3. இந்திரன். (சூடா.)

**காமன் பண்டிகை**— மன்மதகனத்திருவிழா.

**காமன் மைத்துனன்**— விநாயகன், முருகன்

**காமாட்சி**— காஞ்சீபுரத்து அம்பிகை. (சிவரக. தேவிமேரு. 13)

**காமாந்தகன்**— சிவன்

**காமாரி**— 1. சிவன். (பிங்,) 2. காளி. (உபதேசகா. உருத்திராக்க. 162.)

**காமாரித்துவம்**—மன்மதனைக் கொன்ற மகேசுவர மூர்த்தம்

**காமிகம்**— இருபத்தெட்டுச்சிவாகமத்துள் ஒன்று. (சைவச. பொது. 331.)

**காமுகன்**— திருமால், காமதேவன்

**காய்க்கடுக்கன்**— உருத்திராட்சம் வைத்துக் கட்டிய கடுக்கன்

**காய்க்கறியமுது** — கடவுட்கு நிவேதிக்குங் கறி. (S.I.I.ii,127)

**காயசன்**— மன்மதன்

**காயத்திரி**—1. பார்ப்பனர் நாள்தோறும் ஓதும் ஒரு வேதமந்திரம். (அறப். சத. 81.) 2. சரசுவதி. (பிங்.); 3. பிரமன் மனைவியாகிய காயத்திரி தேவதை. (சிவரக. காயத்திரிபுகன். 22.)

**காயத்திரி பீடம்**— சத்திபீடங்களில் ஒன்று

**காயாம்பூவண்ணன்** — திருமால். (கூர்மபு, இராமனவதா.)

**காயிகம்** — சரீரத்தால் நமஸ்கரித்தல். (விநாயகபு. 83,78.)

**கார்த்திகேயன்** — குமரக்கடவுள். (சூடா.)

**கார்த்திகை**— துர்க்கை. (திவ.)

**கார்த்திகைவிரதம்** — முருகக்கடவுளைக் குறித்து கார்த்திகை நாடோறும் அனுட்டிக்கப்பெறும் விரதம்

**கார்த்திகைவிளக்கீடு** — திருகார்த்திகைக் கொண்டாட்டமாக வீடுமுதலியவற்றில் விளக்கேற்றுகை.

**கார்வண்ணன்** — திருமால். (பிங்).

**கார்வாரித்தம்பிரான்**— சைவமடத்தின் விசாரணைத்தம்பிரான்

**காரடையான் நோன்பு** — மாசியும் பங்குனியும் கூடும் நாளில் தம் கணவரின் தீர்காயுளைக் கருதிக் காரடையை உணவாகக் கொண்டு மகளிர் லகைக்கொள்ளும் ஒரு விரதம்.

**காரணகேவலம்** — காரணாவத்தை மூன்றனுள் ஆன்மாக்கள் சர்வசங்கார காலத்தில் அசுத்தமாயா காரணத்திலே

யொடுங்கி ஆணவமலத்தாலே மறைப்புண்டு சிருஷ்டிகாலமளவும் ஒன்றும் அறியாமல் கிடக்கும் அவத்தை (சை) (சிவப். கட். 15.)

**காரணசகலம்**— காரணாவத்தை மூன்றனுள் ஆன்மாக்கள் தேகமெடுத்துச் சனனமரணங்களுக்கு உட்படும் அவத்தை. (சிவப். கட். 15.)

**காரண சரீரம்** — பஞ்சபூத பரிணாமமான தூலசரீரத்திற்குக் காரணமாயுள்ள சூக்கும சரீரம் (தத்)

**காரணசிவதத்துவம்**—சிவதத்துவங்களுள் ஒன்று (சை))

**காரணசுத்தம்** — காரணாவத்தை மூன்றனுள் மலநீக்கம் பெற்ற ஆன்மா பதியின் திருவடிகளில் ஐக்கியப்படும் அவத்தை (சை.) (சிவப். கட். 15)

**காரணமாயை** — தனுகரணபுவண போகங்களுக்கு முதற்காரணமாயுள்ளமாயை (சை) (சி.சி. 2, 50, நிரம்ப.)

**காரணவன்**—மூலகாரணனான கடவுள். ஏழுலகும் பரவும் காரணவன். (திருவாலவா. 27, 32,)

**காரணாவத்தை**— காரியாவத்தைகட்குக் காரணமாக இருக்கும் அவத்தை (சை) (சிவப். கட். 15)

**காரணி**—பார்வதி தேவி. (யாழ். அக.)

**காரம்**— திருநீறு. (திருக்காளத். பு. 26, 4)

**காரி**— சனி, ஐயனார். (திவா.) வயிரவன். (திவா); இந்திரன். (திருவாரூ. 18)

**காரிதாய்**— பைரவர் தாயாகிய காடுகிழாள். (பிங்.)

**காரிநாயனார்**— அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**காரிமாறன்**— காரியின் புத்திரரான நம்மாழ்வார். (திவ். திருவாய். 4,5,11)

**காரியகேவலம்**— சரீரத்தைப் பெற்ற ஆன்மா ஐம்புல நுகர்ச்சி நீங்கி இளைப்பாறும் பொருட்டு மூலாதாரத்தில் ஒடுங்கிக்கிடக்கும் நிலை

**காரியசகலம்**— சரீரத்தைப் பெற்ற ஆன்மா வியாபரித்து ஐம்புலன்களை நுகரும் நிலை (சை)

**காரிய சிவ தத்துவம்**— சிவ தத்துவங்களுளொன்று.

**காரிய சுத்தம்**— சரீரத்தைப் பெற்ற ஆன்மா ஒடுக்கமும் வியாபகமுமின்றி இறைவன் திருவடியை நினைந்து செல்லும் நிலை, (சை)

**காரியமாயை**— மூலப்பிரகிருதி. (சை) (சி.சி 2, 57. நிரம்.)

**காரியாவத்தை**— 1. காரிய கேவலம் காரிய சகலம் காரிய சுத்தம்எனமுத்திறப்பட்டதாய்ச் சரீரத்தைப் பெற்ற ஆன் மாவிற்கு உரிய தாயுள்ள நிலை (சை) 2. காரியாவத்தை மூன் றனுள் ஒவ்வொன்றிலும் ஆன் மாவிற் குளவாகிய சாக்கிராதி ஐந்து நிலைகள் (சை)

**காரியுண்டிக்கடவுள்**— சிவ பெருமான்

**காருடம்**— நூற்றெட்டு உபநிட தங்களுள் ஒன்று

**காரைக்காலம்மையார்**— அறுபத்து மூவர் நாயன்மாருள் பெண்பாலாரானவரும்,பதினோ ராந்திருமுறையில் சில பிரபந்தங் களுக்கு ஆசிரியருமான அடி யார். (பெரியபு.)

**காரோணம்**— மகாசங்கார காலத்தில் சிவபெருமான் ஆன் மாக்களைத் தம்முள் ஐக்கிய மாக்கிக் கொண்ட தலம். (தேவா.)

**கால்**— இயமன். (இரகு. யாகப். 71)

**கால்மகன்**— அனுமன்

**காலக்கடவுள்** 1. இயமன், 2. சங்காரக் கடவுளாகிய சிவன். (தொல். பொ. 81. உரை.)

**காலகாலன்**— சிவன். (தேவா. 1048, 1)

**காலசந்தி**— 1. ஒருநாளின் ஆறுபாகங்களுள் இரண்டி ரண்டு பாகங்கள் கூடுஞ்சந்திக் காலங்களில் கோயில்களிலே செய்யும் பூசை.
2. காலை வழிபாடு.

**காலதண்டம்**— யமனது தண் டாயுதம், (உபதேசகா. சிவ புண்ய. 222)

**காலதத்துவம்**— ஆன்மபோ கங்களை அளக்கும் காலம் என்னும் சுத்தாசுத்ததத்துவம் (சை) (சி. போ. பா. 2, 2, பக். 144)

**காலநேமிரிபு**— திருமால்

**கால புருஷ தாநம்**— யம பிம்ப தானம். அப மிருத்யு தோஷ பரிஹாரத்துக்காக யமனைத் தங்கத்தில், வெள்ளியில் செய்து தானம் கொடுக்கை. (தி.பி.அ)

**காலபைரவர்**— சிவமூர்த்தங் களுள் ஒன்று

**காலருத்திரன்**—1. ஊழிக்காலத் துச் சர்வசங்கார மூர்த்தியான மகாருத்திரன். (திருவிளை, குண்டோ. 19,)
2. குணருத்திரர் (சை)

**காலன்**— இயமன். (புறநா. 240, 5)

**காலனூர்**— யமபுரம். (திவ். திருச்சங். 28)

**காலாக்கினிருத்திர புவனம்**— காலாக்கினிருத்திரனாற் காக்கப்பெறும் உலகம் (சை)

**காலாக்கினிருத்திரம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**காலாக்கினிருத்திரன்**— சங்காரகருத்தாவான உருத்திரன். (சி.சி,1, 34. ஞானப்.)

**காலாதீதன்**— காலம் கடந்த கடவுள். (சி.சி, 2, 54. சிவாக்)

**காலாந்தக மூர்த்தம்**— மார்க்கண்டேயரைச் சிரஞ்சீவி ஆக்கிச் சிவன் காலனை அடக்கிய கோலம்

**காலாந்தகன்**— 1 சிவன். (பாரத. அருச்சுனன்றீர். 81) 2. யமன் 3. சிவலோகத்திலே தட்சிணதிசையோலக்கஞ் சேவிக்கும் பதினெட்டு முக்கிய கணேசரில் ஒருவன்

**காலாரி**— யமனைச் சங்கரித்தற்காக எடுத்த சிவமூர்த்தம்

**காலிகோபுரம்**— திருப்பதி, திருக்காளத்தி முதலிய மலைகளின் மேல் முகப்பிலுள்ள கோபுரம். (Loc)

**காலீசன்**— சிவன்

**காலேசுரவாதி**— காலத்தையே கடவுளென வாதிப்பவன். (தத்) (சி.சி. 8, 12, ஞானப்.)

**காவற்கடவுள்**— திருமால். (திவா.)

**காவாலி**— சிவன். கற்று னஞ்சாடு காவாலி (பதினொ. சிவ. திருவந். 90.)

**காழியர்கோன்**— திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். (தேவா. 190. 11)

**காளகண்டன்**— சிவன், (உரி, நி.)

**காளகண்டி**— துர்க்கை

**காளகந்தரி**— பார்வதி

**காளகர்ணிமுத்திரை**— முத்திரைவகை- (சை)

**காளத்தி**— சீகாளத்தி என்னுஞ் சிவதலம். (பெரியபு, கண்ணப்ப. 100)

**காளாஞ்சி**— வழியில் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கும் அர்க்கிய தீர்த்தத்தை ஏந்தும் சின்னத்திருப் படிக்கம், பாத்திரம் (ஸ்ரீ.த)

**காளாமுகம்**— மாவிரதத்தைப் பெரும்பாலும் ஒத்த சைவசமய உட்பகுதி (சை)

**காளாமுகர்**— சைவருள்ஒருசாரரான காளாமுக வகுப்பினர் (சை). (பிங்.)

**காளி**— 1. துர்க்கை, (கந்தபு, அசுரர்ர்ர்யாக. 40) 2. பார்வதி (சது.) 3. வாயு மூர்த்தியான காளரின் சக்தி. (சித். சா. ஞானபா. வ்யா. 4.)

**காளிங்கமர்த்தனன்**— காலிங் கனென்னும் நாகத்தின் மீது பாதங்களை வைத்து ஆடித்து கைத்த கண்ணபிரான்

**காளிபீடம்**— சத்தி பீடங்களில் ஒன்று

**காளிமர்த்தனன்**— சிவன்

**காற்காறை**— விக்கிரகங்களின் பாதங்களிற் சாத்தும் திருவா பரணம். (S.I.I.ii, 397,)

**கான்மியம்**— மும்மலத்துள் ஒன் றாய் அநாதியாயுள்ள கன்ம மலம் (சை) (சி.சி. 2, 39, ஞானப்)

**கான்முளை**— அநுமான்

**கானநாடி**— காளி

**காஜி**— இஸ்லாம் மதக்குரு (இ)

## கி

**கிங்கிராதன்**— மன்மதன்

**கிசிதன்**— இந்திரன், திருமால்

**கிடந்த திருக்கோலம்**— திரு மால் பள்ளிகொண்ட நிலை

**கிடை**— வேதம் ஓதும் குழாம். (சா.சொ.அ.)

**கிதாப்**— இறைவேதம் (இ)

**கிப்பிரப்பிரசாதனர்**— விநாய கர் (விரைவில் வரம் அருள் பவர்)

**கிரணம்**— சிவாகமங்கள் இருபத் தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது, 335, உரை. )

**கிரந்தகாலக்ஷேபம்**— சமய நூல்களை ஓதுகை

**கிரந்து**— தீர்த்தங்கரருள் ஒருவர் (ச) (திருக்கலம். காப்பு, உரை)

**கிராதமூர்த்தி**— வேட்டுவக் கோலங்கொண்ட சிவபிரான். (சங்.அக.)

**கிராதை**— கங்கை

**கிரிகன்னி**— துர்க்கை. (பாரத பன்னிரண்டாம். 90)

**கிரிசன்**— சிவன், கிரிசனை யுன்னி. (பாரத. அருச்சுனன் றவ. 26.)

**கிரிசை**— பார்வதி. (திரு வானைக். கோச்செங். 81)

**கிரிசை சுதர்**— விநாயகர் (மலைமகளுக்கு மகன்)

**கிரிபூ** — பார்வதி

**கிரியாங்கம்**— சைவ சமயநிலை யில் ஒன்று

**கிரியாசத்தி**— பஞ்சசத்திகளுள் ஒன்றாகி உலக சிருட்டி யாதி களைச் செய்து கன்மங்களுக்கு ஈடாகத் தனுகரணங்களை ஆன்மாக்களுக்குக் கொடுக்குஞ் சிவசத்தி. (சி.சி.1,63)

**கிரியா சைவம்**— சைவம் பதி னாறனுள் கிரியைகளையே முக்கியமாகக் கொள்ளுஞ் சமயம் (சை) (த.நி.போ.256.)

**கிரியாசொரூபன்**— விநாயகன்

**கிரியாதிகாரன்**— விநாயகக் கடவுள்

**கிரியாபாதம்**— சிவாகமத்தில் பராபரக்கிரியைகளின் வகை களைக் கூறும் பகுதி (சை)

**கிரியாபூசை**— கிரியாபாதத் தான் புரியும் பூசை (சை)

**கிரியாமார்க்கம்**— முத்திக்குரிய கிரியையாகிய உபாயம் (சை)

**கிரியாலோபம்**— வைதிகச் சடங்கை அனுட்டிக்கும்போது சுருதி முதலியவை விளைவித்த அங்ககாரியங்களில் நேருங் குறை.

**கிரியாவதி, கிரியாவுத்திரி**— குண்டமண்டலாதிகளையும், வேதிகளையும் புறத்தே அமைத்து ஆகமத்திற்கூறிய படி செய்யும் ஔத்திரிதீட்சை வகை (சை) (சி.சி.8,3,சிவாக்)

**கிரியை**— சிவனை ஆகமங்களில் விதித்தவாறு புறத்தொழிலானும் அகத்தொழிலானும் வழிபடுகை (சை) (சி.போ.பா. 359.)

**கிரியையில் ஞானம்**— அந்தரி யாக உறைப்பின்கண் நிகழும் ஓர் அனுபவ உணர்வு (சை) (சி.போ.பா. 8,1,2,பக். 358)

**கிரியையில் யோகம்**— மானச பூசையாகிய அந்தரியாகம் (சை) (சி.போ.பா.8,1,2,பக். 385.)

**கிரியையிற்கிரியை**— சிவாக மத்திற் கூறிய சுத்தி முன்னாக சிவலிங்கவடிவிற் செய்யும் பூச னை (சை)(சி.போ.பா.பக். 357.)

**கிரியையிற் சரியை**— சிவ பூசைக்கு வேண்டப்படும் உப கரணங்களெல்லாம் செய்து கோடல் (சை) சி.போ.பா,பக். 357)

**கிரீசன்**— சிவன். (பிங்.)

**கிரீடாப்பிரமவாதி**— உலகத் திலுள்ள தோற்றங்களெல்லாம் பிரமத்தின் விளையாட்டென்று வாதிக்கும் சமயத்தான். (தத்துவநிஜா. 94.)

**கிரீந்திரன்**— விநாயகன்

**கிருசாணுரேசன், கிருசாநுரேதன்**— சிவன்

**கிருத்திகாசுதன்**— முருகன்

**கிருத்திவாசன்**— சிவபிரான்

**கிருதாந்தன்**— இயமன்

**கிருபாசனம்**— அருளுக்கு இருப்பிடமான கடவுள் (கி)

**கிருஷ்ணம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**கிருஷ்ணமூர்த்தி**— கண்ணபிரான்

**கிருஷ்ணன்**— கண்ணபிரான் திருமால் அவதாரங்கள் பத்தினுள் ஒன்று

**கிருஷ்ணஜெயந்தி**— கிருஷ்ணன் பிறந்த தினம்

**கிருஷ்ணார்ப்பணம்**— கிரியை முடிவில் அதனைக் கண்ணபிரானுக்கு அர்ப்பிக்குந்தொடர்

**கிருஷ்ணாஷ்டமி**— கிருஷ்ண பகவான் அவதரித்த தினமாகிய கோகுலாஷ்டமி

**கிளத்தி**— சரசுவதி

**கிறிஸ்தவன்** — கிறிஸ்து மார்க்கத்தான்

**கிறிஸ்து**— இயேசுகிறிஸ்துநாதர்

**கிறிஸ்துமஸ்**— கிறிஸ்து பிறந்த திருநாள்

**கிறிஸ்து மார்க்கம்**— கிறிஸ்துவ மதம்

**கிறிஸ்துவம்**—கிறிஸ்து மார்க்கம்

**கின்னரர்பிரான்**— குபேரன். (பிங்.)

**கிஷ்கிந்தை**— சுக்கிரீவன் ஆட்சிபுரிந்த தலைநகரம்

**கிஸ்மத்**—விதி (இ)

**கிஸ்ஸா**— இஸ்லாம் மார்க்கம் பற்றிய கதைகள், இறைத் தூதர்களின் வரலாறு (இ)

**கீதநடை**— சாமவேதம். (திவா)

**கீதவேதம்**— சாமவேதம்

**கீதை**— உத்தம தர்மங்களைக் கூறுந் தெய்வப் பாடல். (மதுரைக். 763, உரை)

**கீர்த்திகேது**— சிவபூசையில் நற்கதிபெற்ற சைவன்

**கீர்த்திலட்சுமி**—புகழாகிய திரு.

**கீழாலவத்தை**— சாக்கிரத்தினின்று துரியாதீதம் வரையிலுள்ள ஐந்து நிலையிலும் ஆன்மா கீழ்நோக்கி நெற்றியிலிருந்து மூலாதாரத்திற்குச் செல்லும் நிலை (சை)

**கீழுலகு**— கீழேழுலகம். (திவ். பெரியாழ். 4,8,6.)

**கீழேழுலகம்**— ஏழுலகங்கள் அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாலம். பூமியின் கீழுள்ள ஏழு உலகங்கள். (சூடா.)

**கீளி**— திருமால்

**கீற்றுநாமம்**— பிராமணருள் ஒரு சாரார் கீற்றாக நெற்றியிலிடும் நாமம்

# கு

**குக்குடத்துவசன், குக்குடதரன்**— முருகன்

**குக்குடதீபம்**— கோழி வடிவான கோயில் விளக்கு. (பரத. ஒழிபி. 42 உரை.)

**குகன்**— முருகன் (திவா)

**குகாக்கிரசுன்**— விநாயகன்

**குகாரணி**— உமை

**குகை**— பார்வதி

**குங்கிலியக்கலயநாயனார்** — அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**குசுமேஷன்**— மன்மதன் (குசுமம்—புஷ்பம் இஷு—பாணம் புஷ்பபாணன்)

**குசேலன்**— கண்ணனது நண்பனும் அவரால் வறுமை நீங்கிப் பெருஞ்செல்வம் பெற்றவனுமாகிய ஒரு முனிவன். (பாகவத, 10,45,1)

**குசைக்கிரந்தி**— தருப்பைப் புவித்திர முடிச்சு. (சிவதரு. ஐவகை. 4.)

**குஞ்சரி**— முருகக்கடவுளின் தேவியான தெய்வயானை. (திருப்பு.)

**குஞ்சித நடம்**— ஒரு காலைத் தூக்கி வளைத்து ஆடும் நடராசர் கூத்து. (மறைசை.-93.)

**குஞ்சித பாதம்**— நடனத்தில் வளையத் தூக்கின நடராசர் தாள்

**குடதேவர்**— அகத்தியர். (S.I.I. ii. Introduction P. 41)

**குடந்தம்**— கைகூப்பி மெய் வளைத்துச் செய்யும் வழிபாடு. குடந்தம் பட்டுக் கொழு மலர் சிதறி. (திருமுரு. 229)

**குடவண்டி**— விநாயகன்

**குடவரைவாசல்**— கோபுர வாயில்

**குடவு**— குமரனாடியு, குடைக் கூத்து

**குடாகாயம்**— குடத்தால் அளவு படுத்தப்பட்ட ஆகாயம் (தத்) (சி. போ., 2,3,2)

**குடிகை**— கோயில் (மணி. 24. 161), கமண்டலம், பர்ண சாலை (மணி. 6,63)

**குடிலை**— 1. சுத்த மாயை. (சி. போ. பா., 22, பக். 133, புதுப்) 2. பிரணவம். குடிலையம் பொருட்கு. (கந்தபு. கடவுள்வா. 14.)

**குண்டம்**— ஓமகுண்டம். (கல்லா 94, 12)

**குண்டர்**— அருகர்

**குண்டலகேசி**— 1. பிறமதத்தவரை வாதில்வென்று தன் மதத்தை நிலைநாட்டிய ஒரு பவுத்தப் பெண்துறவி. (நீலகேசி.)
2. பஞ்சகாவியத்துள் ஒன்றானதும் நாகுதத்தனார் இயற்றியதும் குண்டலகேசியின் சரித முணர்வதுமான நூல். (யாப். வி.)

**குண்டலி**— விநாயகர் சுத்த மாயை. (சி. போ. பா. 2,2, பக். 133.)
மூலாதாரம். (ஔவை. கு. நிணைப்புறு. 2.)

**குண்டலிசத்தி**— வல்லபசத்தி, சுத்த மாயை.

**குண்டலினி**— மகாமாயை. (சி. சி. 1, 57, சிவாக்.)

**குண்டவதிதீக்கை**— ஓமமூலமாகச் செய்யப்பெறுஞ் சமயம், விசேஷம், நிர்வாணம் என்னும் மூன்று தீக்கைகள்

**குண்டிகை**— 1. கமண்டலம். (திவ். இயற். நான். 9)
2. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**குண்டீரம்**— தத்துவம்

**குண்டோதரன்**— பெருவயிறும் குறுவடிவும் உடையனான சிவ கணத்தவருள் ஒருவன். (திருவாலவா 4, 22.)

**குணசைவம்**— பதினாறுவகைச் சைவ சமயங்களுள் சிவ பிரானை எண்குணங்களுடையவராகத் தியானித்து அடிமை செய்பவர்க்கே வீடு என்னுங் கொள்கையுள்ள சைவ சமயம். (சை) (த.நி.போ. வாதிகள் சமயம், 200.)

**குணத்திரயம்**— சாத்துவிகம், இராசதம், தாமதம் மூவகையாகிய மூலகுணங்கள். (மருதூ. 59)

**குணதரன், குணபத்திரன்**— அருகக்கடவுள், கடவுள்

**குணருத்திரர்**— குணதத்துவ நிலையராய் அவாந்தர சங்காரத் தொழிலைச் செய்யும் உருத்திரர் (சதாசிவ. 77)

**குணவதம்**—குணவிரதம். திசை விரதம், அனர்த்த தண்ட விரதம், பரிக்கிரக பரிமாண விரதம். (அ செ. பக் 68)

**குணவிரதம்**— மகாவிரதத்துக்கு அடுத்த படியாகக் கொள்ளும் ஒரு சைன நோன்பு (ச) (சீவக. 2818. உரை.)

**குணஸ்தானகம்**— கருமத்தினின்று நீங்க உபயோகிக்கும் வழிகள். (ச)

**குத்தியோட்டம்**— இரண்டு விலாப்பக்கங்களிலும் கூரான கம்பிகளைக் குத்திக்கொண்டு கோயிலை வலம்வரும் ஒரு பிரார்த்தனை (Loc.)

**குத்பா**— வெள்ளிக்கிழமை தொழுகையிலும் பெருநாள் தொழுகைகளிலும் முஸ்லிம் களுக்கு கடமைகளை நினை வுறுத்த ஆற்றப்படும் பேருரை. (இ)

**குதிரைநம்பிரான்**— கோயில் உற்சவமூர்த்தி ஆரோகிக்குங் குதிரைவாகனம்

**குந்தன், குந்தா**— திருமால் (திவ். திருவாய். 7, 9, 7)

**குந்து, குந்துபட்டாரகர்**— தீர்த்தங்கரருள் ஒருவர் (ச)

**குத்தா**—1. மகமதியப் பள்ளியிற் சில விசேட நாட்களில் நிகழும் மதப்பிரசங்கம் 2. மகமதியமதப் பிரசங்கம் நிகழும் நாள் (இ)

**குஃப்ர்**— இறைமறுப்பு (இ)

**கும்பகலசம்**— விசேடங்களில், நூல் சுற்றி மந்திரத்தாற் சுத்தி செய்து தானியக்குவியலின் மீது வைக்கும் மந்திரகலசம்.

**கும்பன்**— 1. அகத்தியன். (கல் வஙீா. 74.) 2. சிவகணத்தலை வருள் ஒருவன். (கந்தபு. ஏமகூ. 15.)

**கும்பாதிரி**— ஞானத்தந்தையார் R.C.

**கும்பாபிடேகம், கும்பாபிஷேகம்**— கோயில் களில்பிரதிட்டை செய்வதற்கும், சுத்தி செய்வதற்கும் உரிய சடங்கு, குடமுழுக்கு.

**கும்பாலத்தி**— சுவாமிக்கு முன் எடுக்கும் கும்பதீபம் (கோயி லொ. 66.)

**கும்பிபாகம்**— ஏழுநரகத்துள் ஒன்றானதும் பாவஞ் செய்த வரைக் குயச்சூளையிற் சுடுவது போல் வாட்டுவதுமாகிய நரகம் (காசிக. சிவசன்மாவை. 31)

**கும்பிலன்**— சிவன்

**கும்மட்டம்**— கோயில் ஸ்தூபி

**குமரக் கோட்டம்**— கச்சி முருகன் கோயில். (கந்தபு. கடவுள். 18)

**குமரகுருபரர்**— நீதிநெறிவிளக் கம் முதலிய பிரபந்தங்கள் இயற்றியவரும் பதினேழாம் நூற்றாண்டில் விளங்கியவரு மான ஆசிரியர்

**குமரகோட்டம்**— கக்சியிலுள்ள முருகக்கடவுள் கோயில்

**குமரதண்டம்**— குமரக் கட வுளைச் சேனாபதியாகக் கொண்ட தேவர்படை. (திவ். திருப்பள்ளி.6.)

**குமரவேள்**— முருகக்கடவுள். (கந்தபு. ஏமகூட. 6.)

**குமரன்**— முருகன் (கந்தபு. கடவுள். 16) வைரவன். (சூடா.)

**குமரி**—துர்க்கை. விழிநுதற்குமரி. (சிலப். 11, 214.)

**குமாரசுவாமி, குமாரன்**— முருகக்கடவுள். (இறை. 1. உரை, பக். 8)

**குமாரி**— காளி

**குமுதப்படை**— கர்ப்பக்கிருகத்து வெளிப்புற மதிலில் வேலைப்பாடமைந்த அடிப்பகுதி. (S.I.I. 1, 138)

**குர்ஆன்**— இஸ்லாத்தின் புனித இறுதிவேதம், இறுதித்தூதர் நபிகள் நாயகத்திற்கு அருளைப்பட்டது. (இ)

**குர்பானி**— இறைவனுக்காகப் பலிகொடுப்பது (இ)

**குரத்தி**— 1. சைன தவப்பெண் 2. குருபத்தினி

**குரவடிகள்**— சமண மதத்தின் ஆசாரியர். (சா.சொல்.அ.)

**குரவன்**— பிரமன்

**குருக்கள்**—1. ஆசாரியர். (சீவக கடவுள்வா. 1. உரை.) 2. சிவன் கோயிலிற் பூசனைபுரியும் சிவப்பிராமணர்

**குருகூர்**— சடகோபர் அவதரித்த தலமாகிய ஆழ்வார் திருநகரி. (திவ். திருவாய். 1,1,11)

**குருகூர்நம்பி**— சடகோபர். (திவ். கண்ணிநுண். 2)

**குருகை**— சடகோபர் அவதரித்த தலமாகிய ஆழ்வார் திருநகரி

**குருசு**— சிலுவை. (கி.)

**குருத்தோலைஞாயிறு**— ஞாயிறன்று கிறிஸ்துநாதர் எருசலேம் நகர்க்குள் ஜயகோஷத்தொடு பிரவேசித்ததைக் கொண்டாடும் கிறிஸ்தவத்திருநாள் (கி)

**குருதுரியம்**— முத்தாத்துமாவின் சுத்தநிலை (தத்)

**குருநாதன்**— தன் தந்தையாகிய சிவபெருமானுக்குப் பிரணவத்தின் தன்மையை ஓரவசரத்தில் உணர்த்திய முருகக் கடவுள். முகமாறுடைக் குருநாதன் (கந்தரலங். 71)

**குருப்பட்டம்**— கிறிஸ்தவ குருவுக்குக் கொடுத்தற்குரிய பட்டம். (கி.)

**குரும்பரபரை**— ஆழ்வாராசாரியர்களின் வரலாறு கூறும் நூல்

**குருமூர்த்தம்**— குருவாக உபதேசிக்க வந்த கடவுளின் திருமேனி. (தனிப்பா. ii, 246, 581)

**குருமூர்த்தி** — தட்சிணாமூர்த்தி

**குருலிங்கசங்கமம்** — குருவும் சிவமும் திருக்கூட்டம் (சை)

**குருலிங்கம்**— ஷட்விதலிங்கங் களு ளொன்று

**குருக்ஷேத்திரம்**— டில்லி நகரத் தருகிலுள்ள பாரதப் போர் நடந்த பூமி

**குலச்சிறை நாயனார்**— கூன் பாண்டியனது மந்திரியும், சம் பந்த மூர்த்தியின் காலத்தவரும், நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமாகிய அடியார். (பெரியபு.)

**குலசேகரப்பெருமாள்** — சேர மன்னரும், பெருமாள் திருமொழி இயற்றியவரும் ஆழ்வார் பன்னிருவருள் ஒருவருமாகிய அடியார்

**குலசேகரன்படி**— விஷ்ணுகோயிலின் கர்ப்பகிருக வாயிற்படி (வை)

**குலம்**— கோயில், (இரகு, நகர. 46) சக்தி

**குலிசபாணி**— இந்திரன் (வச்சிராயதத்தைக் கையிலுடையவன்) (திருக்காளத். பு.33,25.)

**குலிசன், குலிசி**— இந்திரன்

**குழகன், குழந்தைச் சாமி** — முருகன் (பிங்)

**குழித்தாளிகை** — கோவிலிற் கறி பாயசம் முதலியவற்றோடு நிவேதனஞ் செய்யும் அன்னம். (Loc.)

**குழிதிறத்தல்**— மொகரம் முதலிய சில விழாக்களின் முடிவில் தீயில் நடந்து சென்று பிரார்த்தனை நிறைவேற்றுவதற்காகக் குழிகளில் தழல் பரப்பி வைத்தல்.

**குளவன்**— முருகக்கடவுள்

**குற்றங்களில்லோன்**-- அருகன்

**குறளன்**— வாமனனாக அவதாரமெடுத்த திருமால்

**குறிஞ்சிக்கிழவன்** — முருகன்

**குறான்**— இஸ்லாம் சமயததுன முதனூல்

**குறிப்பிடம்** — கிறிஸ்து பட்டபாடுகளைக் காட்டும் படிமம். (கி)

**குறிப்பு**— பஞ்சகந்தங்களுள் ஐம்பொறிகளும் மனமுமாகிய ஆறன் றொகுதி. (பௌ) (மணி. 30, 189.)

**குறியோன்**— அகத்தியன். (தஞ்சைவா. (109)

**குறுக்கை** — அட்டவீரட்டங்களுள் ஒன்றானதும் சிவபிரான் காமனை எரித்ததுமான சோணாட்டுத்தலம். (தேவா. 191. 1)

**குறும்பலா**— திருக்குற்றாலத்திலுள்ள சிவாலயம். (தேவா.911 11)

**குறுமடல்** — விபூதி வைக்கும் சிறிய மடல். S.I.I. ii, 144)

**குறுமுனிவன்** — அகத்தியன் (சேதுபு. நாட்டுப். 1)

**குறையலாளி** — திருமங்கையாழ்வார். (திவ். பெரியதி. 4.4, 10)

**குன்றவில்லி** — சிவன் (மேரு மலையை வில்லாகக் கொண்டவன்) (திவா)

**குன்றெறிந்தோன்** — முருகன் (பிங்.)

**குன்றேந்தி**— திருமால்

## கூ

**கூசுமாண்டர்** — நரலோகங்களுககுத் தவைவர் (சை) (சி. போ.பா, 2,3, பக். 204.)

**கூட்டுகை**— உபதேசிக்கை

**கூடகிருதயன்**— சிவன்

**கூடம்**— மன்றாக அமைந்த தேவகோட்டம். (திருக்கோ. 129).

**கூடாரப்பண்டிகை**— அறுவடை காலத்தில் ஒன்பது நாள் நடைபெறும் யூதர்களின் பெரிய பண்டிகை. ஒரு கிறிஸ்தவத் திருநாள். (கி)

**கூடிலி**— மன்மதன்

**கூத்தம்பலம்** — அபிநயித்தாடுதற்குரிய கோயிலரங்கு. T.A'S. ii, 143.)

**கூத்தன்**— உயிர், (நாலடி.26 சிவன் (திருக்கோ. 129)

**கூத்தாண்டவர்** — ஒரு கிராம தேவதை.

**கூத்துகந்தோன்**— சிவன்

**கூத்துல்குலூப்** — ஆன்மீக உணவு; நெஞ்சங்களுக்கான உணவு (இ)

**கூர்மபுராணம்**—பதினெண்புராணங்களுள் திருமால் கூர்மாவதாரம் எடுத்தபொழுது உபதேசித்த புராணம்

**கூர்மம்** — திருமாலின் தசாவதாரத்தொன்று. (பிங்.)

**கூரயிலேந்தி**— முருகன்

**கூற்றம்**— யமன். (தொல். பொ. 79.)

**கூற்றன்**— யமன் (கந்தரந்) .65)

**கூற்று**— யமன். (குறள். 765)

**கூற்றுகைத்தோன்** — சிவன். (பெரியபு. திருஞான. 886.)

**கூற்றுவநாயனார்**_ அறுபத்து மூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபு.)

**கூற்றுவன்**— யமன். (நைடத. நளன்தூது. 16)

# கெ

**கெவுடு**— பொன் அல்லது வெள் ளிக்குவளைக்குள் வைத்துக் கட்டிக் கையில் அல்லது கழுத் தில் அணிந்துகொள்ளும் உருத் திராக்கம். Loc.)

**கெவுரிசங்கம்** — கவுரிசங்கரம் பார்க்க.

# கே

**கேசவன்**— 1. திருமால். (திவ். திருவாய். 2,7,1,); 2. சிவன்

**கேசவார்த்தம்** — விஷ்ணு தவம்புரிந்து சிவமூர்த்தியின் திருமேனியிற் கலந்த திருவுரு

**கேசிகை**— திருமால்

**கேட்டவிவு**— கருமங்கள் சில கெட்டும்சில உபசமமடைந்தும் நிற்கும் நிலை (ச.)

**கேட்டுமுட்டு**— புறச்சமயத்தோ ரைப் பற்றிக் கேள்விப்பட்ட தனால் சைனர் மேற்கொள்ளுந் தீட்டு. (ச)

**கேத்திரக்கியன்** — ஆன்மா. கேத்திரக்கியனைத் தொடர்ந்து (வாயுசங். பஞ்சப்பி. 2.)

**கேத்திரபாலன்**_1.தலங்களைக் காக்கும் தேவதை; 2. வைர வன். (பிங்.)

**கேத்திரம்**— புண்ணியத்தலம்

**கேத்திரி**— திருமால். திப்பிய நான்முகன் கேத்திரி புராந்தகன் (வேதா. சூ. 71)

**கேதன்**—காமன்

**கேதாரகௌரிவிரதம்** — ஐப் பசிக் கிருஷ்ணசதுர்த்தசியில் கேதாரதலத்திலுள்ள கௌரி யை நினைந்து பெண்பாலார் அனுட்டிக்கும் நோன்பு.

**கேதாரம்** — இமயமலையிலுள்ள ஒரு சிவதலம். (தேவா. 1152)

**கேதாரன்**—சிவன்

**கேவலக்கிடை**—ஆணவத்தால் மறைப்புண்டு அமூர்த்தமாய்ச் செயலற்றுக்கிடக்கும் ஆன்மாவின் நிலை. (சை) (சி.சி.4,38)

**கேவலக்கிழவன்**— அருகக்கடவுள் (ச) தோமறு கேவலக்கிழவன். (சீவக. 856)

**கேவலசாக்கிரம்** — கேவலக் கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன் கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சாக்கிரம் (சை)

**கேவலசுழுத்தி** — கேவலக் கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன்கணின்றுமீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சுழுத்தி. (சை)

**கேவலசைதந்யம்** — ஆன்மா ஞான சொருபமாக உள்ள நிலை (சை) (சித். சிகா.197, 2, உரை)

**கேவல சொப்பனம்**-- கேவலக் கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன்கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய சொப்பனம் (சை)

**கேவலஞானம்**- திரிகாலஞானம் (ச.) கேவல ஞானத்துக்கு முன் காணுங் காட்சியை (சீவக. 3081 உரை.)

**கேவலதுரியம்** — கேவலக் கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன்கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய தூரியம். (சை)

**கேவலதுரியாதீதம்**— கேவலக் கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன்கணின்று மீளும் பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றாகிய துரியாதீதம். (சை)

**கேவலப்பொருள்**— பரப்பிரமம் (குறள் 358, உரை.)

**கேவலபூசை** — சிவலிங்கத்தோடு உமாதேவியையுங் கூட்டிப் பூசித்தல் (ம.த.அ)

**கேவலம்**— 1. மோட்சம். (பிங்) 2. கேவல ஞானம். (திருநூற். 88) 3. கேவலாவத்தை. (சி.சி. 4, 37)

**கேவலவுணர்வு** — பரஞானம். குறள், 352, உரை)

**கேவலன்**— கைவல்ய பதவியடைய முயல்பவன். (அஷ்டாதச. அர்த்தபஞ். 26.)

**கேவலாவத்தை**— கீழாலவத்தைபார்க்க. காரண கேவலம். (சை) (சிவப். கட்)

**கேவலி—** கேவல ஞானமுள்ளவன் (ச) (திருநூற். 10)

**கேவலோத்பத்தி —** பஞ்சகல்யாணத்தொன்று (ச)

**கேனோபநிடதம் —** தசோபநிடதத்தொன்று

## கை

**கைகாட்டிவிநாயகர்—** திருநாட்டியத்தான் குடியிலுள்ள பிள்ளையார்

**கைடவை—** துர்க்கை

**கைடவசிதன், [கைடவாரி]—** திருமால் (கைடவனை வென்றோன்)

**கைடவன்—** திருமாலாற் கொல்லப்பட்ட ஓர் அசுரன். (திவ். இயற். 3, 66)

**கைடபீ—** துர்க்கை

**கைத்தொண்டு—** கையினாற் செய்யும் கோயிற் பணிவிடை

**கைதட்டிப்பண்டாரம்—** வாய்திறவாதுகைதட்டிப்பிக்ஷை வாங்கும் சைவப்பண்டாரம், (Loc.)

**கைதைச்சுரிகையன்—** மன்மதன். (தாழையை வாளாக உடையவன்) (பிங்.)

**கைந்நூல்—** கையிற்கட்டும் காப்புநாண். (குறுந். 218)

**கையொலி—** பெரும்பாலும் ஐந்துமுழமுள்ளதும் விக்கிரகங்களுக்குச்சாத்துவதுமான சிறிய ஆடை. கையொலியைக் தலையிலே கட்டுகிறதும். (கோயிலொ.)

**கைலாச நாதன், கைலாச மந்திரன்—** சிவன்

**கைலாயம்—** அஷ்டகுலபர்வதங்களில் ஒன்றும் சிவபிரான் வாழ்விடமுமான ஒருமலை.

**கைலி—** திருமஞ்சன காலத்தில் பெருமாளுக்குச் சாத்தும் கட்டான் துணி. (ஸ்ரீ.த) அழகிய மணவாளப் பெருமாள் சாத்தியருளின கைலியில் (கோயிலொ.)

**கைவல்லியம்—** 1 நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று 2. மோட்சம். (திவா.)

**கைவலச்செல்வன்—** அருகன் (மோட்சமாகிய செல்வத்தை உடையவன்). (சீவக. 2741.)

**கைவலம்—** மோட்சம். (பிரபோத. 42, 15).

**கைவழக்கம்—** கோயிலில் பூசகர் முதலியோருக்கு உரிய உரிமை.

# கொ

**கொச்சைமுனி**— திருஞான சம்பந்தர் (சீர்காழியிற் பிறந்த முனிவர்). சிட்டர்புகழ்கொச்சை முனி. (திருவாலவா. 38,1)

**கொட்டி**— 1. கொடுகொட்டி (சிலப். 3, 14, உரை.)
2. கோபுரவாசல்

**கொட்டிட்டை**— தஞ்சாவூர் ஜில்லாவில் கருவிலி என்னும் தலத்தில் உள்ள சிவாலயம் (தேவா. 602. 1.)

**கொடவர்**— கோயிற்கொத்துக் களுள் ஒரு பகுதியார். கொடவர் கொடுவாளெடுப்பார். (கோயி லொ. 44.)

**கொடிக்கம்பம்**—கோயில்களின் முன்புறம் கொடியேற்றுவதற் காக நடும் மரம். (கோயிலொ. 73.)

**கொடிக்கவி**— தில்லையிலுள்ள கோயிலிற் கொடியேறும்படி உமாபதி சிவாசாரியரால் இயற் றப்பெற்றதும் மெய்கண்ட சாத் திரம் பதினான்கனுள் ஒன்று மான சைவ சமய நூல்

**கொடியேற்றுதல்**— கோயிலில் திருவிழாத் தொடக்கத்தில் துவசம் உயர்த்துதல்

**கொடிவாகனன்**— சனி. (சோதிட. சிந்.)

**கொடுகொட்டி**— பதினோ ராடல்களுள் திரிபுரமெரித்த காலையில் சிவனாடிய கூத்து. (சிலப். 6, 43.)

**கொடுந்தொழிலாளன்**— யமன். (மணி. 6, 100)

**கொண்டல்வண்ணன்**— திருமால். (திவ். அமலனாதி. 10.)

**கொண்டிகை**— கமண்டலம்

**கொண்டைத்தாவடம்**— சிரசில்அலங்காரமாகச் சாத்தும் மலர். (கோ. த.)

**கொத்து**— கைங்கர்யம்

**கொதி**—பிரசாதம். (சா.செ.அ.)

**கொம்பாலயம்**— தெய்வம் தங்குவதாகக் கொண்டு பூசிக் கப்பெறும் சில மரக்கிளைகள். (Loc)

**கொரான்**— குறான் (இஸ்லாம் சமயத்தின் முதனூல்)

**கொல்லாவிரதியர்**— 1. கொல் லாமையை நோன்பாக உடை யவர். (தாயு. பாயப்புலி. 22.)
2. சைனர்

**கொல்லா வேதம்**—சைனாகமம்

**கொல்லா வேதன்**—அருகன் (சூடா.)

**கொலைமகள்—** துர்க்கை. கொலைமகள் கவினை. (பிர மோத். 7, 26.)

**கொலைவன்—** சிவன் (சங்கார கர்த்தா) (கலித். 103, 14).

**கொள்கையிடம்—** தவச் சாலை. (மணி. 28,67)

**கொற்றவை [கொற்றி],—** துர்க்கை (பெருங். இலாவாண. 2, 31).

**கொற்றவைநிலை—**துர்க்கைக் குப் பலியிட்டுப் பரவும் புறத் துறை. (தொல். பொ. 59.)

**கொற்றியார்—** துளசிமாலை முதலிய சின்னங்களையணிந்து திருமாலடியாராய்த் திரியும்பெண் துறவிகள்

**கொன்றைகுடி—**சிவன். (தி

# கோ

**கோகத்தன்—** இறைவன்

**கோகநகை—** திருமகள்

**கோகநதன்—** சிவன்

**கோகநதை—** இலக்குமி

**கோகர்ணம் கோகரணம்—** மலைநாட்டில் உள்ள ஒரு சிவ தலம். (தேவா. 1182, 9)

**கோகழி—** திருவாவடுதுறை என்னும் சிவதலம். (திருவாச, 1, 3)

**கோகன்னம்—** கோகர்ணம்

**கோகனகத்தி, கோகனகை—** இலக்குமி, கலைமகள்

**கோகனதன்—**பிரமன். (தாமரை யிற் பிறந்தவன்.) (கோயிற்பு. நடரா. 68.)

**கோகனதை,கோகனாசனி—** இலக்குமி (தாமரையில் இருப் பவள்) (சேதுபு. சேதுபந். 37)

**கோகுலம்—** கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி. திருச்செந். பு. 18, 26)

**கோகுலாஷ்டமி—** கண்ணன் அவதரித்த ஆவணி மாதத்துக் கிருஷ்ணாஷ்டமி

**கோச்செங்கட்சோழ நாயனார்—** நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகிய சோழவரசர். (பெரியபு.)

**கோசிகம்—**சாமவேதம். (சூடா)

**கோட்டம்—** கோயில். (சிலப். 14,10)

**கோட்டி (கோஷ்டி)—** கோபுரவாசல். (சிலப் 30, 62)

**கோடரி கோடவி—** துர்க்கை (யாழ். அக.)

**கோடிரன்—** இந்திரன்

**கோணங்கி—** திருமால் கூத்து

**கோணப்பெருமான்—** ஏகபாத சிவமூர்த்தம்

**கோத்திரமின்மை—** அருக னெண்குணங்களுள் மறுபிறப் புக்குரிய கருமமில்லாமை (ச). (பிங்.)

**கோத்திரி—** தெய்வங்களுக்குப் படைப்பிட்டு அதன்பேரில் நாட்டும்திரி அல்லது சிறுபந்தம் (Nāñ)

**கோதண்டபாணி—** இராமன். (திருப்போ. சந்நிதி. மாலை,66)

**கோதண்டவெளி—** நெற்றிக் கண்

**கோதை—** ஆண்டாள்

**கோபதி—** இந்திரன், (பிங்). சூரியன், சிவன்

**கோபாலதாபனம்—**நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**கோபாலம்—**புரட்டாசியில்சனிக் கிழமை தோறும் பிச்சை எடுக் கிம் விரதம் (Madr.)

**கோபாலன்—** கிருஷ்ணன். (பாரத. கிருட். 34.)

**கோபி—** கோபிசந்தனம். கோபி நாமம்

**கோபி-சந்தனம்—** ஒருசார் விஷ்ணுபத்தர்கள் ஊர்த்துவ புண்டரமாக நெற்றியிலணி வதும் வெண்மைகலந்த மஞ்சள் நிறமுள்ளதுமாகிய ஒருவகைத்) திருமண் (பிரபோத. 10, 18.

**கோபிநாதன்—** கிருஷ்ணன்

**கோபிநாமம்—** விஷ்ணுபத்தருள் ஒருசாரார் கோபிசந்தனத்தால் அணியும் ‡ெகுறிக்நற்.

**கோபுரம்—** கோயிலின் பெரு வாயில். (திவா.)

**கோமடந்தை—** இராஜ்ய லட்சுமி. (பாரத. அருச்சுனன் நீர். 40)

**கோமலம்—** சிவன் கையிலுள்ள மான்

**கோமுகை—**பசு முதலியவற்றின் முகமாய்ச் செய்யப்பட்ட அபிஷேக நீர் வரும்வழி

**கோயில்—** 1. ஆலயம். (பரிபா பக். 174, செய்யுள், 2.)
2. சிதம்பரம். (தேவா.)
3. ஸ்ரீரங்கம். (திவ். பெரியாழ். 2,9,4) 4. வீரசைவர் தரிக்கும் இலிங்கசம்புடம். (Loc)
5. கோயிற்பற்று

**கோயில்மஹாஜநம்**-பெருமாள் எழுந்தருளும்போது சேவார்த்தி களை தரையில் பட்டையடித்து வழி விலக்குகிவறன். (கே.த)

**கோயில் வாரியம்—** கோயில் விசாரணைச் சபை. S.I.I.iii. 188)

**கோயிலாழ்வார்—** ஆராத தனைப்பெட்டி, கருப்பக்கிருகம். (திவ். திருமாலை, 21, வ்யா. 76.)

**கோயிற்கட்டி—** 'உண்டைக் கட்டி (கோயிலில் 'விநியோகிக் கும் சாதவுருண்டை)

**கோயிற்கணக்கு—** ஊர்தோறும் கிறிஸ்தவரின் விவாகம். ஜனனம், மரணம், முதலியவற் றைப் பதியும் கோயிலுள்ள கணக்குப் புத்தகம்,(யாழ்.அக)

**கோயிற்காலம்—** கோயில்களில் அவ்வக்காலத்துச் செய்யப்படும் பூசை

**கோயிற்கூட்டி—** கோயிலைப் பெருக்கிச் சுத்தம்செய்பவள் (கி)

**கோயிற்சுற்றி—** கோயிலை அடுத்துள்ள இடம்

**கோயிற்பண்ணியார் விருத்தம்—** நம்பியாண்டார் நம்பியால் இயற்றப் பெற்றுப் பதினோராந் திருமுறையுள் சேர்க்கப்பெற்றுள்ள ஒரு பிர பந்தம்

**கோயிற்பற்று—** 1. கோயிலுக் குரிய நிலம் முதலியவை 2. கிறிஸ்தவக் கோயிலின் அதி காலத்திற்குட்பட்ட ஊர்ப்பகுதி

**கோயிற்பிரகாரம்—** கிறிஸ்தவர் கோயிலுள் சவம்புதைக்குமிடம்

**கோயிற்பிரதிஷ்டை—** 1.கும்பாபிஷேகம்2. கிறிஸ்தவக் கோயிலின் தாபனம்

**கோயிற்பிள்ளை—** கிறிஸ்தவக் கோயிலின் அதிகாரி

**கோயிற்புராணம்—** சிதம்பர மான்மியத்தைக் குறித்து உமா பதிசிவாசாரியர் இயற்றிய புராணம்

**கோயிற்பெருச்சாளி—** கோயிற் சொத்தை அபகரிப்போன். (தனிப்பா.)

**கோரகை—** பௌத்தபிட்சுக் களின் பிச்சைப்பாத்திரம். (மணி. 5, 59, அரும்.)

**கோரட்சகன் கோரட்சன்—** சிவன்

**கோரதரம், கோரரூபம்—** நரகவிசேடம். (சிவதரு.சுவர்க்க நரக. 107.)

**கோரன்—** சிவன்

**கோராகோரம்—** நரகவிசேடம்

**கோராதனம்—** யோகாசன வகை (சை)

**கோரான்—** குறான் (இ)

**கோரி—**பார்வதி, (திருமந்.1110) முகமதியார் கல்லறைச் சமாதி

**கோலகண்டன்**— திருமால்

**கோவணன்**— சிவன். (சது.)

**கோவிடாணம்**— முத்திரை வகை(சை)

**கோவிந்தன்**—திருமால். (பிங்.) இந்திரன், பிரமன்

**கோவியன்**— யமன்

**கோழிக்கொடியோன்**— 1. முருகக்கடவுள். (தேவா. 253, 2) 2. ஐயனார். (திவா.)

**கோளம்**— சிவலிங்கம்

**கோனேரி**— திருப்பதியிலுள்ள சுவாமிபுஷ்கரிணி என்னும் பொய்கை. (திவ். பெருமாள். 4, 1).

**கோஷ்டி**— 1. தெய்வசந்நிதி முதலியவற்றில் திருவாய்மொழி முதலியன சொல்வார் இருக்கும் வரிசை (வை) 2. கோபுர வாயில்

## கௌ

**கௌசலை**— இராமன் தாய். (திவ். பெருமாள். 8,1)

**கௌசிகி**— துர்க்கை

**கௌத்துவம்**— திருப்பாற் கடலில்தோன்றியமணி. இதனை விஷ்ணுமூர்த்தி மார்பணியாகக் கொண்டனர்

**கௌதமம்**—தருமநூல் பதினெட்டனுள் கௌதமரால் இயற்றப் பட்ட நூல்

**கௌதமன்**— புத்தன்

**கௌதமி**— பார்வதி

**கௌமாரம்**— முருகக்கடவுளே பழம்பொருளென்று வழிபடுஞ் சமயம்

**கௌமாரி**— 1. சத்தமாதர்களுள் ஒருத்தி 2. மாகாளி. (பிங்.)

**கௌமுதீ**— திருவிழா

**கௌமோதகி**— திருமாலின் தண்டாயுதம் (பிங்.)

**கௌரி**— பார்வதி. (திவா.) காளி-(அரிச். பு. துதி.)

**கௌரிசங்கம்**— இரட்டை உருத்திராட்சம் இது சத்திசிவ வடிவமாயுள்ளது

**கௌரிசேயன்**— குமரன், விநாயகன்

**கௌரிதனையன், கௌரிமைந்தன்**— முருகன் (பிங்.)

**கௌரிவிரதம்**— ஐப்பசி மாதத்தில் கௌரியை நோக்கிப்புரியும் நோன்பு

**கௌவியம்**—பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பசுவினின்று பெறப்படும் பொருள்கள். (சூத. சிவமா. 2, 23)

**கௌளர்**— கௌடர், சத்தியை வாமதந்திரப்படி பூசித்து வழிபடும் சமயத்தோர்

**கௌஷீதகி**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**கௌஸ்துபம்**—திருமால் மார்பிலணியும் மணி.

## ச

**சக்கரத்தண்ணல்,**
**சக்கரத்தலைவன்,**
**சக்கரத்தவன்**— திருமால்

**சக்கரத்தாழ்வார்**— திருமாலின் சக்கரமான சுதரிசனாஷ்வான்

**சக்கரதரன், சக்கரதாரி**— திருமால்

**சக்கரதானர்**— சிவ பேதங்களுளொன்று (சை)

**சக்கரப்பொறி**— வைஷ்ணவத்தைப் பெறுதற்கு அடையாளமாக ஞானகுருவால் வலத்தோளில் பொறிக்கப்படும் சக்கர முத்திரை. உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு (திவ். பெரியாழ், 5,4,1)

**சக்கரபாணி**— திருமால். (திவ். திருச்சந். 14)

**சக்கரம்**— தேவேந்திரசக்கரம் (அ.செ. 56)

**சக்கரவர்த்தித்திருமகன்**— இராமபிரான். (ஈடு, 6,4,2.)

**சக்கரவாளக் கோட்டம்**— காவிரிப் பூம்பட்டினத்தின் மயானத்தின் பக்கத்தில் உள்ளது; இதனுல் இது சுடுகாட்டுக் கோட்டம் எனவும் வழங்கும்; எல்லாத் தேவர்களையும் உட்கொண்டது; மயனுல் நிருமிக்கப் பட்டது; சம்பாதி கோயில், கந்திற் பாவை, உலக அறவி என்பன. இதன் உட்பகுதியாய் அமைந்தவை; இதில் முனிவர் பலர் இருந்து தவம் செய்தனர். (மணி.)

**சக்கரன்**— இந்திரன்; திருமால் (யாழ். அக.)

**சக்கரஸ்தாபனம்**— 1. பிறர் செய்த தீங்கைப்போக்க மந்திரமமைந்த சக்கரத்தைப் பதித்து வைக்கை. 2, கோயிலில் மூலஸ்தானத்தின்கீழ் யந்திரத்தைப் பதித்து வைக்கை.

**சக்கராங்கனம்—** வைஷ்ண வத்தைப் பெறுவதற்கு அடை யாளமாக ஒருவரது தோள்மீது ஞானாசாரியர் சங்கு சக்கர முத் திரைகளைப் பொறிக்கை.

**சக்கராயுதன்—** திருமால். (திவா.)

**சக்கராயுதி—** துர்க்கை

**சக்கவாலர்—** சக்கரவாளகிரியி லிருப்பவரான வியந்தர தேவர் கள். (மேருமந். 574)

**சக்கிரபாணி—** துர்க்கை. (சூடா.). திருமால்

**சக்கிரன்—** இந்திரன். (பிங்.)

**சக்கிரி—** திருமால், இந்திரன் (சூடா.)

**சக்குதானம்—** விக்கிரகத்தின் கண்களை நீராற் சுத்தி செய்யும் பூசைவகை.

**சக்திபூசை—** சத்தியைப் பூசிக் கும் வாமமார்க்கம்.

**சக்ரதாதா—** சிவன் (திருமாலுக் குச் சக்கிராயுதத்தைக் கொடுத்த கோலம்)

**சகச்சிரம்—** சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது. 332. உரை)

**சகசநிட்டை—** அப்பியாசத் தால் ஒருவனுக்கு இயற்கையா யமைந்த நிட்டை. (தணிகைப்பு நந்தியு. 147)

**சகசமலம்—** உயர்கட்கு இயல் பாயுளதாகிய ஆணவமலம். (சிவப்பிர. 2,20, உரை.)

**சகசாதிசயம்—** அதிசய மூன்ற னுள் ஒன்று. (ச) (சீவக. 2813 உரை.)

**சகசோதி—** பேரொளி; கடவுள்

**சகடகனன்—** கண்ணன், திரு மால்

**சகத்திரதாரம்—** திருமாலின் சக்கரப்படை (யாழ். அக.)

**சகத்திரதாரை—** பல கண் களுள்ள அபிடேகத்தட்டு. சகத்திரதாரையாலே... நீராட்டி. (விநாயகபு பட்டாபி. 74)

**சகத்திர நாமம்—** திருமாலி னது நாபித்தடத்தில் சூரிய னைப்போல விளங்கும் ஆயிர விதழ்த் தாமரை

**சகத்திர பாதன்—** திருமால்

**சகதாத்திரி—** துர்க்கை (உலகத் திற்குத் தாய்) (யாழ். அக.)

**சகதாத்துமா—** கடவுள் (உலகத்திற்கு உயிரானவன்)

**சகதீசன்—** கடவுள்

**சகதேவி—** இலக்குமி, பூமிதேவி

**சகந்நாதம்**— ஒரிஸா மாகாணத்தில் பூரி ஒன்று வழங்கும் விஷ்ணு ஸ்தலம்

**சகந்நாதன்**— 1. கடவுள் 2. பூரியில் கோயில் கொண்டுள்ள திருமால்

**சகநாதன்**— சிவன், திருமால்

**சகமார்க்கம்**— சாருப்பியத்தைப் பெறுதற்குரிய யோகநெறி (சை) (சி.சி. 8, 21)

**சகமாதா**— பார்வதி

**சகமீன்றவள்**— உமை. (பிங்.)

**சகலகலாவல்லி**— சரசுவதி. சகலகலாவல்லிமாலை. (குமர. பிர. சகல.)

**சகலபாசனம்**— அருகன் முக்குடையுள் ஒன்று. (சூடா.)

**சகலமங்கலை**— பார்வதி. யாழ். அக.)

**சகலர்**— ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலமுடைய ஆன்மாக்கள். (திருமந். 498.)

**சகலாத்தன்**— அருகருள் நிகண்டாவாதிகளால் கடவுள் என்று கொள்ளப்படுபவர். (ச)

**சகலாவத்தை**— மேலாலவத்தை. (சிவப். கட்)

**சகளத்திருமேனி**— சிவனது உருவடிவம்

**சகளதத்துவம்**— கிரியை மிகுந்து ஞானங் குறைந்த ஈச்சுரதத்துவம் (சை)

**சகளநிட்களம்**—இலிங்கமாகிய சிவனது அருவுருவத் திருமேனி (சை) (சி.போ.பா. 8, 1, 359.)

**சகளநிட்களன்**— சகள நிட்களமும் ஆகிய இருதன்மையுங் கூடிய சிவன்

**சகளபஞ்சகம்**— மகாவிரதருடைய சகளவுபாசனைக்குரிய மது மச்சிய மாங்கிச முத்திரை இணைவிழைச்சு என்பன.

**சகளம்**— உருவத் திருமேனி (சை) சகளமாய் வந்தென்றுந் தீபற. (திருவுந்தி 1)

**சகளன்**— உருவத் திருமேனி கொண்ட சிவன். (சி.சி. 1,65. ஞானப்.)

**சகஸ்திராட்சன்**— இந்திரன் (ஆயிரங்கண்ணுடையோன்)

**சகஸ்ரநாமம்**— கடவுளின் ஆயிரம் நாமங்களைக் கூறும் நூல்

**சகஸ்ரநாமார்ச்சனை**— கடவுளுடைய ஆயிரநாமங்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லி மலர் முதலியவற்றை இட்டுப் பூசிக்கை

**சகஸ்ராார சக்கரம்**— புத்தரது பாதத்திலுள்ள இரேகை விசேடம். (மணி 5, 104, உரை)

**சங்கக் குழையோன்**— சிவன். (திருக்கருவை. கலித் 56)

**சங்கட்ட சதுர்த்தி**—விநாயகக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கப்பெறும் ஒருவகை விரதம். சங்கட்டசதுர்த்தி முறைமையிற் செய்து (விநாயகபு 47, 6)

**சங்கணித்துறைவன்**— தாமரபரணி நதியிலுள்ள துறையில் வாழும் நம்மாழ்வார். (தி.பி.அ.)

**சங்கபாணி**— திருமால்

**சங்கம்**— 1. சைன பௌத்தர்களின் சங்கம் 2. சங்கம் என்பது பௌத்தக் கருத்துக்களை ஆராயவும், உரையாடவும் உரிய இடம். (பௌத்தம். பக் 52)

**சங்கமம்**— சங்கமம் என்பவர்கள் வீரசைவ ஜீவன் முத்தர்கள். இவர்களைச் சரலிங்கம் என்று சொல்லும் வழக்கம் உண்டு. வீரசைவர்களை வழி நடத்திச் செல்லும் பணியில் ஈடுபட்டவர்கள். (வீரசைவம் பக். 181)

**சங்கமர்**— ஒரு சார் வீரசைவர்

**சங்கமரூபம்**— சிவரூபம் (சங் அக.)

**சங்கமாண்டி**— இலிங்கங்கட்டியருள் ஒருவகையார்

**சங்கமுத்திரை**— வலக்கைப் பெருவிரலினுனி சுட்டுவிரலினடியைத் தொடும் முத்திரை. (சைவச பொது. 518)

**சங்குமேந்தி**— திருமால். (பிங்)

**சங்கபாணி**— திருமால்

**சங்கர்ஷணன்**— திருமாலின் வியூகமூர்த்தங்களுள் ஒன்று. (அஷ்டாதச. தத்துவ பக். 23)

**சங்கரநாராயணன்**— ஹரிஹரவடிவமான சிவமூர்த்தம்

**சங்கரன்**— 1. சிவன் சங்கரன் காண்....(தேவா 725.6)
2. ஏகாதசருத்திரருள் ஒருவர். (திவா.)

**சங்கராசாரியர்**— அத்வைத மதஸ்தாபகரும் உபநிஷத்து பிரமசூத்திரம் பகவற்கீதை கட்குப் பாஷ்யங்களும் பிற வடமொழி நூல்ளுகம் செய்தவருமாகிய பெரியார்.

**சங்கரி**— பார்வதி (பிங்)

**சங்கருடணன்**— திருமால், பலராமன்

**சங்கற்ப சம்பன்,**
**சங்கற்பசன்,**
**சங்கற்பசன்மன்,**
**சங்கற்பயோனி**
**சங்கற்பவன்**— மன்மதன்

**சங்காபிஷேகம்**— 1. சங்கத்தினுல் சுவாமிக்குச் செய்யும் அபிஷேகம் 2. ஒருவரை ஆசாரியனுக்குதற்குக் கடவுள் முன்னிலையில் அவர்க்குச் சங்கினுல் செய்யும் அபிஷேகம்

**சங்காரகர்த்தா**— சிவன்

**சங்கார தூதன்**— அழித்தற்ருெழிலுக்குரிய தேவதூதன் (கி)

**சங்காரமூர்த்தி**— அழித்தற்றொழிலைப் புரியுஞ் சிவன் (சி. சி. 1, 47, மறை)

**சங்கிதாமந்திரம்**— மந்திர வகை (சை)

**சங்கிராந்த சமவாதம்**— பாசுபதம் (சி.போ.பா. அவை பக், 50)

**சங்கிராந்தவாதம்**— மலம் நீங்கிய ஆன்மாவின்கண் திருவருள் பிரதிபலித்து அதனை அருட்சொரூபம் ஆக்கும் என்று கூறும் சமயம் (சை) (சங்கற்ப 11)

**சங்கிலியார்**— சுந்தரமூர்த்தி நாயனார் மனைவியிருவருள் ஒருத்தி (பெரியபு. ஏயர்கோன் 211)

**சச்சிதானந்தம்**— உண்மை, அறிவு, ஆனந்தம் என்னும் பரம் பொருட்குரிய முக்குணங்கள்

**சச்சிதானந்தன்**— உண்மை, அறிவு, ஆனந்தம் என்னும் முக்குணங்களையுடைய பரம் பொருள்

**சச்சிதானந்தை**— உண்மை, அறிவு, ஆனந்தம் என்னும் முக்குணங்களையுடையசக்தி சொரூபம் (சி.சி. 1, 48, சிவாக்)

**சசிசேகரன், சசிதரன்**— சிவன் (சந்திரனைத் தலையில் தரித்தவன்)

**சசிபதி**— இந்திரன்

**சசிபூஷணன்**—சிவன்

**சஞ்சலை**— இலக்குமி (சங். அக.)

**சஞ்சன்**— சிவன், பிரமன்

**சட்சுதீட்சை**— நயனதீட்சை (சை)

**சட்டரில்**— வில்வம் (மலை.)

**சடக்கரம்**— குமரக்கடவுளுக்குரிய ஆறெழுத்துக்களாகிய மந்திரம்

**சடகோபம்**— விஷ்ணுவாலயங்களில் தரிசிப்பவர்களது முடியில் வைத்து அனுக்கிரகிப்பதற்கும் பிறவற்றுக்குமாக அமைக்கப்பட்டு சுவாமியின் முன்பாக வைக்கப்பெற்றுள்ள திருமாலின் திருவடிநிலை. சடகோபஞ்

சித்திக்க (அழகர்கலம் காப்பு 1)

**சடகோபன்—** நம்மாழ்வார். (திவ். திருவாய் 1,1,1)

**சடங்கு—** காம்யகர்ம, வைதிகக் கிரியை (தி.பி.அ)

**சடத்துவா—** Six paths of liberation. அத்துவா பார்க்க. (ஞாஞ. 68, 1, உரை)

**சடாக்கம்—** முருகனது ஆறு எழுத்தால் ஆன மந்திரம்

**சடாக்கரி, சடாட்சரி—** பார்வதி

**சடாதரன்—** சிவன் (சடை தரித்தவன்) (பிரமோத். 16, 48); வீரபத்திரன் (பிங்)

**சடாதரி—** பார்வதி

**சடாதாரி—** சிவன். தாமமே தந்து சடாதாரி நல்கானேல் (பதிஜெ. திருக்கைலா.பக்.40)

**சடாமகுடதாரி—** சிவன்

**சடாயு—** இராமாயணத்தில் கூறப்படும் ஒரு கழுகுவேந்தன். (கம்பரா.)

**சடாரி—** 1. சடகோபன், வைணவ ஆழ்வார், 2. கவசம்

**சடானனன்—** அறுமுகன், (குமர. பிரபந். முத்துக். 4.)

**சடுத்தாசனம்—** இலிங்கத்தை எழுந்தருளப்பண்ணும் ஆசனங் களுள் ஒன்று. (சைவச. பொது. 523, உரை )

**சடைமாரியாயி—** வைசூரிக் குரிய தேவதை.

**சடையநாயனார்—** சுந்தர மூர்த்திநாயனார்க்குத் தந்தை யும் அறுபத்து மூவருள் ஒருவரு மான நாயனார். (பெரியபு.)

**சடையப்பன்—** சிவன் (சடை முடியையுடைய அப்பன்). (திருவாச, 8.11)

**சடையோன்—** 1. சிவன். (திருக்கோ. 89.) 2. வீரபத்திரன். (சூடா.)

**சண்டகோலாகலம்—** நரகவி சேடம். (சேதுபு. துராசரா.22.)

**சண்டதரம்—** நரகவிசேடம். (சிவதரு. சுவர்க்கநரக. 108)

**சண்டதாண்டவம்—** காளி யோடு சிவன் ஆடிய கூத்து. (சங். அக.)

**சண்டதாண்டவ மூர்த்தி—** சிவன்

**சண்டநாயகன்—** சண்டேசுர நாயனார். சண்டநாயகனுக் கருள் செய்தவன். (தேவா. 237,8)

**சண்டப்பிரசண்டர்**— திருமால் கோயிலிலுள்ள துவாரபாலகர் இருவர், (சா.சொ.அ)

**சண்டன்**— 1. யமன். (திவா.) 2. சண்டேசுர நாயனார். (தே வை 109) 3. காலன் (யமதூதன்).(திவா) 4. சிவன் 5. உருத்திரருள் ஒருவர்,(சி.போ.பா.2பக். 214)

**சண்டி**— சண்டேசுர நாயனார்: துர்க்கை (பெருங்கோபமுடையவள்)

**சண்டிகை**— துர்க்கை, (பிங்)

**சண்டிலன்**— சிவன். (சங், அக)

**சண்டேசானுக்கிரகர்**— சண்டேசுரருக்கு அருள்புரிந்த சிவ மூர்த்தம்

**சண்டேசுரநாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர்

**சண்பனி**— காளி

**சண்மதம்**— ஷண்மதம் (Vedic religions; Six systems of Philosophy)

**சண்முகன்**— அறுமுகன், (Skanda as sixfaced),(கந்தபு, வள்ளியம்மை. 194.)

**சத்தப்பிரபஞ்சம்**— சுத்தப் பிரபஞ்சத்துள் ஒன்றாகிய சொற்பிரபஞ்சம் (சை) (சி.போ.பா பக். 136)

**சத்தப் பிரமம்**— நாதருபமாகிய பிரமம்

**சத்தப்பிரமவாதம்**— நாதமே பிரமம் என்னுங் கொள்கை (சி. போ.பா.அவை.)

**சத்தமாதர்**— சிவசத்தியின் மூர்த்த பேதங்களான ஏழுமாதர்கள்

**சத்தவிடங்கத்தலம்**— தியாகராசமூர்த்தி கோயில் கொண்டுள்ள ஆரூர், நாகை, நள்ளாறு மறைக்காடு,காருயல், வாய்மூர், கோளிலி என்ற ஏழுதலங்கள். (திருவாரூ,25-26, அரும்)

**சத்தன்**— அருவத்திருமேனி கொண்ட சிவன். (சி.சி,2,76)

**சத்தாவத்தை**— சீவான்மாவுக்கு நிகழக்கூடிய அஞ்ஞானம் ஆவரணம் விட்சேபம் பரோட்ச ஞானம் அபரோட்ச ஞானம், சோக நிவர்த்தி தடையற்ற வானந்தம், என்னும் எழுவகை நிலைகள் (அத்) (உபநி. 17, உரை.)

**சத்தாவரணம்**— உற்சவ முடிவில் சுவாமி பிராகாரத்துக்குள்ளேயே எழுதரஞ் சுற்றுகை

**சத்தி**— 1. சிவனது அருள். (சி.சி.4,40). 2. உமை. (சி.சி 1,62
3. சத்தி தத்துவம்

4, வேல் (பெருங், மகத,20, 63) 5. சூலம் (பெருங். மகத, 14, 153) 6. ஞானவதி (சைவச, ஆசா, 24,)

**சத்திகோணம்**— பார்வதியைக் குறிப்பதாக வரையுங் கோணம், ஒரு மந்திரச்சக்கரம் (சௌந்தர்ய; 11, உரை.)

**சத்திதத்துவம்**— சுத்த தத்துவங்களுள் ஒன்றாய்ச் சிவனது கிரியா சத்திக்குஇடமாய்ச் சுத்த மாயை காரியப்படுவதாயுள்ள விருத்தி. (சை) (சி.போ, பா,2, 2, பக். 139)

**சத்திதரன்**— குமரக் கடவுள்

**சத்திதீட்சை**— ஞானவதி பார்க்க

**சத்தி நாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர், (பெரியபு,)

**சத்திநிபாதம்**— பக்குவமுடைய ஆன்மாவிலே திருவருள் பதிகை (சை) (சி சி, 8,2)

**சத்திநிபாதன்**— திருவருள் பதியப்பெற்றவன். (சி,சி,8,15)

**சத்திபீடம்**— சக்தியின் ஆதிக்கியமுள்ள ஆலயம் (சை)

**சத்திமத்து**— ஞானவதி பார்க்க (சை) சி,சி,8,6.) (A mode of religious initiation)

**சத்திமான்**— 1. சிவன் நோக்கி நின்றவழிக் காரியப்படுதற்கு யோக்கியமாகும் சுத்தமாயையின் பகுதி (சை)
2. காரியத்திற்கு யோக்கிய மாகும்படி சுத்தமாயையை நோக்கி நிற்கும் சிவன் (சை) (சி.போ. பா, 2,2,பக், 139)

**சத்தி முற்றம்**— சக்தியாகிய துர்க்கை போன்ற பெண்தெய்வத்துக்குத் தனியாக எழுப்பப் பெற்ற கோயில்,

**சத்தியபாமை**— கண்ணன் உகந்த தேவியருள் ஒருத்தி, (பாகவத, 10,25,1)

**சத்தியம்**— துக்கம் துக்கோற்பத்தி துக்கநிவாரணம் துக்கநிவாரணமார்க்கம் ஆகிய நான்கு வகைப்பட்ட பௌத்த தத்துவங்கள். (மணி, 20,5, உரை)

**சத்தியலோகம்**— மேலேழுலகத்துள் பிரமன் வசிக்கும் உலகம். (பிங்.)

**சத்திய வேதம்**— விவிலிய நூல் (கி)

**சத்தியோசாதம்**— 1. சிவன் ஐம்முகங்களுள் மேற்கு நோக்கியது. (சைவச, பொது, 331)
2, ஒரு சைவ மந்திரம்,(சைவச' பொது, 136,)

**சத்தியோநிர்வாண தீட்சை** - மாணாக்கனை உடனே வீடு

பேறு எய்துவிக்கும் நிர்வாண தீட்சைவகை. (சை) (சி.சி.8,4, சிவஞா.)

**சத்திருபம்** — சிவனது அருள் வடிவம் (சை)

**சத்துவகர்** — கடவுள் திருவருளால் அற்புதஞ் செய்வோர் R.C·

**சத்துவகுணம்** — முக்குணங்களுட் சிறந்ததாய் நற்காரியங்களிலேயே நோக்கம் உண்டாக்குவதான குணம்.

**சதக்கிரது** — இந்திரன் (நூறு யாகங்கள் செய்தவன் (இரகு. யாகப். 58.)

**சதசத்து**— ஆன்மா; உள்ளதும் இல்லதும். (சி.சி. 7,2)

**சதத்திருதி**— பிரமன்

**சததாமன்**— திருமால்

**சதாசிவ தத்துவம்**— சாதாக்கியதத்துவம் பார்க்க (சை) (திருக்கோ. 112. உரை.) The State in which Siva manifests Himself as Sada Siva)

**சதாசிவதினம்** — மகேச்சுரனுடைய ஆயுட்காலம் இரண்டு கூடின காலம் (சை) (சங்.அக)

**சதாசிவதேவர்** — ஐந்து முகமும் பத்துக்கையும் இரண்டு பாதமுமுடைய சிவ னுருவம் (சை)

**சதாசிவம்**— 1. பஞ்ச கர்த்தாக்களில் முதல்வராய் உயிர்களுக்கு அருள்செய்யும் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் மூர்த்தம் (சை) (சி.சி. 1, 65.) 2. உருவாய் விளங்குதற்கு முன் உயிர்களின் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் அருவுருவாகிய மூர்த்தம். (சை). சிவம் சத்திநாதம் விந்து சதாசிவந் திகழுமீசன். (சி.சி. 2, 74)

**சதாசிவ வடிவம்** — இலிங்கமாய் அருவுருவத் திருமேனி கொண்ட சிவவடிவம் (சை)

**சதாசிவன்**— அநுக்கிரக கிருத்தியஞ் செய்யுஞ் சிவமூர்த்தி

**சதாநிருத்த மூர்த்தி**— பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு நந்தியாதி பத்தர்கள் தரிசிக்கும்படி பஞ்சகிருத்திய தாண்டவம் செய்யும் சிவ மூர்த்தம். (சங். அக.)

**சதாவர்த்தன்**— திருமால்

**சதாக்ஷி**— துர்க்கை

**சதி**— பார்வதி. (பிங்)

**சதிபதி**— சிவன்

**சதிபுத்திரன்**— விநாயகன்

**சதுக்கத்தெய்வம்** — சதுக்கப் பூதம். நரகரைப் புடைத்துண்ணும் பூதம், (மணி.)

**சதுப்புயன்**— (நான்கு புயங்களை உடையவன்) 1. திருமால் (திவ். பெரியாழ். 4, 7, 3) 2. சிவன்.

**சதுமுகன்**— (நான்கு முகங்களையுடையவன்) 1. பிரமன் (திவ் பெரியாழ் 4,7,3) 2. அருகன்

**சதுர்ப்பாதம்**— சிவாகமங்களிற் கூறப்படும் சரியை, கிரியை யோகம், ஞானம் என்ற நான்கு பகுதிகள். (ஞாஞ. பாயி. 7, உரை.)

**சதுர்ப்புயன்**— 1. திருமால் 2. சிவன். (யாழ். அக.)

**சதுர்முகன்**— 1. பிரமன். திருவாச. 14, 6.) 2. அருகன். (சூடா.)

**சதுரானனன்** — சதுர்முகன். நான்கு முகமுடைய பிரமன். சதுரானனனுந் திருநெடுமாலும். (திருக்கருவை. கலித். 11.)

**சதுஷ்கஷாயம்** — குரோதம், மானம், மாயை லோப மென்ற தீய எண்ணங்கள் (ச.)

**சதுஸ்ஸன்னை** ஆஹாரஸன்னை ஸ்திரீஸன்னை பயஸன்னை பரிக்கிரஹஸன்னையென்ற நான்கு (ச)

**சந்தனக் காப்பு**— சந்தனாபிடேகம். சந்தனத்தைக் கடவுள் திரு மனியில் அப்புகை

**சந்தனக் குடம்** — நாகூரில் நடக்கும் மகமதியரின் ஒரு பெருந்திருவிழா (இ)

**சந்தான குரவர்** — சைவசித்தாந்தத்தைப் பரவச் செய்த மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர் என்ற ஆசிரியர் நால்வர்.

**சந்தானசர்வோத்தம்** —சைவ உபாகமங்களுள் ஒன்று

**சந்தானபரம்பரை**— மெய்கண்டதேவர் முதல்வராகச் சைவ சித்தாந்தத்தை உபதேசித்து வந்த சைவாசாரிய பரம்பரை

**சந்தானம்**— 1. சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச பொது. 335, உரை) 2. தேவலோகத்துப் பஞ்சதருக்களுள் ஒன்று. (திவா.)

**சந்தி**— 1. கோயிற் காலபூசை, (S.I.I.V, 92.); 2. சந்தியாவந்தனம். (நள. கலிதொ. 32.)

**சந்திக் குனிப்பம், சந்திக் கூத்து**— கோயிலில் சுவாமி முன்பாகத் தேவரடியார் ஆடும் நடனவகை. (சா. சொ. அ.)

**சந்தியா மடம்**— நித்திய வழிபாடு செய்தற்குரிய நீர்க்கரை மண்டபம். திருவாலவா. 63, 10.)

**சந்தியாவந்தனம்** — காலை உச்சி மாலைகளில் வேதமந்திரங்களாற் செய்யும்வழிபாடு

**சந்திரசேகரம்**— 586 சிகரங்களையும் 64 மேனிலைக் கட்டுகளையுமுடைய கோயில்

**சந்திரசேகரன்**— சிவன் (சந்திரனை முடியிற்கொண்டவன்). (பெரியபு. கோச்செங் 14.)

**சந்திரசேகரி**— உமை, சிவன், விநாயகன்

**சந்திரஞானம்**— சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது. 334, உரை.)

**சந்திரப்பிரபர்** — தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர் (ச) (திருக்கலம். காப்பு. உரை.)

**சந்திராதித்தம்** — அருகனது முக்குடையுள் ஒன்று (ச.) (சிலப். 11,1, உரை.)

**சந்திராதித்தியக் குடை**— சந்திரனாகிய முழுமதி தோன்றியவுடன் உலகிலுள்ள உயிரினங்கள் இன்பம் பெறுவது போல் அருகன் தோன்றியவுடன் மூவுலகில் உள்ள அனைவரும் இன்பம் அடைவர் என்பதைச் சந்திராதித்தியம் என்ற முதல் குடை உணர்த்தும். (அ. செ. பக். 28)

**சந்திவந்தனம்,**
**சந்திவந்தனை** — சந்தியாவந்தனம் பார்க்க. தர்ப்பணஞ் சந்திவந்தனமோமம் (பிரபோத. 11, 2)

**சந்தி விளக்கு** — கோயிலில் மாலைக்காலம் ஏற்றும் விளக்கு S.I.I.i, 143.)

**சந்தை**— 1. வேதம். சந்தைகளுஞ் சாகையாகி (காஞ்சிப்பு. கழுவா. 232.) 2. வேதம் முதலியவற்றை ஆசான்சொல்ல மாணாக்கன் அவற்றைத் திரும்பச் சொல்வது. (திருவாலவா. 56,19) 3. பதிகம் முதலியவற்றுள் செய்யுள்தோறும் திரும்பத் திரும்ப வருஞ்சொல். நமச்சிவாயயெனும் சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல். (தேவா 1177. 11)

**சந்தோகன்**— 1. வேதம் ஒன்றால்மட்டும் அறியப்படும் பரம்பொருள் 2. சாமவேதத்திற்கு உரியவன். சந்தோகன் சாமவேதி. (திவ். பெரியதி. 5,5,9.)

**சந்நிதி**— மூலஸ்தானம்

**சந்நிதித்துவாரம்** — கோயிற் கதவு தாளிட்டிருக்குங்கால் மூலவிக்கிரகத்தைத் தரிசிப்பதற்கு உதவியாகத் திருமதிலில் அமைக்கப்பட்ட புழை. (Loc.)

**சப்தக்கிரந்தி**— மான், அகங்காரம், பஞ்சதன்மாத்திரை என்னும் ஏழுதத்துவங்கள் (சை) (சித். சா. ஞான. 10)

**சப்த சிருங்க பீடம்** — சத்தி பீடங்களுள் ஒன்று

**சப்த நரகம்** — ஏழு நரகம், அவை: அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

**சப்தபங்கி** — உண்டாம்; இல்லையாம்; உண்டும் இல்லையுமாம்; சொல்லொணாததாம்; உண்டுமாம் சொல்லொணாததுமாம்; இல்லையுமாம் சொல்லொணாததுதாம், உண்டும் இல்லையுமாம் சொல்லொணாததுமாம் எனக் சைனர் கூறும் ஏழு வகை வாதமுறை (ச) (சி.போ. பக். 40)

**சப்தபதார்த்தம்**— சைனசம் பிரதாயத்திற்குரிய சீவம், நிர்ச்சீவம், சற்சீவம், நிர்ச்சரன், ஆசிரவம், பந்தம், மோட்சம் ஆகிய ஏழு பொருள்கள் (ச) (வேதா. சூ. 24, உரை.)

**சப்பிரதிபாசாக்கிரம்** — விஷயங்களை அனுபவிக்கவல்ல ஆன்மாவின் சாக்கிரநிலை (சை.) (சி.சி. 4. 33, சிவாக்.)

**சபக்கம்**— நெருப்பு உண்மை துணியப்பட்ட அடுக்களை போலத் துணியப்பட்ட பொருள் முன்பு வெளியான இடம். (மணி. 29, 123)

**சபணன்**— 1. பௌத்தன் 2. சைதன்

**சபத்துவம்** — செபித்தல், கடவுள் பூசை செய்தல்

**சபதபம்** — வைதிகவொழுக்கங்கள்.

**சபம்**— செபம் (Recitation of mantras). சந்தியும் வந்தனையுஞ் சபமும் (பிரமேத். சிவயோகி 4.)

**சபரி**— இராமனது அருள்பெற்றவளாக இராமாயணத்தில் கூறப்படும் ஒரு வேடப்பெண்

**சபரியை**— பூசை, ஆராதனை. சபரியை விதிமுறை புரிகுவார் (திருவிளை. திருமணப். 60)

**சபலை**— இலக்குமி (சங். அக)

**சபாக்கிரமம்**— தொழுகைக்குக் கூடும் கிறிஸ்தவ மதக்கூட்டத்தின் கோட்பாடுகள் (கி)

**சபாபதி** — நடராசமூர்த்தி. [சிதம்பர சபையின் அதிபதி]

**சபாமூப்பன்** — மாதா கோயிலின் முதன்மை ஸ்தானிகன் (கி)

**சபீசதீட்சை, சபீசை**— அறிவொழுக்கங்களிற் சிறந்துள்ள உத்தம சீடர்க்குச் சைவசமயாசாரக் கருமங்களைச் செய்து வரும்படி உபதேசிக்கும் கிரியாவதி தீட்சை வகை (சை) (சி. சி.8,3, சிவாக்).

**சபை**— 1. சிவபெருமான் நடன மாடுஞ்சபை. இரத்தினசபை, கனகசபை, வெள்ளிச்சபை, தாமிரசபை, சித்திரசபை 2. திருச்சபை பார்க்க. (கி)

**சபைக்கட்டு**— கிறிஸ்தவசபைக் குரிய சட்டம் (கி)

**சபைக்காரன்**— கிறிஸ்தவ ஏற் பாட்டைத் தழுவியவன் (கி)

**சம்சாரஜீவன்** — கருமபந்தத் தினால் நரகதிரியக் மனுஷ்ய தேவகதிகளில் உழலும் உயிர் (ச)

**சம்ஞாகந்தம்**— Mind and the five Senses (பௌ.) (சி. போ. பா. அவை. பக். 38)

**சம்பந்தர்** — திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்

**சம்பரசூதனன்**— காமதேவன். (பிங்.)

**சம்பராரி**— காமன் (திருப்போ. சந். சிற்றில்.9)

**சம்பவர்**— இருபத்நான்கு தீர்த் தங்கரருள் ஒருவர். (திருக்கலம். காப்பு. உரை)

**சம்பவை**— பார்வதிதேவி (கூர் மபு. திருக்கலி. 23)

**சம்பா**— மிளகு சீரகங் கலந்து சுவாமிக்கு நிவேதிக்கும் அன் னம்.

**சம்பாக்கட்டளை** — ஆலயத் திற் சம்பாநெற்சமதங்கொண்டு சுவாமிக்கு நிவேதனஞ் செய் விக்கும் ஏற்பாடு. (Loc.)

**சம்பாபதி** — பௌத்தப்பெண் தெய்வம். தரைக்காவல் பணி யினைச் செய்யும் தெய்வம்.

**சம்பு**— (சுகத்தைத் தருபவன்) சிவன். (பிங்.) திருமால் (பிங்.) பிரமன் (பிங்.) அருகன் (பிங்.) சூரியன் (சூடா.)

**சம்புச்சயனம்**— (விஷ்ணுவின் படுக்கை) ஆல். (மூ. அ.)

**சம்புபட்சம்** — சுத்தமாயைப் பிரபஞ்சத்தில் தொழில்புரியும் சிவபேதங்கள் (சை) (சி. போ. பா, 2, 4,பக், 223)

**சம்புரோட்சணம்** — சுத்திக் காகக் கோயில்களிற் செய்யுஞ் சடங்கு.

**சம்மணசு**— தேவதூதன். (கி.)

**சம்மேளிதசைவன்** — இவன் பதிபசுபாசம் அநாதி என்பவன் சிவன் அநாதி முத்தன், பசு அநாதி எனவும் சிவபூசையால் பாசம் நீங்க முத்தி எனவும் கூறுவான்.

**சம்வரை** — நவபதார்த்தங் களுள் சீவனைக் கன்மம் அணு க ஒட்டாதபடி தடுப்பது. (சீவக.) 2814. உரை.)

**சம்வேகம்**— அறத்திலும், அறப் பயனிலும் ஆசையுடைமை (ச.) (சீவக. 3133, கீழ்க்குறிப்பு.)

**சமகம்**— சிவபிரானைக் துதிக்கும் ஒரு வேதமந்திரம். நமக மார் சமகம் (சேதுபு. இராமதா. 47.)

**சமண், சமணம்**— அருகமதம். தருக்கினாற் சமண் செய்து. (திவ். பெரியதி. 2.1.7)

**சமணர்** — சைனர்; சமணருஞ் சாக்கியரும், (திவ். திருவாய். 4,10,5,)

**சமந்தகம்** — கண்ணபிரான்

**சமந்கமணி** - கழுத்தில் அணிந்த தெய்வமணி (பாகவத. 10. சத்தியாபா,7.)

**சமந்திபத்திரன்**-- புத்த தேவன்

**சமப்பிரதன்**— விநாயகன்.

**சமயக்கணக்கர்** — மதவாதிகள். (மணி. பதி. 88). சமய நூல் உணர்ந்தவர்.

**சமயசத்திரம்** — மதவாதத்தில் வெற்றிக்கு அறிகுறியாகக் கொண்ட குடை. (கோயிலொ. 49)

**சமயசாத்திரம்**— சமயநூல்.

**சமயத்தார்** — ஒருமதத்தைச் சார்ந்தவர். (வள்ளுவமா.9)

**சமயத்துவம்** — மதத்தின் அடிப்படையான உண்மைகள் (மணி. 10, 80, உரை.)

**சமயதீக்கை** — ஒருவனைச் சைவசமயத்துக்கு உரியவனாக்கல்.

**சமய தீட்சை**— தீட்சை மூன்றனுள் சைவ சமயாசாரத்தை அனுட்டிக்கும்படி முதலாவதாகச் செய்யப்படுவது. (சைவச. மாணாக். 5, உரை.)

**சமய பதார்த்தம்**— சைவ சமயத்தார் கொள்ளற்குரிய பதி, பசு, பாசம், பதி கிருத்தியம், பசு கருமம், பசு போகம் முத்தி சாதனம், முத்தி என்ற எண் வகைப் பொருள்கள். (சை) (சைவப். 67)

**சமயம்**— 1. மதம் (Creed or religious system). (பெருங். உஞ்சைக். 36, 352) - சமய தீட்சை (சை) (சி.சி. 8,5)

**சமயமுவல்லி**— உமை (சக்தி மதத்தின் இறைவி) (பிங்).

**சமய வாதம்** — மதம் பற்றிய தருக்கம்.

**சமயாசாரியர்**-- சைவமதத்தை நிலைநாட்டின அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்ற சிவனடியார்.

**சமயாத்தம்** — பரம்பொருள் (சமயங் கடந்தது). சமயாதீதப்

பழம் பொருளே (தாயு. காடுங் கரையும். 2 )

**சமயி**— 1. சமயதீட்சை பெற்றவன் (சை) (சைவச. மாணுக். 4) 2. மதஸ்தன். தக்க சமயிகள் தந்திறங் கேட்டதும். (மணி 28, 86.)

**சமரி**— (போருக்குரிய தெய்வம்) துர்க்கை. (பிங்)

**சமலாவத்தை**— ஆன்மா மலத்தோடு கூடியிருக்கும்பொழுது அடையும் நிலை. (சை) (சி.சி. 4, 36, மறைஞா.)

**சமவசரணம்** — கேவலியிடமிருந்து ஞானோபதேசம் பெறுவதற்குப் பூமிக்குமேலே 5000 விற்கிடைத் தூரத்தில் தேவர்களால் நியமிக்கப்பட்ட சினாலயம். (ச) சமவசரணச்சருக்கம் (மேருமந்.)

**சமவர்த்தி**— யமன் (நடுநிலையில் இருப்பவன்) (யாழ். அக.)

**சமவாதசைவம்**— முத்திநிலையில் சிவமும் ஆன்மாவும் ஒக்குமெனக் கொள்ளும் சைவ மத பேதம். (சை) (சி.சி. 6,7, சிவஞா.)

**சமனம்**— திரோபவம் (Siva's function of Veiling, designed to keep the souls engrossed in the experience of the world) (வேதா. சூ. 47.) (சை.)

**சமனை**— 1. ஆன்மா பெத்த நிலையில் அடையக்கூடிய உத்தம பதவி (சை) (சிவசம. 35) 2. சிவசத்தி (சதாசிவ. 26)

**சமனொளி**— இலங்கையில் பௌத்ததலமாயுள்ள ஒருமலை இலங்காதீவத்துச் சமனொளி என்னுஞ் சிலம்பிணை. (மணி. 28,107.)

**சமாதானம்** — சமாதிசட்கசம்பத்துள் ஒன்றாய்ச் சிந்தனை சுலபமாக நிகழுமாறுள்ள மன நிலை. (தத்) (கைவல். தத்துவ. 10)

**சமாதிசட்கசம்பத்து**— சாதனசதுஷ்டயங்களுள் சமம், தமம், விடல், அல்லது உபரதி, சகித்தல் அல்லது திதிட்சை, சமாதானம், சிரத்தை என்ற அறுகுணங்களும் நிறைகையாகிய சாதனம். (கைவல். தத்துவ 9.)

**சமி**— (சமியன்) அருகன் (சூடா)

**சமிதிகள்**— இரியை, பாஷை, ஏஷணை, ஆதானநிட்சேபணை, உத்சர்க்கம் ஆகிய ஐந்து சமண ஒழுக்கங்கள். (சமணம். பக்.82)

**சமிதை**— யாகத்திற்குரிய ஆல் அரசு அத்தி இத்தி மா பலாசு வன்னி நாயுருவி கருங்காலி என்பவற்றின் சுள்ளி. (பெருங். இலாவாண. 3, 14.)

**சமுதாயவாதி**— மனம் புத்தி முதலிய அகச்சமுதாயத்தாலும் நிலம் நீர் முதலிய புறச்சமு தாயத்தாலும் உலகம் தோன்று மென வாதிக்கும் பௌத்தமதப் பிரிவினனாகிய சௌத்திராந்தி கனும் வைபாடிகனும். (சி.போ. பா. அவை. பக் 40.)

**சமுயமினி**— யமனது பட்டணம் (சி.போ.பா. 2,3,பக். 206)

**சயம்பு**— 1. சிவன். (பிங்.) 2. பிரமன். (உரி. நி) 3. அருகன். சங்கர னீசன் சயம்பு. (சிலப். 10, 186.)

**சயம்புலிங்கம்**— பரார்த்தலிங் கத்தொன்று. (சைவச. பொது 431)

**சயமகள்**— துர்க்கை (வெற்றிக் குரிய பெண்), (தேவா. 569)

**சயவிசயர்**— வைகுண்டத்தில் திருமால் கோயிலின் வாயில் காவலரான இருவர் (பாகவ. 7, 1,8)

**சயித்தம்**— சைத்தியம், ஆலயம்

**சயிலகோபன்**— இந்திரன் (மலைகளின் மீது கோபமுடை யவன்)(கம்பரா. திருவவ, 106)

**சயிலாதி**— 1. கைலாசம் (மலை களுள் முதன்மையானது) (பிங்.) 2. நந்தி (சிலாதனுக்குப் புத்தி ரன்) (காஞ்சிப்பு. குமர. 20)

**சயை**— துர்க்கை (பிங்.)

**சர்வசாட்சி**— கடவுள்

**சர்வந்தர்யாமி**— கடவுள்

**சர்வமங்கலை**— பார்வதி (எல் லா மங்களத்தையுஞ்செய்பவள்)

**சர்வவியாபி** — கடவுள் (எங் கும் நிறைந்தவன்)

**சர்வன்**— 1. ஏகாதசருத்திரரு ளொருவர்; 2. சிவன்.

**சர்வஜ்ஞன்**— புத்தன்

**சர்வாணி**— பார்வதி (சர்வனு டைய மனைவி) சிவரக. தாருகன். 30.)

**சர்வாந்தர்யாமி** — கடவுள் (எங்கும் உள்ளிருந்து நியமிப்ப வன்)

**சர்வேச்சுரன், சர்வேசன்** — கடவுள் (எல்லா உயிர்க்கும் நாதன்). (தாயு. கருணாகர.1.)

**சரச்சுவதி**— பிரமன் தேவி யாகிய கலைமகள் சரசுவதி

**சரச்சொதி**— சரசுவதி. 2. பார் வதிதேவி. சுருதிசருவாணி சரச் சொதி. (கூர்மபு. திருக்கல். 22)

**சரசம்**— பெருமாளுக்குப் பூசும் குங்குமக் குழம்பு. (சா.சொ.அ)

**சரசுவதி**— 1. பிரமன் தேவியா கிய கலைமகள். (சூடா.)

2. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**சரசுவதி பூசை**— நவராத்திரியில் சரசுவதி தேவியைப் பூசிக்கும் ஒன்பதாம் நாள்

**சரசோதி**— சரசுவதி பார்க்க (திவா.)

**சரபம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**சரபமூர்த்தி**— சிவன் (நரசிம்மனின் வேகத்தை அடக்கிய கோலம்.)

**சரமதேகதாரி**— முத்திக்கு முன்னுள்ள கடைசி சரீரத்தை யுடையவன். (ச)

**சரமூர்த்தி**— சிவனடியார் (நடமாடும் சிவமூர்த்தம்) (சி. சி. 2.28, சிவாக்.)

**சரமோபாயம்**— பரமனையே உபாயமாகப் பற்றுகையாகிய பிரபத்தி— (வை)

**சரயு**— அயோத்திக்கருகிலுள்ள நதி. (கம்பரா. பாலகா. ஆற்றுப் 12.)

**சரவணப்பொய்கை**— இமயமலைச் சாரலிலுள்ளதும் முருகக் கடவுள் அவதரித்த இடமுமான ஒரு நீர்நிலை. (பு. வெ. 9, 21. உரை.)

**சரவணபவன்,**

**சரவணோற்பவன்**— முருகக் கடவுள் (கந்தபு. திருவிளை.16)

**சரவிளக்கு** — ஒன்றன் மேலொன்றாக அடுக்கித் தொங்கவிடும் கோயில் விளக்கு

**சராதீதை**— பார்வதி

**சரியா பாதம்**— சிவாகமப் பகுதி நான்கனுள் ஒன்று (சை) (பெரியபு. தில்லைவா. சூச, பக், 59)

**சரியை**— சிவனைச் சகளத்திரு மேனியராகக் கோயிலில் வைத்து வழிபடுகை. (சி.போ. பா, 8,1, பக், 359.)

**சரியையில் ஞானம்**— சிவ பெருமானைக் குறித்த தியான பாவனையில் உறைப்பான ஓரனுபவ உணர்ச்சி (சை) சி. போ பா. 8,1, பக். 357.)

**சரியையில் யோகம்**— மனத்தின்கண் சிவபெருமானைத் தியானிக்கை (சை) (சி.போ. பா. 8,1: பக். 357.)

**சரியையிற் கிரியை**— ஆவரண மூர்த்திகளில் ஒருவரைப் பூசிக்கை (சை) (சி. போ. பா. 8,1, பக். 357.)

**சரியையிற் சரியை**— திருக் கோயிலில் அலகிடல் மெழுகல் முதலிய திருப்பணிச்செயல். (சை) (சி. போ. பா. 8,1, பக். 357.)

**சரீரத்திரயம்—** தூலசூக்கும காரண சரீரங்கள் (தத்)

**சரு—** தெய்வவுணவு. தேவர் பிதிரர்களுக்குக் கொடுக்கும் பொருட்டு அரிசி, கோதுமை முதலியவற்றை நெய்பாலோடு கலந்து சமைத்த உணவு. வேள்விச் சருவினை. (மச்சபு. பிரமாண்ட. 1)

**சருக்கராப்பிரபை—** பருக்கைக் கற்களால் பரவப் பெற்ற நரகவகை. (ச) (சீவக. 2817, உரை.)

**சருவ சத்தி—** பார்வ்தி

**சருவஞ்ஞன்—** சிவன்

**சருவாணி—**பார்வதி

**சருவோக்தம்—** சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்று

**சரை—** பார்வதி

**சரோருகம்—** நரக வகை. (சிவ தரு. சுவர்க்கநரக. 108)

**சரோருகன்—** பிரமன் (தாமரை யினின்று தோன்றியவன்.) (கம்பரா. திருவவ. 5.)

**சல்லேகனை—** சமண மதத்த வர் பட்டினி நோன்பிருந்து உயிர்துறத்தல்

**சலன்லோசனன்—** திருமால் (தாமரைக் கண்ணன்) (சூடா.)

**சலசை—** திருமகள் (சூடா.)

**சலதாரி—**சிவன் (கங்கை நீரைத் தரித்தவன்.) சலதாரி மணி மிடற்றண்ணல் (பரிபா. 9,8.)

**சலந்தரவத மூர்த்தி—** சலந் தரனை வதைக்க எடுத்த சிவ மூர்த்தியின் வடிவம்.

**சலந்தராரி —** சிவமூர்த்தங் களுள் ஒன்று.

**சலமூர்த்தி —** உற்சவமூர்த்தி. (யாழ். அக.)

**சலலிங்கம் —** அங்கலிங்கம் (சைவச. பொது. 123, உரை.)

**சலனம்—** இதயத்திற் கற்பித்துப் பூசிக்கப்படும் சிவலிங்கம் (சை) குறிப்பினுள்ளே தாபிதலிங்கஞ் சலனம். (சைவச பொது. 122.)

**சலாகாபுருடர்—** 24 தீர்த்தங் கரரை உள்ளிட்ட 63 சைனப் பெரியோர்கள். (ச)

**சலாசலலிங்கம்—** ஆன்மார்த்த பரார்த்த பூசைகளுக்கு உரிய வாணலிங்கம் இரத்தினலிங்கம் முதலிய சிவலிங்கங்கள், (சை) (சைவச. பொது. 123.)

**சலாசனம்—** பூசையில் சிவலிங் கம் அமைத்தற்குரிய அனந்தம், தன்மம், ஞானம், வைராக்கியம் ஐசுவரியம், பதுமம் என்ற அறு வகை ஆசனம். (சை) (சைவச. பொது, 523.)

**சலாத்—** தொழுகை (இ)

**சவம்—** வைகறை முதல் சூரியன் மறையும் வரை உண்ணாமல்

இறைவனுக்காக நோற்கப்படும் நோன்பு. இந்நோன்பினை ரமலான் முழுவதும் நோற்பது முஸ்லீம்கள் கடமை (இ)

**சவரன்**— சிவன்

**சவுகதநூல்**— பௌத்தர்களுக்குரிய திரிபிடகம் (பிரபோத. 18, 18.)

**சவுகதன்**— புத்தன் (பிரபோத. 18, 18)

**சவுத்திராந்திகம்**— (A Buddhist Sect.) பௌத்திராந்திகம் பார்க்க (பிரபோத 32,1)

**சவுதம்** — வேதத்தில் விதிக்கப்பட்ட வைதிகச்சடங்கு. (கூர்மபு. அழற்கரும. 5)

**சவுந்தரி**— பார்வதி (அழகுடையவள்) (யாழ்.அக.)

**சவுரர்** — சூரியனை வழிபடும் மதத்தினர், சைவரேயன்றியல்லாச் சவுரர்விநாயகபு. 68,) 86).

**சவுரி**— திருமால், யமன் (சூடா.)

**சற்காரியவாதம்**— உற்பத்திக்கு முன்னும் காரியப்பொருள் காரணப்பொருளில் உள்ளது என்னும் கொள்கை (தத்) (சி.போ.பா. 1,2, பக். 64)

**சன்பபாவம்** — முன்னோர் செய்த தீவினைப்பயனால் தான் சென்மம் எடுத்தபோது தன்னுள் தோன்றும் பாவம். (கி.)

**சன்மலி** — உயிர்கட்குத் துன்பஞ் செய்வோரை முள்தைக்குமாறு செய்து துன்புறுத்தும் நரக விசேடம். (சேதுபு. தனுக்கோ. 3.)

**சன்மார்க்கசித்தியார்**— பண்டாரசாத்திரத்துள் ஒன்றானதும் அம்பலவாணதேசிகரியற்றியதுமான சித்தாந்த சாஸ்திரம்.

**சன்மார்க்கம்** — ஞானநெறி. (சை) (சி.சி.8.22.)

**சன்னிதானம்**— 1. கடவுளின் திருமுன்பு 2. கடவுள் ஆவேசிக்கை. (சிவரக. பசாசுமோ. 11) 3. மடாதிபதிகள் முதலிய பெரியோரைக் குறிக்க வழங்கும் மரியாதைச் சொல்.

**சன்னிதி**— 1. தெய்வம், குரு, பெரியோர் இவர்களின் திருமுன்பு 2. கோயில்

**சன்னு உபயதன்மவிகலம்**— திட்டாந்தமாகக் காட்டப்பட்ட உள்பொருளின்கண் சாத்திய தன்மமும், சாதன தன்மமும், பொருந்தா தொழிவது. (மணி.)

**சனலோகம்**—மேலேழுலகத்துள் பிதிரர் முதலிய தேவதைகளின் வாழ்விடமாகிய உலகம். (கந்தபு. அண்டகோ 64.)

**சனார்த்தனம்**— திருவனந்த புரத்திற்கு வடமேற்காக 24 மைல்தூரத்திலுள்ளதும் வற் கலைஎன்று வழங்குவதுமான ஒரு விஷ்ணுஸ்தலம்

**சனார்த்தனன்** — திருமால் (பிங்.)

**சஜ்ஜை** — இலிங்கதாரிகள் பூணும் சிவலிங்கச் சிமிழ் (Loc.)

## சா

**சாக்கியநாயனார்** — புத்த மதத்திலிருந்து சைவ சமயத்தைத் தழுவியவரும் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமாகிய சிவனடியார். (பெரியபு.)

**சாக்கியம்**— புத்தமதம் (பெருந் தொ. 1812.)

**சாக்கியமுனி**—புத்தர்.

**சாக்கியர்** — 1. பௌத்தர். சமணருஞ் சாக்கியரும் (திவ். திருவாய். 4,10,5.)
2. சைனர். பாக்கியமில் சாக்கியர்கள். (திருவாலவா. 38,50)

**சாக்கியன்**— 1. கௌதமபுத்தர் (பிங்.) 2. சாக்கியநாயனார். (தேவா. 737,6)

**சாக்கிரக்கருவி** — இந்திரியங்கள் தன்மாத்திரைகள் அந்தக் கரணங்கள் பிராணாதி வாயுக்கள் ஆன்மா என்னும் சாக்கிராவத்தைக்கு உரிய கருவிகள். (சை) (சி.சி. 4,34)

**சாக்கிரத்திலதீதம்**— ஆன்மா விடயங்களை அனுபவிக்கிற வேளையில் பிராணவாயுவும் இயங்காமல் ஒன்றையும் அறியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்கும் அவசரம். (சை) (ஞான. கட். 29.)

**சாக்கிரத்திற்சாக்கிரம்**— ஆன்மா தத்துவதாத்துவிகங்களோடு கூடி விடயங்களை அனுபவிக்கும் அவசரம். (சை) (ஞான கட். 30)

**சாக்கிரத்திற் சுழுத்தி**— ஆன்மா சித்தத்துடனும் பிராண வாயுவுடனுங்கூடி அறிவுணர்ச்சி முதலியன அடங்கி நிற்கும் அவசரம். (சை.) (ஞான.கட். 30.)

**சாக்கிரத்திற் சொப்பனம்** — ஆன்மா சித்தத்துடனும் பிராணாதி வாயுவுடனுக்கூடி அறிவுணர்ச்சி முதலியன தெளிவின்றி நிகழும் அவசரம். (சை) (ஞான, கட். 30)

**சாக்கிரத்திற்றுரியம்** — ஆன்மா சித்தமிழந்து பிராண வாயு சிறிதே இயங்கி நிற்கும் அவசரம். (சை) (ஞான. கட். 30.)

**சாக்கிரத்திற்றுரியாதீதம்** — சாக்கிரதிலதீதம் பார்க்க (சை)

**சாக்கிர மாலன்** — ஆன்மா. (சி.சி. 4,33, மறைஞா.)

**சாக்கிரம்**— ஆன்மா புருவமத்திடை நின்று தத்துவங்களுடன் கூடி விடய நுகர்ச்சியில் மெத்தென நிற்கும் நிலை. (தத்) (சி. போ. பா. 4,3 பக். 275, புது.)

**சாக்கிராதீதம்**— சாக்கிரத்திற்றுரியாதீதம் பார்க்க (சை)

**சாக்தம்**— சக்தியே பரதேவதையாக வழிபடுஞ் சமயம்

**சாக்தன்** — சாக்கமதத்தைத் தழுவியவன்

**சாகரப்பிரபை**— எப்பொழுதும் விழித்தே இருக்கவேண்டிய ஒரு நரகம். (யாழ். அக,)

**சாகலியம்** — உற்சவ பேதம் நான்கனுள் ஒன்று அது துவசாரோகண முதல் தீர்த்தவாரியளவும் செய்யப்படுவது.

**சாகாமூவாப் பேருரு** — திருநுந்தா விளக்கெரிப்பதற்கு வேண்டும் நெய்யின் பொருட்டு என்றும் இளமையுடன் ஒரு தொகை உள்ளனவாகக் கோயிற்கு விடப்படும் ஆடு மாடுகள் (T.A.S.1,14.)

**சாங்கியம்** — கபிலரால் வெளிப்படுத்தப்பட்டதும் தத்துவங்கள் இருபத்தைந்து எனக் கணக்கிடுவதுமான ஒரு சமயம் (மணி. 27,202.)

**சாங்கியயோகம்** — பிரமமே சீவன் சீவனே பிரமம் என்னும் மதம் (ம.த.அ)

**சாங்கியன்**— சாக்கியவாதி— (Follower of the SanKhya Philosophy).

**சாங்கோபாங்கம்** — உத்தம கிறித்தவர்களின் வாழ்க்கை (கி.)

**சாசுவதம்**— மோட்சம். (சங். அக.)

**சாட்சாத்காரம்**— சுயம்பு

**சாட்சி**— சைதன்யம். (தத்.) (Pure spirit, Intelligence, Intelligent Being)

**சாட்சுசதீட்சை** — நயனதீட்சை (சை) (A mode of religious initiation) (சி.சி. 12.7, சிவாக்.)

**சாட்டியாயனி** — 108 உபநிடதங்களுள் ஒன்று.

**சாண்டில்லியம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று. (சங். அக)

**சாண்மாதுரன்** — முருகக்கடவுள். (இலக்.அக)

**சாணமுத்திரை**— முத்திரை வகை (சை.)

**சாத்தம்**— ஆகமம்.

**சாத்தர்**— சத்திபூசை செய்வோர், சவுரர். சாத்தர் முதலா மதத்தோரும் (விநாயகபு. 68. 36)

**சாத்தல்** — வேதம். (திருவாலவா. 27,52)

**சாத்தன்**— அருகன் (சூடா.) புத்தன் (சூடா.) அரிஹரபுத்ரன்.

**சாத்தா**— ஐயனார். (a village deity) (சூடா.)

**சாத்தான்** — பிசாசநாதன் (கி)

**சாத்தானி**— கோயிலில் பூமாலைக் கைங்கரியம் புரிந்துவரும் பார்ப்பனனல்லாத வைஷ்ணவன்.

**சாத்திய தன்ம விகலம்** — வாதி தான் கூறிய ஏதுவோடு கூடிய பக்க வசனத்தை நாட்டுதற்குக் காட்டிய திட்டாந்தத்தில் சாத்திய தன்மம் இல்லாதிருத்தல். சாதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; 'சத்தம் நித்தம் அமூர்த்தத்தால் புத்திபோல் என்று' காட்டப்பட்ட திட்டாந்தத்தில் புத்தி அமூர்த்தமாய்நின்றும் அநித்தியமாதல் போலச் சாத்திய தன்மம் குறைவுபட்டிருப்பது (மணி. 29, 349)

**சாத்தியர்** — தேவருள் ஒருசாசார். விசுவதேவர் வசுக்கள் சாத்தியராதி விண்ணவர்) (சேதுபு. கவிதீர்த். 7)

**சாத்தியா வியாவிருத்தி** — வைதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; வைதன்மிய திட்டாந்தத்துக்கு ஏற்ப மீள்வதற்கு உரிய சாதன சாத்தியம் இரண்டனுள் சாதன தன்மம் மீளவும், சாத்திய தன்மம் மீளாது இருத்தல். (மணி.)

**சாத்திர தீக்கை** — ஆகமப் பொருளை உபதேசித்துத் தீக்கை செய்தல்

**சாத்திர தீட்சை**— தீட்சை ஏழனுள் சிவாகமதத்துவங்களை ஆசிரியன் மாணவனுக்கு உபதேசிப்பது. (சை.) (சி.சி. 8,3. உரை.)

**சாத்துக்கூறை** — விக்கிரகங்களுக்கு அணியும் ஆடை. (சா. சொ. அ.)

**சாத்துப்படி**— கோயில் விக்கிரகங்களுக்குச் செய்யும் அலங்காரம். (சா.சொ.அ.)

**சாத்துமுறை** — 1. கோயில் முதலிய இடங்களில் பிரபந்தத்தை ஓதியபின் இறுதியில் சில பாசுரங்களை விசேடந்தோன்றத் தனியே ஓதுகை. 2. ஆழ்வாராதியர் உற்சவ முடிவு 3. கிரந்த காலக்ஷேப முடிவு.

**சாத்துவம்**— சாத்துவிகம்

**சாமீப்பியம் சாமீபம்**— நான்கு பதவிகளுள் அணுகியிருக்கும் நிலை (சை.) சாமீப தொண்டர் பெருமாளே. (திருப் பு. 1140)

**சாமுசித்தன்** — பூர்வ சன்ம சுகிருதத்தால் ஞானத்துடன் பிறந்து சிவனிடத்தில் பத்தி செய்வோன். (சி.சி. பாயி. 8, சிவஞா).

**சாமுண்டி**— சத்தமாதரில் ஒருத்தியாகிய துர்க்கை

**சாயசத்தி**— மாலைச் சந்தியா வந்தனம்

**சாயரட்சை**— கோயிலில் நடக்கும் மாலைப் பூசை

**சாயான்னம்**— மாலையிற் செய்யும் வழிபாடு. பின்னைத் திருந்தவே சாயானஞ் செய். (சைவ ச. பொது. 222)

**சாயுச்சியக்காரர்** — (சாயுச்சியத்தை விரும்புவர்) இலிங்க தாரிகள்.

**சாயுச்சியம்**— பதவி நான்கனுள் சீவான்மா பரமான்மாவுடன் ஐக்கியமாகும் நிலை (சை) (சி.சி.8, 18)

**சாயைக் காட்டுதல்** — கோயிலில் சுவாமிக்குமுன் உபசாரமாகக் கண்ணாடி காட்டுதல் (Loc.)

**சார்ங்கபாணி** — திருமால் (சார்ங்கத்தைக் கையிலுடையவன்). (திவ். திருச்சந். 15)

**சார்ங்கம்**— திருமாலின் பஞ்சாயுதங்களுள் ஒன்றான வில். சார்ங்கநாண் தோய்த்தவா.... விரல் (திவ். இயற். 1, 23)

**சார்த்தூல அரன்** — புலிமுக முள்ள அசுரனைக்கொன்று அவன் தோலையுரித்து உடுத்த சிவன் திருவுரு. (ம.த.அ.)

**சார்பிற்றோற்றம், சார்பு,** — பௌத்தர் கூறும் பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் வினைப்பயன், என்ற 12 நிதானங்கள் (பௌ) (மணி. 21, 163-4)

**சார்போதன்**— படிகம் போல் சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மா. (சை)

**சார்வபூபன்**— சிவன்

**சார்வாகம்** — காட்சியே அளவையாவதென்றும், நிலம், நீர், தீ. வெளியெனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய் உடம்பின் கண்ணே அறிவு மதுவின்கண் களிப்புப் போல வெளிப்பட்டழியுமென்றும், மறுமை இல்லை

என்றும், சரீரமே ஆன்மாவென்றும், கடவுள் இல்லை என்றும் இன்பனும் பொருளுமே புருஷார்த்தங்களென்றும் சொல்லும் உலகாயத மதம். (பிரபோத)

**சார்வாகன்**— 1, உலகாயத மதத்தைத் தாபித்தவன் 2. சார்வாக மதத்தவன். தேகமே ஆன்மாவென்பவன் சார்வாகன். (த.நி.போ.பக்.259)

**சாரங்கன்**— திருமால்

**சாரணர்**— 1. சமணரிலும் புத்தரிலும் சித்திபெற்றோர். சாரணர் அறிந்தோர் காரணங்கூற (மணி. 29,29) 2. பதினெண் கணத்துள் ஒருசாரார். (சூடா.)

**சாரதா,**
**சாரதை**— சரசுவதி

**சாரீரகம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று. (சங்.அக.)

**சாருப்பியம், சாருபம்** — பதவி நான்கனுள் கடவுளைப் போல் வடிவம் பெறுகை. (சை) (திருப்பு. 1140)

**சாலக்கிராமம்**— சாளக்கிராமம் பார்க்க.

**சாலை**— கோயில், யாகசாலை. (கம்பரா. திருவவ. 84)

**சாலோக்கியம், சாலோகம்**— நான்கு பதவிகளுள் கடவுளுடன் ஓரிடத்தில் உறைகை. (சை.) (திருப்பு. 1140)

**சாவகநோன்பி** — இல்லறத்தி விருந்து விரதங்காப்போன் (ச.) சாவகநோன்பிகள் அடிகள் (சிலப். 16, 18)

**சாவகபதம்**— துறவிகள் நிலை நான்கனுள் ஒன்று (பௌ.)

**சாவகன்**— சாவகநோன்பி பார்க்க.

**சாவித்திரி**— 1. பிரமன் மனைவியருள் ஒருத்தி (காசிக. கற்பிலக் 7) 2. சரசுவதி. (திவா) 3. காயத்திரி மந்திரம் 4. சத்தியவான் மனைவியும் கற்பிற் பேர் பெற்றவளுமான ஓர் உத்தம பத்தினி 5. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று (சங்.அக.)

**சாவித்திரி விரதம்**-- சாவித்திரி நோற்றவாறு ஆனிப்பௌர்ணமியில் மகளிர் தங்கணவர் ஆயுள் விருத்தியை வேண்டி அனுட்டிக்கும் விரதம். (அபிசிந்.)

**சாளக்கிராமம்**— திருமாலுருவமாகக் கொண்டு பூசித்தற்குரிய கண்டகிச்சிலை. பாற்கடற் பிறந்தாலும் நத்தைதான் சாளக்கிராம மாமோ. (சேதுபு. சக்கர 19)

**சாளி அலங்காரம்**— தீபாவளி யன்றும், யுகாதிப்பண்டிகை அன்றும் பெருமாளுக்கு வெள்ளித்தட்டில் பணப்பை வைத்து மேளதாளத்துடன் கொண்டு வருவது. (ஸ்ரீ.த)

**சாறு**-- உற்சவம், பூசை, அடியார் சாறுகொள வெழுந்து (பரி பா. 8,96)

**சானகி**— இராமபிரானது மனைவியாகிய சீதை. (கம்பரா. இராவணன்வதை. 239)

**சாஸ்காரம்** — அதிகாரிகட்குக் கொடுக்குங் கோயிற் பிரசாதம். (Loc.)

**சாஸ்தா**— ஐயனார் பார்க்க

**சாஸ்திர தீட்சை**— ஆசிரியன் மாணாக்கனுக்கு ஆகமப் பொருளை அறிவிக்கை (சை). (சி.சி.8,3, சிவாக்.)

**சாஷ்டாங்கநமஸ்காரம்** — இருகை, இருமுழங்கால், இரு தோள், மார்பு, நெற்றி ஆகிய எட்டுறுப்புக்கள் நிலந்தோயச் செய்யும் நமஸ்காரம்.

**சாக்ஷுஷதீக்ஷை** — நயன தீட்சை (சை) (சைவச.ஆசாரி. 65. உரை.)

## சி

**சிக்கா வதம்**— சிட்சா விரதம், சாமாயிகம், போசதம், தேசாவகாசிக அதிதிசம் விபாக விரதங்கள். (அ.செ.65)

**சிகண்டி**— திருமால் (கொண்டையுடன் கூடியவன்) (இலக். அக.)

**சிகரவாசினி**— துர்க்கை

**சிகரி** — கோபுரம். மங்குரேய் சிகரி. பரத. பாவ. 29)

**சிகித்துவசன்** — மயிற்கொடியோன், முருகன்

**சிகைநிறச் சூலி**— சிவபிரான்

**சிங்கடியப்பன்** — சுந்தரமூர்த்தி நாயனார். (தேவா. 735,11)

**சிங்கப்பிரான், சிங்கப்பெருமாள்**— நரசிங்கமூர்த்தி. சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே (திவ். திருவாய். 2,8,9)

**சிங்கமுகாசுரன்** — முருகக் கடவுளால் வதஞ்செய்யப்பெற்றவனும் சிங்கமுகத்தையுடைய

வனுமாகிய ஓர் அசுரன். (கந்த பு.)

**சிங்கவாகினி** — (சிங்கத்தை வாகனமாக உடையவள்) துர்க்கை (கலிங். 306, புதுப்.

**சிங்கவேள் குன்றம்**— அகோபிலம் பார்க்க.

**சிட்சா விரதம்** — சாமாயிகம், புரோஷதோபவாசம், தேசாவகாசிகம், அதிதிசம்விபாக விரதங்கள். (அ.செ.65.)

**சித்த சரணம்** — நால்வகைச் சரணத்துள் ஒன்று. (ச.) (சீவக 1. உரை.)

**சித்தசன்**— மன்மதன். (கந்தபு. மார்கண்டேயப். 281)

**சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார்**-- தொகையடியாருள் ஒரு கூட்டத்தார். (பெரியபு.)

**சித்தபரமேஷ்டிகள்**— சித்தர் (ச.) (சீவக. 962, உரை.)

**சித்தம்**— 28 சிவாகமத்துள் ஒன்று. (சைவச. பொது. 335. உரை.)

**சித்தன்**— 1. முருகக் கடவுள் (திருமுரு. 176. உரை.) 2. வைரவன், (பிங்.) 3. அருகன் (பிங்.) 4. சிவன் (சங். அக.) 5. ஸச்சித்தவிரதி. (அ.செ.166.)

**சித்தன் வாழ்வு**— திருவாவினன்குடி (முருகக் கடவுள் வாழ்விடமானது) திருமுரு. 176, உரை.)

**சித்தக்ஷேத்திரம்**— முத்யுதிலகு

**சித்தாச்சிரமம்**— வாமனாவதாரமான திருமால் தவஞ்செய்த ஓர் ஆச்சிரமம்.

**சித்தாத்துமா**— கடவுள்

**சித்தாந்த சாத்திரம்**— சைவசித்தாந்தத்தைக் கூறுவனவாகிய மெய்கண்ட சாத்திர முதலியன. (சங்.அக)

**சித்தாந்த சைவம்**— பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை மேற்கொண்டு மும்மலங்களும் சக்திகெட ஆன்மா சத்திநிபாதமடைந்து திருவருளால் முத்திபெறுமென்று கொள்வதாகிய சைவ சமய பேதம். (சை) (சி.சி. 4,13, உரை.) 2. வைதிக சமயம் (ம.த.அ)

**சித்தாந்தத் தொகை**— தமிழ் மொழியாற் செய்த ஒரு பௌத்த நூல் (சி.சி. பர. சௌத். 2, உரை)

**சித்தாந்தப்பஃறொடை** — அம்பலவாண தேசிகரியற்றியதும் பண்டாரசாத்திரத்தில் ஒன்றுமாகிய சித்தாந்த நூல்

**சித்தாந்தப் பிரகாசிகை** —சர்வான்மசம்பு சிவாசாரியர் இயற்றிய சைவசித்தாந்த நூல்

**சித்தாந்தம்**— 1. சைவ சித்தாந்தம் (சை) 2. சிவாகமம். (சி.சி. 8,15)

**சித்தாந்தன்**— சிவபிரான்

**சித்தாயதனம்** — விஜயார்த்த பர்வதத்தின் கீழ்த்திசையில் பிரதம சிகரத்திலுள்ள சைத்தியாலயம்

**சித்தார்த்தம்**— தத்துவஞானம்

**சித்தார்த்தன்**— (வாழ்வின் பயனாகிய நிர்வாணத்தையடைந்தவன்) புத்தன்

**சித்தி**— 1. மோட்சம். (திருநூற். 46) 2. சிவஞானசித்தியார் (திராவிடப். 338) 3. விநாயக சத்தி

**சித்தி கணபதி**— சித்தி விநாயகன் பார்க்க.

**சித்தி பத்தனம்**— மோட்சம் (ச.) (மேருமந். 727)

**சித்தியவர்** — சித்த பரமேட்டிகள். (அ.செ.160)

**சித்தியார்** — சிவஞான சித்தியார் (திராவிடப். 384)

**சித்திரகூடம்**— 1. தில்லைத் திருமால் கோயில். தில்லைத்திருச் சித்திர கூடஞ் சென்று சேர்மின் (திவ். பெரியதி. 3,2) 2. இராமபிரான் வன்வாச காலத்தில் தங்கியிருந்த ஒரு மலை. (திவ். பெரியாழ். 3,10,6)

**சித்திரசபை**— திருக்குற்றாலத்து நடராச சபை (குற்ரு. தல. கடவுள்வண•3)

**சித்திரபுண்டரம்**— வைணவர்கள் நெற்றியில் தரித்துக்கொள்ளும் திருமண்காப்பு.

**சித்திராங்கன், சித்திவிநாயகன் சித்தீசர்**— விநாயகன்

**சித்துரு**— கடவுள் (அறிவுவடிவானவன்) மெய்ச்சித்துருவென்றறி (காஞ்சிப்பு. வயிர.9)

**சித்தேசன்**— சிவன்

**சித்தை**— பார்வதி (சிவரக. தாருக. 30)

**சிதம்பரம்**— தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள பிரபலமான சிவதலம்.

**சிதிகண்டன்**— சிவன் (சிதி- கறுப்பு)

**சிதேந்திரம்**— கோயில். (பிங்.)

**சிந்தாதேவி**— மதுரையிற் பூர்வ காலத்தில் வணங்கப்பட்டு வந்த சரசுவதி. (மணி. 14,17)

**சிந்தாவிளக்கு**— சரசுவதி (சிந்தையை விளக்குவபள்) (மணி. 13,106)

**சிந்திதார்த்தர்**— விநாயகர் (அடியவர் சிந்திக்கும் வடிவில் தோன்றி அருள் செய்பவர்)

**சிந்தியம்** — சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று. (சைவச. பொது. 331, உரை.)

**சிந்துரமுகன்**— விநாயகன் (யானை முகமுடையவன்.)

**சிந்தைவிளக்கு** — அவதிஞானம் பார்க்க. (சிலப். 10, 167)

**சிந்மயன்**— சிவன்

**சிந்மூர்த்தி**— கடவுள்

**சிநகரம்**— கோயில்

**சிநன்**— அருகன், புத்தன், திருமால்

**சிம்புளாஞேன்** — (சரபவடிவ மெடுத்தவன்) வீரபத்திரன். (பிங்.)

**சிம்மலலாடம்** — திருவாசிகையின் நெற்றியில் சுவாமியின் திருமுடிக்கு நேராகத் தொங்குமாறு கட்டும்மாலை

**சியேட்டை**— ஒரு சிவசக்தி

**சிரபாத்திரி**— சிவன் (கபாலத்தைப் பிட்சாபாத்திரமாகக் கொண்டவன்) (கந்தரந்.34)

**சிரமாலை**— 1, சிவனணியுந் தலைமாலை (திவா.) 2. தலையில் தரிக்கும் உருத்திராக்க மாலை

**சிராபரன்** — துவாதசாந்தத் தானத்திலிருக்கும் இறைவன். மனக்கோயிற் சிராபரன். (திருமந். 1760)

**சிராவகயானம்**— பௌத்தச் சமய வகை

**சிராவகன்**-- பௌத்த,சைனரில் இல்லறத்தான்

**சிரிவயிண்ணவர்**— ஸ்ரீவைஷ் ணவர்

**சிரீதரன்**— திருமால். சிரீதரன் றன் வண்டுலவு தண்டுழாய்த் தார். (திவ். இயற். நான்மு.62)

**சிரீவற்சம்**— ஸ்ரீவத்ஸம் பார்க்க.

**சிருக்குமுத்திரை**— பூஜாகாலத் துக் காட்டுங் கரமுத்திரை வகை. (சை)

**சிருங்கேரிமடம்** — மைசூர்ச் சீமையைச் சேர்ந்த சிருங்கேரி யில் பிரபலம் பெற்றுள்ள சங்க ராசாரிய மடம்

**சிரேயாஞ்சர்** — தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர். (ச) (திருக்கலம். காப்பு.உரை.)

**சிரோவர்த்தனை** — சிவலிங் கத்தின் சிரம். (S.I.I.ii, 135)

**சிரோவிரதம்** — ''அக்னிரிதி' என்பதாதியான மந்திரங்களால் விபூதியை எடுத்துத் தேகத்திற் பூசுவது

**சிலம்பன்**— முருகன். (பு. வெ. 12, இருபாற். 10. கொளு.)

**சிலாதரன், சிலாதன்** — நந்தி தேவர் பிதா. (கந்தபு. அயனைச் சிறைநீக்கு.8)

**சிலாதலம்** — பௌத்த தரும சாரணர்களுக்காக மலைகளில் அமைக்கப்பட்ட குகை

**சிலுவை**— 1. கிறிஸ்து வை வைத்தறைந்த மரம் 2. கிறிஸ்து வசமய சின்னத்துள் ஒன்று (கி.)

**சிலுவைப்பாடு** — சிலுவையில் அறையுண்ணுகை. (கி.)

**சிலுவைவரைதல்** — நெற்றி யில் சிலுவையடையாளஞ் செய் (கி.)

**சிவக்குறி**— சிவலிங்கம். தகுசி வக்குறி யர்ச்சிப்பர். (சூத.முத்தி. 1, 18: சங். அக.)

**சிவகணம்** — சிவபிரானுடைய பரிவாரம். (உபதேசகா. உருத் திரா. 109)

**சிவகணமுதல்** — நந்திதேவர். (பிங்)

**சிவகதி**— முத்தி. சிவகதி நாய கன். (சிலப். 10, 180)

**சிவகதிக்கிறை**— அருகன் (சிவகதிக்கு நாயகன்) (சூடா.)

**சிவகரணம்**— ஆண்மாவின் செயலற்ற நிலையில் நிகழும் பதியின் செயல். (சை.)

**சிவகுதி நாயகன்** — அருகன், சிவன்

**சிவகன்மரதர்**— சந்தியாவந் தனம், சிவாலயப்பணி, என்னும் இரண்டும் அநுட்டிக்கும் சமயதீட்சதர்.

**சிவகாமி**— சிதம்பரத்து அம்பிகை. சிவகாமி நல்கிய சேயே. நூல் (சி.சி. 8,16, சிவஞா.)

**சிவகீதை**— அகஸ்தியர் செய்ததாகக் கூறப்படும் ஒருதமிழ் நூல் சி.சி.8.16. சிவஞா.)

**சிவகூர்ச்சம்**— பஞ்ச கவ்வியம். (பிரா. சமுச்.)

**சிவகோணம்**— சிவபெருமானைக் குறிப்பதாகத்தாமிரமுதலியவற்றில் வரையும் கோணம் (சௌந்தாய். 11)

**சிவங்கரன்**— சிவபெருமான் (மங்களத்தைச் செய்பவன்) (சங்.அக)

**சிவங்கரி**— பார்வதி- (மங்களத்தைச் செய்பவள்) (திருவானைக். கோச்செங். 81)

**சிவசங்கற்பம்** — ஓர் உபநிடதம். (சங். அக)

**சிவசங்கிராந்தவாத சைவம்** அகச்சமயம் ஆறனுள் மலங்கள் நீங்கினவழி இறைவன் திருவருள் சங்கிரமித்தலால் ஆன்மா சிவமேயாய் நிற்கும் என்று கூறும் சைவசமய வகை. (சி. போ. பா. பக். 22 சுவாமிநா.)

**சிவசத்தி**— சிவனை நீங்காத சத்தி. பஞ்சசத்தி பார்க்க. (சி. சி. 1, 61, சிவஞா)

**சிவசமயம்**— சைவ மதம்

**சிவசமவாத சைவம்**— அகச்சமயம் ஆறனுள் மலங்கள் நீங்கியவழி அறிவு மாத்திரையாய் நிற்கும் ஆன்மாவை இறைவன் தன் வடிவாக்கித் தனது பஞ்சகிருத்தியங்களையும் இயற்றும்படி செய்பவன் என்று கூறும் சைவசமய வகை. (சி.போ.பா. பக். 22, சுவாமிநா.Ft.)

**சிவசமவாதி** — மயக்கத்தால் தன்னையே சிவம் என வாதிக்கும்வாதி (ம.த.அ)

**சிவசன்**— (சிவனிடம் பிறந்தவன்) சுக்கிரன். (சங். அக.)

**சிவசாத்திரம்**— பதிநூல்

**சிவசாதனம்**— 1. உருத்திராக்கம் விபூதி முதலிய சைவ சமயத்திற்குரிய சின்னங்கள். (திருவிளை. நாக.3) 2. உருத்திராக்கம் (திருமந். 1427)

**சிவசாதாக்கியம்**— அருட்சத்தியால் தியானமூர்த்தியாய்

நின்ற சிவம். (சை) (சதாசிவ. 6, உரை.)

**சிவசத்தர்** — சைவசமயத்திற் கூறிய பரமுத்தியை அடைந் தவர் (சை)

**சிவசிந்நம், சிவசின்னம்** — சிவசாதனம், உருத்திராக்கம் விபூதி முலியன. சிட்டமாஞ் சிவசின்னங்கள் சேர்ந்துளீர் (சிவரக. சிவரகவரலா.9)

**சிவசொருபம்**— ஆநந்தம்

**சிவஞான கோசம்**— சிவா கமம் பார்க்க. (சிவதரு. சிவஞா னதா. 50)

**சிவஞாநம், சிவஞானம்** — பதி உணர்வு. சிவஞானந் தனக்கு மேலாம். சி.சி.2.2.)

**சிவத்திறை** — சிவகதிக்கிறை. மேருமந். 620)

**சிவத்துருமம்**— வில்வம்

**சிவத்துவிசர்**— ஆதி சைவர்

**சிவதத்துவம்** — ஞான சத்தி யின் இருப்பிடமும் சுத்த தத்து வங்களுள் ஒன்றும் ஆகிய தத் துவம். (சை) (சி.போ.பா. 2, 2, பக். 139)

**சிவதரிசனம்**— தசகாரியத்துள் தனது சிறுமையையும் தன் முயற்சியாலன்றித் தனக்கருள் புரிந்த இறைவனது பெருமை யையும் தெளிய உணர்ந்து கொள்ளுதலாகிய ஆன்மானு பவநிலை (சை) (சிவப். கட்)

**சிவதருமம்**— சிவபுண்ணியம் (சிவதரு. சிவதரும. 1,உரை)

**சிவதருமிணி**— முத்திகாமி கட்குத் திரோதானசத்திரு பமாகிய சிகாச்சேதத்தோடு செய் யுஞ் சபீசதீட்சைவகை (சை) (சைவச. ஆசாரி. 62, உரை)

**சிவதலம்**— சிவபிரான் கோயில் கொண்ட இடம்

**சிவதீட்சை**— சிவபூசையையும் சமயாசாரங்களையும் மேற் கொள்ளுதற்குமுன் சைவனா வானுக்குக் குருவினாற் செய்யத் தகுஞ் சமயச் சடங்கு

**சிவதூதி**— துர்க்கை

**சிவதூலசரீரம்** — ஈசாநி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் பஞ்ச சத்தி யினாலாய சிவத்தினது புறவுரு. (ம.த அ)

**சிவநாபம்** — ஒருவகைச் சிவ லிங்கம். நாசமில் செழுஞ் சிவ நாபந் தன்னையும். (சேதுபு. சேதுபல. 126.)

**சிவநிபி**— சிவராத்திரி. (சிர மோத். 4, 60)

**சிவப்பிரசாதம்**— சிவனுக்கு நிவேதிக்கப்பட்ட திருவமுது

**சிவப்பிராமணர்**— ஆதிசைவர் S.I.I.iii,47)

**சிவப்பிரியம்**— உருத்திராக்கம். (சங். அக.)

**சிவப்பிரியை**— பார்வதி தேவி (சங். அக.)

**சிவப்பு**— இலிங்கம்

**சிவபண்டாரி**— சிவாலய பொக்கிஷக்காரன். S.I.I.i, 140)

**சிவபதம்**— சிவபக்தர்கள் தத்தம் பரிபாகத்திற்கு ஏற்ப அடையும் தானாளுலகிருத்தல், தன்பாலிருத்தல், தானாம்பதம் பெறல், தானாகுதல் என்ற நால்வகைச் சிவபதவி. (பிங்.) செம்மையேயாய சிவபதம் அளித்த (திருவாச. 37.3)

**சிவபாத்தியன்**— சிவபத்தன். (பதினெ. கோயிற்றிருப்பண். 58)

**சிவபிரான்**— சிவபெருமான். முனிவர் நாகருஞ் சென்று காணரிய சிவபிரானை. (சேதுபு. நைமிசா. 20)

**சிவபுண்ணியம்**— சிவனே முழுமுதற்கடவுளெனக் கொண்டு அக்கடவுளுவப்பச் செய்யும் நற்கருமங்கள். (சி.போ.பா. 8,1, பக். 356)

**சிவபுரம்**— சிவலோகம், காசி. பார்மேற் சிவபுரம் போற் கொண்டாடும் (திருவாச.19,3)

**சிவபூசை**— விதிமுறை செய்யும் சிவ வழிபாடு. சிவபூசையின் பேற்றினுல். (சிவரக. தேவிநாட்டிய. 24.)

**சிவபூசையியல்பு** — சரியை, கிரியை, யோகம், ஞானம்

**சிவபெருமான்**— சிவபிரான். (திருவாச. 37,1)

**சிவபோகம்**— 1. தம்காரியத்துள் ஒன்றாய்த் தன்னையிழந்து இறைவன் மயமான ஆன்மாவின் ஆனந்தானுபவ நிலை (சை) (உண்மைநெறி.6) 2. சிவானந்தம்

**சிவம்**— 1. முத்தி. (பிங்) 2. சித்துருவாகிச் சுயம்பிரகாசமாய் நிற்கும் சிவசொரூபம் (திருவாச 51, 1) 3. சிவதத்துவம்

**சிவமயம்**— 1. சிவயாந்தன்மை அவர் சிவமயமே யாகலின் (சி. பே. பா. அவை. பக். 4) 2 கடிதம், நூல் முதலியவற்றின் தொடக்கத்தில் சைவ சமயிகளால் வழங்கங்பெறும் மங்கல மொழி

**சிவமூர்த்தங்கள்**— (25) சந்திரசேகரர், உமாமகேசர், ருஷபாருடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, அந்தகாரி திரிபுராரி, சலந்தராரி, விதித்வம்சர், வீரபத்திரர், நரசிங்க நிபாதனர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், சக்கிரபாதர்,

கசமுகாநுக்கிரகர், ஏகபாதர், சோமாஸ்கந்தர், அநங்க சுகபி ருது, தஷிணாமூர்த்தி, லிங் கோற்பவர்.

**சிவயோகம்**— தசகாரியத்துள் ஒன்றாய்த் தன்னை இழவாது இறைவனது எல்லாமாந் தன் மையை உணர்ந்து அவனோடு இசைந்து நிற்கும் ஆன்மாவின் அனுபவநிலை. (சை) உண்மை நெறி.5)

**சிவயோகி** — சிவயோகத்தால் முத்தியடைந்தோர். (கந்தரலங். 26.)

**சிவராத்திரி** — சிவபக்தர்கள் நாள் முழுதும் பட்டினியிருந்து இரவெல்லாம் கண்விழித்துச் சிவனைப் பலகாலும்அர்ச்சித்து மாசி மாதத்துக் கிருஷ்ணசதுர்த் தசியில் கொண்டாடும் மகாசிவ ராத்திரி விரதம். சிவாராத்திரிப் போது துயிலோமென்ற விரதி யரும். (தாயு. பரீபு. 3)

**சிவரூபம்**— தசகாரியத்துள் ஒன் றாய்' அருள்மயமான பஞ்சகிருத் தியத்தால் தன்னைப் பந்தித்த மலங்களை நீக்கி இறைவன் முத்தியளிப்போன்' என்று உணர்ந்துகொள்ளும் ஆன்மா வின் அனுபவநிலை. (சை.) (உண்மைநெறி, 3)

**சிவலிங்கம்**— சைவர் வழிபடும் இலிங்கவடிவமான சிவனுருவம்

**சிவலோகம்**— கைலாசம் (திரு வாச 8,11)

**சிவவல்லபை**— பார்வதி.

**சிவவேடம்** — சைவ வேடம். உருத்திராக்க முதலிய சிவசின் னந் தரித்த கோலம். (காசிக. பாயி, 12)

**சிவன்** — 1. மும்மூர்த்திகளுள் ஒருவரான சங்கராக்கடவுள்

**சிவனாடல்** — பாண்டரங்கம், கொடுகொட்டி, காபாலம் என்று கூறப்படும் சிவபெருமா னது நிருத்தம்.

**சிவனெண்குணம்**— தன்வயத் தனாதல், தூயவுடம்பினனாதல் இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளு டைமை, முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை, (குறள் 9, உரை), (or) பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெய ரின்மை, உவமையின்மை, ஒரு வினையின்மை, குறைவுலறிவு டைமை, கோத்திரமின்மை, சிவபெருமானுடைய எண்வ கைக் குணங்கள். (பிங்.)

**சிவனைம்முகம்**— ஈசானம், தற் புருடம், அகோரம். வாமம், அல்லது வாமதேவம், சத்தி யோசாதம் என்ற சிவபெருமா னுடைய ஐந்து முகங்கள்

**சிவாகமம்**— சிவனிடமிருந்து

தோன்றிய காமிகம், யோகசம் சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் ஆகிய இருபத்தெட்டு ஆகமங்கள்.

**சிவாசாரியார்**— ஆதிசைவர்களுடைய பட்டப்பெயர்

**சிவாட்சம்**— உருத்திராக்கமணி (மலை.)

**சிவாத்துவிதசைவம்**— அகச்சமயம், ஆறனுள் நிமித்தகாரணனாகிய இறைவனே உலகிற்கு முதற்காரணமும் ஆவன் என்று கூறும் சைவசமய பேதம் (சை) (சி.போ.பா. 7,1, பக். 337)

**சிவாத்துவிதம், சிவாத்துவைதம்** — சிவாத்துவிதசைவம் பார்க்க.

**சிவாநி**— துர்க்கை

**சிவாயநம** — சைவர்களாற் போற்றப்படும் பஞ்சாட்சரம். சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு (நல்வழி,15.)

**சிவார்ச்சிநம்**— சிவபூசை

**சிவார்ப்பணம்**— கிரியை முடிவில் அதனைச் சிவபிரானுக்கு அர்ப்பிக்குந் தொடர் (சி.போ. பா. 11,1, பக். 224)

**சிவாலயம்**— சிவன்கோயில்

**சிவானி**— பார்வதி, சிவசக்தி

**சிவானுபூதி** — சிவனோடு இரண்டறக் கலக்கும் அனுபவம்

**சிவை** — 1. பார்வதி (பிங்) பொருவரிய சிவையாகி (கூர்மபு. திருக்கலி.3) 2. காளி. (சூடா)

**சிவோகம்பாவனை**— நான் சிவன் என்று பாவித்தல் (சி போ. சிற். 2,1,4 பக். 39)

**சிற்குணன்**— கடவுள் (ஞானமாகிய குணமுள்ளவன்) சேதுபு. இராமநா. 43)

**சிற்சபை**— சிற்றம்பலம். கருதரிய சிற்சபையில் (தாயு. கருணாகர 1.)

**சிற்பரன்**— அறிவிற்கு எட்டாத கடவுள் (திருவாதவு. பு. திருப்பெருந். 21)

**சிற்பரை**— பார்வதி. சிற்பரையிங் கெமையாளும் உமையாள் (கந்த. சு. பாயி. 3)

**சிற்பன்**— பிரமன் (சிருட்டித் தொழிலில் வல்லவன்) (திருமந். 628)

**சிற்றம்பலவன்** — சிதம்பரத்தில் நடனமாடுஞ் சிவபெருமான். தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன் (திருவாச.12,9)

**சிறப்பு**— நைமித்திக உற்சவம், மோட்சம் (குறள், 31) (குறள்,18),

**சிறப்புலிநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**சிறுகாலைச் சந்தி** — கோயிலில் உதய காலத்தில் செய்யும் பூசை. சா. சொ. அ.)

**சிறுகாலைச்சிறப்பு**— விடியற் கால நிவேதனம்

**சிறுத்தொண்டநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவரில் பல்லவ அரசனது சேனைத் தலைவரும் திருஞான சம்பந்தர் காலத்தவருமான சிவனடியார் பெரியபு.)

**சிறுவிதி**— தக்கன். (கந்தபு. தக்கன்மக. 52)

**சின்மாயை**— பார்வதி

**சின்முத்திரை**— உபதேசக் குறியாகக்ச் சுட்டுவிரல் நுனியைப் பெருவிரல் நுனியுடன் சேர்த்துக் காட்டும் ஞானமுத்திரை (தாயு. பன்மாலை. 1.)

**சின்னப்பர்**— Apostle Paul. பால் என்னும் கிறிஸ்தவ அத்தியட்சர் (கி)

**சினகர்**— சைனர். சினகருக் கெளியேனலேன். (தேவா. 859,6)

**சினகரசி**— 1. சைனக் கோயில் (அம்மலைச் சினகரம் வணங்கி சீவக. 1248)
2. கோயில் சினகரம் புகுதுமெல்லை. (கந்தபு. திருவவ. 11)
3. சிறுகோயில் (அக. நி.)

**சினந்தவிர்ந்தோன்**— புத்தன் (சூடா.)

**சினன், சினேந்திரன்**— 1. அருகன் (திவா) 2. புத்தன். ஆதிசினேந்திரன் அளவை இரண்டே (மணி. 29,47.)

**சிஷ்யா பாவ மூர்த்தம்**— கந்த சுவாமியிடத்தில் பிரணவப் பொருளைக் கேட்ட பொழுது சிவன் கொண்ட சிஷ்யகோலம் (ம.த.அ.)

**சிக்ஷாவிரதம்**—சைனரது முக்கிய விரதங்கள் மூன்றனுள் ஒன்று. (சிலப். 10,181, உரை.

# ஸ்ரீ

**ஸ்ரீ** — இலக்குமி, (கந்தரந். 8) சரசுவதி, பார்வதி

**ஸ்ரீகண்டர்** — சிவமூர்த்தவகையுள் ஒன்று (விஷத்தாற் கரிய கழுத்தையுடையவர்) (சி.சி 1, 19 சிவஞான.)

**ஸ்ரீகரம்**— 230 சிகரங்களையும் 28 மேனிலைக்கட்டுக்களையுமுடைய கோயில். (ம.த.அ.)

**ஸ்ரீகாழி**— சோழ மண்டலத்தில் திருஞானசம்பந்தர் அவதரித்த இடமாகக் பேர்பெற்ற ஒரு சிவதலம் (தேவா.)

**ஸ்ரீகாளத்தி**— சிவபிரான் கண்ணப்பநாயனார்க்கு முத்தி அளித்ததும் வடஆர்க்காடு ஜில்லாவிலுள்ளதுமான ஒரு சிவதலம். (தேவா.)

**ஸ்ரீசயந்தி**— ஸ்ரீஜயந்தி. கிருட்டினன் பிறந்த தினம், (Loc.)

**ஸ்ரீதரன்**— திருமால் (இலக்குமியைக் கொண்டவன்) (கம்பரா. அகலிகை. 26.)

**ஸ்ரீதளாதேவி**— மாரியம்மன்

**ஸ்ரீதா**— சீதை (கம்பரா. உருக்கா. 85)

**ஸ்ரீதாபதி** – இராமன் (சீதையின் கணவன்)

**ஸ்ரீதேவி**— இலக்குமி (தனிப்பா.)

**ஸ்ரீதை** — 1. இராமபிரான் தேவி (உழுசாலில் தோன்றியவள்) (புறநா. 378) 2. நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**ஸ்ரீபட்டர்**— பகவற் கீதையைத் தமிழிற் பாடிய ஆசிரியர்

**ஸ்ரீபண்டாரம்** — 1. கோயிற் பொக்கிசம் 2. கோயிற் சொத்து

**ஸ்ரீபதி**— அருகன், கடவுள், திருமால் (சூடா.)

**ஸ்ரீபலம்** — வில்வம். (சிவதரு. பரமதரு. 32)

**ஸ்ரீபலி**— 1. கோயிலில் இடும் அன்னபலி 2. கோயிலில் நாடோறும் பலிபூசைக்காக எழுந்தருளப் பண்ணும் சிறுவிக்கிரகம் 3. கோயிலில் நடக்கும் நித்தியோற்சவம். (சிலப். உரைபெறுகட். 4, உரை.)

**ஸ்ரீபாதக்கூலி**— ஸ்ரீபாதந்தாங்கிகட்குக்கொடுக்குங் கூலி.

**ஸ்ரீபாதந்தாங்கிகள்**— கோயிலில் சுவாமிக்குரியவாகனந் தாங்கிச்செல்வோர்

**ஸ்ரீபாதம்**— திருவடி

**ஸ்ரீமான்**— அருகன், சிவன், திருமால். (சூடா.)

**சீமூதவாகனன்**— இந்திரன் (சீமூதம்—மேகம்)

**சீமூதனன்**— இந்திரன், சிவன்

**சீயர்**— வைஷ்ணயதி (Vaishnava Ascetic.) நஞ்சீயர்(உபதேசரத். 50)

**சீர்ணபாதன்**— யமன

**சீரகர்**— பௌத்தர் (மரப்பட்டை தரித்தோர்)

**சீரங்கம்** — திருச்சிராப்பள்ளிக் கருகிலிருக்கும் பிரசித்தமான விஷ்ணுஸ்தலம்

**சீரணோத்தாரணம்**— பழுது பட்ட கோயில் முதலியவற்றைச் செப்பமிடுகை

**சீராமநவமி** — ஸ்ரீராமநவமி பார்க்க

**சீராமன்**— இராமபிரான், சீராமன்றேவி. (சூடா. 11,104)

**சீலபாரமிதை** — தசபாரமிதைகளுள் சீலம் முற்றுகை (பௌ.) (மணி. 26,45, அரும்.)

**சீவகர்**— பௌத்த பிட்சுக்கள், (திவா.)

**சீவகன்**— ஆசீவகன் (சி.சி. முகவுரை. தனிப்பா.)

**சீவசாட்சி**— பரப்பிரமம் (உயிர்கள் அனைத்திற்கும் சாட்சி)

**சீவசுத்தி**— சச்சிதானந்த மயமாகிய பிரமத்தைச் சீவன் அவ்வொளியே கண்ணாகக் கண்டறிந்து அதில் சீவதற்போதமடங்கித் தனக்கு அதிட்டானமாகிய பிரமந் தானாய் நிற்கை. (கட்டளைக். 188)

**சீவ தயாஷ்டமிநோன்பு**— சன்மார்க்க நிலையை எய்த விரதங்காத்தல்

**சீவ தரிசனை**— நாமரூபமயமாகிய கேவலம் நீங்கி ஆன்மா சச்சிதானந்தமயமாகிய பிரமத்தைப்பற்றி நிற்கை. (அத்.) (கட்டளைக், 188)

**சீவம்**— 1. நவபதார்த் தங்களுள் ஒன்றாகிய உயிர். (சீவக. 2814. உரை.) (ச.)
2. சிவன், பரமாத்துமா.

**சீவரம்**— பௌத்த பிட்சுக்கள் அணியும் துவருட்டின ஆடை. சீவரம் போர்த்தல். (சீவக. 1427. உரை.)

**சீவரர்**— பௌத்த பிட்சுக்கள். (சீவரந்தரித்தோர்.)

**சீவரூபம்**— மாயாரூபத்தைக் காணுதற்கு ஓரறிவு உண்டென அறிகை (கட்டளைக். 188

**சீவற்சம்**— 1. திருமாலின் திருமார்பிலுள்ள மறுஅல்லது மயிர்ச்சுழி 2. விசேடங்களில் மங்கலக் குறியாக எடுத்துச் செல்லும்

இலக்குமியுருவம். கிளர்சுடர் சீவற்சம். (திருவிளை. திருமணப். 67)

**சீவன்முத்தர்**— பிரமவித்துக் கள், பிரமவரர், பிரமவரியர், பிரமவரிஷ்டர் என நால்வகை யினராய் இம்மையிலேயே முத் தராயினர். (கோயிற்பு. இரண் யவன்ம.68)

**சீவன்முத்தி**— ஆன்மா இம்மை யிலேயே முத்தியடைகை. (திரு விளை. தலவி,7)

**சீவாத்திகாயம்**— ஜீவாஸ்தி காயம் பார்க்க(ச.) (திருநூற். 23, உரை)

**சீற்றச் சக்தி**— காளி

**சீறா**— வரலாறு (இது அண்ணல் நபி அவர்களின் சீரிய வரலாற் றைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது) (இ)

**சீறாப்புராணம்**— தமிழ்மொழி யில் எழுதப்பட்ட அண்ணல் நபி (ஸல்) பற்றிய சிறந்த வர லாற்றுக் காப்பியம். (இ)

**சீனன்**— பௌத்தன்

## சு

**சுக்கிலத்தியானம்**— பரமான் மபாவனை (ச.) சுக்கிலத்தியான மென்னுங் கணையெறிந்து கைப்ப (சீவக.3081.)

**சுக்கிலை**— பராசக்தி பேதம் (சைவச.பொது. 74, உரை.)

**சுக்ரேசன்**— காசியில் சுக்கிரன் பூசை செய்த இலிங்கம்,

**சுகதநூல்**— பௌத்த நூல் (மணி. பக். 382, அரும்.)

**சுகதன்**— 1. புத்தன். சுகதற் இயற்றிய (மணி. :8,130( 2. அருகன். சுகதாவுரையாயே சீவக. 3096)

**சுகரகசியம்**— நூற்றெட்டு உப நிடதங்களுள் ஒன்று

**சுகவான்**— மன்மதன். (யாழ். அக.)

**சுகாசனர்**— சிவன் (சுகாசனத் திலிருந்து தேவிக்கு உபதேசம் செய்த திருக்கோலம்)

**சுகாசீனர்**— சுகாசனமாக உள்ள சிவமூர்த்தம்

**சுடலைநோன்பிகள்**— காபா லிகக் கொள்கையுடைய துறவி கள் (சை) (மணி.6,86).

**சுடலையாடி**— சிவன் (மயா னத்தில் ஆடுபவன்) (திவா.)

**சுத்தசத்துவம்**— பரமபதத் துள்ள அசித்தத்துவம். (அஷ் டாதச. தத்வத்ரயம், அசித்பிர. 2, பக். 17.)

**சுத்தசிவபதம்**— பரமுத்தி. பரா சத்தி தன்னுள்ளே சுத்தசிவ பதம். (திருமந். 1768)

**சுத்த சிவம்**— நிட்களபரசிவம். (சதாசிவ.)

**சுத்த சைவம்**— சைவம் பதினாறனுள் பதி,பசு பாசங்கள் அநாதி, நித்தியம், என்றறிந்து பதிநிச்சயம் பிறந்து மௌனமே பொருளாய் நிட்டைகூடிச்சிவத்துடன் கூடுவதாகக் கூறும் கொள்கை. (சை) (சி.போ.பா. அவையடக், 35.)

**சுத்த தத்துவம்**— மூவகைத் தத்துவங்களுள் ஒன்று (சை) (சிவப். கட்.)

**சுத்தப்பிரபஞ்சம்**—சுத்தமாயையினின்று தோன்றிய பிரபஞ்சம். (சை)

**சுத்த பூசை**— சிவலிங்கம் ஒன்றைமட்டும் பூசிக்கும் பூசை. (ம.த.அ)

**சுத்த போசனம்**— கோயிற் பிரசாதம்

**சுத்தமாயை**— 1. துக்கமின்றிச் சுகமே அளிப்பதும் சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமானதுமான மாயை. (சை) (ஞானு. கட். 11)
2. இறைவன் நேரேஐந்தொழில் நடத்துவதற்குரிய மூலப் பொருள். இது நித்தமானது, வியாபகமானது. மயக்கம் செய்யாதது. சுத்த மாயையில் தோன்றுவன சிவதத்துவங்களாகிய சுத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என்னும் ஐந்தும். இம் மாயை துன்பத்தோடு விரவுதலின்றி இன்பமாத்திரையே பயப்பது ஆதலின் சுத்தம் எனப்படும். (சைவசமயம். பக் 114)

**சுத்தமார்க்கம்**— மெய்ச்சமயம்

**சுத்தவித்தியாதத்துவம்**— சுத்ததத்துவங்கள் ஐந்தனுள் கிரியை குறைந்து ஞானமேறி ஈசன் அதிட்டித்து நிற்கும் தத்துவம் (சை) (திருவால. சட்.)

**சுத்த வித்தியாதிபதி**— உருத்திரன் (ம.த.அ)

**சுத்தன்**— அயன், அரி, அரன், அருகன் (ம.த.அ)

**சுத்தாசுத்ததத்துவம்**— காலதத்துவம் நியதி தத்துவம், கலா தத்துவம், வித்தியாதத்துவம், அராகதத்துவம், புருடதத்துவம், மூலப்பகுதி என்ற எழுபிரிவினதாய்ச் சுத்தமும், அசுத்தமும், கலந்த தத்துவபேதம். (சை) (சிவப். கட்,4)

**சுத்தாட்டகம்**— நிலம், நீர், நெருப்பு, காற்றுஎன்னும்நான்கு மூர்த்தமான பூதங்களும் அவற்றிற்குரிய கந்தம், சுவை,உருவம்

பரிசம் என்னும் நான்கு உபா தானங்களும் கூடிய எட்டன் கூட்டம். (பௌ.) (பிரபோத 32, 47)

**சுத்தாத்துவைதம்**— சீவான்மா பரமான்மாவுடன் இரண்டறக் கலந்தனுபவிக்கும் நிலை (சை.)

**சுத்தாத்வா**— விந்துவிலுண் டான பிரபஞ்சம். (சை)

**சுத்தாவத்தை**— நின்மலசாக் கிரம், நின்மலசொப்பனம், நின் மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மலதுரியாதீதம், என ஐவ கையினதாய் மலநீங்கிப் பிற வியற்று ஆன்மா சுத்தமாயிருக் கும் நிலை (சை) (சி.சி.4,37)

**சுத்தி**— 1. இப்பிவடிவாகத்தலை யோட்டாலமைக்குந் திருநீற்றுக் கலம். சுத்திய பொக்கணத்து (திருக்கோ. 242)
2. புறமதத்தாரை இந்துமதத்திற் சேர்க்குங்காற் செய்யும் சடங்கு.

**சுத்தோதனன்**— புத்தபகவான் தந்தை

**சுதகன்**— புத்ததேவன்

**சுதகேவலி**— சித்திபெற்ற சைன மேலோர். (ச.)

**சுதநெறி** — பரமாகமங்களிற் கூறப்பட்ட நெறி (ச.)

**சுதம்**— பரமாகமம். (திருநூற். 52)

**சுதர்சனாழ்வான்** — சக்கரத் தாழ்வார் பார்க்க.

**சுதரிசனம்**— திருமாலின் சக்க ரம். (பிங்.)

**சுந்தரத்தோளுடையான்** — அழகர்கோயில் திருமால். சுந் தரத்தோளுடையான் சுழலையி னின் றுய்துங்கொலோ. (திவ். நாய்ச். 9,11)

**சுந்தரபாண்டியம்**— அர்க்கிய தீர்த்தம் சேர்க்கும் திருப்படிக் கத்துக்கு திருவாராதனத்தில் சொல்லும் பெயர். இராசாவினு டைய பெயர் நிலையாக விளங் கும்படி பெருமாளுடைய பாத்தி ரத்துக்கு ஏற்றப்பட்டது. (கோ, த.)

**சுந்தரமூர்த்தி நாயனார்** — எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந் தவராகக் கருதப்படுபவரும், தேவார ஆசிரியர் மூவருள் ஒரு வரும் நாயன்மார் அறுபத்து மூவருள் சிவப்பிராமணருமான சிவனடியார். பெரியபு.)

**சுந்தரி**— 1. துர்க்கை (பிங்.) 2. பார்வதி (சூடா.) 3. இந்தி ராணி (அக.நி.)

**சுந்தரேசன்**— மதுரையில் கோயில்கொண்டுள்ள சிவ பிரான். சுந்தரேசன் மாயை யோ தெரிந்திடாது. (திருவால வா. 53,8)

**சுப்பிரபேதம்**— சதாசிவ மூர்த்தியுடைய வாமதேவ முகத்தினின்று உற்பவித்த ஐந்து ஆகமங்களுள் ஒன்று. (சைவச. பொது. 232)

**சுப்பிரமணியன்** — முருகக்கடவுள்.

**சுப்ஹா**— செபமாலை. (இ)

**சுப்ஹு**— வைகறைத்தொழுகை (இ)

**சுபங்கரி**— பார்வதி (மங்களத்தைச் செய்பவள்)

**சுபத்தலம்**— தேவாலயம்

**சுபார்சுவர்**— தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர் (ச.) (திருக்கலம். காப்பு. உரை.)

**சுபலாபம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று (யாழ். அக.)

**சுபானன்**— விநாயகன்

**சுபுகாணி**— முகம்மதிய ரக்ஷா மந்திரம் (இ)

**சும்பகாதிநி**— துர்க்கை

**சுமதி**— தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர். (ச) (திருக்கலம். காப்பு. உரை.)

**சுமார்த்தம்**— ஸ்மிருதி நூல்களிற் கூறிய விதிகள். (விநாயகபு. 73, 24)

**சுமுகர்** — விநாயகருக்கு ஒரு பெயர்

**சுயம்பு**— 1. கடவுள் (யாழ். அக.) 2. பிரமன் (சூடா). 3. அருகன் (பிங்.)

**சுயம்புமூர்த்தி**— தானாகத் தோன்றிய தெய்வத்திருமேனி

**சுயம்புலிங்கம்** — தானாகத் தோன்றிய சிவலிங்கம். (சைவச பொது. 81, உரை.)

**சுரசம்**— பெருமாளுக்குப் பூசும் குங்குமக் குழம்பு

**சுரபதி**— இந்திரன். (கந்தபு. கயமுகனுற். 265)

**சுரபி முத்திரை**— பூசையில் பசுவின் மடிபோற் காட்டும் முத்திரை. (யாழ். அக)

**சுரபி வாணன்**— காமன்

**சுராட்டு**— இந்திரன். (சங்.அக) சிவன், திருமால்

**சுருதஞானம்**— கல்வி கேள்விகளால் உண்டாகும் அறிவு (ச) (சீவக. 3081, உரை)

**சுருதியான்**— 1.பிரமன் (வேதத்திற்குரியவன்) (கந்தபு. திருநகரப். 65). 2. வேதத்தால் அறியப்படும் கடவுள். சுருதியானைக் கண்டீர் தொழற்பாலதோ (தேவா. 1208,5).

**சுரும்பாயன்**— மன்மதன் (சங். அக)

**சுரும்பாவன்**— மன்மதன் (யாழ். அக)

**சுரேசன்**— இந்திரன், ஈசானன், முருகன் (அக. நி.)

**சுரேசுவரி**— உமை

**சுலூக்**— சூஃபிகள் இறை ஞானப் பாதையில் மேற்கொள்ளும் பயணம் (இ)

**சுவ்விரதர்**— தீர்த்தங்கரர் இருபத்திநால்வருள் ஒருவர். (திருக்கலம். காப்பு. உரை.)

**சுவணபுட்பம்**— கோயிலிற் பூசாகாலங்களில் வேத முதலியன ஓதுகை. (Loc.)

**சுவத்திகம்**— 201 சிகரங்களையும் 25 மேனிலைக்கட்டுகளையுமுடைய கோயில்

**சுவர்,**
**சுவர்க்கம்**— தேவலோகம். தென்னாட்டவருஞ் சுவர்க்கம் புகுதலால். (நாலடி, 243.)

**சுவர்க்கவாசல்** — விஷ்ணு கோயில்களில் மார்கழி மாதத்துச் சுக்கில ஏகாதசி முதல் பத்து நாள்வரை சுவாமி எழுந்தருளுதற்கு உரியதும், வைகுண்ட வாயில்போலக் கருதிப் பலரும் செல்வதற்கு உரியதும் மற்றக் காலங்களில் திறக்கப் படாததுமான தனிவாயில்

**சுவர்க்கன்**— இந்திரன் (பிங்.)

**சுவர்க்காவதரணம்** — பஞ்சகல்யாணங்களு ளொன்று (ச.)

**சுவர்யோனி**— தேவப்பிறப்பு (திருமந். 499)

**சுவஸ்திவாசனம்**— சுவாமி புறப்பாட்டில் ஓதப்படும் வேதம்

**சுவாகா**— ஆகுதி செய்யும் பொழுது தேவதையின் பெயர்க்குப் பின் கூறும் மொழி.

**சுவாகாதேவி**— ஓமத்துக்கு அதிதேவதையான அக்கினி தேவன் மனைவி. (பிங்.) (தொல். பொ. 490. உரை.)

**சுவாகை**— பார்வதி; சுவாகா தேவி.

**சுவாதந்திரியம்**— பரமசிவன் தன்னிச்சையாகத் தொழிற்படுதற்குரிய சக்தி (சி.சி. 11,7, ஞானப்)

**சுவாமி**— 1. கடவுள் 2. சுப்பிரமணியன் (திவா.)

**சுவாமிநாதன்**— முருகக் கடவுள். (சிவபெருமானுக்குக் குரு) (Loc.)

**சுவாமிபிருத்திய நியாயம்** — ஆண்டான் அடிமைத்திறம் போல உரிமை கூறும் நெறி.

**சுவாமிமலை**— கும்பகோணத்துக்கு மேல்பாலுள்ள ஒரு சுப்பிரமணிய க்ஷேத்திரம் (திருப்பு. 186)

**சுவாலினி**— காலாக்கினியுலகங்களுள் ஒன்று. (சை)

**சுவிசேஷகன்**— நற்செய்தி கூறும் கிறிஸ்துவமதபோதகன் (கி)

**சுவிசேஷம்**— நற்செய்தி (கி) (Gospel)

**சுவிசேஷன்** — சுவிசேஷகன் (கி)

**சுவிதி**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர். (ச.) திருக்கலம். காப்பு. உரை).

**சுவேதவராகம்** — திருமாலின் வராகாவதாரம்

**சுவேதவனம்**— தஞ்சை ஜில்லாவில் சீகாழிக்கருகிலுள்ள திருவெண்காடு என்னுஞ் சிவதலம்

**சுவேதன்**— உருத்திரருள் ஒருவர். (சி.போ.பா. 2,3, பக்.212)

**சுவேதாச்சுவதரம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**சுவேதாம்பர சமணம்** — வெண்ணிற ஆடை அணியும் சமணத்துறவிகள். அவர்கள் கோயிலில் உள்ள தீர்த்தங்கரர் உருவங்கட்கும் வெண்ணிற ஆடை அணிவிப்பர், (சமணம். பக். 21).

**சுவேதாம்பரர்**— வெள்ளாடை தரித்த சைன முனிவர்

**சுழுத்தி**— புலன்கள் செயலற்று உறங்கும் நிலை (தத்) (சி.போ. பா. 4,3, பக். 278,புதுப்.)

**சுற்றுக் கோயில்**—ஆலயத்தின் சுற்றுப்பிராகாராத்தில் உள்ள சிறு சன்னிதிகள். (Loc.)

**சுற்றுத்தேவதை**— கோயிலிலுள்ள பரிவார தெய்வம் (Loc.)

**சுற்றுப்பலி**— கோயிலைச் சூழத் திக்குத்தேவதைகளுக்கு இடும் பலி.

**சுற்றுப்பிரகாரம்**— கோயிற்பிரகாரம்

**சுற்றுப்பூசை**— சுற்றுக்கோயில்களிற் செய்யும் பூசை

**சுற்றுமதில்**— கோயில் முதலியவற்றைச் சூழ்ந்துள்ளமதில். (சிலப். 10,31, அரும்.)

**சுற்றுவீதி**— கோயிலைச் சுற்றியுள்ள வீதி

**சுன்னத்**— பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் (இ)

**சுன்னி**— முகம்மதியரில் ஒரு வகுப்பினர் (இ)

# சூ

**சூக்குமபஞ்சாக்கரம்**— அகார உகார, மகார நாத விந்துக்க ளாகிய பிரணவமந்திரம் (சை.) (சி.போ.பா.4,1. 258)

**சூக்குமபராசக்தி** — சூக்கும பஞ்ச கிருத்தியத்தைப் பண் ணும் பராசக்தி (சை) (சி.சி.1, 68, ஞானம்)

**சூக்குமம்**— சிவாகமம் இருபத் தெட்டனுள் ஒன்று (சைவச. 335 உரை.)

**சூசிமுகம்**— நரகவிசேடம் (சே துபு. தனுக்கோ.4)

**சூட்டுக்கறி**— பக்ரீத்து பார்க்க. (இ)

**சூடா**— கழுத்திலணியும் பொற் கொடியிற் கோத்த உருத்திராக் கம்

**சூடிக்கொடுத்தநாச்சியார்**— ஆண்டாள் (தான் சூடிய பூ மாலையைத் திருமால் சூடக் கொடுத்தவள்) (திவ். திருப்பா. தனியன்.)

**சூடிகை**— கோயில் முதலியவற் றிலுள்ள தூபி (கம்பரா. பள்ளி. 24).

**சூபி**— பக்தன் - (இ)

**சூபிமதம்** — கடவுள் ஒருவனே படைப்போன் எனக் கூறும் இஸ்லாமிய தெய்வ வாதிகள் (இ)

**சூர்**— தெய்வம் (தெய்வப்பெண் (பெருங். உஞ்சைக். 50,40) கொடுந் தெய்வம் (ம.த.அ) (குறிஞ்சிப். 255.)

**சூர்ப்பகன்னன், சூர்ப்பகர் ணன்**— விநாயகன்

**சூர்ப்பகை** — முருகக் கடவுள் (சூரபதுமன் பகைவன்) சூர்ப் பகை தொட்ட தோரார். (கந்த பு. வள்ளியம். 154)

**சூரி**— காளி (பிங்.)

**சூரியநாராயணன்** — சூரிய மண்டலத்தில் வசிப்பவராகக் கருதப்படும் திருமால்

**சூரியன்**— 1. நூற்றெட்டு உபநிட தங்களுள் ஒன்று 2. கதிரவன் (திருவாச. 14, 15)

**சூலக்கல்** — சிவாலயங்களுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லை யில் நடப்படும் சூலக்குறியுள்ள கல் (Insc)

**சூலக்கால்**— சூலக்குறி பொறிக் கப்பெற்ற சிவாலயத்து அளவை மரக்கால். S.I.I.v. 83)

**சூலக்கால்வண்டி** — சிவன் கோயிலில் உபயோகிக்கப்படுங் கட்டைவண்டி வகை. (Loc.)

**சூலக்காளை** — சிவன்கோயி லுக்காகச் சூலம் பொறித்து விடப்பட்ட காளை

**சூலபரணி** — சிவன் (சூலப் படையைக் கையிலுடையவன்) (சூடா.)

**சூலி**— 1. சிவன், (கம்பரா. நட் புக். 37) 2. துர்க்கை. (சூடா.)

**சூலினி**— பார்வதி (சூலத்தை ஏந்தியவள்) (அபிரா. 50)

**சூறைத்தேங்காய்** — நேர்த்திக் கடனாகத் தெய்வத்தின் முன் னிலையில் உடைக்குஞ் சிதறு தேங்காய்

**சூனியவாதம்** — நாஸ்திக வாதம் (தத்)

**சூனியவாதி**— நாஸ்திகவாதி

## செ

**செண்டிமுத்திரை** — முத்திரை வகை. (சை)

**செகதம்பிகை,**

**செகன்மாதா**— பார்வதி

**செங்கண்மால்**— திருமால் சிவந்த கண்களையுடையவன்) (திவ். பெரியாழ். 3,8,4.)

**செங்கமலவல்லி** — இலக்குமி (செந்தாமரை மலரில் வசிக்குங் கொடி) (அக. நி.)

**செங்கல்வராயன்** — முருகக் கடவுள் (செங்கல்வகிரி யென் னும் திருத்தணிமலைத் தலை வன்) (அருட்பா, காஸேப்.5)

**செங்கோடு**— சேலம் ஜில்லாவி லுள்ள ஒரு சிவதலம். (சிலப். குன்றக்)

**செங்கோற் கடவுள்** — யமன் (நீதிசெலுத்துந் தேவன்) (திவா.)

**செட்டி**— முருகன். கடற்சூர் தடிந்திட்ட செட்டி. (தேவா, 742, 10)

**செட்டியப்பன்**— சிவன் (முரு கக்கடவுளின் தந்தை) (தேவா. 742, 10)

**செண்டாயுதன்**— ஐயனார் (செண்டாயுதம் உடையோன்) (பிங்.)

**செந்திரு** — இலக்குமி, (கம்பரா. மாயாசனக. 53)

**செந்தில்**— முருகக்கடவுள் தல மாகிய திருச்செந்தூர். (புறநா. 55, 18)

**செந்தீவண்ணன்**— சிவன் (நெருப்பின் நிறமுடையவன்)

**செந்நீர் நுங்கல்**— நரகவிசேடம். (சேதுபு. தனுக்கோ.4)

**செபக்கூடம்**— கிறிஸ்தவர் செபஞ்செய்யுமிடம் (கி)

**செபம்**— பிரார்த்தனை

**செபாலயம்**— செபஞ்செய்யும் இடம் (கி)

**செம்படம்**— திருநீறுவைக்குஞ் சிறுசெப்பு.

**செம்படர்**— பௌத்தர்கள்

**செம்பிறப்பு**— அறுவகைப்பிறப்புக்களுள் நான்காவதாகிய செம்புயிர்க்குரிய பிறப்பு(ச.) (மணி. 27; 151)

**செம்போக்கு**— உயிர் உயர்பிறவிகளிற் சென்று கொண்டிருக்கை (ச.) இது செம்போக்கினியல்பு (மணி. 27.157)

**செம்போதகர்**— அருகரில் ஒரு பகுதியார். (சி.சி. ஆசீவகன் மறுதலை, 2,பர)

**செம்மகள்**— இலக்குமி. முளரி நிறை செம்மகள்.(கல்லா.39,4.)

**செம்மல்**— 1. சிவன் (சூடா.)
2. அருகன் (சூடா.)
3. இறைவன் (திவா.)

**செய்கை**— மனோவாக்குக்காயங்களிலுண்டாகும் இருவகை வினைகளாகிய பாவனாஸ்கந்தம் (பௌ.) (பெரியபு. திருஞான. 916)

**செய்யாமொழி**— வேதம் (செய்யப்படாத மொழி) (வள்ளுவமா. 23)

**செய்யாள்**— இலக்குமி (செந்நிறமுடையவள்) (பரிபா. 22, 4, பக். 175.)

**செய்யோன்**— அருகன் (சூடா.)

**செருத்தணி**— திருத்தணிகை (கந்தபு. வள்ளி. 216)

**செருத்துணை நாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**செருமகள்**— துர்க்கை (போர்க்குரிய பெண் தெய்வம்) (இலக். அக)

**செல்வர்**— சின்னப்பெருமாள். பலி, ஸ்நானம், சயனம் முதலியவற்றுக்காக ஏற்பட்ட மூர்த்திகள். (கோ.த.)

**செவ்வேள்**— முருகக்கடவுள். வென்றிச் செவ்வேள் வேலன். (சிலப். 25,25)

**செறிப்பு**— (சம்வரை) மனம் வாக்குக் காயங்களை அடக்கி இருவினைகளும் உயிரை வந்து அடையாமல் தடுப்பது. (சமணம்1) .4 பக்.

**செறிவன்**— அருகன் (எல்லாவுயிர்கட்கும் இதமானவன்) செறிவன் சினேந்திரன் (சிலப். 11,177)

**சென்மபீசம்**— ஆணவ மலம். (த.நி.போ.182.)

**சென்னை**— கோயில் மூர்த்தி யின் புறப்பாடறிவிக்கும் மேளம்

**செனனி**— உயிர்களின் பிறப்புக் குக்காரணமான **சிவசக்தி**, (சி. சி,1,60,ஞானப்.)

## சே

**சேக்கிழார்**— பெரியபுராணம் இயற்றிய ஆசிரியர்,

**சேசுநாதர்**— இயேசுநாதர்-(கி)

**சேசுவரசாங்கியன்**— கடவு ளுண்மையை ஒப்புக்கொள்ளும் சாங்கியமதவாதி (**தத்**) (சி.சி.2, 57, சிவாக்)

**சேட்டாதேவி**— மூதேவி.

**சேடக்குடும்பி**— கோயிலருச்சி கன் (அடியார் குடும்பத்தில் உள்ளவன்) சேடக்குடும்பியின் சிறுமகள். (சிலப்.30,52.)

**சேட சேடிபாவம்**— 1. ஆண் டானடிமைத் திறம் (சை) (சி. போ.பா, 9,3,பக்.201, சுவாமி. பதிப்பு.) 2. நியாயமகனும் நிய மிக்கப் படுபவனுமாயிருக்குந் தன்மை (வை.)

**சேடம்**— பிரசாதம். அறிதுயி லமர்ந்தோன் சேடங்கொண்டு. (சிலப். 26,62)

**சேடை**— அட்சதையாக இடும் அரிசி. சேடைநல்கி....(பெரியபு. கண்ணப். 48)

**சேத்திரபாலன்**— பைரவர்.

**சேதிமம், சேதியம்**— 1. சைன பௌத்தரின் பள்ளி (பிங்); சே தியந் தொழுது. (மணி.28, 175) 2. தேவாலயம்(பிங்.) 3. சைன பிம்பங்கள் (அ.செ. 110)

**சேந்தன்**— முருகன். சூர்தடிந் திட்ட சேந்தர். (தேவா.942,6)

**சேபம்**— இலிங்கம்

**சேய்**— முருகன், சேஎய் குன்றம் (பரிபா. 6,69)

**சேயவன்**— முருகக் கடவுள். ஆறுமாமுகச்சேயவன். (கந்தபு. தெய்வயா.58)

**சேயோன்**— 1. முருகக் கடவுள், சேயோன் மேய... (தொல். பொ. 5) 2. சிவன். (யாழ். அக)

**சேரமான்பெருமாணாய னார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் சேர அர சரும், ஆதியுலா, பொன்வண் ணத்தந்தாதி முதலியவற்றின் ஆசிரியருமான சிவனடியார்.

**சேரமான்றோழர்**— (சேரமான் பெருமாணாயனாருடைய நண்பர்) சுந்தரமூர்த்தி நாயனார். சேரமான்றோழரென்று பார்பரவு மேன்மை (பெரியபு. கழறிற்.66)

**சேலவன்**— திருமால் - (மீனாக அவதரித்தவன்) (அக. நி.)

**சேவகனார்**— ஐயனார் (வீரத் தெய்வம்) (சங். அக)

**சேவலான், சேவற்கொடியோன்** —முருகக் கடவுள் (சேவலைக் கொடியிற் கொண்டவன்) (திவா.

**சேவனை** — கோயிற் கைங்கரியம்.

**சேவனைக்காரர்** — கோயில் மேளக்காரர்

**சேவாகாலம்** — திருமால் கோயில் முதலியவற்றில் திவ்யப் பிரபந்தம் ஓதுகை. (வை)

**சேவை**— 1. தரிசனம் 2. திவ்யப்பிரபந்தம் முதலியன ஓதுகை (வை)

**சேனாதிராயன்**— 1. சேனாபதி 2. முருக்கடவுள் (யாழ்.அக)

**சேனைக்கால்** — கோயிற்குடதீபக்கால். (கோ.த)

**சேஷகிரி**— திருப்பதி மலை (ஆதிசேஷனது உருவமாகக் கருதப்படும் மலை)

**சேஷசயனம்**— திருமாலுக்குரிய ஆதிசேஷனாகிய படுக்கை

**சேஷசாயி**— திருமால் (ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டோன்)

## சை

**சைகதலிங்கம்**— மணலால் ஆகிய சிவலிங்கம்

**சைகதிகன்**— சமணன்

**சைத்தம், சைத்தியம்**— பௌத்தமதத்தவர் கோயில்.அவ்வூர்ப் புத்தசைத்தியத்து. (சிலப் 10,14, உரை.)

**சைத்தரோற்சவம்**—"சித்திரையில் நிகழும் கோயிற்றிருவிழா.

**சைதனியவான்**— சித்துப் பொருளானவன்.

**சைமினி**— மீமாஞ்சகமதாசாரியன். வைசேடிக சமயத்தைத் தோற்றுவித்தவர்.

**சைலதரன்** — கண்ணபிரான் (மலையைத் தாங்கியவன்) (யாழ். அக.)

**சைவக்குருக்கள்** — பார்ப்பனரில்லாதவருள் சிவதீட்சை பெற்ற குருக்கள்

**சைவசித்தாந்தம்**— சித்தாந்த சைவம் பார்க்க. இலகு சைவ சித்தாந்தம் (திருவாலவா. 38, 6)

**சைவசூக்கம்**— சிவபிரானுக்கு உரிய வேதமந்திரம் (சூத. சிவ மான். 4,20)

**சைவதீட்சை** — சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாணதீட்சை என்ற முப்பகுதியுடைய தாய்ச் சைவ சமயத்திற்குரிய சடங்கு (சை)

**சைவநூல்**— சைவாகமம்

**சைவபஞ்சதபனம்** — காலாக்னிருத்திரம், சுவேதாச்சுவதரம் கைவல்லியம், அதர்வசிகை அதர்வசிரசு என்னுஞ் சைவ சமயத்துக்குரிய உபநிஷதங்கள்.

**சைவம்**— 1. ஊர்த்தசைவம், அனாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம் ஞானசைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலுபாதசைவம், சுத்தசைவம், என்று பதினாறுவகைப்பட்டதாய்ச் சிவனைப் பரதெய்வமாகக் கொண்டு வழிபடுஞ் சமயம். 2. சிவமகா புராணம் 3. ஆகமம்.

**சைவர்**— அனாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அனுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்தியசைவர், என்ற எழுவகைச்சைவ சமயிகள். (சைவசபொது. 435, உரை,)

**சைவவாதி** — சைவ சமயக் கொள்கையை எடுத்து வாதிப்போன். நின்ற சைவாதி நேர்படுதலும் (மணி. 27, 87)

**சைவன்**— 1. சிவனை வழிபடுவோன் 2. சிவன். தழலிலங்கு திருவுருச் சைவனே. (தேவா. 866, 7)

**சைவாகமம்**— சிவாகமம் (பிரமோத். சத்தியாத.32)

**சைவாத்திரம்**— பாசுபதாத்திரம்

**சைவாதிராயர்**— சைவாசாரியர்களுள் ஒரு சாரார்க்கு வழங்கிய பட்டப்பெயர் (S.I.I.i,132)

**சைனம்**— சைனமதம் சமணமதம்

**சைனன்**— 1. அருக சமயத்தவன் 2. புத்தன் (திவா.) 3. அருகக் கடவுள்

**சைனாகமம்**— அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் என முப்பகுதிப்பட்ட சைன சமய ஆகமநூல் (சீவக. 1246, உரை.)

# சொ

**சொக்கநாதன்**— மதுரைச் சிவ பிரான். (திருவாலவா.57,21)

**சொக்கப்பனை**_ கார்த்திகைத் திருவிழாவில் கோயில்களுக்கு முன்பு எரிக்கும் பனையோலைக் கூடு. வானளாவு மோங்கு சொக்கப்பனை (திருநெல். பு. தீபம். 15.)

**சொக்கலிங்கம்**--சொக்கநாதன்

**சொக்கன்**— சிவன் (அழகன்) சொக்கன் என்னு ளிருக்கவே (தேவா. 859, 11)

**சொக்கு**— சொக்கநாதன் பார்க்க. (திருவாலவா 55, 17)

**சொட்டை மெத்தை** — பெரு மாளை வாகனம், கேடயம் முத கியவற்றில் வைத்துக்கட்டும் இரும்புக்கம்பியும், பட்டுக்கயி றும்.

**சொப்பனாவத்தை**— ஆன்மா கண்டத்தில் நிற்க. மனம் வேலை செய்து கொண்டும் இந் திரியங்கள் பத்தும் தொழிலின்றி யும் உள்ள நிலை (தத்) (சி.சி. 4, 33, நிரம்ப.)

**சொர்க்கம்**—தேவருலகு (சூடா)

**சொர்க்கவாசல்** — சுவர்க்க வாசல் பார்க்க.

**சொரூபம்**— 1. குணங்குறி யின்றி ஒன்றாய் யாவுங் கடந்த பதி (சை) (ஞானு. கட்.1) 2. சொரூபலட்சணம் (அத்) (வேதா. சூ.29)

**சொரூபலட்சணம்** — பரப்பிர மதத்தின் சச்சிதானந்த ரூப மான உண்மை இயல்பு (அத்) (வேதா. சூ. 29. உரை)

**சொரூபானுபூதி** — பதியுடன் உயிர் ஐக்கியமுற்று நிற்கும் நிலை. சொரூபானுபூதி காட்டி (தாயு. சின்மயா.1.)

**சொல்** — நாமகள் (சரசுவதி) சொல்லென்றது நாமகளாகிய தெய்வம் (தொல். சொல். 57, சேனு)

**சொற்கோ**— திருநாவுக்கரசு நாயனார். சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலும் (சிவானந்தமாலை)

**சொன்மடந்தை** — சரசுவதி (சொல்லுக்குரிய பெண் தெய்வம் (பு. வெ. கடவுள்.1)

# சோ

**சோடச சைவம்**—ஊர்த்த சைவம், அனாதிசைவம், ஆதிசைவம், சைவம், பேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிர்குணசைவம் அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலு பாத சைவம், சுத்த சைவம், அபேதசைவம் என்று பதினாறு வகைப்பட்ட சைவம் (சை) (சங். அக.)

**சோடசபாவனை** — சைன இல்லறத்தானும் துறவியும்கரும நீக்கத்தின் பொருட்டு மேற்கொள்ளும் பதினாறு பாவனைகள் (ச.) (சீவக. 3313, உரை)

**சோடசோபசாரம்**— ஆசனம், சுவாகதம், பாத்தியம், அர்க்கியம், ஆசமனீயம், மதுபர்க்கம், ஆசமனம், ஸ்நானம், ஆடை ஆபரணம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம் வந்தனம் அல்லது, மஞ்சனம், பூ, கந்தம், தூபம், தீபம், நீர், அமுது, தூசு, அடைக்காய், ஆடி, குடை, கவரி, ஆலவட்டம், விசிறி, ஆடல், வாச்சியம் என்ற பதினாறு வகை உபசாரங்கள். சர்வவல்லமையுடைய ஞானமயமான பரம்பொருளைத் தான் வழிபடுமிடத்தில் வருவித்து, வரவேற்று, உபசரித்துத் தன்வழிபாட்டை ஏற்றருளுமாறு பிரார்த்தித்தல் இவ்வுபசாரங்களின் பொருளாகும்.

**சோணாயிரம் கொண்டான்**- திருமஞ்சன காலத்தில் உபயோகிக்கும் ஸஹஸ்தர தாரை (சல்லடை)த் தட்டு. (கோ த)

**சோணேசன்** — திருவண்ணாமலையிற் கோயில்கொண்ட சிவபிரான் (அருணகிரியந்.25)

**சோதி**— அருகன், அரி, அரன் (அக. நி.)

**சோதிடத்தேவர்**— ஒருசார் தேவசாதியார் (ச)

**சோதியன்**— கடவுள். (திருவாச 1, 72)

**சோதிர்லோகம்** — எழுவகையுலகுளொன்று (ச)

**சோமகர்ப்பன்**— திருமால்

**சோமசித்தாந்தம்**— சைவ சமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று (சா.சொ.அ)

**சோமசுந்தரன்** — மதுரையிற் கோயில்கொண்டுள்ள சிவபெருமான் (திருவிளை. மூர்த்தி. 34)

**சோமசூத்திரப்பிரதக்ஷிணம்**- சிவாலாயத்தில் சோமசூத்திரத்தைக்கடவாது செய்யப்பெறும் பிரதிக்ஷிணவகை, (Loc.)

**சோமசூத்திரம்** — சிவாலயத்

தில் அபிஷேக நீர்விழுங்கோ முகம்

**சோமசேகரன்,**
**சோமதரன்,** சிவன் (சந்திர
**சோமதாரி,** னை முடியில்
**சோமநாதன்—** உடையவன்) (தாயு. சிற்சுகோ. 10.)

**சோமவாரவிரதம்**--கார்த்திகை மாதத்து முதல் திங்கட்கிழமை தொடங்கித் திங்கட்கிழமை தோறும் பட்டினியிருந்து பிரதோஷகாலத்தில் சிவபிரானைப் பூசை செய்து அனுஷ்டிக்கும் விரதம்

**சோமாசிமாற நாயனார் —** நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**சோமாற் கந்தன்—** சோமாஸ் கந்தன், (சிவரக. கணபதியு.1)

**சோமாஸ்கந்தன்—** உமையோடும் கந்தனோடுங்கூடியுள்ள சிவமூர்த்தம்

**சோமி —** துர்க்கை. சத்தியுஞ் சோமியும் (திருவாச. 9,1).

**சோறு—** மோட்சம் (ம.த.அ.) பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். (திருவாச. 15, 7)

# சௌ

**சௌகதன்—** புத்தன்

**சௌந்திராந்திகன் —** சூத்திர பிடகத்தை மட்டும் பிரமாண மாகக் கொள்ளும் பௌத்த மதப்பிரிவு

**சௌத்திராந்திகன் —** புத்த மத்தில் சௌத்திராந்திகப் பிரிவைச் சேர்ந்தவன்.(சி.போ.பா. அவைபக். 37,)

**சௌத்தராந்திகன்மதம்**—புத் தரில் பேதவாதி

**சௌபாக்கியம் —** நூற்றெட்டு பநிடதங்களுள் ஒன்று

**சௌமியன்—** 1. ஏகாதசருத்திரருள் ஒருவன் (திவா) 2. சமணத் துறவி (சூடா) 3. அருகன் (சங்.அக)

**சௌரி—**திருமால் (பிங்.) யமன்.

# ஞ

**ஞமன்—** யமன். ஞமற் கோலை வைத்தன்ன. (சீவக. 251)

**ஞாதி—** ஏகாதசருத்திரரு ளொருவர்

**ஞாளியூர்தி—** வைரவன். (பிங்)

**ஞானக்காட்சி**— பதிஞானம்

**ஞானக்கூத்தன்**— சிவன் (ஞானத்தில் கூத்தாடுபவன்) ஞானக்கூத்தன் ஒரு மூர்த்தி கொடு (சிவப்பிர. 2,31)

**ஞானக்கை**— பரஞானமாகிய முத்திசாதனம். (திவ். திருவாய். 2,9,2)

**ஞானசக்தி**— பஞ்ச சத்திகளுள் ஒன்றாய் ஆன்மாக்கள் இரு வினைப் பயன்களை நுகர்ந்து தொலைத்து முத்தி எய்துமாறு செய்யும் சிவபிரானது சக்தி· (சி.சி. 1,63)

**ஞானசக்திதரன்**— முருகன்

**ஞானசபை**— சிதம்பரத்தி லுள்ள சிற்சபை

**ஞானசம்பந்தர்**— திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். ஞாலத்துயர்காழி ஞானசம்பந் தன். (தேவா. 2.11)

**ஞானசாத்திரம்**— சமயஞானம் உணர்த்தும் நூல்

**ஞானசாதனம்**— மோட்ச சாதனமுறையில் ஞானநெறி அடைதற்கு வேண்டும் பயிற்சி. (சை)

**ஞானசித்தன்**— மோட்ச சாத னத்தில் ஞானங் கைவரப் பெற்றோன். (சி. சி. 8, 32, சிவாக்)

**ஞானசூரியன்**— 1. இறைவன் 2. ஏசுகிறிஸ்துநாதர்

**ஞானசைவம்**— சைவம் பதினா றனுள் ஒன்றானதும் நிட்டைகூடி இறைவனோடு இரண்டறக் கலத்தலே மோட்சமென்று கூறு வதுமாகிய சமயம் (சை) (து.நி. போ. பக். 255)

**ஞானத்தகப்பன்**— ஞானஸ் நானத்தில் தந்தையாக வரிக்கப்பட்டவன். (கி.)

**ஞானத்தாய்**— ஞானஸ்நானத் தில் தாயாக வரிக்கப்பட்டவர் (கி)

**ஞானத்தில் ஞானம்**— ஞான நிட்டை கூடுகை (சை.) (சி· போ.பா. 8,1, பக். 358)

**ஞானத்தில் யோகம்**— ஞானத்தைச் சிந்தித்துத் தெளி கை. (சை) (சி.போ.பா. 8,1, பக். 358)

**ஞானத்திற்கிரியை**— கேட்ட ஞானநூற் பொருளைச் சிந்திக் கை. (சை) (சி.போ.பா. 8,1, பக். 358)

**ஞானத்திற் சரியை**— ஞான நூற்பொருளைக் கேட்கை. (சி.போ.பா.8,1, பக். 358)

**ஞானத்திறைவி**— (அறிவிற் குரிய பெண் தெய்வம்) சரசுவதி (பிங்.)

**ஞானதீட்சை**— ஞானஸ்நானக் கிரியை (Rite of Baptism). R.C.

**ஞானநாயகன்**— கடவுள்.

**ஞானநிட்டை**— இறைவனோடு ஆன்மா ஒன்றிநிற்கும் அனுபவ நிலை. (சிவப், பிர. உண்மை. 34.)

**ஞானப்பிள்ளை**— ஞானஸ்நானத்தால் பிள்ளை முறையானவன் (கி)

**ஞானப்பூங்கோதை**— திருக்காளத்தியிலுள்ள உமாதேவி. ஞானப்பூங்கோதையாள் பாகத்தான்காண். (தேவா. 1099.9)

**ஞானப்பெண்**— ஞானஸ்நானத்தால் மகளானவள் (கி)

**ஞானபரன்**— கடவுள்

**ஞானபாதம்**— 1. சிவாகமம் நாற்பாதங்களுள் பதி, பசு, பாசங்களாகிய முப்பொருளைப் பற்றிக் கூறும் முதற்பகுதி. (சை) (பெரியபு. தில்லைவா. சூச.)
2. ஞான மார்க்கம்(சை)
3. அருகக் கடவுளது திருமொழி (ச.) (சிலப். 10, 194, உரை.)

**ஞானபாரமிதை**— தசபாரமிதைகளுள் ஞானம் நிரம்புகை (பௌ.) (மணி. 26, 45, உரை.)

**ஞானபிதா**— ஞானத்தகப்பன். (கி.)

**ஞானபூசை**— ஞானநிலையினின்று ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல் முதலிய பூசனை. இறைவனடி யடைவிக்கும் எழில் ஞானபூசை. (சி.சி. 8,23)

**ஞானபோசனம்**— சமயஞானமாகிய உணவு. (கி.)

**ஞானம்**— 1. ஞானபாரமிதை (பௌ) (மணி. உரை.)
2. மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியஞானம், கேவலஞானம் என்னும் ஐவகை ஞானங்கள் (ச.) (சிலப். 10, 177, குறிப்பு.)
3. சிவனைச் சகளமும் நிட்களமுங்கடந்த திருமேனியுடையராகக் கேட்டல் முதலிய ஞானமுறைப்படி அறிவால் வழிபடுகை (சை) (சி.போ.பா. 8,1, பக். 359, புதுப்.)
4. பூசையிற் சிவலிங்கம் அமைதற்குரிய சலாசனங்களுள் ஒன்று (சைவச. பொது. 523.)

**ஞானமயன்**— அறிவு வடிவான சீவான்மா அல்லது பிரமம். (வேதா.சூ. 154)

**ஞானமார்க்கம்**— 1. முத்தியெய்துதற்குரிய நால்வகை மார்க்கங்களுள் தலைசிறந்த ஞானபாதம் (சை.) (சி. சி. 8 22, சிவாக்.)
2. ஞானநெறி.

**ஞானமூர்த்தி**— 1. சிவன் (திவா) 2. சரசுவதி (திவா) 3.

கடவுள் (திவ். திருவாய், 4,7, 1)

**ஞானயாகம்**— ஓதல், ஓதுவித்தல் தெளிதல், தெளிவித்தல் மனத்தில் தரித்தல் என்ற ஞான மார்க்கத்திற்குரிய யாகம். (சிவ தரு. ஐவகை. 7, உரை)

**ஞானவதி**—வேண்டும் சாதனங்களையும், கிரியைகளையும் குரு தனது பாவனையாற் செய்து கொள்ளும் ஔத்திரி தீட்சை வகை. (சை) (சி.சி. 8,3, சிவஞா.)

**ஞானவாக்கினை**— கிறிஸ்தவ குருமாரின் கட்டளை (கி.)

**ஞானவாரி**— கடவுள் (சூடா. 6,1)

**ஞானன்**— பிரமன் (அறிவில் முதிர்ந்தவன்) (திவா.)

**ஞானஸ்தானம்**— கிறித்து மதக்கிரியை (கி.)

**ஞானஸ்நானம்**— Baptism; கிறிஸ்துவ சமயத்திற் புகுதற்காகச் செய்யப்பெறும் சுத்தீகரணச் சடங்கு (கி.)

**ஞானாகமம்**— விவிலியநூலின் ஒரு பகுதி. (கி)

**ஞானாசாரம்**— முத்திமார்க்கத்திற் சிறந்ததாகிய ஞானபாதத்திற்குரிய ஒழுக்கம். (சை)

**ஞானாத்துமா**— (அறிவுருவம்) பிரமம். (கட்டளைக். நாஞசீ. 158)

**ஞானுதிக்கர்**— தெய்வசாதியினருள் ஒரு வகையார். R.C.

**ஞானாதிகாரி**— ஞானமார்க்கத்துக்குரியவன் (தத்)

**ஞானாவரணீயம்**— எண்வகைக் குற்றங்களும் ஒன்றும் அறிவை மறைப்பதுமான கருமம் (ச.) (சீவக. 2718, உரை.)

**ஞானானுபானதிரவியம்**— தேவகிருபை பெறுதற்குச் செய்யுங் கிரியை முதலியன (கி)

**ஞானி**— 1. ஞானபாதமுடையோன் (சை) (சி.சி. 12,5) 2. அருகன் (சங். அக.)

**ஞேயம்**— கடவுள்

## ட

**டவர்**—வாகனத்தில் பெருமாளுக்குச் சாத்தும் பாவாடை. (கோ. த.)

**டோலோற்சவம்**— அலங்கரித்த ஊஞ்சலில் கோயில் மூர்த்திகளை எழுந்தருளிவித்து ஆட்டி நடத்தும் விழா.

# த

**த்ரிகம்**— பதி, பசு, பாசம், முத லானவற்றின் முக்கூட்டு.

**த்ருமணி**— புத்ததர்மசங்கங்கள்

**த**— பிரமன். (யாழ். அக )2. குபேரன்.

**தக்கணன், தக்கணாமூர்த் தித்தேவர்**— தட்சிணாமூர்த்தி, (சை) தேவா. 968, 10)

**தக்கசங்கரன்**— சிவன்

**தக்தீர்**— இறைவனால் விதிக்கப் பட்டது (இ)

**தக்பீர்**— அல்லாஹ் பெரியவன் என்று மொழிதல் (இ)

**தக்வா**— இறையச்சம்; இறை யுணர்வு; இறைநினைவு (இ)

**தகப்பன்சாமி**— முருகக்கடவுள் (தன் தந்தைக்குக் குரு.) தகப் பன்சாமி எனவரு பெருமானே. (திருப்பு. 1094.)

**தசகாரியம்**— 1. தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரி சனம், சிவயோகம், சிவபோகம் என்ற ஆன்மாநுபவ நிலைகள். (சை)(சைவசமயம், பக். 120) 2. சிதம்பரநாததேசிகர் இயற் றிய சைவசித்தாந்தநூல் 3.மாயாரூபம், மாயாதரிசனம், மாயாசுத்தி, சீவரூபம், சீவதரி சனம், சீவசுத்தி, பிரமரூபம், பிரமதரிசனம், தேககைவல்லி யம், விதேககைவல்லியம் என்ற ஆன்மாநுபவ நிலைகள் (அத்.) (வேதா. தச.கட்.)

**தசசீலம்**— பௌத்தத் துறவி களுக்குரிய பத்து வகையான ஒழுக்க நியதிகள். (மணி. 21, 57, உரை)

**தசபலன்**— புத்தன். (மணி, 29, 26, உரை.)

**தசபாரம்**—தசபாரமிதை பார்க்க

**தசபாரமிதை**— புத்த பதவிக் குரிய தானம், சீலம் க்ஷமை, வீரியம், தியானம், பிரபஞ்ஞை உபாயம், தயை, பலம், ஞானம் என்ற பத்துகுண விசேடங்கள். (பௌ.) (மணி.26, 45,உரை.)

**தசமன்**— ஆன்மா

**தசமொழி**— மோசே விதித்த பத்துக் கட்டளைகள் (கி)

**தசரா**— துர்க்காதேவியின் பொ ருட்டு மாளய அமாவாசை அடுத்து நிகழ்த்தப்படும் பத்து நாட் பண்டிகை

**தசலாட்சணிகநோன்பு**— இது சைனர்களுக்கு உரியது

பத்து அறங்களை மேற்கொள்ளும் நோன்பு (ச.)

**தசவவதாரன்**— திருமால் (பத்து அவதாரங்களெடுத்தவன்) (பிங்.)

**தசாவதாரம்**— மத்ஸ்யம், கூர்மம். வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன், கற்கி என்னும் திருமாலின் பத்து அவதாரங்கள். (பிங்.)

**தசும்பு**—கோபுர விமானங்களின் உச்சிக்கவசம். (கம்பரா. நகர. 26)

**தட்சணாமூர்த்தம்**— சிவபிரான் தென் முகமாயிருந்து பிரம புத்திரர்களாகிய சனகாதியர் நால்வருக்கும் உபதேசித்த திருவுருவம்

**தட்சணாமூர்த்தி**— 1. தென் முகமாயிருக்கும் சிவமூர்த்தம் (திருவிளை. பாயி. 13) 2. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**தட்டி**— விளக்குத்தட்டு(சா. சொ.அ)

**தடத்தம்**— பஞ்சகிருத்தியங்களைப் பண்ணும் பதிநிலை (சை) (ஞாஜ. கட்)

**தடாதகை, தடாதகைப்பிராட்டியார்**— மீனாட்சி (திருவாலவா. 3, 9)

**தண்ட**— அனர்த்த தண்ட விரதம். (அ.செ.89)

**தண்டகச்சதுரர்**— திருநாவுக்கரசு நாயனார்

**தண்டகன்**— யமன். (கந்தபு. மார்க், 215)

**தண்டத்தான்,**
**தண்டதரன்**— யமன் (தண்டிப்பவன்)

**தண்டபாணி**— 1. முருகக்கடவுள் 2. திருமால் 3. யமன்

**தண்டாயுதபாணி**— முருகக்கடவுள் (தண்டாயுதத்தைக் கையிலுடையவன்)

**தண்டாயுதன்**— (தண்டாயுதமுடையவன்) 1. முருகக்கடவுள் 2. வைரவரக்கடவுள் 3. ஐயனார்

**தண்டி**— 1. நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர். நாட்டமிகு தண்டிக்கு(தேவா.737,5) 2. யமன். (திருவிளை. திருமண. 108) 3. சண்டேசுரர். (தணிகைப்பு. கடவுள்வா.9)

**தண்டியடிகணாயனார்**— சண்டேசுரர் (பெரியபு.)

**தண்டிலம்**— சிவபூசைக்கு நிய

மித்துக்கொண்ட இடம். (காஞ் சிப்பு. சனற்கு. 20)

**தண்டீசர், தண்டீசுரன்**— சண்டேசுர நாயனார்

**தணிகை**— வட ஆர்க்காட்டு ஜில்லாவிலுள்ள திருத்தணிகை என்னும் சுப்பிரமணியத்தலம்.

**தணியல்**— திருத்தணிகை. தணியல்மேவி. (குற்று.தல. திருமண. 161)

**தத்தாத்திரயன்**— அத்திரியின் புத்திரனும் திருமாலவதாரமுமான ஒரு முனிவன். (பாகவத. முதற். மாயவனமி. 26)

**தத்தாத்திரேயம்**— அஷ்டோத் தரசதோப நிடதங்களுள் ஒன்று

**தத்துவசுத்தி**— தசகாரியத்துள் ஒன்றாய் முப்பத்தாறு தத்துவங் கட்கும் ஆன்மா அதீதமாய் நிற்கும் பொழுதுள்ள அனுபவ நிலை. (தசகா.)

**தத்துவத்திரயம்— சித்து**, அசித்து, ஈசுவரன் என்ற மூவகை உண்மைப்பொருள்கள் (வை.) ஆத்துமதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற மூவகை தத்துவங்கள் (சை)

**தத்துவதரிசனம்**— தத்துவங்கள் முப்பத்தாறும் மாயையின், காரியமென்றும் சடபதார்த்தங் களென்றும் ஆன்மா தன்னறிவிலே விளங்கக் காணும் அனுபவநிலையாகிய தசகாரியவகை (சை) (தசகா)

**தத்துவம்**—1. மகாபூதம் 5, தன்மாத்திரை 5, கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, மனம், அகங்காரம்,மகத்து, மூலப்பிரகிருதி, ஆன்மா ஆகிய 25 மூலப்பொருள்கள். (சாங்கியா) (குறள். 27, உரை.)
2. அசுத்ததத்துவம் 24-ம் சுத்தாசுத்த தத்துவம் 7-ம் சுத்ததத்துவம் 5-ம் ஆகிய 36 மூலப்பொருள்கள். அல்லது மேற்கூறிய 36-ம், புறநிலைக் கருவி 60-ம் ஆகிய 96 மூலப் பொருள்கள். (சை.)
3. பரமான்மா. (சி.சி.6,5.)
4. ஜீவ, அஜீவ, ஆஸ்ரவ, பந்த, சம்வரை, நிர்ச்சர, மோட்சம் என்ற ஏழு. (அ. செ. 12)

**தத்துவமசி**— 'அது நீ யாயிருக் கிறாய்' என்று பொருள் கொண்ட வேத வாக்கியம். தத் துவமசி யறிஞர் கொள்வர். (பிர புலிங். முனிவர்.20)

**தத்துவராயர்**— பதினாறாம் நூற்றாண்டிலிருந்தவரும் பாடுதுறை முதலிய தத்துவ நூல்களியற்றியவருமான ஆசிரியர்

**தத்துவரூபம்**-- தத்துவங்களின் குணங்களை ஆன்மா காணும் நிலையாகிய தசகாரியவகை (சை)

**தத்துவவாதம்**— இயற்கையே கடவுள் என்னும் மதம்

**தத்துவன்**— 1. கடவுள் (பேருண்மையாயுள்ளவன்) தத்துவனைத் தேனைப் பாலை (தேவா. 12,1) 2. அருகன். (திவா)

**தத்துவாத்துவா**— ஆறு அத்துவாக்களுள் முப்பத்தாறு தத்துவங்களாகிய அத்துவாவகை. தத்துவாத்துவா முதலான தெல்லாம் (சி.சி. 8,6, மறைஞா.)

**தத்துவாதீதன்**— தத்துவங் கடந்த பரம்பொருள் (சி.சி.2, 73, சிவாக்.)

**ததாகதன்**— புத்தன். (சூடா)

**ததீயாராதனம்,**

**ததீயாராதனை**— திருமாலடியவர்க்கிடும் விருந்துணவு (வை.)

**தந்த்ரம்**— ஆகமம்.

**தந்திக்கடவுள்,**

**தந்திமுகன்**—விநாயகர் (யானை முகத்தையுடையகடவுள் (பிங்.)

**தந்தியுரியோன்** — சிவன் (யானைத் தோலைப் போர்த்தவன்) (சூடா.)

**தந்திரி**— கோயிலில் அர்ச்சகத் தலைவர். (சா.சொ.அ.)

**தநுசாரி** — திருமால், இந்திரன்

**தப்லீக்** — இறை மார்க்கத்தை எடுத்துரைத்தல்; பிரசாரம் செய்தல் (இ)

**தபசுகாலம், தபசுநாள்**— கிறிஸ்தவர்கள் கொண்டாடும் உபவாசநாள் (கி)

**தம்பிரான்**-- 1. கடவுள். தம்பிரானடிமைத் திறத்து. (பெரியபு. இளையான்குடி.1) 2. மடங்களிலுள்ள சைவத்துறவி

**தம்பிரான் தோழர்** — சுந்தரமூர்த்தி நாயனார் (சிவபிரானுக்குத் தோழன்) (பெரியபு. தடுத்தாட். 171)

**தம்மத்தி** — தர்மாஸ்திகாயம் பார்க்க (ச.) (மேருமந். வைசயந்.92)

**தமத்தமப்பிரபை** — ஏழுநரக வட்டங்களுள் பேரிருள் நிறைந்த நரகம் (ச.) (சீவக. 2817, உரை.)

**தமநியன்**— பிரமன் (யாழ்.அக)

**தமப்பிரபை**— ஏழுநரகவட்டங்களுள் இருள் நிறைந்த நரகம் (ச) (சீவக. 2817, உரை)

**தமனியன்** — பிரமன் (யாழ். அக.) 2. இரணியன்

**தமி**— முதல்வன், கடவுள் (சிவஞா)

**தமிழ் முனிவர்** — அகத்தியன்) கந்தபு. சூரபன். வதை. 289)

**தமிழ் விரகன்** — திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் (தமிழில் வல்லவன்) (தேவா. 132,11)

**தமிழாகரன்**—திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் (தமிழ்க்கு நிலைக்களமானவன்) (பதினெ. ஆளுடை. 35)

**தமோக்கினன்**— அக்கினி, சந்திரன், சூரியன், புத்தன், சிவன் திருமால்

**தமோகுணம்**-- முக்குணங்களுள் காமம், வெகுளி, மயக்கம் முதலிய தீக்குணங்களுக்குக்காரணமாயிருப்பது

**தயக்கா**-- பக்கிரியின் இருப்பிடம் (இ)

**தயம்மும்** — உளூவிற்குப் பதிலாகச் செய்யப்படுஞ் செயல். (இ)

**தயாகூர்ச்சன்**— புத்தன்

**தயாபாரமிதை** — அருள்மிகுகையாகிய பாரமிதை (பௌ.) (மணி. 26,45, உரை)

**தயாவீரன்** — புத்தன் (தயையில் மேம்பட்டவன்) (மணி.30, 11,உரை)

**தயிரமுது**— கடவுட்கு அல்லது அடியார்க்குப் படைக்குந் தயிர். (S.I.I.iii, 116)

**தயிலக்காப்பு**— கடவுள் திருமேனிக்குத் தயிலம் சாத்துகை (கோயிலொ, 8.)

**தர்கா**— பள்ளிவாசல் (இ)

**தர்த்தீல்** — திருக்குர்ஆனை அமைதியாக ஓதுவது (இ)

**தர்ப்பகன்**— மன்மதன்

**தர்மர்**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர். (ச.) (திருக்கலம். காப்பு. உரை.)

**தர்மாஸ்திகாயம்**— பஞ்சாஸ்தீகாயத்துள் மீனுக்கு நீர் போலச் சீவனது கமனத்துக்குச் சாதனமான திரவியம் (ச.) தருமம். பொருள்களை இயக்கும் சக்தி தருமம். (சமணம்.பக். 36.)

**தரணீசுவரன்**— சிவன்

**தரணீதரன்**— திருமால்

**தரளதரம்**— நரகவகை

**தராதரர்**— விநாயகர். (உலகத்தைத் தாங்குபவர்)

**தராதரன்**— திருமால்

**தரிசநாவரணியம்** — எண் வகைக் கன்மங்களுள் ஒன்று (ச.) (ம.த.அ)

**தரிசன்**— விரதங்கள் இருக்காது சம்யக்தரிசனமட்டும் உடையவன். (அ.செ.162.)

**தரிசனம்**— நூற்றெட்டுபதிடதங்களுள் ஒன்று

**தரிசனவிசுத்தி**— மோட்சமார்க்கத்தை ஐயமின்றித் தெளிகை. (ச)

**தரிசனாவரணியம்** — எண் குற்றத்துள் உண்மைக் கொள்கையைக் காணவொட்டாமல் தடுக்கும் கருமம் (ச.)

**தரிசாப்பள்ளி**-- 9-ம் நூற்றாண்டிலே கொல்லத்தில் இருந்த ஸிரியன் கிறிஸ்தவக் கோயில் (கி.) (T.A.S.ii, 80)

**தரித்தான்**— விரதங்களைப் பின்பற்றுபவன் (அ.செ. 163)

**தருப்பகன்**— மன்மதன். (சங். அக)

**தருநிலை**— கற்பகத்தரு நிற்குங் கோயில்

**தருநிலைக்கோட்டம்** — காவிரிப்பூம்பட்டினத்தில் கற்பகத்தரு நின்றுவிளங்கிய கோயில். (சிலப்.5,145-6)

**தருமசெல்வி**— பார்வதி (பீங்) தருமதேவதை பார்க்க.

**தருமசக்கரம்**— அறவாழி (பௌ.ச.) (மணி.10,26)

**தருமசக்கரம் உருட்டுதல்** — அறஆணை செலுத்துதல். (மணி.)

**தருமசராணர்**— புத்த தருமத்தைப் பல இடங்களுக்குச் சென்று பரப்புவோர். (மணி)

**தருமத்தியானம்** — ஆன்மாவின் இயல்பு, அதன் சுகதுக்கானுபவம், அது நல்வழியடைதலைத் தடுக்கும் தடைகள், அது முடிவில் நித்திய சுகத்தை எய்துகை ஆகிய தத்துவங்களைப் பற்றிய உணர்வு. (ச.) இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப. (குறள், 286,உரை)

**தருமதலைவன்**— புத்தன் (தருமத்திற்குரிய தலைவன்) (மணி, 11,30)

**தருமதானம்** — சமய தருமப்படி செய்யும் தானம். (சிலப்.15,30 உரை.)

**தருமதேவதை**— 1. கிருதயுகத்தில் நான்கு கால்களையும், திரேதாயுகத்தில் மூன்று கால்களையும், துவாபரயுகத்தில் இரண்டு கால்களையும், கலியுகத்தில் ஒரு காலையும் பூமியில் ஊன்றி நிற்பதாகக் கருதப்படும் அறக்கடவுள். (சிலப். 18,41. அரும்.) 2. இயக்கி. (சூடா.) 3. யமன். (பாரத. நச்சுப். 47.)

**தருமபீடிகை**— புத்தனது பாதபீடிகை (மணி)

**தருமபுரம்**— பிரசித்தியானசைவமடமுள்ள ஒரு சோணாட்டுத் தலம்

**தருமமுதல்வன்**— அருகக்கடவுள். சித்தன் பகவன் தருமமுதல்வன். (சிலப். 10, 178)

**தருமராசன்**— புத்தன். அருகன்

**தருமவாகனன்**— சிவன் (தருமரூபியான இடபத்தை வாகனமாகக் கொண்டவன்) (யாழ். அக)

**தருமன்**— 1. அறக்கடவுள். (சீவக 160) 2. யமன் (பிங்) 3. தர்மபுத்திரன் (பாரத. சூது. 191) 4. புத்தன் (பிங்.) 5. அருகன் (சிலப். 10. 178)

**தருமிஷ்டர்**— மாதாகோயிற் பாதிரிகள் (கி)

**தலசயனம்**— மகாபலிபுரம் முதலியவற்றிற்போலத் திருமால் நிலத்திற் பள்ளிகொண்ட திருக்கோலமுள்ள தலம். கடன் மல்லைத் தலசயனம் (திவ். பெரியதி. 2,5,1)

**தலத்தார்**— கோயில் அதிகாரிகள்.

**தலம்**— கோயில்; க்ஷேத்திரம். (பிங்.)

**தலைமாலை**— சிவபிரான் அணியுஞ் சிரங்களாலாகிய மாலை. தலைமாலை தலைக்கணிந்து (தேவா. 1181,1)

**தவ்பா**— இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருவது. மீண்டும் பாவம் செய்யாமலிருப்பது (இ)

**தவ்ராத்**— இறைத் தூதர் மூசாவிற்கு அருளப்பட்டவேதம்-(இ)

**தவ்வை**— மூதேவி. (சூடா.)

**தவ்ஹீத்**— ஓரிறைக் கொள்கை (இ)

**தஃவத்**-- இறைமார்க்கத்தின்பால் மக்களை அழைத்தல்

**தவம்**— 1. பற்றை நீக்கிக் காயக் கிலேசஞ் செய்துகொண்டு கடவுளை வழிபடுகை. (குறள், 266,) 2. தோத்திரம் (கோயிற்பு. இரணிய. 81) 3. நோன்புநோற்றல். (அ,செ. 34.)

**தவாஃப்**— கஃபாவை ஏழு தடவை சுற்றி வருதல் (இ)

**தழல் வண்ணன், தழலாடி தழலெடுத்தான், தழற்கண்ணன், தழனிறக்கடவுள்**— சிவபிரான் (தீயொடுஆடுபவன்) சடையானே தழலாடி (திருவாச. 39,2)

**தழையிடுவார்**— கோயிலில் வில்வம், திருத்துழாய் முதலிய பச்சிலைத் திருப்பணி செய்வார். (சா.சொ. அ.)

**தளி**— கோயில். காமர்சாலை தளி நிறுமின் (சீவக. 306)

**தளிகை**— ஓரளவு கொண்ட நைவேத்தியப் பிரசாதம் (வை) (I.M.P.S.A. 148.)

**தளியிலார்**— கோயில் ஊழியஞ் செய்யும் பெண்டிர்.

**தற்சிவம்**— முதற்கடவுள்.

**தற்பகன்**— மன்மதன் (யாழ். அக.)

**தற்பதம்**— பிரம சொரூபம்

**தற்பரன்**— சிவன்;பரம்பொருள். தணித்தலும் அளித்தலுந் தடிந் தோன் தற்பரன் (ஞானு.48, 20)

**தற்பரை**— 1. பார்வதி (சூடா.) 2. ஆன்மா தன்னைப் பதியாகக் கருதும் ஞானம். (உண்மை நெறி. 4, உரை.)

**தற்பி**— இந்திரன்

**தற்புருடப் பிரமம்**— மகேசுர மூர்த்தி

**தற்புருடம்**— சிவனைம் முகத் துள் கிழக்கு நோக்கியிருப்பது (சைவச. பொது. 334.)

**தற்போதம்**— ஆன்ம ஞானம்

**தன்**— ஆன்மா (ம.த.அ)

**தன்மச் சொரூப விபரீத சா தனம்**— ஏது சாத்தியத்தில் ஒரு போதும் இல்லாதிருப்பது. வாதி தான்கூறிய ஏதுவினுல்சாத்திய தன்மமாகிய துணிபொருளின் சிறப்புக்களை மொழிவது.(மணி.)

**தன்மசரணம்**— தன்மத்தைச் சரண்புகுகை. (ச) (சீவக. 3, உரை.)

**தன்மம்**— தருமம் (பிங்); வேதம். (பிங்)

**தன்மராசன்**— இயமன்

**தன்ம விசேட விபரீத சாத தனம்**— கூறப்பட்ட ஏது பக்கத் தின் விசேடத் தன்மையைக் குறிக்காது, அதனை வியாபகப் பொருள் என்று தவறி நினைக்கு மாறு செய்தல். வாதியால் கூறப் பட்ட ஏது துணியப்படும் தன் மத்தின் கண்ணுள்ள விசேடம் இல்லாதபடி சாதிப்பது. (மணி)

**தன்மி**— தருமி, தருமத்தையு டைய திரவியம், (மணி)

**தன்மிச் சொருப விபரீத சாதனம்**— கூறப்பட்ட ஏது பக் கத்தில் ஒருபோதும் இல்லாமல் இருப்பது. வாதியால்கூறப்படும் தன்மியின் சிறப்பியல்பை அவன் கூறும் ஏதுவே வீருத்த மாக்கிவிடுவது. (மணி.)

**தன்மி விசேட விபரீத சாத னம்**— கூறப்பட்ட ஏது பக்கத் தின் விசேடத் தன்மையைக் குறிக்காது, அதனை வியாப் பியப் பொருள் என்று தவறி நினைக்குமாறு செய்வது; தன்மி யின் சிறப்பு இயைபாகிய பாவத்தை அபாவமாகச் சாதி ப்பது. (மணி)

**தன்னடிச்சோதி**— பரமபதம். (குருபரம். 165)

**தனியடியார்—** தனித்தனி மூர்த்தியராய் எண்ணப்படும் அறுபத்து மூவரான நாயன் மார்

**தனுக்கோடி தீர்த்தம்—** இராம மூர்த்தி சிவபூசை செய்யும்படி தமது வில்லின் நுனியால் கண்ட தீர்த்தம்

**தனுசாரி—** 1. இந்திரன் 2. திரு மால்

**தஸ்பீஹ்—** இறைத்துதி (இ)

**தஸவ்வுஃப்—** ஆன்மீக ஞானம் (இ)

**தஹிய்யத்—** காணிக்கைச் சமர்ப்பித்தல் (இ)

**தக்ஷிணமேருவிடங்கன் —** தஞ்சை இராசராசேச்சுரத்துச் சிவபிரான் S.I.I.ii, 208)

**தக்ஷிணாசாரம்—** வைதிகமுறை யான சத்திபூசை

**தக்ஷிணாமூர்த்தி—** தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்த பேதம் S.I.I.ii,200)

## தா

**தாக்கணங்கு—** இலக்குமி. தாக் கணங்குறையுந் தடந்தாமரை. (சீவக.871)

**தாகூத் —** இறைவரம்புகளை மீறி இறைவனுக்கு எதிராகச் செயல்பட்டுத் தன்னாதிக்கத் தை ஏற்படுத்திக்கொள்ள முய லும் தனிமனிதன், ஒரு குழு, அல்லது ஒரு சமூகம் அனைவ ரையும் குறிக்கும் சொல் (இ)

**தாசரதி—** இராமன். (திவ். பெரு மாள், 8,5)

**தாசரிபந்தம் —** ஸ்ரீரங்கத்தில் சுவாமி புறப்பாட்டின் போது எடுத்துச்செல்லும் பெரிய பந்தம் (வை)

**தாட்சாயணி —** பார்வதி (தக்ஷன்புத்திரி) தக்கன் றன் மாகுரி தாட்சாயணி (மச்சபு. கவுரிநாம. 11)

**தாண்டவமூர்த்தி —** நடராசர் (தாண்டவமாடும் மூர்த்தி)

**தாண்டவன் —** தாண்டவ மூர்த்தி. (சங். அக.)

**தாணு—** சிவன் (பிங்)

**தாத்—** இறைவன் பிறப்பும் இறப் பும் இன்றி, எங்கும் பராபரமாய், உருவமில்லாது, ஏகனாய், இணைதுணை இல்லாதுஒப்போ உவமையோ இல்லாது இருக்கும் தன்மைகளைக் குறிக்கும் சொல் (இ)

**தாதா—** பிரமன்

**தாதான்மியசக்தி—** சிவபெருமானை ஒருபோதும் விட்டு நீங்காத கிரியா சக்தி.

**தாதுமான்—** 344 சிகரங்களையும் 44 மேனிலைக் கட்டுக்களையுமுடைய கோயில்

**தாதை —** பிரமன். வல்லேயேகிய தாதை (கந்தபு. பிரமயாக.6)

**தாந்திரிகன் —** ஆகமநூல் வல்லோன்.

**தாநவாரி—** இந்திரன், திருமால்

**தாபதன் —** சமணமுனிவன். (பிங்)

**தாபம் —** பஞ்ச சம்ஸ்காரத்தினுள் ஒன்றான முத்திராதாரணம் (வை)

**தாபரம்—** 1. கோயில் (அக.நி) 2. இலிங்கம் (தேவா.192,3)

**தாபரன்—** கடவுள். (அக. நி.)

**தாபனமுத்திரை—** எழுந்தருளவேண்டுமென்பதைப் பூசையிற் குறிப்பிக்குமாறு கையைக் குப்புற விரித்துக் காட்டுங்குறி. (செந். X, 425)

**தாம்பிரசபை—** திருநெல்வேலியில் நடராசமூர்த்தி எழுந்தருளுயிருக்கும் சபை. (தாம்பிரத்தால் வேய்ந்த சபை.)

**தாமசபுராணம்—** தமோகுணப் பிரதானரான சிவபிரானைப் பற்றிய சைவம், இலிங்கம், காந்தம் ஆக்கினேயம்; மச்சம், கூர்மரம் என்ற புராணத்தொகுதி (மச்சபு. முகவுரை. பக்.7)

**தாமரைக்கண்ணன், தாமரைக்கண்ணான் —** திருமால் (தாமரை போன்ற கண்ணுடையோன்) (திவ். திருவாய். 7, 3,1)

**தாமரைச்செல்வி, தாமரைச்சேயவள்—** திருமகள்

**தாமரைப் பீடிகை—** புத்தரது திருவடிப் பீடம். (மணி.3,66)

**தாமரைமொட்டு —** ஒருசார் வைணவர்களணியும் தாமரை மொட்டுப் போன்ற நெற்றிக்குறி (வை.)

**தாமரையாசனன் —** பிரமன். (யாழ். அக.)

**தாமரையாள்—** இலக்குமி. (திவ். இயற். முதற். 67)

**தாமரையிலை—** ஒருசார் வைணவர் அணியும் தாமரையிலை போன்ற நெற்றிக்குறி

**தாமோதரம் —** பிடர் (திருமாலின் பேர்களிலொன்றான தாமோதரன் என்ற பெயரைச் சொல்லி நாமமிடும் இடம்) (Loc.)

**தாமோதரன் —** கிருஷ்ணன். (திவ். இயற். திருவிருத்.49)

**தாயனார் —** அரிவாட்டாய நாயனார், (பெரியபு.)

**தாயார்—** திருமகள். தாயார் ஸந்நிதி (வை)

**தாயுமானவர்—** திருச்சிராப் பள்ளிச் சிவபிரான்

**தாரகசித்—** குமாரக்கடவுள்

**தாரகப்பிரமம்—** பிரணவ சொரூபமான பரப்பிரமம். ஆசில் தாரகப்பிரமமா மதன்பயனுய்ந் தான் (கந்தபு. அயனைச்சிறை புரி. 11)

**தாரகம்—** பிரணவம். (தணிகைப்பு. அகத்தி.10)

**தாரகற்காய்ந்தாள், தாரகற் செற்ற தையல்—** காளி (தாரகாசுரனைக் கொன்றவள்) (சூடா.)

**தாரகற் செற்றோன்—** முருகக் கடவுள் (தாரகனைக் கொன்றோன்) (சூடா.)

**தாரகன்—** 1. சிவன்; 2. முருகக் கடவுளால் கொல்லப்பட்ட ஓர சுரன். (கந்தபு. அசுரேந். 24.)

**தாரகஜித்து —** குமாரக்கடவுள்

**தாரகாந்தகன்—** முருகன்

**தாரகாரி—** முருகன்; காளி. (சூடா.)

**தாரசாரம்.-** நூற்றெட்டுபதிடதங் களுள் ஒன்று (சங்.அக)

**தாரணி—** யமன் (பாரத. மணிமான். 42)

**தாரம்—** பிரணவம். தாரத்தினுள்ளே தயங்கிய (திருமந். 1405)

**தாரா—** ஒரு ஜைன தேவதை

**தாருகவிநாசினி, தாருகாரி—** காளி (தாரகனைக் கொன்றவள்) (திவா.)

**தாருல்பகா—** நிலையாயிருக்கக் கூடிய உலகம் (இ)

**தாருல்பனா—** அழியக்கூடிய உலகம் (இ)

**தாஸ்ஸலாம்—** திருக்குர் ஆனில் இது சுவனத்தைக் குறிக்கும் சொல்லாக இடம் பெற்றுள்ளது (இ)

**தாலாங்கன்—** சிவன்

**தாவடம் —** 1. உருத்திராக்க மாலை 2. பூணூலை மாலை யாகத் தரிக்குமுறை

**தாவரசங்கமம்—** சிவபிரானது திருமேனிகளாகக் கருதப்படும் இலிங்கமும் அடியார்களும்

**தாவரம்—** இலிங்கம் (சை) (சி. போ.சிற், 12,3,2,உரை)

**தாவரலிங்கம் —** பரார்த்தலிங் கம். (சங்.அக)

**தாழ்சடைக்கடவுள் —** சிவபிரான்

**தாழ்வடம்—** உருத்திராக்க மாலை (தண்டலை.சத. 29)

**தாழி**— வைகுண்டம்

**தாளமுத்திரை** — இடது உள்ளங்கையில் வலதுகை விரலால் தட்டும் முத்திரை வகை (சை) (செந் X, 424)

**தானசுத்தி** — பஞ்சசுத்தியுள் பூசை இடத்தை மந்திரத்தால் சுத்தமாக்குகை (சைவச, 502, உரை.)

**தானத்தார்**— கோயிலதிகாரிகள் (I.M.P.Cg.214.)

**தானத்தான்**— சிவாலயத்திற் பூசை செய்யும் குருக்கள்

**தானப்பதி**— கோயில் தருமகர்த்தா. (Loc.)

**தானபாரமிதை**— ஈகையில் முழுமை பெறுதல். போதிசத்துவர் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மனம் உவந்து வேண்டுவோர்க்கு வழங்குதல் தானபாரமிதையாகும். (பௌத்தம். பக். 25.)

**தானம்**— 1. கோயில். (S.I.I.i. 120) 2. தசபாரமிதைகளுள் ஒன்றாகிய ஈகை (பௌ.) (பிங்) 3. ஆகாரதானம், அபயதானம், சாஸ்திரதானம், ஔஷததானம் என்ற நால்வகை அறச்செயல் (ச) 4. வேள்வி. (பிங்.)

**தானவாரி**—1. திருமால் (தானவர்க்குப் பகைவன்) (யாழ்.அக) 2. இந்திரன் (யாழ். அக)

**தானாகுதல்**— சிவபதம் நான்கனுள் ஒன்றான சாயுச்சியம்; (பிங்.)

**தானாம் பதம்பெறல்**— சிவபதம் நான்கனுள் ஒன்றாகிய சாரூபம். (பிங்)

**தானாளுலகிருத்தல்**— சிவபதம் நான்கனுள் ஒன்றாகிய சாலோகம். (பிங்)

**தாஸநம்பி**— புறப்பாட்டில்சுவாமிக்கருகில் நின்று தீவட்டிப் பந்தம் பிடிப்பவன் (வை)

## தி

**திக்குப்பாலகர்**— திசைகளைக் காக்கும் தெய்வங்கள் (சூடா.)

**திக்ரு**— இறைவனை நினைவு கூர்வது (இ)

**திகம்பர சமணம்**— திகம்பர சமணத்துறவிகள் திசைகளை ஆடையாக உடுத்துவர். (சமணம். பக். 21)

**திகம்பரன்**— 1. சமண முனி (ச.) (சூடா.) 2. அருகன் (திவா) 3. சிவன். திகம்பரன் அணங்கோர் பாகத் தெய்வநாயகன் (அரு. நி 2)

**திகம்பரி**— பார்வதி (திகம்பரன் மனைவி) (மறைசை, 17)

**திகிரியான்**— திருமால் (சக்கரா யுதந்தரித்தவன்). தொல்கதிர்த் திகிரியாற் பரவுதும் (கலித். 104, 77)

**திங்கட்கண்ணியன்**— சிவன் (சந்திரனை முடியிற்கொண்ட வன்) (கலித். 150, 17)

**திங்கட்குடையோன்**— மன் மதன் (சந்திரனைக் குடை யாகக் கொண்டவன்) (சூடா.)

**திங்கட்குடிய செல்வன்**— சிவபிரான்

**திங்கண்முக்குடையான்**— அருகன் (சீவக. 139.)

**திசைமுக முனி, திசைமுகன்** பிரமன் (திவ். இயற். 2, 37)

**திதிகர்த்தா**— திருமால் (காத்தற் கடவுள்) (பிரபோத, 45,2)

**திப்பியம்** — தெய்வத்தன்மை யுடைய பொருள் (மணி. 18, 84.)

**தியக்கோன்**— பூசைப்பரிசார கன் (கி)

**தியாகமுத்திரை**— கைமுத் திரை வகை. (சை)

**தியாகராசர்**— திருவாரூர்ச் சிவபிரான்

**தியாகராஜமூர்த்தி** — இவர் விஷ்ணுவால் பூசிக்கப்பட்ட சோமாஸ்கந்தர்

**தியானநானம்**— நீரை அமுத மாகத் தியானித்து முழுகுகை

**தியானபாரமிதை** — தசபார மிதையுள் ஒன்றான தியானம் நிறைகை (பௌ.)

**தியானயக்கியம்**— பஞ்சயாகத் துளொன்று (சை.)

**தியான யாகம்**— ஐவகை யாகத்துள் தியானஞ் செய்த லாகிய வேள்வி (சிவதரு. ஐவகை. 1, உரை)

**தியானவிந்து**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**திரயம்பகன்**— சிவபிரான் (முக் கண்ணன்) (கந்தபு. உபதேசப். 20)

**திரவியசுத்தி**— 1. பஞ்சசுத்தி யுள் ஒன்றாய், தன்னை மறந்து கருமபலனாகிய எல்லாச்செயல் களும் கடவுளின் அருளால் உண்டாவன என்று நோக்கு கை, (சை)(கட்டளைக். 228) 2. பூசைக்குரிய பொருள்களை மந்திரநீரால் சுத்தம் செய்தல். (சைவச. 502. உரை.)

**திராசனிமுத்திரை**— கைமுத்தி ரைவகை

**திரிகாயம்**— புத்தரின் திரிகாயம். அவை தருமகாயம், சம்போக காயம், நிருமாணகாயம் என்பன

**திரிகோணமலை**— இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு சிவதலம்

**திரிசூலபீடம்**— சக்தி பீடங்களில் ஒன்று

**திரிசூலமுத்திரை**— கைமுத்திரை வகை (சை)

**திரிசூலன்**— (திரிசூலமுடையவன்) யமன் (திருப்பு. 118); சிவன்.

**திரிசூலி**— (திரிசூலமுடையவள்) காளி. (அரிச்.பு.பாயி.9); சிவன். (சங்.அக.)

**திரித்துவம்**— கடவுளின் முத்தன்மை (கி)

**திரிதசர்**— தேவர் (யாழ்.அக.)

**தி தண்டர்**— வைணவ சந்நியாசிகள் (தி.பி.அ.)

**திரிதத்துவம்**— சைவதீட்சை வகை. (சை) (சி.சி.8,3, மறை)

**திரிநேத்திரன்**— சிவன் (முக்கண்ணன்)

**திரிபதார்த்தம்**— பதி, பசு, பாசம் என்னும் மூவகை நித்தியப்பொருள்கள். (சை) (சி. சி.8,27, ஞானப்.)

**திரிபாத் விபூதி**— பரமபதம். (வை) (ஈடு)

**திரிபாத்விபூதிமகாநாராயணம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**திரிபாததிரிமூர்த்தி** — சிவமூர்த்தி ஒருவரே தம்மில் பிரம விஷ்ணுக்களை யொடுக்கிக் கொண்டு தாம் ஒருவரே திரிமூர்த்தி சுவரூபர் என்பதைத் தெரிவிக்க நின்ற திருக்கோலம்.

**திரிபிடகம்** — சூத்திரபிடகம், வினயபிடகம், அபிதர்ம பிடகம் என்று மூவகைப்பட்ட பௌத்தாகமத் தொகுதி (மணி. 26, 66, அரும்.)

**திரிபுண்டரம்**— சைவர் நெற்றியில் விபூதியால் அணியும் மூவரி கொண்ட குறி.

**திரிபுரசுந்தரி**— பார்வதி (அபிரா.)

**திரிபுரதகனன்**— சிவபிரான் (பொன், வெள்ளி, இரும்புகளால் செய்யப்பட்டனவும், விண்ணிற் சஞ்சரித்தனவுமான மூன்று நகரங்களைஎரித்தவன்)

**திரிபுராதாபினி**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**திரிபுராந்தகன்**— சிவபிரான் (பிங்.)

**திரிபுராரி**— சிவபிரான்.(சூடா.)

**திரிபுரை**— 1. பார்வதி (சிவரக. கணபதியு. 13) 2. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**திரிமணி**— பௌத்தர் வணங்குதற்குரிய புத்தன், புத்ததருமம், புத்த சங்கம் என்ற முத்திறப் பொருள்கள்.

**திரிமலம்**— மும்மலம்(சி.சி. 12,1)

**திரிமதஸ்தர்**— சங்கரர், இராமானுசர், மத்வர் என்னும் இம் மூன்று ஆசிரியன்மாரின்வழிவந்தோர்க்குத் திரிமதஸ்தர்என்பது தொகுதிப்பெயர்.

**திரிமுண்டம்**— திரிபுண்டரம் பார்க்க

**திரிமூர்த்தி**— பிரமன், விஷ்ணு, உருத்திரனென்றமும்மூர்த்திகள்

**திரியக்கதி**— விலங்குகதி (ச.)

**திரியம்பகம்**— சிவமூர்த்தியின் வில் (கம்பரா. நட்புக். 7)

**திரியம்பகன்**--மூன்றுகண்களையுடைய சிவமூர்த்தி, கணபதி வீரபத்திரர் முதலியவருக்குப் பெயர். (திவா.)

**திரியம்பகி** — சத்தி. புராந்தகி திரியம்பகி (தாயு. மலைவளர்.5)

**திரியேகக்கடவுள்**— பிதா புத்திர ஆவிகளாகிய முத்திறக்கடவுள் (கி.)

**திரியேகம்**— கடவுளின் முத்திறத் தன்மை. (கி.)

**திரியேகன்**— திரியேகக் கடவுள் (கி)

**திரிலோசனி**— துர்க்கை

**திரிவிக்கிரமன்** — திருமால் (மூன்றடியால்உலகமளந்தவன்) (திவ். திருவாய்.2,7,7)

**திரிவிதசேதனர்**— பத்தர், முத்தர், நித்தியர் என்ற மூவகை ஆன்மாக்கள் (வை) (ஈடு, 1, 8, ப்ர.)

**திரு**— இலக்குமி (திவ். பெரியதி. 7,7,1); 2. மோட்சப் பேரரசு (அ.செ.175)

**திருக்கண்**— 1. அருட்பார்வை 2. உற்சவப் புறப்பாட்டில் சுவாமி எழுந்தருளும் மண்டகப்படி

**திருக்கண்சாத்து** — சுவாமியின் வீதிப்புறப்பாட்டில் நிவேதனத்திற்கு வைத்திருக்குந் தேங்காய் பழம் முதலியன.

**திருக்கண் மலர்**— சுவாமி திருமேனியில்சாத்தும்மலர் போன்ற கண்ணுரு (S.I.I.ii, 340)

**திருக்கலமுடித்தல்**— கும்பாபிடேகஞ் செய்தல் (சா.சொ.அ.)

**திருக்காவேரி**— பூசைவட்டிலில் தீர்த்தஞ்சேர்தற்குரிய செம்பு (வை)

**திருக்கானப்பேர்**— காளையார் கோயில் என்ற சிவதலம். (தேவா.)

**திருக்குறிப்புத் தொண்டநாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**திருக்கூட்டம்**— பக்தர்குழாம். நாயன்மார் திருக்கூட்டம். (காஞ்சிப்பு, கடவு. 16.)

**திருக்கூத்து** — சிவபிரானது நடனம். (பு.வெ. 9,48,உரை) 2. கடவுளின் திருவிளையாட்டு

**திருக்கைக் காறை** — கடவுளர்க்குச் சாத்தும் கையாபரணவகை (S.I.I.ii. 144)

**திருக்கைக் கோட்டி** — திருமுறை யோதுதற்குரிய கோயில் மண்டபம்

**திருக்கைக்கோட்டியோதுவார்**— கோயிலில் திருமுறைப் பாசுரம் ஓதுவோர்

**திருக்கை வழக்கம்**— கோயிலில் விசேட காலங்களிலே தெய்வப் பிரசாதம் வழங்குகை.

**திருக்கொடித்தட்டு**— கோயிற்கெ முடிரம்

**திருக்கொள்கை**— ஆபரணம் விக்கிரகத்துக்கு இடும் கவசம் (ச.சொ.அ.)

**திருக்கோ மண்டலம்** — திருமஞ்சனத்தில் பெருமாளுக்கு திருமுடியில் சுற்றவேண்டிய மலர்ச்சரம். (கோ.த.)

**திருக்கோலம்**— 1. கடவுட்குச் செய்யும் அலங்காரம். 2. நின்ற திருக்கோலம், கிடந்ததிருக் கோலம், இருந்ததிருக்கோலம் என மூவகையாய்த் திருமால் மூர்த்தமுள்ள நிலை.

**திருக்கோவை** — சுவாமிக்கு முன்நின்று வேதம் ஓதும் கூட்டம் (கோயிலொ. 88)

**திருச்சபை**— 1. நடராஜசபை 2. கிறிஸ்தவர் கூடித்தொழுமிடம்—(கி)

**திருச்சாந்தாடல்**— கோயிலில் தெய்வத்திற்கிடும் சந்தனக் காப்பு (I.M.P.Cg. 1000)

**திருச்சாயல்**— தெய்வப்படிவம் (கி)

**திருச்சாளக்கிராமம்** — ஒரு புண்ணியக்ஷேத்திரம். இதில் விஷ்ணுமூர்த்திஎழுந்தருளியிருப்பர்.

**திருச்சிராப்பள்ளி**— திரிசிரசு அமைத்ததாகக் கருதப்படும் ஒரு சோணாட்டுச் சிவதலம்

**திருச்சிற்றம்பலம்**— 1. சிதம்பரத்திலுள்ள சிற்சபை. 2. தேவாரம் ஓதுவதற்கு முன்னரும் கடிதம் முதலியவை எழுதுவதற்கு முன்னரும் சைவர்கள் வழங்கும் ஒரு வணக்கச்சொல்.

**திருச்சுற்று**— பிரகாரம். (கோயிலொ. 13)

**திருச்சூரணம்**— வைணவர்கள் நெற்றியிலணியும் ஸ்ரீசூர்ணம். (வை)

**திருச்செந்தூர்**— திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளதும் முருகக்கடவுள் ஆறுபடைவீடுகளில் ஒன்றுமான தலம்.

**திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருஞானம் பெற்ற பிள்ளையார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் தேவாரத்தின் ஒரு பகுதி இயற்றிவரும் 7-ஆம் நூற்றாண்டில் விளங்கியவருமான சைவ சமயாசாரியர். (பெரியபு.)

**திருஞானம்**— கோயிலின் சந்நிதியில் ஓதும் தேவாரம் போன்ற பாடல். (ச.சொ.அ.)

**திருத்தணிகை**— தொண்டை நாட்டு முருகக்கடவுள் திருப்பதிகளுள் ஒன்று

**திருதுழாய்**— துளசி (வை)

**திருதிவிரதன்**— ஏகாதச ருத்திரருள் ஒருவன்

**திருநடைமாளிகை**— கோயிற் பிரகாரம் (I.M.P.Tj. 1237)

**திருநந்தா விளக்கு**— சுவாமி திருமுன் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்குந் திருவிளக்கு (S,I.I.i,79)

**திருநாடு**— வைகுண்டம். (திவ். திருவாய். 9,7,5)

**திருநாமம்**— வைஷ்ணவர் தரிக்கும் ஊர்த்துவ புண்டரம். (வை)

**திருநாவுக்கரசுநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் தேவாரத்தின் ஒரு பகுதி பாடியவரும் 7-ஆம் நூற்றாண்டினவருமான சிவனடியார். (பெரியபு.)

**திருநாளைப்போவார் நாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் நந்தனார் எனப்படும் சிவனடியார். (பெரியபு.)

**திருநாறு**— திருநீறு

**திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் காலத்தில் வாழ்ந்த சிவனடியார். (பெரியபு.)

**திருநீலநக்கநாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**திருநீற்றுக் காப்பு**— 1.விபூதி; 2. இரட்சையாகப் பெரியோரால் ஒருவர்க்கிடப்படும் விபூதி.

**திருநீற்றுக்கோயில்**— திருநீற்றுப்பை

**திருநீற்றுப்பழம்**— விபூதியுண்டை

**திருநீற்றுமடல்**— விபூதியைவக்குங் கலம்.

**திருநீறு**— விபூதி. எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறும் (தேவா. 811,3) சிவசின்னங்களுள் ஒன்று. வடமொழியில் விபூதியெனப்படும். விபூதி அணிதலானது ஞான ஒளியால் சுட்ட பசு மல நீக்கத்தின்போது விளங்குகின்ற சிவத்துவப் பேற்றிக்கு அறிகுறியாகும். (சைவசமயம்.பக். 97)

**திருநெற்றிமாலை**— கோயில் மூர்த்தியின் நெற்றியில் அணியும் மாலை.

**திருநெறித்தமிழ்** — தேவாரம்

**திருநோக்கு**— கடவுள், குரு முதலாயினரது அருட்பார்வை.

**திருப்படி**— கோயில் வாசற்படி

**திருப்படிக்கம்** — ஆராதனைத்தில் உபயோகிக்கும் பாத்திர வகை. (வை)

**திருப்படிமாற்று**— சுவாமிக்கு நிவேதிக்கத்தரும் அரிசி முதலிய பண்டம். செய்யிலுகுத்த திருப்படிமாற்றதனை யையய விதுவமுது செய்யென்று. (திருக்களிற்றுப்.19.)

**திருப்படைவீடு** — கடவுள் கோயில் கொண்ட தலம். (T.A,S.)

**திருப்பணி**— கோயிற் கைங்கரியம்

**திருப்பதி**— 1. கடவுள் கோயில் கொண்ட புண்ணியத்தலம் 2. திருவேங்கடம் என்னுந் திருமால் தலம்

**திருப்பதிகம்**—1. தேவாரத்துள்ளதுபோலத் தெய்வத்தைப் புகழ்ந்துரைக்கும் பாடற்றொகை 2. புத்தரின் பெருமைகளைப் பாராட்டும் ஒருநூல். (சி.சி.பர. சௌத். 2, ஞானப்.)

**திருப்பரிவட்டம்**— 1. தெய்வத்திற்குச் சாத்தும் ஆடை 2. கோயில் மரியாதையாகப் பெரியோர் தலையில் சுற்றப்படும் கடவுளின் ஆடை

**திருப்பவித்திரமாலை**— கோயில் மூர்த்திகட்குச் சாத்தப் பெற்று வைஷ்ணவர் அணியும் பட்டுமுடிச்சு மாலை.

**திருப்பள்ளித்தாமம்**— கோயில் மூர்த்திகட்குச் சாத்தப்படும் மாலை. (S.I.I.ii,6)

**திருப்பள்ளியறை**— கோயில் மூர்த்தி இரவில் பள்ளிக்கு எழுந்தருளும் அறை.

**திருப்பாட்டு**— கடவுளைப் பற்றிப் பெரியோர் பாடிய பாசுரம்

**திருப்பாணாழ்வார்** — ஆழ்வார் பதின்மருள் ஒருவரும் நாலாயிரப் பிரபந்தத்துள் அமலனாதி பிரான் என்ற பிரபந்தத்தைப் பாடியவருமான திருமாலடியார்.

**திருப்பாவாடை**— ஆடைமேல் கோயில்மூர்த்திக்குப்படைக்கும் பெரிய நிவேதனம். (கோயிற். திருவி. 24, உரை)

**திருப்பாவை**— நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் ஸ்ரீ ஆண்டாள் பாடிய பகுதி. (திவ். திருப்பா. தனியன்.)

**திருப்பாற்கடல்** — திருமால் பள்ளிகொண்டருளும் க்ஷீராப்தி.

**திருப்புகழ்**— 1. தெய்வப் புகழ்ச்சியான பாடல். (திவ். பெருமாள். 1,9) 2. அருணகிரிநாதர் பாடிய நூல்

**திருப்போனகம்** — கடவுட்கு நிவேதித்த அமுது. (S.I.I.iii. 82)

**திருமகள்**— இலக்குமி. (கம்பரா. உருக்காட்டு. 58)

**திருமகள் கொழுநன்** — திருமால் (இலக்குமியின் கணவன்) (பிங்.)

**திருமகள் மைந்தன்**— மன்மதன். (பிங்.)

**திருமங்கையாழ்வார்**— ஆழ்வார் பதின்மருள் ஒருவரும் நாலாயிரப்பிரபந்தத்துள் பெரிய திருமொழி முதலியன பாடியவருமாகிய திருமாலடியார்.

**திருமஞ்சனக்கவி**— கோயில் மூர்த்திகளின் அபிஷேக காலத்திற் சொல்லும் கவி. (கோயிலொ 68)

**திருமஞ்சனம்**— அபிடேகத்திற்குரிய நீர். திருமஞ்சனமுங் கொணர்ந்து. (பெரியபு. சேரமா. 9)

**திருமடந்தை**— இலக்குமி. (திவ் பெரியதி. 3. 10, 1)

**திருமடவளாகம்**— கோயிலைச் சுற்றியுள்ள இடம்

**திருமடைப்பள்ளி**—கோயில் சமையலறை

**திருமண்**— 1) திருநாமந்தரித்தற்குரிய வெள்ளிய மண் கட்டி (வை.)
2) வைணவர் தரித்துக் கொள்ளும் திருநாமம். (அஷ்டப். திருவேங்கடத்தந். 99)

**திருமதில்**— கோயிலில் சுற்றுமதில் (I.M.P.S.A. 362)

**திருமதுரம்**— பழம், நெய், சர்க்கரை முதலியவற்றைச் சேர்த்துச் செய்யப்படும் நைவேத்தியப் பொருள்.

**திருமந்திரபோனகம்**— நிவேதனம் (சா. சொ. அ.)

**திருமந்திரம்**— 1. சிவன், திருமால் இவர்களுக்குரியவான பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷரங்கள் 2. திருமூலநாயனார் அருளிச் செய்த ஒரு சைவத்திருமுறை 3. கோயில்

**திருமலர்ச்செல்வி**— இலக்குமி

**திருமலை**— திருமாலுக்குரிய திருவேங்கடம். சினவேங்கை பார்க்கும் திருமலையே. (திவ். இயற். 3, 75)

**திருமழிசையாழ்வார்**— ஆழ்வார்பதின்மருள்ஒருவரும் நாலாயிரப் பிரபந்தத்தில் திருச்சந்த விருத்தம், நான்முகன்றிருவந்தாதி என்ற பிரபந்தங்களைப் பாடியவருமாகிய திருமாலடியார்.

**திருமறுமார்பன்**— 1. இலக்குமியையும், மச்சத்தையும் மார்பிலுடைய திருமால் (கலித். 104, 10) 2. அருகன். (சூடா.)

**திருமாமகள்**—இலக்குமி. (சீவக. 30)

**திருமால்**— விஷ்ணு. திருமால் சீர்கேளாத. (சிலப். ஆய்ச்சி. படர்க்கை. 1)

**திருமால் நிலை**—பரம், வியூகம் விபவம், அந்தர்யாமித்துவம் அர்ச்சை என்ற ஐவகைத் திருமால் வடிவங்கள். (அஷ்டாதச. தத்வத். 3, 41)

**திருமால் புதல்வன்**— 1. மன்மதன் 2 பிரமன், (திவா.)

**திருமாலவதாரம்**— 1. தசாவதாரம், 2. சனகன், சனந்தனன் சனாதனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன் நாரதன், அயக்கிரீவன், தத்தாத்திரேயன், மோகினி வேள்வியின்பதி, வியாதன், தன்வந்திரி, புத்தன் என்ற பதினைந்து அம்சாவதாரங்கள் (பிங்)

**திருமாலாயுதம்**— சங்கம், சக்கரம், தனு, வாள், தண்டு என்ற திருமாலின் ஐம்படைகள். (பிங்)

**திருமாலை**— தெய்வத்துக்குத் தொடுக்கும் பூமாலை

**திருமாலைக் கட்டி**— கோயில் மாலை தொடுப்போன்.

**திருமாலைவடை**— கோயிலில் மாலையில் நிவேதிக்கும்வடைத் திருப்பணிகாரம்

**திருமாளிகைப் பிள்ளையார்** சண்டீசர் (சா. சொ. அ.)

**திருமுகம்**—தெய்வசன்னிதி.

**திருமுட்டு**— பூசைத்தட்டு முதலியன. (வேதாரணி. மேன்மை. 52.

**திருமுடிச்சேவகர்**— ஐயனார்.

**திருமுண்டம்**— திரிபுண்டரம். திருமுண்ட நெற்றியும்.(பெரியபு திருநீலக்ண்டநா. 11)

**திருமுற்றத்தார்**— கோயிற்பணி செய்வோர். (குருபரம். 77.)

**திருமுற்றம்**— 1. சுவாமிசன்னிதி (திவ். பெருமாள். 1, 10) 2. கோயில்.

**திருமுறை**— தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந்திருமுறை, பெரியபுராணம் என்ற சைவநூல்கள்.

**திருமூலட்டானம்**— திருவாரூர்ச்சிவதலம். (தேவா. 725.4)

**திருமூலநாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரும் திருமந்திரம் இயற்றியவருமாகிய பெரியார் (பெரியபு.)

**திருமேனி**—விக்கிரகம். கடவுள், முனிவர் முதலியோரது திவ்விய சரீரம்.

**திருமேனிக்கீடு**— கவசம். (திருவாலவா. 28. 90)

**திருவக்கிரகம்**— நிவேதனம். (சா. சொ. அ.)

**திருவடி**—1. சீபாதம். (தேவா. 415) 2. சுவாமி. (திவ். இயற் நான்மு. 68) 3. அனுமான் (திருமாலின் பாதஸ்தானமாயுள்ளவர்) (கம்பரா. மகேந். 26) 4. கருடன் (திருமாலின் பாதஸ்தானமாயுள்ளனர்) (ஈடு 1,4,6)

**திருவடிக்கம்**—திருமால் கோயிலில் படிக்கத்தினின்று எடுத்து வழங்கும் சுவாமி தீர்த்தம்(வை)

**திருவடி தீட்சை**—சீடன் தலையில் குருதன் பாதத்தைவைத்து அருள் புரியுந் தீட்சை வகை. (சை.)

**திருவடிப்பந்தம்**— கோயில் மூர்த்தியின் புறப்பாட்டில் முன் பாகப்பிடித்துச்செல்லும்தீவட்டி (வை.)

**திருவடி பிடிப்பான்**— கோயிலருச்சகன் (சிலப். 30, 52, அரும்.)

**திருவடையாளம்**— சைவ சமயத்திற்குரிய பூதி சாதனங்கள் (சை) (சங். அக)

**திருவண்ணாமலை**— தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள ஒரு சிவதலம். (தேவா.)

**திருவணுக்கன்றிருவாயில்** — கர்ப்பக்கிருகத்தை அடுத்துள்ள வாயில். (பெரியபு. வெள்ளானை. 41)

**திருவந்திக்காப்பு**— திருவிழாப் புறப்பாடுகளின் முடிவிற் கண்ணூறு போகச் செய்யுஞ் சடங்கு (திவ். இயற். 4. 43, வ்யா)

**திருவம்பலம்**— சிதம்பரம் (திருவாலா. கடவு. 3)

**திருவமால்**—திருமால். (சிலப். 12, நாக நாறு.)

**திருவமுது**— நிவேதன உணவு. (S.I.I.i. 98)

**திருவரருகம்**—ஸ்ரீரங்கம் (சிலப்)

**திருவருட்டுறை**— திரு வெண்ணெய்நல்லூரிலுள்ள சிவன் கோயில். (பெரியபு. தடுத்தாட். 65.)

**திருவருட்பா**— கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய தோத்திர நூல்

**திருவலகு**—கோயில் பெருக்குந் துடைப்பம். (திருக்கோ. 1, உரை)

**திருவழூர்**— சிவபிரான் கோயில் கொண்ட அட்ட வீரட்டங்களுள் தஞ்சாவூரிலுள்ள ஒரு சிவதலம்- (தேவா.)

**திருவன்**—திருமால். சிங்கமாய்க் கீண்ட திருவன். (திவ். இயற். 2, 84.)

**திருவாசகம்**— வாதவூரடிகள் அருளிய துதி நூல்

**திருவாசல்**— 1. ஆலயத்துட் சந்நிதிவாசல். (அஷ்டாதச. முமுட்சு. 1, 97) 2. திருமால் கோயிலில் வடபுறமுள்ள சொர்க்கவாசல். (Loc)

**திருவாதவூரர்**— மாணிக்கவாசக சுவாமிகள்.

**திருவாதிரைநாச்சியார்**— பார்வதி தேவி. (Loc)

**திருவாய்ப்பாடி**-கண்ணபிரான் இளமையில் வாழ்ந்து வந்த கோகுலம். (திவ். திருப்பாவ்யா. அவ.)

**திருவாராதனம்**—கடவுட்பூசை (அஷ்டப். திருவரங்கத்தந். 30)

**திருவாரூர்**— ஒரு சிவதலம் (தேவா. 711.1)

**திருவாழி**—திருமாலின் சக்கராயுதம். (அஷ்டப். திருவரங்கத்து. 1)

**திருவாளன்**—1. கடவுளது திருவருளைப் பெற்றவன் (சை) 2. கடவுள் 3. திருமால். (திவ் பெரியதி. 5,5,1)

**திருவானிலை**—கருவூர்ச் சிவாலயம்

**திருவானைக்கா**— திருச்சிராப்பள்ளிக்கு அருகிலிருக்கும் சிவதலம்

**திருவிரையாக்கலி**— சிவபிரானது ஆணையைக் குறிக்கும் சொல்

**திருவிளக்கு**—கோயிற்தீபம். (சீ. சி. 8, 19)

**திருவினாள்**—இலக்குமி. போதிலார் திருவினாள்.(சிலப். 1,26).

**திருதிநாயகர்—** உற்சவ மூர்த்தி (சா. சொ. அ.)

**திருவுடம்பு—**விக்கிரகம். (சா. சொ. அ.)

**திருஹூறல் திருநாள்—** ஊற்றுப் பறித்து அதில் முதலையாக ஒரு கட்டையைப்போட்டு அருகில் யானையை நிறுத்தி நடத்தும் கஜேந்திர மோட்ச உற்சவம்.

**திருவெம்பாவை—** மார்கழி மாதத்தில் ஓதப்படும் திருவாசகப்பகுதி

**திருவெழுத்து—** பஞ்சாட்சரம் (சை) (சிவப்பிர. 10, 23)

**திருவேடம்—***1*, விபூதி, உருத்திராக்கம் முதலிய சைவக்கோலம் 2. சிவனடியார். திருவேடங் கண்டால் (சி.சி.8, 19)

**திருவைசாதம்—** தினப்பூசையின் முடிவில் அர்த்தசாமத்திற் கடவுளுக்கு நிவேதிக்கும் நிவேதனப் பிரசாதம் (Loc.)

**திருவொற்றாடை—** திருமஞ்சனஞ் செய்ததும் சுவாமி திருமேனியில் ஒற்றியபசரிக்கும் வஸ்திரம். திருவொற்றாடை சாத்தி. (குற்றா. தல. சிவபூசை. 32.)

**திருவோலக்கம்—** 1. தெய்வ சன்னிதானம் (திருவாச, 21,6) 2. சன்னிதி கோஷ்டி (வை) (குருபரம், 213)

**திரோதானசத்தி—** சிவபெருமானுடைய பஞ்சசத்திகளுள் ஆன்மாக்களுக்கு உலகானுபவங்களைக் கொடுத்து உண்மையை மறைத்தல் செய்யும் ஒரு சத்தி (சை) (தத்துவப். 37, உரை)

**திரோதானம்—** ஒரு நரகம் (சேதுபு. தனுக். 4.)

**திரோபவம்—**பஞ்ச கிருத்தியங்களுள் ஒன்றாய் ஆன்மா தன் கன்மம் முடியும் வரையில் உலகானுபவங்களில் உழன்று மயங்கும்படி உண்மையை மறைத்தலைச் செய்யும் சிவபெருமானது அருட்செயல். (சை.)

**தில்லைச்திருச்சித்திரகூடம் -** சிதம்பரத்திலுள்ள திருமால் கோயில் (திவ். பெரியதி. 3,3,1)

**தில்லைநாயகன்—** சிதம்பரத்து சிவபிரான்

**தில்லையம்பலம்—** சிதம்பரத்திலுள்ள நடராசரது கனகசபை

**தில்லைவாழ்அந்தணர்-** *1.*தில்லையில் எழுந்தருளிய கூத்தப்பிரானைப் போற்றி வழிபடும் பொருட்டுத் திருக்கைலையிலிருந்து எழுந்தருளிய சிவகணத்தவர்கள் 2. சிவனடியவர்களில் தொகையடியாராவர். (தேவா. 736, 1)

**திலாவத்—**திருக்குர்ஆன் ஓதுதல் (இ)

**திவ்வியத்தொனி**— தேவர்கள் அருகக்கடவுள் முன்பு செய்யும் ஆரவாரத்தொனி (ச.) (சீவக. 3013, உரை.)

**திவ்விய நாம சங்கீர்த்தனம்**- பாகவதர் பலர் விளக்கைச்சுற்றி நடனஞ் செய்து கடவுளின் திருநாமங்களைச் சொல்லிப் புகழ்ந்து பாடுகை.

**திவ்வியப் பிரபந்தம்**— ஆழ்வார் பன்னிருவரும் அருளிச் செய்த நாலாயிரஞ் செய்யுட் களின் தொகுதி.

**திவ்வியமங்களவிக்கிரகம்** — அர்ச்சைத் திருமேனி (வை)

**திவ்வியலிங்கம்**— சாந்திகலையில்தூணாகாரமாயுள்ள லிங்கம் (சை) (சதாசிவ. 12.)

**திவம்**—பரமபதம், (தி. பி. அ.)

## தீ

**தீக்கடவுள்**— அக்கினிதேவன். (திவா.)

**தீட்சை**— 1. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, என்று முத்திறப்பட்ட சைவ சமயச் சடங்குகள். (சை) 2. நயனதீட்சை, பரிசதீட்சை, மானதீட்சை, வாசக தீட்சை, சாத்திர தீட்சை, யோகதீட்சை, ஔத்திரிதீட்சை என்ற எழு வகையான சைவசமயச் சடங்கு கள் (சை) (சைவச. ஆசாரி. 65, உரை) 3. விரதம்; 4. உப தேசம்.

**தீபகன்**—மன்மதன்

**தீபதிலகை**— புத்தனது பாத பீடிகையை இந்திரன் ஏவலால் காப்பவள். (மணி). பௌத்த பெண் தெய்வம்.

**தீபாங்கம்**— இரத்தின தீபங் களைப் பயக்குந் தேவலோக மரம். (ச.)

**தீபாராதனை**— தீபங்காட்டி பூசிக்கை.

**தீபாவளி**— கண்ணபிரானால் கொல்லப்பட்ட நரகாசுரன் வேண்டுகோளின்படி ஐப்பசி யிற் கிருஷ்ணபட்சத்தில் சதுர்த் தசியுள்ள வைகறையில் மங் களஸ்நானஞ் செய்துகொண் டாடப்படும் பெரும்பண்டிகை.

**தீமேனியான்**— சிவபிரான் (தீப் போலும் சரீரநிறமுடையோன்) (திருவாச. 10, 20)

**தீயாடி**— (ஈமத்தீயில் ஆடுப வன்) சிவபிரான். **தீயாடி சிற்** றம்பலமனையாள் (திருக்கோ. 374)

**தீர்க்கதரம்**— நரகவகை (சிவ தரு. சுவர்க்கநரக, 109.)

**தீர்த்தக்காரர்**— கோயிலில் பூசைக்குப்பின் சுவாமி தீர்த்தம் முன்னர்ப்பெறும் உரிமையாளர். (வை.)

**தீர்த்தகவி**— திருமண் தரித்துக் கொள்ளும்போது நீர்வைத்துக் கொள்ள உதவும் தேங்காயோட்டகல் (வை.)

**தீர்த்தங்கரர்**— சைனருள் அருகபதவியடைந்த விருஷபர், அசிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, பத்மபிரபர், சுபார்சுவர், சந்திரபிரபர், புஷ்பதந்தர், அல்லது சுவிதி, சீதளர், சிரேயாஞ்சர், வாசு பூச்சியர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, கிரந்து அல்லது குந்து, அரர், மல்லி, முனிசுவ்விரதர், நமி, நேமி, பார்சுவர், வர்த்தமானர் என்ற இருபத்துநால்வர் (ச) (திருக்கலம். காப்பு. உரை.)

**தீர்த்தங்கரர்கள்** — இவர்கள் தெய்வநீர்மையும், மெய்யுணர்வும்; மெய்ஞ்ஞானமும் ஆன்ம ஆற்றலும் உள்ளவர்கள். பிற உயிர்களின் துன்பங்களைப் போக்கும் இயல்பினர், (சமணம் பக். 2.)

**தீர்த்தம்**— 1. அடியார்கட்கு வழங்கப்படும் ஆராதனை நீர் 2. திருவிழா (சூடா,) 3. சைனாகமம். தீர்த்தந் தெரிந்துய்த்து (சீவக. 1247) 4. யாகம். (யாழ். அக); 5. பரிசுத்தம். தீர்த்தமுக்கண் முதல்வனை (தேவா. 584,9)

**தீர்த்தன்**— அருகன். (சூடா.) சிவன் (திருவாச. 7,12)

**தீர்வைசாதம்**— அர்த்தசாமத்தில் நிவேதிக்கும் அன்னம்

**தீவகுச்சாந்தி** — பண்டைக் காலத்தில்காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்று வந்த இந்திர விழா. (மணி, 1,35)

**தீவண்ணன்**— சிவன் (அக்கினி நிறத்தோன்)

**தீவிரவேகம்**—நரகவகை. (சிவ தரு. சுவர்க்க. 118)

**தீக்ஷிதர்**— 1. சமயதீட்சை பெற்றோர் 2. தில்லைமூவாயிரவர் 3. யாகம் செய்தோர். 4. சங்கற்பங் கொண்டவர்.

**தீக்ஷை**— தீட்சை பார்க்க.

# து

**துஆ—** இறைஞ்சுதல், பிரார்த்தித்தல், வேட்டல் (இ)

**துஆகுஃப்யத்—** வெளியே சொல்லாது இரகசியமாக உள்ளத்தில் வைத்து இறைஞ்சப்படும் துஆ (இ)

**துஆயேரஹ்பத் —** துன்பம், நோய் நீங்க இறைவனை வேண்டல் (இ)

**துக்கநிவாரணம்—** வாய்மை நான்கனுள் அவாவற்று நிற்கும் நிலையே துக்க நீக்கமாகிய வீடு என்ற பௌத்தமதக் கொள்கை (பௌ.) (மணி. 2,62, உரை)

**துக்கநிவாரணமார்க்கம் —** வாய்மைநான்கனுள்பற்றறுவதே துக்கநிவாரணத்திற்குரிய வழியென்ற பௌத்தமதக் கொள்கை (பௌ.) (மணி, 2,66-7 உரை.)

**துக்கம்—** 1. நரகம் 2. வாய்மை நான்கனுள் உலகப் பிறப்பே துக்கமென்று கூறும் பௌத்த மதக்கொள்கை- (பௌ) (மணி. 2,64, உரை)

**துக்கோற்பத்தி—** வாய்மை நான்கனுள் அவாவே துக்கத்திற்குக் காரணமென்று கூறும் பௌத்தமதக் கொள்கைகள் (பௌ.) (மணி.)

**துங்கி—** (உயர்ந்தவள்) உமை

**துங்கீசன்— 1.** சிவன் (யாழ். அக.) 2. திருமால் 3. சந்திரன் 4. சூரியன்

**துடிதலோகம்—** பௌத்தநூல் கூறும் தேவலோகத்தொன்று (பௌ.) துடிதலோகத்து மிக்கோன் பாதம் (மணி. 12, 73)

**துண்டிவினாயகர்—** 1. துராசாரன் என்னும் அசுரனைக் கொல்லும்படிபார்வதி பிராட்டியார் ஐந்து திருமுகமும் பத்துத் திருக்கரங்களுடனிருக்க அம்முகங்களிலிருந்து ஐந்து திருமுகமும் பத்துத்திருக்கரங்களுடனும் விநாயகமூர்த்தி அவதரித்துத் துராசாரனைச் சங்கரித்தனர்' ஆதலால் இவர் வக்கிரதுண்டர் எனவும் துண்டி வினாயகர் எனவும் பெயர் பெற்றனர். 2. காசியிலெழுந் தருளியிருக்கும் விநாயகர்

**துண்ணூறு—** திருநீறு

**துத்தி—** திருமண்காப்பு

**துதங்கள், துதம்—** துதிகள். வாயோரீ ரைஞ்ஞூறு துதங்களார்ந்த. (திவ். பெருமாள், 1,2)

**துதி—** தோத்திரம் (சூடா.)

**தும்பிமுகன்—** விநாயகக் கடவுள்

**துய்யாள்**— நாமகள் (பிங்.)

**துர்க்கா தேவி** — துர்க்கை (பு.வெ. 1,20, உரை.)

**துர்க்கா பூசை**— நவராத்திரி காலத்து மூன்று நாள் துர்க்கா தேவியின் பொருட்டு நடத்தப் பெறும் ஆராதனை.

**துர்க்கை**—சிவபிரான் தேவியும், பாலைநிலத்தின் அதிதேவதையு மாகிய பெண்தெய்வம். (பிங்)

**துர்கை**— மகமதியர் சமாதியி டம். (இ)

**துரியச்சந்தி**— இரவிற் செய்யும் படி விதிக்கப்பட்டுள்ள அனுஷ் டானம் (சை) (தசகா. குருபூ. 5)

**துரியசிவன்**— மும்மூர்த்திகட் கும் அதீதமான சிவபெருமான். (Loc.)

**துரியம்**— 1. ஆன்மா உந்திப் பிரதேசத்தில் பிராணனோடு இலயித்து நிற்கத் தன்னையே விஷயீகரிக்கும் நான்காம் ஆன்மநிலை. (சை.) (சி.போ. பா. 4,3, பக். 278, புதுப்.) 2. சப்தபங்கியில் நான்காவது (ச.) (மேருமந். 709)

**துரியன்** — 1. சுத்தான்மா. (வேதா. சூ, 79.) 2. கடவுள். (சங். அக)

**துரியாதீதம்**— 1. மூலாதாரத் தில் ஆன்மா தங்கி அவிச்சை மாத்திரையை விஷயீகரிக்கும் ஐந்தாம் ஆன்மநிலை. (சை) (சி.போ.பா. 4,3, பக்.278, புதுப்) 2. நூற்றெட்டு உபநிட தங்களுள் ஒன்று

**துருகிணன்**— திருமால், பிரமன்

**துருணன்**— சிவபிரான் (இலிங் கபு. 41,8)

**துருவன்**— சிவன், பிரமன்

**துருவை**— பார்வதி

**துலாப்பாயசம்** — கோயில் நைவேத்தியவகை

**துவசிகன்** — கந்திற் பாவை தெய்வத்தின் பெயர். (மணி)

**துவர்ப்பசை** — குரோதம், மானம், மாயை, லோபம் என்ற நான்கு கஷாயங்கள் (ச.) (மேருமந். 1150)

**துவர்ப்பு**— ஆசியம், இரதி, அரதி, சோகம் பயம், சுகுச்சை என்ற குணபேதங்கள் (ச) அறுவகைத் துவர்ப்பும் பேசின் (சீவக. 3076)

**துவல்**— அருச்சிக்கும் பூ. அடி யாரிடு துவல்...பரப்புவாய் (தேவா. 583,2)

**துவாதசகரன்** — (பன்னிரு கரத்தோன்) முருகக்கடவுள் (யாழ். அக.)

**துவாதசநாமம்**— 1. திருமா லின் 12 திருநாமங்கள் 2. வைஷ்ணவர் உடம்பில் நெற்றி

முதலிய பன்னிரண்டு இடங்களில் தரித்துக்கொள்ளும் திருமண்.

**துவாசநிதானம்—** பிறப்பிற்கு ஒன்றன்பின் ஒன்றாக வரும் பன்னிரண்டு பிறவிக் காரண நிலைகள், (பௌ.) (மணி. 21, 163, உரை.)

**துவாத சாட்சரி—** 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற பன்னிரண்டு அட்சரங்களையுடைய வைஷ்ணவ மந்திரம்.

**துவாதசாதித்தர் —** தாதா, அரியமா, மித்திரன், வருணன், சக்கரன், விவச்சுவான், பூடா, பர்ச்சன்னியன், அஞ்சன், பகன், தொட்டா. விட்டுணு (கூர்மபு.) என்னும் சூரியர் பன்னிருவர்.

**துவாந்தம்—** நரகம். (திவா.)

**துவாரகேசன்—** (துவாரகைக்கு இறைவன்) கண்ணபிரான் (யாழ். அக.)

**துவாரசக்தி—** ஆலயத்தின் காவற்றேவதை

**துவார பாலகர்—** கோயிலின் வாயிற் காவல் தெய்வங்கள். (சைவச. பொது. 498, உரை.)

**துவிச கணபதி —** விநாயகர் (நான்கு கரங்களையுடைய கணபதி)

**துவைதம்—** மத்துவாசாரியரால் பிரசாரஞ் செய்யப்பெற்றதும் சீவான்மாவும், பரமான்மாவும் வேறுவேறெனக் கொள்ளடப்படுவதுமாகிய சமயம்.

**துழாய்க் கண்ணி—** துளசி மாலை

**துழாய் மௌலி—** (துளசி மாலையாகிய முடியினன்) திருமால். (சூடா.)

**துளசி தீர்த்தம்—** திருமாலாராதனையில் உபயோகித்துப் பின் அடியார்களுக்கு வழங்கும் திருத்துழாயும் தீர்த்தமும்.

**துளம்மணி —** விஷ்ணுபக்தர் தரித்தற்குத் திருந்துழாய்க் கட்டையைக் கடைந்து உண்டாக்கிய மணி

**துளசிமாலை—** துளசியிலைக் கொத்து அல்லது துளசிமணியாற் செய்யப்பட்ட மாலை

**துளபமௌலியன் —** (துளசி மாலையை முடியிலணிந்தோன்) (திருமால்). )பிங்.)

**துளவன்—**(துழாயணிந்தவன்) திருமால். (அஷ்டப். பிள்ளைப் பெரு. சரித். பக். 6)

**துறக்கம்—** தேவுலகம் (ம.த.அ) (கலித். 118)

**துன்முகர்—** விநாயகர் (மாறுபட்ட முகமுடையவர்)

## தூ

**தூபி**— கோபுரம். தூலலிங்கமாந் தூபி (சைவச. பொது. 127)

**தூமகேது**— விநாயகருக்கு ஒரு திருநாமம்

**தூமப்பிரபை**— எழுநரகத் தொன்று (ச) (சீவக. 2817, உரை.)

**தூபா**— சுவனத்திலுள்ள மரங் களிலெல்லாம் மிகப்பெரியது (இ)

**தூயவன்**— திருமால் (உரி,நி.)

**தூயாள்**— சரசுவதி (யாழ்,அக)

**தூர்ச்சடி** — (பாரமான சடை தரித்தவன்) சிவன் (காஞ்சிப்பு. இருபத். 106)

**தூலசகளதத்துவம்**— வித்தி யாதத்துவம் (சை) (சி.சி.8,30, ஞானப்.)

**தூலபஞ்சகிருத்தியம்**— இறை வன் சராசரங்களிடம் பஞ்ச மூர்த்திகளைக் கொண்டு செய் விக்கும் சிருட்டி, திதி, சங்கா ரம், திரோபவம் அனுக்கிரகம் என்கிற ஐந்தொழில்கள். (சி.சி. 1,65, ஞானப்)

**தூலபஞ்சாக்கரம்,**
**தூலபஞ்சாட்சரம்**— பஞ்சாட் சரம் பார்க்க (சை) (சி.போ. பா. 4,1, பக். 258)

**தூலலிங்கம்**— 1. கோபுரம். (சைவச. பொது. 127) 2.சிவா லயம் (சி.சி. 12,1, மறைஞா.)

**தூள்**— விபூதி. (சேதுபு'கடவுள். வா. 8)

**தூளனம்**— விபூதியை நீரிற் குழையாது பூசுகை; நீறு தூள னஞ் செய்திடின் (சிவரக. சிவ தன்மா.28)

**தூளிசாலம்**— அருகக்கடவு ளது கோயிலின் முதல் மதில். (ச.) (மேருமந். 60. உரை.)

**தூளிதம்**— திருநீறு

## தெ

**தெண்டங்கி**— சிவபூசையில் பதுமத்து எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அக்கினித் தம் பமாகத் தியானித்து மந்திரத் தால் பூசிக்கை (சை) சோதி லிங்கமாக்கல் தெண்டபங்கி தத்துவப். 64)

**தெய்வகுஞ்சரி**— தெய்வானை பார்க்க.

**தெய்வச் சிலையான்**— திருப் புல்லாணியிற் கோயில் கொண் டுள்ள திருமால். (திவ். பெரியதி 9,4,3)

**தெய்வத்தானம்**— தேவாலயம் (பெருங். உஞ்சைக். 48,177)

**தெய்வத்துவனி**— தேவர் அருகற்குச் செய்யுஞ் சிறப்புக்களுள் ஒன்று (ச) (திருநூற். 80)

**தெய்வதம்**-தெய்வம்(மணி.9,70

**தெய்வநாயகி**—இலக்குமி தேவி

**தெய்வநானம்**— வெயிலெறிக்கும்போது பெய்யும் மழையில் கிழக்கு நோக்கி ஏழடி சென்று மீளுகை, (சை) (தத்துவப்.47, வரை)

**தெய்வமாடம்**— கோயில் (பெருங். இலாவாண. 7, 143)

**தெய்வயானை**— இவள், விஷ்ணுவின் குமரியாயவதரித்துச் சரவணப் பொய்கைக் கரையில் குமரக்கடவுளை மணக்கத் தவமியற்றினள். முருகன் தரிசனந் தந்து நீ இந்திரனிடம் வளருக. நாம் உன்னை மணக்கின்றோம் என, அக்கட்டளைப்படி தவத்திலிருந்து நீங்கிக் குழந்தை யுருக்கொள்ளஇவளை ஐராவதம் என்னும் வெள்ளை யானை வளர்த்து இந்திரனிடம் கொடுத்தது. இவள் யானையால் வளர்க்கப்பட்டதால் தெய்வயானை எனப்பட்டனள். (கந்தபு. தெய்வயா. 52)

**தெய்வயானை காந்தன்**— (தெய்வயானையின் கணவன்) முருகக் கடவுள் (சூடா)

**தெய்வாவி**—பரிசுத்த ஆவி. (கி)

**தெய்விகாதிசயம்**

**தெய்வீகாதிசயம்**— அதிசயம் மூன்றனுள் ஒன்று (ச) (சிலப். 10,167, வரை)

**தெரிபொருள்**— ஆன்மா. தெரி பொருள் தேரின் (பரிபா. 2,26)

**தென்கலைநாமம்**— தென்கலை வைஷ்ணவர் தரிக்குந் திருநாமம்

**தென்கலையார்**— தென்கலை நாமந் தரிக்கும் வைஷ்ணவப் பிரிவினர்

**தென்புலக்கோன்**— (தென்புலத்தின் தலைவன்) யமன். (திவ். பெரியாழ். 5, 2,2)

**தென்றற்றேரான்**— மன்மதன் (பிங்)

# தே

**தே**—தெய்வம்—(பிங்)

**தேகளீசன்**— திருக்குருகூரில் எழுந்தருளிய விஷ்ணுமூர்த்தி

**தேகாத்தும வாதம்**— உடலே ஆன்மா என்று கூறும் சாருவாக மதம்

**தேகி**—ஆன்மா. தேகமுந் தேகியும் (திருமந். 1785.

**தேசோவிந்து**— நூற்றெட்டுப நிமிடங்களுள் ஒன்று, (யாழ். அக.)

**தேவப் பெருமான்**—காஞ்சீபுரத்திற் கோயில் கொண்டுள்ள திருமால்

**தேயுலிங்கம்**—பஞ்சலிங்கங்களுள் அக்கினிரூபமாகத் திருவண்ணாமலையில் உள்ள சிவலிங்கம்

**தேயுவின் கூறு**— புறநிலைக் கருவி பதினொன்றனுள் அக்கினியின் கூறான ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் என்பவை (சை)

**தேரர்**—பௌத்த முனிவர், புத்தர் (பௌ) தேர ரமணரை. (தேவா 139.11)

**தேவகன்மி**— கோயிலில் சுவாமி காரியம் பார்ப்போன். (சா.சொ. அ.)

**தேவகுமாரன்**— இயேசுகிறிஸ்து (கி) (கடவுளின் புதல்வன்)

**தேவகுலம்**

**தேவகோட்டம்**— கோயில்தேவகுலமுந் தெற்றியும் (மணி. 26 72)

**தேவசேனாதிபதி**— (தேவர்களின் படைத்தலைவன் (முருகக் கடவுள். (பிங்)

**தேவதாகாரம்**— கோயில் (யாழ். அக)

**தேவநூதன்**— தூதனயகிய தேவன். (கி.)

**தேவதேவர்**— 1. சிவபெருமான் தேவதே வுபதேசித்த சித்தியை (திருவினை. அட்டமா. 29)

**தேவதேவு**— 2. பரம்பொருள் (திவ். இயற். நான்மு. 20)

**தேவநகர்**-கோயில். (யாழ். அக)

**தேவநற்கருனணை**— கிறித்தவரின் சற்பிரசாதச் சடங்கு (கி)

**தேவமூடம்**— தேவர்கள் தம்மை செல்வம் முதலியன தந்து காப்பாற்றுவர் என்று மயங்கல் தெய்வமூடமாம். (அ. செ. பக். 50)

**தேவயானம்**— கடவுள் ஊர்தி, விமானம்.

**தேவயுகம்**— 12,000 தெய்வவாண்டு கொண்ட காலவளவு (சங்.அக)

**தேவர்**—1. பவணர், வியந்தரர், சோதிடர், கற்பர் வேமானியர் என்ற ஐவகைத் தேவசாதியினர் 2. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் மகேசன், சதாசிவன் (ச) 3. அஷ்டவசுக்கள், துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர், அச்சுவினிதேவர் ஆகிய நால்வகைத் தேவ-வகையார் (பிங்).

**தேவர்கள்**—இவர்கள் ஆதித்யர் (12) உருத்திரர் (11)வசுக்கள் (8)அசுவநிதேவர் (2) திக்குப் பாலகர் (8) இவர்கள் அந்தந் தத் தொழில்களைப் பற்றிக் கடவுளால் சிருட்டிக்கப்பட்டவர்

**தேவரகண்டன்**— திருவாரூர்ச் சிவபிரான். (திருவாரூ. 28)

**தேவரடியார்**— மாகேசுரசைவர்

**தேவராசன்**—1. விஷ்ணுமூர்த்தி 2. இந்திரன்

**தேவலகன்**— கோயிலருச்சகன் (யாழ். அக.)

**தேவவசனம்**— கடவுள் திரு வாக்கு (கி.)

**தேவவசீகரம்**— நிவேதன மாமி சமும் மதுவும் இயேசுவின் மாமிசமாகவும் இரத்தமாகவும் மாறுமெனக் கொண்டு செய்யும் ஆராதனை. R.C.

**தேவன்**—கடவுள் (திவ். இயற். நான்மு, 2); அருகன் (பிங்.)

**தேவாசீவன்**— கோயிற் பூசகன் (யாழ். அக.)

**தேவாமுதம்**—தேவருணவு

**தேவாரம்**— 1. பூசனை (கோ யிற்பு. திருவிழா. 27) 2. சிவ பிரான்விஷயமாக அப்பர், சம் பந்தர், சுந்தரர் என்ற நாயன்மார் மூவரால் அருளிச் செய்யப்பட்ட பதிகங்கள் கொண்டதும் தமிழ் வேதம் என்று கொண்டாடப் படுவதுமான சைவத்திருமுறை (தமிழ் நா. 231)

**தேவாவாசம்**— கோயில் (யாழ். அக.)

**தேவான்னம்**— நைவேத்தியவ முது

**தேவானை**—தெய்வ யானை.

**தேவிகோட்டம்**— காளிகோயில்

**தேவில்**—கோயில் (திவ். திருவாய் 4, 4, 8,)

**தேவு**—தெய்வம் (தேவா. 696,2 தெய்வத்தன்மை (சி. சி. காப்பு. ஞானப், உரை)

**தேனஞ்சு**—பஞ்சாமிர்தம்

**தேனுகாரி**— (தேனுகனுக்குப் பகைவன்) கண்ணபிரான்

## தை

**தைசதவகங்காரம்**-1. இராசத குணம் மேலிட்ட அகங்காரம் (சாங்கியா) 2. அகங்காரத்திர யத்துள் சத்துவகுணம் மேலிட் டது. (சை) (சி.போ.பா. 2,2)

**தைத்தியகரன்**— (தைத்தியர் களைக் கொல்வோன்) சிவன் (இலிங்கபு. 41, 3)

**தைத்தியாரி—** (தைத்தியர்களுக்குச் சத்துரு) திருமால். (யாழ். அக)

**தையல்பாகன்—** (பார்வதி தேவியை இடப்பாகத்துடையவன்) சிவன். (கம்பரா-அகலிகை. 19)

**தைவதம்—**1. தெய்வம். 2.தெய்வாராதனை (தைலவ.பாயி.16)

**தைவிகலிங்கம்—**பரார்த்தலிங்க வகைகளுள் தேவர்களால் தாபிக்கப்பெற்றது. (சைவச.—பொது, 431, உரை)

## தொ

**தொகையடியார்—** தில்லை வாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் என ஒன்பது பிரிவினராயுள்ள கூட்டவடியார். (சை)

**தொட்டப்பன்—**ஞானபிதா (கி

**தொண்டரடிப்பொடி—** (தொண்டர்களின் பாததுளி) ஆழ்வார் பதின்மருள் ஒருவர் (திவ். திருமாலை, 45.)

**தொந்தக்கணபதி—** பெருவயிற்று விநாயகர். தொந்திக் கணபதி மகிழ்சோதரனே (திருப்பு. 136)

**தொழுகை—** தெய்வப் பிரார்த்தனை (இ)

**தொழும்பு—** பரம்பொருளுக்கு அடிமை. (சிவஞா.)

## தோ

**தோகைபாகன்—**சிவபெருமான்

**தோத்திரப்பாட்டு—** கிறிஸ்துவின் துதிப்பாட்டு - (கி); துதிப் பாடல்.

**தோத்திரம்—** துதிமொழி. இருக்கொடு தோத்திர மியம்பினர் (திருவாச. 20,4)

**தோப்பாண்டி—** சிவன்கோயில் திருநந்தவனப் பணி செய்யும் பரதேசி

**தோவகை—** ஸ்திதி கரணம். (அ. செ. 26)

**தௌத்தியம்—**துதி. (யாழ்.அக)

# ந

**நக்கன்**— 1. அருகன் (சூடா.) 2. சிவன். நக்கன் காண். (தேவா. 619.2)

**நக்கிராக்கியம்** — நரகவகை. (சிவதரு. சுவர்க்கநரக. 117.)

**நக்கீரர்**— திருமுருகாற்றுப்படை முதலியவை இயற்றியவரும் கடைச்சங்கத்தில் விளங்கியவருமான புலவர் (இறை. 1.உரை.)

**நகசத்துரு**—இந்திரன், (மலைச் சிறகு அறுத்தோன்) (ம.த.அ)

**நகநந்தினி**— (இமய பருவதத்தின் புத்திரி) பார்வதி (யாழ். அக.)

**நகர்**— கோயில். (புறநா.6.)

**நகுலன்**— சிவன். (இலக்.அக.)

**நகுலேசுவரிபீடம்**— சத்திபீடங்களிலொன்று

**நகேசநங்கை** — (இமயமலையின் பெண்) பார்வதி (யாழ். அக.)

**நஞ்சுண்டான், நஞ்சுண்டோன்**— (விஷமுண்டவன்) சிவன், (திருவாலவா. 30,9)

**நடநாயகன், நடன்**— (நடர்களுள் தலைவன்) சிவபிரான்

**நடராசன்** — சிவபிரானுடைய பல மூர்த்தங்களுள் ஒன்றுன தடனமாடும் மூர்த்தம்.

**நடுதறி**— கன்றாப்பூரில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான். (தேவா. 811,1)

**நடுநிலைமந்திரம்** — சைவ யோகபாதத்தில் முத்திபஞ்சாட்சர சொருபத்தியான மந்திரம், (சை)

**நடை**— 1. நித்திய பூசை. (தேவா. 152,8) 2. கோயில்

**நடைப்பெருவாயில்** — கோயிலின் பிரதானவாசல். (பெருங். மகத.14,20)

**நத்ர், நத்ரு** — நேர்ச்சை. இது இஸ்லாத்தில் இறைவனுக்கு மட்டுமே செய்யப்படவேண்டும்.

**நந்தகம்**— திருமாலின் வாள். (யாழ். அக.)

**நந்தநந்தனன்** — கண்ணன், திருமால்

**நந்தநந்மனி**— பார்வதி

**நந்தன்**— 1. திருமால் (வெங்கைக்கோ. 324) 2. திருநாளைப் போவார் நாயனார். (பெரியபு,)

**நந்தனன்**— விநாயகன்

**நந்தனார்** — திருநாளைப் போவார் நாயனார் (திருத்.பு.சா. 21)

**நந்தாத்துமசன்** — கிருட்டினன்

**நந்தாத்துமசை**— துர்க்கை

**நந்தாப்பதம்**— மோட்சம்

**நந்தாவிளக்கு**— கோயிற் கர்ப்பகிருகம் முதலியவற்றிலுள்ள அவியா விளக்கு. (சீவக,3144)

**நந்தி**— 1. சிவகணநாதராகிய நந்திதேவர் (சூடா.) 2. சிவன். (பிங்.) 3. சமணர் பட்டப்பெயர் (தேவா,859.6)

**நந்திபெம்மான், நந்திவருத்தனன்**— சிவபிரான்

**நந்தீசுவரன், நந்திட்சுரன்**— சிவன், நந்திவாகனன்

**நந்தை**— அருகக்கடவுளது சமவசரணத்தின் கீழ்த்திசையிலுள்ள தடாகம் (ச.) (மேருமந். 1086)

**நப்பின்னை**— கண்ணனுகந்த தேவியருள் ஒருத்தி. (திவ்.திருப்பா.19)

**நஃப்ஸாுன்ஸகிய்யா**— புனித ஆன்மா (இ)

**நபச்சரர்**— தேவர், அருகன்

**நபனம்** — அபிஷேகப் பொருளைச் சுத்திசெய்யும் சடங்கு

**நபனமண்டபம்** — கர்ப்பக்கிருகத்திற்கு முன்னேயுள்ள திருமஞ்சன மண்டபம்

**நபி**-- 1. தீர்க்கதரிசி. (யாழ்.அக) 2. முகம்மது.

**நபிநாயகம்**—முகம்மது (Muhammad, as the prophet) (இ)

**நஃபில்**— இறைவனுக்கு நல்கும் காணிக்கை; அதிகப் படியான கடமையல்லாத வணக்கம் (இ)

**நம்பர்**— சிவன் (சூடா)

**நம்பன், நம்பான்** — கடவுள். தேவா. 954.1)

**நம்பியாரூரர்** — சுந்தர மூர்த்தி நாயனார் (பதினொ. திருத். திருவந். 8)

**நம்பியான்**— கோயிலருச்சகரின் பட்டப்பெயர் (கோயிலொ. 43)

**நம்புசெய்வார்** — அருச்சகர். (Insc)

**நம்பெருமாள்**-- திருவரங்கத்துத் திருமால் (உபதேசரத். 50)

**நம்மாழ்வார்** — ஆழ்வார்கள் பதின்மருள் தலைமையானவரும் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களின் ஆசிரியருமான திருமாலடியார். (உபதேசரத். 50)

**நமச்சிவாய** — சைவர்க்குரிய பஞ்சாட்சர மந்திரம். நற்றுணை யாவது நமச்சிவாயவே. (தேவா. 1182;1)

**நமற்காராதனம்**— கையிரண்டும் இதயத்திலே வைத்துத் தொழுது இரண்டுள்ளங்காலும் பொர முழந்தாள் மடிந்திருக்கும் நிலை. (சை.)

**நமன்**-- யமன். நமனை யஞ்சோம் (தேவா, 1236.1)

**நமனிகை**— திருமஞ்சனம்

**நமஸ்காரபாகுடம்**— தோத்திர நூல் (ச.)

**நமாஸ்**— முகம்மதியரின் தொழுகை (இ)

**நமி** — தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (ச) (திருக்கலம். காப்பு. உரை.)

**நமிநந்தியடிகணாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். பெரியபு.)

**நமுசி**— மன்மதன் (ச)

**நயனத்திரயன்**— சிவன்

**நயனத்திருமேனி** — உருத்திராக்கம்.

**நயன தீக்கை**— பார்வையால் தீக்கை செய்தல்

**நயனதீட்சை** — தீட்சை ஏழனுள் குரு சீடனைத் தனது அருட்பார்வையால் ஞானமுண்டாகும்படி செய்வது. (சை)

**நயனமாலை** — உருத்திராட்ச மாலை. (பிரமோத். 12,6)

**நரகம்**-- நரகம், மாநரகம், இரௌரவ நரகம், இராசராசேச்சுர நரகம் என நால்வகையாகவும்; இரௌரவம், துவாந்தம், சீதம். வெப்பம் சந்தாபம், பதுமம், மாபதுமம், காலசூத்திரம், என எண்வகையாகவும், தமத்தமப்பிரபை, இரத்தினப்பிரபை, தூமப்பிரபை, சருக்காரப்பிரபை, வாலுகாப்பிரபை, பங்கப்பிரபை, தமப்பிரபை என எழுவகையாகவும் நூல்களிற் கூறப்படுவனவும் உயிர்கள் தீவினைப்பயனை அனுபவிக்கும் இடமுமான உலகம். (சி.போ.பா.2,3,பக். 203; சீவக. 2817. உரை.)

**நரகரி**— நரசிம்ம மூர்த்தியாகிய திருமால் (குமர. பிர. காசிக். 4)

**நரகாந்தன், நரகாரி**— (நரகாசுரனைக் கொன்றவன்) திருமால்

**நரசிங்கமுனையரையநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் திருமுனைப்பாடி நாட்டின் தலைவரான சிவனடியார். (பெரியபு)

**நரசிங்கமூர்த்தி**— நரனுஞ் சிங்கமுங் கூடிய உருவுடன் அவதாரஞ் செய்த திருமால்

**நரமேதம்**— நரபலியிட்டுச் செய்யப்படும் யாகம். (பாரத. இராச சூ.14)

**நராதாரை**— பூமிதேவி

**நராந்தகன்**— (மக்களை யழிப்பவன்) யமன் (யாழ்.அக.)

**நராயணன்**— திருமால் (தனிப் பா. 1,53,104)

**நல்வேள்**— மன்மதன்

**நவகோணத்தாள்**— பார்வதி தேவி (சிவரக. தேவர்முனிவர். 1)

**நவசத்தி**— வாமை, சேஷ்டை, ரௌத்திரி, காளி, பலவிகரணி, பலபிரமதனி, சர்வபூததமினி, சக்தி, மனோன்மணி ஆகிய ஒன்பது சிவசத்திகள். (கந்தபு. துணைவ.8)

**நவநீதசோரன்**-- வெண்ணெய் திருடி) கண்ணபிரான் (யாழ். அக)

**நவபதார்த்தம்**— சீவன், அசீவன், புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு, என்ற ஒன்பது பொருட்களே சமண சமய தத்துவத்தின் அடிப்படையாகும் (ச.) (சீவக. 2814,உரை)

**நவபேதமூர்த்தம்** — சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம் ஈசன், உருத்திரன், மால், அயன் என்ற ஒன்பதுவகையான சிவபேதம். (சி.சி.2,74)

**நவராத்திரி**-- துர்க்கை, லட்சுமி சரசுவதி என்ற தேவதைகளின் பொருட்டு ஆசுவினமாசத்தில் சுக்கிலபட்சப் பிரதமை தொடங்கி ஒன்பது நாள் கொண்டாடப்படும் திருநாள்.

**நவவீரர்** — முருகக்கடவுளின் துணைவரான ஒன்பது வீரர்

**நளினாபதி**— திருமால்

**நளினி, நளினை**— இலக்குமி, (உரி.நி.) சரசுவதி

**நற்கடைப்பிடி**— பழுதற்ற சிந்தனை (பௌ.)

**நற்கருணை**— இராப்போசனம் (கி)

**நற்கருணைகொடுத்தல்** — சபையார்க்குக் கிறிஸ்தவகுரு நற்கருணை பண்ணிவைத்தல். (கி)

**நற்றவமூர்த்தி**-- புத்தன் (திவா)

**நன்ஞானம்**— சைனமதத்து வழங்கும் இரத்தினத்திரயத் தொன்று (ச.) (சீவக. 2813, உரை)

**நன்னயம்** — சப்தபங்கி (ச) (The doctrine of qualified Prediaction) (மேருமந். 704)

**நஜாத்**— விமோசனம், முக்தி (இ)

# நா

**நாகசந்திரன்** — தீர்த்தங்கரருள் ஒருவர் (ச) (த.நி.போ. 249 உரை)

**நாகசேதகன்** — இந்திரன் (யாழ். அக)

**நாகணையினான்**— (சர்ப்பத்தைப் படுக்கையாக உடையவன்) திருமால்

**நாகத்தன்**— முருகன், சிவன், திருமால், தேவேந்திரன்

**நாகநாதன்** — 1. இந்திரன் (சுவர்க்கத்திற் கிறைவன்) (சூடா.) 2. சிவன் (சர்ப்பாபரணனாகிய தலைவன்) 3. ஆதிசேடன்.

**நாகபஞ்சமி**— பால், பயறு முதலியவற்றை நாகத்துக்கு இட்டு அதனை வணங்கும் நாளாகிய சிராவண சுக்கில பஞ்சமி. (Loc )

**நாகபூஷணன்**— (பாம்பணி பூண்டவன்) சிவபிரான்

**நாகமாதா**—துளசி (Holy basil) (சங். அக.)

**நாகமுகன்** — (யானைமுகத் தோன்) கணபதி. நாகமுக நம்பிக்கு நவிலலுற்றுன். (பெரிபபு. திருமுறைகண். 1)

**நாகலோகம்**— 1. தேவலோகம் (சங்.அக.) 2. எழுவகையுலகினுள் ஒன்று (ச) (திருக்கலம். 6 உரை)

**நாகாதிபன்**— இந்திரன்; ஆதிசேடன் (பாரத. அருச்சுனன்றீ. 10)

**நாகாந்தகன்**— இந்திரன், அரி, சிவன்

**நாகாபரணன்**— (நாகங்களை ஆபரணமாக உடையவன்) சிவபிரான். (வெங்கைக்கோ. 197)

**நாகாராதி, நாகாரி**— தேவேந்திரன்

**நாகாலயம்**— தேவகோயில், (யாழ்.அக.) பாதலம் (கம்பரா. ஊர்த்தேடு. 9)

**நாகியர்**— நாக கன்னியர், தேவமாதர் (கம்பரா. ஊர்த்தேடு. 121)

**நாகூராண்டவன்**— நாகூரில் சமாதிகொண்டுள்ள முகமதியப் பெரியார் (இ)

**நாகேசுவரன்**— (பாம்புகளையணிந்த கடவுள்) சிவபிரான்

**நாச்சிமார்**— 1. திருமாலின் தேவிமார் (வை) 2. சத்தமாதர் பார்க்க.

**நாச்சியார்**— ஆண்டாள். நாச்சியார் திருமொழி (திவ்.)

**நாசமிலாதோன், நாசமிலி—** சிவன் (யாழ்.அக.)

**நாசன்—** யமன். (பிங்.)

**நாட்டிருவமுது—** காலை நிவே தனப் பொருள். (S.I.I.iii,229)

**நாட்டையர் —** கிறிஸ்துவ போதகர் (கி)

**நாத்திகம் —** கடவுளில்லை யெனும் மதம். நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர். (திருவாச. 4,47)

**நாத்திரன்—** சிவன்

**நாதகீதன்—** சிவபிரான் (சங். அக.)

**நாததீத்துவம்—** சிவதத்துவம் பார்க்க (சை) (சி.போ.பா. 2,2, பக். 139, புதுப்)

**நாதம்—** சிவபிரானது நவபேத மூர்த்தங்களுள் ஒன்று (சி.சி.2, 74)

**நாதமுனி—** திவ்வியப்பிரபந்தங் களை முதன்முதற்கண்டு பிர பலப்படுத்திய ஸ்ரீவைஷ்ணவா சாரியத் தலைவர். (அஷ்டப். திருவரங். காப்பு. 3.)

**நாநருபதாரை—**பார்வதி.புருட மோகினி நாதருபதாரை. (கூர் மபு. திரு. 22)

**நாதருபம்— சிவனது** ஒலிவடிவு

**நாதவிந்து—** நூற்றெட்டு உப நிடதங்களுள் ஒன்று

**நாதன்—** அருகன், (சூடா) கட வுள், பிரமன், திருமால், சிவன் (நாமதீப. 11.)

**நாதாக்கியை —** பார்வதி, நாக்கியை பார்வதி, (கூர்ம்பு. திரு. 20)

**நாந்தகம்—** திருமாலின் வாள் (திவ், பெரியாழ், 4,1,2)

**நாபிசன், நபிசன்மன்—** (திருமாலின் உந்தியிற் பிறந் தோன்) பிரமன். (யாழ். அக.)

**நாமக்கட்டி—** திருமண் கட்டி (Piep clay, used for the Vais-nava mark)

**நாமகள்—** (பிரமாவின் நாவில் வசிப்பவள்) சரசுவதி (திரு வாச. 9. 1)

**நாமம்—** 1. திருமாலின் பன்னிரு பெயர்களைக்கூறி உடலிற் பன் னிரண்டிடங்களில் இடும் ஊர்த் துவ புண்டரம். தன்றிருநாமத் தைத் தானுஞ் சாத்தியே (கம் பரா. கடிமண.49) 2. திருமண் கட்டி 3. எண்குற்றங்களுள் ஒரு வன் கதியை வரையறுக்கும் கன்மம் (ச) (சூடா.)

**நாமமின்மை—** அருகனெண் குணத்துள் ஒன்றாகிய பெய ரின்மை (பிங்.)

**நாய்ச்சியார்**— 1. ஆண்டாள் 2. பார்வதி

**நாயகி**— பார்வதி .(தக்கயாகப். 62)

**நாயன்மார்**— 1. பெரியபுராணத்தில் வரலாறு கூறப்பெற்ற சிவனடியார் 2. கடவுளர். (ஈடு 7,2,11)

**நாயனார்**— 1. சிவனடியார் 2. சிவபெருமான் (தக்கயாகப், பக். 344)

**நாயிந்தே**— 'நாயன்தே' சுவாமி என்று பொருள்படும் தொடர். (ஈடு. 4,3,5)

**நாயோட்டு மந்திரம்**— (திருவைந்தெழுத்தில் 'சி' என்னும் எழுத்து) நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம். (திருமந். பதிப்புரை. பக். 30.)

**நாரணன்**— திருமால். (திவ். நான்மு. 67)

**நாரணி**— துர்க்கை. (பிங்.)

**நாரணிச்சட்டி**— திருக்கார்த்திகையன்று கோயிற்சந்நிதியில் எரிக்கும் விளக்குச் சட்டி

**நாரணியவன்**— (நாரணியை உடையவன்) சிவபிரான் (மருதூரந். 41)

**நாரதபரிவிராசகம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**நாரதர்**— 1. பிரமன் புத்திரர். சிலப். 6,18) 2. புத்தருள் ஒருவர்.

**நாரன்**— மன்மதன் (கம்பரா. இராவண. 244.)

**நாராயணப்பிரியன்**— (திருமாலின் நண்பன்) சிவபிரான். (யாழ். அக.)

**நாராயணம்**— நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று

**நாராயணன்**— 1. (நீரை இடமாக உடையவன்) திருமால். (திவ். இயற். நான்மு. 1) 2. சிவபிரான் (யாழ். அக.) 3. பிரமன், சந்திரன், வருணன் (யாழ்.அக.)

**நாராயணி**—1. துர்க்கை. (பிங்) 2. பார்வதி (சங்.அக.)

**நாரி**— பார்வதி (பிங்.)

**நாரி பாகத்தன்,**
**நாரிபாகன்**— சிவபிரான்

**நால்வகைத்தேவர்**— பவணர், வியந்தரர், ஜோதிஷ்கர், கல்பவாசியர் என்ற நால்வகையான தேவர்கள் (மேருமந். 8, உரை)

**நால்வாயன்**— இந்திரன், விநாயகன். (அக.நி.)

**நாலு பாத சைவம்**— சைவம் பதினாறனுள் சரியை கிரியை

யோகங்களால் ஞானம் அடைந்து பின் ஆன்மா வீடு பெறும் என்று கூறும் மதபேதம் (சை.)

**நாவரசு, நாவரையர்—** திருநாவுக்கரசு நாயனார் (சேதுபு. கடவுள்வா.9)

**நாவலர்கோன்,**
**நாவலூராளி—** (நாவலூரினர்) சுந்தரர் (தேவா. 942.10)

**நாவாதி—** உருத்திராட்சம்

**நாவாள், நாவின்கிழத்தி —** சரசுவதி. நாவாளுடனீ யென நான்முகனே. (சேதுபு. சிவதீர். 46)

**நாவீரன்—** நம்மாழ்வார்

**நாவுக்கரசு—** திருநாவுக்கரசு நாயனார்

**நாழி கேட்டான் வாசல் —** துவஜஸ்தம்பத்துக்கு அப்பால் வடக்கிலுள்ள வாசல் (கோ. த.)

**நாளாகமம்—** விவிலிய நூற்பகுதி (Book of the Chronicles) (கி)

**நாளார்—** யமன், நாளார் வந்தணுகி நலியாமுனம். (தேவா. 326,6)

**நான்மலத்தார்—** ஆணவம், கன்மம், சுத்தமாயை, திரோதாயி என்னும் நான்கு மலமுடைய பிரளயாகலர் (சை) (தத்துவப். 21, உரை)

**நான்மறையாளன்,**
**நான்மறையோன்,**
**நான்முகத்தோன்,**
**நான்முகன்—** பிரமன் (திருவாச 2,21); (பிங்.)

**நான்முகன்—** அருகன். பிண்டி நான்முகன் (சீவக. 402)

**நான்முகன்கிழத்தி—** (நான்முகன் மனைவி) சரசுவதி (பிங்.)

# நி

**நிக்கந்தத்தேவர்,**
**நிக்கந்தன்—** (பற்றற்றவன்) அருகன் (சிலப். 9,13, அரும்)

**நிகண்டவாதி—** சைனரில் ஒரு சாரார் (ச) (மணி. 27.167)

**நிகமாகச்சுவன் —** கடவுள் சிவன்

**நிகரயன்—** பரமான்மா. (யாழ். அக.)

**நிகேதனம்—**கோயில். இந் நிகேனே மேகுதி. (கந்தபு. திருவி. 219)

**நிகோதம்**— ஏழுநரகத்திற்கும். கீழுள்ள ஒரு நரகம் (ச.) (சீவக. 2793, உரைக்குறிப்பு.)

**நிச்சிந்தன்**— அருகன் (பிங்.)

**நிசீதிகை**— உண்ணாநோன்பால் உயிர்விடுகை. (ச) (T.A. S.i. 231)

**நிட்கண்டகன்**— (பகையற்றவன்) சிவபெருமான். (தேவா. 1049.9)

**நிட்களசிவம்**— அருவமான சிவன் (சை) (சதாசிவ. 3, உரை.)

**நிட்களர்**— அருவமூர்த்தியான சிவபிரான்

**நிடலாட்சன்**— சிவன், (நெற்றிக்கண்ணன்)

**நித்தன்**— அருகன், கடவுள், அரி, சிவன் (பிங்.)

**நித்தியகலியாணன்**— கடவுள்

**நித்தியகலியாணி**— பார்வதி. (யாழ். அக.)

**நித்தியசூரி**— பரமபதத்து வாழும் நித்தர் (வை)

**நித்தியமுத்தன்**— கடவுள்

**நித்தியவிபூதி**— திருமாலின் பரமபதம். (அஷ்டாதச ஸ்ரீவச, 4, ப்ர 381, வ்யா)

**நிஃபாக்**— இறை நம்பிக்கை உள்ளவன்போல் நடத்தல் (இ)

**நிம்பை**— இலக்குமி

**நிமந்தம்**— கோயில் ஊழியம்

**நிமலி, நிமலை**— பார்வதி. (காஞ்சிப்பு. தழுவக். 318)

**நிமாசு**— முகம்மதியரின் தொழுகை (இ)

**நியதித்துவம்**— சுத்தாசுத்த தத்துவத்துள் ஒவ்வோர் ஆன்மாவும் தன் கன்மபலனை அனுபவிக்கச் செய்வது (சை) (சி.போ பா. 2.2, பக். 150.)

**நியமம்**— 1. கோயில் உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும் (சிலப். 14,8) 2, நரகம் (பிங்.) நிர்மலிய புட்பம் (தக்கயாகப், 51, உரை)

**நியாயத்தீர்ப்புநாள்**— உலக முடிவில் கர்த்தர் தீர்ப்புக் கொடுக்குந் தினம் (கி)

**நிர்க்குந்தவாதி**—சைனரில் ஒரு பிரிவினராகிய நிகண்டவாதி. (மணி. 27,167 அடிக்குறிப்பு உரை)

**நிர்க்குந்தன்**— அருகக் கடவுள்

**நிர்க்கிரந்தர்கள்**— சமண சமயத்தை நிறுவிய வர்த்தமான மகாவீரரின் மாணவர்கள் இப்பெயரால் அழைக்கப்பட்டனர் (ச.)

**நிர்க்குணசைவம்**— சைவம் பதினாறனுள் சிவனைக் குண மற்றவனாகத் தியானிக்க வேண்டும் என்று கூறும் சமயம்

**நிர்க்குணன்**— கடவுள்

**நிர்க்குணி**— பார்வதி

**நிர்ச்சரம்**— சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய சைன விரதம் (ச.) (சி.போ.பா. அவைய. 12.)

**நிர்ச்சரை**— நவபதார்த்தத்து ளொன்றும் சஞ்சிதகர்மத்தை அழிக்கவல்லதுமான சைனதத் துவம் (சீவக. 2814, உரை.)

**நிர்ச்சலை**—சலனமற்ற சிவசக்தி (சி.சி. 1,47, ஞானப்.)

**நிர்த்தத்துவன்**— கடவுள். சிவன் (சங்கற்ப. 3)

**நிர்ப்பீசதீட்சை**— சமயானுஷ் டானங்கள் செய்யமுடியாதவர் களுக்கு அவற்றைச் செய்வதற் குப் பிரதியாகச் செய்யும் ஔத் திரிதீட்சைவகை. (சை) (சைவச ஆசாரி. 62, உரை.)

**நிர்மலன்**— கடவுள்

**நிர்மாலியம்** – பூசித்து கழித்த பொருள். அர்சித்து வைத்த... நிர்மலிய புட்பம் (தக்கயாகப். 51,உரை)

**நிர்வாணதீட்சை**— தீட்சை யில் மூன்றாவதும் செய்து கொண்டவரின் முன்செய்த வினைகளைப் போக்க வல்லது மான தீட்சை (சை) (சைவச. 20, உரை)

**நிர்வாணம்**— சைன பௌத்தர் களின் முத்திநிலை (சூடா.) 2. மோட்சவின்பம். (கைவல். தத். 92)

**நிர்வாணமார்க்கம்**— பௌத்த சைனமதங்கள். (தக்கயாகப். 7, ஆசாரி. உரை,)

**நிர்வாணி**— 1. சிவன் 2. அரு கன்

**நிரஞ்சனன்**— (அழுக்கற்றவன்) அருகன் (சூடா.) சிவன் (நாம தீப. 16.) கடவுள் (திருவிளை. தீர்த்தவி. 7)

**நிரஞ்சனி**— பார்வதி (யாழ். அக.)

**நிரத்திமாலி** — சிவபிரான் (யாழ். அக.)

**நிரதிகரண தீக்ஷை** — சைவ தீக்ஷைவகை (சை)(சி.சி. பாயி. 3. ஞானப்.)

**நிரதிகாரதீக்கை,**
**நிரதிகாரை**— நீர்ப்பீச தீட்சை பார்க்க (சை) (சைவச. ஆசாரி 62, உரை.)

**நிரந்தரன்**— 1. கடவுள் (எப்போதும் உள்ளவன்) (இலக். அக.) 2. சிவன் (நாமதீப. 16)

**நிரந்தரி**— பார்வதி (யாழ். அக.)

**நிரம்பரன்**— 1. சிவன் 2. அருகன் (சூடா.)

**நிராகாரன்**— 1. சிவபிரான் (யாழ். அக.) 2. திருமால் (யாழ். அக.)

**நிராசனர்**— கடவுளர். (கம்பரா. மிதிலைக். 114.)

**நிருகேசரி**— நரசிங்கம், திருமாலவதாரத்தொன்று (யாழ். அக.)

**நிருணாமன்**— அருகன், கட (சங். அக.)

**நிருநாமன்**— கடவுள்

**நிருமலி**— (குற்றமற்றவள்) பார்வதி. (காஞ்சிப்பு. கழுவா. 87)

**நிருமாலியம்**—1.வில்வம் 2. கடவுளுக்கு நிவேதித்த சுத்தமான பொருள். (பிரபுலிங். மாயை பூசை 58.)

**நிருவாரகம்**— திருமாலது வராகாவதாரம்

**நிருவாணதீக்கை**— முத்திப் பேற்றுக்குக் காரணமாவது

**நிருவாணதீட்சை**— சிவ தீட்சையில் மேலானது, முக்தி பயக்கும் தீட்சை.

**நிருவாணம்**—1. நிர்வாண தீட்சை 2. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று 3. பௌத்தர்கள் கூறும் முத்தி (பௌ.)

**நிருவாணி**— வைரவக் கடவுள். (பிங்.)

**நிரோதானமுத்திரை**— சிறுவிரலை நீக்கி ஏனைய விரல்களை நுனிகள் பொருந்தச் சேர்த்துக் குவிக்கும் முத்திரைளகை. (சை)

**நிரோதனை**— புலனடக்கம் (ச) சீவக. 3080)

**நிரோதி**-சோடசகலையுள்ஒன்று. (செந் ix, 248)

**நிலமகள்**— பூமிதேவி. (புறநா. 365)

**நிலமளந்தோன்**— திருமால். நீணில மளந்தோன் ஆடிய குடமும். (சிலப். 6,55)

**நிலயம்**— நிலையம் - கோயில் (தேவா. 414, 5)

**நிலைத்தானம்**— கோயில். (பெரியபு. திருஞான. 340)

**நிலையங்கி**—1. விக்கிரகத்திற்குச் சார்த்தும் கவசம் 2. விக்கிரகத்திற்குச் செய்யும் முழுவலங்காரம்

**நிவந்தம்**—கோயில் தொண்டு, கோயில். (உபதேசகா. சிவவிரத. 223).

**நிவிர்த்திகலை**— பஞ்சகலையுள் ஆன்மாக்களைப் பாசத்தினின்றும் விடுவிப்பதாகிய

கலை (சை) (சி. போ. பா, 2.2 பக். 143 புதுப்)

**நிவேத்தியம்**— கடவுளுக்குப் படைக்கும் அமுது (பிங்.)

**நிவேதனப்பாவாடை**— கடவுளுக்கு இடும்பெரும் படைப்பு

**நிவேதனம்**—கடவுளுக்குஅமுது படைத்தல் நிவேதனஞ் செய்தான். (சேதுபு. சங்கர. 85.)

**நிறைந்தது**— மகாவிரதம். (அ. செ. 64)

**நின்மலசாக்கிரம்**— ஆன்மா சிவபிரானது அருளால் சத்தாகி விஷயங்களைச் சிவாகாரமாகவும் விஷயசுகங்களைச் சிவானந்தமாகவும் அனுபவிக்கும் சுத்தாவத்தை வகை (சை) (சி.சி. 4, 34, சிவாக்.)

**நின்மலசுழுத்தி**— ஆன்மா, ஞாதுரு, ஞானம், ஞேயம், என்ற வேறுபட்ட அறிவுடன் அருண்மயமாகிச் சுகத்தை அனுபவிக்குப் சுத்தாவத்தை வகை (சை) (சி.சி. 4, 34, சிவாக்.)

**நின்மலசொப்பனம்**— ஆன்மா அருளிடத்தே நின்று அதனையுணரும் சுத்தாவத்தை வகை (சை) சி. சி. 4,34, சிவாக்)

**நின்மலதுரியம்**— ஆன்மாவின் மலங்கழல அதற்கு ஆனந்தவொளி தோன்றுதலாகிய சுத்தாவத்தை வகை. (சை) (சி.சி. 4, 34, சிவாக்)

**நின்மலதுரியாதீதம்**— ஞாதுரு தேயம், என்ற வேறுபாடற்று ஆன்மா ஆனந்தமயமாகிவிளங்கும் சுத்தாவத்தை வகை. (சை (சி. சி. 4, 34, சிவாக்)

**நின்மலன்**— 1. அருகன். (சூடா); 2. கடவுள் (திருவாச. 5, 61)

**நின்மலி**— கடவுள், வில்வம் (நாமதீப. 289.)

**நின்றசீர்நெடுமாறன்**—நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (தேவா. 737, 8)

**நின்னாமன்**— (நாமமில்லாதவன்) அருகன் (சூடா). சிவன் (நாமதீப 16.)

# நீ

**நீண்டவன்**— திருமால் (வாமனாவதாரம் எடுத்து வளர்ந்தவன்) (கம்பரா. குகப்- 41)

**நீத்தவன்**—அருகன் (சூடா.)

**நீத்தார்**—சமணர்

**நீதி**—பார்வதி(கூர்மபு. திருக் 21)

**நீதிநூலன்**—அருகன் (சது.)

**நீதிவானம்**—பரமபதம்

**நீர்க்கண்டன்**— நீலகண்டன்

**நீராஞ்சன்**—விநாயகன்

**நீலக்கோலன்**— மன்மதன், (நாமதீப. 59)

**நீலக்ரீவன்**—சிவன்

**நீலகண்டன்**— நீல நிறங் கொண்ட கழுத்தினையுடைய சிவன்) வன் (திவா.)

**நீலகண்டி**—துர்க்கை

**நீலமணிவோன்**— முருகக் கடவுள் (நாமதீப. 32)

**நீலமேனியள்**—பார்வதி

**நீலமேனியன்**— இராமன், திருமால் (யாழ். அக.)

**நீலலோகிதன்**— சிவன் (திவா.)

**நீலவண்ணன்**—திருமால் (யாழ் அக.)

**நீலி**— துர்க்கை (பிங்.) பார்வதி (பிங்.)

**நீள்சடையோன்**— சிவபெருமான்

**நீளாதேவி**—திருமால் தேவிமார்களுள் ஒருவர் (அபிதா. சிஞ்.)

**நீற்கண்டன்**—நீலகண்டன்

**நீற்றுக்கோயில்**— விபூதிப்பை (திருவாலவா. 37, 57)

**நீறன்**

**நீறாடி**— சிவபெருமான் (விபூதியணிந்தோன்) (திவ். இயற். நான்முக. 27)

**நீறு**—விபூதி. மந்திரமாவது நிறு. (தேவா. 857.1)

## நு

**நுதனாட்டி**— (நெற்றிக் கண்ணுடையாள்) துர்க்கை. பிறை நுதனாட்டி. (கல்லா. 78. 12)

**நுபுவ்வத்**— இறைதூதுத்துவம் (இ)

**நூலாட்டி**—இறைவன்

# நெ

**நெடியோன்**— திரிவிக்கிரமனாகிய திருமால். (சிலப். 11,51)

**நெடுமால்**—திருமால் (பிங்)

**நெடு மாறநாயனார்**— திருஞானசம்பந்தர் காலத்தவரும் பாண்டியவரசரும் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவருமான அடியார். (பெரியபு.)

**நெடுவேள்**— முருகன், காமன்

**நெற்றிக்கண்ணன்**— (நெற்றியில் கண்ணுடையோன்) சிவபிரான்

# நே

**நேசநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு).

**நேத்திரக் காப்பு**— கோயில் மூர்த்திக்கு அலங்காரஞ் செய்கை (Loc)

**நேத்திரமுத்திரை**— சுண்டு விரலையும் பெருவிரலையுங் கூட்டி நடுவணுள்ள மூன்று விரலையும் உயர நிமிர்த்திக் கண்ணுக்கு எதிரிற் காட்டும் முத்திரை வகை (சை) (செந்.X, 424.)

**நேத்திர யோனி**— இந்திரன் (யாழ். அக.)

**நேமி**— 1. சக்கராயுதனாகிய திருமால். நேமியோ குலிசியோ (கம்பரா. பிணிவீட். 70) 2. தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (சீவக. 912) 3. சக்கராயுதம்—(திவ். இயற்.திருவிருத். 9)

**நேமிகாதகம்**—நரகவகை. (சிவதரு. சுவர்க்கநரக. 114)

**நேமிநாதன்**— அருகக் கடவுள் (சூடா.)

**நேமியான்**— (சக்கராயுதன்) திருமால். வள்ளுரு ணேமியான் (கலித். 105)

**நேமிவலவன்**— திருமால் (திவ். திருவாய், 6, 10, 2); கடவுள்.

**நேர்த்திக் கடன்**— நேர்ந்து கொள்ளும் பிரார்த்தனை

## நை

**நைட்டிக தீட்சை**— சிவ தரு மிணி பார்க்க (சை.) a way of initiation) (சைவச. ஆசாரி. 62, வரை)

**நைட்டிகாசிரியன்**— அக்கினி காரியாதி கருமங்களாலின்றி யாவையும் ஞானத்தாலே பண்ணும் ஆசிரியன் (சி. சி. 8,5, சிவாக்.)

**நைத்திகம், நைத்தியம்** — நித்தியத்துவம். (யாழ். அக.)

**நைமித்திகம்**— ஆண்டுதோறும் நடைபெறும் சிறப்பான பூசைகள். (குறள். 18, உரை)

**நையாயிகம்**— கௌதமர் இயற்றிய நியாய நூற்கொள்கை, (மணி. 27, 79)

**நைவேத்தியம், நைவேதனம்**— கடவுட்குப் படைக்கும் உணவு. (தாயு. கருணா. 8)

## நொ

**நொடித்தான்மலை**— (சங்கார கருத்தாவின் மலை) கைலாய மலை (பிங்.) நொடித்தான் மலை உத்தமனே (தேவா. 1166,1) (ச) (சூடா.)

**நோற்பாள்**—சைனசந்நியாசினி

**நோன்பி**— விரதி. (மணி.3.75)

**நோன்பு**— விரதம் (சேதுபு, பாவநா. 19)

## ப

**பக்கதன்மம்**— துணி பொருட்கு இடனாயுள்ள பக்கத்தின் தன்மை. (மணி.)

**பக்கப்போலி**—தீய பக்கம், தருக்கத்தில் பக்கத்தின் ஆபாசம், இது பிரத்தியக்க விருத்தம் முதலாக ஒன்பது வகைப்படும்.

**பக்கப் போலியின் ஒன்பது வகை**—பிரத்தியக்க விருத்தம், அனுமான விருத்தம், சுவசன விருத்தம், உலோக விருத்தம், அப்பிரசித்த விசேடணம், அப்பிரசித்த விசேடியம், அப்பிரசித்த உபயம், அப்பிரசித்த சம்பந்தம் என்பன. (மணி)

**பக்கிரி**— முகம்மதியப் பரதேசி (இ) (Fakir, Muhammadan religious mendicant)

**பக்தவஹ்சலன்**— (அடியார்களிடம் பேரன்புள்ளவன்) கடவுள்.

**பக்தி**—கடவுளிடத்து வைக்கும் அன்பு; வழிபாடு.

**பக்தியோகம்**— பயன் கருதாது பக்தி செய்தலாகியவீட்டுநெறிக்குரிய உபாயம் (அஷ்டாதச. அர்த்தபஞ். 31)

**பக்ரீத்** -- ஒருமுகம்மதியப் பண்டிகை(இ)

**பகடி**—1. பிரகிருதி தத்துவம். (திருக்கலம். 13.) 2. வினை (ச) பகடிப்பகைவா (திருநூற்.3)

**பகவத்கீதை**— அர்ச்சுனன் பொருட்டுக் கண்ணபிரான் உபதேசித்ததும் 18-அத்தியாயமுடையதும் மகாபாரதத்தில் அடங்கியதுமான வடமொழி ஞானநூல். வடமொழிப் பகவத்கீதையைப் பட்டனார் தமிழில் மொழிபெயர்த்துச் செய்தஞானநூல்.

**பகவத் விஷயம்**— தெய்வ சம்பந்தமானது) திருவாய்மொழி வியாக்யானம் (வை)

**பகவதி**— இலக்குமி, பார்வதி, (நாமதீப,22) துர்க்கை (திவா) சரசுவதி, தருமதேவதை (பிங்.)

**பகவன்**-பிரமன், திருமால்,(பிங்.) சிவன், (திவா) புத்தன், (திவா) சினன், குரு, தேவன். ஆதிபகவன் முதற்றே. உலகு (குறள்.1)

**பகவனார்**—திருமால்

**பகவான்**—சிவன். (சூடா.)

**பகாலி**— சிவன், கபாலமேந்தி. (யாழ். அக.)

**பகுசுருதியாகமம்**— சைனாகம மூன்றனுள் ஒன்று (ச) (சீவக. 213, உரை)

**பகுவபஞ்சம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**பங்கப்பிரபை**— எழுநரகத்தொன்று (ச) (சீவக) 2817, உரை)

**பங்கயச்செல்வி**— (தாமரையிலுள்ளோள்) இலக்குமி (தேவா. 868.1)

**பங்கயப் பீடிகை**— புத்தரது பாதங்கள் அமைந்த பதுமபீடம் (மணி. 28. 211)

**பங்கயன்**—1. (தாமரையில் தோன்றியவன்) பிரமன். (அக. நி.) 2. (தாமரைக்கு நாயகன்) சூரியன்

**பச்சைப்பெருமான்**— (பச்சை நிறமுள்ள சுவாமி) திருமால்

**பச்சையம்மன்** — ஒரு கிராம தேவதை.

**பச்சையன்**— திருமால் (யாழ். அக.)

**பசதன்** — சூரியன், இந்திரன், அக்கினி. (யாழ்.அக.)

**பசவன்**— வீரசைவ மதஸ்தாபகர்

**பசிதம்**— திருநீறு (திருப்போ.சந். பெரியகட்டியம், 10)

**பசு**— உயிர், கடவுள், சீவனுடையது. பதி பசு பாசமெனப் பகர் மூன்றில். (திருமந். 115)

**பசுகருமம்** — சமய பதார்த்தம் எட்டனுள் பெத்தான்மாவின் செயல்கள் (சைவப்.67)

**பசுஞானம்** — பதிஞானம் பாச ஞானங்களின் வேறுபட்ட ஆன்மாசொரூப ஞானம் (சி.சி.4,2)

**பசுத்துவம்** — உயிர்த்தன்மை (தாயு. பொன்னை.41)

**பசுநீகாரம்** — ஆணவமலம் பார்க்க (சை.) (இலக். அக.)

**பசுபதி**— (ஆன்மாக்களுக்குத் தலைவன்) சிவபிரான், கடவுள் பவித்திரனைப் பசுபதியை (தேவா. 481.5)

**பசுபதிநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**பசுபாசம்**— ஆணவமலம்

**பசுபோகம்** — சமயபதார்த்தம் எட்டனுள் ஒன்றான ஆன்ம நுகர்ச்சி

**பசுபோதம்** — ஆன்ம அறிவு. (திருவிளை. கடவுள். 10)

**பசும்பிறப்பு** — சைன மதங்கூறும் அறுவகைப் பிறப்புகளுள் மூன்றாவது (ச) (மணி. 27, 151)

**பசுமம்**-- திருநீறு. (வாயுசங். பாசுபதவி 34.)

**பசுவாசாரம்** — ஆன்மாவாசாரம்- சத்திபூசை. (யாழ்.அக)

**பஞ்சகஞ்சுகம்** — ஆன்மதத்துவச்சட்டை ஐந்து, அவை; காலம், நியதி, கலை, வித்தை அராகம் என்பன (சை) (சி. போ.2,2, பக்,158)

**பஞ்சகந்தம்**- உருவம்,வேதனை குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஐவகைக் கந்தங்கள் (பௌ.) (மணி. 30. 33)

**பஞ்சகபாத்திரம்**— பூஜையில் வழங்கும் ஐந்து பாத்திரங்கள் (சைவச. பொது, 445, உரை)

**பஞ்சகர்த்தாக்கள்**—

**பஞ்சகருத்தாக்கள்**— பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் எனப் பர

சிவத்தின் உருவங்களாய்ச் சிருட்டி முதலிய தொழில் புரிதற்கமைந்த ஐவகைக் கர்த்தாக்கள் (வ.ச) (சங். அக)

**பஞ்சகல்யாணபூசை**— சைன சமயத்தவர் நிகழ்த்தும் பூசை வகை (ச)

**பஞ்சகல்யாணம்**— அருகக் கடவுளுக்குரிய சுவர்க்காவதரணம், மந்திராபிஷேகம் மகாப்பிரஸ்தானம், கேவலோத்பத்தி, பரிநிர்வாணம் என்ற ஐவகைப்பட்ட சிறப்புக்கள் (ச.) (திருநூற். 4, உரை)

**பஞ்சகல்யாணன்**— அருகக் கடவுள்.

**பஞ்சகலை**— அர்த்தப் பிரபஞ்சம் இரண்டனுள் ஒன்றும், நிவர்த்திகலை பிரதிட்டாகலை வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்று ஐவகைப்பட்டதுமான சிவசத்தி நிலை (சி. போ. பா. 2,2, பக். 142, புதுப்.)

**பஞ்சகவ்வியம்**— கோமயம், கோமூத்திரம், தயிர், நெய்,பால் என்பனவற்றை மந்திரபூர்வமாகச் சேர்க்கப்படுவது (உத்தரரா. அசுவ. 129)

**பஞ்ச கிருத்தியம்**— ஆன்மாக்கள் மும்மலங்களை ஒழித்து வீடு பெறுவதற்குத் துணையாய் இருக்கும் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற கடவுளின் ஐந்தொழில். (சை) (சி.சி. 1,36)

**பஞ்சகோசம்**— அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் என ஆன்மாவைமூடிக் கொண்டுள்ள ஐவகைக் கோசங்கள் (தத்) The Five Vestures of the soul) (சி. சி. ப்ர. மாயா. ச)

**பஞ்சசத்தி**— பராசத்தி, திரோதானசத்தி அல்லது ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி,கிரியாசத்தி என்ற ஐவகைச் சிவசத்திகள். (சதாசிவ)

**பஞ்சசமிதி**— ஆகாரசுத்தி, திருப்தி, தவம், அத்தியயனம், தெய்வபத்தி யென்ற ஐந்து நியமங்கள். (ச) (மேருமந். 145 உரை)

**பஞ்சசரன்**—மன்மதன்

**பஞ்சசாதாக்கியம்**— சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்மசாதாக்கிய மென்ற ஐவகைச் சிவபேதங்கள். (சை) (தத்துவப். 191. வரை)

**பஞ்சசாயகன்**—மன்மதன்

**பஞ்சசீலம்**— காமம், கொலைகள், பொய், களவு என்னும்

ஐந்தனையும் முற்றத்துறத்த லாகிய பௌத்த ரொழுக்கம் (பௌ.) (மணி. 21,57. உரை)

**பஞ்சசுத்தி**— மானச பூசையில் பூதசுத்தி ஆன்மசுத்தி திரவிய சுத்தி, மந்திரசுத்தி இலிங்க சுத்தி என்ற ஐவகைச் சுத்தக் கிரியை (சை) (சி.சி. 8,20, நிரம்ப)

**பஞ்சஞானன்**— புத்தர் (சங். அக.)

**பஞ்சநமஸ்காரம்**— அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள், என்ற ஐவரையும் முறையே வணங்குதற்குறியாகச் சைனமதத்தில் வழங்கும் அ,சி,ஆ,உ,சா என்ற ஐந்தெழுத்துக்களாலாகிய மந்திரம். (ச) (சீவக. 951, உரை)

**பஞ்சநீராஞ்சனம்**— விளக்கு, தாமரை,சீலை,தளிர் இவற்றைத் தெய்வத்துக்கு முன் சுழற்றியும் அதற்குமுன் தண்டனிட்டும் புரியும் ஐவகைப் பூசனைச் செயல். (யாழ்.அக)

**பஞ்சப்பிரமம்**— 1. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற சிவனை முகங்கள் (அபி. சிந்) 2. சிவபிரானது ஐந்து திருமுகம்பற்றிய மந்திரங்கள் (காஞ்சிப்பு. சனற் 14.) 3. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**பஞ்சப்பிரேதபரசிவம்**— சர்வ சம்மார காலத்தில் நான்முகன் திருமால் உருத்திரன் மகேசன். சதாசிவன் ஆகிய ஐவரின் உடல்களையே தெப்பமாகக் கொண்டு அவற்றின் மீது எழுந்தருளி மீண்டும் படைப்பு முதலானவைகளைச் செய்விக்கத் திருமால் முதலியவர்களைப் படைக்கும் சிவபிரானின் திருவுருவம்.

**பஞ்சபத்திரம்**—சுவாமிக்குப் படைத்தற்குரிய நைவேத்திய வகை

**பஞ்சபரமேட்டிகள்**— அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர் சாதுக்கள் என்ற ஐவகை சைனசமயப் பெரியார். (ச) (சிலப். 10,18,உரை)

**பஞ்சபரிவர்த்தனன்**— கருமம், அவிச்சை, வாசனை, உருசி, மாயாசம்பந்தம் என ஐவகையாய் மாறிவரும் விஷயங்கள் (ச) (மேருமந். 71 உரை)

**பஞ்சபல்லவம்**—பூசனைக்குரிய ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம் என்ற ஐந்தன் தளிர்கள் (யாழ். அக.)

**பஞ்சபாணன்**— மன்மதன். (திவா.)

**பஞ்சபாணி**— பார்வதி. பஞ்சபாணி தந்த முருகோனே. (திருப்பு. 682.)

**பஞ்சபாத்திரம்**— 1. பூசையில் அர்க்கியம், பாத்தியம், ஆச மனியம், ஸ்நாநீயம், சுத்தோ தகம் என்பவைகளுக்கு உப யோகிக்கப்படும் ஐந்து நீர்வட் டில் 2. அகன்ற வாயுள்ள தீர்த்தபாத்திரம்

**பஞ்சமகதி**— மோட்சகதி (ச) (பிங்.)

**பஞ்சமகாவிரதம்**— அஹிம்சை சத்தியம் அஸ்தேயம் பிரம்ம சரியம் அபரிக்கிரகம் என்ற துறவிகளுக்குரிய ஐம்பெரும் விரதங்கள். (ச)

**பஞ்சமலம்**—ஆணவம், கன்மம், மாயை மாயேயம்,திரோதானம் என்ற ஐவகை மலங்கள், (சை) (பிங்.)

**பஞ்சமி**— திரௌபதி, பார்வதி (நாமதீப.23)

**பஞ்சமுகன்**—சிவன் (சூடா.)

**பஞ்சமுத்திரை**—திருநீறு, உருத் திராக்கம், பூணூல், உத்தரீயம், உட்டிணீடம் என ஆசாரியர்க்கு உரியனவாகச் சொல்லப்படும் ஐந்தடையாளங்கள் (சை) (சைவச. ஆசாரிய. 45, வரை)

**பஞ்சமூர்த்தி**— 1. சிவபிரானுக் குரிய சதாசிவன் மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் என்ற ஐந்து மூர்த்தங்கள் (சை) 2. விநாயகன், முருகன், சிவன், உமை, சண்டேசுவரன் என்ற ஐவகைக் கடவுளர். (சை) (Loc.)

**பஞ்சயாகம்**— கர்மயாகம், செபயாகம்,ஞானயாகம், தபோ யாகம், தியானயாகம் என்ற ஐவகை வழிபாட்டு முறை (சிவ தரு. ஐவகை 1, உரை)

**பஞ்சரன்**—மன்மதன்

**பஞ்சலிங்கம்**— பிருதிவிலிங்கம் அப்புலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம் என்ற ஐந்து சிவலிங்கங்கள்.

**பஞ்சவத்திரன்**— (ஐம்முகன்) சிவன் (யாழ். அக.)

**பஞ்சவர்க்குத் தூதன்**— (திரு மால்) கண்ணபிரான். (திவ். பெரியாழ், 1,8,3)

**பஞ்சஸ்கந்தம்**— பஞ்சகந்தம். (பௌ.) (மணி 30, 33 அரும்)

**பஞ்சஸம்ஸ்காரம்**— தாபம், புண்டரம், தாசியநாமம், மந் திரோபதேசம், திருவாராதனம் என்ற ஐவகை ஸம்ஸ்காரங்கள் (வை)

**பஞ்சா**—மொகரம் பண்டிகையில் ஷியாமுகமதியர் எடுத்துச் செல் லும் கைகுறிவிருது (இ)

**பஞ்சாக்கரம்**— பஞ்சாட்சரம் பார்க்க. (திருவாலவா. திரு நகரச். 3)

**பஞ்சாங்கதெண்டன், பஞ்சாங்கநமஸ்காரம்**— முழங் கால்கள் கைகள் தலையெனும் ஐந்துறுப்பும் நிலந்தோயவணங் குதல். அட்டாங்கமுடன் பஞ் சாங்கமுடனாதல்.... பணிவோர் (திருவிளை. மூர்த்தி. 30)

**பஞ்சாச்சரியம்**— அருகக் கட வுள் பொருட்டு நிகழும் கன கவர்ஷம், புஷ்பவர்ஷம் மந்தமா ருதம்,சுபகோஷம், தேவதுந்துபி என்ற ஐந்து அதிசய நிகழ்ச்சி கள்.(ச) (நரிவிருத்)

**பஞ்சாசாரம்**— ஐவகையொழுக் கம். இலிங்கசாரம், சதாசாரம் சிவாசாரம், பிருத்யாசாரம், கணாசாரம் என்பன. (வீர சைவம். பக். 151.)

**பஞ்சாசாரியர்** — கோயில் அருச்சகர். (S.I.I.ii,III.)

**பஞ்சாட்சரக்காவடி** — விபூ திக்காவடி

**பஞ்சாட்சரக்கோயில்** — விபூ திப்பை

**பஞ்சாட்சரப்படி** — சிதம்பரங் கோயிலுள் சித்சபையில் ஏறுதற் கமைந்த ஐந்துபடிகள்

**பஞ்சாட்சரப்பாறை**— திருப்ப ரங்குன்றத்தில் நக்கீரர் இருந்து பூசை செய்த பாறையைப் பஞ் சாட்சரப் பாறை என்பர்

**பஞ்சாட்சரம்**-- 1. சிவபிரானை அ றி ெந ப் வமாகக் கொண்டதும் 'நமசிவாய' என்ற ஐந்து எழுத் துக்களாலானதுமான மந்திரம். 2. திருநீறு. (Loc)

**பஞ்சாணுவிரதம்**— சைனருள் இல்வாழ்வான் அனுஷ்டிக்கும் ஐந்து விரதங்கள் (ச.)

**பஞ்சாமிர்தம்** — வாழைப்பழம், தேன், சர்க்கரை, நெய், திராட் சை என்ற இனிய பண்டங்க ளால் ஆக்கியதும் அபிஷேகத் திற்கு உபயோகிப்பதுமான பண்டம்.

**பஞ்சாயதனபூசை**-- கணபதி, திருமால், சிவன், பார்வதி, சூரி யன் இவ்வைங்கடவுளர்க்கும் வீட்டிற்புரியும் நித்திய வழிபாடு (Loc)

**பஞ்சாயுதபாணி**-- (ஐம்படைக் கையினன்) திருமால்

**பஞ்சானனன்** — (ஐம்முகத் தோன்) சிவன். (உரி.நி)

**பஞ்சாஸ்திகாயம்**— ஜீவாஸ்தி காயம், தர்மாஸ்திகாயம் அதர் மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகா யம், புற்கலாஸ்திகாயம் அல் லது அஜீவாஸ்திகாயம் என்ற ஐந்து சைனமத தத்துவங்கள். (ச.) (திருநூற்.23,உரை.)

**பஞ்சிநாண்** — பூணூல் (திரு விளை. நகர. 83)

**பஞ்சீகரணம்** — சூக்கும பூதங் கள் ஒவ்வொன்றையும் இரண்டு

சமபாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தைத் தன் ஸ்தூலபூதத்திலும், மற்றொரு பாகத்தை நான்கு சமபாகமாகப்பிரித்து ஒவ்வொரு சிறு பாகத்தையும் மற்ற நான்கு ஸ்தூல பூதங்களிலும் சேர்க்கை. (தத்) (கைவல். தத். 10)

**பட்டர்**— ஸ்துதி பாடகர்கள், பூசைக்காரர்

**பட்டர்பிரான்** — பிராம்மணர்களுக்கு வைதிகர்களுக்கு உபகாரகர், பெரியாழ்வாரின் ஒரு திருநாமம்

**பட்டன்**— 1. கோயிலருச்சகன் 2. சுவாமி. ஆல நிழலமர் பட்டனே. (தேவா. 926,1)

**பட்டாரகர்**— கடவுளர், குருக்கள்

**பட்டாரகன்**— 1. அருகபதவி பெற்றோர். நமி பட்டாரகர். (தக்கயாகப். 375,உரை) 2. கடவுள். (பிங்)

**பட்டாரிகை**— துர்க்கை

**பட்டினத்துப்பிள்ளையார்**— காவிரிப்பூம்பட்டினத்தவரும் பதினொராந்திருமுறை ஆசிரியருள் ஒருவரும் ஆவர்

**பட்டினிநோன்பிகள்**— இரண்டு உவாவும், அட்டமியும் முட்டுப்பாடும் உண்ணாவிரதியரான சைனத்துறவிகள் (ச) பட்டினி நோன்பிகள் பலர்புகுமனையில்- (சிலப். 15,164)

**பட்டைச்சாதம்**— கடவுளுக்கு நிவேதிக்கப்படும் அன்னக்கட்டி

**பட்டைநாமம்** — அகன்ற நாமம் (Big sized Vaisnavaiet Mark)

**படிமுழுதிடந்தோன்** — (நில முழுதும் பெயரத் தூக்கினோான்) திருமால். (பிங்.)

**படியளந்தோன்** — (உலகை அளவிட்டவன்) திருமால் (பிங்)

**படியிடந்தோன்** — திருமால் (சூடா.)

**படிவ நோன்பியர்** — தவவேடத்தையும் நோன்பையும் உடையவர். (மணி.)

**படைத்தவன்**— பிரமன் (யாழ் அக.)

**படைப்போன்**— பிரமன், (திவா)

**படையல்**— நிவேதன உணவு

**பண்டர்**— பௌத்தர்

**பண்டரங்கன்** - (பாண்டரங்கக் கூத்தாடுவோன்) சிவபிரான் (தேவா. 297,6)

**பண்டாரம்** — பரமசிவனுக்கு அடிமையானவன்

**பண்டைத்தானம்**— பரமபதம்

**பண்ணவன்** — அருகன் (பிங்) கடவுள். பண்ணவன் எண்குணன். (சிலப்.10,188) (பிங்.)

**பணிகை, (பணிதல்)** — தொழுகை

**பணிசயனன்** — திருமால்

**பணிவிடைக்கரான்**— கோயிற் பிள்ளை (கி)

**பணிவிளக்கு** — கோயில் விளக்கு வகை. (கோயிலொ. 15)

**பத்ததிகள்** — ஆகமக்கிரியைகளுக்கு வழிகாட்டும் நூல்

**பத்தபாரதீனன்**-- கடவுள், திருமால், சிவன்

**பத்தராய்ப்பணிவார்** — தொகையடியாருள் சிவபிரானுக்கும் சிவனடியாருக்கும் தொண்டு புரியும் ஒரு சாரார் (தேவா.738 10)

**பத்தராவி** — (பக்தர்களுக்கு உயிர்போன்றவன்) திருமால் முருகன்

**பத்திசாரன்** — திருமழிசையாழ் வார் (குருபரம்)

**பத்திரகாளி** — துர்க்கா தேவி (சிலப். 20,38 உரை)

**பத்திரசிரேட்டம்** — வில்வம். (மூ.அ)

**பத்திரலிங்கம்** — சைவாலயத்துப் பலிபீடம் (சைவச. பொது. 127)

**பத்திரி**— காளி (பிங்.)

**பத்து**— பக்தி

**பத்து நோன்பு** — பத்துநாள் நடைபெறும் ஒரு முகமதிய நோன்பு (இ)

**பத்மப்பிரபர்** — தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர். (ச) (திருக்கலம் காப்பு. உரை)

**பத்ம யோனி**—பிரமன் (தக்கயாகப் 472.)

**பதப்பேறு** — பதமுத்தி (யாழ். அக)

**பதமுத்தி**— பரமுத்திக்குக் கீழ்ப் பட்ட இந்திரன் முதலிய இறைவர் பதங்கள் (சை) (சி.போ.பா 8,1,பக்.168)

**பதாத்துவா**— அறுவகை அத்துவாக்களுள் பதரூபமானது (சை) (சி.சி.8,6-9, மறைஞா)

**பதார்த்தம்** — 1. சைவ சமயத்துக் கூறப்படும் பதி, பசு, பாசம் என்ற மூவகை மூலப்பொருள்கள் (சை) 2. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூவகை மூலப் பொருள்கள். 3. சைன சமயத்

துக் கூறப்படும் சீவன் அசீவன் என்ற இருவகைமூலப்பொருள் கள் (ச)

**பதானம்**— திரவியம், சேத்திரம் காலம், பவம், பாவம், என்ற பஞ்ச பரிவர்த்தனை. (அ.செ. 153)

**பதி**— 1. திரிபதார்த்தங்களுள் ஒன்றாகிய கடவுள் (சை). பதி யணுகிற் பசுபாச நில்லாவே (திருமந். 115) 2. கோயில். (சங்.அக.)

**பதிகம்**— தெய்வத்தைப் பற்றிப் பெரும்பாலும் பத்துச் செய்யுட் களால் பாடப்படும் பிரபந்தம்.

**பதிகிருத்தியம்**— சமய பதார்த் தம் எட்டனுள் ஒன்றான கடவுள்செயல் (சை) (சைவப். 67)

**பதிசித்திரம்**— கோபுரப்பதுமை (கோயிலொ. 122)

**பதிஞானம்**— இறைவனைப் பற்றிய அறிவு (சி.சி.9,2,மறை)

**பதிஞான வாழ்வு**— பரம்பொரு ளொடு இரண்டறக் கலத்தலா கிய அனுபவம் (திருப்பு. 888)

**பதிபுண்ணியம்**— சிவபிரானுக் குப் புரியும் திருப்பணி (சை) (சி.சி.2,24.)

**பதிமாக்கம்**— பௌத்தபிக்குகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைப் பற்றியது (...தம் . பக். 166.)

**பதின்மர்**— திருமாலடியாராகிய பத்து ஆழ்வார்கள் (அழகர் கலம், அவையடக்.)

**பதினெண்கண்ணன்**— (பதி னெண் கண்களையுடையவன்) முருகன் (நாமதீப. 32)

**பதுமகூடம்**— 154 சிகரங்களை யும், 19 மேனிலைக்கட்டினையு முடைய கோயில் (சுக்கிரநீதி. 230)

**பதும கோசம்**— 301 சிகரங் களையும் 36 மேனிலைக்கட்டினை யுமுடைய கோயில்( சுக்கிரநீதி. 230)

**பதும சதுரம்**— தாமரையை உடைய சதுரம். புத்தனுடைய பாதங்கள் (மணி.)

**பதுமநாபன்**— (உந்தித் தாம ரையோன்) திருமால்

**பதுமப்பிரபர்**— தீர்த்தங்கரர் (ச) (திருக்கலம். காப்பு. உரை)

**பதுமபாணி**— புத்தன், பிரமன்

**பதுமபீடத்தன்**— பிரமன். (கம் பரா. கையடைப். 7)

**பதுமபீடம்**—புத்தனுடைய பாத பீடம் (மணி 3,66 அரும்.)

**பதுமர்**— பழைய புத்தருள் ஒருவர் (மணி. பக். 369)

**பதுமலாஞ்சனை**— இலக்குமி, சரசுவதி

**பதுமலாஞ்சனன்**— சிவன். பிரமன், சூரியன்

**பதுமன்**— பிரமன்

**பதுமாக்கன்**— (தாமரைபோலுங்கண்களை யுடையவன் திருமால். (காஞ்சிப்பு. திருமால். 16)

**பதுமாசனன்**— (தாமரையில் வீற்றிருப்பவன்) பிரமன். (பிரபோத. 3,6)

**பதுமாசனி**— (தாமரையில் வீற்றிருப்பவன்) இலக்குமி

**பதுமை**— 1. திருமகள் (திவா.) 2. மாகாளி (பிங்,) 3. விக்கிரகம் (உபதேசகா. சிவவிரத. 404.) 4 இமவானில் திருமகள் தோன்றிய ஒரு பொய்கை (சீவக. 183, உரை.)

**பதுமோத்தரர்**— பழைய புத்தருள் ஒருவர் (மணி. பக், 369)

**பந்தன்**— திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். பந்தனுரை செய்தமிழ்கள் பத்தும். (தேவா. 77, 11)

**பப்புரு**— சிவன். திருமால், பிரமன்

**பம்மை**— இலக்குமி, ஆரியாங்கனையருள் ஒருத்தி (ச) (சீவக. 2630)

**பயாப்திசயநன், பயாப்திசாயி**— பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால்

**பயிரவர்**— சிவமூர்த்தியின் அம்சம்

**பயோததி**— பாற்கடல்

**பர்க்கன்**— சிவன் (பிங்.) திருமால் (யாழ். அக.) பிரமன் (யாழ். அக.)

**பர்ச்சனியன்** – இந்திரன் (திவ். திருப்பா. 4 வ்யா)

**பர்வதராசகுமாரி**— பார்வதி

**பரகதி**— மோட்சம் (திருவாச. 5. 35)

**பரகாலன்**— திருமங்கையாழ்வார் (திவ். பெரியதி, 3.4,10)

**பரசமயகோளரி**— திருஞானசம்பந்தர்க்கு ஒரு பட்டப்பெயர்

**பரசிவன்**— சிவமூர்த்தி

**பரசுடைக்கடவுள், பரசுபாணி**— 1. சிவபிரான் (மழுவைக்கையிலுடையவன்) (தேவா. 101. 11)

**பரசுராமன்**— திருமாலவதாரமூர்த்தி (மணி 22, 34)

**பரஞ்சுடர், பரஞ்சோதி**— [மேலான ஒளி] கடவுள். (திவ். பெரியதி. 11, 8,7)

**பரஞானம்**— 1, இறைவனோடு ஒன்றிநின்று அவனை அனுப

வித்துணரும் பத்திநிலை வகை (வை.) 2. கடவுளைப் பற்றிய அறிவு.

**பரதுக்கதுக்கன்** — புத்தன்

**பரதெய்வம்**-- முழுமுதற்கடவுள் (தாயு. சுகவாரி. 1)

**பரந்தாமம்**— பரமபதம். (திவ். இராமானுச. 94)

**பரந்தாமன்**— திருமால். (பிங்.)

**பரப்பிரமம்**— 1. முழுமுதற்கடவுள். (சி.சி. 12,7, மறைஞா) 2. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**பரபத்தி** — கடவுளைப் பிரத்தியட்சமாக்குவதாகிய பத்தியின் முதலாவது நிலை (வை.)

**பரமகதி**— பரமபதம் பார்க்க.

**பரமகம்சபரிவிராசகம்**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

**பரமகம்சம்** — நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**பரமகலை**— பார்வதி

**பரமகாரணன்** — கடவுள் (திருக்கோ. 1, அகவல்.)

**பரமசிவன்**— சிவபிரான்

**பரமசுவாமி**— 1. கடவுள் 2. அழகர்மலைத் திருமால் (அஷ்டப். அழகரந். பாயி.)

**பரம ஞானம்**— பதியறிவு. (கம்பரா. மந்திரப். 20)

**பரமண்டலம்**— மோட்சம் (கி)

**பரமபத்தி**— பரம்பொருளைவிட்டுப் பிரிதற்கு ஆற்றாத பத்தியின் முதிர்ந்தநிலை (வை) நனியாம் பரமபத்தியானைந்து (திவ். இராமானுச. 100)

**பரமபதம்**.-- மோட்சம். (கம்பரா. பயன் 5.)

**பரமபரம்பரன்** — உயர்வற உயர்ந்த பரம்பொருள். (திவ் திருவாய். 10,4,7)

**பரமபிதா**— கடவுள் (கி)

**பரமமூர்த்தி, பரமன்**— 1. கடவுள் 2. சிவன், 3. திருமால். 4. முதற்கடவுள். (தேவா. 600.1)

**பரமனையேபாடுவார்** — சிவபெருமானையே பாடி முத்தி பெற்ற தொகையடியார்கள். (பெரியபு. பரமனை. 1)

**பரமாகமம்** — சினாகமங்களுள் முதன்மையானது. (சீவக. 948. உரை.)

**பரமாரத்துமா**— பரம்பொருள் (திவ். திருப்பல், 12) சுத்தாத்துமா. (கி)

**பரமீசன்**— கடவுள். (திவ். திரு திருவாய், 7,1,6)

**பரமுத்தி**— பாசங்களினின்றும் முற்றும் நீங்கியபின் அனுபவிக்கும் பேரின்பம்.

**பரமேசுவரன்**— 1. சிவபிரான் 2. கடவுள்

**பரமேசுவரி**— பார்வதி. (S.I.I.ii 170, 24)

**பரமேட்டி**— 1. பரம்பொருள் 2. பிரமன் (பிங்.) 3. திருமால் (திவ். திருப்பல். 12,) 4. சிவன் (பிங்.) 5. அருகன் (பிங்) 6, பரமபதத்திலுள்ள ஐம்பூதங்களுள் ஒன்று (மாறனலங், 91, 129)

**பரமேஷ்டி**— பிரமன்

**பரலோகம்**— மோட்சவுலகு. (தேவா, 1155, 10)

**பரவாகீசுரி**— சிவ சத்தி (சை,) (சி. போ. வ. தீ 47)

**பரவாசுதேவன்**— பரமபதத்துள்ள திருமால். (வை.)

**பரவிந்து**— சிவத்தோடுஒன்றிய சத்தி

**பரவிவேகம்**— பதிஞானம்

**பரவுக்கடன்**— நேர்த்திக்கடமை. (தொல். பொ. 58, உரை.)

**பரவெளி**— 1, பரமன் உறையும் ஞானாகாசம், 2, கடவுள்

**பரன்வ நாச்சியார்**— சுந்தரமூர்த்தி நாயனார் தேவியருள் ஒருவர்

**பரவையுண்மண்டளி**— திருவாரூரிலுள்ள ஒரு சிவாலயம் (தேவா.)

**பரஸ்வரூபம்** — அர்த்த பஞ்சகத்துள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் அர்ச்சாவதாரம் என்ற ஐவகையான கடவுட்டன்மை (வை.)

**பராசத்தி**— 1. ஞானமயமான சிவசத்தி. (சை) (சி.சி. 1,61, சிவஞா.) 2. பஞ்சசத்திகளுள் இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை என்ற நாற்பிரிவுள்ள சிவசத்தி (சை) (சைவச.பொது 74, உரை)

**பராபரன்**— பரம்பொருள். (தேவா. 542, 7)

**பராபரை** — சிவசத்தி. (சிவப் பிர.2)

**பரார்த்த பூசை** — அனைத்துயிருக்கும் அருளவேண்டிச்சிவனைக் கோயில்களில் பிரதிட்டை செய்து பூசித்தல் (சை) சமுதாய நலன்கருதிச் செய்யும் பூசை.

**பரார்த்தலிங்கம்**- சுயம்புலிங்கம் காணலிங்கம் தைவிகலிங்கம் ஆரிடலிங்கம் மானுடலிங்கம் என்று ஐவகைப்பட்டதும் திருக்கோயிலிலுள்ளதுமான சிவலிங்கம்

**பராவமுது**— தெய்வங்கட்குரிய அமுதம் (திருவாச. 49,2)

**பரானுபவம்**— பேரின்பம் (திருவாச. 49,7)

**பரிக்கிரகத்துப் பெண்கள்** — கோயில் பணிப்பெண்கள்

**பரிக்கிராகம்**— பலிபீடம், யாக குண்ட பீடம்

**பரிசதீக்கை, பரிசதீட்சை** — பரிசத்தால் தீக்கை செய்தல் சைவ தீட்சை ஏழனுள் ஒன்று (சைவச. ஆசாரி. 65. உரை)

**பரிசுத்தர்**— தேவதூதர் (கி)

**பரிசுத்தாவி** — கிறிஸ்துவரது தெய்வநிலை மூன்றனுள் ஒன்று (கி.)

**பரிசை**— கருமத்தைத் தடுத்தற் பொருட்டுப்பொறுக்க வேண்டுந் துன்பங்கள் (ச.)

**பரிட்கிருதபூமி** — பலிபீடம், யாகபீடம்

**பரித்தம்**— 1. கஷ்டநிவாரணத்தின் பொருட்டுச் செய்யும் ஸ்தோத்திரம் 2. பரிவட்டம், விக்கிரகவுடை (ம.த.அ)

**பரிநிர்வாணம்** — பஞ்சகல்யாணங்களுள் ஒன்றாகிய வீடுபேறு (ச.) (சிவக.3116.உரை

**பரிநிஷ்கிரமணம்** — பஞ்சகல்யாணங்களுள் ஒன்றாகிய மகாப்பிரஸ்தானம் (ச.) (மேருமந்.8, உரை)

**பரிபீடனம்**— நரகவிசேடம் (சேதுபு. தனுக்கோ. 5)

**பரிபூசனம்**— வணக்கம், தொழுகை

**பரிபூரண தசை**—முத்தி

**பரிபூரணன்**— கடவுள்

**பரிபூரணி**— பார்வதி, இலக்குமி

**பரியட்டம்**— பஞ்ச பரிவர்த்தனை பார்க்க. (ச.) (மேருமந். 71)

**பரியா வருத்தம்**— நரக வகை (சேதுபு. தனுக்கோ.4)

**பரிவட்டம்** — கோயில் மரியாதையாகத் தரிசிப்போர் தலையைச்சுற்றிக் கட்டும் கடவுளாடை.

**பரிவர்த்துளம்**— நரகவிசேடம் (சிவதரு. சுவர்க்கநரக. 109)

**பருப்பதி**— பார்வதி (அக.நி.)

**பருவதவர்த்தனி, பருவதவாசினி**— (இமவானால் வளர்க்கப்பட்டவள்) (சங்.அக.) 1. பார்வதி; 2. துர்க்கை.

**பருவதி** — பார்வதி, சந்திரன். (யாழ்.அக.)

**பருவரீணம்**— திருவிழா

**பரேஷ்டி**— பார்வதி

**பரை**— 1. பார்வதி (மாறனலங். 665.) 2. சிவசத்தி (சைவச. பொது. 74.உரை) 3. சீவான்மா தன்செயலற்றுச் சிவபெருமானது அருள்பெற்று நிற்கும் நிலை (சை) 4. நைட்டிக தீட்சை. (சி சி. 8,5. ஞானப்.)

**பரைச்சி**— பார்வதி. அறங்காத் தமா பரைச்சி (திருப்பு. 1037)

**பரையோகம்**— சீவான்மா தற்போதமழிந்து சிவபிரானது அருளை எதிர்பார்க்கும் நிலை. (ஒழிவி. யோக. 20,உரை.)

**பல்லக்கர்**— சிவனடியார்

**பல்லவ பாணி**— சரசுவதி

**பல்லவாத்திரன்** — மன்மதன்

**பல்லியங்காஸனம்** —சைனத் துறவியின் ஆசனவகை (ச.) (சீவக. 3114. உரை)

**பலப்பிரமதனர்**— சிவமூர்த்தம்

**பலப்பிரமதனி** — சூர்யனிடம் வியாபித்திருக்கும் சிவசத்தி

**பலானுசன்**-(பலராமன் தம்பி) கண்ணன்

**பலி**— 1. பூசையில் அர்ச்சிக்கும் பூ முதலியன (ஐங்குறு. 259) 2. திருநீறு (அக. நி.) 3. யாகத்தில் இடும் உணவுப்பொருள் (புறநா. 52.)

**பலிக்கடன்**— பூசை

**பலிக்கந்தம்**— பலிபீடம் (மணி. 6,60)

**பலிகம்**— முத்தி

**பலிகொள்ளி**— (பிச்சை ஏற்பவன்) சிவபெருமான். பலிகொள்ளியை நானென்றுகொலெய்துவதே. (தேவா. 744.5)

**பலிவீடு**— பலிவிடுதல்- பலிகொடுக்கும் வீடு

**பவ்விமை**— உமாதேவி

**பவ்வியசீவன்**— நல்லுயிர் (ச.) (சீவக. 374, உரை)

**பவதி**— பார்வதி (திருப்பு. 969)

**பவநாசன்**— கடவுள்.

**பவநாமேசுவரன்**— உருத்திரருளொருவர்

**பவபூதி**— சிவன்

**பவளவடிவன், பவளவழகன்**-- (சிவந்த வடிவமுள்ளவன்) முருகன் (நாமதீப.31)

**பவன்**— கடவுள் (பிங்) சிவன், (திருவாச. 4,176) சுயம்பு

**பவாநி**— உமாதேவி

**பவாவதாரம்**-- தேவர்கள் தர்ம மார்க்கத்தைப் பரவச் செய்யப் பூவுலகில் அவதரிக்கை (ச) (மேருமந். பாயி.42)

**பவானி**— பார்வதி (பிங்)

**பவுத்தர்** — புத்தமதத்தோர். (திவ். இயற். நான்முகன்.6)

**பவுத்கீதீகைஷ**— தீக்ஷைவகை. (சை) சி.சி.8,(4, ஞானப்.)

**பவுராணிகன்** — புராணஞ் சொல்வோன் (சேதுபு. தனுக் கோ.1)

**பவோற்பவன்** — சிவமூர்த்தி யின் திருநாமங்களில் ஒன்று. (திவா)

**பழனியாண்டவன், பழனி யாண்டி**— பழனியில் கோயில் கொண்டுள்ள குமரக் கடவுள்

**பழனிவேலன்** — வேலுடன் கூடிய குமரக்கடவுள்

**பழையவேற்பாடு** — விவிலிய நூலின் பூர்வாகமம் (கி.)

**பழையோள்**— துர்க்கை. இழை யணி பழையோள் குழவி. (திரு முரு. 259)

**பள்ளி** — சைன பௌத்தக் கோயில் (திவ். பெரியதி.2,1,5)

**பள்ளிகொண்ட பெருமாள், பள்ளி கொண்டான்**— கிடந்த திருக்கோலங்கொண்ட திருமால்

**பள்ளிச்சந்தம்**— சைன பௌத் தக் கோயில்களுக்கு விட்ட நிலம் (S.I.I.ii, 386)

**பள்ளித்தாமம்** — கோயில் மாலை (பெரியபு. எறிபத்த.40)

**பள்ளிவாசல்** — முகம்மதியர் மசூதி (இ)

**பற்கன்**— சிவன், பிரமன், சூரி யன்

**பற்பாரபன், பற்பநாபன்** — திருமால்

**பற்பம்**— திருநீறு (சூடா)

**பற்றிலான்** — கடவுள். (பிர மோத். 22,3)

**பறிதலைக்கையர், பறிதலை யர்** — தலைமயிரைப் பறித்துவி டுஞ் சமணர் (திருவாலவா.37, 74.)

**பன்மம்**— விபூதி. பன்மம் எவர்க் குத் தரித்திடலாம்! (திருக்கா ளத் பு,22,15)

**பன்றிமுகம்** — நரகவகையின் ஒன்று. (சேதுபு. தனுக்கோ.10)

**பன்றியாழ்வார்** — வராகாவ தார மூர்த்தி

**பன்னகசயனன்** — (பாம்பிற் பள்ளிகொண்டோன்) திருமால். (பிரபுலிங். வசவண். 29)

**பன்னகப்பூணினான்—** (பாம்பை ஆபரணமாக உடையவன்) சிவபிரான். (உரி. நி)

**பன்னகாசனன் —** (பாம்பின் மேல் அமர்ந்திருப்போன்) திருமால். (அரு. நி. 688)

**பன்னிரண்டு திருமண்_உடம்** பிற் பன்னிரண்டு இடங்களில் அணியப்படும் ஊர்த்துவ புண்டரம் (வை)

**பன்னிருகரத்தோன்—** முருகக் கடவுள் (பிங்.)

**பன்னிருதோளான்—** முருகன்

**பனுவலாட்டி—** (வித்தையின் அதிதேவதை) சரசுவதி. (பிங்)

**பஸ்தி—** ஜினாலயம்-சமணபள்ளி

**பஸ்மம்—** விபூதி- இது ஆதியில் சிவனிடத்தில் பக்தியுள்ளவர்க்குச்சிவபிரானால் கொடுக்கப்பட்டது.

**பஸ்மஜாபாலம் —** நூற்றெட்டு பநிடதங்களுள் ஒன்று

**பஸ்மஸ்நானம்—** விபூதி ஸ்நானம் (சை)

**பாகத்தாள்—** உமாதேவி

**பாகவதநடனம் —** வைணவ அடியார்கள் செய்யும் நடனம்

**பாகவதம் —** பாகவதபுராணம் (வடமொழியிலுள்ள பதினெண் புராணத்துளொன்று)

**பாகவதர் — 1.** திருமாலை முதற்கடவுளாகக்கொண்டு வழிபடுஞ் சமயத்தோர். (பிங்) 2. சங்கீதத்துடன் சமயச் சார்பான இதிகாசங்களை எடுத்துரைப்போர்

**பாகு—** சத்தி (அக. நி)

**பாங்கு—** தொழுமிடம் (இ)

**பாசகரன்—** (பாசத்தைக் கையிலுடையவன்) இயமன் (யாழ், அக)

**பாசஞானம் —** வாக்குக்களாலும் கலாதி ஞானத்தாலும் அறியும் அறிவு. (சை) (சி.சி.9,1)

**பாசண்டச் சாத்தன்— 1.** ஒரு தெய்வம்; 2. சமயநூல்களில் வல்லவரான ஐயனார். (சிலப் 9, 15)

**பாசண்டம்—** தொண்ணூற்றறு வகைச் சமயசாத்திரக்கோவை. (சிலப். 9,15)

**பாசண்டிமூடம் —** புறச்சமயத்தினரைப் போற்றும் மடமை (ச.) (அறநெறி, 16)

**பாசதரன்— 1.** (கயிற்றையுடையவன்) காலன் (சூடா) 2. விநாயகன் 3. வருணன் (பிங்.)

**பாசதரிசனம்** — பாசஞானம். (சை)

**பாசநாசம்**— குருவின் தீட்சையால் ஆணவம் கன்மம் மாயையென்ற மலங்களை நீக்குகை (சை)

**பாசநீக்கம்** — மும்மலங்களிலிருந்து விடுபடுகை, (சை)

**பாசபாணி**— சிவன் (யாழ்.அக) யமன் (சூடா), விநாயகன் (யாழ். அக.)

**பாசம்**—மும்மலம் (Bond, or the obstructive principle which hinders the souls from finding release in union with Siva, One of the three patarttam) (சை) பசுபதி பாசமென (திருமந். 115) 2. பக்தி.பாசம் பரஞ்சோதிக் கென்பாய். (திருவாச. 7.2.)

**பாசன்**—1. சிவபெருமான் (யாழ். அக.) 2. சீவான்மா. (சது.) 3. யமன். (நாமதீப. 86. 4. வருணன் (நாமதீப. 82)

**பாசாங்குசதரன்**— (பாசத்தையும் அங்குசத்தையும் தாங்கியிருப்பவன்) விநாயகன் (பிங்.)

**பாசாண்டி**—புறச்சமயநூல் வல்லோன். (தொல். பொ. 649, உரை)

**பாசி**—யமன், (யாழ். அக.) ஆன்மா, வருணன். (யாழ்.அக)

**பாசுபதம்** — 1. ஆணவமலம் இல்லையென்றும் ஈசன் பக்குவமடைந்த ஆன்மாக்களிடம் தன் குணங்களைப் பற்றுவித்துத் தான் அதிகாரத்தினொழிவு, பெற்றிருப்பனென்றும் கூறும் அகப்புறச்சமயவகை. (சி. போ. பா. அவை) 2. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

**பாசுபதன்**— 1. சிவபெருமான், பார்த்தனுக் கருள்செய் பாசுபதன் (தேவா. 389,6) 2. சைவர்களுக்குள் பாசுபத முறையை அனுசரிப்போன் (திவா.) 3. சிவனை வழிபடுவோன் (சூடா.)

**பாசுபதாத்திரம்**— சிவபெருமானைத் தேவதையாகக் கொண்ட அஸ்திரம்

**பாசுரம்**—திருப்பாடல்.

**பாஞ்ச சன்னியதரன்** — திருமால்

**பாஞ்ச சன்னியம்**—திருமாலின் சங்கம் (திவ். நாய்ச். 7,5)

**பாஞ்சராத்திரம்**— வைணவ ஆகமங்களுள் ஒன்று, ஐந்து வகை ஞானங்களைக் கூறுவது (சி. போ. பா.)

**பாஞ்சராத்திரி** — வைணவ சமயத்தில் பாஞ்சராத்திரத்தை

அனுசரிப்பவள் (சி. போ. பா, அவை. 4, சாமிநா.)

**பாடசாலி,**
**பாடசாலிகை**— திரௌபதி (திவ். பெரியதி 6,7.8)

**பாடகம்**— ஒரு கோயில்; காஞ்சியிலுள்ள ஒரு திருமால் தலம். (திவ்.இயற். 2,94)

**பாடலை**— துர்க்கை (சங், அக)

**பாடான முத்தி** — ஆன்மா கல் போலக் கிடப்பதாகக் கருதப் படும் முத்திநிலை

**பாடாணவாத சைவம்** — பாடாணவாதக் கொள்கையை யுடையசைவசமயவகை. (சை) (சி. போ. பா. அவை. பக். 5, சுவாமிநா)

**பாடாணவாத சைவன்** — இவன் ஆன்மா முத்தியிலும்சக சமலம் நீங்காது கலபோற் கிடக்கும் என்பன.

**பாடாணவாதம்** — ஆன்மாவுக்கு முக்தி நிலையிலும் ஆணவமவமுண்டென்றும் அந் நிலையிற் கற்போல அது கிடக்குமென்றும் கூறுங் கொள்கை (சை) (சி போ.பா, அவை பக்.22 சுவாமிநா.)

**பாடுபட்ட சொரூபம்**—இயேசு நாதர் (கி)

**பாண்டரங்கம்** — கூத்துப் பதினொன்றனுள் திரிபுரத்தை அழித்தபோது சிவபிரான் வெண்ணீறணிந்து ஆடியது. (சிலப். 6,45)

**பாண்டரங்கன்**— சிவன் (பிங்)

**பாண்டவர் படுக்கை** — சைனத் துறவிகளின் மலைக் கற்படுக்கை (Insc)

**பாண்டவாபீலன்** — (பாண்டவர்க்குப் புகலிடமானவன்) கண்ணபிரான் (யாழ். அக.)

**பாண்டிக்கொடுபிடி**— கொங்கு நாட்டின் ஏழு சிவதலங்களுள் ஒன்று (தேவா)

**பாண்டிகன்**— கோயிலில் திருப் பள்ளியெழுச்சி பாடுவோன்.

**பாண்டுகம்பளம்**— இந்திரன் ஆசனம் (பௌ) (மணி.14,) 29)

**பாணகர்** — திரிபிடகங்களைப் பாராயணஞ் செய்துவந்தபிக்குகள் (பௌ.)

**பாணிமுகம்**— உடலை விட்டு உயிர் போகும் முறைகளிலொன்று (ச.) (சீவக.948)

**பாத்தியன்** — கடவுளின் அடியான். (மணி, 10,35)

**பாத்தியா**— முகம்மதியர் விவாகம் அல்லது மரணகாலத்தில் குர் ஆன் ஓதுகை (இ)

**பாத தீட்சை**—திருவடி தீட்சை பார்க்க.

**பாதபங்கயமலை** — மகத தேசத்து இராஜக்கிருக நகரத்தில் புத்த தேவரது பாதம் வைக்கப்பட்ட மலை. (மணி 10,68)

**பாதபீடிகை**—1. புத்தரது பாதப்படிமங்களுள்ள பீடம் (மணி. 6,12) 2.அடிவைக்கும் பலகை (கி)

**பாதம்**—சரியாபாதம், கிரியா பாதம், யோகபாதம், ஞான பாதம் என்ற நான்கு சைவ சமய மார்க்கம் (சை)

**பாதமுத்தி**—1. திருவடி தீட்சை பார்க்க 2. பரகதி. (யாழ். அக)

**பாதமூலம்**—முத்திக்குக் காரணமானதும் அடைக்கலமாகக் கருதப்படுவதுமான திருவடி. (சீவக. 511)

**பாதிமாமதி சூடி** — சிவபிரான்

**பாதிரி**—கிறிஸ்தவமத போதகர் (கி)

**பாதோதகம்**— திருவடி நன்னீர் குருவின் திருவடிகளையும், சங்கமர் திருவடிகளையும் திருமஞ்சனமாட்டிய பாதோதகத்தைப் பாதுகாத்து வைத்தல் வேண்டும். பாதோதகம் சம்பந்தப்படாத எந்த ஒன்றையும் வீரசைவன் உட்கொள்ளல்ஆகாது (வீரசைவம். பக். 183)

**பாபசங்கீர்த்தனம்**

**பாபவிக்கியானம்**— பாவம் நீங்க அவற்றைக் குருவிடம் தெரிவிக்கை (கி)

**பாம்பாடி**— திருமால் (நாமதீப. 51)

**பாமகள்**— சரசுவதி (ஞானவா. லீலை. 74)

**பாமறைக்கிழத்தி**— கலைமகள்

**பாய்கலைப்பாவை**— (பாயுங் கலைமானை ஊர்தியாக உடையவள்) துர்க்கை (சிலப். 12, 70)

**பாயுடுக்கையர்**—பாயை உடுத்துக் கொள்ளும் சமணத்துறவி வகையினர் (தேவா)

**பார்**— புத்தன் (யாழ். அக.)

**பார்க்கவி** — இலக்குமீ (மனோன்.iii, சிவகாமி. 49) பார்வதி (யாழ். அக.)

**பார்சுவர்**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (ச) (திருக்கலம். காப்பு, உரை)

**பார்த்தசாரதி**—(அர்ச்சுனன் தேர்ப்பாகன்) கண்ணபிரான்

**பார்த்திவலிங்கம்**- ஈரமண்ணாலான சிவலிங்கம். (சங். அக)

**பார்ப்பதி**—பார்வதி (பிங்) (திரு வாச. 9,1)

**பார்ப்பதிகொழுநன்**— சிவ பிரான் (பிங்)

**பார்ப்பதிபுதல்வன்**— கணபதி (பிங்.)

**பார்ப்பான்**— பிரமன். (கம்பரா. வருண. 61) யமன் (யாழ்.அக)

**பார்ப்புத்தேள்,**
**பார்மகள்**— பூமிதேவி (தக்க யாகப். 671)

**பார்மிசை நடந்தோன்** — புத் தன். (பிங்)

**பார்வதி**—உமை (திவா)

**பார்வதி சமேதன்** — பார்வதி யுடன் கூடிய சிவமூர்த்தி

**பாரசுவன்**— தேவி பூசை செய் பவன்

**பாரதி**— 1. சரசுவதி (பிங்) 2. பைரவி. (சிலப். 6,39)

**பாரதிகொழுநன்**— பிரமன் (பிங்)

**பாரதியினாம்**— கோயில்களில் பாரதம் படித்தற்கு நியமிக்கப் பட்ட இனாம்.) M.M.353)

**பாரமிதை** — வீடுபேறு தானம், சீலம் ஆகிய கரையை அடை வதற்குரிய வீரியம், தியானம், உணர்ச்சி, உபாயம், அருள் பலம் ஞானம் என்னும் பத்தும் நிரம்பப் பெறுதல். அளப்பரும் பாரமிதையளவின்று நிறைந்து (மணி. 26,45)

**பார முகாக்கியம்**— சிவன் ஐம் முகப் பூசை (ம. த. அ)

**பாராயணம்**— சமய நூல்களை முறையாக ஓதுகை. (கம்பரா. நிகும்ப. 139)

**பாராயணி**— சரசுவதி. (யாழ் அக.)

**பாராபாத்**—மகமது நபியின் மரணதினத்தைக் கொண் டாடுந் திருவிழா (இ)

**பாரி**— இராப்பூசை முடிந்து கோயிலைப் பூட்டின பிறகு, பாராவாக ஊரைச் சுற்றி வரும் மேளதாளம். (கோ. த.)

**பாரிவேட்டை**— கோயில் திரு விழா வகை

**பால்மேனியாள்**—சரசுவதி

**பால்வண்ணன்**—சிவன்

**பால்சந்திரர்** — விநாயகருக்கு ஒரு பெயர்

**பால்லோசனன்**— (நெற்றிக் கண்ணன்) சிவன்(உபதேசகா சிவபுண்ணி. 5.)

**பாலலோசனி**—உமாதேவி

**பாலவன்**— பால்வண்ணமான சிவன்

**பாலஸ்தாபனம்** — பாலாலயம் பார்க்க

**பாலாங்கன்**—சிவன்

**பாலாசரியன்** — முருகன், குருபரன்

**பாலாட்சன்**—சிவன்

**பாலாலயம்**— மூலஸ்தானத்தை பழுதுபார்த்துப் புதுப்பிக்குங் காலத்தில் கடவுளை வேறாக ஆவாகனஞ் செய்திருக்கும் சிறிய கோயில்.

**பாலைக்கிழத்தி** — (பாலைக் குரியவள்) துர்க்கை (கல்லா. 17.45)

**பாவகி**— (அக்கினியிலுதித் தோன்) முருகக் கடவுள். (பிங்)

**பாவசங்கீர்த்தனை**— குருவிடம் பாவத்தைச் சொல்லுகை (கத்தோலிக்கம்)

**பாவமன்னிப்பு** — பொறுத்து விடுகை (கி.)

**பாவன்**—மன்மதன், ஆன்மா

**பாவனன்**—அனுமான்

**பாவனை**— பஞ்சகந்தங்களுள் ஒன்று(பௌ.) (மணி.30,189) 2. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று 3. தியானம் (திருநூற். 88)

**பாவாடை,**
**பாவாடை யமுது** — கடவுள் முதலியோர்க்கு முன் ஆடையிற் படைக்கும் அன்னம் (கலிங். 548)

**பாவை** — நோன்புவகை. (திவ். திருப்பா. 2)

**பாழ்ந்திருமண்**— ஸ்ரீசூர்ணமின்றித் தரிக்குந் திருமண் (வை)

**பாழி**—கோயில் (ஈடு 1,1,5)

**பானபலி**—திராட்சை மது நிவேதனம்—(கி)

**பானவட்டம்** — இலிங்கத்தின் அடிப்பாகம்.

**பானீயம்**—ஏலம், சந்தனம், பச்சைக்கருப்பூரம், பாதிரிப்பூசெங்கழுநீர்ப்பூ கலந்தநீரைப்படைத்தல் பானிய நிவேதனம் (திருவிளை. இந்திரன் முடி. 16)

**பாஷாசமிதி** — சமணத் துறவிகள் நாவடக்கம் உடையவராய் அறவொழுக்கம்சமயக்கொள்கை ஆகியவற்றை அருளிச் செய்வதையும்ஒழுக்கமாகக்கொள்ளுதல் (சமணம் பக். 83)

**பாஹ்ய பூசை** — வெளிப்புற பூஜை (அபிஷேகம்,அர்ச்சனை நைவேத்தியம் ஆரத்தி மூலமாகப் பூசை செய்வது.

**பாஸ்குத்திருநாள்**—ஒரு கிறிஸ்தவப் பண்டிகை (கி)

# பி

**பிங்கசடன், பிங்கலன்**—சிவன்

**பிங்கலை**—பார்வதி (யாழ்.அக)

**பிங்கேட்சணன்**— (சிவந்த மேனியன்) சிவன். (ம. த. அ)

**பிச்சன்**—சிவன், ஊர்ச்சுடுகாட் டெரிப் பிச்சன் (திருவாச. 6,49)

**பிச்சியார்**— சைவ தவப்பெண் பிச்சியாரெனும் பேருமக்கிட் டதே (குமர. பிர. மதுரைக் கலம் 32)

**பிச்சைத் தேவன் பிச்சைப் பெருமாள்**— பிட்சாடனன் (சிவன்)(திருவாச 5,81)

**பிசிதம்**— நீறு (பிங்.)

**பிஞ்சகன்**— (சங்கரிப்போன்) சிவன் (பெரியபு. திருமலை. 11)

**பிஞ்ஞகன்**— (சங்கரிப்போன்) சிவன் (திருவாச. 1,7)

**பிஞ்ஞை**— நப்பின்னை. (மணி. 19,65)

**பிட்சாடனன்**— சிவபிரான் (இரப்போன்) (Loc)

**பிட்கு**— நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று.

**பிட்டுத் திருவிழா**— வந்திக்கா கக் கூலியாளாக வேலைசெய்து சிவபிரான் பிட்டுப்பெற்ற திரு விளையாடலைக் குறித்தற்கு மது ரையில் நடத்தப்படுந் திருவிழா

**பிடகநெறி**— புத்த ஆகமங் களின் வழி. (மணி.)

**பிடகம், பிடக வரலாறு**— பௌத்த மறைக்குத் திரிபிடகம் என்று பெயர். பிடகம் மூன்று வகைப்படும். அதனால் திரி பிடகம் என்பர். தேவாரத்தில் இது பிடக்கு எனவழங்குகிறது. 1. ஒழுக்கநெறி கூறுவது— வி நயபிடகம் 2. அறநெறி— கூறுவது —தரும பிடகம் 3. தருமபிடகத்தின் ஒரு பிரிவு — சூத்திரபிடகம் (மணி, 26, 66)

**பிண்டிப்பகவன்**— அருகன் (சீவக. 957)

**பிண்டியார்**— சைனர். போதி யார் பிண்டியார் (திவ். பெரி யதி. 9,7,9)

**பிண்டியான்**— அருகக்கடவுள் (திருவிளை. மாயப்பசு. 5.)

**பிணிமுகம்**— முருகக்கடவுளின் யானை, சேயுயர் பிணிமுக மூர்ந்து. (பரிபா. 5,2.)

**பிதா**— கடவுள், பிரமன் (பிங்.), சிவன் (பிங் ),அருகன் (சூடா.)

**பிதாக்கள்—** கிறிஸ்தவக்கோயிற் குருமார் (கி)

**பிதாமகன்—** பிரமன் (கம்பரா. திருவவ. 26)

**பிதிர்பதி—** (பிதிரர்களுக்குத் தலைவன்) யமன். (யாழ். அக.)

**பிதிர்வனேசுரன்—** சிவபிரான் (யாழ். அக)

**பிநாகம்—** சிவன்வில், திருமால்

**பிரக்ஞா பாரமிதை—** பௌத்தநூல்களைப் பயிறலும், சிந்தித்தலும், உணர்தலும், நிறைவுறுதலும் இப்பாரமிதையின் பாற்படும். (பௌத்தம். பக். 26.)

**பிரகலாதன்—** இரணியகசிபுவின் மகனான ஒரு பரமபாகவதன். (பாகவத. 7. இரணிய. 29)

**பிரகிருதி—** 1. பஞ்ச சத்திகளாகிய துர்க்கை, ராதை, லட்சுமி, சரசுவதி, சாவித்திரி இவர்களே ஐவகைப் பிரகிருதிகள் என்பர் (ம. த. அ) 2. மூலப்பகுதி. (தாயு. பராபர. 166)

**பிரசமனன்—** விநாயகன்

**பிரசாதம்—** கடவுளுக்கு நிவேதிக்கும் அன்னம் முதலியன. S.I.I.i.ii, 248,4)

**பிரசாதலிங்கம்—** ஷட்விதலிங்கங்களு ளொன்று

**பிரஞ்ஞாபாரமிதை, பிரஞ்ஞை—** ஞானநிறைவு (பௌ)

**பிரதமானுயோகம்—** சைனர்களுக்குரிய நான்கு வேதங்களில் முதலாவது (ச.)

**பிரதான கோயில்—** 1. பிரதான தெய்வமுள்ள கோயில் 2. கிறிஸ்தவர்களின் தலைமைக்கோயில். (கட்டட. நாமா. 4.)

**பிரதானை—** பார்வதி (கூர்மபு. திரு. 20)

**பிரதிட்டாகலை—** சிவசத்தியின் பஞ்சகலையுள் சீவான்மாவை முத்தியில் உய்க்குங் கலை (சை.) (சீ. போ. பா. 5, 2, பக், 143, புதுப்)

**பிரதேகம்—** அபிடேகம்

**பிரபஞ்சானுக்கிரகம்—** ஆன்மாக்களிடத்துக் கடவுள் செய்யும் திருவருள்

**பிரபத்தி—** சரணமாக அடைதல் பிரபத்தி யென்னும் பேருடை நெறியால் (பிரபோத. 45, 10 [இறைவனது வல்லமையிலும் அருளிலும் பூரண நம்பிக்கை வைத்துத்தன்னை முற்றுக அவனிடம் ஒப்படைத்தலே பிரபத்தியாகும். ]

**பிரபன்னன்—** கடவுளேசரணாகவுள்ளவன் (வை)

**பிரபை**— துர்க்கை. (யாழ். அக)

**பிரம்ம சூத்திரம்**— பிரம்ம சூத்திரம் செய்தவர் வாதராயணர் என்பர். வியாசர் தொகுத்த பிரம்ம சூத்திரங்கள் எல்லா இந்து சமயங்களுக்கும் மூலாதாரம். (சைவசமயம். பக். 21)

**பிரம்மமுத்திரை**— கையை விரித்துப் பெருவிரலினை தடுப்பணித்திடப் பிடிப்பதாகிய முத்திரைவகை— (சை)

**பிரமக் கிழத்தி**— இறைவனது சத்தி. பேரின்பமான பிரமக் கிழத்தி. (திருவுந்தி. 34)

**பிரமகதி**— ஷட்கதியுளொன்று (பௌ.)

**பிரம கன்னிகை**— சரசுவதி (யாழ். அக)

**பிரமகுரு**— பிரம்மத்தை உபதேசிக்கும் ஆசார்யன் (தி. பி. அ.)

**பிரம சமாசம்**— நவீன இந்து மதங்களுள் ஒன்று.

**பிரமசாத்தன்**— முருகக்கடவுளின் வடிவங்களுள் ஒன்று (தணிகைப்பு. அகத்தியன். 75)

**பிரம சூத்திரம்**— முப்புரி நூல் (யாழ். அக)

**பிரம பிசுதன்னியம்**— ஞான சொரூபியான கடவுள்

**பிரம ஞானம்**— கடவுளைப் பற்றிய அறிவு.

**பிரமதத்துவம்**— கடவுட்டன்மை

**பிரமதகணம்**— சிவகணம் (திருவிளை. மெய்க்காட். 23)

**பிரபதாதிபனி**— சிவன், பிரமன், அருகன்,

**பிரமபுத்திரி**— சரசுவதி நதி

**பிரமம்**— 1. முழுமுதற் பொருள் (ஞானவா. வில்வ, 8)
2. பிரமன் (சூடா.)
3. திருமால். (சூடா.)
4. தத்துவம்
5. நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று
6, முத்தி, (சூடா.)

**பிரமரி**— ஒரு சைன மந்திரம் (மேருமந். 994.)

**பிரமரூபம்**— தசகாரியத்துள் நாமரூபத்திற்கும் சீவனுக்கும் அதிட்டானமாயுள்ளது சச்சிதானந்தம் என்று உணர்கை— (அத்) (வேதா. தச. கட், 188)

**பிரமவாதம்**— உலகமெல்லாம் பிரமனிட்ட முட்டை என்னும் மதம். (மணி. 27, 96)

**பிரமவிஞ்சை**— பார்வதி

**பிரமவித்தியை**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**பிரமவிந்து**— நூற்றெட்டுபநிட தங்களுள் ஒன்று

**பிரமன்**— திரிமூர்த்திகளுள் ஒருவரும் சிருஷ்டிகர்த்தருமான சதுர்முகன்

**பிரமஸ்தானம்** — கருப்பக் கிருகம்

**பிரமா**— பிரமன் பார்க்க.

**பிரமாட்சரம்**— பிரணவம்

**பிரமாண ஆபாசங்கள்** — பிரமாணப் போலிகள்; அளவை நெறிக்குப் பொருந்தாதவைகள்; சுட்டுணர்வு முதலாக இது எட்டு வகைப்படும். (மணி).

**பிரமாணன்** — (மெய்யன்) விட்டுணு

**பிரமாணி**—

**பிரமாவர்த்தம்** — பிரமாவின் மனைவி. அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி. (காசிக. வச்சிர. 1)

**பிரமோற்சவம்**— கோயிலில் ஆண்டுக்கொருமுறை நடக்கும் தலைமைத் திருவிழா

**பிரவசனபக்தி** — பரமாகமத் துளெழுகின்ற பக்தி (ச.) (ஸ்ரீ புராணம்: சீவக. 3133, கீழ்க் குறிப்பு.)

**பிரவசனவத்ஸலத்வம்**— அறத்துவச்சளம் (ச)

**பிரவரசைவர்** — எழுவகைச் சைவருள் சிவ தீட்சை பெற்ற அனுலோமர் (சைவச. பொது. 435, உரை.)

**பிரவிருத்தன்**— கிரியாசத்திருப மான சிவபேதம். (ஞானாகட். 2.)

**பிரவிருத்திவிஞ்ஞானம்**— சவிகற்பமாய் விரியும் அறிவு (சை) சி. போ. பா. பக். 38, புதுப்.)

**பிரளயாகலர்**— மும்மலங்களுள் ஆணவம், கன்மம், என்னும் இரண்டினையுடைய ஆன்மாக்கள் (சை) சி. சி. 8, 2)

**பிராகாரம்**— கோயிற் சுற்றுப் பிரதேசம் (பிங்.)

**பிராகிருதர்** — பிரகிருதியில் தோற்றிய பொருள்களையே உண்மையென்று எண்ணுவோர். (சி. சி.)

**பிராசாதம்**— கோயில் கர்ப்பக் கிருகம் (சுக்கிர நீதி, 239)

**பிராணப்பிரதிஷ்டை**—விக்கிரகத்தில் தெய்வத்தை ஆவாகிக்கை

**பிராணமயகோசம்** — பஞ்சகோசத்துள் பிராணமயமாயுள்ள கோசம். (தத்) (சி. சி. பர. மாயா. 8)

**பிராணலிங்கம்** — வீரசைவர் உடலில் தரித்துப் பூசிக்கும் இலிங்கம்

**பிராணவிஞ்சை**— பார்வதி

**பிராணாக்கினிகோத்திரம்** — நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

**பிராமணி** — சத்தமாதருளொருத்தி. (பிங்.)

**பிராமரி**— பார்வதி

**பிராமி**—பார்வதி சரசுவதி (பிங்)

**பிரார்த்தனாமூர்த்தம்**—கௌரியின் ஊடலைத் தீர்த்த சிவன் திருவுரு.

**பிரார்த்தனை**— 1. வேண்டுகோள் 2. நேர்த்திக்கடன் 3. கிறிஸ்தவர்கள் குருமார் மூலம் செய்யும் விண்ணப்பவகை. R.C.

**பிரான்**—1. கடவுள் (திவ். திருவாய். 1,7,6); 2.சிவன். (சது)

**பிரான்மலை** — பாண்டி நாட்டிலுள்ள சிவதலங்களுள் ஒன்று.

**பிரியதத்தமந்திரம்**—கதோலிக கிறிஸ்தவர் வழங்கும் மந்திர வகை. R. C.

**பிரியதரிசி**— புத்தருள் ஒருவர் (மணி, 30,14, குறிப்பு.)

**பிரியாவுடையாள்**— (சிவபிரானைப் பிரியாதவள்) பார்வதி தேவி

**பிரதிதரம்** — சமவசரணத்தைச் சுற்றியுள்ள மும்மதில்களுள் ஒன்று (ச.)

**பிருகச்சாபாலம்**—நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**பிருகதாரணியம்**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**பிருங்கி**—சத்தியை வணங்காது சிவபிரானையே வழிபட்ட முனிவர். (அபி. சிந்.)

**பிருங்கீசன்**—சிவன்

**பிருதிவிதத்துவம்**— தத்துவங்களுள் ஒன்றான பிருதிவி (தத்)

**பிருதிவிலிங்கம்**— பஞ்சலிங்கத்துள் காஞ்சீபுரத்திலுள்ள பிருதிவிருபமான இலிங்கமூர்த்தம். (அபி. சிந்)

**பிரேரககாண்டம்** — சுத்த தத்துவம் பார்க்க (சை)(சிவப்.கட். 4.)

**பிரேரகாசாரியன்** — சைவத்திற்கு உரிய மாணாக்கர்கட்குத் தக்க ஆசிரியரைக் காட்டி உய்விப்பவன் (சை) (சைவச. ஆசாரி. 29, உரை)

**பில்வம்** — சிவார்ச்சனைக்குரிய பத்திரம். இது பீமனால் சிவார்ச்சனைக்கு உபயோகிப்பது

**பிள்ளையார்**— விநாயகர்; முருகக்கடவுள் (கோயிற்பு. பாயி.7); ஆளுடையபிள்ளையார் (பெரியபு. திருஞான. 947)

**பிள்ளையார் சதுர்த்தி**— விநாயக சதுர்த்தி

**பிள்ளையார் நோன்பு, பிள்ளையார் நோன்புத்தேவை, பிள்ளையார் நோன்புப்பச்சை**—
1. விநாயகர் சதுர்த்தி விரதம் 2. விநாயக சதுர்த்தி விழாவுக்கு விடும் மானியம்

**பிறப்பிலி**—1. சிவன்.2. கடவுள் அறவன் பிறப்பிலி. (திருமந். 1616)

**பிறவாநெறி** — மோட்சம் (திருமந் 1803)

**பிறவிகளறவுரை**— முற்பிறவியைக் கூறுகின்ற அறவோர் (ச) (சீவக. 2848, தலைப்பு.)

**பிறவிப்பிணி மருத்துவன்**— புத்தன். (மணி)

**பிறைசூடி**— சிவபிரான். பித்தா பிறைசூடி.(தேவா. 1001,1)

**பின்னை**— நப்பின்னை. பெய்வளைக் கையாள் நப்பின்னை (சிலப். 17, பக். 444), இலக்குமி

**பின்னை கேள்வன்,**

**பின்னை பிரான்** — திருமால் (பிங்)

**பினாகபணி**- (பினாகவில்லைக் கையிலுடையவன்) சிவபிரான். (பிங்.)

**பினாகம்**—சிவன்வில் (சூடா) திரிசூலம் (யாழ். அக.)

**பினாகி**—சிவபிரான் (பிங்.)

**பிஸ்மில்லாஹி**— 'அல்லாவின் திருநாமத்தால்' என்ற பொருளில் முகம்மதியார் வழக்குந் தொடர் (இ)

**பிக்ஷாடனர்** — பிக்ஷாடனக் கோலங் கொண்ட சிவமூர்த்தம்

**பிக்ஷு** — பௌத்தத் துறவி (பௌ.)

**பிக்ஷுணி**— பௌத்தப் பெண் துறவி (பௌ.)

## பீ

**பீடரம்**—கோயில் (அக. நி.)

**பீதாம்பரன்** — (பொன்னாடையுடையவன்) திருமால். (பிங்.)

**பீதாம்பரி**—பார்வதி

**பீமன்**—ஏகாதசருத்ரருள் ஒருவர் (யாழ். அக.)

**பீமாதேவி**—துர்க்கை

**பீர்**—முகமதியப் பெரியார் முகமதியர் ஊர்கோலத்தில் எடுத்துச் செல்லும் சப்பரம். (இ)

**பீலியார்**— சமணர், பீலியார் பெருமையும்.(தேவா. 346,10)

**பீறற்பண்டிகை** — அல்லாப் பண்டிகை (இ)

# பு

**புங்கவன்**—புத்தன் (திவா) அருகன் (திவா) தேவன். (பிங்)

**புங்கவி**—பார்வதி எழிற் புங்கவி (தாயு. மலைவளர் 5.)

**புசிதம்**—பூசை, பக்தி, தெய்வ வழிபாடு

**புட்கலை**— ஐயனாரின் தேவியருள் ஒருத்தி (யாழ். அக.)

**புட்கலைமணாளன்** — ஐயனார் (பிங்.)

**புட்டருபாகன்**
**புட்டிருப்பாகன்**—திருமால்

**புட்பகேசி** — உமாதேவி (கோயிற்பு. பதஞ். 60. உரை)

**புட்பகேது, புட்பசரன், புட்பசராசனன், புட்பசாபன்** மன்மதன் (யாழ். அக.)

**புட்பவாகனன்**— அருகன் (சங். அக.)

**புட்பாகன்** — திருமால். (திவ். பெரியதி. 3, 6,6)

**புட்பாசனன்** — பிரமன். (சங். அக.)

**புட்பாசனி** — திருமகள், பூமகள், கலைமகள் (சங். அக.)

**புண்டரநீறு**—திருநீறு

**புண்டரம்** — சந்தனம் நீறு முதலியவற்றால் நெற்றி முதலியவற்றில் தரிக்கும் குறி. (பாரத சூது. 28.)

**புண்டரிகத்தவள்**— இலக்குமி தேவி

**புண்டரிகத்தவன்** — பிரமன் (தாமரையை ஆசனமாகக் கொண்டவன்) (தேவா. 141,3

**புண்டரிகத்தி**—இலக்குமி( இரகு குலமு. 3)

**புண்டரிகன்**—திருமால் (கம்பரா தேரேறு. 55)

**புண்டரிகை** — இலக்குமி (தாமரையில் வீற்றிருப்பவள்) (கம்பரா. சூளா. 1)

**புண்டரீகன்**—பிரமன்

**புண்டரீகாட்சன்** — திருமால் (தக்கயாகப். 22, உரை)

**புண்ணியசாந்தம்** — திருநீறு (பிங்)

**புண்ணிய முதல்வன்**— 1. புத்தன் (திவா); 2. கடவுள்

**புண்ணியமுதல்வி** — பார்வதி (பிங்.)

**புண்ணிய மூர்த்தி**— புத்தன்

(திவா) அருகன் (பிங்.) கடவுள் (தேவர்.)

**புண்ணியன்**—சிவபிரான் (பிங்) அருகன் (பிங்.) புத்தன் (யாழ். அக.) கடவுள் (திவ். திருச்சந். 45.)

**புணரிமேலான்**—திருமால்

**புணரியிற் றுயின்றோன்**—(கடலிற் பள்ளிகொண்டோன்) திருமால். (பிங்.)

**புத்கலம்**— புத்கலம் என்னும் பொருள் உயிர்களை எய்தி அவற்றைப் புண்ணிய பாவங் களாகிய இருவினைகளைச் செய்யும் இயல்புடையது. ஐம் புலன்களும், அவற்றால் அறியப் படும் பௌதிகப் பொருள்கள் அனைத்தும் புத்கலம்என்பதில் அடங்கியுள்ளன (சமணம். பக். 34.)

**புத்தகயை**— புத்தர் ஞானம் பெற்ற இடம்

**புத்தசாதகக்கதை**— கௌதம புத்தரின் பழம்பிறப்புக்களைப் பற்றிக் கூறுவதும் பாளிபாஷை யில் அமைந்ததுமான நூல் (மணி. அரும்.)

**புத்தசேடம்**—புத்தரின் சாம்பல், பல், மயிர், எலும்பு முதலியன (யாழ். அக.)

**புத்தசைத்தியம்**— புத்தாலயம் (சிலப். 10, 14, உரை)

**புத்த சௌத்திராந்தகன்**— உருவம், ஞானம், வேதனை, குறிப்பு, வாசனை என்பன தொடர்ச்சியாய் அழிவதுபந்தம் என்றும், அவைமுற்றும் ஒழி வதே முத்தி என்றுஞ் சொல் வோன் (ம. த. அ)

**புத்தத்துவம்** — புத்தனாந் தன்மை

**புத்தம் சரணம் கச்சாமி**—புத் தனைச் சரணமாக அடை கிறேன் (பௌ.)

**புத்தமதம்**— பௌத்த சமயம்

**புத்தர்**—1. புத்தப்பதவி பெற்ற பெரியோர்கள். எண்ணில் புத் தர்களும். (மணி. 30, 14) 2. புத்த மதத்தவர் (திவ்.பெரியதி. 9,8,9,)

**புத்தன்**—1. புத்தமதத்தை ஸ்தாபித்த கௌதம முனி (திவா.) 2. புத்த சமயத்தான் (திருவாச. 15,6) 3. திரு மாலின் அவதாரங்களிலொன்று (பிங்.) 4. அருகன் (சூடா.)

**புத்தியட்டகர்** — அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏக நேத்திரர், ஏகருத்திரர், திரி மூர்த்தி, சீகண்டர் சிகண்டி எனப் புத்திதத்து வத்திலுள்ள எண்வகை ருத்திரர்,புத்தியட்ட கர் நாலிருகோடி (திருவிளை. திருமணப். 82)

**புத்திரகன்** — விசேட தீட்சை பெற்றவன் (சை) (சைவச. மாணா. 4.)

**புத்திரமார்க்கம்**—கிரியா மார்க்கம் (சை) பார்க்க. (சி.சி.8,20)

**புத்தீசர்**—விநாயகர் (அறிவு மய மானவர்)

**புத்து**—பௌத்தமதம் (திவ். திரு மாலை, 7.)

**புத்தேள்**—தெய்வம் (கலித். 82)

**புதியஏற்பாடு**—விவிலியநூலின் பிற்பகுதி. (கி)

**புமான்**—அசுத்த தத்துவம் பார்க்க. சி. சி. 2,70)

**புயங்கன்** — (பாம்பணியுடையோன்) சிவபிரான் (திருவாச 5,62)

**புயல்வண்ணன்** — திருமால் (கலிங். 1)

**புரகரன்** — (திரிபுரம் அழித்தோன்) சிவபிரான் (திருவிளை இந்திரன் முடி. 17.)

**புரதகனன், புரமூன்றெரித்தோன், புரமெரித்தோன்**—(திரிபுரத்தை எரித்தோன்) சிவபிரான் (திவா.)

**புரவிசயன்**— (திரிபுரம் வென்றோன்) சிவபிரான் (பாரத. அருச்சுனன்றீர்.7)

**புரவித்யன்**— சிவன்

**புராணம்**— திரிசஷ்டி சலாகா. சான்றோர்தம் கதை கூறும் நூல் (அ. செ. 154.)

**புராணன்**— [பழமையானவன்] கடவுள். (திருவாச. 4, 221.)

**புராணை**— பார்வதி

**புராதனன்**— பிரமதேவன்

**புராந்தகன்**— சிவபிரான் (சூடா.)

**புராந்திம காண்டம்**— விவிலிய நூலில் பழைய ஏற்பாடு (கி)

**புராரி**— சிவபிரான் (பிங்.)

**புருடதத்துவம்**— சுத்தாசுத்த தத்துவம் ஏழனுள் ஒன்றாயதும், மும்மலங்களோடு கூடியதுமான தத்துவம். (சை) (சிவப் பிர, 23, புதுப்.)

**புருடம்**— தற்புருடம் (A face of siva) பார்க்க, (சைவச, பொது. 438)

**புருடமேதினி**— பார்வதி கூர்மபு. திரு. 22.)

**புருடமோகினி**— பார்வதி

**புருடன்**— 1. ஆன்மா, 2. பரமான்மா, 3. பிரமன், 4. புருட தத்துவம்; சுத்தாசுத்த தத்துவம் ஏழனுள். ஒன்றுயதும்; மும்

மலங்களோடு கூடியதுமான தத்துவம். (மணி.)

**புருவத்துமேல்—** சிவபிரானது நெற்றிக்கண்

**புருஷார்த்தஸ்வரூபம்—** தருமம், அருத்தம், காமம், ஆத்மானுபவம், பகவதனுபவம் என ஆன்மாவால் அடையப்படும் ஐவகைப்பேறு (வை) (அஷ்டாதச. பக். 25)

**புருஷோத்தமன்—** திருமால் (திருவேங். சத. 1.)

**புலமகள்—** சரசுவதி. (சீவக. 2566.)

**புலமங்கை—** பூமிப்பிராட்டி. (திவ். பெரியதி. 3,2,5)

**புலவர்—** தேவர்கள். (திவா.)

**புலவன்—** முருகன் (பிங்.) அருகன் (பிங்.) புத்தன் (மணி. 5, 98) தேவன் (பிங்.)

**புலாகஜை—** மன்மதன்மனைவி (ம. த. அ)

**புலித்தோலுடையோன் —** சிவபிரான் (பிங்.)

**புவ்வம்—** ஒரு சைன வாகமம் (காரிகை, உறுப். 13, மேற்,)

**புவன்—** [சுயம்பு] இறைவன் (திருவாச, 5,9)

**புவனாத்துவா—** அத்துவா ஆறனுள் ஒன்று (சை.) (சி.சி. 8, 6- 9, மறைஞா.)

**புவனை—** பார்வதி (திருப்போ. சந்- மட்டு. 5)

**புள்திருப்பாகன்—** திருமால்

**புள்வாய்கீண்டோன்—** (பகாசுரன்வாயைப் பிளந்தவன்) கண்ணபிரான். (சேதுபு. இலக்குமி. 5)

**புள்ளூர் கடவுள்—** (கருடன் மேலேறிச் செல்லும் தெய்வம்) திருமால் (சிலப். 17.)

**புற்கலாஸ்திகாயம்—** பஞ்சாஸ்திகாயத்துள் சுவை ஒளி, ஊறு, நாற்றம் இவற்றையுடையதும் கருமத்திற்கு ஆதாரமாவதுமான ஓர் அஸ்திகாயம். (க)

**புறச்சபை—** நற்கருணை யனுபவியாத கிறிஸ்தவன் கூட்டம் (கி.)

**புறச்சபையான்—** நற்கருணை யனுபவியாத கிறிஸ்தவன் (கி)

**புறத்தடியார்—** சைவமல்லாத மற்றைச் சமயத்தடியார் (சை)

**புறப்பூசை—** கோயில் முதலிய இடங்களில் சிவபெருமானுக்குப் புரியுமர்ச்சனை

**புனப்பூசை—** விசேஷபூசைக்கு மறுநாள் செய்யும் பூசை

**புனலன்—** திருமால்

**புனஸ்காரம்—** வணக்கம், பக்தி யோடு செய்யும் வந்தனம் (ம. த. அ)

**புனிதமாயை—** சுத்த மாயை பார்க்க. (சை) (திருக்காளத் திபு. உலகின்றே. 5)

**புனிதன்—** சிவன் (அரு. நி.). அருகன் (திவா), புத்தன் (திவா) இந்திரன் (திவா.)

**புனிதாவி—** முப்பொருளுள் ஒன்றான பரிசுத்த ஆவி (கி.)

**புஷ்கரணி—** கோயிலைச் சேர்ந்த குளம்

**புஷ்பகேதநன், புஷ்பகேது புஷ்ப பாணன்—** மன்மதன்

**புஷ்பாசனி—** இலக்குமி சரசுவதி

## பூ

**பூச்சக்கரவாளக்குடை—** கோயில் மூர்த்திகட்குப் பிடிக் கும் பெரியகுடை. மதிகொண்ட பூச்சக்கர வாளக்குடையான். (திருப்போ. சந்நிதி அலங்கா 49.)

**பூசகன்—** அருச்சகன்

**பூசலார் நாயனார்—** நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் (பெரியபு.)

**பூசனம்—** ஆராதனை. நரிப் பரியைப் பூசனஞ் செய்து. (திருவிளை. நரிபரி. 120)

**பூணுநூல், பூணூல்—** துவிசர் தரிக்கும் முப்புரி நூல் (திவா.) முத்தப் பூணூலத்தது புனை கலம் (சிலப். 23, 96)

**பூதசாரவுடம்பு—** சுவர்க்கயின் பத்தை அனுபவிக்க ஆன்மா எடுக்கும் தெய்விகவுடல். (சி.சி. 2, 36, மறைஞா.)

**பூதசுத்தி—** அன்று செய்த பா

வங்களை நீக்குவதாகிய ஆன்ம சுத்தியின் அங்கம் (சை) (சைவச. பொது. 502, உரை.)

**பூதத்தாழ்வார்—** ஆழ்வார் பதின்மரில் ஒருவர் (திவ்.)

**பூததாரன்—** சிவபிரான் (இலிங்க. பு.)

**பூததீர்த்தம்—** பஞ்சதீர்த்தங்களில் பூதங்களின் பொருட்டு உள்ளங்கையினின்று விடப்படும் தர்ப்பண நீர் (சை) (சைவச. பொது. 66)

**பூத நாசனம்—** உருத்திராக்கம்

**பூதநாதன், பூதநாயகன் —** 1. சிவபிரான் 2. விநாயகன் 3. கடவுள் (கம்பரா. அங்கத. 21)

**பூதநாயகி—** பார்வதி

**பூதப்படையோன்—** சிவபிரான் (நாமதீப. 15.)

**பூதத்தி—** விநாயகன் (பிங்.)

**பூதமிவர்ந்தோன்—** விநாயகக் கடவுள் (நாமதீப. 27,)

**பூதரபுத்ரி—** பார்வதி

**பூதரவில்லான்—** குன்றவில்லி, சிவபிரான்

**பூதருபகத்தன், பூதருபத்தன்—** விநாயகக் கடவுள் (நாமதீப. 27)

**பூதலக் கிழத்தி—** பூமிப்பிராட்டி (திவ். திருச்சந். 72.)

**பூதவன்—** திருமால்

**பூதவாளி—** (பூதங்களுக்கு நாயகன்) சிவபிரான்

**பூதாத்துமா—** 1. சிவபிரான் (யாழ். அக)
2. பிரமன் (யாழ். அக)
3. சீவாத்துமா.

**பூதாவாசன்—** திருமால்

**பூதான்மா—** பிரமன்

**பூதி—** திருநீறு (பிங்.) பூதியணி பொன்னிறத்தர் (தேவா. 592. 2)

**பூதிசாதனம்—** விபூதி யுருத்திராக்க முதலிய சிவ சின்னம், பூதிசாதனங் கண்டால் தொழுதெழுகுலச்சிறை (தேவா. 869. 8)

**பூதேசன்—** சிவபிரான் (பிங்.)

**பூதேவி—** திருப்பாற்கடலிற் பிறந்து விஷ்ணுவைச் சேர்ந்தவள். பூமிதேவி.

**பூப்பலி—** அருச்சனை. பூப்பலி செய்து. (சிலப். 28, 231.)

**பூப்பிள்ளை—** சிவபூசையின் போது உதவியாக இருப்பவன். Loc. )

**பூமகள்**— 1. இலக்குமி. பொய் தீர் பூமகள். (சீவக. 2566) 2. பூமிதேவி. (திருவாலவா. 39. 1)

**பூமகன்**— பிரமன் (திவ். நாய்ச். 4, 8)

**பூமங்கை பூமடந்தை**— இலக்குமி (திவ். இயற். 3, 6.)

**பூமழை முனைவன்**— அருகன். பூமழை முனைவனுக்கு. (சீவக. 1943)

**பூமன்**— பிரமன். (தனிப்பா.) காமன். (பிங்.)

**பூமாங்குத்தி**— யானை வாகனத்தில் அர்ச்சகர் தரிக்கும் புஷ்பாங்குசம், பூவால் செய்த சிறு ஈட்டி. (கோ. த)

**பூமாது**— இலக்குமி, சரசுவதி (சங். அக)

**பூமிகொழுநன்**— திருமால் (பிங்.)

**பூமிசை**— இலக்குமி (யாழ், (அக.) சீதாபிராட்டி (யாழ். (அக)

**பூமிசை நடந்தோன்**— 1. அருகக்கடவுள் (பிங்.). 2. புத்தன் (திவா.)

**பூமிநாதன் பூமிநாயகன்** — திருமால் (திவ். திருச்சந். 22)

**பூமின்**— 1. இலக்குமி தேவி. பூமின் கேள்வன் (கம்பரா. அகலிகை. 73.) 2. பூமிதேவி. (யாழ். அக)

**பூமேடைந்தான்**— அருகக் கடவுள்

**பூர்வசைவன்**— தீட்சாகருமத்தால் மோட்சமடையலாகுமென்ற கொள்கையுள்ள சைவ மதப் பிரிவினன் (சி,சி, 8, 27, சிவாக்.)

**பூர்வதரர்**— தீர்த்தங்கரருடைய பரிவாரங்களுள் முதன்மை வாய்ந்தவரான கணதரர். (ச) (மேருமந் . 1354, உரை)

**பூர்வாகம்**— பிராரத்த வினை. (ஈடு, 10, 2, 1)

**பூர்வாகமம்**— சைனாகமம் மூன்றனுள் ஒன்று (ச) (மேரு மந். 124, உரை )

**பூரங்களித்தல்**— கற்பூர தீபாராதனை (யாழ். அக.)

**பூரணன்**— கடவுள். (சிவரக. மேரு. 20)

**பூரணி**— சிவசத்தி (தாயு. மலைவளர்.5)

**பூரணை**— 1. சமவசரணத்தின் வடபுறமுள்ள வாவி (ச) (மேரு மந். 1086, உரை.) 2. அரிகரபுத்திரன் தேவி (பிங்.)

**பூரவாகினி**— சரசுவதி (Saras vati as riding on aCentipede- (நாமதீப. 56,)

**பூவம்பன்**— மன்மதன். (யாழ். அக.)

**பூவராகம்**— திருமாலின்வராகா வதாரம்

**பூவன்**— பிரமன் (பரிபா. 1.46)

**பூவிடுவான்**— கோயிற்குப் புஷ் பகைங்கர்யஞ்செய்பவன் (T.A. S.i,6)

**பூவின்கிழத்தி**— இலக்குமி (பிங்.) சேராளே பூவின்கிழத்தி புலந்து. (நாலடி. 252.)

**பூவினன்**— பிரமன் (கந்தபு. கட வுள்வா. 14)

**பூவுளான்**—பிரமன்

**பூவைவண்ணன்** — (காயாம் பூப்போன்ற நிறத்தையுடைய வன்) திருமால் (பிங்.) (திவ். பெரியதி. 2,2,8)

**பூழி**— விபூதி. பூழி புனைந்தவர் (கந்தபு. யுத், வரவு. 13)

**பூழியான்** — (விபூதி அணிந்த வன்) சிவபிரான். (தமிழ்நா. 78.)

**பூழை**— கோபுரவாயிற் கதவுவிட் டுப்புகும்வழி

**பூளைசூடி** — சிவபிரான் (பூளை- ஒருபூ, பூண்டு) (கம்ப ரா. அகலிகை. 39)

# பெ

**பெண்டுருவன்** — (மோகினி உருக்கொண்டவன்) திருமால் (நாமதீப. 50.)

**பெண்தானையான்**— (பெண் சேனையான்) மன்மதன் (நாம தீப. 58)

**பெத்தகாலம்**— ஆன்மா பாசபந் தத்திற்கு உட்பட்ட காலம். (சி. போ.பா. 2,2, பக். 63, சுவாமி நா)

**பெத்ததசை**— ஆன்மா பாசபந் தத்திற்கு உட்பட்ட நிலை. (யாழ். அக.)

**பெத்தம்** — பாசபந்தம். பெத்த மொடு முத்தியும் (தாயு. ஆனந் த. 5.)

**பெத்த முத்தி** — 1. பந்தமும் வீடும் 2. இலய முத்தி. (யாழ். அக.)

**பெத்தர்** — பாசத்தோடுகூடிய உயிர்கள்.

**பெம்மான்** — கடவுள் பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே. (தேவா.61,1)

**பெரியகோயில்**— திருவரங்கம். (திவ், திருமாலை. 11)

**பெரியதம்பிரான்** — 1. சைவ மடத்திலுள்ள தம்பிரான்மார் களுக்குத் தலைவர். 2. வண்ணுர் முதலியோர் வணங்கும் சிவமூர்த்தம்

**பெரிய திருவடி** — கருடன், பெருமாளுக்கு வாகனமாய் இருப்பதோடு அவருடைய திருவடிகளையும் கைகளில் தாங்குவதால் சம்பிரதாயப் பெயராயிற்று. (ஈ.டு,1,4,6)

**பெரியதிருவோலக்கம்**— அடியாரது பெருங்குழ- (வை)

**பெரியபிராட்டி** — இலக்குமி தேவி. (ஈ.டு. 10,10,6)

**பெரியபெருமாள்** — திருவரங்கத்துத் திருமால் (அஷ்டப். ஊசல். 1)

**பெரிய பொருள்**— பரப்பிரமம். (தாயு. திருவருள்.பரசிவ.2)

**பெரியவவசரம்** — உச்சிக் காலத்தில் கோயில் மூர்த்திக்குப் படைக்கும் அலங்கார நிவேதனம் (Loc)

**பெரியவெள்ளிக்கிழமை**-இயேசுநாதர் சிலுவையிலறைந்து கொல்லப்பட்ட தினத்தின் வருஷாந்தரக்கொண்டாட்டம் (கி)

**பெரியாழ்வார்** — ஆழ்வார் பதின்மருள் ஒருவர். (உபதேச ரத். 18)

**பெரியோர்பெருமான்** — பிரமன். (சீவக. 2066)

**பெருஞ்சாந்தி**— கோயில் பெரிய விழா முடிவில் நடக்கும் பெரிய அபிடேகம். கபாலீச்சரமமர்ந்தான் பெருஞ்சாந்தி (தேவா, 1119,10)

**பெருந்திருப்பாவடை, பெருந் திருவமிர்து** — கடவுட்குப் படைக்கும் பெரியநிவேதனம் (S.I.I.V, 365.)

**பெருந்தேவன்** —தலைமைத்தெய்வம். (திவ். திருவாய்.4,6,4)

**பெருநாள்**— ஒருமுகமதியப்பண்டிகை

**பெருமடை** — தெய்வங்களுக்கிடும் சோற்றுப பலி. தெய்வப் பெருமடை கொடுத்து (பெரியபு. கண்ணப். 19)

**பெருமாக்கோதையார்** — சேரமன் பெருமாள் நாயனாரின் பிள்ளைத் திருநாமம். (பெரியபு. சேரமன். 5)

**பெருமாள்**— திருமால், கடவுள் (திருப்பு)

**பெருமாள்கோயில்** — 1. விஷ்ணுவாலயம்; 2. சிறிய காஞ்சீபுரம்.

**பெருமான்**— சிவன், திருமால், கடவுள் (திவா.)

**பெருமிழலைக் குறும்பநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**பெருவெழுத்து**— 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தில் சிவபெருமானைக் குறிக்கும் 'சி' என்ற எழுத்து. பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும் (கொடிக்.4)

**பெற்றெவி**— விக்ரஹம்

# பே

**பேசலன்**— சிவன்

**பேதசித்தாந்தம்** — இருளும் ஒளியும் போல ஆன்மாவும் சிவமும் இரண்டாயிருக்கு மென்ற சித்தாந்தம் (சை.) (சங். அக.)

**பேதசைவம்**— சைவம் பதினாறனுள் குருலிங்கசங்கமபத்தி பூண்டு சிவனை உருவமாகவும் அருவமாகவும், அருவுருவமாகவும் தியானித்தலால் முத்தி சித்திக்குமெனக் கூறும் சமயம் (சை) (த.நி.போ.பக்.254.)

**பேதம்**— சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம், என்ற மூன்றுவகை வித்தியாசம் (தத்) (வேதா. சூ.27.உரை.)

**பேதவாதசைவம்**— அகச்சமயமாறனுள் இறைவனருளால் மலம் நீங்குமென்றும் முத்தி நிலையில் இறைவனும் ஆன்மாவும், தலைவன் தலைவி போல் வரென்றுங் கூறும் சமயம் (சை) (சி.சி. 11,5, சிவஞா.)

**பேதவாதம்** — ஜீவேசுரர்க்கு வேற்றுமைகூறுங் கொள்கை (தத்)

**பேதாபேதம்** — அத்துவைதத்துக்கும் விசிஷ்டாத்துவைதத்துக்கும் நடுநிலையான ஒரு சித்தாந்தம்

**பேதுரு**— (St. Peter.) இராயப்பர் என்ற கிறிஸ்தவப் பெரியார் (கி)

**பேதைபாதம்** — விக்கிரகத்தின் காலில் அணியும் ஆபரணம். (சா. சொ.அ)

**பேய்க்கதி**— ஷட்கதியுளொன்று (பௌ.)

**பேயாழ்வார்**— ஆழ்வார் பதின்மருள் ஒருவர் (திவ்.)

**பேயொடாடி**— சிவன் (பிங்.)

**பேரம்பலம்**— சிதம்பரத்திலுள்ள கனகசபை. (பெரியபு. பாயி,8)

**பேராயிரம்** — கடவுளின் சகசிர நாமம் (தேவா. 896.5.) (திவ்,)

**பேனமர்** — தேவ கணங்களில் நுரையை உண்டு உயிர் வாழ்வோர் (ம.த.அ)

**பேனாசனி**—இந்திரன், (யாழ், அக.)

## பை

**பைங்கலம்** — நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**பைபிள்**— கிறிஸ்தவர் வேதநூல் (கி)

**பைம்மை**— அருக தவப்பெண் (ச.) (பிங்.)

**பையஸ்**— (Pius) ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை போப்புக்கள் பன்னிருவர் பெயர். (கி)

**பைரவர்**— துர்க்கையின் படையினரான கணங்கள். இறைவி பைரவர்களே. (தக்கயாகப் 429.)

**பைரவன்**— சிவமூர்த்தங்களுள் ஒருவரான வைரவக்கடவுள் (பிங்)

**பைரவி**— துர்க்கை (தக்கயாகப் 431.)

## பொ

**பொக்கணவன்**— சிவபிரான்

**பொடி** — திருநீறு. மெய்சேர் பொடியர். (தேவா.46.5)

**பொடியாடி**— சிவபிரான் (திருவாச. 25,5)

**பொய்கையாழ்வார்** — ஆழ்வார் பதின்மருள் ஒருவரான திருமாலடியார். (உபதேசரத். 4)

**பொருட்பிரபஞ்சம்** — பிருதிவி முதல் நாதமீறாகவுள்ள தத்துவங்கள் (சை)(சி.போ.வ.தீ.92)

**பொருப்பெறிந்தான்**— (கிரவுஞ்சகிரியை வேலாலெறிந்தவன்) முருகக் கடவுள். (உரி.நி.)

**பொருவிலி** — (ஒப்பிலாதவன்) சிவபிரான். (சங்.அக.)

**பொருளின்செல்வி**— திருமகள் (பிங்.)

**பொல்லாப்பிள்ளையார்** — திருநாரையூரில் எழுந்தருளிய விநாயகக் கடவுள்

**பொறி**— இலக்குமி (திவா.)

**பொன்**— இலக்குமி. பொன் றுஞ்சு மார்பன். (சீவக. 14)

**பொன்மலைவல்லி**— பார்வதி தேவி. (பெரியபு. திருக்குறிப். 56)

**பொன்மலைவில்லி, பொன் வில்லி**— (மேருவை வில்லாக உடையவன்) சிவபிரான். (குமர. பிர. மீனாட். பிள். 63)

**பொன்னகர்**—சிவலோகம் (திரு வாச. 5, 36

**பொன்னன்**— அருகக்கடவுள்

**பொன்னிலம், பொன்னு லகம்**— 1. தேலோகம் (சீவக. 1457. 2. பொன்னெயில் வட்டம் (ச) பொன்னுலகத் துய்க்கும் ஊழ்வினை. (சீவக. 380)

**பொன்னெயில், பொன்னெ யில் வட்டம்**— சமசரணம் (ச) அருகன் இருக்கும் இடம் (ச) (சீவக. 380. உரை.)

**பொன்னெயிற்கோன், பொன்னெயினாதன்**— அரு கக்கடவுள்(ச) (திவா.)

# போ

**போக்கியகன்மம்**— கன்மமலத் துள் ஒன்று (சை) (சங். அக.)

**போக்கியகண்டம்**— அசுத்த தத்துவம் (சை) (சிவப். கட்)

**போக்கியதத்துவம்**— அசுத்த தத்துவம் (சை) (சி. சி. 1, 19, சிவஞா, )

**போககாண்டம்**— சுத்தாசுத்த தத்துவம் பார்க்க (சை) (சி.சி. 2, 70, மறைஞா.)

**போகசத்தி**— போகசிவனது சக்தி, (சி,சி.2,75, மறைஞா.

**போகசிவன்**— சதாசிவன்— (சை) (சி.சி.1, 64,சிவஞா.)

**போகதத்து சாவம்**—தாக்கிய தத்துவம் பார்க்க. (சை) (The stage in which both knowledga and action are balanced). (சி.போ. பா.பக். 140) 2. சதா சிவதத்துவம் (ம.த.அ)

**போகபூமி**— ஆன்மாக்கள் புசித் தற்கு இடமாகவுள்ள முப்பத் தாறு தத்துவங்கள் (சை) (சதா சிவ. 85)

**போகம்**— கடவுளின் அவத்தை மூன்றனுள் ஞானமும் கிரியை யும் சமமாகவுள்ள நிலை. (சி. போ.பா.2,2,பக். 134, புதுப்.)

**போகமீன்றபுண்ணியன்** — சிவபெருமான். (சீவக. 362.)

**போகர்**— தேவர். மேலமர் போகரும். (கோயிற்பு. இரணி யன்வ. 98)

**போகன்**— சிவமூர்த்தங்களுள் ஒன்று (சை) (சி.சி. 1, 65, ஞானப்.)

**போகாங்கபூசை**— சிவகணாதிபரை வழிபடுகை (சை) (சங். அக.)

**போகாங்கம்**— 1. சிவகணாதிபர் 2. போகாங்கபூசை (சை.) (சங். அக.)

**போகாந்தராயம்**— துய்த்தற்குறிய போகங்களை விலக்குகை (ச.) (சீவக, 3081, உரை.)

**போகாவத்தை**— பிரபஞ்சத்தைப் படைத்துக்காக்கும் சிவபெருமானது நிலை (சை.) (சி.போ.பா. அருந்தொடர். பக் 21, சுவாமிநா.)

**போகி**— இந்திரன் (பிங்.); போக சிவன் பார்க்க (சி சி. 2,75, மறைஞா.)

**போகி சயனன்**— பாம்பணையான்; திருமால்

**போசதம்**— புரோஷதோபவாசம் உண்ணுநோன்பிருத்தல் (அ. செ.122,)

**போசதன்**— உண்ணுநோன்பி. (அ.செ.165.)

**போசதுபவாசன்**— ஒரு மாதத்தில் நான்கு திதிகளில் நோன்பு நோற்பவன். (அ.செ.பக்.119)

**போசனப்பிரியன்**— விநாயகக் கடவுள். (நாமதீப. 28.)

**போத்தி**— மலையாளத்திலுள்ள கோயிலருச்சகன்

**போதகன்**— நாட்டையர் (கி) Pastor)

**போதன்**— அருகன், பிரமன் (பிங்.)

**போதி**— அருகன் அறம், பௌத்த சமாதி,புத்தன்

**போதிக்கிறைவன்** (பிங்.)
**போதிசத்துவன்** (மணி),
**போதித்தலைவன்** (மணி)
**போதிநாதன்,**
**போதிப்பகவன்** (மணி.)
**போதிமாதவன்** (மணி.)
**போதியார்,** றிய. (மணி.)
**போதிவேந்தன்,**— (திவா,) புத்தன், பைம்பூம் போதிப் பகவற் இயற்றிய (மணி. 28, 174))

**போதினன்**— பிரமன். (சிவதரு. பாயி.2)

**போர்மடந்தை**— துர்க்கை வீரலக்ஷ்மி (யாழ். அக)

**போனகக்குருத்து** — கடவுளுக்குப் படைக்கும் நிவேதனத்துக்கிடும் வாழைநுனி இலை. (சா. சொ. அ)

**போனகம்**- கடவுளுக் ப்படைக்கும் உணவு. (சா.சொ.அ.)

## பௌ

**பௌடியம் —** இருக்குவேதம். (கலித். கடவுள். உரை.)

**பௌத்தம்—** புத்தமதம். (சூடா)

**பௌத்தன்—** 1. புத்த சமயத்தான் (திவா.) 2. பௌத்தாவதாரம்

**பௌத்தாகமம்—** வினயபிடகம் சூத்திரபிடகம்' அபிதர்மபிடகம் என்பன

**பௌத்தாவதாரம் —** திருமாலின் அவதாரங்களில் ஒன்று. (பிங்.)

**பௌதிகதீட்சை —** உலோக தருமிணி. (சை.) (A way of initiation) (சைவச. ஆசாரி. 62, உரை.)

**பௌதிக பாவனை—** கடவுளை உருவனாகத் தியானிக்கை (சங் அக.)

**பௌதிகன்—** சிவபிரான் (யாழ். அக.) திருமால்.

**பௌதிகாசாரியன்—** சாதகாசாரியன் (சை) Assistant to the head priest) (சி.சி. 8,5,) சிவாக்.

**பௌராணிகம்—** புராணத்தைப் பின்பற்றும் சமயம்

**பௌராணிகன்—** 1. புராணம் கூறுவோன் 2. புராணக்கொள்கையுடையவன். (சி.சி.1.1 மறைஞா.)

**பௌரிகன்—** குபேரன். (யாழ். அக.)

**பௌழியசரணத்தார்—** இருக்குவேதிகள். (Insc.)

**பௌழியன் —** இருக்குவேதத்தாற் பிரதிபாதிக்கப்படுபவனான கடவுள். சந்தோகன், பௌழியன் (திவ். பெரியதி. 55,9,)

## ம

**ம—** இயமன், சிவன், (இலக்.அக) சந்திரன், பிரமன், (யாழ். அக. திருமால் (யாழ். அக.)

**மக்கட்கதி—** ஷட்கதியுளொன்று (பௌ.); நாற்கதியுள் மக்களாய்ப் பிறக்கும் பிறப்பு. (சீவக. 2790. தலைப்பு.)

**மக்கம்—** அரேபியாவிலுள்ளதும் முகம்மது பிறந்ததால் பேர் பெற்றதுமான இடம் (இ) (திருவிளை. நரிபரி. 105)

**மக்ஃபிரத்—** இறைவன் அடியார்களை மன்னிப்பது (இ)

**மக்ரிபு—** மாலைத் தொழுகை (இ)

**மகத்** — சிதம்பரம் (கோயிற்பு. வியாக்கிர-29)

**மகதி**—பார்வதி

**மகபதி**— இந்திரன். (கந்தபு. 267 ததீ சியுத்தர. 133.)

**மகம்மது**—முகம்மது நபி.

**மகமதியர்**—முகம்மதியமதத்தார்

**மகமது,**
**மகமதுநபி**—முகம்மது நபி

**மகமாயி**—1. பார்வதி. பூதநாய கரிடத்துக் காமி மகமாயி. (திருப்பு.641.) 2.பெரியம்மைக் குரிய தேவதை. (Loc)

**மகரக்கொடியோன்,**
**மகரகேது**
**மகராங்கன்**— மன்மதன் (யாழ். அக.)

**மகவான்**—1. இந்திரன்.(திவா.) 2. சிவன். (சங். அக.)

**மகாகாலன்** —உருத்திரன்(அபி சிந்)

**மகாகாளமூர்த்தி** – உருத்திரன் (தக்கயாகப். 271, விசேடக்.)

**மகாகாளர்**— உருத்திரன் (சங். அக.)

**மகாகாளி**—சத்திகளில் ஒருத்தி. (தக்கயாகப். 107, உரை)

**மகாசத்தி** — 1. சிவசத்தி 2. குமாரக் கடவுள். (யாழ். அக).

**மகாசதாசிவன்** — இருபத் தைந்து திருமுகத்தையுடையவ னாயும் சதாசிவமூர்த்திக்குமேற் பட்டவனாயுமுள்ள சிவபேதம் (அ.பி சிந்.)

**மகாசாத்தா** — ஐயனார். (கந் தபு. மகாசாத்.)

**மகாசாத்திரன்** —சமயங்களின் மூலசாஸ்திரங்களைப் பயின்ற வன்.

**மகாசிவராத்திரி**--மாசிமாதத்து கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசி யும் திருவோணமும் கூடிய இராத்திரி.

(The night ot the dark fortnight in the month of Maci sacred to Siva, when the 14 th tithi and Sravana are curr ent.)

**மகாசுவேதை**—சரசுவதி(யாழ். அக.)

**மகாசேனன்**— முருகன்,புத்தன் அருகன் (யாழ். அக.)

**மகாசைவம்**—சைவம் பதினாற னுள் விபூதி உருத்திராக்கம் தரித்துச் சடைவளர்த்துச் சிவ னைச் சகுணனாகவும் நிர்க் குணனாகவும் தியானிக்க வேண்டுமெனக் கூறுஞ் சமயம் (சை.)

**மகாசைவன்** — சிவ தீட்சை பெற்ற பிராமணன் (சை) (சைவச. பொது. 475)

**மகாத்துமா**—பிரமஞானி

**மகாதேவன்** — சிவபிரான்; கடவுள்

**மகாதேவி**—பார்வதி (தக்கயாகப் 80 உரை.)

**மகாநடன்**— (யாழ். அக.) சிவபிரான் (Siva, as the great dancer)

**மகாநடனன்**—(சங். அக.)

**மகாநவமி**— சரசுவதிபூசை நிகழும் நவராத்திரியின் இறுதிநாள்

**மகாநாமியம்** — மதசம்பந்தமான கிரியைவகை. (த.நி.போ. பக். 24)

**மகாநாராயணம்** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**மகாநிவேதனம்,**

**மகாநைவேத்தியம்** — கடவுட்குப் படைக்கும் அன்னம்

**மகாநோன்பு** — நவராத்திரிப் பண்டிகை. (Loc.)

**மகாப்பிரசாதம்** — கோயில்களில் கடவுளுக்கு நிவேதித்துப் பக்தர்களுக்கு வினியோகிக்கும் பொங்கல் முதலியன. (Loc.)

**மகாபாசகன்**— புத்த பிட்சுக்கன். (யாழ். அக.)

**மகாபோதி**— கௌதமர் தங்கியிருந்து ஞானோதயம் பெற்றுப் புத்தரான அரச மரம் (மணி. 11, 43, உரை.)

**மகாமாயி**—துர்க்கை

**மகாமாயை**—1. பார்வதி(யாழ். அக.) 2. சுத்தமாயை. (சை) (சங். அக.)

**மகாமாரி**—துர்க்கை

**மகாமிருத்து** — சிவபிரான் (யாழ். அக.)

**மகாமுத்திரை** — திரிசூல முத்திரையில் தர்ச்சனியை அநாமிகை வளைப்பதாகக் காட்டும் முத்திரை (செந். x.)

**மகாமுனி**—புத்தன் (யாழ்.அக.)

**மகாயானம்** — பௌத்த சமய வகை

**மகாருத்திரர்** — சிவபெருமான் (சி. போ. பா. 1, பக். 54.)

**மகாரூபன்** — சிவன், மன்மதன்

**மகாரூபை** —பார்வதி (கூர்மபு. திருக்கல். 21)

**மகாலக்குமி,**

**மகாலட்சுமி**— திருமகள் (யாழ். அக.)

**மகாலயம்** — கோயில், பிரமலோகம் (யாழ். அக.)

**மகாலயன்** — பிரமதேவன்; கட வுள். (யாழ். அக.)

**மகாலிங்கம்** — இலிங்கமூர்த்த மான சிவபிரான்

**மகாவர்க்கம்** — விநயபிடகத் தின் பகுதி (பௌ.) (மணி. 26, 66, கீழ்க்குறிப்பு.)

**மகாவராகம்** — வராகாவதார மெடுத்த திருமால்

**மகாவாக்கியம்** — 1. நூற்றெட் டுபநிடதங்களுள் ஒன்று 2. தத் துவமசி என்ற தொடர்.

**மகாவிட்டுணு**—திருமால் (தக்க யாகப். 148. உரை.)

**மகாவிரதம்** — 1. சைவ சமயத் தின் உட்சமயமாறனுள் ஒன் றான மாவிரதம் (யாழ். அக.) 2. சைன விரத வகை (சீவக. 2818, உரை.)

**மகாவிஷ்ணு**— திருமால் (S.I.I. ii, 217, 19)

**மகாவீரன்**— 1. வர்த்தமான தீர்த்தங்கரரெனும் அருக தேவன் 2. விஷ்ணு (யாழ். அக.)

**மகானந்தை**—பார்வதி(கூர்மபு. திரு. 20)

**மகிடமர்த்தினி**— துர்க்கை (சங். அக.)

**மகிடவாகனன்**— (எருமையை வாகனமாக வுடையவன்) யமன் (சூடா.)

**மகிடவாகினி** — (எருமையை வாகனமாக வுடையவள்) துர்க்கை.

**மகிடற்காய்ந்தாள்** (திவா),

**மகிடற்செற்றாள்** (சூடா),

**மகிடாசுரமர்த்தினி**— மகிஷா சுரனைக்கொன்றவர்) துர்க்கை

**மகிதம்**—சிவபிரானது திரிசூலம்) (யாழ். அக.) சிவன் (ம.த.அ.)

**மகிழ்த்தாரரான்** — மன்மதன் (நாமதீப. 58, உரை.) நம்மாழ் வார்

**மகுமூது**—முகம்மது நபிகள் (இ)

**மகேச்சுரர்**—சிவனடியார் (சிவப் பிர. 48, உரை.)

**மகேச்சுரன்,**

**மகேச்சுவரன்** — சிவபிரான் (பிங்.)

**மகேசபூசை**— மாகேசுவரபூசை (Feeding devotees of Siva) (சிவரக. உருத்திர. 15.)

**மகேசன்** — சிவபிரான். (இரகு. யாக. 58)

**மகேசுரவடிவம்** — இலிங்கவடி வொழிந்த சிவமூர்த்தங்கள். (சைவவி. பக். 6.)

**மகேசுவரதத்துவம்**— ஈச்சுரம் பார்க்க. (சை) (சங். அக.)

**மகேசுவரன்**—சிவபிரான் (பிங்)

**மகேசுவரி**—பார்வதி (சூடா.)

**மகேசை** — சிவசத்தி (ஞானா 2)

**மகோதயம்**—இந்துக்களின் புண்ணிய காலங்களுள் ஒன்று. (பிரபோத. 39, 15.)

**மகோதரர்**—விநாயகர்

**மங்கலாதேவி** — ஒரு பெண் தேவதை. (சிலப். 30, 35, அரும்.)

**மங்கலை**— இலக்குமி, பார்வதி, துர்க்கை

**மங்களர்** — புத்தருள் ஒருவர் (மணி. பக். 369)

**மங்களாலத்தி** — மங்களாரத்தி (கடவுளுக்குச் சுழற்றியெடுக்கும் கர்ப்பூர ஆரத்தி) (கோயிலொ. 59)

**மங்கை பங்கன்,**

**மங்கை பங்காளன்,**

**மங்கை பாகன்** — அர்த்தநாரீசுரன். மங்கைபங்கனை மாசிலா மணியை (தேவா. 549,5)

**மங்கையர்க்கரசியார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் நின்ற சீர்நெடுமாற நாயனாருடைய தேவியாராகிய சிவனடியார். (பெரியபு.)

**மங்கையர்கோன்**— திருமங்கையாழ்வார் (உபதேசரத். 9)

**மச்சனம்** — ஞானஸ்நானம் (கி) (ஆறுமுகநா. 14.)

**மசூதி** — (மஸ்ஜித்) மஸ்ஜித் என்ற சொல் பக்தி என்ற பொருளைக் கொண்ட சிஜ்தா என்ற சொல்லிலிருந்துபிறந்தது. ஆதலால் மஸ்ஜித் என்பதற்கு பக்தி அல்லது பிரார்த்தனை செய்வதற்கான இடம் என்பது பொருள். பள்ளிவாசல். (இ.)

**மஞ்சட்காப்பு**— கோயிலிற்றெய்வங்களுக்குச் சாத்தும் அரைத்த மஞ்சள் விழுது. (உபதேசகா. சிவத்துரோ. 498.)

**மஞ்சனக்குடம்** — அபிஷேக நீர்க்குடம்

**மஞ்சனக்குளி** — கோயிலில் நிகழும் அபிஷேகம். மஞ்சனக் குளியுற்சவத்திற்கு (கோயிலொ. 11)

**மஞ்சனநீர்**— அபிடேக நீர். அன்பே மஞ்சனநீர் (தாயு. பராபர. 151.)

**மஞ்ஞையூர்தி**—முருகக் கடவுள் (மயில் வாகனன்.) (சூடா.)

**மட்டையடித்திருவிழா** — உற்சவ காலத்தில் சுவாமிக்கும் அம்மனுக்கும் ஊடல் நிகழ்வதாகக்

கொண்டு கொண்டாடும் ஒரு விழா (ம. த. அ)

**மட்டையர்** — சமண் தொண்டர்கள். (திவ். பெரியதி. 2, 1, 6)

**மடங்கலூர்தி**— துர்க்கை (சிங்க வாகனமுடையாள்)

**மடம்**— 1. கோயில் (யாழ். அக.) 2. நைஷ்டிக பிரமசாரிகளும்' சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழும் இடம் (சிருங்கேரிமடம்.)

**மடவளாகம்** — கோயிலைச் சூழ்ந்துள்ள வீதி. (சேக்கிழார். பு. 19)

**மடை**—தெய்வங்களுக்கு படைக்கும் சோறு (கலிங். 139)

**மடைப்பண்டம்** — அலங்கார நைவேத்தியம் (யாழ். அக.)

**மடைப்பள்ளி** — கோயில் முதலியவற்றின் அடுக்களை (கல்லா 23. 37.)

**மண்டகப்படி** — சுவாமி வீதி வலம் வருகையில் ஆங்காங்குச் செய்யும் விசேட ஆராதனை

**மண்டலம்** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**மண்டலர்**— அருகபதம் பெற்றவரில் ஒரு சாரார் (சி. சி. பர. ஆசிவகன்மறுதலை, 2.)

**மண்டலாபிஷேகம்**— கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, 40, 41 அல்லது 45 நாள் நடத்தப் பெறும் நித்தியத் திருமஞ்சனம்.

**மண்ணுணி** — திருமால் (Visnu' as devouring the Earth.) (சிவப். பிரபந். சோணசைல. 83)

**மணிகண்டர்**,

**மணிகண்டன்** — (நீலகண்டத்தை உடையவன்) சிவன் மணிகண்டனென்னும் பேர் (பூவண. உலா, 50)

**மணிபத்மம்** — புத்தன் பாதம் (மணி. 3, 65. அரும்)

**மணியாட்டி**— பூசாரி, குருக்கள்

**மணிவண்ணன்** — திருமால், திண்டேர்ள் மணிவண்ணா (திவ். திருப்பல் 1)

**மத்திமேச்சுரன்** — காசியில் எழுந்தருளிய சிவமூர்த்தம்

**மத்தியாலவத்தை** — மேலாலவத்தை (சை) (சி.சி.4, 35, மறைஞா.)

**மத்துவம்**,

**மத்துவமதம்** — சைவம் (யாழ். அக.) மத்துவாசாரி மதம்

**மத்துவன்**—சிவன் (யாழ். அக)

**மத்ஸ்யம்** — திருமாலின் தசாவதாரத்துள் முதல் அவதார மாகிய மீன் அவதாரம்

**மதங்கி**— 1. உமாதேவி (சங். அக.) 2. காளி

**மதத்தானம்**—கோயில்

**மதன்**—மன்மதன் (பிங்)

**மதன்றாய்** — இலக்குமிதேவி (நாமதீப. 53.)

**மதனவேள்,**

**மதனன்** — மன்மதன் (திவ். பெரியதி 6, 4, 8)

**மதனைவென்றோன்** — அருகக் கடவுள் (சூடா.)

**மதிக்கண்ணியான்** — (சந்திரனைத் தலைமாலையாக அணிந்தவன்) சிவபிரான் (சீவக.208)

**மதிச்சடையன்** —(சந்திரனைச் சடையிலே தரித்தவன்) சிவபிரான்

**மதிசகன்**—மன்மதன் (பிங்.)

**மதிசூடி** — சிவபிரான் (திவ். இயற். நான்முகன். 66.)

**மதிநூல்** — சைனபரமாகமம், எல்லா மதிநூலும் பொதிந்தது. (திருநூற். 21)

**மதுசூதன்**—

**மதுசூதனன்** — (மதுவென்னும் அசுரனைக் கொன்றவன்) திருமால். (திவ். திருவாய். 2,7,6)

**மதுபதி**— 1. காளி (சூடா.); . பார்வதி, (நாமதீப 20,)

**மதுராபதி**— மதுரையின் காவற்றெய்வம். (சிலப். 23, 22)

**மதுரேசன்**— 1. மதுரையில் கோயில் கொண்டிருக்குஞ் சோமசுந்தரக் கடவுள் (திருவிளை. விடையிலச். 6) 2. கண்ணபிரான். (யாழ். அக.)

**மதுரைமாதெய்வம்** — மதுராபதி. மதுரைமா தெய்வம் வந்து தோன்றி. (சிலப். பதி 43)

**மதுரைமாதேவி** — மீனாட்சியம்மை. (யாழ். அக.)

**மதுரைவீரன்**— கிராமதேவதை (Loc)

**மதோத்கடர்** — (மதப்பெருக்கு உள்ளவர்) விநாயகர்

**மந்தபிராரத்வம்**— முற்பிறப்பிற் செய்தவினை ஆன்மாவை மெதுவாகப் பற்றுகை. (சி. சி. 10,3, சிவாக்.)

**மந்தாரம்**—1. கோயில். (சுக்கிரநீதி. 229); 2. சுவர்க்கம். (யாழ். அக.)

**மந்தரயானம்**—பௌந்த சமயத்துளொரு வகை (பௌ.)

**மந்தன்**—யமன். (யாழ். அக.)

**மந்திரசுத்தி**—மூலமந்திரம், பஞ்சப்பிரம மந்திரங்கள், சடங்க மந்திரங்களை முறையோடு உச்சரித்தல்

**மந்திரசுத்தி**— பஞ்சசுத்திகளுள் மந்திரநீராற் சுத்தமாக்கும் கிரியை (சை)

**மந்திரம்**— 1. தேவர் கோயில். (பிங்.) 2. தெய்வமந்திரம் 3. வேதமந்திரம் (தொல். பொ-490)

**மந்திரமைந்து** — பஞ்ச நமஸ்காரம், அருகர், சித்தர், ஆசிரியர், உபாத்தியாயர் சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரியன (ச)

**மந்திரவாதம்** — மந்திரமே பரம் பொருளெனக் கொள்ளும் ஒரு சமயம் (யாழ். அக.) (சீவக 945)

**மந்திரவீதி** — கோயிலைச் சுற்றியுள்ள வீதி (உபதேசகா. சிவ புண். 140)

**மந்திராத்துவா** — அத்துவா ஆறனுள் மந்திரவடிவமானது (சை) (சி. சி. 8, 6. மறைஞா.)

**மந்திராபிடேகம்**—அனுட்டான வகை.

**மந்திராலயம்**—கிறிஸ்தவக் குருமார் கூடும் சபை. (கி) (கட்டிட நாமா. 5.)

**மந்திரிகை**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று (சங். அக)

**மயானவாசினி** — (மயானத்திருப்பவள்) துர்க்கை (தக்கயாகப். 80, உரை)

**மயிடற்செற்றாள்**— துர்க்கை (சூடா).

**மயிடாரி**—உமாதேவி. (நாமதீப. 24.)

**மயித்திரியாழ்வார்** — இனிப் பிறக்கக்கடவ புத்ததேவர் (தக்கயாகப், 183. உரை.)

**மயில்வாகனன்.**

**மயிலாளி,**

**மயிலூர்தி,**

**மயிலேறும்பெருமாள்** — முருகக் கடவுள் (பிங்.)

**மயூராதித்தன்** — ஒரு சூரியன், சிவமூர்த்திக்குக் கண்ணாய் விளங்குபவன்

**மயூரேசர்**—விநாயகர்

**மயேச்சுரன்,**

**மயேசன்,**

**மயேசுரன்,**

**மயேசுவரன்** — சிவபிரான் (யாழ். அக.)

**மயேசுவரி** — பார்வதி (யாழ். அக.)

**மரகதமேனியன்**— திருமால்

**மரகதவல்லி**—1. தருமதேவதை (பிங்.) 2. பார்வதி (யாழ்.அக)

**மஃரிஃபா** — இறைஞானம் (இ)

**மரி,**

**மரியம்மாள்,**

**மரியாயி,**

**மரியாள்** — இயேசுநாதரின் தாயான கன்னி மரியம்மாள் (கி) மரியே வாழ்க. R. C.

**மருச்சகன்**—அக்கினி; இந்திரன் (யாழ். அக.)

**மருச்சுதன்**— அனுமான் (யாழ். அக.)

**மருடணம்**--அகமருடணம் (சை) (ablution, holding the right hand containing water up to the nose while repeating the above Vedic hymn.) (தத்துவப். 50)

**மருணீக்கியார்** — திருநாவுக்கரசரின் பிள்ளைத் திருநாமம். பெரியபு.)

**மருத்துவான்** — இந்திரன் (பாரத. அருச்சுனன்றவ. 69)

**மல்லாலர்**— விநாயகர் திருவவதாரத்துள் ஒன்று

**மல்லி**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர். (ச) திருக்கலம். காப்பு உரை.)

**மலக்கு**— தேவன் (இ)

**மலசகிதர்** — மும்மலத்தோடு கூடியவர் (சை)

**மலத்திரயம்**— மும்மலம் (சை). மலத்திரியபூரியை (திருப்பு. 1266)

**மலநானம்** — சுத்தமானவிடத்தில் எண்விரலுக்குக் கீழாகவுள்ள மண்ணையெடுத்து மந்திரஞ் சொல்லி உடம்பிற்றேய்த்து நீரில் மூழ்குகை (சை) (தத்துவப். 45)

**மலபந்தன்** — பாசக்கட்டுள்ளவன் (சை) (யாழ். அக.)

**மலபரிபாகம்** — மலந்தேய்தற்குரிய காரணங்களோடு கூடிய நிலை (சை.) (தாயு. மலைவளர். 6.)

**மலம்**— மும்மலம், மலநானம் (தத்துவப். 45).

**மலர்த்தவிசோன்**— பிரமன்

**மலர்த்தேவி**— மலர்மகள். (தண்டி. 112, உரைமேற்.)

**மலர்மகள்,**

**மலர் மங்கை**— இலக்குமி (திவ். திருவாய். 1, 3, 1.)

**மலர்மிசையேகினான்** — பரம் பொருள். (குறள், 3, உரை,)

**மலரவன்,**

**மலரோன்**— பிரமன் (திருவாச. 24, 3)

**மலவைரி,**

**மலஹரன்**— சிவபிரான் போற் றிப்பஃ. உரை, பக். 18)

**மலைகுனிய நின்றபிரான்,**

**மலைகுனிய நின்றான்** — திருவேங்கடமுடையான் (திரு வேங்கடவுலா)

**மலையத்தேரோன்** — மன் மதன்

**மலையாள்**—பார்வதி (திருவாச 6, 40)

**மலையாள பகவதி**— மந்திரங் களுக்கு அதிதேவதையாகக் கருதப்படும் துர்க்காதேவி.

**மலைவளர் காதலி**— பார்வதி. (சேதுபு. கடவு. 3.)

**மழுவாளி**— 1. சிவபிரான் (திவ். திருவாய். 9, 3, 10) 2. பரசுராமன் (திவ். பெருமாள் தி. 9, 9)

**மழையான்**— திருமால். மழை யானுந் திகழ்கின்ற மலரோ னென் றிவர்கள் (தேவா. 1064, 9)

**மற்கலி,**

**மற்கலிதேவன்**—ஆசீவக மதத் தார் வணங்கும் இறைவன். என்றலு மற்கலிதானே யிறை (நீலகேசி. ஆசீவக. 3.)

**மற்கலி நூல்**— ஆசீவகமதநூல் (மணி. 27, 165)

**மறல்,**

**மறலி**— யமன் (சூடா.)

**மறுரூபம்**— ஏசுவின் மாறின ரூபம் (கி)

**மறைக்காடன்**— சிவன்

**மறைக்கிழவன்,**

**மறைக்கொடியோன். மறைக் கோ**—
பிரமன். புத்தேளு மறைக்கோ வும் (காஞ்சிப்பு. கடவு. 1)

**மறைத்தலைவி** — திருமகள் (பிங் )

**மறைமுடிவு**— 1. வேதாந்தம் 2. கடவுள். (யாழ். அக.)

**மறைமுதல்**— 1. சிவபிரான் (திவா.) 2. பிரணவம் (கந்தபு. கடவுள் வாழ். 4.)

**மறைமுதலி**— சிவன், திருமால், கடவுள் (சூடா.) மறைமுதல் பார்க்க.

**மறைமூலம்** — பிரமந்திரம். (பெரியபு. பெருமிழலை. 10)

**மறைமொழி**— மந்திரம்.(தொல். பொ. 491)

**மறையான்**—பிரமன் (திவ். இயற். 1, 28)

**மறையோன்**—பிரமன். (திவா.)

**மன்மதன்** — விஷ்ணுமூர்த்தியின் மனதில் பிறந்தவன். காமன். (திவ். நாய்ச். 1, 7) (பிங்.)

**மன்யு**—ஏகாதசருத்ரருள் ஒருவர்

**மன்றவாணன்** — தில்லைச் சிவபிரான். மன்றவாணன் மலர்திரு வருளால். (தனிப்பா.)

**மன்றன்**— சிவபிரான். (திருமந். 2277).

**மன்றாடி**— சிவபிரான். என்று மன்றாடி சொல்ல (திருவாலவா 52, 5.) (உரி. நி.)

**மன்றுளாடி** — சிவபிரான். (யாழ். அக.)

**மன்னவன்**— இந்திரன். (சிலப். 5, 173)

**மன்னனார்**— திருமால் (ம, த. அ)

**மனங்கலங்குவிப்போன்**— மன்மதன்

**மனசன்**— மன்கதன்

**மனப்பரியஞானம்** — பிறர் கருத்துக்கள் முற்பிறப்புக்கள் முதலியவற்றை அறியும் அறிவு (ச.) (சீவக. 3081, உரை)

**மனுஷ்யர்** — சுமனுஷ்யர், துர்மனுஷ்யர், திவ்விய மனுஷ்யர், குமனுஷ்யர், பிரகிருதி மனுஷ்யர் என்ற ஐவகை மனுஷ்யர். (ச)

**மனுஷ்யாவதாரம்** — மனித வடிவமாகத் தெய்வம் அவதரிக்கை.

**மனுஷகுமாரன்** — இயேசு கிறிஸ்து (கி)

**மனோபவன்** — மன்மதன் (பிங்.)

**மனோமயகோசம்,**

**மனோமயம்** — பஞ்சகோசத்துள் ஒன்றான மனமாகிய கோசம் (தத்) (சி.சி. பர. மாயா 8)

**மனோவதி**— பிரமன் நகரம் (கந்தபு. மேரு. 49)

**மனோன்மணி**—பார்வதி (பிங்.)

**மஸ்தான்** — முகம்மதிய ஞானியின் பட்டப் பெயர் வகை (E. T. V.. 48)

**மஸ்ஜிதுன் நபவீ**—மதீனா நகரிலுள்ள நபிகள் நாயகத்தின் பள்ளிவாசல் (இ)

**மஹுபூபு** —ஒரு முகம்மதிய மந்திரம். (இ)

**மஹாபோதி**— புத்தன் ஞானம் பெற்ற அரச மரம்

# மா

**மா**— 1. இலக்குமி மாமறுத்த மலர்மார்பின். (புறநா. 7.) 2. சரசுவதி. (சங். அக.)

**மாக்காப்பு** — விக்கிரங்கட்குச் சாத்தும் அரிசிமாச் சாத்துப்படி

**மாகாலன்** — சிவன்

**மாகாளி**— 1. துர்க்கை. (பிங்,) 2. சத்தமாதரில் ஒருத்தி. (சூடா.)

**மாகிரன்** — இந்திரன். (சங். அக.)

**மாகேச்சுவரி**— பார்வதி, சத்த மாதரிலொருத்தி. (பிங்.)

**மாகேசி**— துர்க்கை, காளி, பகவதி

**மாகேசுவரபூசை** — சிவனடியார்க்கு உணவிடுகை.

**மாகேந்திரி** — சத்தமாதரிலொருத்தி. சூடா.)

**மாசேனன்**— அருகன், கடவுள், குமரன், திருமால் (யாழ். அக.)

**மாடம்** —கோயில் (திவ். பெரியதி. 6, 6, 8)

**மாடவீதி** — கோயிலைச் சுற்றியுள்ள வீதி (தேவா. 418, 1)

**மாடன்**— சிறுதெய்வம்

**மாண்டூக்கியம்** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**மாணிக்கப்பட்டை**.— கோயிலின் திருமதில் முதலியவற்றில் அடிக்கும் சிவப்புப் பட்டை (LOC.)

**மாணிக்கமின்சேய்** — முருகக் கடவுளது படைவீரருள் ஒருவரான வீரவாகுதேவர் (நாமதீப. 37)

**மாணிக்கவாசகர்**— திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றின் ஆசிரியரும். சைவ சமயாசாரியர் நால்வருளொருவருமான பெரியார்.

**மாத்தியானிகம்** — துவிசர்கள் உச்சிப்போதிற் செய்யும் அனுஷ்டானம். (சேதுபு. சேதுபல. 133)

**மாத்திராதானம்** — நாடோறும் கோயிலில் பூசையின் தொடக்கத்தில் கடவுள் அளிப்பதாக அருச்சகனுக்கு வழங்கும் அமுதுப்படி.

**மாத்துவம்**—துவைதம் பார்க்க.

**மாத்துவர்**— மத்துவர் மதத்தினரான துவைதிகள்.

**மாத்யமிகன்**— பௌத்த சமயத்தினருள் ஒரு வகையான். (சி.சி. பர. மாத்ய. 1)

**மாதங்காரி** — யானையை அழித்தோன், சிவபெருமான்

**மாதங்கி** — 1. பார்வதி (நாமதீப. 22)
2. காளி (சூடா)
3. யாழ்த்தெய்வம். (சிலப். 7, 1, உரை).

**மாதரி**— காளி (பிங்.)

**மாதவன்** — 1. திருமால் (தேவா. 247.7) 2. மன்மதன் (யாழ். அக.)

**மாதவி**— 1. துர்க்கை. (யாழ். அக.) 2. கிருஷ்ணன் தங்கை சுபத்திரை (பாரதவெண். 782) 3. கண்ணன் மனைவி (யாழ். அக.) 4. துளசி பார்க்க.

**மாதா**— உமை, இலக்குமி, சத்தமாதர் பிங்.)

**மாதிரவாடையான்** — சிவன்

**மாதிரு**—இலக்குமி

**மாதிருகசிதன்**— பரசுராமன், திருமாலவதாரத்தொன்று (யாழ். அக )

**மாதுபாகன்**— சிவபிரான்

**மாதுருபூதர்**,

**மாதுருபூதேசுவரர்** — தாயுமானவர் பார்க்க. Siva, of the rock temple in Trichinopoly)

**மாதேவன்** — 1. சிவபிரான், மாதேவன் வார்கழல்கள். (திருவாச. 7, 1) 1. ஏகாதசருத்திரருள் ஒருவர் (திவா.)

**மாதேவி**—பார்வதி (கூர்மபு.திரு. 20.)

**மாதை**— திருவாமாத்தூர் என்ற சிவதலம். (தமிழ்நா. 111)

**மாதொருபாகனார்** — சிவன். (சி. சி. 2, 25)

**மாந்தளிர்நாணான்**— மன்மதன் (நாமதீப. 59)

**மாந்திரம்** — சைவாகமத்தினுள் ஒரு பகுதி (சை)

**மாந்திரிதீட்சை** — கிரியாவதி (சை) (சைவச. ஆசாரிய. 27. உரை)

**மாநடன்** — சிவபிரான் (சங். அக)

**மாநரகம்**— சூசிமுகம், காலகட்கம், குரதாரம். அம்பரிடம், தத்தாங்காரம், மாதாகம், சந்தாபம் பீபற்சம் என்று எண் வகைப்பட்ட நரகவிசேடம். (சி. போ. பா. 2, 3, பக். 203)

**மாபுறயாகம்**—வெளிப்பரங்க சிவ பூசை (யாழ். அக.)

**மாபெலை**— பார்வதி (கூர்மபு. திருக்கலியாண. 22.)

**மாமகன்**— திருமகளின் மகன், மன்மதன் (யாழ். அக.)

**மாமாயி**— துர்க்கை

**மாமாயை**—1.பார்வதி (கூர்மபு. திருக்கல். 20) ; 2. சுத்தமாயை பார்க்க.

**மாமிசோத்தானம்** — மரித்த உடல் உயிர்த்தெழுகை (R C.)

**மாமுகத்தவன்,**

**மாமுகவன்,**

**மாமுத்தன்**— விநாயகர் மாமுகவர் அர்ச்சிக்க. (பூவண. உலா. 21)

**மாமுநி,**

**மாமுனி**— அருகன் (பிங்.)

**மாயக்கூத்தன்** — திருமால் (திவ். திருவாய். 8, 2, 4.)

**மாயவண்ணன்** — திருமால் (பதிற்றுப். 7, பதி.)

**மாயவள்**— 1. துர்க்கை, மாயவளாடிய (சிலப். 6, 59); 2. தெய்வப் பெண். (பிங்.)

**மாயவன்**— திருமால். (பு. வெ. 9, 40)

**மாயன்** — திருமால் (தேவா. 1050, 6)

**மாயா காரியம்** — மாயையின் தோற்றமாகிய பிரபஞ்சம் முதலியன. (அருட்பா. 1, நெஞ்சறி. 527.)

**மாயா சத்தி** — மாயையாகிய சத்தி (திருவாச. 4, 44.)

**மாயாசூத்தி** — தசகாரியத்துள் நாமரூபத்தின் அதிஷ்டானமெனச் சச்சிதானந்தத்தைக் காணும் நிலை. )வேதா. தச' கட்.)

**மாயா தரிசனம்** — தசகாரியத்துள் பிரபஞ்சத்தின் நாமரூபங்கள் மாயையென அறியு நிலை (அத்) (வேதா. தச. கட்.)

**மாயா தருமம்** — சங்கோசவிகாசங்களாகிய மாயையின் தன்மை (அத்) (வேதா. சூ. 60)

**மாயா தாரணை**—1. மாயையில் தோன்றிய பிரபஞ்சப் பொருள் (அத்) 2. மஹாவாக்கியத்தைப் பொருளுணர்ச்சியோடு செபிக்கை (யாழ். அக.)

**மாயா தேவி**— 1. மாயையாகிய தேவி. (தக்கயாகப் 616, உரை) 2. கௌதமபுத்தரின் தாய் (சூடா )

**மாயா தேவிசுதன்** —புத்தன்

**மாயா பஞ்சகம்**—தமம், மாயை மோகம் அவித்தை, அநிருதம், என்று ஐந்து விதமாயுள்ள மாயை (அத்)

**மாயாமயக்குமாரன்**— முருகன், மன்மதன்

**மாயாமலம்** — மும்மலத்து வொன்றான மாயையாகிய மலம் (சை) (சி. சி. 2, 85 உரை.)

**மாயா லட்சணம்**— மாயையின் கூறாகிய அசத்து சடம் அநித் தம் துக்கம் கண்டம் என்னும் மாயையின் ஐவகை இயல்புகள் (அத்)

**மாயாவல்லபம்** — பிரபஞ்ச சிருஷ்டியிற்காணும் மாயையின் சக்தி (அத்) (யாழ். அக.)

**மாயா வாதம்** — பிரபஞ்சம் யாவும் மாயையேயென்று பௌத்தம் அத்துவைத மதங் களிற் கூறப்படுங் கொள்கை. (திருவாச. 4, 54)

**மாயாவாதி** — மாயாவாதக் கொள்கையுடையவன் (திவ். இயற். திருவிருத். 22, வ்யா. 145)

**மாயாவிகற்பஞானம்** — ஒரே பொருள் வெவ்வேறு வஸ்துக் களாகக் காண வரும் ஞானம் (சை.) (சி. சி. 11, 2, சிவாக்.)

**மாயி**— துர்க்கை. (பிரபோத. 18, 73)

**மாயேச்சுரன்**— சிவபிரான்

**மயேசுரி** — 1. பார்வதி 2. சத்த மாதருள் ஒருத்தி (பொரு. நி)

**மாயேயம்** — பஞ்சமலத்துள் ஒன்றும் அசுத்த மாயையின் காரியமுமான காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் மாயை என்னும் ஏழு தத்துவங் கள் (சை) (சி. சி. 2, 87)

**மாயை** — 1. மும்மலத்துள், விந்து, மோகினி, மாயேயம் என்று மூவகைப் பட்ட மலம் (சை) (பிரபோத. 46, 7) 2. அசுத்த மாயை (ஞானா.) 3. மாயா பஞ்சகத்துள் ஒன்றா கிய மாயை (அத்) 4. மூலப் பிரகிருதி (தாயு. பரிபூரணா. 6) 5. காளி (பிங்.) 6. பார்வதி (நாமதீப. 22.) 7. மாயாதேவி பார்க்க. 8. நரகவகை. (சிவ தரு. சுவர்க்க நரகவி. 113.) 9. திரோதான சத்தி. (நாமதீப. 753.)

**மாயோன்**— திருமால் (தொல். பொ. 5.)

**மாயோன்மருகன்** — முருகக் கடவுள் (சூடா.)

**மாயோனாடல்** — அல்லியம், மற்கூத்து, குடக்கூத்து, எனத் திருமாலாடிய கூத்து வகைகள். (சிலப். 6, 48)

**மார்க்கதாயிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று

**மார்க்கப்பிரபாவனை—** ஞானதவபூசாதிகளை அனுஷ்டித்து சமய தருமத்தைப் பிரகாசிப்பிக்கை. (சீவக. 3133 உரை, அடிக்குறிப்பு.)

**மார்க்கோபதேசி —** மதாசாரியன் (கி)

**மார்ச்சனம்—** கடவுள் திருமுன் இடக்கையினின்று ஒழுக விடும் நீரை மந்திர பூர்வமாய்ச்சிரசில் புரோட்சிக்கை. (தத்துவப். 50, உரை.)

**மார்த்தவமதம் —** இம்மதத்தவர் துவிதமதசித்தாந்தங்கூறுவர்

**மார்த்தாண்ட மூர்த்தி—** சூரியன்

**மாரசயன்—** (மாரனை வென்றோன்) புத்தன்

**மாரடி,**

**மாரடித்திருநாள்,**

**மாரடி நோன்பு —** மொகரம் பண்டிகையில் முகம்மதியரில் ஒரு வகுப்பார் மாரடித்துக் கொள்வதாகிய சடங்கு (இ)

**மாரவேள் —** மாரன் பார்க்க (கம்பரா. தாடகை. 1,) குமாரவேள்

**மாரன், மாரனார்—** மன்மதன (பிங்.)

**மாரஜித்து—** புத்தன்

**மாரி—** துர்க்கை. (பிங்.)

**மாருதி, மாருதேயன்—** அனுமான், தனி விஞயினுன் மாருதேயன் (கம்பரா. ஆறுசெல்.9)

**மால்—** 1. திருமால் (முல்லைப்.3)
2. அருகன் (சீவக. 961)
3. இந்திரன்

**மால்சமயத்தோர்—** திருமாலையே முதற்கடவுளாக வணங்குங் கொள்கையோர் (பிங் )

**மால்சமயம்—** விஷ்ணுசமயம், வைணவர்

**மால்தங்கை—** உமை

**மால்மைத்துனன்—** சிவபிரான் (யாழ். அக.)

**மால்மைந்தன்—** மன்மதன் (நாமதீப. 57)

**மாலாபலம்—** உருத்திராக்க மணி (சங். அக.)

**மாலிக்—** இறைவன். (இ)

**மாலிக்குல் முல்க்—** எல்லா அரசாங்கங்களின் அதிபதி. இது அல்லாஹ்வின் 99 திருப்பெயர்களில் ஒன்றாகும். (இ)

**மாலிகு அல்முல்கி—** (உலகின் உரிமையாளன்) அல்லாவின் பெயர் (இ)

**மாலியம்—** நிர்மாலியம் (காஞ்சிப்பு. நகரப். 35)

**மாலினி**— துர்க்கை (பிங்.), பார்வதி (நாமதீப. 20)

**மாலுந்திவந்தோன்**— (விஷ்ணுவின் நாபியில் உதித்தவன்) பிரமன். (பிங்.)

**மாலோன்**— 1. திருமால், 2. இந்திரன்

**மாவிரதியர்**— மகாவிரத சமயத்தைச் சார்ந்த சைவத்துறவியர் (பிங்.)

**மாவீரன்**— சிவன்

**மாறன்**— சடகோபன். (திவ். திருவாய். 2, 6, 11)

**மாறிருமார்பினள்**— திருமகள் (பிங்.)

**மான்**— 1. மகத்தத்துவம் (தத்) (மணி. 27, 207) 2. மூலப் பகுதி (சை) (சி.போ.பா. 2, பக். 160)

**மான்மகன்**— பிரமன் (சூடா.)

**மான் மறி**— வள்ளிநாயகி. (பரிபா. 9, 8)

**மான்மறிக் கரத்தான்**— சிவபிரான்

**மான்மைத்துனன்**— சிவபிரான் (சங். அக.)

**மானக்கஞ்சாறநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**மானச தீக்கை**— மனத்தால் பாவித்துத் தீக்கை செய்தல்

**மானசதீட்சை**— தீட்சையேழனுள் சீடனது மனத்துள் யோக சித்தியால் குரு பிரவேசித்து அவனுக்குச் சுத்தி செய்விக்கும் தீட்சைவகை (சை) (சைவச. ஆசாரி. 65, உரை.)

**மானசி**— உமாதேவி (கூர்மபு. திருக்கல்-22.)

**மானத பூசை**— மனப்பாவனையாலே வழிபடுகை.

**மானபீடம்**— சமவசரணத்துள்ள பலிபீடம். (ச.) மான பீடத்தை வணங்கி வாழ்த்தி. (மேருமந். 60)

**மானம்**— கோயில் விமானம்; (திருவிளை. கல்லானைக். 3)

**மானஸ் தம்பம்**— சமவசரணத்தின் நான்கு திக்கிலும் உள்ள தூண்கள் (மேருமந். 1050, உரை)

**மானாங்கணம்**— சமவசரணத்தின் உள்ளமைந்த பிராகாரம். (மேருமந். 1049)

**மானாவி**— நவராத்திரிவிழா (ஈடு. 10, 9, 4)

**மானி**— மங்கையர்க்கரசியார் (தேவா. 738,11)

**மானிடமேந்தி**— (மானை இடக்கையில் ஏந்தியவன்) சிவபிரான் (பிங்.)

**மானிடவன், மானிடன்** சிவபிரான். (பிங்.)

**மானுடமடமுகல்**— திருமாலின் நரசிங்காவதாரம் (கம்பரா. இரணி. 131)

**மானுடலிமுகம்**— மனிதரால் தாபிக்கப்பட்ட இலிங்கம். (சைவச, பொது. 431, உரை.)

# மி

**மிகிரன்**— புத்தன்

**மிகிராணன்**— சிவபிரான் (யாழ். அக)

**மிசிரப்பிரபஞ்சம்**— சுத்தாசுத்த மாயாபிரபஞ்சம் (சை) (சி.போ,பா. 2, 4, பக். 223)

**மித்தியாத்துவம்**— உண்மை நிலை மறைகை (ச.) (மேருமந். 711. உரை.) 2. பிரகிருதி தத்துவங்களிலொன்று (மேருமந், 713. உரை.)

**மித்தியாதேவதை**— சங்கை (An evil spirit) (ச) (திருநூற். 68, உரை. )

**மித்தியாநயம்**— சப்தபங்கி நயங்களைப் பிழைபடப்பிரயோகிக்கு முறை (ச.) (மேருமந். 704, உரை.)

**மிருககதி**— விலங்குகதி பார்க்க. (ச)

**மிருககரன்**— சிவன், மானேந்தி

**மிருகவியாதன்**— உருத்திரு ளொருவர்

**மிருகாங்கன்**— சந்திரன், சிவபெருமான்

**மிருகாதிபதி**— ஐயனுர். (பாரத. அருச்சுனன்றவ. 109)

**மிருடபக்தன்**— சிவபக்தன்

**மிருடபக்தி**— சிவபக்தி

**மிருடன்**— உருத்திரன், சிவன் (யாழ். அக. )

**மிருடாநி, மிருடாணி**— பார்வதி (சங். அக )

**மிருடை**— துர்க்கை; (சங், அக) பகவதி; சயமகள்.

**மிருத்தியுஞ்சயன்**— (எமனை வென்றவன்) சிவபிரான்.

**மிருதிதியுநாசகன்** — சிவபிரான்

**மிருத்துஞ்சயன்**— விநாயகன், சிவபிரான்

**மிருதி**— பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண, 22,)

**மிஹ்ராப்**— இமாம் நின்று தொழுவைப்பதற்கான தனியிடம் பள்ளிவாசலின் உள்மையப் பகுதியில் அமைந்திருக்கும் (இ)

## மீ

**மீட்பர்**— இரட்சகர் (கி)

**மீமாஞ்ன்ச**— 1. பூர்வ மீமாஞ்சை பார்க்க. (மச்சபு, பிரமமு,; 4,) 2. பூர்வ மீமாஞ்சை உத்தர மீமாஞ்சை என்ற இருபிரிவினை யுடையதாய் வேதவேதாந்தப் பொருள்களை விசாரித்தற்குக் கருவியாயுள்ளசாத்திரம்,

**மீலாதுன்நம்**— நபிகள் நாயகத்தின் பிறப்பு (இ)

**மீளி** — கூற்றுவன், மீளியுடம் பிடித் தடக்கை (பெரும்பாண். 75)

**மீன்கணணிந்தோன்**— சிவன் (நாமதீப. 12.)

**மீன்கொடியோன்**— மன்மதன் (யாழ். அக.)

**மீன்வேடன்**—சிவன்

**மீனத்துவசன்**,

**மீனவன்** — மன்மதன் (மீனைக் கொடியாகக் கொண்டவன்) (திருவிளை. பயகர 29)

**மீனாங்கன்** — மன்மதன் (சங். அக.)

**மீனாட்சி** — மதுரைத் தெய்வமாகிய உமாதேவி

## மு

**முஅத்தின்**—பாங்கொலி எழுப்புபவர், தொழுகைக்கு மக்களை அழைப்பவர் (இ)

**முக்கட்செல்வன்**,

**முக்கட்பகவன்**,

**முக்கண்ணப்பன்**,

**முக்கண்ணன்**,

**முக்கண்ணான்**—(மூன்று கண்களையுடைய கடவுள்) சிவபிரான் முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே. (புறநா 6)

**முக்கண்ணி** — 1. காளி (திவா) 2. பார்வதி (பிங்.)

**முக்கணன்** — சிவபிரான். முக்கணா போற்றி. (தேவா. 968, 10)

**முக்களலிங்கர்**,

**முக்காளலிங்கர்** — பாபநாசத்திலுள்ள சிவபெருமான்

**முக்குடை**—அருகக் கடவுளுக்கு உரியதும், சந்திராதித்தம், நித்திய வினோதம், சகலபாசனம்- என மூவடுக்குள்ளதுமான குடை. குளிர் முக்குடையின் நிழலோய் (சீவக. 1244)

**முக்குடைச்செல்வன்,**

**முக்குடையான்,**

**முக்குடையோன்**—அருகக் கடவுள் (சூடா.)

**முக்குற்றங்கடிந்தோன்** — புத்தன் (திவா.)

**முக்குற்றமில்லோன்**— புத்தன்

**முக்குறுணிப் பிள்ளையார்,**

**முக்குறுணியரிசிப் பிள்ளையார்**—முக்குறுணி அரிசிசமைத்து நிவேதிக்கப்பெறும் விநாயக மூர்த்தி.

**முக்கோட்டை**— 1. துர்க்கை கோயில் (ஈடு, 4,5,2,) 2. விநாயகன் கோயில்.

**முக்கோணி**— பார்வதி (Parvati as residing in the mystic triangle)

**முகடி**—மூதேவி (குறள், 617.)

**முகநிவாசினி**—இலக்குமி

**முகம்** — தியானம் (ச) (சீவக. 1289)

**முகம்மதியர்** — இஸ்லாம் மார்க்கத்தவர். (இ)

**முகம்மது,**

**முகம்மது நபி**— முகம்மதிய மத தீர்க்கதரிசியான முகம்மது (இ)

**முகமண்டபம்**—கோயிலின்முன் மண்டபம் (செந். iv, பக்.335.)

**முகலிங்கம்** — சர்வசமலட்சணங்கொண்ட சிவலிங்கம்

**முகில்வண்ணன்** — (மேகநிறம் வாய்ந்தவன்) திருமால். (திவ். திருப்பா. 11.)

**முகின்மேனி**— திருமால். முகின் மேனி வேதன்றேட. (திருவாலவா. காப்பு.3)

**முகுந்தன்**—திருமால் (பிங்.)

**முசல்மான்**— முகம்மதியன் (இ)

**முசலியார்**— மகமதிய குரு (இ) (Loc.)

**முஞ்சகேசன்,**

**முஞ்சகேசி**—திருமால் (ம. த.அ)

**முஞ்சை**—பார்வதி

**முட்டுப்பட்டினி** — கண்டுமுட்டுக் கேட்டு முட்டுக்களால் நேரிடும் பட்டினி (ச) (திருவாலவா. 37, 74)

**முண்டகம்** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**முண்டகன்** — பிரமன் (இலக். அக.)

**முண்டகாசனன்** — பிரமன் (யாழ்.அக.)

**முண்டகாசினி,**

**முண்டகாசனை** — (தாமரையில் இருப்பவள்) (யாழ். அக.) இலக்குமி

**முண்டகாசனைகேள்வன்** — திருமால் (சூடா.)

**முண்டபங்கி** — ஆன்மார்த்த பூசையில் இலிங்க உருவமாய் உள்ள சிவபெருமானை ஐந்து முகங்களோடு கூடியவராகத் தியானிக்கை (சை) (தத்துவப். 64, உரை)

**முண்டர்**—சைவர்.

**முண்டன்** — 1. சிவபிரான் [கையில் கபாலத்தையுடையவன்] (திவ். திருச்சந் 71) 2. சைவன் (திவ். திருமாலை, 8, வ்யா); 3. சமணன்.

**முண்டி** — நெற்றியில் திரிபுண்டரம் அணிந்தவன்

**முக்கலை** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**முத்தகீ**—இறையச்சம்உள்ளவன் (இ)

**முத்தலை எஃகன்** — மூன்று தலைகளையுடைய சூலாயுதத்தையுடைய சிவபெருமான்

**முத்தலைவேலையன்**—சிவன் திருமால் (ம. த. அ.)

**முத்தன்**— இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவன்) 1. சிவபிரான் (திருக்கோ. 358) 2. திருமால் 3. அருகன் (பிங்) 4. புத்தன் (பிங்.) 5. வைரவன் (பிங்.)

**முத்தி**— 1. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்கு வகைப்படும் (ம.த.அ) 2. இலக்குமி (அரு. நி); 3. மோட்சம் (திருவாச. 11 12); 4. பதமுத்தி, பரமுத்தியென்ற இருவகை முத்திநிலை (வேதா. சூ. 56, உரை)

**முத்திகம்** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**முத்திசாதனம்** — சமய பதார்த்தங்களில் ஒன்றான முத்தி சாதனக் கருவி (சைவப் 68)

**முத்தி திசை** — ஞான மார்க்கம்

**முத்திநாடு**—சொர்க்கம்

**முத்திப்பழுது** — மலம் முற்றும் நீங்கிய முத்திநிலை இல்லை என்னுங் கொள்கை

**முத்திப்பேறு** — மோட்ச வாழ்வு (யாழ். அக)

**முத்தி பஞ்சாட்சரம்** — பிரணவஞ் சேர்ந்த பஞ்சாக்கர மந்திர வகை. (பஞ்சாக்கர,45, உரை)

**முத்தி பதம்** — மோட்ச பதவி, ஞானநிலை (ம. த. அ)

**முத்திராதாரணம்** — அக்கினியிற் சூடேறப்பெற்ற சங்க சக்கர முத்திரைகளைத் தோள்களில் ஒற்றும் சடங்கு. (பிரபோத. 11. 11)

**முத்திற மணி**—திரிமணி (பௌ) (மணி 30, 4)

**முத்துக்குடை** — அருகனது மூன்று குடையுளொன்று

**முத்துக்குமாரன்**— முருகக் கடவுள் (குமர. பிர. முத்துக்குமார பின் 2)

**முதல் தீர்த்தம்** — திருமால் கோயிலில்கோஷ்டிகளில் முதன் முதலாகத் தீர்த்தம் பெறும் மரியாதை—(வை)

**முதல்மரியாதை**—கோயில் முதலியவற்றில் முதலாவதாகப் பெறும் உபசாரம்

**முதல்வன்** — பிரமன்; கடவுள் (கலித். 124)

**முதல்வன்சேய்** — முருகன் (உரி. நி.)

**முதலந்தணன்**—பிரமன்

**முதலியாண்டான்** — 1. ஒரு வைணவாசாரியர். (அஷ்டப். திருவரங்க. ஊச. 21) 2. வழிபடுவோர் தலையில் வைக்கப்படுவதும் இராமானுஜரின் திருவடி நிலை உள்ளதுமான கிரீடம் (வை )

**முந்தன்**— கடவுள். முந்தனை யான்மா வென்றும் (சி.சி.4,28)

**முந்துநூல்**— வேதம் (திவ், பெரியதி. 6, 5,7)

**முநி**— புத்தன்

**முப்பதம்**— **'தத்துவமசி'** என்னும் மகா வாக்கியம் (திருமந். 225.)

**முப்பது நோன்பு**— ரம்ஸான் மாதத்திற் முகம்மதியர் பிரதிதினமும் கொண்டாடும் விரதம் (இ)

**முப்புரமெரித்தான்**— சிவபெருமான் (சங்.அக.)

**முப்புரிநூல்**— பூணூல் (மூன்று நூல் சேர்த்துத் திரித்த கயிறு) (திவ்.இயற். திருவெழு. கூரி. 7)

**முப்பொருள்**— **பதி**, பசு, பாசம் என்னும் மூன்று முதற்பொருள்கள். (சை.) (சி.போ.பா. 6,2, பக். 328)

**முப்பொழுதுந்திருமேனி தீண்டுவார்**— தொகையடியாருள் காலை, உச்சி, மாலை என்ற மூன்று பொழுதுகளிலும் சிவனது திருமேனியைத் தொட்டுப் பூசனை செய்தற்குரிய ஆதிசைவப் பிராமணர். (தேவா. 738, 10)

**முபல்லிக்**— இறைமார்க்கத்தை எடுத்துரைப்பவன்; இறைமார்க்கத்தைப் பிரசாரம் செய்பவன் (இ)

**முஃபஸ்ஸிர்**— திருக்குர்ஆன் விரிவுரையாளர் (இ)

**மும்மணி**— புத்தர்மசங்கங்கள்; எந்த நற்காரியஞ் செய்யத்தொடங்கினும் இவற்றை மூன்று முறை வணங்கவேண்டும் என்பர். (பௌ) (மணி. அரும்.)

**மும்மதத்தான்**— விநாயகர்

**மும்மலத்தார்**— 1. சகலர் (Souls of the lowest class) 2. (Saiva ) பஞ்சமலத்துள் ஆணவம், மாயேயம் திரோதானம் என்னும் மூன்று மலமுடைய விஞ்ஞானகலர். (தத்துவப். 21. உரை.)

**மும்மலம்**— ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்ற மூவகை மலங்கள். (திருவாச. 30, 7)

**மும்மூடம்**— உலோகமூடம், தேவதாமூடம், பாஷண்ட மூடம் என்ற மூவகை அறிவீனம் (ச.)

**மும்மூர்த்தி**—திரிமூர்த்தி. பொற்பூடணர் மும்மூர்த்திகளாம் விமலனுர்க்கே. (சிவரக. கணபதி வந்தனை. 15.)

**முயலகன்**—நடராசப்பெருமான் ஏறி நடிக்கும் பூதம். மூடாய முயலகன். (தேவா. 878,3)

**முயற்கூடு**— சந்திரன் (ம.த.அ)

**முரளீதரன்**—(வேய்ங்குழலைக் கொண்டவன்) கண்ணன்

**முராந்தகன், முராரி** — (முரனென்ற அசுரனைக் கொன்றவன்) திருமால். விடுத்தனு முராரியேகி. (கந்தபு. ததீசி. யுத். 39)

**முருகக்கடவுள்**— குமரக்கடவுள்

**முருகநயானகர்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு)

**முருகவேள், முருகன்**— முருகக்கடவுள் (பட்டினப். 158. உரை.)

**முருகு**— முருகன். (மதுரைக். 611)

**முருகேசன்**— முருகக்கடவுள். (யாழ். அக.)

**முல்லைத் தெய்வம்**— திருமால்

**முழுதொருங்குணர்ந்தோன்**— 1. அருகன் 2. சிவபிரான் 3. கடவுள் (யாழ். அக.)

**முழுதோன்** — கடவுள். (திருவாச. 3, 29.)

**முழுநீறுபூசிய முனிவர்**— தொகையடியாருள் ஒரு சாராரும் உடல் முழுவதும் திருநீற்றை அணிபவருமான சிவனடியார் கூட்டம். (தேவா. 738, 10,

**முழுமுதல்வன்**— திருமால்

**முளரி ஆயிரங்கண்ணான்** — இந்திரன்

**முளரிப்பாவை**— இலக்குமி [தாமரையில் இருப்பவள்] (பாகவத. 1, பரிட்சித்துவின். 64.)

**முளரியாள்**— இலக்குமி

**முளரியான்**— (தாமரையில் இருப்பவன்) பிரமன்

**முற்பெரியான்**— பிரமன். (சீவக 2464.)

**முறக்கன்னன்**— (முறம்போன்ற காதுடையவன்) கணபதி (நாமதீப. 27.)

**முறைவன்**— சிவபிரான். நான்மறை முக்கண் முறைவனுக்கு (பதினொ. பொன்வண், 52,)

**முன்னவன்**— 1. சிவபிரான் (பிங்.); 2. கடவுள். முன்னவன் போதியில், (மணி, 28, 141)

**முன்னோன்**— கடவுள், (யாழ். அக) விநாயகன், (சூடா,) சிவன், அருகன்

**முனிசுவ்விரதர்**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர் (திருக்கலம். காப்பு. உரை.)

**முனிந்தசினன்**— புத்தன்

**முனிமையின்வடிவு**— சைன தீட்சைவகை (ச)

**முனிவன்**— 1. பிரமன்; 2. கடவுள், (திருவாலவா, காப்பு 2,)

**முனீந்திரன்**— 1. புத்தன் (சூடா,) 2. அருகன் (சீவக. 3094, உரை )

**முனையடுவார்நாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**முனைவன்**— 1, புத்தன் (பிங்) 2. அருகன் (சீவக, 1948) 3. கடவுள், (தொல், பொ, 649)

**முஃஜிஸாத்**— இறைத்தூதர் தங்கள் தூது உண்மையானது என்பதற்கு அடையாளமாக நிகழ்த்திக் காட்டும் அற்புதச் செயல்கள் (இ)

**முஷ்ரிக்**—இறைவனுக்கு இணை வைத்து வணங்குபவன் (இ)

**முஸ்லீம்**— முகம்மதியன்

**முஹாஜிர்**— நபிகள் நாயகத்தைப் பின்பற்றி இறைநெறியின்படி வாழ மதீனா நகருக்குச் சென்றவர். (இ)

**முகாம்பை**— சைய பர்வதத்தில் எழுந்தருளியிருக்கும் சத்தி

**முங்கைப்பிள்ளையார்**— இவர் குமாரக் கடவுளின் அவதாரம்

**மூத்த நயினார்,**

**மூத்தநாயனார்**— சிவபிரானது மூத்த புதல்வர்) விநாயகர் (பதினொ)

**மூத்த பிள்ளையார்.** விநாயக (பதினொன்)

**மூத்தோன்**— விநாயகன் (பிங்.)

**மூதணங்கு**—துர்க்கை (சூடா).

**மூதிரிரை**— சிவபிரான்

**மூப்பான்**— சிவபிரான். (தனிப் பா. 1, 32. 61)

**மூமின்** — இறை நம்பிக்கை யாளன் (இ)

**மூர்க்கநாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**மூர்த்தி**— அருகன், புத்தன், சிவன் (திவா,) (யாழ். அக.)

**மூர்த்திகன்**—1. குமாரக் கடவுள் (யாழ். அக.) 2. வயிரவக் கடவுள்

**மூர்த்திசாதாக்கியம்** — ஒரு முகமும் மூன்று கண்களும் இரண்டு கையும் இரண்டு காலு முடையராய்ப் படிக நிறத் தோடு தோன்றும் சிவபிரானது திருவருவம் (சை) (தத்துவப். 191. உரை.)

**மூர்த்திநாயானார்** — நாயன் மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**மூரியூர்தி,**

**மூரிவாகனன்** — இடபவா கனன், சிவபிரான்

**மூலகன்மம்**— அனாதியே ஆன் மாவைப் பற்றியுள்ள கன்மம் (சை) (சி. சி. 2, 39, சிவஞா.)

**மூலகாரணத்தவன்** -- உலகத் தோற்றத்திற்கு மூலகாரண னான பிரமன்

**மூலங்கொண்டார்** — பிரமன் (திருமாலினது நாபிக்கமலத் தைப் பிறப்பிடமாகக் கொண்ட வன்)

**மூலட்டானன்** — திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவ பிரான். மணியாரூர் திருமூலட் டானனாரே. (தேவா. 720, 1)

**மூலத்தானம்**— 1. கருப்பக்கிரு கம் (யாழ். அக.); 2. மூலவர் பார்க்க.

**மூலநாயன்**— திருமூலர்

**மூலநோய்** — ஆணவமலம். (சை) (தேவா. 845,9)

**மூலப்பகுதி**— 1. சுத்தா சுத்த தத்துவம் ஏழனுள்போக்கியரூப மாய் நின்ற தத்துவப் பிரபஞ் சங்கட்கெல்லாம் மூலகாரணமா வதும் கலாதத்துவத்தின் விகுதி யாவதுமான பிரகிருதி (சை) (சி. போ. பா. 2, 2, பக். 160) 2. முக்குணங்களும் சமநிலைய டையப் பெற்றதும் எல்லா வற்றுக்கும் மூலகாரணமும் நித் தியமுமான பிரகிருதி தத்துவம். (சாங்கிய) (மணி. 27, 205).

**மூலபஞ்சாட்சரம்** — நமசிவாய என்ற ஐந்தெழுத்தாலாகிய மந்திரம்

**மூலபிருத்தியன்**—சண்டேசுரர்

**மூலபேரம்**— மூலவர் (வை)

**மூலவர்** — கோயிலுட் கர்ப்பக் கிருகத்தில் ஸ்திரமாகவுள்ள மூர்த்தி

**மூலவாசல்** — கோயிலுட் கர்ப் பக்கிருக வாயில்

**மூலவிருள்**— 1. ஆன்மாவை அனாதியே பற்றியிருக்குந் தமம் (அத்) 2. ஆண மலம் (சை) (யாழ். அக.)

**மூவர்**— 1. திரிமூர்த்திகள் (திரு முரு. 162) 2. தேவார ஆசிரி யர்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர், ஆகிய மூன்று நாயன்மார்கள். மூவர் செய் பனுவல். (தாயு. சச்சிதா. 3.)

**மூவா முதல்**— கடவுள். (யாழ். அக .)

**மூவர் லிதல் ஈசன்**— மூத்தலில் லாத சிவபிரான்

**மூவர் முதல் நாயகன்** — திரு மால்

**மூவாயிரவர்** — தில்லை மூவா யிரவர். (தேவா. 17, 7.)

**மூவார்**— தேவர். [மூப்பில்லாத வர்.] (மேருமந். 874)

**மூவிராசாக்கள் திருநாள்** — பெத்லெகேமில் ஏசுநாதர் பிறந்தபோது அவரை வழிபட வந்த கீழ்நாட்டு ஞானிகள் மூவரைப் போற்றும் திருநாள். (K. C. )

**மூவிலைவேற்குமரி**— காளி

**மூவுலகளந்தோன** — திருமால் (சங். அக.)

**மூவுலகாளி**— 1. இந்திரன் (ம. த. அ); 2. கடவுள் (திவ். திரு வாய். 8, 9, 5,)

**மூவலகுணர்ந்தமூர்த்தி**— அருகன் (சூடா.)

**மூன்றுநூல்**— பூணூல் (கம்பரா கிளை. 137.)

**மூன்றுரு**— பிரமன், திருமால், சிவன்

**மூஷிகவாகனன்** — (பெருச் சாளியை வாகனமாக உடைய வன்) விநாயகக் கடவுள்

# மெ

**மெக்கா**— முகம்மதியருக்கு முக்கிய க்ஷேத்திரமானதும் அரேபியாவிலுள்ளதுமான ஒரு நகரம்.

**மெய்ஞ்ஞானி**— தத்துவஞானி. (பு. வெ. 10, 4, உரை.)

**மெய்ப்பாட்டியற்கை**— சைன பரமாகமம். (சிலப். 11, 154.)

**மெய்ப்பொருணாயனார்**— நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். (பெரியபு.)

**மெய்யன்** — கடவுள் (யாழ். அக.)

# மே

**மேகவண்ணன்** — திருமால். (திவ். திருவாய். 6, 10, 3)

**மேகவகானன்**— 1. சிவபிரான் (யாழ். அக.); 2. இந்திரன். (பிங்.)

**மேதங்கரர்** — சாக்கிய முனிவருக்கு முன்றோன்றிய புத்தர்களுள் ஒருவர். (மணி. 30, 14, கீழ்க் குறிப்பு.)

**மேதிச் சென்னிமிதித்தோள்,**

**மேதித்தலைமிசை நின்றாள்** —துர்க்கை (பிங்.)

**மேதியான்**- (எருதை யூர்பவன்) இயமன். (குற்றா. தல. மந்தமா. 120)

**மேதினி படைத்தோன்**— பிரமன், திருமால் (ம. த. அ) (சூடா.)

**மேநகாத்மஜை,**

**மேநகை புதல்வி** — பார்வதி

**மேருத்தீபம்** — கடவுளர் முன் எடுக்கும அடுக்குத்தீபம் (பரத. ஒழிபி. 41.)

**மேருதாமன்**— சிவபிரான்

**மேருவில்லாளன்,**

**மேருவில்லி** — மேருமலையை வில்லாகக் கொண்டவன்) சிவபிரான் (தக்கயாகப். 379)

**மேல்சாந்தி** — கோயிலின் தலைமைப் பூசகன். (T. A. S. ii. 48, 49)

**மேலவரிறைவன்** — இந்திரன், முருகன் (யாழ். அக.)

**மேலாலவத்தை**— லலாடத்தில் ஆன்மா தங்கி நிற்கும் நிலைகளாகிய சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகள் (சை.) (சி. சி. 4, 35. நிரம்ப.)

**மேலை நெற்றி** — சிவபிரானது நெற்றிக்கண்

**மேழகவூர்தி**— முருகன்

**மேற்றிராணி**—கிறிஸ்தவக் கண்காணியர்

**மேற்றிராணிப்பட்டம்**— கத்தோலிக் கிறிஸ்தவக் கண்காணியரின் பட்டம்

**மேனைமகள்**— பார்வதி. (நாம தீப. 23.)

# மை

**மைத்திராயணி** —நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**மைத்திரியாழ்வார்** — மயித்திரியாழ்வார் [The Buddha of the future] (மணி. புத்தசரித். பக். 30, கீழ்க்குறிப்பு.)

**மைத்திரீபலன்** — புத்தன், அருகன்.

**மைத்திரீபாவனை** —பௌத்த பிட்சுக்கள் உலகில் எல்லா உயிர்களும் நலம் பெற வேண்டும் என்று தியானிப்பது (ம. த. அ) (மணி.) பக். 387)

**மைத்திரேயி**— நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**மைநாகசுவசிரு**— பார்வதி

**மைமை**— பூசை (ச) புக்கவர் மைமை தொடங்கின ரன்றே. (மேருமந். 1285.)

# மொ

**மொகரம்**— மொகரம் என்ற அரபிமாதத்துவரும் ஒரு முகம் மதியப் பண்டிகை (இ)

**மொகமுத்திரை** — முத்திரை வகை

**மொகரன்,**

# மோ

**மோகன்**— மன்மதன் (பிங்.)

**மோகனக்கல்**—பூசைச் சாமான்களை வைக்கும் அர்த்த மண்டபத்திலுள்ள கல்மேடை

**மோகனம்** — மோகனியம் என்னுங் கருமம். (ச)

**மோகனீயம்** — என்குற்றத்துள் ஆன்மாவுக்கு மயக்கத்தைச் செய்யுங் குற்றம் (ச.) (பிங்.)

**மோகினி**— 1. திருமாலின் கண்டோரை மயங்கச் செய்யும் பெண் வடிவான அவதாரம், (பரிபா. 3,33. உரை) 2. அசுத்த மாயை (சை) (ஞானா. 1,29)

**மோகொரம்**— மொகரம் பார்க்க

**மோட்ச சாம்பிராச்சியம்** — மோட்ச வீடு

**மோட்சம்**— 1. முத்திநிலை, பதமுத்தி. 2. நவபதார்த்தங்களுள் வினைத்தொடர்பினின்றும் முற்றும் நீங்குநிலை (ச.) (சீவக. 2814, உரை.)

**மோட்சமண்டலம்,**

**மோட்சலோகம்** — முத்தியுலகு பரமபதம் (கி)

**மோட்சவாசி** — மோட்ச பதவியிலுள்ளோன் (கி)

**மோடி**—காடுகாள் துர்க்கை(பிங்)

**மோதகப்பிரியன்**— விநாயகன் (யாழ். அக.)

**மௌல்வி** — முகமதியமத வித்வான் (இ)

# ய

**யக்கினுமூர்த்தி** — அக்கினி தேவன் (தக்கயாகப். 344, உரை)

**யக்கியபுருடன்** — (யாகத்தின் உருவினன்) திருமால் (சங். அக.)

**யக்கியாரி**— (தக்கன் யாகத்தை அழித்தவன்) சிவபிரான் (யாழ். அக)

**யக்கேசன்**— குபேரன். (யாழ். (அக.)

**யசு** — இரண்டாம் வேதம், நிவேதித்தல்

**யசோதை** — கண்ணபிரானை வளர்த்த தாய்

**யஞ்ஞமூர்த்தி** — விஷ்ணுவின் அம்சம் (சங். அக.)

**யஞ்ஞவராகம்** — திருமாலின் வராகாவதாரம்

**யதிதர்மம்**—துறவறம், (சமணம். பக். 89)

**யதியாசாரம்**— சைன முனிவர்கள் ஒழுகுதற்குரிய விதிகளைக் கூறும் ஒரு நூல். (ச) (மேருமந். 424, உரை.)

**யதிராசர்,**

**யதிராஜர்**— இராமானுசர்.

**யதுநாதன்** — கண்ணபிரான்

**யமராசன், யமன்**— அஷ்டதிக்குப்பாலகருள் ஒருவனும்தென்றிசைக்கு உரியவனுமான கடவுள் (திவா.)

**யமவிரோதி யமவைரி,**

**யமாந்தகன், யமாரி**-(யமனுக் குப்பகைவன்)சிவபிரான் (யாழ். அக)

**யமுனாப்பிராதிரு**— (யமுனையின் உடன் பிறந்தோன்)யமன் (யாழ். அக.)

**யமுனைத்துறைவன்**— கண்ணபிரான். தூய பெருநீர் யமுனைத் துறைவனை. (திவ். திருப்பா. 5.)

**யவகாரி யவனாரி** — (காலயவனனைக் கொன்றவன்) கண்ணபிரான் (யாழ். அக)

## யா

**யாக குண்டம்** — வேள்விக்குழி

**யாக சம்மினி** — யாகத்திற்கு உதவும் ஒரு சார் தேவதைகள் (தக்கயாகப். 593)

**யாக சாலை**— 1. வேள்விச் சாலை (தக்கயாகப். 242.); 2. கோயிலுள் யாகஞ்செய்யும் மண்டபம்.

**யாகபதி** — இந்திரன். (இலக். அக.)

**யாக பாகம்** — அவிர்ப்பாகம். (யாழ். அம்.)

**யாக பேரம்**— கோயிலுள் யாக சாலைக்குரிய மூர்த்தி. (LOC.)

**யாக போசனர்** — வானோர் (யாழ். அக.)

**யாகம்**— 1. வழிபாடு (வை); 2. பதினெட்டு வகைப்பட்ட வேள்வி. (திவா.)

**யாசனை**— பிரார்த்தனை

**யாஞ்ஞுவல்கியம்** — நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று

**யாத்திராகமம்** — விவிலிய நூலுட் பழைய ஏற்பாட்டின் உட்பிரிவு (கி)

**யாத்திராகாஷாயம்**— சைவ மடங்களில் முதலில் மந்திர மின்றிக் கொடுக்குங் காவி யுடை.

**யாத்திரோற்சவம்** — தல எல்லைக்கப்பால் கோயில் மூர்த்தியை எழுந்தருளப் பண்ணுந் திருவிழா. (யாழ். அக.)

**யாதவன்**—கண்ணபிரான் (பெரியபு. திருமலை. 14.)

**யாதவி**— உமை (யாழ். அக.)

**யாமளை** — 1. பார்வதி (பிரமோத். 18, 29) 2. காளி (பிங்.)

**யாழ்துரித்தாள்** — பார்வதி தேவி (நாமதீப. 22)

**யாழ்முநி**— நாரதர் (பாகவத. 10, ஸ்ரீநாரதர். 7)

**யாளியூர்தி**— காளி (அரிச். பு. பாயி. 29.) (பிங்.)

**யானைமுகவற்கிளையோன்**— 1. முருகக்கடவுள் (பிங்.) 2. வீரபத்திரக் கடவுள் (சூடா.)

**யானைமுகவன்** — விநாயகக் கடவுள் (திவா.)

**யானையுரித்தோன்**—(யானையின் தோலையுரித்தவன்) சிவபிரான் (பிங்.)

**யுகாதி**—1. கடவுள் (யாழ்.அக.) 2. அருகன் (சூடா.)

# யோ

**யோக குண்டலினி**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**யோகசம்**—சிவாகமம் இருபத்தொட்டனுள் ஒன்று (சைவச. பொது. 331, உரை.)

**யோகசமாதி**--ஆன்மா உடலையும் மனத்தையும் விட்டு பிரிந்து நிற்கும் யோக நிலை. (திருப்பு 341.)

**யோகசிகை**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**யோகசூடாமணி** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**யோகசைவம்** — சைவம் பதினாறனுள் தீட்சை பெற்றவன் அட்டாங்கயோகம் பயின்று அட்டமாசித்தி பெறுதலைக் கூறுஞ் சமயம். (அபி. சிந்)

**யோகதத்துவம்**— நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**யோகதக்ஷிணாமூர்த்தம்** — தக்ஷிணாமூர்த்தியின் மூர்த்தங்களுள் ஒன்று. (அபி. சிந்.)

**யோகதீக்கை,**

**யோகதீட்சை**— யோகமார்க்கத்தால் குரு சீடனது உடலுட் பிரவேசித்து அவனது ஆன்மாவைக் கிரகித்துச் சிவன் திருவடியிற் சேர்ப்பிக்கும் தீட்சை வகை (சை) 2. தீட்சை யேழனுள் நிராதார யோகத்தை அப்பியாசம் பண்ணுவிக்கை (சை.) (சைவச. ஆசாரி. 95 உரை)

**யோகபாதம்**— 1. ஒவ்வொரு சிவாகமத்திலும் யோகத்தைப் பற்றிக் கூறுவதாயுள்ள இரண்டாம் பகுதி (சை) (பெரியபு. தில்லைவா. சூச.) 2. யோகத்தைப் பற்றிக் கூறும் பாஞ்சராத்திராகமப் பகுதி.

**யோகபூசை**— சிவபெருமானை அறிவின் ஒளியாகத் தியானிக்கை

**யோகம்** — 1. அதிசூட்சும வடிவினையுடைய கடவுளை அகத்தான் வழிபடுகையாகிய மார்க்கம் (சை) (சி. போ. பா. 8, 1, பக். 359, புதுப்.) 2. யோக பாதம் பார்க்க 3. மனோ வாக்குக் காயங்களின் வியாபாரம் (ச.)

**யோகயாமளம்**—ஒரு சாக்தேய தந்திரம். (தக்கயாகப். 136)

**யோகர்**— 1. சமண முனிவர் (சூடா.) 2. யோகியர் (திருக்காளத். பு. பலருஞ். 15)

**யோகாசாரம்**—1. யோகானுட்டானம். 2. விஞ்ஞானம் ஒன்றே என்றைக்கும் உள்ளது எனக் கூறும் பௌத்தமதப் பிரிவு.

**யோகாசாரர்** — பௌத்தரில் ஒரு பிரிவினர் (சி. சி. பர யோகா. 1)

**யோகி** — 1. சிவபிரான் (பிங்.) 2. அருகன் (பிங்.) 3. ஐயனார் (பிங்.)

**யோகினி**— 1. காளி (கந்தபு. அக்கினிமுகா. 132) 2. காளிக்கு ஏவல் செய் மகளிர் வகை. (பிரபுலிங். கைலாச. 42) 3. தெய்வப்பெண் (திருக்காளத். பு. விசிட்டத். 28) 4. ஒவ்வொரு திதியில் ஒவ்வொரு திக்கில் நின்று கொண்டு அத்திக்கு நோக்கிப் பயணமாவோர்க்குத் தீங்கு விளைவிப்பவளாகக் கருதப்படுந் தேவதை. (சோதிட கிரக. 89)

**யோசனன்** — கடவுள். (யாழ். அக)

## ர

**ரங்கநாதன்** — அரங்கநாதன் பார்க்க

**ரங்க மண்டபம்** — கோயிலின் உள் மண்டபம்

**ரசதக்குன்றவர்** — (கைலாயத்திலிருப்பவர்) சிவபிரான் (தக்கயாகப். 291)

**ரசூல்**—இறைத்தூதர் (இ)

**ரஸூலுள்ளாஹ்** — அல்லாஹ்வின் தூதர் பெரும்பாலும் நபிகள் நாயகத்தைக் குறிக்கும் (இ)

**ரப்** — படைத்துக் காப்பவன், இறைவனைக் குறிக்கும் பெயர். (இ)

**ரபி**—பரிசுத்தஞானி (இ)

**ரம்சான்** — 1. பிரதிதினமும் உதயமுதல் அத்தமனம்வரை பட்டினிவிரதமிருந்து கொண்டாடப்படுவதும் முகம்மதியர் வழங்கும் மாதங்களுள் ஒன்பதாவதுமான மாதம். (W) 2.ரம்சான் மாதத்துக் கடைசி நாளிற் கொண்டாடப்படும் ஒரு முகம்மதிய பண்டிகை

**ரம்பாதிருதியை**— பார்வதியை வாழைமரத்தில் ஆவாகனஞ் செய்து வழிபடும் சியேட்ட மாதத்துச் சுக்கில பட்சத் திருதியை. (பஞ்)

**ரம்பா விரதம்**— ரம்பாதிருதியையன்று செய்யும் விரதம் (பஞ்.)

**ரம்ஜான்**—ரம்சான் பார்க்க.

**ரமா,**

**ரமை**—இலக்குமி

**ரஹ்மான்**—கடவுள் (Arab)

**ரஹீம்**—கடவுள் (Arab)

## ரா

**ராமானுசம்**— தென்கலைத் திருமண்காப்பிலிடுகின்ற பாதம் (வை.)

**ராமானுசன்**—1.இலக்குமணன் 2. இராமானுசர் பார்க்க.

**ராயப்பர்**— [St. Peter] பேதுரு என்ற கிறிஸ்தவப் பெரியார்.

**ராஜராஜேசுவரி** — துர்க்கை

**ராஸக்கிரீடை** — கண்ணபிரான் கோபிகைகளுடன் ஆடிய கூத்து வகை.

## ரி

**ரிசாலத்** — இறைத்தூதுத்துவப் பணி (இ)

**ரிஷபதீபம்**— கோயில் தீபவகை

**ரிஷபதேவர்**— நந்திதேவர்

**ரிஷிபஞ்சமி**—மாதர் நோற்கும் நோன்புகளில் ஒன்று. புரட்டாசி, வளர்பிறை, பஞ்சமி திதியில் நோக்க வேண்டியது. (பஞ்.)

**ரிஷபவாகன தேவர்** — சிவபெருமான்

## ரு

**ருத்ராக்ஷம்** — சிவபக்தரால் தரிக்கப்படுவது, உருத்திராட்ச மணி.

**ரூபஸ்தவம்** — ஸ்தவம் மூன்றனுள் தெய்வத்தின் உருவத்தை வருணிக்கும் துதி.(ச)(மேருமந். 64, உரை)

**ரூபாரூபம்** — சகளநிட்களம் பார்க்க. (சை) ரூபாரூபமான தோ. (சி. சி. 1, 38)

**ரூஹ்**— ஆன்மா (இ)

**ரோதயித்திரி** — திதிகிருத்தியமும் திரோபவ கிருத்தியமும் செய்யும் சிவசக்தி (சை) (சி. சி 1,60, ஞானப். உரை)

## ல

**லட்சுமி**— இலக்குமி (தக்கயாகப். 38, உரை)

**லபோலபோ பண்டிகை**— காமன் பண்டிகை. (Loc).

**லம்போதரன்**— விநாயகன்

**லயாவத்தை** — பிரபஞ்சத்தை ஒடுக்குநிலை. (சி. போ. பா. பக். 25)

**லலிதாதேவி** — உமாதேவி

**லக்ஷ்மீகாந்தன்** — திருமால்

**லக்ஷ்மீநரசிம்மன்** — இலக்குமி தேவியைத் தழுவிய கோலத்துடன் உள்ள நரசிங்கமூர்த்தம்

**லக்ஷ்மீநாராயணன்** — இலக்குமி தேவியைத் தழுவிய கோலத்தோடு காணப்படும் திருமாலின் மூர்த்தம்

**லக்ஷ்மீ பஞ்சமி** — இலக்குமி தேவிக்குரிய சைத்திரமாதத்துச் சுக்கிலபட்ச பஞ்சமிதிதி.

**லக்ஷதீபம்** — கோயிலில் ஒரு லட்சம் தீபம் ஏற்றல்

**லாஇலாஹ இல்லல்லாஹ்** — வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை (இ)

**லாசகுன்**— சிவன்

**லாவத்தை** — பிரபஞ்சத்தை ஒடுக்குநிலை (ஊச)

**லிங்கம்**— சிவபெருமான், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும்படி கொண்ட நிர்குண சொருபமாகிய சகள வடிவம் (ம. த. அ). விழுந்தது லிங்கம் திருமத். 455)

**லிங்க வடிவின் தத்துவம்**— லிங்கத்தின் பீடமும் லிங்கமும் சதாசிவ வடிவம், அது கன்ம சாதாக்கிய வடிவம் எனவும் படும். பீடம் சக்தியையும், லிங்கம் சிவத்தையும் குறிக்கும். இந்தச் சாதாக்கியத் திருமேனி சர்வ ஆன்மாக்களையும், சர்வ அண்டங்களையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் பரமகாரணனை விளக்குவதாகும் (ம. த. அ)

**லிங்காயத்து** — லிங்கங்கட்டி, வீரசைவம்

**லிங்கோத்பவர்**— சிவன். (லிங்கத்தில் தோன்றியருளிய திருக்கோலம்)

**லீலாமானுஷன்** — மானுஷவேஷதாரியான கடவுள்

**லீலாவிபூதி**— பிராகிருதவுலகங்கள். (ஈடு, 3, 10, 7)

**லீலை**— தெய்வ முதலியவற்றின் விளையாடல். (ஈடு, 3, 10, 7,)

**லுஹர்**, நண்பகல் தொழுகை(இ)

**லெச்சி** — இலக்குமி

**லெவை**— பள்ளிவாசல் புரோகிதஞ்செய்வோன் (இ)

**லோகசாக்ஷி**— கடவுள்.

**லோக தருமிணி**,

**லோகதன்மணி**— உலோகதருமிணி (பார்க்க) (சி. சி. 8, 5, மறைஞா.)

**லோகமாதா**— இலக்குமி (loc)

**லோபை**— பார்வதி (கூர்மபு. திருக்கலி. 22)

**லௌகீகன்** — சமயவொழுக்க விதிகளைச் சரிவரப் பின்பற்றாதவன்.

# வ

**வக்கிரதந்தன்**— யமன் (நாமதீப. 87.)

**வக்கிரதுண்டன்** — பிள்ளையார் (நாமதீப. 28)

**வச்சிரக்கோட்டம்** — வச்சிராயுதம் நிற்கும் கோயில் (சிவப். 5, 141)

**வச்சிரசூசி** — நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று

**வச்சிரதரன்**—இந்திரன். (தாயு. பரிபூரணா. 9)

**வச்சிரதுண்டன்** — விநாயகக் கடவுள். (யாழ். அக.)

**வச்சிரபாணி**—இந்திரன் (பிங்.)

**வச்சிரவராகி**—சமணர் வணங்கும் ஒரு தேவதை (யாழ்.அக.)

**வச்சிரி**—இந்திரன் (இலக். அக.)

**வசதி**—சினாலயம் (jain Temple) (Loc.)

**வசந்தன்**— மன்மதன் (பிங்.)

**வசந்தோற்சவம்** — கோயிலில் வசந்த காலத்தில் நடைபெறும் விழா. 2. காமன் பண்டிகை.

**வசனாதி**—புறநிலைக் கருவி பதினொன்றனுள் வசனம், கமனம், தானம் விசர்க்கம் ஆனந்தம் ஆகியவற்றைக் கொண்ட தொகுதி (சை) (சிவப். கட்.)

**வஞ்சனி**—1. பார்வதி (நாமதீப. 23) 2. மாயை என்னுந் தேவதை. (கந்தபு. யுத்தகாண் நகர்புகு. 45.)

**வடகலைத் திருமண்,**

**வடகலை நாமம்** — வடகலை வைஷ்ணவர் தரிக்குந் திருமண் காப்பு

**வடபத்திரசாயி**—ஆலிலையில் பள்ளிகொண்ட திருமால்

**வடமலையான்,**

**வடமலைவாண்டன்,**

**வடமலைவாணன்** — திருப்பதித் திருமால், வடமலையாய் அஞ்சேலென்று (அஷ்டப். திருவேங். 6)

**வடமூலகன்** — சிவபிரான் (சங். அக.)

**வண்டுநாணான்** — மன்மதன் (நாமதீப. 59)

**வண்டுருவன்**— திருமால் (நாமதீப. 50)

**வண்ணமாதிருகை**— சரசுவதி (யாழ். அக.)

**வத்திரதுண்டன்**— விநாயகன் (யாழ். அக.)

**வத்திரபங்கி** — ஆன்மார்த்த பூசையில் சிவனது ஐந்து திரு முகங்களையும் பூசிக்கை (சை) (தத்துவப். 64)

**வத்திரபஞ்சகன்** — சிவபெரு மான்

**வத்துநிச்சயம்** — கடவுளது உண்மை தன்மை சொரூபம் என்பவற்றைப் பற்றிச் செய்யும் முடிவு. (தத்) (யாழ். அக.)

**வத்துபரிச்சேதம்** — ஒன்று இன்னபொருளாகத்தான் இருக் கும் இன்ன பொருளாக இராது என்று பொருளினால் அள விடுகை (தத்) (வேதா. சூ.36)

**வத்துபேதம்** — அஸ்திநாஸ்தி வாதம்— (ச)

**வந்தனை வழிபாடு** — கடவு ளுக்குச் செய்ய வேண்டிய வணக்கமும் பூசையும்

**வந்திக்கை** — ஸ்தோத்திரம் செய்கை.

**வநசகர்ப்பன்**—பிரமன்

**வநஜநாபி**—திருமால்

**வநஜாநன்**—பிரமன்

**வயந்தமன்னன்**

**வயந்தன்**—மன்மதன்

**வயிச்சிரவணன்** — குபேரன்

**வயிட்டணவம்**—வைஷ்ணவம்

**வயிட்டணவன்** — வைஷ்ண வன் (திவ். பெரியாழ். 5,1,3)

**வயிணவம்** — மால்சமயத்தோர் மதம்

**வயிந்தவம்** — மாயை (தத்). வயிந்தவத்தின் கலக்கந்தரு ஞானம். (சி. சி. 11,2)

**வயிரவம்**—ஓர் அகப்புறச்சமயம் (சை) [The Bhairava sect]

**வயிரவன்**— சிவமூர்த்தங்களுள் ஒன்று

**வயிரவி**—துர்க்கை

**வயினதேயவாகனன்** — திரு மால்

**வர்ணரூபிணி**—சரசுவதி

**வர்ணாத்துவா** — அத்துவா ஆறனுள் ஒன்றாகிய அக்கரங் கள் வடிவிலுள்ள மோட்சகதி (சை) (சி. சி. 8,6,. மறைஞா.)

**வர்த்தமான மகாவீரர்**— இரு பத்து நான்காவது தீர்த்தங்கரர்

**வர்த்தமானர்**— 1. இருபத்து நான்கு தீர்த்தங்கரருள் இறுதி யானவர் (திருக்கலம் காப்பு, உரை.) 2. கடவுள். சாதகீத வர்த்தமானர். (தேவா, 107, 10)

**வரதராஜர்** — கச்சித்திருமால்

**வரதன்**— அரன் அரி, அருகன், கடவுள்

**வரதை** — பார்வதி. (கூர்மபு. திருக். 22.)

**வரப்பிரசாதம்** — கடவுளரின் அருட்கொண்ட (தனிச். சிந். 231, 18)

**வரலஷ்மி விரதம்**—வரலட்சுமி பூசிக்கும் விரதம், இவ்விர தத்தை மேற்கொள்ளும் பெண் டிர் மாங்கல்யம் சௌபாக்கியம் பெறுவர். சிராவண மாதத்துப் பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையன்று நோற் கும் நோன்பு. (பஞ்)

**வரவண்ணினி**— 1. இலக்குமி 2. பார்வதி 3. சரசுவதி (யாழ். அக.)

**வரவிருத்தன்** — சிவபிரான் (யாழ். அக.)

**வரன்**—1. அயன், 2. அரன், 3. கடவுள், 4. சீவன் முத்தருள் பிரமவரரெனப்படும் வகை யினன்.

**வராககற்பம்**— திருமால் வரா காவதாரங் கொண்ட காலம். (பரிபா. 2, 16, உரை.)

**வராகசம்மாரர்** — சிவபெரு மானது மூர்த்தங்களு ளொன்று

**வராகத்துவாதசி**—மாகமாதத் தில் சுக்கிலபட்சத்துத் துவாதசி யன்று திருமாலைக் குறித்துக் கொண்டாடப்படும் விரதம் (பஞ்.)

**வராகம்**— 1. திருமாலின் தசாவ தாரத்துள் பன்றியுருக்கொண்ட அவதாரம் (பிங்.) 2. வராகா தனம் (சை) (தத்துவப். 108) 3. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**வராக முத்திரை**— கரமுத்திரை வகை

**வராகன்** — அருகன் (அரு. நி.) திருமால் (பிங்)

**வராகாதனம்** — பன்றியைப் போலக் காலுங் கையுமூன்றித் தலை கவிழ்ந்திருக்கும் ஆசன வகை (சை.) தத்துவப். (108, உரை)

**வராகாவதாரம்** -- திருமாலின் தசாவதாரங்களுள் பன்றியுரு வெடுத்த அவதாரம்

**வராங்கன்**—திருமால்

**வராலிகை,**

**வராளிகை**— துர்க்கை, பகவதி, காளி (யாழ். அக.)

**வரேசுவரன்**—சிவன்

**வரேந்திரன்,**

**வரைசிறகரிந்தோன்** — இந் திரன். (யாழ். அக.); (கல்லா. 30, 8)

**வரைப்பகை**— இந்திரன்

**வல்லணங்கு**— காளி (பிங்.)

**வல்லபமதம்**—வைணவமத சித்தாந்தத்தில் ஒரு பகுதி

**வல்லபி**—பார்வதி (நாமதீப.23)

**வல்லபை,**

**வல்லவை**— விநாயகரின் தேவி (சூடா.) வல்லபைத் திருவோடுனை வழிபட (காஞ்சிப்பு. அனேகதந். 10)

**வல்லபை கணேசர்**— விநாயகர்

**வலம்புரிவிநாயகர்**— விநாயக பேதத்துள் ஒன்று

**வல்லவைமன்** — விநாயகன் (நாமதீப. 28)

**வலவன்**—திருமால் (பிங்.)

**வலவை**— 1. விநாயகன் தேவி. வலவை கேள்வனும் (உபதேசகா. சிவவிரத 192) 2. காளி (பிங்.)

**வலாரி**—இந்திரன் (தணிகைப்பு. சீபரி. 20)

**வழிபடு கடவுள்,**

**வழிபடுதெய்வம்**—ஒருவன் தன் குலத்துக்கும் தனக்கு முரித்தாக வணங்கும் கடவுள் (குறள். அவ.)

**வழிபாடு**— 1. பூசனை (பிங்.) 2. சமயக்கோட்பாடு

**வள்ளி**—முருகக்கடவுளின் தேவி குறவர் மடமகள்....வள்ளியொடு (திரு முரு. 101)

**வள்ளிகேள்வன்** — முருகக் கடவுள் (பிங்.)

**வள்ளிநாச்சியார்** — விஷ்ணு மூர்த்தியின் வலக்கண்ணரின் பிறந்த குமாரி, குமரக்கடவுளை மணந்தவள். (திருமுரு. பக்.47, கீழக்குறிப்பு)

**வள்ளிநாயகி** வள்ளி பார்க்க.

**வள்ளிமணவாளன்**—முருகன் (சூடா.)

**வளிநிலை**—கோபுரம்

**வளிமகன்**—அனுமான்

**வறட்சுண்டி**—பிரமன்

**வன்குருசு** — நிர்த்தாட்சிணியமான சிலுவை (கி)

**வன்மீகநாதர்,**

**வன்மீகர்**—திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான். (திருவாரூ. பு. வன்மீக, 83)

**வன்றொண்டர்**—சுந்தரமூர்த்தி நாயனார் பார்க்க. (தேவா. 942, 10)

**வன்னரூபி**— 1. உமை (காஞ்சிப்பு. சனற்குமா. 18) 2. சரசுவதி (சங். அக.)

**வன்னி கர்ப்பன்**— முருகக் கடவுள்

**வன்னிகருப்பன்** — இலிங்கம்

**வன்னிபூ**—முருகக்கடவுள் (பிங்)

**வன்னியராயன்** — ஒரு கிராம தேவதை, (குற்றா. குற, 70)

**வன்னிரேதா** — சிவபிரான் (காஞ்சிப்பு. சனற். 22)

**வனசங்கரி**—துர்க்கை

**வனசன்**—காமன் (பிங்.)

**வனசை**—இலக்குமி (சங். அக)

**வனதுர்க்காதேவி**,

**வனதுர்க்கை**—துர்க்கை (தக்கயாகப். 54, வரை.)

**வனதேவதை**— காடுறை தெய்வம். (கம்பரா. சடாயுவுயிர் நீ. 78)

**வனப்பகையப்பன்** — சுந்தரமூர்த்தி நாயனார். (தேவா. 924, 10)

**வனமாலி**— திருமால் (பிங்)

## வா

**வாக்காள்**—சரசுவதி (பிங்.)

**வாக்கியை**—பார்வதி (கூர்மபு, திருக்கலி. 22)

**வாக்கின் செல்வி** — நாமகள் (திவா)

**வாக்கு**—சரசுவதி

**வாக்குத்தீட்சை** — வாசக தீட்சை பார்க்க (சை)

**வாக்குதேவி**,

**வாக்குவி**—சரசுவதி

**வாக்சோதி** — அருகக் கடவுள் திருமேனியின் முச்சோதிகளில் ஒன்று. (மேருமந். 65, உரை)

**வாகாசனி**—புத்தன்

**வாகீசர்**— திருநாவுக்கரசு நாயனார். (பெரியபு. திருநாவுக். 1.)

**வாகீசன்** — பிரமன். (யாழ். அக.)

**வாகீசுவரி** — 1. சரசுவதி 2. பார்வதி

**வாகீசை**— சரசுவதி (சங். அக.

**வாகுலேயன்**— முருகக் கடவுள்

**வாகேசி** — பார்வதி, மாமாயை வாகேசி. (திருமந். 1925.)

**வாகைவில்லான்** — மன்மதன் (நாமதீப. 59, உரை.)

**வாசகதீக்கை** — மந்திரத்தை உபதேசித்தல்

**வாசகதீட்சை, வாசகம்**— தீட்சை ஏழனுள் பஞ்சாக்ஷரத்தைப் பதினொரு மந்திரங்களுடன் உச்சரிக்கும் முறையைக் குரு சீடனுக்கு உபதேசிக்குந் தீட்சை (சை) (சி. சி. 8, 8, சிவாக்.)

**வாசம்**— சரசுவதி

**வாசவன்**— இந்திரன். (மணி. 24, 69)

**வாசவன் மருகோன்**—முருகக் கடவுள் (நாமதீப. 30.)

**வாசனாமலம்** — வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்கும் பிராரத்தம் (சை) (சி. போ. 9, சூர்ணி. 3)

**வாசிகதீட்சை** — வாசகதீட்சை பார்க்க (சைவச. ஆசாரி. 65. உரை)

**வாசிகம்**— தியானம் செய்வது

**வாசு**— திருமால், கடவுள். (யாழ். அக.)

**வாசுதேவம்**— நூற்றெட்டுபதிடதங்களுள் ஒன்று

**வாசுதேவன்**— கண்ணபிரான். (திவ். பெருமாள். 6, 1) திருமால். (பிங்.)

**வாசுபூச்சியர்** — தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர். (ச)

**வாட்படையாள்** — துர்க்கை (பிங்.)

**வாணகன்** — திருமால் (யாழ். அக)

**வாணலிங்கம்** — வாணாசுரனாற் பூசிக்கப்பட்டதும் நருமதையில் அகப்படுவதுமான லிங்கவகை. (சைவச. பொது. 85.)

**வாணாரி**— திருமால்

**வாணி**— சரசுவதி (பிங்.)

**வாணிகேள்வன்,**

**வாணிமன்,**

**வாணீசன்**— பிரமன் (சூடா.)

**வாதராயணன்** — வியாசமுனிவன். (குற்றா. தல. திருநட. 39)

**வாதவூரர்** — மாணிக்கவாசகர் (திருவாலவா. கடவுள். 21)

**வாமதேவம்** — 1. சிவனைம் முகத்தொன்று (சைவச. பொது 332, உரை.) 2. சைவ மந்திர வகை).

**வாமதேவன்** — சிவபிரான். வண்டார் கொன்றையாய் வாம தேவா. (தேவா. 1028, 5) (பிங்.)

**வாமநூல்**— பௌத்த நூல்

**வாமம்**— 1. அகப்புறச் சமயம் ஆறனுள் அனைத்துலகும் சத்தியின் பரிணாமமே என்றும், சத்தியுடன் இலயித்தலே முத்தி யென்றும் கூறும் மதம். (சி. போ. பா. அவையடக். பக்.50) 2. சிவன் ஐம்முகத்தொன்று

**வாமலோசனன்**— திருமால்

**வாமலோசனை** — இலக்குமி

**வாமன்** — அருகன். (வார் தளிர்ப் பிண்டி வாம. (சீவக. 3018) 2. புத்தன் (மணி. 5, 77.) 3. சிவபிரான். கங்கை சூடும் வாமனை. (தேவா. 1050, 4,)

**வாமனன்** — தசாவதாரத்துள் குறள்வடிவாய் அவதரித்த திரு மால் (பிங்.)

**வாமனாசாரியர்**— மேருமந்திர புராணம் இயற்றிய சைன ஆசிரியர். (மணி. அரும். பக். பக். 516)

**வாமனார்** — புத்தனார்

**வாமனாவதாரம்** — குறள் வடிவமான திருமாலவதாரம்

**வாமி**—இலக்குமி, சரசுவதி, ஒரு சிவசத்தி (யாழ். அக.)

**வாய்மை**— துக்கம், துக்கோற் பத்தி, துக்கநிவாரணம், துக்க நிவாரணமார்க்கம் என நால் வகைப்பட்ட பௌத்தமத உண் மைகள். (பௌ) ஒன்றிய வுரையே வாய்மை நான்காவது (மணி. 30, 188)

**வாயசதுகண்டன்**— விதாயகன்

**வாயிலார்நாயனார்**— தாயன் மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**வாயின் மாடம்** — கோபுரம். (பெருங். மகத. 3, 31)

**வாயு சம்பவன்** — அனுமான். (யாழ். அக.)

**வாயுலிங்கம்** — பஞ்சலிங்கத் துட் சீகாளத்தியிற் கோயில் கொண்ட சிவலிங்கம்

**வாரணகேதனன்** — முருகன்

**வாரணன்**— கணபதி. (தேவா. 785, 10)

**வாராக்கதி** — முக்தி (ச) வாராக்கதி யுரைத்த வாமன (சீவக. 1247.)

**வாராகம்**— திருமாலின் பன்றிய வதாரம் (திவ். பெரியதி. 4. 7, 8)

**வாராகன்** — பன்றியவதார மெடுத்த திருமால் (அஷ்டப். திருவரங்கத்தந். 60)

**வாராவுலகம்** — சுவர்க்கம். வாராவுலகருள வல்லாய் நீயே. (தேவா. 800. 9)

**வாரிசன்** — திருமால் (யாழ். அக)

**வாரிசாலயன்**— பிரமன் (தக்க யாகப். 67, பி-ம்)

**வாரிசாலையன்** — வருணன் (தக்கயாகப். 67)

**வாரிவணநாதன்** — சிவபெரு மான்

**வாலமுத்தையன்** — முருகன்

**வாலுகாப்பிரபை** — ஏழு நரகங்களுள் பெருமணல் வட்ட முடையதாகக் கருதப்படும் நரகம். (ச) (சீவக. 2817, உரை.)

**வாள்கைக்கொண்டாள்** — துர்க்கை (சூடா.)

**வாளுழத்தி** — கொற்றவை. (சிலப். 12, உரை.)

**வாளேந்தி**— துர்க்கை. (யாழ். அக.)

**வான்மகள்**— இந்திராணி. (திரு வாரு. 114)

**வான்றேர்ப்பாகன்**—மன்மதன் (மணி. 20, 91)

**வானதிச் சடையன், வானதி சூடி**—சிவபெருமான்

**வானவர் முதல்வன்,**

**வானவர் முதுவன்**— பிரமன் (திவா); (பிங்.)

**வானவருறையுள்**— கோயில். (திவா.)

# வி

**விக்கிரகம்** — கடவுளின் அருச் சனாபிம்பம். (இருசமய. வைதிக திருவா. 18)

**விக்கினகரன்,**

**விக்கினநாசன்,**

**விக்கினநாயகன்,**

**விக்கினராசன்,**

**விக்கினவர்த்தனர்,**

**விக்கினவிநாசனன்,**

**விக்கினவிநாசன்,**

**விக்கின விநாயகன்,**

**விக்கினேசுவரன்—**

விநாயகன் துன்பம் துடைப்ப வன்.)

குமரனும் விக்கினவிநாயகனும் (தேவா. 259, 10)

**விக்னப்ரசாதர்—** சிவன் (விக்னேஸ்வரனுக்கு அனுக்கிரகம் செய்தவர்)

**விகங்ககேதநன்,**

**விகங்கத்துவசன்—** திருமால். பிரமன்

**விகுஞ்சி** — சிவன், திருமால் பிரமன்

**விகடசக்கிரவிநாயகர்** — திருமாலின் சக்கரத்தை விரபத்தரரிடமிருந்து பெறும் பொருட்டு விகடஞ்செய்ததால் விகடசக்கிர விநாயகர் எனப் பெயர் வந்தது.

**விகடசக்கரன்** — காஞ்சிபுரத்துக் கோயில் கொண்டுள்ள கணபதி

**விகாரம்** — பௌத்தாலயம். இந்திர விகாரம் ஏழு மேத்து தலீன். (மணி. 26, 55)

**விகிர்தன்—** சிவன். கடவுள். (தேவா. 997, 7)

**விகேசினை—**விநாயகன்

**விகை—** மோட்சம்

**விச்சாதரர்—** வெள்ளியம் பெருமலை வாழ்நர் வித்தைகளால் தேவர் போல் வாழ்நர். (அ. செ. 55)

**விச்சுவகருமன்** — பிரமன், சூரியன்

**விச்சுவநாதன்** — காசித்தலத்திற் கோயில் கொண்டுள்ள சிவபிரான் (காஞ்சிப்பு. தலவி. 18)

**விச்சுவன்—** சிவன். நெடுமால், இந்திரன்

**விசர்ச்சிகை** — இலக்குமி

**விசாகன்** — முருகக்கடவுள் (திவா.)

**விசாரசருமர்** — சண்டேசுர நாயனார். (பெரியபு. சண்டே. 12.)

**விசாலாட்சன்** — சிவபிரான் (யாழ். அக.)

**விசாலாட்சி—** பார்வதி (யாழ். அக.)

**விசிட்ட ஞானம்—** பதிஞானம்

**விசிதம்—** விபூதி

**விசிஷ்டாத்துவைதம்** —

தத்துவத்திரயங்களுள் சித்து அசித்து என்னும் இரண்டும் ஈசுவரனுக்கு உடலாதலால் அவ்விரண்டும் ஈசுவரனும் ஒன்றேஎன்று கூறும் ராமானுஜ மதம்.

**விசுத்தி**— பந்த நீக்கம் (அத்)

**விசுத்திமார்க்கம்** — துக்க நிவாரணத்திற்குரிய ஸம்மியத் திருஷ்டி ஸம்மியக்ஸங்கற்பம் ஸம்மியக்வாக்கு ஸம்மியக் கருமம் ஸம்மியாஜிவம் ஸம்மியக்வியாயாமம் ஸம்மியக்ஸ்மிருதி ஸம்மியக்ஸமாதி என்ற எண்வகை நெறிகள் (பௌ)

**விசுவகோஜிரு** — இந்திரன், திருமால்

**விசுவசேவியன்** — சிவன்

**விசுவ தேவர்**— சிவபெருமான். (சங். அக.)

**விசுவபோதன்**— புத்தன்

**விசுவம்பரன்,**

**விசுவம்பாரன்** — கடவுள், இந்திரன், திருமால் (யாழ்.அக.)

**விசுவரூப சேவை** — ஆலயத்தில் சுவாமியின் பள்ளியெழுச்சிக் காலத்துச் செய்யும் வணக்கம்

**விசுவருபன்**— 1. கடவுள், 2. திருமால் (யாழ். அக.)

**விசுவருபை** — பார்வதி (கூர்மபு. திருக்கலியாண. 22)

**விசுவான்மா**— பிரமன். (யாழ். அக.)

**விசுவேசுவரி**— பார்வதி (தக்கயாகப். 138, உரை.)

**விசேடதீக்கை** — சமய தீக்கையைவிட விசேடமானது விசேட தீக்கை

**விசேடதீட்சை, விசேடம்** — தீட்சை மூன்றனுள் மாணாக்கனைச் சிவ பூசை செய்தற்கு யோக்கியனாக்கும் இரண்டாவது தீட்சை. (சைவச மாணாக் 5, உரை.)

**விசேஷபம்**— மாயை விசேஷப சக்தியினால் உலகத்தைத் தோற்றுவிக்கின்றது. (இந்திய தத்துவ ஞானம், பக். 320)

**விசையசாரதி**—கண்ணபிரான் (நாமதீப. 45)

**விசையன்** — சிவன், அருச்சுனன்

**விசையை**—பார்வதி (நாமதீப. 24.)

**விஞ்சை**— பரப்பிரமத்தைப் பற்றின ஞானம். (கம்பரா. பிணிவீட். 122)

**விஞ்ஞானகலர்**— ஆணவ மலம் ஒன்றேயுடைய ஆன்மாக்கள் (தத்) (திருமந். 2241)

**விஞ்ஞான கேவலி**— விஞ்ஞானகலருள் ஆணவமிகுதியால் நெடுங்காலமாகப் பரமுத்

தியை யடையாமல் கேவலநிலை யைப் பொருந்திக்கிடப்பவர். (சி.சி.8,2, மறைஞா.)

**விஞ்ஞானம்**— 1. பஞ்சகந்தத்துள் ஒன்றாய் ஏனைய நான்கு கந்தங்களின் உண்மை நிலையை அறியும் அறிவு, (பௌ.) மணி. 30,33) 2. சிவபிரானது ஞான சத்தி (சை.) (அஷ்டப். இரத்தின.)

**விஞ்ஞானமயகோசம்**— பஞ்ச கோசத்துள் ஒன்றாய் அறிவு மயமாயுள்ள கோசம் (தத்). (சி.சி.பர,மாயா.8)

**விஞ்ஞானவாதி**— அறிவு மாத்திரமே உள்ளது என்று கூறும் யோகாசாரன் (தத்) (சி.போ.பா. அவையடக். பக். 12.)

**விஞ்ஞானாகலர்**— ஆணவமல மொன்றே யுடைய ஆன்மாக்கள் (தத்) (பவுஷ்கரம். 224.)

**விஞ்ஞானான்மவாதி**— பிரமமே ஆன்மா என்று வாதிக்கும் மதத்தினன். (சி.போ.வ.தீ.63)

**விட்சேபசத்தி**— சூக்கும பஞ்ச பூதங்களுக்குக் காரணமான மாயாசத்தி (நாஞசி. 150)

**விட்சேபி**— பார்வதி (நாமதீப. 23)

**விட்டரச்சிரவன்**— திருமால்

**விட்டவாசல்**— விசேட காலங்களில் அரசர் முதலியோர் சென்றுவரும் கோயில்வாயில். (திவ். பெரியதி. 8,2,1, வ்யா)

**விட்ட விழுக்காடு**— சுகங்கர்யம் செய்து வைத்த, "மூலபுருஷனுக்காக அவருடைய வீட்டுக்கு மேளதாளத்தோடு அனுப்பும் பிரசாதம். (கோ.த)

**விட்டு**— விஷ்ணு (திருமால்.) விட்டுவே நீயிங்கேவாராய் (திவ். பெரியாழ். 2,3,5)

**விட்டுசித்தர்**— பெரியாழ்வார் (திவ். நாய்ச், 10,10)

**விட்டுணு**— திருமால்

**விட்டுணுப்ரியம்**— துளசி பார்க்க. (சங். அக.)

**விட்டுணுபதம்**— பரமபதம் [visnu's heaven]

**விட்டுணுவல்லபை** — இலக்குமி

**விடகண்டன்**— சிவபிரான் (இலக். அக.)

**விடகலை**— ஒருகலை (A mystic centre in the body) (சை) (பிராசாதமாலை, 2)

**விடங்கன்**— உளியினாற் செதுக்கப்படாது தானே யுண்டான சுயம்புலிங்கம். விடங்கப் பெம்மான். (தியாக. லீலை. கடவுள். 17)

**விடதரன்**— சிவபிரான்

**விடாகபாயி**— இலக்குமி, பார்வதி

**விடாகபி**— இந்திரன், திருமால். அக்கினி, சிவன்

**விடாங்கன்**— சிவன்

**விடாந்தகன்**— (பாற்கடலி லுண்டாகிய விஷத்தைக் கெடுத்தவன்) சிவபிரான்.

**விடைப்பாகன்,**

**விடையவன்,**

**விடையன்,**

**விடையூர்தி,**

**விடையோன்** — சிவபிரான். விமலா விடைப்பாகா. (திரு வாச. 1,34.)

**விண்களகம்**— பரமபதம்

**விண்கோ**— இந்திரன் (நாமதீப. 60)

**விண்டு**— திருமால், (பிங்) தேவ லோகம் (கம்பரா, கிளைகண்டு. 138.)

**விண்டுராதன்** — திருமால்

**விண்ணகர்**— வைகுந்தம். (திவ் இயற். 1,77.)

**விண்ணகரம்** — 1. திருமால் கோயில்; 2. உப்பிலியப்பன் கோயில் என வழங்கும் திரு மால்தலம்.

**விண்ணவன்**— 1. தேவன். 2. அருகன். (சூடா)

**விண்ணரிநாதன்** — இந்திரன்

**விண்ணு**— திருமால். (யாப். வி. 84.)

**விண்ணூர்** — பரமபதம்

**வித்தியாகலை** — பஞ்சகலை யுள் ஒன்றும் காலம் நியதி, கலை வித்தை அராகம் புருடன் மாயை என்ற ஏழு தத்துவங்க ளடங்கியதும் பந்தநிலை நீங்கிய ஆன்மாக்களுக்கு அனுபவஞா னத்தைத் தருவதுமாகிய சிவ சத்தி (சை.) (சி.போ.பா.2,2, பக். 143, புதுப்.)

**வித்தியாதத்துவம்** — சுத்தா சுத்த தத்துவமேழனுள் ஆன் மாக்களுக்குப் பகுத்தறிவைத் தருந் தத்துவம் (சை) (சி.போ. பா. 2,2, பக், 152.)

**வித்தியாதேவி**— சரசுவதி. (சங் அக.)

**விதாதா** — பிரமன். விதாதா வின் தலை கொண்ட செண்டா. (தேவா. 441.5) அருகன். (சூடா.)

**விதாதிரு**— பிரமன். (யாழ்.அக.)

**விதி**— 1. பிரமன் (திவா.) 2. திரு மால் (யாழ்.அக.)

**விதிகபாலி**— சிவபெருமான்

**விதிசிரந்துடிந்தோன்** — சிவ பிரான்.

**விதித்தோன்**— பிரமன், கடவுள் (யாழ். அக.)

**விதிதன்**— புத்தன்

**விது**— 1. விட்டுணு 2. பிரமன். (யாழ். அக) 3. குபேரன் (இலக் அக.) 4. வாயு 5. பாவநிவர்த் திக்காகச் செய்யும் பலி. (யாழ். அக)

**விதேககைவல்லியம்** — பிரம்ம ஞானம் தோன்றி அஞ்ஞான மும் அதன் காரியமாகிய உடம்பு முதலாயினவும் உடன் நசிக்கை (அத்) (வேதா. சூ. 160)

**விதேகை** — முத்தியடைந்த காலத்தில் தன் ஆனந்தவனுபூ தியைத் தியானித்திருக்கை. (சி.சி.4, 35, மறைஞா)

**விந்தியவாசினி** — துர்க்கை (யாழ்.அக.)

**விந்து**— 1. சிவதத்துவம் (ஞா ஞ. 56, 19); 2. சுத்தமாயை (சி.சி.1,19)

**விந்துஞானம்** — சுத்தமாயாக் காரியமான நால்வகை வாக்குக் களா லுண்டாம் சவிகற்ப ஞானம் (சை) (சி.சி. 1,26)

**விந்துதத்துவம்** — சத்திதத்து வம் பார்க்க (சை) (சி.போ.பா 2,2,பக். 139, புதுப்)

**விந்தை**— 1. துர்க்கை (திவா.) 2. பார்வதி (நாமதீப. 22) 3. இலக்குமி (உபதேசகா. சிவவி ரத. 300)

**விந்தைமகள்** — இலக்குமி (நாமதீப. 53)

**விநயசம்பன்னதை** — குருக் கள் முதலாயினாரை உபசரிப் பதில் ஆதுரமுடைமை (ச.) (சீ வக. 3133, கீழ்க்குறிப்பு.)

**விநயபிடகம்** — வியனபிடகம் பார்க்க (பௌ)

**விநாயக சதுர்த்தி** — விநாய கர்க்குத் திருவிழாச் செய்யுஞ் சிராவண மாதத்துச் சுக்கிலபட் சத்துச் சதுர்த்தி. (உபதேசகா. சிவவிரத. 338)

**விநாயகசஷ்டி**— விநாயகபூசை பூர்த்தியாகுந் திதியான மார்க் கசிர மாதத்துச் சுக்கில பட்சத் துச் சஷ்டி. (யாழ்.அக.)

**விநாயகநவராத்திரி**— விநாய கசதுர்த்தியிலிருந்து தொடர்ச்சி யாக ஒன்பதுநாள் விநாயகக் கடவுளைக் கொண்டாடுந் திரு விழா. (J.)

**விநாயகன்** — கணபதி (பிங்.) அருகன் (பிங்.) புத்தன். (யாழ். அக)

**விப்பிரநாராயணன்**— தொண் டரடிப்பொடி ஆழ்வார். (சங். அக.)

**விபக்கம்**— எதிர்க்கட்சி; எதிரிடையான கொள்கை; அனுமான உறுப்புள் துணிபொருள் இல்லா இடம் (மணி)

**விபக்கை கதேச விருத்தி**

**சபக்கவியாபி** — கூறப்படும் ஏது விபக்கத்திலுள்ள பொருள்களில் ஒன்றில் பொருந்தி, சபக்கத்துள்ள பொருகள் எல்லாவற்றிலும் நன்கு பொருந்தி இருத்தல். (மணி)

**விபச்சித்து**— புத்தருள் ஒருவர். (மணி. 30,14, குறிப்பு.)

**விபரீத வெதிரேகம்** — வைதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று; வெதிரேக வாக்கியத்தை மாறுபடச் சொல்வது. (மணி.)

**விபரீதான்னு வயம்**— சாதன்மிய திட்டாந்த ஆபாசம் ஐந்தனுள் ஒன்று. திட்டாந்த உறுப்பாகிய அன்னுவய வாக்கியத்தை முறை பிறழக் கூறுவது. (மணி.)

**விபவம்** — திருமால்நிலை ஐந்தனுள் மச்ச கூர்மாதி அவதார நிலை. (அஷ்டாதச. தத்துவத். 3,49)

**விபாவசு**— சந்திரன், சூரியன்' தீக்கடவுள். (யாழ். அக)

**விபாவரி, விபாவனை**— பார்வதி (கூர்மபு. திருக்கலியாண. 23)

**விபு**— சிவன், திருமால், கடவுள்

**விபுலம், விபுலமதி**— மனப்பரியயஞானம் (ச.) [Direct knowledge of the minds of others their past births, etc.] (மேரு மந். 435. உரை.)

**விபூதி**— 1. கற்பம், அனுகற்பம், உபகற்பம் என மூவகைப்பட்ட திருநீறு. (பிங்.) 2. இது சிவமூர்த்தியின் திருமேனியில் அக்னியில் பூத்தது. சர்வ சங்கார காலத்துச் சிவமூர்த்தி தமது தேகத்தில் தூளனமாகக்கொண்டது ஆதலால் இதனை உலகர் அறிவர்

**விம்பம்**— விக்கிரகம். கடவுளின் விம்பமும். (திருக்காளத். பு. யுக தரும. 16)

**விமரிசை**— பார்வதி (நாமதீப. 24)

**விமலர்**— தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் ஒருவர். (ச) (திருக்கலம். காப்பு. உரை)

**விமலன்**— 1. சிவபிரான் (பிங்,) 2. அருகன் (சூடா.)

**விமலி**— 1. பார்வதி (திருப்பு. 583) 2. சரசுவதி

**விமலை**— 1. சரசுவதி (திவா) 2. இலக்குமி (பிங்.) 3. துர்க்கை (w) 4. பார்வதி (நாமதீப. 22.

**வியத்தலிங்கம்** — உருவத்திருமேனி (சை)

**வியத்தாவியத்தலிங்கம்** — அருவுருவத்திருமேனி (சை)

**வியந்தரர்**— நால்வகைத் தேவருள் ஒரு சாரார் (ச) (மேருமந். 8, உரை.)

**வியந்தரேந்திரர்**— சதேந்திரருள் ஒரு சாரார் (ச.) (மணி. 27,171, உரை)

**வியாபகன்**— கடவுள்.

**வியாபகி**-- எங்கும் வியாபிக்குஞ் சிவசத்தி. விமலை வியாபகி. (சிவதரு. சிவஞானயோ. 22)

**வியாபினி** — சோடசகலைகளுள் ஒன்று (சை) (mystic centre in the body)

**வியாளபூடணர்** — விநாயகர் (பாம்பணியுடையவர்)

**வியோமகேசன்**— சிவன்

**வியோமரூபிணி**— சோடசகலையுள் ஒன்று (சை) (A mystic centre in the body.) (தத்துவப். 142)

**விரசாந்தி, விரசை**-- பரமபதத்தின் புறத்தோர் யாறு (வை) (பிரபோத. 45, 10)

**விரஞ்சன்** — பிரமன் (பிங்.)

**விராகன்**— அருகன் (சது.); கடவுள் (W)

**விரிஞ்சன் விரிஞ்சி** -- பிரமன் (பிங்). (கம்பரா. இரணிய. 1)

**விருகோதரன்**— பிரமன்

**விருடசத்துரு** — திருமால்

**விருடதுவசன்** — விநாயகன், சிவபெருமான்

**விருடபதி**— சிவபெருமான்

**விருடன்** — காமன், திருமால், சீவன்

**விருடாகபாயி**— இலக்குமி

**விருடாங்கன்**— சிவபெருமான்

**விருத்த ஏதுப் போலி**— ஏதுப் போலிகளுள் ஒன்று. இது தன்மச் சொருப விபரீத சாதனம், தன்ம விசேட விபரீத சாதனம், தன்மிச் சொருப விபரீத சாதனம். தன்மி விசேட விபரீத சாதனம் என நான்கு வகைப்படும் (மணி)

**விருத்த வியபிசாரி**— திருந்தாத ஏதுவாய் விருத்த ஏதுவாகிய ஏதுப்போலிக்கும் இடங் கொடுத்து அதனோடு நிற்றல்.

**விருந்தாவனம்**— கண்ண பிரான் விளையாடியதும் யமுனைக்கரையிலுள்ளதுமான ஒரு தலம். விருந்தாவனத்தே கண்டோமே. (திவ்.நாய்ச். 14)

**விருஷபதேவர்**— 1. நந்தி தேவர் 2. முதல் தீர்த்தங்கரர்.

**விருஷபர்**— தீர்த்தங்கரர் இரு

பத்து நால்வருள் ஒருவர் (ச) (திருக்கலம். காப்பு. உரை.)

**விருபக்கண்ணன், விருபாக்கன், விருபாட்சன்**— சிவபிரான் (திருவிளை. அருச்சனை. 11)

**விரையாக்கலி**— 1. சிவபிரானது திருவாணை (பதிறெ. கோயி. 4) 2. சிவபிரானை முன்னிட்டுச் செய்யும் சபத வகை. (பெரியபு. கோட்புலி.4.)

**விரோதிஸ்வரூபம்**— அர்த்த பஞ்சகங்களுள் வீடடைதற்கு இடையூறாயுள்ளதன் தன்மை (வை.) (அஷ்டாதச. பக். 25)

**வில்லவன், வில்லி, வில்லி மோகன்**— மன்மதன் (கலித் 35)

**வில்லைச்சாதம்**— கோயில் களிற் கிடைக்கும் கட்டிச்சாதம்

**வில்வதளம்**— சிவபூஜைக்கு ஏற்றதான மூவிலைகளையுடையதான வில்வத்தழை.

**வில்வம்**— இது சிவமூர்த்தியின் இச்சா ஞானக்கிரியையாய்ப் பூமியில் ஆன்மாக்களின் பாவத்தைப் போக்க அவர் அருளால் கோமயத்தில் உற்பவித்தது.

**விலங்குகதி**— நாற்கதிகளுள் ஒன்றான மிருகப்பிறவி (ச) ஷட்கதியுளொன்று (பௌ.),

**விலாசி**— 1. மன்மதன் 2. சந்திரன் 3. சிவபிரான் 4. திருமால் (யாழ். அக.)

**விவர்த்தகம்**— ஒரு வஸ்து தன் சுவரூபத்தை விடாமல் வேறு சுவரூபத்தைக் காண்பிக்கை (தத்) (வேதா. சூ, 82)

**விவிலிய நூல்**— கிறிஸ்துவசமயத்தின் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கியநூல் (The Bible)

**விவிலியமதம்** — கிறிஸ்தவமதம்

**விழிதருநெற்றியான்**— சிவபிரான்

**விழுப்பாதராயன்** — கோயிலிற் சுவாமி திருமுன்பு கணக்கு வாசிக்கும் உரிமையுடைய மரபினன். (திருவாலவா. அரும்.)

**விளக்குப்புறம்** — ஆலயத்தில் விளக்கிடுவதற்காக விடப்பட்ட இறையிலி நிலம். நந்தா விளக்குப்புறமாகென. (சீவக. 2564)

**விளங்கொளி**— அருகன் (திவா.)

**விளவெறிந்தான்** — திருமால்

**விளாப் பூசை** — சிவாலய உஷத்கால பூசை (Loc.)

**விற்குடி**— அட்டவீரட்டங்களுள் ஒன்றும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளதுமான ஒரு சிவ தலம்.

**விற்குன்று**— மேருமலை (சிவ பிரானது வில்) (தக்கயாகப். 536)

**விறலோன்**— அருகன் (பிங்.)

**விறன்மிண்டநாயனார்** — நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர் (பெரியபு.)

**விறுமன்**— கிராமதேவதை. (யாழ். அக.)

**விறுமா**— பிரமன். (W.)

**வினயபிடகம்**— திரிபிடகத்துள் ஒழுகலாற்றைப் பற்றிக் கூறும் நூற்றொகுதி(பௌ) (அபி.சிந்.)

**வினாயகன்** — விநாயகன் பார்க்க (பொதி. நி.)

**வினைதீர்த்தான்** — விநாயகக் கடவுள் (யாழ். அக.)

**வினையிலி** — கடவுள் (இலக். அக.)

**விஷ்ணு** — திருமால். (தாயு. கருணா. 5)

**விஷ்ணுக்கிரகம்** — திருமால் கோயில். (S. I. I. iii, 3)

**விஷ்ணு சித்தர்** — பெரியாழ் வார் பார்க்க

**விஷ்ணுதீபம்** — வைணவர்கள் அனுஷ்டிக்கும் கார்த்திகை தீபம்

**விஷ்ணுபதி** — புண்ணியகால விசேடம் (பஞ்)

**விஷ்வக்ஸேனர்** — திருமாலின் கணத்தலைவரான சேனை முதலியார். (தக்கயாகப். பக். 322)

**விஷமாட்சன்** — சிவபிரான் (யாழ். அக.)

**விஷமாயுதன்** — காமதேவன் (யாழ். அக.)

**விஷாபஹரண மூர்த்தி**— சிவ மூர்த்தம்

**விஸ்வசக்கரதானம்**—விஷ்ணு மூர்த்தியையும் அவர் தேவிய ரையும் தசாவதார மூர்த்தி களையும் சக்கரத்தில் அமைத் துப் பூசித்துச் செய்யுந் தானம். (அபி. சிந்)

## வீ

**வீகமுத்திரை**— கோயிற்கதவை அடைத்து இடும் முத்திரை.

**வீட்டுமன்** — உருத்திரன்

**வீடுபேறு**— முத்திநிலை

**வீணாசியன்**— நாரதன்

**வீணாதக்ஷிணா மூர்த்தம்** — இசையின் இலக்கணம் அறி வித்த சிவன் திருவுரு.

**வீணாநிபுணை** — சரசுவதி

**வீதசோகன்** — அருகன் (சூடா.)

**வீதபயன்**— திருமால்

**வீதராகன்** — புகதத் சீவன். (2542, உரை.)

**வீதிட்டங்கன்** — திருவாரூரிற் கோயில் கொண்ட உற்சவ மூர்த்தியாகிய சிவபிரான்

**வீமதேவன்** — 1. சிவன் 2. ஏகாதசருத்திரருள் ஒருவன் (பிங்.)

**வீரகன்**— விநாயகன்

**வீரச்செல்வி** — துர்க்கை பிங்.)

**வீரசயனம்**— திருமாலின் சயன நிலைவகை

**வீரசூலி** — ஒரு கிராமதேவதை. (LOC)

**வீரசைவம்** — சைவமதத்தில் இலிங்கதாரணஞ் செய்து கொள்ளுஞ் சமயம்

**வீரசைவன்** — வீரசைவமதத் தான்

**வீரட்டம்,**

**வீரட்டாணம்,** சிவபிரானது வீரம் விளங்கிய தலம் (தேவா. 1222, 2)

**வீரதச்சுவன்** — மன்மதன் (சது)

**வீரபட்டம்** — தெய்வ மூர்த்தங், கட்கணியும் நெற்றியணிவகை

**வீரபத்திரன்** — சிவபிரானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவரும் தக்ஷயாகத்தை அழித் தவருமான கடவுள். (கந்தபு. வீரபத். 14)

**வீரம்**— சிவாகமம் இருபத்தெட் டனுள் ஒன்று. (சைவச. 333, உரை.)

**வீரமாகாளி**— துர்க்காதேவி

**வீரவாகு**— நவவீரருள் ஒருவர். (கந்தபு. துணைவர். 25)

**வீரவைஷ்ணவன்** — மதப் பற்று மிக்க திருமால் சமயத்த வன்

**வீரன்**— அருக—. வீரன் தாள் நிழல் (சீவக. 409)

**வீரஸ்ரீ** — வீரலட்சுமி (சீவக. 771, உரை.)

**வீராசாரன்**—வீரசைவன். (அரு நி. 8)

**வீராட்டகாசன்** — சிவமூர்த்தி பேதம்

**வீரி**— 1. காளி (சூடா). 2. துர்க்கை வேலார்கை வீரியை முன். (தேவா, 597.6)

**வீரியபாரமிதை** — வீரியம் பார்க்க. (மணி. 26, பக். 297)

**வீரியம்** — தசபாரமிதைகளுள் ஒன்று (பௌ.) (நீலகேசி, மொக்கல, 83)

**வீரியாந்தராயம்** — தேகவலி மனவலிகளை உபயோகப்படா மற் றடைசெய்யும் ஊழ்வினை (ச) (சீவக. 3081, உரை)

**வீழி**—தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவீழிமிழலை என்னும் சீவ தலம் (தேவா. 600,9)

# வெ

**வெஃகா** — திருமால் திருப்பதி களுள் ஒன்று. (திவ். இயற். 3,62)

**வெகுருபன்** — 1. சிவபிரான் (யாழ்.அக.) 2. திருமால் (யாழ். அக.) 3 பிரமன் (யாழ். அக.) 4. மன்மதன் (யாழ். அக.)

**வெட்டிவேர்நாணான்** — காமன் (நாமதீப. 59, உரை.)

**வெண்கமலை** — சரசுவதி (இலக். அக.)

**வெண்காட்டுநங்கை** — திரு வெண்காட்டு நங்கை (சிறுத் தொண்ட நாயனார் மனைவி) (அபி. சிந்)

**வெண்காடர்** — பட்டினத்துப் பிள்ளையார்

**வெண்குன்று** — சுவாமிமலை. (சிலப். குன்றக்குரவை, பாட்டு மடை, 1)

**வெண்சலசமுற்றாள்** — சரசு வதி (Sarasvati as seated upon a white lotus) (பிங்.)

**வெண்டாது**— திருநீறு (பிங்.)

**வெண்டாமரைமகள்,**

**வெண்டாமரையாள்**— நாம கள் (பிங்.); (திவா.)

**வெண்ணீறு**— திருநீறு (தேவா 811,2)

**வெண்ணெய்காடும் பிள்ளை**

**வெண்ணெய்க்கூத்தன்** — பாலகிருஷ்ணன்

**வெண்பலி**—திருநீறு (பிங்.)

**வெண்பாவை** — நாமகள் (பூவண. உலா காப்பு.)

**வெண்பூமான்**—நாமகள். (நாபதீப. 56)

**வெண்பொடி** — திருநீறு (பிரமோத். 20,17)

**வெண்மதிப் பாதியான்**— சிவபிரான்

**வெள்ளானையுள்ளோன்** — ஐயனார். (நாமதீப. 43.)

**வெள்ளானையூர்ந்தோன்** — இந்திரன். (நாமதீப. 60.)

**வெள்ளிமலை** — கைலைமலை (திவா.)

**வெள்ளியம்பலம்** — மதுரைக் கோயிலில் நடராஜ மூர்த்திக் குரிய மன்றம். (சிலப். பதி. 40,41)

**வெள்ளியார்**—சிவபிரான் (திவ். பெரியதி. 9,7,9. வ்யா)

**வெள்ளிலையமுது**— தாம்பூல நிவேதனம் (S.I.I.ii, 128)

**வெள்ளுயிர்** — சுத்தான்மா. (திவ். திருப்பல். 8)

**வெள்ளுறி**— சைனத் துறவிகள் கைக்கொண்ட உறிவகை. (பெருங். உஞ்சைக். 36,228)

**வெள்ளை நிறத்தாள்,**

**வெள்ளைப் பணியாள்,**

**வெள்ளை மேனியாள்**— சரசுவதி (பிங்.) (திவா.)

**வெளிச்சப்பாடு** — தெய்வ மேறிக் கூறுதல்

**வெளிமடை** — கோயிற்புறம்பே யுள்ள சிறு தெய்வங்களுக்குப் படைக்கும் பலி. (J.)

**வெற்றரையவர்**— சமணர். (பெரியபு. திருஞான. 785.)

**வெற்றி, வெற்றிமயில்**— துர்க்கை

**வென்றவர்**— சித்த பரமேஷ்டிகள் (ச) (சீவக. 956)

**வென்றவருலகம், வென்றார் தம்வீடு** — ஸித்பதக்ஷேத்திரம் (ச)

**வென்றான், வென்றோன்** — அருகக்கடவுள். (சூளா. காப்பு.)

# வே

**வேங்கடம்**— திருப்பதி என்ற திருமால்தலம்.

**வேங்கடாசலபதி**— திருப்பதி யிலுள்ள திருமால்.

**வேண்டுகோள்**—பிரார்த்தனை (திருவிளை. விறகு. 51)

**வேணாட்டடிகள்**— திரு விசைப்பா இயற்றிய ஆசிரி யருள் ஒருவரான பெரியார். (திருவிசைப்பா. பாயி. 3)

**வேணுகோபாலன்**— புல்லாங் குழல்வாசிக்குங் கண்ணபிரான்

**வேதக்காரன்**— கிறிஸ்தவன்

**வேதகர்ப்பை**— துர்க்கை

**வேதகருப்பன்**— பிரமன் (யாழ். அக.)

**வேதகீதன்**- 1. சிவன், வேதியா வேதகீதா (தேவா. 870,1) 2 கடவுள் (திவ்.திருச்சத்.117)

**வேதசாட்சி**— மதத்தை நிலை நாட்டுவதற்காக உயிர் கொடுத் தவன். R.C.

**வேதசாஸ்திரம்**— 1. வேத மாகிய நூல் 2. வேதங்களும் அதன் அங்கங்களாகிய சாஸ் திரங்களும் 3. சமயஞானம் (கி)

**வேதசிரசு**— உபநிடதம் (சி.போ.வ.தீ.32)

**வேதஞ்ஞன்**— வேதமறிந்தவன் (இலக். அக)

**வேதத்தன்**— பிரமன் (தனிப் பா. 1, 225, 16)

**வேதத்திரயம்**— இருக்கு யசு சாமம் என்ற மூன்று வேதங்கள்

**வேதத்திரயம்**— புருஷவேதம் ஸ்திரீவேதம் நபுஞ்சவேதம் என்ற மூவகைத் தோஷங்கள் (ச)

**வேதநாயகன்**— கடவுள். (கம்பரா. அகலிகைப். 16)

**வேதநாயகி**—1. பார்வதி தக்க யாகப். 609 2. இலக்குமி

**வேதநீயம்**— எண்குற்றங்களுள் ஒன்றாய் இன்ப துன்பங்களை நுகர்விக்கும் கருமம். (ச) (பிங்) (சிலப். 10, 177,உரை)

**வேதபாரகன்**— யூதவேதத்தை விளக்குபவன் (கி)

**வேதபீசம்**— வேதமூலமான பிரணவ மந்திரம்

**வேதபுஸ்கதம்**— விவிலியநூல் (The Bible) (கி)

**வேதம்**— *1.* இந்து சமயிகளுக்குரிய சுருதி, (பிங்) 2. சைனாகமம் (*சிலப்*. 10, 89) 3. விவியநூல் (கி.) 4. சுருதி, நெடுங்காலமாகக் கேட்டல் வழி வந்தது. இறைவனால் ஞானிகளுக்கு உணர்த்தப்பட்டவை வேதங்கள் நான்கு—இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என்பன. (சைவ சமயம். பக். 9.)

**வேதமாதா**— காயத்திரி மந்திரம். வேதமாதாவென விமலமுற்றிடும்.... காயத்திரி. (சேதுபு. சேதுபல. 131.)

**வேதமுதல்வன்**— 1. பிரமன். (*சிலப்*. 14, 48) 2. கடவுள் (*நற்*. 1)

**வேதமுதல்வி**— *1.* சரசுவதி 2. இலக்குமி 3. பார்வதி (பிங்)

**வேதரஞ்சகன்**— பிரமன் (சௌந்த, 26)

**வேதவியாதன்**— வேதத்தை வகுத்த வியாசமுனிவர். (மணி. 27, 5)

**வேதவேத்தன்,**

**வேதவேத்தியன்,**

**வேதவேதாந்தன்** — கடவுள்)தேவா, 399,4)

**வேதன்**— பிரமன், கடவுள் (பிங்)

**வேதனீயம்**— வேதநீயம்பார்க்க (சூடா.)

**வேதனை**— *1.* பஞ்ச கந்தங்களுள் சுகமுந் துக்கமும், அவ்விரண்டின் கலப்புமான உணர்ச்சி — (பௌ.) (மணி, 30, *189-190* உரை) 2. பிறவியின் காரணம் பன்னிரண்டனுள் ஒன்றான நுகர்ச்சி (பௌ) (மணி. 30 *46*, உரை) 3. வேதநீயம் என்னுங் கருமம் (ச)

**வேதா**—பிரமன் (பிங்.); கடவுள் (W)

**வேதாக்கினி**— வேத மந்திரத்தினால் வளர்க்கப்படும் காருகபத்தியம், ஆகவனீயம் தட்சிணாக்கினி என்னும் மூவகை அக்கினி.

**வேதாதி** — வேதத் தொடக்கத்திலுள்ள பிரணவம் (இலக். அக.)

**வேதாதி வண்ணன்**— [ஓங்காரவடிவினன்] கடவுள். (யாழ். அக.)

**வேதாந்தம்** — 1. உபநிடதம். (திவ். பெரியாழ். 4, 3, 11) 2. வியாசராற் செய்யப்பட்டதும் உபநிடதங்களின் பொருளைக் கொண்டதுமான வேதாந்த சூத்திரத்திற் கூறும் உத்தர மீமாஞ்சை மதம். (தக்கயாகப். 246, உரை) 3. அத்துவைரிப் பார்க்க.

**வேதாந்தன்** — 1. கடவுள் 2. அருகன் (சூடா.)

**வேதாந்தி** — 1. உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்தக் கொள்கையினன் 2. அத்துவைதி (சி. சி. அளவை. 1, மறைஞா)

**வேதாளி**—காளி. (பிங்.)

**வேதி**—பிரமன் (அரு. நி.)

**வேதிகை**—1. பலிபீடம் (யாழ். அக.) 2. பூசை செய்யும் இடம் (சை)

**வேதியன்**— 1. பிரமன் (கல்லா. 25, 13) 2. கடவுள் (தேவா. 870, 1)

**வேமானியர்** — (விமானத்தில் சஞ்சரிப்பவர் தேவர், தெய்வமகளிர் (சீவக. 2455)

**வேலன்**— 1. முருகன் (பிங்.) 2. முருகபூசனை செய்பவன் (திருமுரு. 222)

**வேலனாடல்** — முருகக்கடவுள் ஆவேசிப்ப வேலனாடுங்கூத்து (பிங்.)

**வேலாயுதன்** — முருகன் (கந்தரலங். 17)

**வேலிறை**-வேலாயுதன் (சூடா.)

**வேலையிற்றுயின்றோன்** — (பாற்கடலிற் பள்ளிகொண்டவன்) திருமால் (சூடா.)

**வேள்**— 1. மன்மதன் (தேவா. 1172,8) 2. முருகக் கடவுள் (பிங்)

**வேள்விநாயகன்,**

**வேள்வி முதல்வன்**—இந்திரன் (பிங்.) (பரிபா. 5. 31)

**வேள்வியின்பதி** — திருமால் (பிங்.)

**வேற்கோட்டம்** — முருகவேள் கோயில் (சிலப். 9, 11)

**வேனல் வேள்,**

**வேனில் வேள்,**

**வேனிலான்**— மன்மதன் (சீவக 2635)

# வை

**வைகர்ணம்** — திருப்பாற் கடலின் வடபாகத்திலுள்ள திருமாலின் ஆலயம்

**வைகரியகங்காரம்,**

**வைகாரிகம்** — அகங்காரத் திரயத்துள் சத்துவ குணமேனும் இராசத குணமேனும் மேலிட்டிருப்பது (தத்) (வேதா. சூ.69)

**வைகானசன்** — வைகானச ஆகமத்தின்படி ஒழுகுபவன். (நாமதீப. 128)

**வைகுண்டநாதன்**— திருமால் (சூடா)

**வைகுண்டம்** — திருமாலுலகம். (பரிபா. 13, 13 உரை.)

**வைகுண்டன்**—திருமால் (நாம தீப. 47)

**வைகுந்தநாதன்**— வைகுண்ட நாதன் (திவ். திருவாய். 7,9,7)

**வைகுந்தம்** — வைகுண்டம் (திவ். இயற் நான்மு. 79)

**வைசயந்தி** — திருமால் அணியும் மாலை. (சேதுபு.இலக். 22)

**வைசாகசுத்த பௌர்ணிமை**- இதிற் கௌதமபுத்தர் பிறந்தார் என்றும், அவர் ஞானம் பெற்ற தினம் இதுவே என்றுங் கூறுவர்.

**வைசேடி,**

**வைசேடிகம்** — கணாதரால் தாபிக்கப்பட்ட மதம் (தத்) (மணி, 27. 79)

**வைட்டணவன்** — வைஷ்ணவன் (திவ். பெரியாழ். 5, 1, 3)

**வைணவன்** — வைஷ்ணவம், வைணவநிலை. (சிலப். 3, 12, கீழ்க்டிறிப்பு.)

**வைணவாகமம்** — பாஞ்சராத்திரம் வைகானசம் என இரு வகைப்பட்ட வைணவரின் ஆகமங்கள்.

**வைத்தியநாதர்**—பன்னிரண்டு சோதிலிங்கங்களில் ஒன்று

**வைத்தியநாதன்**— தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வைத்தீசுரன் கோயிற் சிவபிரான். (குமர. பிர முத்துக். பிள்ளைத். 2)

**வைதன்மியதிட்டாந்தம்** — சாத்தியமெய்தா விடத்தில் ஏதுவுமின்மையைக் குறிக்குந் திட்டாந்தம். (மணி. 29, 140)

**வைதன்மிய திட்டாந்தவாபாசம்** — சாத்தியாவியாவிருத்தி சாதனாவியாவிருத்தி உபயாவியாவிருத்தி அவ்வெதிரேகம் விபரீதவெதிரேகம் என ஐவகைப்பட்ட போலியான வைதன்மியதிட்டாந்தம், (மணி. 29, 334-5)

**வைதன்மியம்** — ஒப்பின்மை. (மணி.)

**வைதிகசைவம்** — வேதநெறிப்பட்ட சைவமதம் (தாயு. ஆகாரபு. 10)

**வைதிகம்** — வேதநெறிப்பட்டது.

**வைதிகவாரணம்** — திருஞானசம்பந்த மூர்த்தி

**வைதேவி,**

**வைதேகி** — சீதாதேவி (நாம தீப. 184)

**வைபாடிகம்** — பௌத்த மதப் பிரிவு நான்கனுள் ஒன்று (பௌ) (வேதா. சூ. 24)

**வைபாடிகன்** — வைபாடிக மதத்தைச் சார்ந்த பௌத்தன் (பௌ)

**வைரவம்** — ஒரு சமயம், சைவ சமயக் கோட்பாடுகள் பலவும் உடன்பாடு. இச் சமயத்திற்கு சிவபிரான் தமருகந்தரித்த மூர்த்தியாய் அருள் செய்வர்.

**வைஷ்ணவம்** — திருமாலைப் பரம் பொருளாகக் கொண்ட சமயம்

**வைஷ்ணவன்** — வைஷ்ணவ சமயத்தான்

**வைஷ்ணவி** — சத்தமாதருளொருத்தி (சைவச. பொது. 74, உரை)

# ஜ

**ஜகதீசன்**—கடவுள்

**ஜகந்நாதன்**— திருமால்

**ஜகந்மாதா** — 1. பார்வதி 2. இலக்குமி

**ஜங்கமம்** — சிவனடியார்

**ஜங்கமர்**— இலிங்கங்கட்டி சாதியார்

**ஜங்கமலிங்கம்** — வாயுலிங்கம் (சித். சிகா. பக். 201)

**ஜமீல்**— (அழகானவன்) அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஒன்று (இ)

**ஜயந்தி**— 1. ஸ்ரீஜயந்தி 2. அவதார புருஷர் முதலிய பெரியோரின் பிறந்த நாள் கொண்டாட்டம்

**ஜலசாரணர்**— இருத்தியடைந்த சமணருள் ஒரு சாரார்

**ஜலந்தரர்** — சிவபிரான் (சலந்திரனை வென்ற கோலம்)

**ஜலபவித்திரம்** — திருமஞ்சன காலத்திற் கோயின் மூர்த்திக்கு அணியும் ஆடை (S.I.I. iii, 315)

**ஜன்மதோஷம்** — சன்மபாவம் (கி)

**ஜன்மாபிஷேகம்** — அருகதேவனது பஞ்ச கல்யாணங்களுள் ஒன்று (ச) (மேருமந். 8, உரை)

**ஜனார்த்தனன்** — விஷ்ணு, திருமால்

**ஜாக்கிரதாவஸ்தை** — சாக்கிரமம் (தத்) (Waking state)

**ஜாதககதை** — புத்தரது முற்பிறப்புக்களைப் பற்றியகதைகள்

**ஜாபாலம்**— நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று

**ஜாபாலி** — நூற்றெட்டுபநிடதங் களுள் ஒன்று

**ஜாயமாநகடாக்ஷம்**—பிறக்கும் போது நேருங் கடவுளின் அருட் பார்வை (வை)

# ஜி

**ஜிப்ரீல்**— வானவர் கோன். (இ)

**ஜினபதி**— அருகன்

**ஜினபவனம்,**

**ஜினாலயம்**— அருகன் கோயில் (மணி. 3, 87. அரும்.)

**ஜிஷ்ணு**— விஷ்ணு, திருமால் (S.I.I.ii.530)

**ஜிஹாத்** — இறைவனின் மார்க் கத்தை ஓங்கச் செய்திட பெரு முயற்சி செய்வது (இ)

**ஜிம்ஆ**— வெள்ளிக்கிழமை நடை பெறும் வாரத்தொழுகை (இ)

**ஜீயர்**— வைஷ்ணவ சந்நியாசி

**ஜீல்ஜலாலி,**

**வல்இக்ராம்** — (மன்னிக்கும் குணமுடைய மாண்பு மிக்கவன் அல்லாவின் பெயர் (இ)

**ஜீவரக்ஷை**— மோட்சம் (இரக்ஷ ணிய. 324.)

**ஜீவவிருட்சம்** — ஜீவனை நிலைத்திருக்கச் செய்யுங் கனி யைக் கொண்ட மரம். (விவிலி. ஆதி. 2, 9)

**ஜீவன்முக்தர்** — பரமஞானிகள் (இரக்ஷணிய. 202.)

**ஜீவாதிபதி**— ஜீவசிரேஷ்டரான கிறிஸ்துநாதர் (விவிலி. அப். 3, 15)

**ஜீவாதிபன்** — கிறிஸ்துநாதர். (இரக்ஷணிய. 139)

**ஜீவாஸ்திகாயம்** — பஞ்சாஸ்தி காயத்து ஒன்றனா ஆன்மா (ச.)

**ஜீவிதேசன்** — இயமன்

**ஜீன**—தீய உணர்ச்சிகளை ஒழித் தவர் (ச)

**ஜேசு** — இயேசுநாதர் (இரக்ஷ ணிய)

**ஜைமினிமதம்**— ஜைமினி முனிவர் தாபித்த பூர்வ மீமாம்சை மதம்

**ஜைனதரிசனம்**— ஜைன சமயம் (மேருமந். பாயி. 41)

**ஜைனன்** — சமண மதத்தினன்

**ஜைனாகமம்** — சைனா கமம் (The Scriptures of the Jains)

**ஜோதி** — பூசையில் ஏற்றும் விளக்குவகை

**ஜோனகன்** — முக்ம்மதியன் S. I. I. ii, 470)

# ஸ்ரீ

**ஸ்ரீ**—இலக்குமி

**ஸ்ரீகண்டன்**—சிவன்

**ஸ்ரீகாந்தன்**—திருமால்

**ஸ்ரீகீதை** — பகவத்கீதை (மதுரைக். 763. உரை.)

**ஸ்ரீகோயில்**—1. கோயில் 2. அருகக் கடவுளின் கோயில் (சீவக. 912 உரை.)

**ஸ்ரீசக்கரம்** — தேவிக்குரிய யந்திரவகை (தக்கயாகப். பக். 281)

**ஸ்ரீசூர்ணம்** — திருமண் பாதங்களின் இடையிலிடப்படும் செம்மை அல்லது மஞ்சள் நிறமான பொடி.

**ஸ்ரீதரன்**—திருமால்

**ஸ்ரீதேவி** — சீதேவி (தக்கயாகப். 775, உரை)

**ஸ்ரீநிவாஸன்** — திருப்பதிமலைமேற் கோயில் கொண்டுள்ள திருமால்

**ஸ்ரீபதி** — விஷ்ணு (திருமால்)

**ஸ்ரீபாதந்தாங்கி**— கோயில் மூர்த்தியுள்ள வாகனத்தைத் தோளில் தாங்கி எழுந்தருளப் பண்ணுவோன்.

**ஸ்ரீபாதரேணு**— திருப்பதிப் பெருமாளின்மேல் இடப்பெற்றுப் பின்பு பிரசாதமாக வழங்கப்பெறும் பச்சைக்கர்ப்பூரம் முதலியன சேர்த்த கலவைப் பண்டம்

**ஸ்ரீபீடம்**— தெய்வங்களின் சிலைகளை நிறுத்தும் ஆதாரக் கல்

**ஸ்ரீபுராணம்**— தீர்த்தங்கரர் இருபத்துநால்வருடைய சரித்திரத்தைக் கூறும் மணிப்பிரவாள நூல்.

**ஸ்ரீமங்கலி** — உமாதேவி (தக்க யாகப். 292, உரை)

**ஸ்ரீமூர்த்தி** — சாளக்கிராமம் பார்க்க.

**ஸ்ரீரங்கநாதர்** — ஸ்ரீரங்கத்துக் கோயில் கொண்ட திருமால்

**ஸ்ரீராம நவமி**—சித்திரை மாதம் சுக்கிலபட்ச நவமியன்று இராமன் பிறந்தநாளைக் கொண்டாடுதல்

**ஸ்ரீராமானுசம்** — 1. சடகோபரின் திருவடிநிலை யமைந்த பீடம் 2. தென்கலைத் திருமண்ணில் மூக்கின் மீது இடும் பாதம் (வை)

**ஸ்ரீருத்திரர்**—சிவன் கோயிலிலே தொண்டுபுரியும் ஒரு சாரார்.

**ஸ்ரீலக்ஷணபாவனை**— சரீரத்தின் அநித்தம் அசுசி முதலியவற்றைக் கருதும் பாவனை (பௌ) (மணி. பக். 389, கீழ்க் குறிப்பு.)

**ஸ்ரீவத்ஸம்** — திருமால் மார்பிலுள்ள மறு

**ஸ்ரீவிகாரம்**— 1. மானிடரோடு உலாவுகையாகிய அருகன் அருட்செயல் (ச) (சீவக. 3112, கீழ்க்குறிப்பு) 2. ஜைனக்கோயில் அல்லது பௌத்தாலயம் (மேருமந். 8, உரை.)

**ஸ்ரீவிமானம்**— 1. கோயிற் கர்ப்பக்கிருகத்தின் மேல் கட்டப்படும் விமானம் 2. கர்ப்பக்கிருகம்

**ஸ்ரீஹாரம்**— ஸ்ரீவிகாரம் பார்க்க

**ஸ்ரீஜயந்தி**— சிராவணமாதத்து அபரபட்சத்து அட்டமியோடு உரோகிணி நட்சத்திரங் கூடியதும் கண்ணபிரான் அவதரித்ததுமான திருநாள். (விதான. தெய்வ வழி. 6, உரை.)

**ஶம்பு**— சிவன்.

**ஶாக்தம்**— சக்தியே பரதெய்வமென்ற கொள்கையை யுடைய மதம்.

**ஶாக்தன்**— சாக்த மதத்தவன்

**ஶாக்யமுனி**— புத்தன்

**ஶாம்பவன்**— சாம்பவன் பார்க்க

**ஶாம்பவி**— சாம்பவி

**ஶாரதா**— சரசுவதி

**ஶாஸ்தா**— சாஸ்தா (A Village deity)

**ஶவன்**— சிவன்

**ஶேஷஶாயி** — சேஷசாயி பார்க்க

**ஶௌரி**— கிருஷ்ணன்

# ஷ

**ஷட்கதி**— மக்கட்கதி, தேவகதி, பிரமகதி, நரககதி, விலங்குகதி, பேய்க்கதி என அறுவகைப் பட்ட பிறப்புக்கள் (பௌ) (மணி. 30, 56-58 உரை.)

**ஷட்காலபூசை** — ஷட்காலத் துச் செய்யும் கோயிற்பூஜை

**ஷட்விதலிங்கம்** — ஆசாரலிங் கம், குருலிங்கம், சிவலிங்கம் ஜங்கமலிங்கம். பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்னும் அறுவகை லிங்கம் (சித். சிகா. 201)

**ஷட்ஸமயம்**—ஷண்மதம் (ஆறு வைதிக சமயங்கள்)

**ஷடங்கமந்திரம்**— மூலமந்திரத் திற்கு அங்கமாகிய ஆறு மந் திரங்கள் (சை)

**ஷடாயதனம்** — ஐம்பொறி களும் மனமும் ஆகிய ஆறு ஞானவாயில்கள் (பௌ) (மணி 30. 46, உரை)

**ஷடானன்** — ஆறுமுகன் (திருப்பு. 996)

**ஷண்மதம்** — 1. சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம் கௌமாரம், சௌரம், என்னும் ஆறு வைதிக சமயங்கள். (சது) 2. கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், வியாசமதம், ஜைமினிமதம் என்னும் ஆறு தரிசனங்கள். (The six systems of philo sophy)

**ஷண்முகன்**—ஆறுமுகன்

**ஷஹாதத்**—இறைவனின் மார்க் கம் உண்மையானது என்பதை நிரூபிக்கத் தன் உயிரையும் அர்ப்பணித்து வீரமரணம் அடைதல் (இ)

**ஷியா**— முகம்மதிய மதத்து ளொருவகை (இ)

**ஷிர்க்** — இறைவனுக்கு இணை வைத்து வணங்குதல் (இ)

**ஷுக்ரு** — இறைவன் அளித்த எண்ணற்ற கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்து வது (இ)

**ஷைத்தான்** — சாத்தான், ஒரு தீய சக்தி (இ)

# ஸ்

**ஸ்கந்தம்**— 1. பஞ்சகந்தம் (பௌ.) (The five constituent elements of consciousness) 2. நூற்றெட்டுப நிடதங்களுள் ஒன்று.

**ஸ்கந்தன்** — கந்தன் (முருகன்)

**ஸ்தலவ்ருக்ஷம்** — புண்ணிய ஸ்தலத்திற்குசிறப்பாகஅமைந்த மரம்

**ஸ்தவம்**— 1. தவம் (தக்கயாகப் 45, உரை.) 2. ரூபஸ்தவம், வஸ்துத்தவம், குணஸ்தவம், என்று மூவகைப்பட்டதெய்வஸ் துதி (ச) (மேருமந். 64-66 உரைக்குறிப்பு.)

**ஸ்தவிரமதம்**—புத்தமதம் (தக்கயாகப். 183, உரை.)

**ஸ்தவிர,**

**ஸ்தேரர்** — உத்தம பிட்சுக்கள் (மணி. 26, 66, உரை)

**ஸ்தாணு**—சிவன்

**ஸ்தானகவாசி சமணம்** — ஸ்தானகவாசி சமணர்கள் உருவவழிபாட்டைஏற்பதில்லை அவர்கள் தம்கோவில்களில் ஆகம நூல்களை வைத்து தீர்த் தங்கரராகவும் அருகக் கடவுளாகவும் வணங்குவர். (சமணம். பக். 21)

**ஸ்நபணம்** — மந்திரபூர்வமாகச் செய்யப்படும் அபிஷேகம்

**ஸ்நானகன்**— இயேசுவின் வருகைக்குச் சாட்சியாக அனுப்பப் பெற்ற யோவான் (கி)

**ஸமரணம்**—தியானம்

**ஸ்மார்த்தம்** — சங்கராசாரியர் மதம்

**ஸ்யாமளாதேவி**—பார்வதி

**ஸ்ரமணன்**— சைன சன்னியாசி அல்லது பௌத்த பிக்ஷு

**ஸ்ரமணி** — பௌத்த மதத்தினளான பிக்ஷுணி

**ஸ்ரஷ்டா**—பிரமன்

**ஸ்ராத்தேயம்** — பௌத்த நூல் கூறும் ஒரு பிராமணம் (பௌ.)

**ஸ்ரியப்பதி**—திருமால்

**ஸ்ரோதாபத்தி** — தியானவகை (பௌ.) (மணி. பக். 81)

**ஸ்வர்க்காவதரணம்** — அருக தேவனது பஞ்சகல்யாணங் களுள் ஒன்று (ச.) (மேருமந். 8, உரை)

**ஸ்வராட்**—பிரமன்

**ஸ்வஸ்வரூபம்** — அர்த்த பஞ்சகங்களுள் நித்தியர், முத்தர், பெத்தர், கேவலர், முமுட்சுக்

கள் என ஐவகைப்பட்ட ஆன் மாக்களின் தன்மை. (வை) (அஷ்டாதச. பக். 24)

**ஸ்வாமி**—இறைவன்

**ஸ்வாமிநாதன்**— சுவாமிநாதன் பார்க்க

**ஸ்வாமிநி**—இறைவி

# ஸ

**ஸகாமலோகம்** — பௌத்த சமயத்திற் கூறப்படும் ஆறு தெய்வலோகங்கள் (பௌ) (மணி. பதி. 29. உரை)

**ஸகிருதாகாமி** — தியானம் ஐந் தனுள் இரண்டாவது (பௌ. (மணி. 81, உரை)

**ஸங்கம் சரணம் கச்சாமி** — சங்கத்தை அடைக்கலமாக அடைகிறேன் என்பது இதன் பொருள் (பௌ.)

**ஸங்கர்ஷணன்**—சங்கர்ஷணன் பார்க்க. [A manifestation of Visnu] (அஷ்டா தச. தத் வத்ரய. பக். 23)

**ஸஞ்சீவனம்**— எண் வகை நரகத்துள் ஒன்று. (பௌ) (மணி. 6, 181, உரை.)

**ஸத்தியசதுஷ்டயம்** — சத்தி யம் பார்க்க (பௌ.) [The Four fold truths] (மணி. 26, 94, உரை)

**ஸதாசிவன்**— சதாசிவன் (A form of Siva)

**ஸப்தவாதி**— சைன மத்தினன் (சப்தபங்கி வாதங் கூறுவோன்)

**ஸப்தவிடங்கஸ்தலம்**— சத்த விடங்கத்தலம் (The Seven Saiva Shrines of Tyagaraja)

**ஸப்தஸ்தானம்**—1. ஒரு சிவ க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்தங் கள் பக்கத்துள்ள ஆறு சிவ க்ஷேத்திரங்களுக்கு எழுந்தரு ளும் உற்சவம். 2. திருப்பழனம், திருச்சோற்றுத்துறை திருவேதி குடிதிருக்கண்டியூர், திருப்பூந் துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய ஆறு ஸ்தலங்களுக்குத் திருவையாற்றுச் சிவபிரானும் நந்தியும் எழுந்தருளும் உற்சவம்

**ஸப்தாவரணம்** — கோயிலைச் சுற்றி அமைந்த ஏழு பிராகாரங் கள்

**ஸப்தோத்தியானம்** — கைலை யில் தேவி திருக்கோயிலைச் சூழ்ந்துள்ள ஏழு சோலைகள் (தக்கயாகப். பக். 278)

**ஸபர்யை**— பூசை

**ஸம்ப்ரதாபனம்** — நரகங்களுள் ஒன்று (பௌ) (மணி. 6, 181, உரை)

**ஸம்யக்கருமம்** — விசுத்திமார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நற்செய்கை (பௌ) (மணி. 30. 179, உரை.)

**ஸம்யக்சாரித்ரம்**— நல்லொழுக்கம் (ச) (திருநூற். 24, உரை.)

**ஸம்யக்ஞானம்** — நன்ஞானம் (ச) (திருநூற். 24, உரை)

**ஸம்யக்தர்சனம்** — நற்காட்சி (ச) (திரு நூற். 24, உரை)

**ஸம்யக்திருஷ்டி** — விசுத்தி மார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நற்காட்சி (பௌ) (மணி. 30, 179 உரை,)

**ஸம்யக்வாக்கு** — விசுத்திமார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நல்வாய்மை (பௌ) (மணி 30, 179, உரை)

**ஸம்யக்வியாயாமம்** — விசுத்தி மார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நன்முயற்சி (பௌ) (மணி. 30, 179, உரை)

**ஸம்யக்ஸ்மிருதி**— விசுத்திமார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நற்கடைப்பிடி (பௌ.) (மணி, 30. 179, உரை)

**ஸம்யக்ஸங்கல்பம்** — விசுத்தி மார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நல்லூற்றம், (பௌ) (மணி. 30 179, உரை)

**ஸம்யக்ஸமாதி**— விசுத்தி மார்க்கம் எட்டனுள் ஒன்றாகியநல்லுளத்தோர் தலைப்பாடு பௌ) (மணி 30,179, உரை.)

**ஸம்யகாஜீவம்**—விசுத்தி மார்க்கம் எட்டனுள் ஒன்றாகிய நல்வாழ்க்கை (பௌ) (மணி, 30, 179,)

**ஸம்ஜ்ஞாஸ்கந்தம்** — குறிப்பு பார்க்க (பௌ) (Mind and the five senses) (மணி 30, 190, உரை)

**ஸல்ஹதம்**—நரகங்களுள் ஒன்று (மணி 6, 181, உரை.)

**ஸர்வஜ்ஞன்** — புத்த தேவர் (தக்கயாகப். 404, உரை.)

**ஸர்வஸங்கபரித்தியாகம்** — குரோதம் மானம் மாயை உலோபமென்றும் நான்கினையும் மித்தியாத்துவம், நபும்ஸகவேதம் ஸ்திரீவேதம் புருஷவேதம் ஹாஸ்யை ரதி அரதி சோகம் பயம் அருவருப்பு என்ற அகப்பற்றுப் பத்தினையும், க்ஷேத்திரம் வாஸ்து ஹிரண்யம் ஸ்வர்ணம் தனம் தான்யம் தாசி தாசன் குப்பியம் பாண்டம் என்ற புறப்பற்றுப் பத்தினையும் காய்தல் உவத்தலின்றி விடுகை. (ச) (மேருமந். 1207, உரை.)

**ஸர்வேஶ்வரன்** - சர்வேச்சுரன்

**ஸரஸ்வதி**—சரசுவதி—

**ஸரஸ்வதிபூஜை** — சரசுவதி

பூசை பார்க்க.

**ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம்** — முஸ்லீம்கள் இறுதித் தூதர் நபிகள் நாயகத்தின் பெயரைக் கேட்டவுடன் செய்யும் பிரார்த்தனை. இதன் பொருள். இறைவன் கருணை புரிவானாக. (இ)

**ஸஹஸ்ரநாமார்ச்சனை** — சகஸரநாமார்ச்சனை பார்க்க.

**ஸஹஸ்ராரசக்கரரேகை** — சகஸ்ராரசக்கரம் பார்க்க (A discuss mark on the foot of Lord Buddha) (மணி. 5, 104 உரை.)

**ஸாம்பன்**—சிவன்

**ஸாமகர்ப்பன்**—திருமால்

**ஸாமாயிகம்** — தினந்தோறும் எவரைப் பற்றியந் தீங்கு நினையாது 45 நிமிடங்களேனும் தியானத்தில் அமர்வதாகிய விரதம் (ச) (மேருமந். 144, உரை.)

**ஸாமாயிக விரதம்** — தியானத்தில் ஆழ்ந்திருத்தல் (ச)

**ஸித்தார்த்தன்**— சித்தார்த்தன் (The Buddha) (மணி. 30, 2, உரை)

**ஸித்தி** — The supernatural powers attained by Buddhist monks (பௌ)

**ஸுப்கறானல்லாஹ்** — இறைவன் தூயவன் (இ)

**ஸூக்ஷ்மாவஸ்தை** — தன் மாத்திரை நிலை (தத்) (Subtle condition) (அஷ்டாதச. பக். 19.)

**ஸேனாபதி**—முருகக் கடவுள்

**ஸோமன்**—சிவபிரான்

**ஸோமாஸ்கந்தன்**— சோமாஸ்கந்தன் பார்க்க.

**ஸௌகதம்**—பௌத்தம்

**ஸௌபாக்யவதி** — சுமங்கலிகளின் தலையில் வீற்றிருப்பதாகக் கருதப்படும் தெய்வம். (தக்கயாகப். பக். 308)

## ஹ

**ஹயக்ரீவன்** — அயக்ரீவன் (A from of Visnu)

**ஹரன்** — அரன் (சிவன்)

**ஹராம்**—இறைவனால் தடுக்கப்பட்டது (இ)

**ஹரி**— அரி—திருமால்

**ஹரியர்த்தர்** — மகாவிஷ்ணுவை வலப்பக்கத்திற் கொண்டதான சிவ மூர்த்தம்.

**ஹரியர்த்த மூர்த்தி** — சிவன் (திருமாலை ஒரு பாகமாக உடையவர்)

ஹரிஹரபுத்திரர்,

**ஹரிஹரன்** — சிவபிரானுக்கு மோகினியுருக் கொண்ட திரு மாலிடம் பிறந்தவரான சாஸ்தா (நன். சங்கர. புதுப். பக். 367)

**ஹலால்**— இறைவனால் அனு மதிக்கப்பட்டது (இ) நூலாலா லான சம்பாத்தியம்.

**ஹவ்யம்** — தேவர்களுக்குக் கொடுக்கப்படும் அவி

**ஹாரிணி**— தநுகரணாதிகளை மாயையிலொடுக்கிப் பக்குவ மானதும் ஆத்துமாக்களைச் சிவத்துடன் அடைவிக்குஞ் சக்தி (சி. சி. 1,59, சிவாக்.)

**(ஹஜ்),**

**ஹாஜ்**—மக்கா நகரிலுள்ள இறை இல்லம் கஃபாவை தரிசிக்கச் செல்லும் புனிதப் பயணம் (இ) மக்காயாத்திரை.

**ஹாஜி**—மக்கா யாத்திரை செய்த கம்மதியன் (இ)

**ஹிமசுதை**—பார்வதி

**ஹிஜ்ரத்**— நபிகள் நாயகம் இஸ் லாமிய நெறியை மக்கா நகரில் போதித்தபோது தடைகள் ஏற் பட்டதால் மக்கா நகரைத் துறந்து மதினா நகர் சென்ற நிகழ்ச்சிகளை இஸ்லாமிய வர லாற்றில் ஹிஜ்ரத் என்பர். இதி லிருந்துதான் இஸ்லாமிய ஆண்டு தொடங்குகிறது. (இ)

**ஹிஜிரி**— மக்காவினின்று மதினா வுக்கு முகம்மது நபிகள் தப்பி யோடிய யாத்திரை (இ)

**க்ஷணிகலிங்கம்** — 16 வகை, மணல், அரிசி, அன்னம், மண், கோமயம், வெண்ணெய், பழம், மா, சந்தனம், தருப்பை, விபூதி உருத்திராட்சம், புஷ்பமாலை, சர்க்கரை, அப்பு, தளிர் என் பனவற்றைக் கொண்டு பூஜா காலம் வரையில் சிவபெருமான் தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இலிங்காகாரம் இது நித்தியப் படி பூசையில் கொள்ளப்படு வது.

**க்ஷபணகன்** — 1. புத்ததேவன் (W) 2. பௌத்தன் 3. சைனன்

**க்ஷபணமதம்**—புத்தமதம், சைன மதம் (W.)

**க்ஷமாபாரமிதை** — தசபார மிதையுள் ஒன்றான பொறுமை (பௌ)

**க்ஷாரம்** — சுசீலைப்பசுவின் சாணத்தினின்று உண்டாக்கும் விபூதி

**க்ஷீரஸமுத்ரம்**—பாற்கடல்

**க்ஷீராப்திதனயை**— இலக்குமி

**க்ஷீராப்திநாதன்**—திருமால்

**க்ஷீரிகை** — நூற்றெட்டுபநிட தங்களுள் ஒன்று.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | ரூ. பை |
|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | 12 — 00 |
| 2. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | 6 — 00 |
| 3. | தமிழர் தோற்கருவிகள் | 10 — 00 |
| 4. | தமிழும் தமிழரும் | 5 — 00 |
| 5. | தமிழர் இசை | 70 — 00 |
| 6. | ம. பொ. சி யின் இலக்கிய நூல்கள் - ஓர் மதிப்பீடு | 20 — 00 |
| 7. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | 12 — 00 |
| 8. | திராவிட மொழி இலக்கியங்கள் | 35 — 00 |
| 9. | உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | 12 — 00 |
| 10. | தமிழ் இலக்கியக் கொள்கை - 9 | 20 — 00 |
| 11. | தொல்காப்பியம் - புணரியல் | 10 — 00 |
| 12. | தொல்காப்பியம் - வேற்றுமை மயங்கியல் | 12 — 00 |
| 13. | தொல்காப்பியம் - விளிமரபு | 6 — 00 |
| 14. | தொல்காப்பியம் - பெயரியல் | 12 — 00 |
| 15. | தொல்காப்பியம் - வினையியல் | 20 — 00 |
| 16. | தொல்காப்பியம் - இடையியல் | 22 — 00 |
| 17. | வர்ம சூத்திரம் | 10 — 00 |
| 18. | தன்வந்திரி குழந்தை வாகடம் | 14 — 00 |
| 19. | வெள்ளைக்காரன் கதை | 7 — 00 |
| 20. | மெய்க்கீர்த்திகள் | 20 — 00 |
| 21. | சிந்து இலக்கியம் | 8 — 00 |
| 22. | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | 6 — 00 |
| 23. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | 12 — 00 |
| 24. | இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள் - 1 | 12 — 00 |
| 25. | இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள் - 2 | 22 — 00 |
| 26. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 — 00 |
| 27. | டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | 10 — 00 |
| 28. | தமிழரின் தாயகம் | 10 — 00 |
| 29. | பாவாணரும் தனித்தமிழும் | 12 — 00 |
| 30. | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | 10 — 00 |
| 31. | செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | 25 — 00 |
| 32. | மொழி பெயர்ப்பியல் | 10 — 00 |
| 33. | தமிழர் திருமணம் | 25 — 00 |
| 34. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 35 — 00 |
| 35. | தமிழ் தந்த வ. உ. சி. | 15 — 00 |
| 36. | எண்பத்திரண்டில் தமிழ் | 90 — 00 |
| 37. | மகாமதிப்பாவலர் | 11 — 00 |

| | | |
|---|---|---|
| 38. | உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | 15 — 00 |
| 39. | உலக முதன்மொழி தமிழ் | 12 — 00 |
| 40. | மறைமலையடிகளார் தனித் தமிழ்க் கொள்கை | 15 — 00 |
| 41. | வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை | 15 — 00 |
| 42. | வாத்திய மரபு | 20 — 00 |
| 43. | மங்கலதேவி கண்ணகி கோட்டம் | 15 — 00 |
| 44. | தமிழில் கதைப்பாடல் | 25 — 00 |
| 45. | தொல்காப்பியம் - உரியியல் | 20 — 00 |
| 46. | Dissertations on Tamilology | 10 — 00 |
| 47. | Siddha Medicine (Heritage of the Tamils) | 45 — 00 |
| 48. | Literary Heritage of the Tamils | 50 — 00 |
| 49. | Tamil Drama | 20 — 00 |
| 50. | Tamil - Text (An Auto Instructional Course) | 25 — 00 |
| 51. | Siddha Medical Manuscripts in Tamil | 8 — 00 |
| 52. | Karaikkal Ammaiyar | 6 — 00 |
| 53. | Heritage of the Tamils - Temple Arts | 50 — 00 |
| 54. | Tolkappiyam (An English Translation) | 25 — C0 |
| 55. | Heritage of the Tamils - Education & Vocation | 50 — 00 |

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
[illegible] (அஞ்சல்) தரமணி, சென்னை.600113